OFFICE OF THE REGISTRAR OF ... 20 JAN 1915 MADRAS.

உ

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] 1914ஞு அக்டோபர்மீ [சஞ்சிகை 1

## ஒளிவளர்விளக்கு

1914ஞு செப்டம்பர் மாதத்தில் நமது சபா மண்டபத்திற்கு விஜயஞ் செய்த கனவான்களுடைய எண்ணிக்கை 1322.

*
* *

நமது குல சிரேஷ்டர் டாக்டர் R. சுந்தராச்சாரியார், M. D. அவர்கள் டிஸ்ட்ரிக்ட் மெடிகல் அன்ட் ஸானிடரி ஆபீஸராக (District Medical and Sanitary Officer) கர்நூலுக்கு மாற்றப்பட்டிருப்பதா யறிகிறோம்.

*
* *

சபை மெம்பர்களாகவும், பத்திரிகைச் சந்தாதாரர்களாகவு மிருக்கும் நமது குலோத்தமர்கள், தங்கள் தங்கள் ஊர்களில் தீபாவளித் தண்டல் நடை பெறுதற்கான ஏற்பாடுகளை முன்னின்று செய்தருள வேண்டுகிறோம். தீபாவளி தினமேயல்லாமல் அடுத்த நாட்களிலும் தண்டல் செய்யப் படலாம். அங்கங்குள்ள நாட்டாண்மைக்காரர்கள், காரியஸ்தர்கள், பிரமுகர்கள் முதலானோர் இதற்கு உதவி புரியத் திருவுளம் பற்றுவார்களென்று வேண்டிக் கொள்ளப் படுகிறது. தண்டல் செய்வதில் சிறுபிள்ளைகள் மிகவும் உபயோகமா யிருப்பார்கள். ஒவ்வோர் ஊரையுஞ் சிறு சிறு வட்டகைகளாகப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு வட்டகையிலும் வீடுதப்பாமல் தண்டல் செய்யச் சிற்சிலரை நியமித்து விட்டால், ஊர் முழுவதும் தண்டல் செய்தல் சுலப சாத்தியமாகும். தண்டல் முடிந்தவுடன் உண்டிகளைப் பலாறியத் திறந்து, வசூல் பணத்தில் மணியார்டர் செலவு போன மிச்சத்தை நமது சபைத்தலைவரவர்களுடைய விலாசத்திற் கனுப்ப வேண்டுகிறோம். இதற்கு உதவி செய்தவர்களுடைய பெயர்களும், ரூபா ஒன்றும் அதிகமும் அளித்தவர்களுடைய பெயர்களும், ஒவ்வோரூர் மொத்த வசூலும், தண்டியனுப்பினவர்களுடைய பெயர்களும் நமது பத்திரிகையில் வெளியிடப்படும். இவ்விபரங்களை அவரவர்கள் மறவாது தெரிவிப் பார்களாக,

161439

மேனாட்டுத் தொழில்விளைவுகளை ... த்து வந்ததின் கொடுமைகள், ஐரோப்பாவில் தற்போது நடந்துவரும் யுத்தங் காரணமாக இப்போது இந்தியாமுழுவதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதிற் காணப்படுகின்றன. ஒவ்வொரு மாகாண அதிகாரிகளும் இந்தியத் தொழில்களை எப்படி விருத்தி செய்யலா மென்றும், நூதனமாய் எந்தெந்த தொழில்களை யாரம்பிக்கலாமென்றும் ஆலோசித்து வருகிறார்கள். சென்னைமாகாணக் கைத்தொழி லிலாகா டைரெக்டராகிய மிஸ்டர் K. T. B. ட்ரெஸ்லர் துரையவர்கள், தொழிற் சம்பந்த முடையார் பலரைக் கூட்டி ஒரு கான்பரென்ஸ் நடத்தி அவர்கள் அபிப்பிராயங்களைப் பெற்றனர். இவரால், தொழிற்கல்வி இரண்டு பாகமாய்ப் பிரிக்கப் படுகிறது. ஸ்கூல்களோடு தொழிற் சாலைகள் சேர்க்கப் படாமல் அவைகளிற் பழக்க மில்லாமலே தொழிற்கல்வி பெறுவித்தல் ஒன்று. இரண்டாவது, தொழிற்சாலைகளையே ஸ்கூல்களாக்கி அவைகளில் சிறுவர்களுக்குக் கல்வியும் பழக்கமும் உண்டுபண்ணுவது. இவ்விஷயமாய்க் கவர்ன்மெண்டுக்கு சில சிபார்ஸ்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தொழிலபிவிருத்திக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கேட்போர்க்குச் சொல்லுதலொழிய மற்றொன்றுந் தங்களாற் செய்ய முடியாதென்று கவர்ன்மெண்டார் இதுவரையிலுஞ் சொல்லிவந்தார்கள். இனி அப்படிச் சொல்லமாட்டார்களென்று நம்புகிறோம். இந்த விஷயத்தைப் பற்றி ஆங்கிலேய வியாபாரியாகிய மிஸ்டர் G. A. சேம்பர்ஸ் துரையவர்கள் மெயில் பத்திரிகைக்கு பின்வருமாறு எழுதியிருக்கிறார். "ஜனங்களுக்கு ஆலோசனையும் புத்திமதியையும் சொல்லுவதைத்தவிர வேறு விதமாய் கவர்ன்மெண்டார் தொழில்களுக்கு உதவி செய்ய முடியாதென்பார்களானால், தொழில்களை முன்னுக்குக் கொண்டுவருவதில் அவர்கள் ஸ்திரமான உதவிசெய்ததாகுமா? அப்படி கவர்ன்மெண்ட் செய்தா மற்றத்தேசங்களில் தொழில்கள் ஸ்தாபிக்கப் படுகின்றன? கவர்ன்மெண்டே நேராகத் தொழில்களை ஆதரித்தல் சாத்தியமல்லவாயினும், அதன் உதவி பலவழிகளாய்க் கிடைக்கக் கூடும். எப்படி யெனில், கவர்ன்மெண்டுக்குத் தேவையானவைகளைத் தேசத்திலேயே வாங்குவது; செய்யப்படும் சாமான்களின் அளவுக்கும் குணத்திற்கும் தக்கபடி பண உதவி செய்வது; சில வருஷத்திற்கு மிதமான வட்டிக்கு மூலதனங் கொடுப்பது; அல்லது, பணத்தைச சொற்ப வட்டிக்குக் கடனாகக் கொடுப்பது; சில காலத்திற்கு வரியைத் தள்ளிக்கொடுத்தல்; பூமியை இனும் கொடுத்தல்; கம்பெனிகளில் பங்கு வாங்குதல். இவ்விதமாயும் வேறு விதமாயும் கவர்ன்மெண்ட் உதவி செய்வார்களானால், அது சொந்த முதலாளிகளை உற்சாகப்படுத்தி முக்கியமான தொழில்களை ஸ்தாபிக்க ஹேதுவாகும். இப்படி கவர்ன்மெண்ட் உதவி செய்வார்களென்று ஜனங்களுக்கு உறுதி யிருந்தால் தொழில்கள் அபிவிருத்தியாகுமென்று நம்பலாம். அப்படிச் செய்யாமல் கவர்ன்மெண்ட் செய்வதெல்லாம் ஆலோசனையும் புத்திமதியுமாகவே இருக்குமானால், யுத்தம் நின்றுபோன பிறகும்கூட ஜர்மனியும் ஆஸ்டிரியாவும் இந்தியாவின் போட்டியைப் பொருட்படுத்தமாட்டா."

---

**I. M. S. பரீட்சையில் தேறியிருப்பவர்கள்.**—இவ்வருஷத்து இந்தியன் மெடிகல் சர்விஸ் போட்டிப் பரீட்சையில தேறி இந்தியன் மெடிகல் சர்விஸில் உத்தியோகம் பெற்றிருக்கும் 13 பேரில் 8 பேர் இந்தியர். இவர்களில் மிஸ்டர் வயிரா, மிஸ்டர் சங்கரசாஸ்திரி, மிஸ்டர் வேணுகோபால் என்னும் மூவர் தென்னிந்தியாக்காரர்கள்.



## நமது முதலாண்டு.

இம்மாதத்திலிருந்து நமது இரண்டாவது ஆண்டு ஆரம்பமாகிறது. சென்ற ஆண்டிலும் இவ்வாண்டில் நமது பத்திரிகை அதிக செல்வாக்குற்றோங்க விஸ்வேஸ்வரன் கருணைபாலிப்பாரென்று பிரார்த்திக்கின்றோம். விஸ்வகர்ம வம்ஸத்தினருடைய மேம்பாட்டிற்குச் சாதகஞ்செய்யும் பொருட்டாகவே, சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையாரால் இப்பத்திரிகை ஆரம்பித்து நடத்தப்பட்டு வருகிறதென்பது எல்லோரும் அறிந்த உண்மை. இப்பத்திரிகையை யாரம்பிப்பதற்குமுன் பலவிஷயங்களைத் திரட்டி 24 பிரசுரங்களாகச் சபையார் வெளியிட்டதும் இக்கருத்தோடேயன்றி மற்றில்லை.

மாதவரி நாலணா கொடுப்பதென்றால் சிலருக்குக் கஷ்டமாயிருப்பதறிந்து, நமது பத்திரிகையின் சந்தா வருஷவாரியில் ரூபா இரண்டாகிய சிறு தொகையாக ஏற்படுத்தப்பட்டது. இப்போது சந்தா செலவு தினப்படி சுமார் ஒரேகாசுதான் ஆகிறது. ஏழைகளுள்ளிட்ட எல்லோராலும் நமது பத்திரிகை வாசிக்கப்படவேண்டுமென்பதே சபையாருடைய நோக்கம். ஆதலினாலேதான், பணநஷ்டத்தை லக்ஷியப்படுத்தாமல் பத்திரிகைச் சந்தாவைக் குறைவு படுத்தலாயினர்.

சபை மெம்பர்கள், பத்திரிகைச் சந்தாதாரர்கள், குலாபிமானிகளாகிய எல்லோருடைய சகாயம் ஏற்பட்டாலொழிய, சபையார் கொண்டுள்ள நோக்கம் கைகூடாதானபடியால், இப்பத்திரிகை அதிகமாய்ப் பரவுவதற்கு வேண்டிய சகாயத்தை ஒவ்வொருவருஞ் செய்தருள வேண்டுகிறோம். ஒவ்வொரு மெம்பரும் சந்தாதாரரும் நமது பத்திரிகைக்குப் புதுச் சந்தாதாரர்களைச் சேர்க்கவேண்டுமென்னுங் கருத்துக் கொள்வார்களானால், பலபேர்களை எளிதிற் சேர்க்க முடியுமென்பது திண்ணம். இப்படிச் செய்பவர்கள் புண்ணியத்திற்கும் புகழுக்கும் பாத்திரவான்களாவார்கள் நமது பத்திரிகையைவாசிப்போர்க்குக் குலாபிமானமுண்டாகிச் சீர்திருத்தக்கொள்கைகள் பதிந்து குலாபிவிருத்திநோக்கங்கள்நிலைபெறுதல் நிச்சயமாதலால், நமது குல ஏடேற்றத்தில் கவனமுடையவர்களாகிய உத்தமர்க்கு, நமது பத்திரிகையி னபிவிருத்திக்கு உழைத்தலினுஞ் சிறந்ததாகிய காரியமொன்றும் வாய்க்காது.

இனி, இப்பத்திரிகையின் சந்தா வருமான முழுவதும் நமது சபையைச் சேருகின்றதேயொழிய, எவரொருவரையுஞ் சேருவதில்லை யென்பதையும் நண்பர்கள் கவனத்திற் கொள்ளவேண்டுகிறோம். இதனால் லாபங்கிடைத்தாலும் நஷ்டமேற்பட்டாலும், அது சபைப் பொக்கிஷத்தையே சாரும். லாபங்கிடைக்குமானால், அது குலப் பொதுநன்மைக்குச் சாதகமான காரியங்களில் சபையாரால் விநியோகிக்கப்படுமாதலால், நமது பத்திரிகைச் சந்தாதாரர்கள் குலநன்மைக்கு அநுகூலஞ் செய்தவர்களு மாகின்றனர். இவற்றையெல்லாம் உத்தேசித்துப் பார்க்குமிடத்து, நமது பத்திரிகையின் அபிவிருத்திக்கு உழைக்கவே வேண்டுமெனக் குலநண்பர்கள் தூண்டப்படுவார்களென்பதிற் சந்தேகமில்லை. ஏற்கனவே, நமது பத்திரிகை நாளுக்குநாள் புதுசந்தாதாரர்கள் சேரப்பெற்று விருத்தியடைந்துவருதல் மிகவுந் திருப்திக்கிடமாயிருக்கிறது.

'விஸ்வகர்மன்' உயர்தரப் பத்திரிகா லக்ஷணங்களுடன் விளங்குவருவதை யாரே அறியார்! சந்தாக்குறைவை யநுசரிக்காமல் முதலிலிருந்தே பளபளப்பான வெள்ளிய காகிதத்தில் இதை அச்சிட்டு வருகிறோம். முதலைந்துமாதங்களினும், ஆறாவது மாதத்திலிருந்து பத்திரிகையின் அளவையும் விஷயங்களையும் அதிகப்படுத்தி வெளியிடலானோம். குலச்சிறப்பு விஷயங்களும் பொதுவிஷயங்களும் நமது பத்திரிகையிற் பொருந்திவிளங்குகின்றன. நமது சபையைச் சார்ந்த வர்த்தமானங்கள் அப்போதைக்கப்போது வெளிப்படுவதுடன், வெளியூர்களிலுள்ள நமது குலத்தினருடைய இயக்கங்களும் எழுதப்படுகின்றன. மூலஸ்தம்ப விஷயமும், விஸ்வகர்மப் பிரபாவமும், அங்கிரசன், மயன், கஸ்யபன், சூரியனாதியாய நங்குலப் பூர்வீகர்கள் விருத்தாந்தமும், வேதசாஸ்திரக்கோட்பாடுகளும், ஆசாரநுஷ்டான முறைகளும் நமது பத்திரிகையில் வெளியிட்டுவருகிறோம். சிலாசாஸனங்கள், சிற்பசாஸ்திர விஷயம், சிற்பிகள்கை யற்புதங்கள், சிற்பிகள்சிறப்பு, சிற்பகலாசாலை இவற்றின் இயல்புகளும், தொழிற்றுறைகளின் நுட்பங்களும் விளக்கப்படுகின்றன. பௌருஷேய குலதிலகர்களைப்பற்றிப் பகர்ந்துவருகின்றோம். ஜாதீயக் கொண்டாட்டங்கள், நாட்டாண்மை, உபநயனகாலம், சமபந்திபோஜனம்,

சகோத்ரவிவாக மாதியாய குலச்சீர்திருத்தத்திற்கவசியமான விஷயங்களும்; ஐக்கியநாணயம், வானசாஸ்திரம், ஜோதிஷசாஸ்திரம், மின்சாரசாஸ்திரம், பொருளியற்சாஸ்திர மிவற்றின் அருமைகளும்; கற்பூரம், ஈயம் முத்துமுதலியவற்றின் தன்மைகளும்; வைத்தியம், விவசாயம், சட்டம், நியாயம், பாகமாதியவற்றின் மர்மங்களும்; கம்பராதிவித்வான்கள் சரித்திரங்களும்; ஜப்பான் பரோடாபோன்ற மகத்தாகிய தேசலக்ஷணங்களும்; அதிமதுரவாக்கியங்களும்; நீதிக்கதைகளும் நமது பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றன. கான்பரஸ்களைப்பற்றியும் பொருட்காக்ஷிகளைப்பற்றியுமெழுதியிருக்கிறோம். ஆச்சாரிப்பட்ட சம்பந்தமான அனந்த உண்மைகள் நம் பத்திரிகையால் வெளிப்பட்டன.

இவற்றால், நமது ஜாதியாருடைய நாட்டங்கள் ஒருவழிப்பட்டு வருகின்றன வென்றும், குலோத்தாரண காரியங்களில் இவர்கள் நாளுக்குநாள் அதிகமாய் உற்சாகங் காட்டிவருகிறார்களென்றும், குலச்சீர்திருத்தம் கைகூடி வருகின்றதென்றுஞ் சந்தோஷமடைய ஹேதுவிருக்கின்றது. இவ்வித பலன்கள் நமது பத்திரிகையால் விளைகின்றனவென்பதறிய யாரே குதூகுலமடையார்! இவ்வாண்டில் இன்னு மதிகமாய்ப் பலன்கள் சித்திக்குமாறு விஸ்வேஸ்வரர் அருள் செய்வாரென்றும் குல நண்பர்கள் உதவிசெய்வார்களென்றும் பிரார்த்திக்கின்றோம். விஷயதானஞ் செய்துவந்த வித்வ ஜனங்களுக்கும், மாற்றுப் பத்திரிகைகளனுப்பிவரும் பத்திரிகாதிபதிகளுக்கும், நமது பார்வைக்குப் பல நூல்களனுப்பிய பண்டிதர்களுக்கும், நமது வாசகர்களுக்கும் வந்தனங்கள் பல தந்திடுகின்றோம்.

---

**கட்குடியைக் குறைத்தல்.**—ஏழை ஜனங்கள், முக்கியமாய் கூலி வேலைசெய்து பிழைக்கும் ஜனங்கள், கட்குடிக்கும் வழக்கத்தை விட்டொழிக்கும் வழியைத்தேட என்ன உபாயம் செய்யலாம் என்பது இப்போது மாகாண கவர்ன்மெண்டுகளின் வேண்டுகோளின் மேல் ஜில்லா அதிகாரிகளாலும், ஸ்தல ஸ்தாபனங்களாலும் ஆலோசிக்கப்பட்டுவருகிறது. பலர்பலவிதமாய் யோசனை சொல்லிவருகிறார்கள். ஸ்ரீகாசிமுனிசிபாலிடியார் கள்ளுக் கடைகளுக்குப் பதிலாய் காப்பிக்கடைகள் வைப்பதைப் பற்றி யோசிக்க ஒரு சப் கமிட்டி நியமித்திருக்கிறார்களென்று தெரிகிறது.

# சென்னையில் விஸ்வகர்மத் தொழிற்சாலை

**ஸ்ரீ வேலூர்-முத்துசாமி ஆச்சாரியார்**

கடந்த மாதத்தில் வெளியான விஸ்வகர்மன் முதற் சம்புடத்து 12-வது சஞ்சிகையில் 'சென்னையில் விஸ்வகர்மமடம்' என்ற வியாசத்தை வாசித்தேன். அதைப் படிக்கப் பரமானந்தமேயுண்டாயிற்று. அதிற் சொல்லப்பட்டிருப்பதுபோல் ஒருமடம் கட்டப்பட்டு நம்மவர்களுக்கு உபயோகப்படுமானால், நாம் அடையக்கூடிய ஒற்றுமைக்கும் சீர்திருத்தத்திற்கும் ஒப்பிருக்கமாட்டாது. ஆனால், சபையார் தெரிவித்தபடி, அது நமக்கு இப்போது எட்டாத மிக கம்பீரமான காரியமாகும். ஆதலால், அதைப்பற்றி ஜாதியாரெல்லோரும் சிந்தித்திருப்பது அனாவஸ்யம். சென்னையில் விஸ்வகர்ம மடம் கட்டவேண்டுமென்று ஏற்கனவே பிரயத்தினஞ் செய்து கொஞ்சம் பணந்தண்டியிருக்கும் கனவான்களுடைய கவனத்திற்கு இதை விட்டு விடுவோம்.

ஷை வியாசத்தை வாசிக்கும்போதே எனக்குண்டான எண்ணங்களை இங்கெழுதலானேன். விஸ்வகர்ம மடத்திற்கென்று ஆயிரக்கணக்காய்ப் பணந்தண்டிச் செலவு செய்வதைப்பார்க்கிலும் "விஸ்வகர்மத் தொழிற்சாலை" யொன்றைச் சென்னையில் ஸ்தாபிப்பதற்கு நாம் முயற்சி செய்வோமானால் மிகவுஞ் சிறப்பாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது. இதனால், நமது குல விருத்திகள் சீர்ப்படுவதோடுகூட, அநேகருக்கு ஜீவனாதாரம் ஏற்படும். இதனால் லாபமுங் கிடைக்குமாதலினால், இது வருமானத்திற்கு ஒருவழியாகவுமிருக்கும். இந்த வருமானத்தைக்கொண்டு, மடங்கட்டுதல், வித்தியாசாலைகளை ஸ்தாபித்தல் முதலான செலவுக்கிடமான காரியங்களை நடத்தலாம்.

சென்னையிலும் மற்ற இடங்களிலும் பல ஜாதியார்கள் தொழிற்சாலைகளை வைத்து நடத்தி லாபஞ் சம்பாதித்து தனிகர்களாயிருந்து வருவதை நாமெல்லோரும் அறிந்திருக்கிறோம். இந்தத் தொழிற்சாலைகளில் நமது ஜாதியார்களே முக்கியமாய் வேலைசெய்து வருகிறார்கள். அப்படியிருக்க, அவர்களைக்கொண்டே நாம் ஒரு தொழிற்சாலை யேற்படுத்தி வேலைநடத்துவது சுலபமல்லவா? மேஸ்திரி, போர்மன் (Foreman) சூபரின்டென்டென்ட் (Superintendent) என்னும் உத்தியோகங்களுக்குத் தக்க அநுபோகஸ்தர்களும் வேலைக்காரர்களும் வேண்டும். இந்த ஸ்தானங்களுக்கும் நம்மவர்களே கிடைத்தால் சந்தோஷந்தான் இல்லாவிட்டால், தக்கவர்களை வெள்ளைக்காரர்களிலிருந்தாகிலும் மற்ற ஜாதியார்களிலிருந்தாகிலும் தெரிந்தெடுத்து நியமிக்கலாம்.



இந்தத் தொழிற்சாலையில் இரும்பு, மரம், உலோகங்கள் இவற்றிற் செய்யப்படத்தக்க வேலைகளெல்லாமும் நடத்தலாம். இரும்பில் ராவடவேலை, வார்ப்புவேலை, கடைச்சல்வேலை, சிறு சாமான்கள் செய்தல் முதலிய வேலைகளைச் செய்வதற்கேற்ற மிஷின்களும் ஆயுதங்களுந் தேடியமைக்கவேண்டும். மரச்சாமான்கள் பலவிதமுஞ் செய்யலாம். பள்ளிக்கூடங்களுக்கு மேஜை, நாற்காலி, பெஞ்சு, பீரோ முதலியவற்றை சப்ளை செய்தாலேபோதும். உலோகங்களில் செய்யப்படக்கூடிய வஸ்துக்கள் அநேகமிருக்கின்றன. முனிஸிபாலிடிகள், டிஸ்ட்ரிக்ட்போர்ட்கள், லோகல்பண்டுகள், யூனியன்கள் இவற்றிற்குவேண்டிய வண்டிகள், லாந்தர்கள், தொட்டிகள் முதலியவற்றைச் செய்துவந்தால் நமது பட்டரைக்குப் போதுமானவேலை கிடைக்கும். இவற்றையெல்லாம் நல்ல நாகரிகமுறையில் ஒழுங்காய்ச் செய்து நாணயத்துடன் சொன்னபேச்சு தவறாமல் கெடுப்பிரகாரங் கொடுத்துவருவோமானால், நமக்கு நாளுக்கு நாள் அதிக மதிகமாய் வேலைகள் வந்துகொண்டேயிருக்கும். மானேஜ்மெண்டுக்கு சாமர்த்தியக்காரராகிய ஒருவரை நியமிக்கவேண்டும். தொழிற்சாலையை அமைத்துக்கொடுக்க நல்ல இஞ்சீனீரொருவரைத் தேடிக்கொள்ளவேண்டும்.

இவ்விதமேற்படும் தொழிற்சாலைக்கு விஸ்வகர்மன் பவுண்டரி (Visvakarman Foundry), விஸ்வகர்மன் இஞ்சினீரிங்வொர்க்ஸ் (Visvakarman Engineering Works), விஸ்வகர்மன் வொர்க்ஷாப்ஸ் (Visvakarman Workshops), விஸ்வகர்மன் பாக்டரி (Visvakarman Factory) என்பது போன்ற பெயரிடலாம். இதற்கு என்னென்ன மெஷீன்கள் தேவையிருக்குமென்றும், என்னென்ன ஆயுதங்கள் வேண்டுமென்றும், அவற்றின் கிரயம் எவ்வளவாகுமென்றும், பெரிய உத்தியோகஸ்தர்கள் எத்தனைபேர் தேவையிருப்பார்களென்றும், வேலைக்காரர்கள் எத்தனைபேர் வேண்டுமென்றும், இவர்களுடைய சம்பளமுங் கூலியும் மாதவாரியில் எவ்வளவு தொகையாகுமென்றும், இதுபோன்ற மற்ற விபரங்களும் தெரிந்தவர்களே சொல்லவேண்டும். நானொன்றும் அறியேன். என்றாலும், குறைந்தபக்ஷம் பத்தாயிரரூபாயாவது இல்லாவிட்டால் ஒரு தொழிற்சாலை ஸ்தாபித்து லாபகரமாய் நடத்த முடியாதென்று தோன்றுகிறது. எவ்வளவு அதிக முதல் வைத்து ஆரம்பிக்கிறோமோ அவ்வளவு அதிகம் லாபங் கிடைக்கும். ஏற்கனவே, பல தொழிற்சாலைகள் இங்கிலீஷ் கம்பெனியார்களாலும், சுதேச கனவான்களாலும் சென்னையில் நடத்தப்பட்டு வருவதால், அவைகளுக்குச் சமானமாய் வேலைசெய்து பொருள்களை முடித்து விலைப்பிரகாரங் கொடுக்கவேண்டுமானால், பத்தாயிரரூபாயாவது முதல் வைத்து வேலையாரம்பிக்காவிட்டால் கிட்டாது.

இந்தப் பத்தாயிரரூபாயோ இன்னு மதிகமோ எங்கிருந்து வரும்? நம்மவர்களிடத்திலிருந்து தான் வரவேண்டும். இந்த முதலைச் சிறு பங்குகள் அதாவது ஷேர் (Share) களாகப் பிரிக்கவேண்டும். இந்த ஷேர்களில் ரூபா 100 ஷேர் ஒருவிதமென்றும், ரூபா 10 ஷேர் ஒருவிதமென்றும் ஆக இரண்டுவித ஷேர்கள் இருக்கலாம். 50 நூறு ரூபா ஷேர்களும் 500 பத்து ரூபா ஷேர்களுமானால், பத்தாயிர ரூபா சேர்ந்துவிடும். இதற்காக, 550 பேர்கள் வேண்டியதில்லை. ஒவ்வொருவர் பலஷேர்களெடுத்துக்கொள்ளுவார்கள். ஆதலால், சுமார் 200, 300 பேர்களிடத்திலேயே ஷை 550 ஷேர் பணமும் வசூலாய்விடும். ஓரிருவரே ஷை பத்தாயிர ரூபாய் கொடுக்கக்கூடியவர்களும் நம்மவர்களில் இருக்கிறார்களல்லவா? ஆனபடியால், இதே வேலையாய் ஆரம்பித்தால், சீக்கிரத்திலேயே பத்தாயிரரூபாய் கிடைத்துவிடும். இந்தத்தொகை மிகக் கொஞ்சமென்றும், சரியானபடி பாக்டரி ஸ்தாபிப்பதற்குப் போதாதென்றும் ஏற்படும் பக்ஷத்தில், இந்த முதலை ரூபா 25,000 அல்லது ரூபா 50,000 ஆக நிர்ணயிக்கலாம். முதற்பணம் அதிகமாகவே யிருக்கவேண்டும். ஆனால் அவ்வளவும் வசூலானபிறகுதான் வேலை ஆரம்பிக்கப்படவேண்டும் என்பது அவசியமில்லை. ரூபா பத்தாயிரஞ் சேர்ந்துவிட்டால், வேலையாரம்பித்துவிடலாம். அப்புறம், அவசியத்துக்குத் தக்கபடி வசூல்செய்து தொழில்களை விர்த்திசெய்யலாம்.

இதற்கு முன்னிற்கவேண்டியவர்கள் சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையார்களே யென்பது நிச்சயம். இவர்களில் நல்ல வாசிப்புடையவர்களும், உலகஞான முடையவர்களும், செல்வவான்களும், உத்தியோக அந்தஸ்துடையவர்களும், குலாபிமானிகளு மிருக்கிறார்கள். இவர்கள் முன்னின்றால், நமது குலஜனங்களுக்கு நம்பிக்கையுண்டாகி உற்சாகந்தோன்றும். பணம் சீக்கிரம் வசூலாய்விடும். காரியம் ஒழுங்காகவும் திறமையாகவும் நடைபெறும். எண்ணிய எண்ணங் கைகூடும்; எடுத்த காரியம் நிறைவேறும். ஆதலால், இந்தச் சபையார்கள் நமது ஜாதியின் அபிவிருத்தியை யுத்தேசித்துப் பல முயற்சிகள் செய்து வருவதுபோல், சென்னையில் ஒரு விஸ்வகர்மத்தொழிற்சாலை ஏற்படுத்துவதும், தமது கடமைகளில் ஒன்றாகக்கொண்டுநடக்க வேண்டுகின்றேன். தொழிற்சாலைக்குரிய விபரங்களை விசாரித்தறிந்து வெளியிடுதல், அதற்குப் பெயரிடுதல், முதல் நிர்ணயித்தல், ஷேர்கள் ஏற்படுத்துதல், பாரங்கள் அச்சிடுதல், தண்டல் செய்தல் முதலிய காரியங்களை நடத்துவதற்குத் தக்கவர்களைக் கொண்டதொரு கமிட்டியை ஏற்படுத்த வேண்டும். வசூலாகும் பணம் மதராஸ் பாங்கியில் கட்டப்படவேண்டும். வேண்டியபணம் வசூலான பிற்பாடு, தொழிற்சாலை மானேஜ்மெண்ட்டுக்கு ஒரு கமிட்டி யேற்படுத்தவேண்டும் இவர்களுடைய பொறுப்பில் அதின் பரிபாலன முழுவதையும் விட்டுவிட வேண்டும். கம்பனி ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டும்; அப்போது தான் பணத்திற்கு யாதொரு மோசமும் ஏற்படாது; கவர்ன்மெண்டாருடைய மேற்பார்வை கிடைக்கும்.

ஷேர்ஹோல்டர்களா யிருப்பவர்களுக்கு வருஷா வருஷம் லாபம் கொடுக்கப்படு மாதலால், எப்படிப்பட்டவர்களும் பணங்கட்டி ஷேர் எடுத்துக்கொள்வதற்கு மேல்விழுந்து வருவார்கள். ஆனால், இவர்களுக்குமட்டும் லாபத்தைப் பங்கிட்டுக்கொடுத்தால் போதாது; வேலைக்காரர்களுக்கும் லாபத்தைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் நமது தொழிற்சாலையின்மீது ஆசைவைத்து வேலை செய்ய வருவார்கள்; வேலைக்குவந்தவர்கள் விட்டோடிப்போக மாட்டார்கள்; நமது தொழிற்சாலையின்மீது நமது குலத்தினருக்கெல்லாம் அதிகமான பற்று ஏற்படும்; அதுவும் நாளுக்குநாள் விருத்திபெற்றோங்கி அதிகமதிகமாய் லாபங்கொடுக்கும். இப்படிக்கிடைக்கும் லாபத்தில் ஒருபங்கைக் குலதர்மகாரியங்களுக்கென்று எடுத்துவைக்கவேண்டும். அந்தப் பங்கைக்கொண்டு பலதர்மங்கள் செய்யலாம். இந்த முகாந்தரத்தினால் நம்மவர்கள் விர்த்தியாவதற்குச் சாதகமானதோர் சாஸ்வத உபாயம் ஏற்படும். ஆதலால், விஸ்வகர்மத் தொழிற்சாலை, நமது ஜாதியார்க்குப் பலவிதங்களிலும் நன்மையுண்டாக்குமென்பது திண்ணம்.

சென்னையில் ஸ்தாபிதமாகுந் தொழிற்சாலை நன்றாய் நிலைபெற்று லாபகரமாய் வேலைசெய்யத் தலைப்பட்ட பிறகு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர்முதலிய வெளியூர்களிலும் கிளைச்சாலைகளை யேற்படுத்தி வேலை செய்யலாம். எத்தனை ஸ்தாபித்தாலும் அத்தனைக்கும் வேலை கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. அரசாங்கத்தாரும் சுதேச கனதனவான்களும் பலபேர்களுக்கும் கைத்தொழில்களைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்னுங் கருத்துடன் பலமுயற்சிகள் செய்துவரும் இக்காலத்தில், கைத்தொழில்களிலேயே பிறந்து கைத்தொழில்களிலேயே வளர்ந்து கைத்தொழில்களிலேயே ஜீவனஞ்செய்து கைத்தொழில்களிலேயேமாளும் நமது வம்ஸத்தினருக்கென்று ஒரு தொழிற்சாலையாவது ஸ்தாபித்து நடத்தாதிருத்தல், நமக்கு வெட்கமேயாகும். எத்தனையோ வருஷங்களுக்கு முன்னாலேயே நாம் இந்தப் பிரயத்தினஞ் செய்திருக்கவேண்டும்: இன்னுங் கூட சும்மாவிருப்பது அழகல்ல. ஆதலால், நாம் கொஞ்சகாலமேனுங் காமதஞ் செய்யாமல் உடனே இதற்கான பிரயத்தினஞ் செய்யவேண்டும்.

கல்லிலும் பொன்னிலும் ரத்தினங்களிலுஞ் செய்யப்படுந் தொழில்களை நமது தொழிற்சாலையினின்று நீக்கவேண்டும். கல் வேலை தொழிற்சாலைக் கேற்றதல்ல. பொன்னுக்கும் ரத்தினங்களுக்கும் பெரும் பொருள் வேண்டும். அவற்றை வைத்துக்கொண்டால் மற்றவை மறைந்துபோகும். இரும்பு, மரம், உலோகங்களிவற்றின்வேலைகளே நம்மால் மிகவும் அசட்டை செய்யப்பட்டுக் கைநழுவிப் போய்க்கொண்டிருக்கின்றன. ஆதலால், மேற்சொன்ன மாதிரியான தொழிற்சாலையொன்று கட்டாயமாகவும் அவசரமாகவும் நமக்கு வேண்டியிருக்கிறது.



## உபநயன நிர்ப்பந்தம்

**ஸ்ரீ கா அப்பாதுரை ஆச்சாரி, விரிஞ்சிபுரம்**

சென்றமாதப் பத்திரிகையில் ஸ்ரீ தி. குருசாமி ஆச்சாரியாரவர்கள் எழுதிய நியாயபூர்வமான அரிய வியாசத்தில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய அம்ஸம் ஒன்றிருக்கிறது. அதாவது, உபநயன நிர்ப்பந்தமே! உபநயனத்தை யுக்தவயதில் நமது வம்ஸத்துச் சிறுபிள்ளைகளுக்குச் செய்துவைப்பதற்காக நாம் எவ்வளவு எற்பாடுகள் செய்தாலும் தகும் நமது ஜாதிச் சீர்திருத்தம் என்னும் மண்டபத்தைத் திறப்பதற்கு உபநயனம் என்பதே திறவுகோல், அதாவது, சாவியெனவேண்டும். வேறுவிதத்தால் நம்முடைய ஜாதியைச் சீர்திருத்தமுடியுமென்று தோன்றவில்லை. ஆனபடியால், நமது வம்ஸத்தைச் சீர்திருத்தவேண்டுமென்றும், நம்மவர்களுக்கு ஆசாரங் கற்பிக்கவேண்டுமென்றும், நம்மவர்கள் நித்திய கர்மானுஷ்டானங்களைத் தவறாமல் செய்துவர வேண்டுமென்றும் ஆசைப்படுகிறவர்கள் எல்லாம், நமது ஜாதியாருடைய குடும்பங்களில் ஆண்பிள்ளைகளாய்ப் பிறந்தவர்களுக்கெல்லாம், யுக்தப்பிராயம் வந்தவுடன் தவறாமல் உபநயனஞ் செய்துவைக்கும்படி, அவர்களுடைய தந்தைமார்களை நிர்ப்பந்தப்படுத்த வேண்டும். இப்போது, சில விடங்களில் விவாக காலத்திலேயே உபநயனமுஞ் செய்துவிடப்படுகிறது. இது, பிராம்மண குலத்திற்குத் தகுமா? விவாகஞ் செய்து கொள்ளும்போது, அதாவது 20, 25 வயதான பிறகு, சடங்கோடு சடங்காய் உபநயனஞ் செய்து கொள்பவனுக்கு சந்தியாவந்தனஞ் செய்துகொள்ளத் தெரிவதும், அதற்கான மந்திரங்கள் பாடமாவதும் சாதனங்களாதியவை பழக்கமாவதும் கஷ்டமல்லவா? ஆதலினாலேதான், அப்படி உபநயனஞ் செய்விக்கப்படுகிறவர்கள் சந்தியாவந்தனந் தெரியாது சங்கடப்படுகிறார்கள். இதற்குப் பரிகாரம், யுக்தகால உபநயனமேயொழிய வேறுகிடையாதென்பது எண்ணிப் பார்ப்பவர்களுக்கு எளிதில் புலப்படும்.

இந்த உபநயனச் சடங்கு வேதாதிகளால் நமக்கு விதிக்கப்பட்டுள்ள வைதிகச்சடங்கு இதைக் காலத்தில் செய்யாதவர்கள் வைதிகநெறிதப்பிய பாதகத்திற்கு ஆளாவார்கள். நமது ஆருஷேய சகோதரர்கள் உபநயனசடங்கைத் தவறவிடமாட்டார்கள். ஏனென்றால், உபநயனமாகுமட்டும் ஒரு சிறுவன் பிராமணனாக மதிக்கப்படுவதில்லை. அவன் பந்திபோஜனத்திற்கு யோக்கியனாகமாட்டான். அவனால் தொடப்பட்ட ஆகாரத்தைப் பெரியவர்கள் சாப்பிடமாட்டார்கள் அவன் சூத்திரனாகவே மதிக்கப்படுகிறான். நாம் கர்ப்பத்திலேயே பிராமணத்வம் பெற்றவர்களானாலும், நமக்கு உரிய கிரியைகளாக விஸ்வப்பிரம்ம புராணமுதலியவைகளில் சொல்லப்பட்டிருப்பனவற்றை நாம் காலந்தவறாமல் செய்யக் கடமைப்பட்டேயிருக்கிறோம். அவற்றிற சொல்லியிருப்பதுபோல் பெரும்பாலும் அநுஷ்டானத்தில் கொண்டுவந்தேயிருக்கிறோம். என்றாலும், உபநயனகிரியைமட்டும் சற்றுத் தடங்கலாகவும் தாமதமாகவும் நடக்கிறது. அந்த வழக்கத்தை யொழித்துவிட்டு, இனிமேலாவது தக்க பிராயத்தில் நமது பிள்ளைகளுக்கு உபநயனஞ்செய்துவைக்க வேண்டும். நம்மவர்களுடைய குடும்பங்களில் ஒன்றிலேனும் உபநயனமாகாத சிறுவனிருக்கப் பார்த்திருக்கலாகாது. நாட்டாண்மைக்காரர்களும், காரியஸ்தர்களும், பந்துக்களும், பௌரோகிதர்களும் இதுவே நோக்கமாயிருந்து எந்தெந்தவீட்டுப் பிள்ளைகளுக்கு உபநயனமாக வில்லையென்று விசாரித்தறிந்து, அப்பிள்ளைகளுடைய பெற்றோர்களை நிர்ப்பந்தப்படுத்தி உபநயனஞ் செய்விக்கவேண்டும். அப்படிச் செய்யாதவர்களுடைய வீடுகளில் சாப்பிடக்கூடாது, சம்பந்தஞ் செய்யக்கூடாது. இப்படி நிர்ப்பந்தஞ்செய்யாவிட்டால், உபநயனச்சீர்திருத்தம் கைகூடாது. யாதொரு நிர்ப்பந்தமுஞ் செய்யாமலே வெண்டைக்காய்க்குழம்பா யிருந்துகொண்டு குலோத்தாரணஞ் செய்யமுடியாது. பயிலே மயிலேயென்றால் இறகைக் கொடுக்குமா?

இதுநிற்க, உபநயனச்செலவைப்பற்றி சிலர் ஆக்ஷேபஞ்சொல்லலாம். செலவுக்கு அஞ்சி செய்யவேண்டிய வைதிகக் கிரியையை நிறுத்தலாமா? கூடாது. வைதிக கிரியை பெரிதேயல்லாமல் செலவு பெரிதல்ல. கிரியைதப்பாது நடக்கக்கூடிய மாதிரியாய்ச் செலவைச் சரிபடுத்திக்கொள்ளவேண்டும். இதற்கேற்ற யுக்திகளை ஜாதியார் யோசனைசெய்து அநுஷ்டிக்கவேண்டும். தங்கள் தங்கள் சக்திக்கேற்றபிரகாரம் செலவுசெய்து காரியத்தை முடிக்கவேண்டுமேயல்லாமல், அட்டகாசஞ் செய்வதற்குப் பணமில்லையேயென் றெண்ணிக் காரியத்தை நிறுத்திவிடக்கூடாது. ஏழைகளாயிருக்

கின்ற ஆருஷேயர் தமது பிள்ளைகளுக்கு உபநயனஞ் செய்யாமல் விட்டுவிடுகிறார்களா? இல்லையே! நாம் மட்டும் என் விட்டுவிடவேண்டும்? எப்படியோ விரலுக்குத்தக்க வீக்கமாய்ச் செலவுசெய்து, டம்பமில்லாமல், கூடுமானவரையிலும் பந்துக்களுக்குச் சொல்லியோ சொல்லாமலோ, உபநயன சடங்கை முடித்துவருவதை நாம் கண்ணாக் கண்டுவருகிறோம். நம்முள் ஏழைகளாயிருக்கிறவர்களும் அப்படித்தான் செய்யவேண்டும். அவர்கள் தருமகாணிக்கை பெற்றாவது செய்கிறார்கள். நம்மவர்களும் அப்படியே செய்யலாம். சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையார்களும் அவர்களைப்போன்ற மற்ற சபையார்களும், கனவான்களும், புண்ணியவான்களும், குலோத்தாரணர்களும் இதற்குச் சகாயஞ்செய்யலாம். உபநயனஞ் செய்யக் காசில்லையென்றுகேட்டால், யார்தாங் கொடுக்கமாட்டார்கள்? அப்படிக் கேட்டாவது செய்துகொள்ளுகிறவர்கள் இல்லையே யென்ற ஏக்கந்தான் எங்குமுண்டாயிருக்கிறது. செல்வவான்களாயுள்ள குடும்பத்துச் சிறுவர்களைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அவர்கள் தமது மக்களுக்கு உபநயனஞ் செய்யாது வைத்திருப்பதற்கு யாதொரு சாக்குப் போக்குஞ் சொல்லவே முடியாது. சொன்னாலுங் கேட்கமுடியாது. மேற்சொன்ன நிர்ப்பந்தம் இங்குஞ் செய்யப்படவேண்டும். நிர்ப்பந்தமில்லாமல் நீதியுண்டாகாது. நிர்ப்பந்தமில்லாமல் நாம் நிலைநிற்கமுடியாது. நிர்ப்பந்தத்தினாலே தான் நாம் நீந்திக் கரையேறலாம்.

---

**காகிதத் தொழில்**—1911ம் வருஷத்தில் ஏற்பட்ட கணக்கின்படி இந்தியாவில் எட்டுக் காகிதத்தொழிற் சாலைகளிருந்தன. அவற்றிலிருந்து 6 கோடிப் பவுண்டு காகிதம் உற்பத்தியாகிறது. அத்தொழிற் சாலைகளில் 4600 பேர்கள் வேலை செய்கின்றனர். இந்தியாவுக்கு இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, பெல்ஜிய முதலிய நாடுகளிலிருந்து 118 லக்ஷரூபாய் மதிப்புள்ள காகிதமும் அட்டைகளும் வருகின்றன. அவற்றில் இங்கிலாந்திலிருந்து 68 லக்ஷரூபாய் மதிப்புள்ள காகிதம் வருகின்றது. ஜெர்மனியிலிருந்து 20 லட்ச ரூபாய் மதிப்புள்ள காகிதமும், ஆஸ்ட்ரியாவிலிருந்து 10லட்சரூபாய் மதிப்புள்ள காகிதமும், பெல்ஜியத்திலிருந்து 5 லட்ச ரூபாய் மதிப்புள்ள காகிதமும் இந்தியாவுக்கு வருகின்றன.

## அசதிக்கோவை.

**ஸ்ரீ கா. திருவேங்கட ஆச்சாரியார், சென்னை.**

லோகமாதாவாய் சரஸ்வதியினம்சமாய் வந்து தோன்றிய நமது மூதாட்டியாராகிய ஔவைப் பிராட்டியார், ஒரு காலத்தில் தென்னாட்டில் ஓர் காட்டுமார்க்கமாக மழையால் நனைந்துகொண்டு வரும்போது, ஆடுமாடுகளை மேய்த்து ஒரு பட்டிக்கு ஓட்டிக்கொண்டு போகும் ஒரு இடைப்பையனைக் கண்டு, "அப்பா! நீ எங்கே போகிறாய்?" என்று கேட்க, "பாட்டி! நான் இவைகளைப் பட்டிக்கு ஓட்டிக்கொண்டு போகிறேன்" என்றான். "ஊர் எவ்வளவுதூரம் இருக்கிறது" என்று ஔவைகேட்க, அது வெகு தூரத்திலிருக்கிறதென்றும் அப்பொழுது இருட்டிவிட்டதால் ஊருக்குப்போக முடியாதென்றும், அந்தக் காட்டிலிருந்த தன் குடிசைக்கு ஔவையாரை அழைத்துப்போவதாகவுஞ் செல்லி, அப்படியே கொண்டுபோய்த் தன்னுடைய துணியைக் கொடுத்து கட்டிக்கொள்ளும்படி செய்து, அம்மையாரின் துணிகளைப் பிழிந்து உலரவைத்து, தன்னிடத்திலிருந்த பழஞ்சாதத்தையிட்டு உண்ணும்படி யுபசரித்து, பின்னர் அக்குடிசையிலுள்ள கட்டிலில் படுக்கவைத்து, தான் தரையில் காலண்டையிலிருந்துகொண்டு, வேண்டிய உபசாரமொழிகளைக் கூறிக்கொண்டிருந்தான். அம்மையார்க்கு அதிக மகிழ்ச்சியுண்டாகி அவ்விரவை வீணே கழியாமல் இவன்மீது ஏதேனும் ஓர் பிரபந்தம் சொல்லலாமென்றெண்ணி "அப்பா உன்பேர் யாது?" என்று கேட்க, அவன் "பாட்டி என்னுடைய பெயர் எனக்கு அசதியாயிருக்கின்றது" என்றனன். (அசதி என்பது மறதி என்று கூறும் நாட்டுவழக்கச்சொல்). "ஆனால், உன் ஊரின் பெயர் யாது? அதையேனுஞ் சொல்" எனக்கேட்க, "அதுவும் எனக்கசதியா யிருக்கின்றது" என்றான். "ஆனால் உன்னுடைய ஊரில்யாதேனும் அடையாளமுள்ளதா?" என்று ஔவையார் வினவ, "அடையாளமுண்டு; நான் பண்டங்களைத் தலைவாசலுக்கு ஓட்டிக்கொண்டுபோய் அங்கே மாட்டுக்கிடையில் கிடத்துவேன். அங்கு அஞ்சுவேலமரங்கள் இருக்கின்றன. அந்த நிழலில் இருப்பேன். சாயந்திரம் கலயத்தில் சாதங்கொடுப்பார்கள். நான் வாங்கிக்கொண்டு இங்குவந்து விடுவேன். இது என் வழக்கம். ஊருக்குள் எனக்கு யாதொரு ஜோலியும் இல்லை" என்றுசொன்னான். அம்மையார் "அடடா! தன்னுடைய பெயர்கூடத் தெரியாத முட்டாளும் இவ்வுலகிலிருக்கின்றனனே!" என்று ஆச்சரியமடைந்து, "நல்லது; உன்மேல் ஒரு கோவை பாடுகிறேன்" கேள் என, அவன் "என்ன கோவை, கருங்கோவையா செங் கோவையா?" எனக் கேட்டான். அம்மையார் கொல்லென்று சிரித்து, இவன் நம்மிலும் சிலேடை கூறுவதில் மிக்கான் போன்றுளான் என்றெண்ணி, கருங்கோவையல்ல செங்கோவையே பாடுகிறேன் என்று சொல்லி அவன் பெயரை அசதி என்றும் அவனுடைய ஊரை ஐவேலென்றும் வைத்தமைத்து ஓர் கோவைபாடி முடித்தார். இக்கோவையில் ஒவ்வொரு பாடலிலும், முதலெழுத்து அகாரம் ஆகாரம் என்ற இவ்விரண்டி லொன்றையே கொண்டிருக்கிறது. அவற்றிற் சிலவற்றை கேட்டபடி யெழுதுகின்றேன். வழுக்கள் காண்பார் திருத்தித்தர வேண்டுகிறேன். வித்வான்கள் இக்கோவையில் தங்களுக்குத் தெரிந்த பாகங்களை நமது பத்திரிகை வாயிலாக வெளியிடுவார்களாக.

அற்றாங்கியகுழ லைவேலசதி யணிவரைமேல், முற்றாவிளமுலை யெவ்வாறு சென்றனள் முத்தமிழ்நூல், கற்றார்பிரிதலும் கல்லார்கள் கூட்டமுங் கைப்பொருளொன், றற்றானிளமையும் போலே யிருந்த தருஞ்சுகமே.

ஆடுங்கடைமணி யைவேலசதி யணிவரைமேல், நீடுங்கயற் கண்ணி யாள்தந்தமோகம் நெடுந்தூரமெங்கும், கோடுங்குளமும் குளத்தருகே நின்ற குன்றுகளும், காடுஞ்செடியும் அவளாகத் தோன்றுமென் கண்களுக்கே.

அலையுண்ட வேற்காத் தைவேலசதி யணிவரைமேல், நிலையுண்ட மங்கையர் கொங்கைக்குத் தோற்றிளநீரினங்கள், விலையுண் டடியுண்டு மென்கையிற் குத்துண்டு வெட்டுமுண்டு, கொலையுண் டடியுண்டு கண்ணீர் ததும்பிடக் குத்துண்டதே.

ஆய்ப்பாடியார்குல வைவேலசதி யணிவரைமேல், கோப்பா முலைச்சிதன் கொங்கைக்குத் தோற்றிபக் கொம்பிரண்டும், சீப்பாய்ச் சிணுக்கறியாய்ச் சிமிழாய்ச் சின்ன மோதிரமாய்க், காப்பாய்ச் சதுரங்கமாய்ப் பல்லக்காகிக் கடைப்பட்டதே.





## தொழிற் கல்வி.

**" சத்தியவசனன் " எழுதியது.**

1907ஸ்ரீ டிசம்பர்மீ 30உ மூன்றாவது தொழிற் சம்மந்தமான கான்பரன்ஸ் பம்பாய் இராஜதானியில் சூரத் என்கிற நகரத்தில் நடைபெற்றது. இந்தியாவில் பற்பல இடங்களிலிருந்து இராஜாங்கத் தொழில் இலாகா உத்தியோகஸ்தர்களும், பிரத்யேக தொழிற்சாலை அனுபவமுள்ளவர்களும் விஜயம் செய்தனர். அவர்களை யெல்லாம் வரவேற்பதற்காக வரவேற்புக் கமிட்டியார் ஏற்படுத்தப்பட்டார்கள். அவர்களுக்குள் முதன்மையானவர் ப்ரோபசர் (T. K. Gajjar) கஜ்ஜர் என்பவர். சூரத்நகரவாசிகள் இந்தியாவின் தொழிற் சம்மந்த பிரதிநிதிகளை வரவேற்கும் தொழிலை அவருக்கு அளித்தார்கள். அவர் வரவேற்பு பத்திரத்தில் தான் ஒரு தொழிலாளி வம்சத்தில் தோன்றியவர் எனத்தெரிவிக்கிறார். அஃதன்றியும் அப்பத்திரத்தின் கடைபாகத்தில் சரஸ்வதியையும் விஸ்வகர்மாவையும் குறித்து சில சங்கதிகளைத் தெரிவிக்கிறபடியால் அவர் நம்மினத்தவர் என்று ஊகிக்க இடமிருக்கிறது. அவர் இந்தியாவின் உயர்வுக்கும் விருத்திக்கும் ஐஸ்வரியத்திற்கும் கைத்தொழிலபிவிர்த்தியே முதற்காரணமென்றார். கைத்தொழில் ஏற்றத்திற்கு முதற்காரணம் தொழிற்கல்விஎன ஸ்தாபிக்கிறார். அவர் கைத்தொழிலைப்பற்றி வெளியிட்ட அபிப்பிராயத்தை ஈங்கு விவரிப்போம்.

தொழிற்கல்வியும் தொழிற்றேர்ச்சியும் இருக்கவேண்டியவை. அவை உளவாயின் மற்றவை யெல்லாம் தாமே வரும் அகலம் பரவிய தொழிற்கல்வியால் தொழிற்றேர்ச்சி யுண்டாகி இகலோக சம்பத்துள்ளவர்களாவோமானால், அஃது இராஜாங்க, ஜனசமூக, பக்திமார்க்க உயர்வை அடைதற்கு ஹேதுவாகும். தொழில் தேர்ச்சியடைய தொழிற் கல்வி எங்கும் பரவவேண்டும். தொழிற் கல்விக் கூடங்களிலும் தொழிற்சாலைகளிலும் சிறுவர்கள் சேர்ந்து பயில்வார்களானல், இந்திய கைத்தொழிலேற்ற ஜீர்ணோத்தாரணமாகும். கவர்ன்மெண்டார் வித்யா இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு, இப்போது கொடுத்துவரும் பொதுக் கல்வியுடன் தொழிற் கல்வியைச் சிறுவர்களுக்கு கொடுக்கும்படிக்கும், தொழிற்கல்விக் கூடங்

களையும் தொழிற்சாலைகளையும் ஏற்படுத்திப் பரிபாலனம் செய்யும்படிக்கும், உத்தரவு அளிப்பார்களானால், இந்தியக் கைத்தொழில் ஜீரணோத்தாரணம் அதிக விரைவில் சித்தியாகும். கவர்ன்மெண்டார் தொழில் செய்யும் ஜாதியார்களுக்கு திரவிய ஆதரவைக்காட்டித் தொழிற் கல்வியில் பயிலச்செய்து தொழிற்சாலைகளில் பழக்குவார்களானால் கூடிய சீக்கிரத்தில் கைத்தொழிற் சம்பத்திலும் ஐஸ்வரியத்திலும் ஏற்றத்தையடைந்து ஆங்கிலர், இடாலியர், ஜப்பானியர், ஜர்மானியராதியரோடு கைத்தொழில் ஏற்றத்தில் இந்தியர் சமத்துவத்தை அடையலாம். இந்தியர் ஓர் ஜாதியராக மதிக்கப்படுவார்கள். அவர்கள் நட்பையும் சிநேகத்தையும் ஏனையர் அடைய விரும்புவார்கள்.

அன்னியதேயத்தைக்காட்டிலும் நம்தேயத்தில் தொழிற்சம்பந்த சௌகரியங்கள் ஏராளமா யிருக்கின்றன. பிரகிருதித் தோற்றசக்திகள் இந்தியாவில் காணப்படுகின்றன. அவைகளை எல்லாம் நாமே உபயோகித்தால் சம்பத்தை அடையலாம். பருத்தி எண்ணெய் வித்துகள் ஏராளமாயிருக்கின்றன. நூதன தொழில்மார்க்கத்தை அனுசரித்து, யந்திரங்களின் உதவியைக்கொண்டு பிரகிருதி சக்திகளை நமக்கு உபகரணமாகக்கொண்டு கைத்தொழில் செய்வோமானால், பருத்தியும் எண்ணெய் வித்துகளும் ஏற்றுமதியாதலையும், ஆடைகளும் எண்ணெய்களும் இறக்குமதியாதலையும் நிறுத்தலாம். நம் தேயத்துப் பொருள்கள் நம்முடைய ஐஸ்வரியத்திற்கே உதவியாக நிற்கும்.

தொழிலாளிகளுக்கு இன்றியமையாத சாஸ்திரங்களாகிய தாதுசாஸ்திரம், மின்சார சாஸ்திரம், ஜங்கம சாஸ்திரம், உலோகசாஸ்திரம் இவற்றைக்கற்றலே தொழிற்கல்வியாகும். இவற்றை கவர்ன்மெண்டார் பொதுக்கல்வியோடு கலாசாலைகளில் பயிற்றுவிக்க வேண்டும். அப்படிப் பயிற்றுவிக்காதது கவர்ன்மெண்டாரின் குற்றமல்ல. அக்குறையை நமது குற்றமாகவே பாவிக்கவேண்டும். நமக்கு வேண்டியதை நாமே தான் அறிதல் கூடும். நமக்கு வேண்டியதைக் கவர்ன்மெண்டார் எங்ஙனம் அறியக்கூடும்? நமக்கு வேண்டியதை நாம் அறிவித்தால் கவர்ன்மெண்டார் அதற்கு வேண்டிய சகாயத்தைச் செய்வர். தக்க முயற்சியை எடுத்துக்கொள்வார்கள். நமக்கு வேண்டியவைகளை நாம் கவனிக்கிறதேயில்லை. ஆகையினாற்றான் கைத்தொழில் ஏற்றத்தில் ஏனைய ஜாதியரைக்காட்டிலும் இந்தியராகிய நாம் தாழ்வையடைந்திருக்கிறோம்.

சாயம்போடுவதில் நீலிமருந்து உபயோகமாகிறது. அது ஐரோப்பாவில் ஏராளமாய் இறக்குமதியாகிறது. அதை நாம் உபயோகித்தால் நம் தேயம் விருத்தியடையாதா? இலாபமடையாதா? ஜர்மானியர் கூட்டுவர்ணமுண்டாக்கு முறைகளை உபயோகித்துவருகிறார்கள். அம்முறைகளை நாம் ஏன் கற்று உபயோகிக்கக் கூடாது? அதற்கு வேண்டிய தாதுசாஸ்திரமும் ஜங்கமப்பொருள் சாஸ்திரமும் கற்றால்தானே அம்முறைகள் நமக்குத் தெரியும்? இதற்குத்தான் தொழிற்கல்வி வேண்டும். தொழிற்கல்வி பயிற்றுவிப்பதோடு தொழிற்காட்சிகள் நடைபெற்றால் சிறுவர்கள் அதைப்பார்த்து பொருள்களின் ரூபத்தை மனதில் பதியச்செய்து கொள்வார்கள். அவ்விதமாகத் தொழில் ஞானத்தை விருத்திசெய்யலாம்.

பற்பல தேசங்களில் செய்யப்படும் பொருள்களை மாதிரிக்காக வரவழைத்து மியூசியம் உண்டாக்கினால் சிறுவர்கள் அதைப்பார்க்குந்தோறும் தொழிற்சம்பந்த ஞானமும் பகுத்தறிவும் உண்டாகும். அப்போதைக்கப்போது தொழிற்காட்சிகள் வைத்தல் மாத்திரம் போதாது. அஃதுடன் தொழிற் கான்பரன்சுகூட்டி தொழிலைப்பற்றிப் பேசுவதால் ஓர் மாகாணத்துத் தொழில்ஞானம் மற்றோர் மாகாணத்தார்க்குத் தோன்றும். தொழிற்காட்சிகள் தொழிற்கான்பரன்சுகள் இல்லாமல் உபயோகப்படாது. இந்தியாவில் அநேக சுரங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் பற்பல உலோகங்கள் மயில்துத்தம் கந்தகம்போன்ற பொருள்கள் நிலக்கரி அபரேக்கு முதலியவைகள் அகப்படுகின்றன. அவைகளையெல்லாம் நாமே உபயோகித்தால் இந்தியா எவ்வளவோ ஏற்றத்தை அடையும். பலவிதமான பிருதிவியைக்கொண்டு நாணயமான மட்பாத்திரங்களைச் செய்யலாம். கைத்தொழிலில் அநுதாபமின்மை என்னும் பெருந்தூக்கத்தினின்று இந்தியர் எழுந்து தொழிற்கல்விச்சாலைகளையும் தொழிற்கூடங்களையும் உண்டாக்கிச் சிறுவர்கள் தொழில் ஞானத்தை அடையச்செய்தால் இந்தியாவானது கைத்தொழில் அபிவிருத்தியை யடைந்து நாகரீகத்தைப் பொருந்தும் தேசங்களுக்குள்ளே முதற்றரமான தேசமாகும். இந்தியராகிய நாமும் ஜாதியாரில் முதன்மை அடைவோம்.



## இந்துமஹா சத்தியவேத விருத்தாந்தம்

(1-வது சஞ்சிகையின் 12-வது சம்புடம் 152-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸ்ரீ V. மௌனகுரு-ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், பழநி

மேற்சொன்னவாறும், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களாகவும் பாவித்து அகாரத்தை உகாரத்தி லொடுக்கி, உகாரத்தை மகாரத்தி லொடுக்கி, மகாரத்தை நாதத்தி லொடுக்கி, நாதத்தை மாயையிலொடுக்கி, மாயையை ஜீவனி லொடுக்கி, ஜீவனே விஸ்வேஸ்வரபகவான், அவனே நானென்று சாதிப்பது பரம சமாதியாம்.

"யோகம்" என்பது—மனைவி முதலிய இல்லற சம்பந்த மனைத்து மின்றித் துறவுபூண்டு, கற்பசாதனை செய்து, அமுதமிறக்கி யுண்டு, காயசித்தி பெற்றபின், பன்னிரண்டு கலையாயும் வாசியை வசப்படுத்தி, ஸ்வஸ்திகம் முதலிய ஆசனங்களி லிருந்து பிராண வாயுவை இரேசித்துப் பூரித்துக் கும்பித்து, உபாதியைநீக்கி, உண்ணாக்கிக் கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி, இவற்றிலொன்றிற் சந்ததஞ் சிந்தை வைத்து, ஐம்புல னடக்கி யிருப்பது, சாதிப்பது, இப்படிப்பட்டவைகளே அஷ்டாங்கயோக மென்னப் படுகின்றன.

**4-வது**, பிரணவவேத விதிவழுவாமல், தத்துவ சாஸ்திரங்களிற் கூறிய பேதாபேதங்களை யுணர்ந்து, பொறிகளின் வழியிற் புலன்களைச் செல்ல வொட்டாமல், தானென்று விகற்பமாய் வருவதையும், அடுத்து வரும் மலையும், தாயத்தாரையும், நல்வினை, தீவினைகளையும், ஆணவம், மாயை, காமியத்தையும், இகபர இச்சையையும், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் முதலிய பஞ்சாவஸ்தைகளையும் ஒழித்து, ஒன்றையும் சுற்றிப் பாராமல், எதார்த்த சுத்தமே தானாக விளங்குவதே, விஸ்வேஸ்வர பகவானிடத்தில் ஐக்கியமாகிய "சாயுச்யபதவி" யுடைய சந்நியாஸியாகிய "ஞான" த்துக்குடையவனா யிருக்கிறான். இந்து சமயாசார நூல்கள் பற்பலமாறுதல்களா யிருந்தாலுங்கூட, முடிவில் விஸ்வேஸ்வர பகவானாகிய பிரம்மத்துடன் ஐக்கிய மாவதே "ஏகைகதத்துவம்" என்று வேதங்களாலும் வேதாந்த சாஸ்திரங்களாலும் வரையறுத்துக் கூறப்பட்டிருக்கின்றது.

பிரம்மாவுக்கு இரண்டாவது பரார்த்தமான "ஸ்வேத வராக" கல்பத்திற் காரம்பித்து 454-வது சதுர்யுகத்தின் அந்தியமான கலியுகமும் தேவமானத்தில் 54 லக்ஷத்து 45 ஆயிரத்து 814-வது வருடமும் மனுஷியமானத்தில் 196 கோடியே 8 லக்ஷத்து 53 ஆயிரத்து 15-வது வருடமும் நடந்துகொண்டிருக்கின்றன.

பிரகிருத சிருஷ்டி யாரம்ப காலமுதல் இதற்கு 28-வது சதுர்யுகத்துக்கு முன்வரை தேவமானத்தில் 51 லக்ஷத்து 12 ஆயிரம் வருடமும், மனுஷியமானத்தில் 84 கோடியே 3 லக்ஷத்து 20 ஆயிரம் வருடமுங் கொண்ட காலங்களாகிய 426 சதுர்யுகங்கள்வரை தத்தங் காலப்பிரமாணப்படி (1) சுவாயம்பு (2) சுவாரோஷிகர் (3) உத்தமர் (4) தாமஸர் (5) அனரவதர் (6) சாக்ஷுஷர் என்கின்ற ஆறு மனுக்களுடைய அந்திரங்களும் (1) இந்திரன் (2) விபச்சித்து (3) ஸுசாந்தி (4) சிபிச் சக்கரவர்த்தி, (5) விபு (6) மனோஜவன் என்கின்ற ஆறு தேவராஜாக்களுடைய அதிகாரங்களும் ஆயுள் பிரமாணங்களும் சம்பூர்ணமாகி இதுவரை 28 சதுர்யுகமும் தேவமானத்தில் 3 லக்ஷத்து 34 ஆயிரத்து 814 வருடமும் மனுஷியமானத்தில் .2 கோடியே 5 லக்ஷத்து 33 ஆயிரத்து 15 வருடமுங்கொண்ட காலங்களாக சாக்ஷாத் சூரியபகவான் புத்திரரான "வைவஸ்வதமனு" வினுடைய அந்தரம் நடந்துகொண்டிருக்கின்றதாக காலப்பிரமாண கணிதங்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன.

ஆதியில் பிரம்மாவினாலே அத்தியயனம் பண்ணப்பட்டதும், நான்கு பாதங்களுள்ளதும், அநேகம் ஆயிரம் கிளைகளை யுடையதும், ஸர்வாபீஷ்டசித்திகளையும் கொடுக்கும் திறமையுடைய அக்நிஹோத்திரம், தரிசபூர்ணமாஸம், சாதுர்மாசியம், பசுபந்தம், சோமம் என்ற பஞ்ச எக்ஞங்களும், தேவ எக்ஞம், பிதுர் எக்ஞம் பூத எக்ஞம், மனுஷிய எக்ஞம், பிரம்ம எக்ஞம், என்ற பஞ்ச மஹா எக்ஞங்களும், திரவியம், சேதம், பலம், காவம், ஞானம், கர்மம், சிரத்தை, அவஸ்தை, ஆகிருதி, நிஷ்டை என்ற பத்தங்கங்களும் உடையதுமாக விருந்த அகண்டமான வேதத்திலிருந்து, இருக்குகளை யெல்லாம் பிரித்தெடுத்து ஒன்றாக்கி "இருக்குவேதம்" எனவும், யெஜுஸுகளை யெல்லாம் பிரித்தெடுத்து ஒன்றாக்கி "யஜுர்வேதம்" எனவும், ஸாமங்களைப் பிரித்தெடுத்து ஒன்றாக்கி "ஸாமவேதம்" எனவும், அதர்வ

பாகங்களை யெல்லாம் பிரித்தெடுத்து ஒன்றாக்கி "அதர்வணவேதம்" எனவும், பிரிக்கப்பட்டிருப்பதாகவும், விஷ்ணுபுராணம் மூன்றாமம்ஸம் நான்காவது அத்தியாயத்திலும், நடந்துகொண்டிருக்கிற "வைவஸ்வதமனு" அந்திரத்தில் கடந்த சதுர்யுகங்கள் தோறும் உள்ள ஒவ்வொரு சதுர்யுகங்களிலும் அடியிற் கண்டபடி, மஹரிஷிகளால் வேதமானது பிரிக்கப்பட்டிருப்பதாக, விஷ்ணுபுராணம், மூன்றாமம்ஸம், மூன்றாவது அத்தியாயத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாதெனில்:

முதலாவது துவாபரயுகத்தில் சிருஷ்டிகர்த்தாவான பிரம்மாவும், 2-ல், சூரியகுமாரனான பிரகிருதவைவஸ்வதமனுவும், 3-ல், அசுரகுருவான சுக்கிரபகவானும், 4-ல், தேவகுருவான பிரகஸ்பதிபகவானும், 5-ல், காஸ்யபபுத்திரரான சூரியபகவானும், 6-ல், சூரியபுத்திரரான இமதாமராஜாவும், 7-ல் தேவர்கோனான இந்திரனும், 8-ல், வசிஷ்டமுனிவரும், 9-ல், சாரஸ்வதரும், 10-ல், திரிதர்மாவும், 11-ல், திரிவிருஷாவும், 12-ல், உசத்தியர் புத்திரரான பாரத்துவாஜ முனிவரும், 13-ல், அந்தரிக்ஷரும், 14-ல் தருமியும், 15-ல், திரையாருணியும், 16 ல், தனஞ்சயனும், 17-ல், கிருதஞ்சயனும், 18-ல், சஞ்சயனும், 19-ல், பாரத்துவாஜரும், 20-ல், கௌதமரும், 21-ல், ஹரியாத்துமாவென்று சொல்லப்பட்ட உத்தமரும், 22-ல், வாஜிசிரவன் என்ற வேனனும், 23-ல், திருணபிந்துவென்ற சோமசுஷ்கமாயணனும், 24-ல், வால்மீகியென்ற பார்க்கவரிக்ஷரும், 25-ல், ஸக்திமஹரிஷியும், 26-ல் பராசரும், 27-ல் ஜாதுகர்ணனும், 28-ல், கிருஷ்ணத்துவைபாயனன் என்ற வியாசரும் வேதவியாசர்களாகவிருந்து இப்படி இருபத்தெட்டுதரம் வேதத்தை நான்காகப்பிரித்து லோகோபகாரஞ் செய்துவந்ததாக சொல்லியிருக்கிறபடி வெளிவந்திருக்கிற வேதவசனங்களினால் வரையறுத்துச் சொல்லி யிருக்கவுமில்லை. இப்படிப் பிரிக்கப்பட்ட 28-விதமான வேதங்கள் எந்த ராஜ்ஜியங்களிலாவது, அநுஷ்டானத்திலிருந்துகொண்டிருப்பதாக வெளி யரங்கமாகவுமில்லை. ஆனால் விஸ்வேஸ்வர பகவானது திருவாக்கிலிருந்து புறப்பட்ட தற்பூரண மொழியான வேதங்கள் ஐந்தென புராதன சுருதிகளாற் சொல்லப்பட்டிருக்கின்றது.

(இன்னும்வரும்)

# விஸ்வகர்ம வித்தியாசாலைகள்

ஸ்ரீ அத்தியாபக-லிங்காச்சாரியார், கணியம்பாடி

(1) "லௌகிகப் பொதுக்கல்வி"—இக் கல்விச்சாலைகள் கவர்ன்மெண்டாராலும் கிறிஸ்துவ சங்கத்தாராலும் இந்து பிரபுக்களாலும் அங்கங்கே ஸ்தாபிக்கப்பட்டு சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் மேல்பார்வைக்குள்ளாய் கிரமப்படி நடந்தேறி வருகின்றன. அவற்றில் ஜாதி வரையறையின்றி எல்லாப் பிள்ளைகளும் கல்வி பயின்று வருகிறார்கள். பாடசாலைச் சம்பளம்கொடுக்க சக்தியற்ற ஏழைப்பிள்ளைகளும் இலவசமாய்ப் படிக்க மானேஜர்களின் தயையுண்டு. நம்மவர்களின் பிள்ளைகளும் அப்பாடசாலைகளில் தாராளமாய்ப் படிக்கலாம். அவைகளிலேயே வாசிக்காத நம்மவர்களின் பிள்ளைகள் நமக்கென்று பெருந்தொகை செலவிட்டு அங்கங்கு ஸ்தாபிக்கப்படும் பாடசாலைகளில் எப்படி வாசிப்பார்கள். பள்ளிப்பாடசாலைகளில் நன்றாய் வாசிக்கும் பிள்ளைகள் ஏழைகளானால் சபையார் உதவி செய்யலாம். மற்றவர்கள் விஷயத்தில் என்ன செய்கிறது. பொதுவாய் நம்மவர்களெல்லாம் தொழில்செய்யும் வகுப்பாராய் இருப்பதனால் தொழிலையே கண்ணுங்கருத்துமாய்க் கவனிக்கிறார்கள். கல்வியைக் கவனிப்பாரில்லை. இக்குறையானது நம்மவர்களுக்குள் நிலைபெற்றிருக்கிறது. இதுவரையில் கல்வி வேண்டுமென்று அதின் பற்பல நன்மைகளைக்காட்டி நம்பத்திரிகை வாயிலாய் வெளியிட்டுவந்த நண்பர்கள் இக்குறையை நிவர்த்திக்கக் கூடிய உபாயம் ஒன்றும் எழுதினாரில்லை. அவ்வுபாயங்களை ஆராய்ந்து அதற்கேற்ற காரியங்களில் தலையிட்டு நடத்திவருவது உத்தமமாயிருக்கிறது. அதற்காக நான் கூறும் உபாயம் என்னவென்றால், லௌகிகப் பொதுக்கல்வி பயில நமக்கென்று பிரத்தியேகமான பாடசாலைகள் ஸ்தாபிக்கவேண்டியதில்லை (ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பள்ளிப்பாடசாலைகளே போதும்) என்பதும் அடுத்த பாராவின் முதலில் கூறுவதுமேயாம். இவ்வுபாயத்தை நண்பர்கள் ஆலோசித்தால் இதன் நன்மைகள் பூரணமாய் விளங்கும். அதன்மேல் காரியம் துவக்கி நடத்திவந்தால் ஆரம்பத்திலேயே பயன்தரும்.

(2) "லௌகிகச் சிறப்புக்கல்வி"—நம்மவர்கள் கல்வியினும் கைத்தொழிலிலேயே கண்ணுங் கருத்துமாய்



இருப்பவர்களென்று முந்திய பாராவிற் சொல்லப்பட்டது. கைத்தொழிலும் நம்மவர்களுக்கு அவசியந்தானே. அதைக் கற்பிக்கும் தொழிற்சாலைகளையே ஸ்தாபிப்பது உத்தமோத்தமமாகும். இளமையிலே பணம் சம்பாதிக்கக்கருதும் நம்மவர்களுக்கு இதுவே நல்லவழி. இத்தொழிற்சாலைகளில் தொழில் கற்போர்க்கு ஆரம்பத்திற் சிலமாத (ஒருவருஷ) காலம் கைக்குப்பணம் கிட்டாது. பிறகு போகப்போக பிள்ளைகளுக்கு மாதச் சம்பளமும் இவற்றை நடத்துகிற சபையாருக்கு ஊதியமும் கிடைக்கும். நண்பர்கள் இத்தொழிற் சாலைகளை நவீனநாகரீகத்துக்கேற்றபடி யெல்லாம் ஸ்தாபிக்கலாம். பொதுக்கல்வி பயிலாத அல்லது பொதுக் கல்வி குறைவாயிருக்கிற சிறுவர்களுக்கு அதற்கென்று குறிக்கப்படும் ஒருவேளையில் அக்கல்வி பயிற்றிவைக்கலாம். இத்தேசத்தில் நம்மவர்களின் தொழில் திறமையை விருத்திசெய்து விளக்கிவைப்பதற்கு இதுவே வழியாகும். இதன் மூலமாய்க் கல்விக் குறைவும் கூடிய சீக்கிரத்தில் நிவர்த்தியாகும். இத்தொழிற்சாலை சென்னையில் ஒன்றும் மற்ற ஜில்லாக்களிற் முக்கிய பட்டணத்துக் கொன்றுமாக அங்கங்கே ஸ்தாபிக்கலாம். இக்காரியத்தில் சிரத்தையுள்ளவர்கள் சபைகூடி நிதிசேகரித்து தொழிற்சாலைகள் ஸ்தாபித்து பரிபாலித்துவரலாம். ஆனால் பின்னால் 4-ம் பாராவில் கூறும் இவற்றுக்குவேறான வைதிகப் பிரிவை இதில் சேர்க்கக் கூடாது. வைதிகக்கல்வியைப் பற்றிய சபை வேறாகவே இருத்தல்வேண்டும். சபைகளின் பிரதி மெம்பரும் இவ்விருவித சபைகளிலும் சம்பந்தப்படலாம். சபைவிஷயம் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படக்கூடாது இருந்தால் பேதம் தெரியாமல் மயங்கவைத்து ஒவ்வொன்றின் ஒழுங்கையும் மாற்றிக் கலைத்துவிடும்.

3. "வைதிகப் பொதுக்கல்வி"—மேல் 1. 2. பாராக்களில் கூறியபடி நம்மவர்கள் கல்வியிலும் கைத்தொழில் நாட்டமுடையவர்களாதலின் இவ்வைதிகப் பொதுக்கல்வி இன்பந்தருவதாய்த் தோன்றவில்லை. இக்கல்வி சம்ஸ்கிருதத்தில் வாசகம், நிகண்டு, காவியம், நாடகம், வியாகர்ணம் இவ்வளவுங் கற்று பாராட்டி ஞானமும் பாண்டித்தியமும் பெறுவதாகும். இவற்றைக் கற்க நீடித்த காலம் செல்லும். அதன்மேல் லௌகிகக் கல்வி கைத்தொழில்களைக் கற்க சமயம் வாய்க்காது தடைப்படும். அதனால் பாரம்பரிய ஜீவனோபாயம் கெடும். ஆகவே, இக்கல்வி அதில் பூரண இச்சையுள்ளவர்களான நம்மில் தனிகர்கள் மாத்திரமன்றி எல்லாராலும் விரும்பற்பாலதன்றாகும். இதற்காக சபைச்செலவில் ஒரு சம்ஸ்கிருத பாடசாலை ஸ்தாபித்தாலும் இத்தன்மைத்தாகவே முடியும். இதில் பூரண இச்சைவைத்தவர்களான நம்மில் தனிகர்கள் தங்கள் செலவில் சம்ஸ்கிருதபண்டிதர்களிடம் பாடம் கேட்டுத் தேர்ச்சியடைவார்கள். அவர்களிலும் ஏழைகளுக்கு சபையார் திரவிய சகாயம் செய்யலாம். கீழ்ப்பாராவில் கூறப்போகும் காரியங்கள் நம்மவர்களுக்குள் நடைபெற்று சிலவருடங்கள் செல்வதன் மேல், இக்கல்வி மிகவும் அத்தியாவசியமாய்த் தோன்றும்போது, அதற்காக கல்விச் சாலை ஸ்தாபித்துக் கொள்ளலாம். இதனிடையில் நம்மவர்களுக்கு சர்வதா இன்றியமையாதனவற்றை ஆராய்ந்து தெளிந்து அவ்வொழுங்குகளைப் பரிபாலித்து வருவது நம்மெல்லாருடைய கடமையா யிருக்கிறது.

4. "வைதிகச்சிறப்புக்கல்வி"—இப்போது நம்மவர்களில் புரோகிதர்கள் போதுமான அளவு இல்லாக் குறையினால் வைதிகாசாரக் கிரியைகள் காலந் தவறாமல் நிறைவேற்ற முட்டுறுகின்றன. ஆகையால், புரோகிதத் தொழிலை விருத்திசெய்வதே நமக்கு இன்றியமையாத காரியமா யிருக்கிறது. அதற்காக சென்னையில் ஒரு வேதாத்தியயன பாடசாலையிருந்தால் போதாது. அதற்கு நான் முந்திய வியாசங்களிற் கூறிவந்தபடி ஜில்லாவுக்கொரு புரோகிதத்தொழில் பயிலும் (Training) பாடசாலை ஸ்தாபிக்கப்பட வேண்டும். சென்னையில் ஒன்றே போதும். இவற்றில் அவ்வச்சில்லாவிலுள்ள தேர்ந்த புரோகிதர்களே உபாத்தியாயர்களா யிருத்தல் வேண்டும். வித்தியார்த்திகளெல்லாம் அப்பாடசாலையிருக்கிற ஊராராயிருக்கக் கூடாது. பிரதி ஜில்லாவின் எந்த பிராந்தியத்தில் புரோகிதர்கள் குறைவோ அப்பிராந்தியத்தார் தெரிந்தெடுத்து அனுப்புகிறவர்களையே உடன்படிக்கை எழுதிக்கொண்டு சேர்க்கவேண்டும். அவர்கள் 12 வயதுக்குக் குறைந்தவர்களாயும் ஏற்கனவே சம்ஸ்கிருதம் அல்லது தெலுங்கு பயிலாதவர்களாயும் இருக்கக்கூடாது. அவர்கள் இப்பாடசாலைகளில் இரண்டொரு வருடந்தான் பயில வேண்டும். மேலும் ஜில்லாவுக்கொரு வைதிகாசாரபரிபாலனசபை பிரத்தியேகமா யிருத்தல் வேண்டும்.

வைதிக கருமங்களில் நித்தியகருமமெனறும் நைமித்தியகருமமென்றும் இருவகை யுண்டு இவற்றில் நித்திய கருமம் ஒவ்வொருவரும் தாமாகவும் நைமித்தியகருமம்

புரோகிதர்களைக்கொண்டும் செய்துகொள்ளத்தக்கது. நித்திய கர்மானுஷ்டானம் அங்கங்குள்ள புரோகிதர்களிடமே கற்றுக்கொள்ளலாம். அதற்காக பாடசாலைகள் ஸ்தாபிப்பது எளனமான காரியமல்ல. நண்பர்கள் இதை நன்றாய் யோசித்து மனதில் வைப்பார்களாக. இதை விட்டு வேதாத்தியயன பாடசாலைகள் ஸ்தாபித்தால் அவற்றில் பயிலும் வித்தியார்த்திகளுக்கு அத்தியயனம் செய்ய எப்போது சமயம் வாய்க்கும்? தேவாலயங்களில் விசேஷகாலத்திலும், சுவாமி ஊர் வலம் வருங் காலத்திலும் அத்தியயனம் செய்வது வழக்கம். மற்றசமயங்களில் சிறுபான்மை யிருந்தாலும் இச்சமயமே பெரும்பான்மையாய்ப் பிரத்தியக்ஷமானது. அச்சமயங்களில் ஒருவேளை நம் வேதாத்தியயன பாடசாலை வித்தியார்த்திகள் மனந் துணிந்து வேதாத்தியனம் செய்வார்களானல் (அவர்கள் சமயப்பற்றில்லாத அத்தியயனம் செய்வதினல்) பெரிய கலகத்துக் காஸ்பதமாகும். இக்கலகங்காரணமான அத்தியயனத்தை தற்போது நிறுத்திவைப்பது நலம் அதனல் வேதாத்தியயன பாடசாலை யென்னும் பேரை வைதிகாசார பாடசாலை யென்றாவது, புரோகித பாடசாலை யென்றாவது மாற்றி வைத்துக் கொள்ளலாம்.

மேலே கைத்தொழில், புரோகிதம் இவ்விரண்டிற்கும் பிரத்தியேகமான இரண்டு சபைகள் பிரதி ஜில்லாவுக்கும் இருத்தல் வேண்டுமென்றது—கைத்தொழில் பொதுத்தன்மையும், புரோகிதம் மதத்தன்மையும் உடைமையாதலின்; தேர்ந்த புரோகிதர் என்றது— வைதிகம், ஆகமம் என்னும் இருவகையினும் எல்லாக் கிரியைகளையும் நடத்திவைக்க வல்லுநர். அப்பிராந்தியத்தார் தெரிந்தெடுத்து அனுப்புகிறவர்களை என்றது— அப்பிராந்தியத்தா ரெல்லாரும் அங்கீகரிக்கத் தக்க யோக்கியதையுள்ளகுடும்பத்திற் பிறந்தவர்களை.

இதுகாறும் மேல்நான்கு பாராக்களிலும் நான் கூறிவந்த விஷயங்களின் முடிவாவது—லௌகிகக்கல்வியும் கைத்தொழிலும் பயிலுதற்காக ஜில்லாவுக்கொரு கைத்தொழிற்சாலை ஸ்தாபித்து அதில் சிரத்தையுள்ள பிரத்தியேக சபையாரால் பரிபாலிக்கப்பட்டு வரவேண்டுமென்பதும், வைதிகக்கல்வியாகிய புரோகிதத்தொழில் பயிலுதற்காக ஜில்லாவுக்கொரு புரோகித பாடசாலை ஸ்தாபித்து அதில் சிரத்தையுள்ள பிரத்தியேக சபையாரால் பரிபாலிக்கப்பட்டு வரவேண்டுமென்பதுமே.

## விஸ்வகர்மகுல வித்தியார்த்திகள்.

ஸ்ரீ G. T. வேங்கடாச்சாரியார், சென்னை

கடல்சூழ்ந்த இவ்வுலகின் கண்ணுள்ள பொருள்களனைத்திலும் மாணிடர் மேன்மையடைவது அறிவினலன்றி வேறொன்றாலுமல்ல. அவ்வறிவை மேன்மேலும் விருத்திபண்ணவேண்டியது ஒவ்வொருவருடைய தவறாக்கடமை ஆகும். அவ்விருத்திக்கு இன்றியமையாப் பொருள் கல்வியேயாம். சங்கீதஞானம் இல்லாதவனுக்கு இசை எப்படித் தோன்றுமோ அதுபோல கல்வி யறிவில்லாதவனுக்கு இவ்வுலகம் தோன்றும். ஆனதால், மாந்தராய்ப்பிறந்த எல்லோருக்கும் கல்வி யறிவு இன்றியமையாப் பொருளாம். இனிமேல் நாம் எவ்விதக்கல்வி தற்காலத்துக்கு அத்தியாவசியமென்பதைச் சற்று யோசிப்போம். நாம் எந்த தேசத்திற்குப்போனாலும் பொதுப்பாஷையா யிருக்கப்பட்டதும், இராஜபாஷையுமான இங்கிலீஷ் பாஷையே யாவராலும் விரும்பப்படுவது. இப்பாஷையில் கற்றுத்தேர்ந்தவர்கள் உத்தியோகத்துக்கு லாயக்காவதுமன்றி இராஜாங்கக்காரியங்களில் சட்டதிட்டங்கள் ஏற்படுத்துவதிலும், இன்னும் அநேக விஷயங்களிலும் தங்களுடைய கருத்தையும் ஜனங்களுடைய கருத்தையும் எடுத்துச் சொல்ல சக்தியுள்ளவர்களா யிருக்கிறார்கள். இப்படிப்பினல் நம் தேசத்தில் இல்லாத வைத்தியசாஸ்திரங்களையும், சிற்பசாஸ்திரங்களையும் இன்னும் அநேக நூதன கைத்தொழில்களையும் கற்க இடமுண்டு. இவ்வுலகத்தில் சில தேசங்கள் மற்ற தேசங்களைக்காட்டிலும் அதியுன்னத பதவிக்கு வருவதற்குக் காரணம் அத்தேசத்தாருடைய கைத்தொழிலேதான். ஒருவர் இங்கிலீஷ் கற்று உத்தியோகத்திற்கு வரவேண்டுமென்கிற நோக்கமில்லாவிட்டாலும் இங்கிலீஷ் கற்றிருப்பதால் உண்டாகும் நன்மைகளைச் சற்று யோஜித்துப்பாருங்கள். ஒருவர் லக்ஷாதிபதியாயிருந்து இராஜபாஷையை அறிந்திருப்பாரேயாகில் அவர் தம்முடைய செல்வத்தை உபயோகிக்கும் வகை யறிவார். இராஜாங்கத்திலும் தமக்கு ஆகவேண்டிய காரியங்களைத் தாமே நேரில் முடித்துக்கொள்ளுந் திறமையுள்ளவராவார் அதனல் தம்முடைய செல்வத்திற்கு நாளும் விருத்தியையும் தம்தேசத்திற்கு என்றும் அழியாப்புகழையு முண்டாக்குவார்.



நம்மவர்கள் கைத்தொழிலில் எவ்வளவு விருத்தியடைந்திருந்தபோதிலும் இங்கிலீஷ்தெரிந்த சொற்பவேலைக்காரர்களைக் கண்டால் இவர்கள் தலை வணங்கவேண்டியதா யிருக்கிறது. கைத்தொழிலில் தேர்ச்சியடையாதவர்களாயினும் இங்கிலீஷ் படித்தவர்களாயுள்ளவர்களை, கைத்தொழிலில் மிகுந்த நம்மவர்கள் தலைவணங்கி வேலைசெய்வதை உவர்க்ஷாப்புகளிலும் பார்க்கலாம். நம்மவர்கள் வேலையில் அதிகத் திறமையுள்ளவர்களாயிருந்தும் இப்படியாவதற்குக் காரணம் யாது? நம்மவர்களுக்கு இங்கிலீஷ் தெரியாமையே யல்லவா? இதனல், கைத்தொழிலாளிக்கும் கல்வி அவசிய மென்பதும், கல்வியில்லாமல் கைத்தொழில் பிரகாசமடையாதென்பதும் எல்லோர்க்கும் வெளிப்படையாகும்.

இவ்வளவு பெருமையுடையதும் அவசியமானதுமாகிய ஆங்கிலக்கல்வியை நமது வம்ஸத்துச் சிறுவர்களுக்குப் போதிக்கவேண்டாமா? போதித்து, அவர்கள் தேர்ச்சியடையச் செய்தாலல்லவா, அவர்கள் கைத்தொழிற் கல்வியும், உத்தியோகக் கல்வியும் பெறுதற்குச் சாதனமுண்டாகும்? இந்தக் கல்விகளில் மேன்மை பெற்றாலொழிய நமது கைத்தொழில்கள் சீர் பெறமாட்டா. நமது குலவருமானம் அதிகப்படமாட்டாது. நமது கௌரவம் பெருகமாட்டாது. ஆதலினல் நமது குலச் சிறுவர்களுக்கு ஆங்கிலக்கல்வியை போதிக்கவே வேண்டும். செல்வக்குடும்பத்தினர் மட்டுமே யல்லாமல், ஏழைக்குடும்பத்தினரும் தம் மக்களுக்கு வித்தியா போதனை தரும்படி ஏற்பாடு செய்யவேண்டும். இப்போதோ இங்கிலீஷ் கலாசாலைகளில் வாசிக்கும் சிறுவர்களின் தொகையோ மிகக் கொஞ்சமாயிருக்கிறது. அப்படி யிருப்பது நமது குலத்திற்கு அழகாகுமா? இப்படி யிருந்தால், நமது வம்ஸத்திற்குப் பெருமையும் உயர் பதவியும் வருவதெங்ஙனம்? சிலர் வசதிகளிருந்தும் படியாமல் நின்று விடுகிறார்கள். சிலர் திரவிய சகாய மில்லாமல் கஷ்டப்பட்டு கடைசியில் தங்கள் எண்ணத்துக்கு விரோதமாக படிப்பை நிறுத்தும்படியாகிறது. கஷ்டத்திற்கெல்லாம் மனந் தளராமல் நம் குலக் கனவான்களிடத்தில் உதவிபெறலாமென்று துணிவோர் மிகச் சிலரேயாயிருக்கின்றனர். வித்தியாபி விருத்திக்கு ஏதாவது உதவிசெய்யவேண்டுமென்று கேட்டால் கொடுப்போரும் வெகு குறைவாயுளர். சில கனவான்கள் படிக்கவெண்ணிய பிள்ளைகளை எளனஞ்செய்வதோடு அவர்கள் மனதைப் புண்ணாக்கி யனுப்புகிறார்கள். இந்த ஸ்திதியில் நமது சிறுவர்கள் என்ன தைரியங்கொண்டு வாசிக்கத்துணியலாம்?

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையார் ஆங்கிலக்கல்வியின் அவஸ்யத்தை நன்றாய் அறிந்தவர்களாய், நமதுகுலம் ஈடேறவேண்டுமானல் நம்மக்களுக்கு ஆங்கிலக்கல்வி போதிக்கவேண்டுமென்று முயன்று வருவதாகத் தெரிகிறது. ஏற்கனவே, ஓரிருவருடைய கல்விப்பயிற்சிக்கு இச்சபையார் சகாயஞ் செய்திருப்பதாகவுந் தெரிகிறது. ஆனல், போதுமான வருவா யில்லாக்குறையால், இவர்கள் வேண்டுமளவு நமது குல வித்தியார்த்திகளுக்கு உதவிசெய்யக்கூடாம விருப்பதாகத் தோன்றுகிறது. இந்தக்குறை நமது குல முழுவதையுமே தாக்குமென்பதில் சந்தேகமுண்டோ? அன்பர்களே! நன்றாய் யோசித்துப் பாருங்கள். தர்மசீலர் எனும் பெயர்பெற்ற பச்சையப்ப முதலியார் தனக்கு சந்ததியில்லாததை எண்ணி தன்னுடைய ஐவேஜியெல்லாம் தர்மத்துக்கு தன் ஜாதியென்றும் பிறஜாதியென்றும் வித்தியாசம் பாராட்டாமல் எழுதி வைத்ததால் அத்தருமம் தன் குழந்தை யிருந்து பேர் சொல்வதைவிட இலட்சம்மடங்கு விளங்கவில்லையா? அதுபோல் நம்மவர்கள் எல்லாஜாதியாருக்கும் செய்யாவிட்டாலும் நம் ஜாதியாருக்காவது செய்யக்கூடாதா? மற்ற ஜாதித் தர்மசீலர்கள் தமது குலப்பிள்ளைகளுக்கு உதவி செய்துகொண்டு வரும்போது ஏன் நம்மவர்கள் நம்ஜாதிப் பையன்களுக்கு செய்யக்கூடாது? இப்படி யிருந்தால் நம்மவர்கள் என்றைக்கு முன்னுக்கு வருவது?

(இன்னும் வரும்)

---

**பட்டினி சிகிச்சை.**—பட்டினி கிடந்தால் பிணிதீருமென்று டாக்டர் ஒல்ட் பீல்டென்பவர் ஒரு பிரசங்கம் செய்தார். பிணியைத் தீர்ப்பதற்கு பட்டினி கிடப்பது ஒரு பெரிய அவுஷதமாகு மென்றும், வியாதிக்காரன் அதற்குமுன் சரியாக போஷிக்கப்பட்டவனக இருந்தால் 3, 4 நாள் சுத்தப்பட்டினியாயிருந்தாலும், கொஞ்சம் தண்ணீர் மட்டும் அருந்தி வந்தால் 20 நாள்வரைப் பட்டினி கிடந்தாலும் பாதகமில்லை யென்றும் சொல்லுகிறார். இந்த வாடிக்கை இன்னம் தெலுங்கு ஜில்லாக்களில் அனுஷ்டானத்தில் இருந்துவருகிறது.

## செவ்வாயைப் பற்றிய சில விவரங்கள்

ஆகாயத்தில் அளவிறந்தினவாகத் திகழும் கோளங்களுள் செவ்வாயும் ஒன்று. இது நவக்கிரகங்களுள்ளும் ஒன்றும். வானத்திலியங்கும் கிரகங்களுள் இதுவே பூமிக்கு மிகச் சமீபத்தி லுள்ள தென்று தெரிகின்றது. நாம் வசிக்கும் பூமியிலுள்ளனபோலச் செவ்வாயிலும் கால வேற்றுமைகளும் நீரும் நிலமும், மலையும், காடும், காற்றும், மேகமும் உண்டென்று தெரிகின்றது செவ்வாயில் மனிதர்களும் வசிக்கின்றார்களென்று தெரிகின்றது. அங்குள்ளார்களுக்கு ஒரு நாள் இந்தப் பூமியில் வசிக்கும் நமது ஒருநாளைவிட நாற்பது நிமிஷம் நீண்டது. நமது 2 வருஷங்கள் செவ்வாயிலுள்ளவர்களுக்கு ஒருவருஷமாகும். செவ்வாயின் வடக்குப் பாதியில் வசந்தகாலம் 199 நாட்களும், கோடைக்காலம் 183 நாட்களும், மாரிக்காலம் 158 நாட்களும், இலையுதிர் காலம் 147 நாட்களும், நீடிக்குமாம். பூமியில் 200 பவுன் கனமுள்ள ஒருவன் செவ்வாயில் 78 பவுன்தானிருப்பான். அங்கு ஈயம் கல்லளவு கனமே யிருக்கும், கல் நீரளவு கனமே யிருக்கும். அங்கு வசிப்பவர்கள் பிரமாண்டமான மனிதர்களா யிருப்பார்கள். செவ்வாயில் வசிக்கும் மனிதன் பூமியில் வசிப்பவனைவிட 83 மடங்கு பெரியவனுகவும் சக்தி வாய்ந்தவனுகவு மிருப்பான். பூமியில் வசிக்கும் ஒருவன் 2 அடி உயரமுள்ள ஒரு வேலியை எளிதில் தாண்டுவதுபோலச் செவ்வாயில் வசிக்கும் மனிதன் 8½ அடி உயரமுள்ள சுவரைத் தாண்டிவிடுவானும். அவன் ஒருகாற்பந்தை 50 மைல்தூரம் வீசக்கூடுமாம். நவக்கிரகங்களும் நவலோகங்களின் உற்பத்திக்குக் காரணமாயிருப்பதுபோலச் செவ்வாய் இரும்பின் உற்பத்திக்குக் காரணமென்று சொல்லப்படுகின்றது. தாமதகுணமுள்ள தேவதைகளுக்குச் செவ்வாய் உகந்த நாளென்று இந்துக்கள் கொண்டாடுகிறார்கள். செவ்வாய் பூமிக்கு மிகச் சமீயமாய் வரும்பொழுது உலகத்தில் பெரும்போர்கள் நேரிடுவதுவழக்கம். இப்பொழுதும் அவ்வாறே செவ்வாய் பூமிக்கு மிகச் சமீபத்தில் வந்திருப்பதால் உலகத்தில் பெரும்போர்கள் நேரிடுமென்று வானசாஸ்திரிகள் கூறுகின்றார்கள். உலகத்தின் தற்கால நிலைமை யுற்றுநோக்கும் பொழுது அவர்கள் கூறுவது உண்மையென்றே தோன்றுகின்றது.

லோகோபகாரி

## நமது வாசகர்கள்

### தஞ்சைக்கான்பரன்ஸல்லவா?

நமது பத்திரிகையின் மார்ச்மீ சஞ்சிகையில் சபையார் பிரதிபாதிப்பது தஞ்சை ஜில்லாக் கான்பரன்ஸ் என்னும் பெயருக்குரியதா யிருக்கிறதே யல்லாமல், குடந்தைக்கான்பரன்ஸ் எனப் படத் தக்கதல்ல. குடந்தையில் கான்பரன்ஸ் என்பது ஸ்ரீரா. சதாசிவ உபாத்தியாயரவர்களால் கையாளப்பட்ட மகுடமாகும். குடந்தையில் நடக்கும் கான்பரன்ஸ் என்னும் பொருளைத் தருகிறபடியால், இம்மகுடம் பத்திரிகையிற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதைக் குடந்தைக் கான் பரன்ஸ் எனக்குறைத்துச் சொல்லி அனர்த்தம் பண்ணுவது கூடாது. சபையார் நடத்தத் தூண்டுவது தஞ்சைஜில்லாக் கான்பரன்ஸே யல்லாமல் குடந்தைப் பட்டணக் கான்பரன்ஸல்ல. இதைப்பற்றி ஸ்ரீரா. சதாசிவ உபாத்தியாயருடைய கருத்தியாதோ தெரியவில்லை. குடந்தைவாசிகளும், குடந்தையே போன்றுள்ள தஞ்சைஜில்லாவின் மற்றபட்டண வாசிகளும், குக்கிராம வாசிகளும் என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்களென்பதுந் தெரியவேண்டும். 'குடந்தைக் கான்பரன்ஸுக்கும் நமக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது?' என்று தஞ்சை ஜில்லாவாசிகள் பலர் உபேக்ஷயா யிருப்பதாக எண்ணுவதற்கிடமிருக்கிறது. இல்லாவிட்டால், சென்ற ஆறுமாதகாலமாக கான்பரன்ஸ் காரியம் கொஞ்சமேனும் முன்னேற்ற மிருக்குமா? ஆதலினால் சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு இக்கடிதம் எழுதத் துணிந்தேன்.

நாகைவாசி.

### சமஸ்கிருதக் கல்வி.

இதற்கு உதவிசெய்வதாகச் சபையார்தெரிவித்திருப்பது அவர்களுடைய பெருங்குணத்தை விளக்குகின்றது. இவ்வித உதவி செய்ய இதுவரையிலும் எவரும் முன் வந்ததாகத் தெரியவில்லை. சமஸ்கிருதக் கல்வி வேறு, வேதாத்தியயனம்வேறு என்பதை யாவரும் நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். சமஸ்கிருதக் கல்விக்குச் சபைகள் நடுங்கும்; சமஸ்கிருக் கல்வி சாஸ்திராதாரங்கள் தரும்; சமஸ்கிருத பண்டிதர்கள் நமது ஜாதிக்கே கௌரவந் தருவார்கள், நமது குறைகளை நீக்குவார்கள், நம்மைச் சீர்திருத்துவார்கள், நமது பாத்தியதைகளைக் காப்பாற்றுவார்கள். வேதாத்தியயனம் என்பது இன்னதென்றறியாத அதிகாரிகளால், எழுத்துவாசனையும் பிடித்தறியாத இளம்பிள்ளைகளுக்கு நிர்ப்பந்தமாய்ச் சொல்லிக்கொடுக்கப்படும் சபைக்கஞ்சிய வேதாத்தியயனத்தினால், செய்தவர்களுக்காவது செய்வித்தவர்களுக்காவது, கேட்டவர்களுக்காவது, கொடுத்தவர்களுக்காவது மற்றும் யாருக்காவது ஏதாவது பிரயோசனமுண்டா? உண்டென்று ஸ்தாபிக்க வல்லவர்கள் ஒருவரையுங் காணோம். இவ்வித சந்தர்ப்பத்தில், உள்ளபடியே நமது வம்ஸத்தை மேலுக்குக் கொண்டுபோகக் கூடியதாகிய சமஸ்கிருதக் கல்விப் பயிற்சிக்குச் சபையார் உதவிசெய்ய முன் வந்ததின் சிலாக்யம் அறிவாளிகளுக்குப் புலப்படாமற் போகாது. இவர்கள் இங்கிலீஷ்படிப்புக்குச் செய்த சகாயங்களைப் பற்றி இதுவரையிலும் வாசித்திருக்கிறோம். இனிமேல், சமஸ்கிருதக் கல்வி சகாயத்தைப்பற்றியுங் கேள்விப்படுவோம். சமஸ்கிருதக்கல்வியில் பிரியமுள்ளவர்கள் காலதாமதஞ் செய்யாமல் சபையாரிடமிருந்து சீக்கிரம் சகாயம்பெற்று சீர்ப்படுவார்களாக. இதற்கு வேண்டிய தூண்டுதலை மற்றவர்கள் செய்வார்களாக.

சீர்காழி. நே. மாணிக்காச்சாரி.

### தீபாவளித்தண்டல்

வருஷத்தில் ஒருதடவை தீபாவளி சமயத்தில் தண்டல் செய்ய நமது சபையார் ஏற்பாடு பண்ணி மூன்று வருஷங்களாகின்றன. ஆயினும், இன்னும் ஓராயிர ரூபாயுஞ் சேரவில்லை யென்றால், நம்மவர்களுடைய பொதுஜனோபகாரத்தைப்பற்றி என்ன சொல்வது? இதைக் கேட்டு மற்ற ஜாதியார்கள் நம்மைப் பரிகாசஞ் செய்கிறார்கள். என்ன கெட்டாலும், வருஷா வருஷம் இரண்டாயிர ரூபாய் சேரக்கூடாதா? ஆளுக்கொரு தம்பிடி கொடுத்தாலும் ஐயாயிரத்துக்கு அதிகஞ் சேரலாம். அதுவுங் காணோம். இப்படி வருஷங்கள் கழிந்து போய்க்கொண்டே யிருந்தால், நமக்கு எப்போது பணஞ் சேருவது? இது ஜாதியாரின் பொதுப் பொக்கிஷமென்பது நம்மவர்களுக்குத் தெரியவில்லையே! ஒவ்வொருவருக்குஞ் சொந்தமானதா யிருக்கின்றபடியால், இதற்கு ஒருவர் தப்பாமல் உழைக்கவேண்டுமென்பதைத் தெரிந்துகொள்ளாம லிருக்கிறார்களே! வீட்டுக்குவீடு விடாமல் கேட்டு வாங்குவதாகத் தலைப்பட்டால் பத்தாயிரரூபா யானாலுஞ் சேர்ந்துவிடும். சிறு பிள்ளைகளிடத்தில் உண்டிகளைக் கொடுத்து பெரியமனுஷர்களா யிருக்கப்பட்டவர்கள் கூடச்சென்றால், ஒரு ரூபா இரண்டு ரூபா வாங்கிவிடலாம். ஆனால், முன்னாடியே நோட்டீஸ்களை வீட்டுக்குவீடு கொடுத்துவிடவேண்டும். அவர்கள் வாசித்துப் பார்த்துக்கொண்டு பணந் தயாராய் வைத்திருப்பார்களாதலால், போய்க் கேட்டவுடன் உண்டியிற் போட்டுவிடுவார்கள். பெரிய பட்டணங்களி லிருப்பவர்கள், பேட்டைக்கொரு கூட்டமாகப்போய்த் தண்டினால்தான் பட்டணமுழுதும் விடாமல் தண்டல்செய்ய முடியும். எல்லா உண்டிகளையும் ஒன்றாய்த் திறந்துபார்த்துக் கணக்கிட்டு மொத்தமாய்ச் சேர்த்து, தண்டினவர்களுடைய பெயர்களை ஜாபிதா செய்தனுப்பிவிட்டால், சபையார் விஸ்வகர்மன் பத்திரிகையில் அச்சிடுவார்கள். நடுக்கொள்ளைக்காரர்கள் தண்டிச் சாப்பிட்டுவிடாமல் பாதுகாக்க வேண்டும். சபையாரிடம் பணஞ் சேர்ந்துவிட்டால் பயமில்லை. அவர்கள் பொருளையெல்லாம் கையில் வைத்துக்கொள்ளாமல் பாங்கியிற் கட்டிவைக்கிறார்கள். இப்படிச்செய்வதினால், ஜனங்கள் கொடுக்கிறபணம் பத்திரமாயிருக்கிறதென்ற நம்பிக்கையும், விருத்தியாகிறதென்கிற சந்தோஷமும், பெருந்தொகையாய்ச் சேர்ந்தபோது எல்லார்க்கும் உபயோகப்படுமென்ற தைரியமும் உண்டாகிறது. தீபாவளித் தண்டல் செய்யும் சென்னைச் சபை ரிஜிஸ்டரானதாதலினால், கணக்கு வகையராக்கள் சரியாயிருக்குமென்பதில் கொஞ்சமும் சமுசயமில்லை அன்பர்களே! நமக்குச் சகாயஞ்செய்ய வந்துள்ள சபையார்களுக்குச் சகல விதத்திலுஞ் சகாயஞ் செய்வோமாக.

R. P. A.

### தூத்துக்குடியில் கான்பரன்ஸ்

திருமந்திர. நகரமென்னும் தூத்துக்குடி விஸ்வகர்ம குலாபிமானிகள் விருத்திகொள்ள ஓர் விண்ணப்பம் யாதெனின், கனவான்களே! கல்விச் சிறப்புற்றோங்கியகல்விமான்களே! நம்குலவிருத்தியைக் கைப்பற்ற நாம் பெரும்பாலும் கவலைக்குறைவாயிருப்பது பெருங்குற்றமே. நம் விஸ்வகர்ம கனவான்கள் திருவுளம்பற்றி சிறுவர்களையும் சிறுபெண்களையும் கல்விச்சாலையில் புகுத்தி விருத்தியடையச் செய்யவேண்டியது நம்மவர்களுடைய பெருங்கடமை. இனியாவது நம்மவர்கள் கண்ணைவிழித்துப் பார்த்து எல்லாக்காரியங்களையும் நன்றாய் ஆலோசித்து தக்க ஏற்பாடு செய்ய வேண்டியதவசியம்.

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.—

உலகத்தின்கண் பிறந்தாற் புகழோடு பிறக்கக் கடவர்; அவ்வாறில்லாதவர்கள் பிறவாமையே நல்லது. அதுபோல நாம் சுயகாரியங்களை மாத்திரம் பார்க்கிறது பெரிதல்ல; நம் குலவிஷயத்திலும் கவனஞ்செலுத்த வேண்டும் ஆதலினால் இனியாவது நம்குலாபிமானிகள் திருவுளம்பற்றி தூத்துக்குடியில் கான்பரன்ஸ் ஒன்றுநடத்த எல்லாரும் கூடி பிரயாசை எடுக்கவேண்டும். அப்படி நாம் செய்யத் துணிவோமானால் நம்குலம் சீக்கிரத்தில் நல்ல நிலைமையிலும் கல்விப்பழக்கத்திலும் முன்னேறுமென்பதற்கு யாதொரு தடைகிடையாது. அப்போதுதான் நம்மவர்களுக்கு கல்வியின் பெருமையும் தமது சிறுவர்களுக்கு கல்விபயிற்றவேண்டிய அவசியமும் விளங்கும்.

அள்ளிக்கொடுக்கின்ற செய்பொன்னு மாடையு
    மாதராவாய்க்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்குமே என்னைக்
    குறித்ததல்லால்
துள்ளித்திரிகின்ற காலத்திலே என்
    துடுக்கடக்கி
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய
    பாதகனே.

என்று தமது புத்திரர் தம்மைச் சபிக்காதபடி தப்புவார்கள். ஜாதிக்குவேண்டிய சீர்திருத்தங்களெல்லாம் அதன் பிறகுதான் கைகூடும்.

தூ. சா. கதிரேசன் ஆச்சாரி.

## ஸ்ரீ A. அண்ணாமலை ஆச்சாரியார்

குலாபிமான மிக்க செல்வராகிய புதுக்கோட்டை விஸ்வப்பிர்ம்ம மகாஜன சபைக் காரியதரிசியும் திருச்சி சென்ட்ரல் சபை வைஸ்பிரஸிடண்டாகிய புதுக்கோட்டைடவுன்வாசியும் வைத்தியம் ஜோதிடம் இவைகளில் நிபுணராய் உயர்தர பட்டங்கள்பெற்று, நிர்மிதகனகாரியங்கள் செய்து நன்மதிப்பும், பலஜாதியாருடைய பலமும்பெற்று பிரகாசித்து நமது வம்சத்திற்கென்று மிக்குரிய இவ்வழியில் நம்மக்களுக்கு நல்வழி புகட்டுபவருமாகிய நமது குலத்திற்கென்று உண்மையாய் பாடுபடும் குலசீலரான பிரம்மஸ்ரீ. A. அண்ணாமலை ஆச்சாரியாரவர்களை புதுக்கோட்டை சமஸ்தான சீப் கோர்ட்டு ஸெஷன்ஸ் விசாரணைக்கு அதிகார முறைமையில் 1324 (1914-1915) பஸலிக்கும் அஸெஸர்களின் ரிவைஸ்லீஸ்டில் நெம்பர் 1-ல் பதிவு செய்திருக்கும் லீஸ்டின் காப்பியை குடந்தை விஸ்வகுலாபிமான சபை லைப்ரேரியில் 1-8-14 இரவு 7-மணிக்கு சில மெம்பர் முதலானவர்கள் கூடியிருந்தபோது ஷை காப்பியை பிர்ம்மஸ்ரீ T. N. அப்பாசாமி ஆச்சாரியாரவர்கள் மனப்பூரிப்புடன் ஷை சபையின் டிரஷரர் பிர்ம்மஸ்ரீ A. கோவிந்தசாமி ஆச்சாரியாரவர்களிடம் கொடுத்ததில் ஷை டிரஷரர் அவர்களால் சாங்கோபாங்கமாய் சுருக்கி வாசிக்கப்பட்டது.

ஷை பிர்ம்மஸ்ரீ, A. அண்ணாமலை ஆச்சாரியாரவர்களை உயர்தர சீப் கோர்ட்டு ஜுரிபதவிக்கு உயர்த்தப்பட்டிருப்பதைபற்றி மிக்க குதூகலத்துடன் ஷை சபைக் காரியதரிசியாகிய நான் தெரிவிக்கிறதாவது:

இவரது உத்தியோக சாமர்த்தியமும் நடுவுநிலைமையும் பலராலும் மெச்சப் பெற்றிருக்கின்றன. இக்கனவான் மேன்மேலும் தழைத்தோங்கிவர ஸ்ரீ விஸ்வேஸன் கருணை பாலிப்பாராக. சுபம். சுபம். சுபம்.

தே. மா. சொக்கலிங்க ஆச்சாரி.

## குடந்தையில் கான்பரன்ஸ்

கான்பரன்ஸ் விஷயமாய் யாதொரு சங்கதியும் ஸ்ரீ ரா. சதாசிவ உபாத்தியாயரவர்களால் நாளது வரை வெளிவராதது மனதிற்கு அதிக கிலேசத்தை உண்டு பண்ணுகின்றது. உபாத்தியாயரவர்கள் கான்பரன்ஸ் நடாத்த வேண்டுமென்ற எண்ணம் வெகு நாளாகக் கொண்டிருந்ததினால்தான் 11 பெயர்களுக்குத் திருமுகம் எழுதினதாகத் தெரிகிறது. குடந்தையிலுள்ள நமது வம்ஸத்தினர்களின் நிலைமை அன்னவருக்குத் தெரியாத விஷயமன்று. குடந்தையில் கான்பரன்ஸ் நடத்தாவிட்டால் பலருக்கும் நகையுண்டாகும். ஆகையால் நமது குடந்தை சகோதரர்கள் இது விஷயத்தில் ஊக்கங்காட்டவேண்டும். இதற்கு நிதி சேர்ப்பது மிகவும் எளிது. எவ்விதமெனின்:

1911ஞ் த்து சென்ஸஸ் ரிப்போர்ட்டின்படி தஞ்சை ஜில்லாவில் நமது ஜனத்தொகை புருஷர்களில் 31,385. இதில் 5வகுப்பினர்களும் சேர்ந்துள்ளார்கள். 5-ல் ஒரு பங்கு 6275 பெயர்கள். இதில் விருத்தாப்பியர்கள் 1000 பெயர்கள் நீங்க, 5275 புருஷர்கள் உளர். இதிலும் 275 சிறுவர்கள் நீங்க, 5000 பெயர்கள் உளர். அதிலும் கொடுப்பதற்கு மனதில்லாதவர்கள் 1000 பெயர்கள் நீங்க 4000 நபர்களிருக்கின்றனர். ஆக 4000 பொன் வேலை செய்வோரின் பட்டரையிலிருக்கலாம். ஒவ்வொரு கூடத்திலும் 2, 3, பெயர்கள் சேர்ந்திருப்பதாலும், சிறிய பட்டரைகளா யிருப்பதாலும் 3000 த்தை நீக்கின் பாக்கி நின்றது 1000 (அதாவது 31ல் ஒரு பங்கு) பட்டரைகள் இருக்கலாம். ஒவ்வொரு பட்டரையிலும் மாதமாதம் குறைந்தது மைக்காட்டு மண்ணில் வரும் ரூபா 2; ஆக ரூபா 2000 ஒரு நிமிஷத்தில் சேகரித்து விடலாம்.

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த நாங்குநேரி ஒரு சிறு தாலுக்காவில் இராநின்ற விஸ்வகுல வம்சத்தினரை தங்கள் பட்டரையின் மைக்காட்டு மண்ணை 5 வருஷத்திற்கு 500 ரூபா குத்தகைக்கு விட்டு நிலத்தை வாங்கி அதில் ஓர் பள்ளிக்கூடம் நடைபெற்று வருவதை நாம் பத்திரிகையில் கண்டிருக்கின்றோம்; ஒரு சிறு தாலுக்கா அவ்விதம் ஊக்கம் கொண்டிருந்தால் நீர்வள நில வளங்களிலும் ஜனத்தொகையிலும் சிறந்த தஞ்சை வாசிகளுக்கு பணஞ்சேகரிப்பது ஒரு பெருங் கஷ்டமாகாது.

திரவியஞ் சம்பாதிக்க, செய்ததையே செய்யாமல், புதிதுபுதிதான நகை செய்வதற்கு ஊக்கங் காட்டுவது போல், குலத்தை விருத்திக்குக் கொண்டுவரக் கூடிய வழிகளில் கான்பரன்ஸ் கூடுதல் என்னும் முக்கிய அம்சத்தில் நிலைபடுதல் நம் கடமையல்லவா?

“ஐவர் ஒன்றாய் நின்றதனா லன்றோ சமர்வென்றார்
தெவ்வர் பலமுடைத்தார் சீருடன் சகோதரர்கள்” *
“பாண்டவர்கள் பலதுயரம் பட்டுமீண்டார் போலே
பூண்டால் ஒருமைப் பூதலத்திற் சீர்பெறுவோம்” *
“ஒத்துவாழ்வோர்க்கொன் றொருபொருட்டோவில்லை
இத்திறத்தினாலன்றோ எதிரார் மேற்றிசையோர்”*
“எல்லோரு மொன்றாகி யேகமனதுடனே
சொல்லாற் பொருளாற் செயலாற் றுணைபுரி”ந்து

கான்பரன்சைக்கூட்டி ஜாதியை ஈடேற்றக் கேட்டுக்கொள்ளும்

தங்கள் அன்பன் சகோதரன்
துன்னூர் T தங்கவேல்
திருநெல்வேலி பாலம்.

## பிறஜாதிதூஷணம்

இதைவிலக்க வேண்டுமென்பதைக்குறித்து எவ்வளவு வற்புறுத்திப் பேசினாலும், அன்றி எழுதினாலுந் தகும். பிறஜாதி தூஷணை செய்யும் பழக்கம் பல நாளுண்டுகளாக நம்மவர்களிடத்தில் வேரூன்றியிருக்கிறது. ஆகலால், இதை விலக்குவது கஷ்டமாகவே காணப்படுகிறது. சித்தார்த் தீர்ப்புமுதலிய தீர்ப்புகளெல்லாம் பிறஜாதி தூஷணஞ் செய்வதற்காகவே தோன்றினவென்பது சிலருடைய அபிப்பிராயம். இதைவிடப் பிசகான அபிப்பிராயம் வேறுமுண்டோ?

* “விஸ்வகர்மோபதேச வீரகண்டாமணி”

சகோதரபான்மையைப் பாராட்டாமல் விரோதமுங் குரோதமுமே காட்டிவருவதினாலேயே நம்மவர்களுடைய சமூகம் பலரால் நிக்கிரகிக்கப்பட்டு வருவதாகத் தோற்றுகிறது பிறஜாதிதூஷணம் நமக்கு யாதொரு நன்மையுந் தரமாட்டாதென்பதை நம்மவர்கள் ஏனோ காணாதிருக்கின்றனர்? இதுவுஞ்சாபக்கட்டா? அன்றி, புத்திக்கேடா? எதுவாயினுஞ்சரி, பிறஜாதி தூஷணத்தையும் ஜாதிவாதங்களையுங் கைவிடுமளவும் நம்மவர்கள் மேம்படமாட்டார்களென்பது சத்தியம். ‘பிழைக்கும் வழி’ யென்னும் மகுடத்துடன் சென்ற மார்ச்சுமீ சஞ்சிகையில் வெளிவந்த வியாசத்தைக் குலாபிமானிகள் நன்றாய் வாசித்துப் பார்ப்பார்களாக.

வேகம்பூர்-குமாரசிவன்.

## ஜாதீயக்கொண்டாட்டங்கள்

இவற்றைப்பற்றி சென்ற மார்ச்மீச் சஞ்சிகையில் சபையாரெழுதியிருந்த வற்றையும், அவற்றைத் தழுவி ஒருநிருபரே மிசசஞ்சிகையி லெழுதி யிருந்தவற்றையும் வாசித்தார் யாவருக்கும் ஜாதீயக்கொண்டாட்டங்களின் அவசியம் நன்றாக விளங்கியிருக்கவேண்டும். இக்கொண்டாட்டங்களை நடத்துவதற்கு நாம் முன்வருவோமானால், எவ்வளவ அபிமானங் கெட்டவர்களுக்கும் அபிமானமும் உற்சாகமும்உண்டாகுமென்பதுநிச்சயம். மீடிங்குகள், கூட்டங்கள் முதலியவற்றிற்கு நம்மவர்கள் வருவதுதுல்லபமா யிருக்கிறது. ஆனால் இக்கொண்டாட்டங்களோ மேளதாளங்களுடனும் பண்டுப்பலகாரங்களுடனுங் கூடியிருக்கு மாதலால், எப்படிப் பட்டவர்களுக்கும் இவற்றில் பிரியமுண்டாகலாம். ஆதலால், நமது ஜாதியார்களுக்கு குலப்பற்றை யுண்டு பண்ணுவதற்கு ஜாதீயகொண்டாட்டங்கள் நல்ல உபாயமாகும். இவற்றை நடத்துவதே யார்?சபைகளுள்ள விடங்களில் அவற்றி னதிகாரிகள் இக்காரியத்தை மேற்கொள்ள வேண்டும். சபைகளுள்ள இடங்களோ மிகச்சிலவே! இல்லாத விடங்களே அநேகமாய்க் காணப்படுகின்றன. அவ்விடங்களில் ஜாதீயக் கொண்டாட்டங்க ளாவது மற்ற விவகாரங்களாவது நடைபெறுதற் கில்லாதிருக்கிறது. இந்தக் குறையைத் தீர்ப்பதற்காக முதலில் ஒவ்வோரிடத்திலும் ஜாதிச் சபைக ளேற்பட வேண்டும். இப்படியேற்படுவதற்கு நமது சென்னைச் சபையார் துணைபுரிய வேண்டும், தூண்டவும் வேண்டும்.

பு. இராமசாமி ஆச்சாரி.

---

கறுத்தவிட முண்டருளுந் தண்டலையார்
வளநாட்டிற் கடியதீயோர்
குதித்துமலை யாளரையிற் றுகிலுரிந்தும்
ஐவருமனங் கோபித்தாரோ
பறித்துரிய பொருள்முழுதுங் கவர்ந்தாலும்
அடித்தாலும் பழிசெய்தாலும்
பொறுத்தவரே யரசாள்வார் பொங்கினவர்
காடுறைந்து போவர்தாமே.

—தண்டலையார் சதகம்.



## பாக சாஸ்திரம்

**கோதுமை நொய் (ரவை) உப்புமா.**—ஒருபடி சாதம் வடிப்பதற்குப் போதுமானதாகிய களிம்பேறாததோர் பாத்திரத்தில், 5 பலம் நெய்யைவிட்டுக் காய்ச்சி மிளகாய் அரைக்கால் பலம், கடுகு அரைக்கால் பலம், உளுத்தம்பருப்பு அரைபலம், காயம் ஆறு குண்டுமணி யெடை, கருவேப்பிலை அரைக்கால் ரூபாயெடை இவ்வாறு பதார்த்தங்களையும் ஷை காய்ந்த நெய்யில்போட்டுப் பக்குவமாகத் தாளிதஞ்செய்து; அரைப்படி கோதுமை நொய்யை ஷை தாளிதத்தில் கொட்டி, கரண்டிக் காம்பினால் கிளறிக்கொண்டிருந்து, நொய் வறுபட்டவாசனைவந்து மணல் நிறமாய் வறுபட்டவுடன், அரைப் பலம் பொடிசெய்த உப்பைத்தூவிக்கிளறி, அரைக்கால் படி புளித்தமோரை இடதுகையில் எடுத்து, ஷை ரவையில் கொஞ்சங் கொஞ்சமாகவிட்டு வலது கையினால் கரண்டிக் காம்பைக் கொண்டு கிளறிக் கொடுத்துக் கொண்டேயிருந்து, மோர் முழுவதும் விட்டபிறகு புகையில்லாத நெருப்புத்தணலின்மீது சுமார் ஐந்து நிமிஷகாலம் வைத்திருந்து, அதன்பின் உபயோகிக்கலாம். மோருக்குப் பதிலாக ஜலத்தைவிட்டுச் செய்வாரும் உண்டு. மோரைவிட்டுச் செய்வதுதான் சிலாக்யமானது. அந்த மோர் மிகவுந்தண்ணீரா யிருக்கக் கூடாது.

**மிளகு ரஸம்.**—கால்படி நல்ல ஜலத்தை அரைபடி ஜலம் கொள்ளக்கூடியதாகியதோர் ஈயம் பூசிய பாத்திரத்தில்விட்டு, மிளகு கால்பலம், தேங்காய்த்துருவல் கால்பலம் இவ்விரண்டையும் தனித்தனியாக கொஞ்சம் நெய்விட்டு வறுத்துக் கொஞ்சம் ஜலந்தெளித்து வெண்ணெய்போ லரைத்து, மேற்சொன்ன பாத்திரத்திலிருக்கும் ஜலத்தில் கரைத்து, அந்தப்பாத்திரத்தை அடுப்பின்பேரிலேற்றிக் காய்ச்சி, அரைக்கால் பலம் உப்பையும் அரைக்கால்படி பாலையும் கொதிக்கும் ரஸத்திலிட்டு, அது நன்றாகக் கொதித்துக் கொஞ்சம் சுண்டிய பிற்பாடு, ஓர் கரண்டியில் கால்பலம் நெய்யை விட்டு வீசம்பலம் சீரகத்தைப் போட்டுப் பொரித்து, ஷை ரசத்தில் கொட்டவேண்டியது.

---

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்—குறள்.

## ஆரோக்ய போதம்

**பால் கொடுக்குந் தாய்களுக்கு எச்சரிக்கை.**—தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டும்போது எவ்விதமான விசனமும், கவலையும், பயமுமின்றி மனக்களிப்பு, திருப்தி முதலியவற்றை யுடையவர்களா யிருக்கவேண்டும்; மனத்திலுண்டாகும் விசனம், கவலை, பயம் முதலியவற்றால் அச்சத்தோடாவது பயத்தோடாவது ஊட்டும்பால் தோஷமுடையதாய்க் குழந்தைகளுக்கு அஜீரணம், மந்தம், பேதி, ஜுரம், வலிப்பு முதலிய ரோகங்களை யுண்டாக்கிக் குழந்தைகளை அபாயத்துக் காளாக்கிவிடுமாம்

**ஒரு டாக்டரின் நூதன மருந்து.**—பாரிஸ் நகரிலிருக்கும் டாக்டர் பார்த்திடீலான்ட்போட் என்றவர், வாத ரோகம், சூலை, சந்துவாதம், கீல்வாயு, இடுப்புவலி முதலிய ரோகங்களுக்கும், அவற்றைப் போன்ற நோய்களுக்கும் ஒரு புது மாதிரியான மருந்து கண்டுபிடித்திருக்கிறார். அதென்னவென்றால், 'பாபின்' மெழுகை 122 டிகிரி(Fahrenheit)உஷ்ணப்படுத்தி, அந்த நோயுள்ள இடங்களில் தடவினால், மெழுகின் உஷ்ணத்தாலும், விசையாலும் சீக்கிரத்தில் அவ்விடம் வலியில்லாது போய், இரத்தத்தைச் சரிவர ஓடும்படி செய்து வீக்கத்தையும் போக்கி விடுமாம். நோயுள்ள பாகத்தில் மெழுகுப்பத்து போட்டு 24 மணிநேரமானபிறகும், அம்மெழுகில் 110 டிகிரி உஷ்ணமிருக்கிறது. நிற்க, மெழுகை 176 டிகிரி உஷ்ணப்படுத்தி அதனால் காயங்கள், ரணங்கள், தீயினாலுண்டான புண்கள், பிளவைகள் இவைகளையும் அந்த டாக்டர் ஆற்றிவிடுகிறாராம். நெருப்பினால் உருக்கப்பட்ட மெழுகை நோயுள்ள இடங்களில் பத்துப்போட்டதும், அம்மெழுகு கனபதார்த்தமாக (Solid) மாறிக்கொண்டு வரவர, நோயும் சீக்கிரத்தில் குறைந்துகொண்டேவருகிறதாம். 122 டிகிரி உஷ்ணமுள்ள மெழுகில் குளித்து அம்மெழுகு தம் உடம்பு முழுவதும் ஒட்டிக்கொள்ளும்படி அவர் பரிட்சை செய்து பார்த்ததில், உடலுக்கு எவ்விதமான கெடுதியும் உண்டாகவில்லையாம். மேலேகண்ட ரோகமுள்ளவர்களுக்கு மெழுகை உபயோகித்துப் பார்த்ததில் அநேகர் குணமடைந்திருக்கிறார்களென்றும், சமீபத்தில் பாரிஸில் கூடிய வைத்திய சங்கத்தில் அவர் அறிவித்தாரென்று தெரிவிக்கப்படுகிறது.

## சண்டையைச் சார்ந்தவை

ஜெர்மனிக்கு 6000 ஸ்டீமர்களும், 3000 பிரயாணக் கப்பல்களுமிருக்கின்றனவாம்.

* * *

இன்னும் 6 மாதகாலம் தொடர்ந்து யுத்தம் நடக்குமாயின், இங்கிலாந்துக்கு 100 கோடிப் பவுண்டு செலவாகும்.

* * *

யுத்தக் கஷ்ட நிவர்த்தி நிதிக்கு நிஜாம் அரசர் 60 லக்ஷ ரூபாயும், மைசூர் மகாராஜா 50 லக்ஷ ரூபாயும் மற்ற அரசர்களும், ஜமீன்தார்களும், வியாபாரிகளும், மற்றவர்களும் லக்ஷக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவுங் கொடுத்து வருகிறார்கள்.

* * *

ஆஸ்டிரியாவுக்கு வேண்டிய சோணிப்பைகள் இதுகாறும் கல்கத்தாவிலிருந்து அனுப்பப்பட்டு வந்தன. இப்போது நேர்ந்துள்ள யுத்தத்தால், கல்கத்தாவில் சோணிப்பை வியாபாரம் குறைந்துபோயிருக்கின்றது.

* * *

பிரஸ்ஸல்ஸில் ஒரு பாகத்தினர் தினத்திற்கு 400-புட்டி சாராயமும், இன்னொருபாகத்தினர் 40,000 பவுன் நிறை மாமிசமும், ரொட்டிவியாபாரிகள் 70,000 பவுன் நிறை ரொட்டிகளும், ஜர்மனித் துருப்புகளுக்குச் சப்ளை செய்யவேண்டுமாம். இவைகளும் இன்னும் கண்டிப்பான விதிகளும் செய்து பிரஸ்ஸல்ஸ் பட்டணத்தில் ஜர்மனித் துருப்புகள் ஜீவிக்கின்றன.

* * *

கலியுக வீமனென்று கூறப்படும் ப்ரொபஸர் ராமமூர்த்தி இங்கிலாந்திற்கு உதவியாக யுத்தஞ்செய்கிறேனென்றும் இந்துவாலண்டியர்களைச் சேர்க்கிறேனென்றும் தெரிவித்திருந்தார்; 'சமயம் நேர்ந்தபொழுது உமது உதவியை மறந்துவிட மாட்டோ'மென்று ராஜப்பிரதிநிதி அவர்க்குத் தெரிவித்திருக்கிறார்.

* * *

உலகத்திலுள்ள நாடுகளிலெல்லாம் பெல்ஜியமே ரயில்வேச் சௌகரியம் மிகுதியாகவுள்ள தேசம் பெல்ஜியத்தைச் சுற்றி 15 நாள் ரயில்வேப் பிரயாணஞ் செய்வதற்கு மூன்றாவது வகுப்பிற்கு ரயில்வேசெலவு 18 ஷில்லிங் 10 பென்ஸ், அல்லது சுமார் 14 ரூபாயாகின்றது; பெல்ஜியம் முழுமையும் முதலாவது வகுப்பிற் பிரயாணஞ் செய்வதற்கு 50 ஷில்லிங் அல்லது $37\frac{1}{2}$ ரூபாயாகின்றது.

* * *

பெல்ஜியம் என்பது பிரான்சுக்கும் ஹாலண்டுக்கும் மத்தியிலுள்ள ஒரு சிறிய தேசம். அதன் விஸ்தீரணம் 11300 சதுரமைல். அதாவது மைசூர் ராஜ்ஜியத்தில் அரை பங்குக்கும் குறைவு. மைசூர் ராஜ்யத்தின் விஸ்தீரணம் சுமார் 28,000 சதுரமைல். ஆனால் இரண்டு ராஜ்யங்களிலும் வசிக்கும் ஜனங்கள் மட்டும் ஒரே எண்ணிக்கை யுள்ளவர்கள். அதாவது சுமார் 65 லக்ஷம்.



இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தங் காரணமாக ஜப்பானிலிருந்து இந்தியாவில் இறக்குமதியாகும் சரக்குகள் 100-க்கு 100-வீதம் அதிகமாய் விட்டதாய்த் தெரிகிறது. இந்தயுத்தம்முடிந்தபிறகுகூட ஜப்பானோடு ஜெர்மனி போட்டிபோட முடியாதென்றும் ஜப்பானிய சரக்குகளின் இறக்குமதியே இந்தியாவில் அதிகமாகிக் கொண்டுபோகுமென்றும் கருதப்படுகிறது.

* * *

பாரிஸ் ஆஸ்பத்திரியி லிருக்கும் காயமடைந்த ஜெர்மன் ஸோல்ஜர்கள் இன்னவியாதியென்று தெரியாத காரணங்களால் இறந்து போகின்றனர். அவர்களை வைத்தியர் பரிசோதனை செய்தபோது அவர்கள் வயிறுகளில் மண் சேர்ந்த பச்சையான பீட் கிழங்குகள் நிறைந்திருந்தனவாம். அவர்கள் தங்கள் பசியைத் தணிப்பதற்காக வயல்களி லிருந்து மண்ணொட்டிய பச்சைக் கிழங்குகளைப் பிடுங்கியவாறே தின்று விட்டனரென்று தெரிகின்றது.

* * *

கோயமுத்தூரில் தேவாங்க சமூகத்தாரின் தலைவரும் பிரபல வியாபாரியுமான மிஸ்டர் V. வெரிவாட செட்டியார், யுத்தத்தினால் நெசவு வியாபாரம் நின்றுபோனபடியால் வருத்தப்படும் ஏழை நெசவுக்காரர்களின் கஷ்டத்தை ஒருவாறு நிவர்த்தி செய்வதாக உத்தேசித்து, ராஜாத் தெருவிலுள்ள சௌடம்மா கோவிலில் தினமும் 500 பேர்களுக்கு டிக்கெட்டுகள் கொடுத்து, அவர்களுக்கு ஆகாரம் போடும்படியாய் ஏற்பாடு செய்திருக்கிறார்.

* * *

லண்டன் நகரிலுள்ள கடற்படையின் ரிஸர்வ் பிரிவைச் சேர்ந்தவன் ஒருவனுக்கு யுத்தம் ஏற்பட்டவுடனே, ரிஸர்வ் படையில் சேரும்படி உத்தரவு வந்தது. அச்சமயம் அவன் மனைவி மரணாவஸ்தையிலிருந்தாள். படையில் சேரும்படி உத்தரவு வந்ததனால், இப்பவோ பின்னையோ இறந்துபோவாளென்ற நிலைமையிலிருந்த தன் மனைவியைவிட்டு உடனே பிரிய நேர்ந்துவிட்டது. அவன் தன் மனைவியை விட்டுப் பிரிந்த 3-வது மணிக்குள் அவள் மாண்டுபோனாளென்ற சமாசாரம் அவனுக்கு எட்டியது.

* * *

ஜெர்மானியர் லீஜ் பட்டணத்து ஜனங்களிடமிருந்து 3 கோடிரூபாய் தண்டவரி வசூல் செய்திருக்கிறார்கள். பிரஸ்ஸல்ஸிலிருந்து 12-கோடி ரூபாய் வசூல் செய்திருக்கிறார்கள். நல்ல வேளையாய் பெல்ஜியத்திலிருந்த பெரிய மனுஷர்கள் நால்வர் சேர்ந்து இந்த 12-கோடி ரூபாயையும் கொடுத்து விடுவதாக ஒப்புக்கொண்டார்கள். இந்நால்வரும் தண்ட வரியைக் கொடுத்தபோதிலும் ஜனங்கள் படும் அவஸ்தையைத்தீர்க்கச் சக்தர்களல்ல. ஜெர்மானியர் அங்கு புகுந்து அகப்பட்ட சாமான்களைக் கைப்பற்றிவிட்டபடியால், ஜனங்களுக்கு ஆகாரம்போதாமல் பட்டினியால் கஷ்டப்படுகிறார்கள்.

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் கப்பல் போக்குவரவு நின்றுவிட்டமையின், இவ்வூர் வியாபாரிகளின் ஏற்றுமதி இறக்குமதிவேலைகள் நடைபெற மார்க்கமில்லாதிருக்கின்றன. இவ்வூர்ப் பஞ்சுவியாபாரிகளுக்கு மிகுந்தநஷ்ட மேற்பட்டிருக்கிறது. தென்ஜில்லாக்களில் உற்பத்தியான சுமார் (40 லட்ச ரூபாய் மதிப்புள்ள) 25000 பேல் பருத்திகள் சும்மா கிடக்கின்றனவென்றும் ஜின்களில் அரைப்புவேலை நடைபெறாமையால் சுமார் 2000த்துக்கு மேற்பட்ட கூலிக்காரர்களும் அநேக குமாஸ்தாக்களும் வேலையின்றியிருக்கிறார்களென்றும் தெரிகின்றது.

* * *

திருவாங்கூர் சமஸ்தானத்தி லுள்ள ஆலப்புழையிலும் அதன் பக்கத்திலும் வசிக்கும் ஜனங்கள் கொப்பறை, கயிறு, தேங்காயெண்ணெய் இவைகளைவிற்று ஜீவிக்கிறவர்கள். இப்போது யுத்தத்தால் இவர்களுக்கு வியாபாரம் போய்விட்டது. மேற்குக் கடலோரத்திலிருந்து இந்த சாமான்கள் யதேஷ்டமாய் கப்பலேற்றப்பட்டு வந்தது இப்போது நின்று போய்விட்டது. கொப்பறை கண்டி 1-க்கு 90 ரூபாயும் தேங்காய் எண்ணெய் கண்டி 1-க்கு 150 ரூபாயும், தேங்காய் 1000 காய்களுக்கு 50 ரூபாயும் விற்றவை இப்போது முறையே 50,55,20 ஆக விற்கின்றன. இன்னும் சில்லரையாய் விற்றால் விலை குறையும். இந்தக் குறைந்தவிலைகளுக்குக்கூட வாங்குவாரில்லாமல் ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள்.

* * *

இந்தியாவிலுள்ள சுமார் 700 சுதேச அரசர்களுள் சிலர் இங்கிலாந்திற் குதவியாக ஜெர்மனியோடு யுத்தஞ்செய்ய முன்வந்திருக்கின்றனர். பிக்கானீர் மகாராஜா, பாட்டியாலா மகாராஜா, குச்பீஹார் மகாராஜா, அவரது ஸகோதரர், ஜோட்பூர் ஸமஸ்தான ரீஜெண்டான ஸர்ப்ரதாபஸிங், ஜோட்பூர் மைனர் ராஜா முதலியவர்களும் அவர்களின் பந்துக்களாயுள்ள சிலரும் போர்முகத்திற்சென்று சண்டைசெய்ய முன்வந்தனர். வேறு 12 சுதேச அரசர்கள், குதிரைப்படை, காலாட்படை முதலியன கொடுத்திருக்கின்றனர். பிக்கானீர் மகாராஜா ஓர் ஒட்டகப்படையைக் கொடுத்திருக்கின்றார். அவற்றிற் பல முன்னரே இங்கிலாந்திற்குப் பிரயாணமாய் விட்டன.

* * *

ஜெர்மனி ஏகாதிபத்தியம் இரண்டு லக்ஷத்து எண்ணாயிரம் சதுரமைல் உள்ளது. அதாவது இந்தியாவின் விஸ்தீரணத்தில் எட்டிலொருபாகம். அதன் ஜனத்தொகை 6 கோடிக் கதிகமாயுள்ளது. விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் ஆஸ்டிரியாவை ஒத்திருந்தபோதிலும், ஜெர்மனிக்கு ஆஸ்டிரியாவைவிட பன்மடங்கு வல்லமையும் செல்வாக்கும் உண்டு. ஜெர்மெனியில் பிரஷ்யா உள்பட 26 சில்லரை தேசங்கள் அடங்கியிருக்கின்றன. ஜர்மனி ஏகாதிபத்தியத்துக்கு வருஷம் ரெவினியூ 210-கோடி மார்க், (ஒருமார்க் என்பது 1-ஷில்லிங் அல்லது 12-அணா.)

சாயம் போடுவதற்கு வேண்டிய சாமான்கள் ஜரிகைகள் நூலிழைகள் ஆகிய இவைகளை மதுரை சௌராஷ்டிரர்கள் மேனுடுகளிலிருந்து வரவழைத்து பலவிதமான வஸ்திரங்கள் செய்தும் சாயங்கள் போட்டும் வந்தார்கள். இந்த வேலைகள் நடத்துவதற்கு பெரிய சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் பலபேர்கள் வேலைசெய்து ஜீவனஞ்செய்துவருகிறார்கள். இப்பொழுது ஐரோப்பாவில் யுத்தம் நடந்துகொண்டிருப்பதைப்பற்றி, சாயத்தொழிலுக்கும் நெசவுதொழிலுக்கும் வேண்டிய சரக்குகள் மேனுட்டிலிருந்து இறக்குமதியாவது நின்றுபோய்விட்டபடியால், அவைகளில் வேலைசெய்யும் ஆயிரக்கணக்கான பேர் ஜீவனத்திற்கு வழியில்லாமல் வருத்தப்படுகிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தை மதுரை சௌராஷ்ட்ர வகுப்பார் ஒருவாறு நிவர்த்திசெய்து வருகிறார்கள்.

*
* *

லண்டனில் ஒரு ஆங்கிலேய ஸ்திரீ இருக்கிறாள். அவள் முதல்முதல் ஒரு ஜெர்மானிய ராணுவ அதிகாரியை மணந்துகொண்டாள். அவனிடமாக அவளுக்கு ஒரு பெண் பிறந்தது. பின்பு, சில காலத்திற்கெல்லாம் அந்த ஸ்திரீ ஜெர்மானியனை விட்டுவிட்டு, ஒரு ஆங்கிலேயனைக் கலியாணம் செய்துகொண்டாள். அவன் பிரிட்டிஷ் ராணுவத்தில் உயர்தர பதவியை வகிப்பவன். அந்த ஆங்கிலேய ராணுவ அதிகாரியிடமாக அந்த ஸ்திரீக்கு ஒரு பெண்குழந்தை தோன்றியது. அவ்விரு பெண்களுக்கும் இப்பொழுது முறையே 24, 20 வயதாகிறது. அவ்விரு குமாரிகளும் தற்காலம் தங்கள் தாயினிடமே வசித்து வருகிறார்கள். அவ்விரு பெண்களுடைய தந்தைகளாகிய ஜெர்மானியனும், ஆங்கிலேயனும், தங்கள் தங்கள் தேச ராணுவத்திற் சேர்ந்து போர்முனைக்குப் போயிருக்கிறார்கள். அப்பெண்களில் மூத்தவள் தினந்தோறும் கடவுளை நோக்கி, "தேவே, என் தகப்பன் வெற்றியுடன் திரும்பிவர வேண்டும்" எனத் துதித்து வருகின்றாள். இளையவளும் அம்மாதிரியே தன் தந்தை ஜெயத்துடன் திரும்பிவரப் பிரார்த்தித்து வருகின்றாள். தன் குமாரிகளில் ஒருத்தி ஜெர்மானியன் ஜெயத்துடன் திரும்பவேண்டுமென்றும், மற்றொருத்தி ஆங்கிலேயன் வெற்றியுடன் திரும்பிவர வேண்டுமென்றும் துதித்து வருவதைக் காணும் தாயின் மனதும் பிரார்த்தனையும் எவ்வாறிருக்குமோ!

*
* *

ஸெப்பளின் என்பது ஒருவகைஆகாயக்கப்பல். ஜெர்மனிதேசத்து கௌண்ட் ஸெப்பளின் என்னும் ஒரு மேதாவி அந்த ஆகாயக்கப்பலைச் சிருஷ்டித்தவர். அதனுல் அந்த ஆகாயக்கப்பல்களுக்கு ஸெப்பளின் என்ற அவருடைய பெயரே வழங்கப்படுகிறது. ஸெப்பளின் ஆகாயக் கப்பல்கள் விரோதிகளுடைய நகரங்களின் மீது உயர ஆகாயத்தில்பறந்து சென்று, அந்நகரங்களிலுள்ள கட்டிடங்களின்மீது வெடிகுண்டிகளைப்போடுகின்றன வாதலால், உயிர்ச்சேதம் நேர்வதுடன், வீடுகளும் அழிந்து போகின்றன. ஸெப்பளின் ஆகாயத்தில் பறப்பதைக் கீழேயுள்ள நகரங்களில் வசிப்போர் கண்டால் உடனே அதன் மீது துப்பாக்கியால் சுடுவார்கள். துப்பாக்கிவேட்டு அதன்மீது பட்டால் உடனே அது அழிந்துபோகும். ஆகவே, துப்பாக்கிவேட்டு தன்மீது படாதிருக்கும்படி அவ்வளவு உயரத்தில் ஸெப்பளின் ஆகாயத்தே பறக்கிறது. அவ்வளவு உயரத்திலிருந்து வெடிகுண்டெறிந்தால், கீழே யுள்ள குறியான கட்டடங்களின் மீது அவ்வெடிகுண்டு படாது. அதற்காக ஸெப்பளினில் இருந்து ஒரு மனிதன் சங்கிலியின்உதவியால் கீழே தொங்கவிடப் படுகிறுன். அவனிடம் வெடிகுண்டுகளைக் கொடுக்க, அவன் குறியான கட்டிடங்களின்வழி வெடிகுண்டுகளை எறிகிறுன். உடனே அக் கட்டிடங்கள் பாழாகின்றன. ஆனுல் அவன்மீது துப்பாக்கிவேட்டுப் படாம லிருப்பதற்காக, ஒருவிதச் சட்டையை அவன் அணிந்துகொள்கிறுன். அதனுல் எவ்வளவு முறை துப்பாக்கியினுல் வேட்டுகள் போடப்பட்டாலும், அவைகள் அவனுக்குத் துன்பஞ்செய்யாது அந்தச் சட்டை தடுத்து விடுகிறது.

*
* *

எம்டன் எனப் பெயர்கொண்டதொரு ஜெர்மன் க்ரூஸர் (சிறுசண்டைக்கப்பல்) சென்றமாதத்தில் வங்காளக் குடாக்கடலில் நுழைந்துகொண்டு கப்பல்களுக்குத் துன்பத்தை யுண்டாக்கலாயிற்று. இதனுல் முதலில் ஆறு கப்பல்கள் சேதமடைந்தன. அவற்றால் நேர்ந்த பொருள் நஷ்டம் அநேகலக்ஷம் பவுன்கள் என்னப்படுகிறது. ஆனுல் கப்பற்பிரயாணிகளுக்கும் கப்பலோட்டிகளுக்கும் யாதொரு ஆபத்தும் உண்டாக்கப்படவில்லை. இது 22-9-14ல் இரவு சுமார் 9-40-க்கு சென்னைத் துறைமுகத்துக்குத் தென்கிழக்கே கடலில் தோன்றி பிரகாசமான விளக்கு வெளிச்சத்தைக் கடலோரத்தில்வீசி பீரங்கிகளைச்சுட்டது. துறைமுகத்துக் கருகில் மண் எண்ணெய் நிரம்பிய பெரிய தொட்டிகளிருக்கின்றன. அவைகளின்மேல் குண்டுகள் விழவே இரண்டு பெரிய தொட்டிகள் தீப்பற்றி அகோரமாய் எரிய ஆரம்பித்து நகரம் முழுவதையும் பிரகாசப்படுத்தின. இவற்றினுல் நேரிட்ட நஷ்டம் சுமார் இரண்டுலட்சம் ரூபா யெனப்படுகிறது. துறைமுகத்துக்கு வடபுறத்திலுள்ள கோட்டை பீரங்கிகள் எம்டெனைப் பார்த்து மூன்றுதரம் சுட்டன. உடனே எம்டென் தன் விளக்குகளை அணைத்துவிட்டு மறைந்து போயிற்று. இருபது நிமிஷங்களுக்குமேல் நிற்கவில்லை. 15 அல்லது 20 குண்டுகள் சுட்டிருக்கலாம். ஜெர்மன் கப்பலிலிருந்து வந்த குண்டுகள் நகரத்தின் பல பாகங்களிலும் விழுந்து ஜனங்களுக்குள் பீதியை உண்டாக்கின. கடற்கரையிலிருந்த கட்டடங்கள் சில சேதமாயின; ஜெனரல் போஸ்டாபீஸ், நாஷனல் பாங்கின் புதியகட்டடம், போர்ட்டிரஸ்ட் ஆபீஸ் கட்டடங்கள், இவைகளின்மீது குண்டுகள் விழுந்து சிறிது சேதமுண்டாயிற்று. சில குண்டுகள் வெடிக்காமல் அப்படியே வந்து விழுந்தன. துறைமுகத்திலிருந்த சுப்பா



என்ற கப்பலின்மேல் ஒரு குண்டு விழுந்து அதிலிருந்த உத்தியோகஸ்தர் ஒருவரைக் கொன்று இன்னும் ஐந்து பேரைக் காயப்படுத்திற்று. சில ஜெர்மன் குண்டுகள் சூளை, வேப்பேரி எழும்பூர் நுங்கம்பாக்கம் முதலிய பாகங்களிலும் விழுந்தன. சில உயிர்ச்சேதங்களும் நேர்ந்தன. மறுநாள் காலையில் எம்டன் புதுச்சேரியில் தோன்றியதனுல், ஜனங்கள் பீதியடைந்திருந்ததைப் போக்குவதற்காக கவர்னர் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டார். "யுத்தத்தில் நடக்கும் வழக்கப்படி எம்டன் செய்யக்கூடிய தென்னவென்றால், கோட்டைகளால் பாதுகாக்கப்படும் நகரங்களைத் தாக்கவும், கடலில் போகும் கப்பல்களிலுள்ள ஜனங்களைக் காப்பாற்றிவிட்டு, அக் கப்பல்களை அமிழ்த்தவும் செய்யலாம். ஆதலினுல் இந்நகரை எம்டன் பீரங்கியினுல் தகர்த்துவிடுமோவெனப் பயங் கொள்ளவேண்டாம். என்றாலும் மறுபடியும் அது நகருக்குத் திரும்பிவரக்கூடுமோ வென்பதைக் கருதி கீழே கண்ட முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்யப்படும். கடற்கரையிலுள்ள தீபஸ்தம்பம், துறைமுகத்திலுள்ள மற்ற விளக்குகள், கடலுக்கு நேராக இருக்கும் தெருவுகளிலுள்ள விளக்குகள் ஆகிய இவைகள் இரவில் எரியமாட்டா. மேலும் நகரங்களிலுள்ள மற்ற வெளிச்சங்கள் இரவு 10 மணிக்குமேல் எரியாதபடி அணைத்துவிடப்படும். ஒரு சமயம் எம்டன் திரும்பிவருமேயானுல், இரவிலோ பகலிலோ மின்சார விசையில் வேட்டு போடப்படும். உடனே ரிஸர்வ் படையாட்களும் இன்னும் மற்றப் படையாட்களும் இன்னும் மற்றப் படையாட்களும் ஜெண்டார்ம் என்னும் ராணுவப் போலீஸ் இலாகாவின் தலைவர் சொன்னபடி நடக்கவேண்டும்." இதுவரையிலும் எம்டன் 15 கப்பல்களைக் கடலில் அமிழ்த்தியிருக்கிறது இதனுல் நேர்ந்தநஷ்டம் 3 கோடிரூபாய்.

---

**தீக்குச்சிகள்.**-சென்ற வருஷம் எப்ரல்மாத முதல் இவ்வருஷம் பிப்ரவரி மாதம்வரை 11 மாதங்களில் இந்தியாவில் 5,49,000 பவுண்டுமதிப்புள்ள தீப்பெட்டிகள் அந்நிய தேசங்களிலிருந்து வந்து இறக்குமதியா யிருக்கின்றன. ஒரு வருஷத்தில் சுமார் 6 லட்சம் பவுண்டு (அல்லது சுமார் ஒரு கோடி ரூபாய்) மதிப்புள்ள தீப்பெட்டிகள் இந்தியாவில் செலவாகின்றன வென்று தெரிகின்றது. தீப்பெட்டிகள் முக்கியமாய்க் கீழ்கண்ட தேசங்களிலிருந்து வருகின்றன.

| | குரோஸ்கள். |
|---|---|
| ஜப்பான் | 66,72,560 |
| ஸ்வீடன் | 33,51,684 |
| ஆஸ்ட்ரியா | 12,02,082 |
| நார்வே | 8,18,524 |
| பெல்ஜியம் | 2,79,812 |
| ஜெர்மனி | 1,84,367 |
| ஸ்ட்ரெயிட்ஸ்ஸெட்டில்மெண்ட்ஸ் | 79,327 |
| மற்றத் தேசங்கள் | 1,63,471 |
| மொத்தம் குரோஸ்கள். | 1,27,51,827. |

ஒரு குரோஸ் என்பது 12 டஸன் அல்லது 144

## விசேஷவர்த்தமானம்

**பால் டப்பிகள்** —பசுக்களுக்குப் பேர்போனதான ஸ்விட்ஸர்லாந்து தேசத்திலிருந்து 10 வருஷங்களுக்கு முன் சுமார் 10லட்ச ரூபாய் மதிப்புள்ள பால் டப்பிகள் இந்தியாவுக்கு வந்தன; இப்பொழுதோ 41½ லட்ச ரூபாய் மதிப்புள்ளவை வருகின்றன.

*
* *

**சென்னை ஸ்திரீகளின் காலேஜ்.**—சென்னை ஸ்திரீகளின் காலேஜில் படிக்கும் ஸ்திரீகளுக்கு 100-க்கு 25 பேர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதற்கும், மாதம் ஒன்றுக்கு 9 ரூபாய் வீதம் 10 ஸ்காலர்ஷிப்புகளையும், ஒவ்வொரு கைப்பெண்ணுக்கு மாதம் ஒன்றுக்கு 25 ரூபாய் வீதம் 5 ஸ்காலர்ஷிப்புகளையும் கொடுப்பதற்கு சென்னைகவர்ன்மெண்டார் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள்.

*
* *

**முஸ்லீம் ஹோஸ்டல்.**—சென்னை கிறிஸ்டியன் காலேஜிலும் லாகாலேஜிலும் மெடிகல் காலேஜிலும் படிக்கும் மகம்மதிய மாணவர்களுக்கு ஜார்ஜ் டவுனில் ஹோஸ்டல் ஒன்று கட்டி அதற்கு போடாம் முஸ்லீம் ஹோஸ்டல் என்று பெயர்வைக்கப் போகின்றனர். அந்த ஹோஸ்டலுக்கு கவர்ன்மெண்டார் ஸ்பெஷலாக 32,700 ரூபாய் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். தென்னிந்திய மகம்மதிய வித்தியாசங்கத்தார் அந்த ஹோஸ்டல் கட்டுவதற்கு ஜார்ஜ்டவுன் பிஷப்காரிக்ராமர் ஸ்கூலுக்கருகில் விசாலமான இடத்தை வாங்கி யிருக்கிறார்கள்.

*
* *

**நவராத்திரி பூஜாவைபவங்கள்.**—சென்ற புரட்டாசிமீ 3உ (19-9-14) முதல் 12உ (28-9-14) வரையிலுங்கூடிய பத்துதினங்களில், நவராத்திரி பூஜா சம்பந்தமாக, நமது சபாமண்டபத்தில் கலஸ்தாபனஞ் செய்வித்து, தினமும் தேவதாராதனை, கச்சேரி காலக்ஷேபமாதியவை நடத்துவிக்கப்பட்டன. ஓராயிரஞ்சனங்களுக்கு அதிகமாக நமது குல புமான்களும் மற்றையரும் விஜயஞ்செய்து தரிசன சிரவணனந்தமெய்தினர். பத்துநாட்களில், எட்டுதினங்கள் சுஜாதிப்பண்டிதோத்தமர்களும், மற்ற இரண்டுதினங்கள் நம்மரபின்மீது மாறா அன்புபூண்டிருக்கும் ஆருஷேய வித்வாம்ஸர்களும் பாமோற்சாக முறுத்தினர். எனவே, ஆரம்பமுதல் முடிவுவரையிலும் பிராம்மணபோதமே பெறப்பட்டது. வாரந்தோறும் இடைவிடாது நடத்தப்படும் காலக்ஷேபமாதியவற்றிலுங்கூட இங்ஙனமே இதுவரையிலும் அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றதென்பது நம்மனோரால் முக்கியமாய்க் கவனித்தற்பாற்று. இந்த ஏற்பாடு காரணமாக, நங்குலக் கல்விமான்கள், பிரசங்கவல்லபர்கள், சங்கீதசமர்த்தர்கள் முதலானோருடைய பெருமை நமது வம்ஸத்தினருக்குமட்டுமல்லாமல் பிறருக்கும் விளக்கப்பட்டுவருகிறது. முதல்நாள், ஸ்ரீசெருகூர் கிருஷ்ணமாச்சாரியாரவர்கள் கண்ணப்பநாயனுர் சரித்திரத்தை, பலபுராண மேற்கோள்களுடனும் நவரஸாலங்காரக் கதைகளுட

னும் வெகு விமரிசையாய் உபந்நியசித்தார். இவருடைய உபந்நியாசங்கள் கேட்கக்கேட்கத் தெவிட்டாதவையென்பது இப்போது பலர்க்குந் தெரிந்தவிஷயமே! இவர் பண்டித ஸ்ரீ T. லக்ஷ்மணாச்சாரியார் முதலிய வித்வசிரேஷ்டர்களிடம் சமஸ்கிருதம் பயின்றவர். இரண்டாவதுநாள், கோமளேஸ்வரன்பேட்டை ஸ்ரீ மு. நடேச ஆச்சாரியா ரவர்களால் 'மகாராஜாதுறவுப்' பிரசங்கம் நடைபெற்றது. அன்புமயமாயமர்ந்துள்ள இப்புருஷோத்தமருடைய பிரசங்கங்கள் பக்திரச மிகுந்தவையாய்க் கேட்டார்க்குப் பரவச முண்டுபண்ணி மனதை ஒரு நிலைப்படுத்தும் மகத்துவம் வாய்ந்தனவா யிருக்கின்றன. கன்னெஞ்சையுங் கரைக்கக்கூடிய இவருடைய வாசா வல்லபமும் இசைமாண்பும் உள்ளங் கவரும் ஒண்மையன. மூன்றாவதுநாள், ஸ்ரீ ப. மன்னார் ஆச்சாரியாரவர்களால் வீணைக்கச்சேரி வெகுஜன குதூகுலமாய் நடத்தப்பட்டது. வீணைகானத்தினும் விசேஷமானதொன்றில்லையென்னு முண்மையை, அன்று எல்லோரும் ஐயந்திரிபுற அறிந் தானந்தித்தனர். இவருடைய கச்சேரி, கல்யாணமுதலிய சுபகாரிய சமயங்களில் மிகவும் ஏற்புடைத்தா யிருக்குமென்று பலரும் அபிப்பிராயப்பட்டனர். நான்காவதுநாள், ஸ்ரீ மதுராந்தகம் ஆறுமுகாச்சாரியார் பிடி (Fiddle) லுடனும், ஸ்ரீ N. R. நடேச ஆச்சாரியார் பாட்டு புல்லாங்குழல் வாத்திய மிவற்றுடனும், வேறு சில நண்பர்கள் பாடல்களுடனும் வெகு உற்சாகத்துக் கிடமாய்க் கச்சேரி செய்யப்பட்டது. இவர்கள் ஆங்கிலங்கற்று உத்தியோகபதவிகளி லமர்ந்து பலஜாதிமேதாவிகளால் நன்குமதிக்கப்பட்டிருக்குங் கண்ணியவான்கள் ஐந்தாவதுநாள், ஸ்ரீ ஸ்ரீநிவாச தீக்ஷிதரவர்களால் நங்குல சிரேஷ்டத்துவத்தைப் பற்றியதோர் உபந்நியாசஞ் செய்யப்பட்டது இவரே, சென்னை சிந்தாதிரிபேட்டை விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலை உபாத்தியாயராய்த் தற்காலத் தமர்ந் திருப்பவரொன்று தெரிகின்றது. இவருடைய சமஸ்கிருத பாஷாஞானமும், பௌருஷேயகுலப் பற்றும் மிகவுங் கொண்டாடற்பாலன. ஆறாவது நாள், தேவாரம் ஸ்ரீ T. M. அப்பாதுரை ஆச்சாரியாரவர்களால் பன்னிரு திருமுறைத் தேவார படனஞ் செய்யப்பட்டது. இவருடைய இன்னிசை விசேஷம் சென்னைமுழுவதும் வியாபித்து வெளியூர்களுக்கு மெட்டியிருக்கிறபடியால், இவருடைய கச்சேரிகளுக்கெல்லாம் எங்கெங்கு முள்ளோருந் திரண்டு திரண்டு வந்து சிரவணித் தானந்தமெய்தல் இயல்பாய்விட்டது. எழாவதுநாள், பாங்கிமலை ஸ்ரீ சிவராம ஆச்சாரியாரவர்கள் சிறுத்தொண்ட நாயனார் சரித்திரக்காலக்ஷேபஞ் செய்தனர். பகவத் காக்ஷேப முறைப்படி, அதற்கிலக்ஷணங்களாவன வெல்லாம் பொருந்தி, இவர் செய்புங் காலக்ஷேபங்கள் மிக வசீகரமுடையனவா யிருக்கின்றன. எட்டாவது நாள், மதுரகவி புதுவை ஸ்ரீ நடராஜ ஆச்சாரியாரவர்கள் குங்கிலியக்கலயநாயனார் சரித்திரக் காலக்ஷேபஞ் செய்தனர். ஸ்ரீ ப. ரா. காளிசாஸ்திரி ஆச்சாரியாரவர்கள் இவருக்கு உதவியா யமர்ந்திருந்தனர். இவர்கள் பலவிதப் பண்களிற்பாடிய பாடல்கள் உள்ளக்கிளர்ச்சியை மிகுதியாக உண்டுபண்ணின. காலக்ஷேபமுழுவதும் சிவமணங்கமழ்ந்து விளங்கிற்று ஒன்பதாவது நாள், ப்ரொபஸர் ஸ்ரீ கும்பகோணம் அங்கப்ப ஆச்சாரியாரவர்களால் ஜெகஜால விசித்திர வேடிக்கைக் காக்ஷி நடத்தப்பட்டது. மாஜிக் (Magic) என்னும் வித்தையில் இவர் நெடுநாளாகப் பழகி மெடல்கள் பெற்றிருப்பவர். இவருடைய காக்ஷி வெகு ஆச்சரியத்துடன் கவனிக்கப்பட்டது. பத்தாவது நாள், ஸ்ரீ அக்ஷிந்தல நரசிம்ஹம்பந்துலு அவர்களால் மூலஸ்தம்பப் பிரபாவத்தைப் பற்றி உபந் நியசிக்கப்பட்டது. இவ்வுபந்நியாசத்திற்கு, ஆங்கிலக் கல்வி வல்லவர்களாகிய பிறஜாதி சகோதரர்கள் பலர் விஜயஞ் செய்திருந்தனர். பந்துலு அவர்கள் விஸ்வப்பிராம்மண மகாஜன சிரேஷ்டத்தை யெடுத்துச் சாங்கோபாங்கமாக விளக்கியது கேட்டு அவர்களெய்திய இறும்பூ தென்னென்போம்! கவர்ன்மெண்ட்டு ஸ்திரீகள் காலேஜில் ஆந்திர பண்டிதராயமர்ந்திருப்பதாலும், ஆங்கிலங்கற்றுத் தெளிந்தவராயுள்ளபடியாலும், பல கிரந்தகர்த்தராய் விளங்குகின்றமையாலும் இவருடைய உபந்நியாசங்கள் அறிவாளிகளால் விரும்பிக் கேட்கப்படுகின்றன. இப்புருஷோத்தமர்களெல்லாம், சபையாருடைய வேண்டுகோளுக்கிசைந்து உபந்நியாசம் காலக்ஷேபம் கச்சேரி யிவற்றைச் செய்தருளியதற்காக சபையாருடைய வந்தனங்களை இவர்களுக்கு அன்போடும் அளிக்கின்றோம். விஜயஞ்செய்தோர்க்கெல்லாம் தினமும் கந்தபுஷ்பதாம்பூலபலகாராதி மரியாதைகள் செய்யப்பட்டன. இவ்வைபவங்கள் இனிது நடைபெற உதவிபுரிந்த ஸ்ரீ சோ. கந்தசாமி ஆச்சாரியார், ஸ்ரீ செ. ஆண்டிசுந்தர ஆச்சாரியார், ஸ்ரீ டி. பாக்ஷ ஆச்சாரியார், ஸ்ரீ எ. கே. அரங்கநாத ஆச்சாரியார், ஸ்ரீ கா. திருவேங்கட ஆச்சாரியார், மதுரகவி புதுவை ஸ்ரீ நடராஜ ஆச்சாரியார் ஸ்ரீ வேமல - வீரய்ய ஆச்சாரியார் முதலியவர்கள் சபையாருடைய வந்தனங்களுக்குரியவர்களா யிருக்கின்றனர்.

*
* *

**தாயின் கு அபராதம்:**—சென்னை தண்டயார் பேட்டையில் வசிக்கும் பூலோகம்மாள் என்ற ஒரு ஸ்திரீ, தனது 11-வயதுள்ளபையன் வாசிக்காமல் கோலிவிளையாடிக்கொண் டிருந்ததைக் கண்டு அவனுக்குப் பயமுண்டாக்குவதற்காக அவனைப் பிடித்து அவனுடைய வலதுகையில் கந்தைத் துணியைக் கட்டி அதன் மீது மண்ணெண்ணெய்யை ஊற்றி அதற்கு தீமூட்டினாள். உடனே பையன் கதறி அழ, பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து பையனை எரிந்து போகாமல் காப்பாற்றினார்கள். அந்தத் தாயார் அரெஸ்ட்டு செய்யப்பட்டு ஸீனியர்பிரஸிடென்ஸி மாஜெஸ்ட்ரேட்டு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டாள். தான் தன்னுடையபையனுக்குத் தீங்கு விளைவிக்க வேண்டு மென்று எண்ணங்கொண்டவ ளல்லவென்று அந்த ஸ்திரீ வாதாட, அதை நம்பி மாஜெஸ்ட்ரேட்டு அவளுக்கு 15-ரூபாய் அபராதம் விதித்தார்.

OFFICE OF THE REGISTRAR O, 6-FEB 1915 MADRAS.

உ

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை
462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] 1914ஆ நவம்பர்மீ [சஞ்சிகை 2

## ஒளிவளர்விளக்கு

1914ஆ அக்டோபர் மாதத்தில் நமது சபா மண்டபத்திற்கு விஜயஞ் செய்த தனவான்களுடைய எண்ணிக்கை 378.

*
* *

அரக்கோணம் விஸ்வப்பிராம்மண சபையாரவர்களால் 5-10-14உயில் வெளியிடப்பட்ட "விஸ்வப் பிராம்மண மகா ஜனங்களுக்கு ஓர் முக்கிய விண்ணப்பம்" என்னுஞ் சிறுபுத்தகம், அச்சபையார் வேண்டுகோளின்படி, இச் சஞ்சிகையோடு சேர்த்தனுப்பப்பட் டிருக்கிறது.

*
* *

சென்னை அறுபத்து நான்கு தலைக்கட்டு உள்ளிட்ட பெரியதனம் ஸ்ரீ களத்தூர் தஞ்சாச்சாரியார் ஆதீன பரம்பரை பெரிய தனம் ஸ்ரீ. க. இராஜாச்சாரியார் அவர்களுடைய நன் முயற்சியினாலும், ஷை பெரிய தனத்தைச் சார்ந்த தர்ம பரிபாலன சபையா ரவர்களுடைய பெருந்தன்மையினாலும், ஷை சபைக் காரியதரிசியார் ஸ்ரீ அன்னுத்தூர் இராகவாச்சாரியாரவர்களுடைய அபிமானத்தினாலும், ஷை பந்துக்கட்டாருடைய கிருகங்களில் நடக்கும் சுபாசுப காரியங்களில் சபைக்கென்று ஓர் பலதானம் அளிக்கப்பட்டு வருகிறது. இங்ஙனம் வேறொரு பந்துக்கட்டில் நடந்துவருவதை முன்னமே தெரிவித் திருக்கிறோம். உள்ளூரி லுள்ள மற்ற பந்துக் கட்டார்களும் வெளியூரார்களும் இந்த அநுஷ்டானத்தைக் கைப்பற்ற வேண்டுகிறோம்.

*
* *

சென்னையில் "காய் கறி ஆகார சங்கம்" (Madras Vegetarian Society) என்பதொன்று ஏற்பட்டிருப்பதா யறிந்து சந்தோஷிக்கிறோம். ஆனரெபில் ராவ்பகதூர் பட்டு கேசவப்பிள்ளையவர்களுடைய சகோதராகிய ஸ்ரீ பட்டு விஜயரத்தினம் பிள்ளையவர்கள் இச்சங்கக் காரியதரிசியா யமர்ந் திருக்கிறார். மிஸ்ஸஸ் அன்னி பெஸன்ட், திவான்பகதூர் கோவிந்ததாஸ் சதுர்ப்புஜதாஸ், ராய்பகதூர் இரத்தினசபாபதி பிள்ளை, B. A. B. C. E. முதலான வர்களுடைய ஆதரணையின்கீழ் இது ஒருவருஷமாக நடைபெற்று வருவதாய்த் தெரிகிறது. இச்சங்கத்தின் கொள்கைகள் பின்வருமாறு: (1) இந்நாட்டில் தினமும் அநேகாயிரக் கணக்காய்க் கொல்லப்படும் ஜீவராசிகளின் தொகையைக் குறைத்தல் (2) மாம்ஸ

ஆகாரத்தால் உண்டாகும் நோய்கள் குடிப் பழக்கம் முதலியவைகளை யெடுத்து விளக்குதல் (3) ஜீவகாருண்ய விஷயமான புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் மேல் நாடுகளி லிருந்து வரவழைத்தல் (4) அவ் விஷயமாய்ச் சிறு புத்தகங்களும் துண்டுப்பத்திரிகைகளும் அச்சிட்டு சென்னையில் இலவசமாய் வழங்குதல் (5) வைத்திய சுகாதார முறைகளின்படி காய்கறி ஆகாரத்தின் நற்பலன்களைத் தெளிய எடுத்துக் காட்டலுமே. இச்சங்கத்தார் சிறு பிள்ளைகளுக்கு, முக்கியமாய்ப் பெண்களுக்கு உபயோகமாகும்படி புத்தகங்களை யச்சிட்டு அவற்றைப் பாடபுத்தகங்களாக பாடசாலைகளில் வாசிக்கச் செய்தல் நன்று. கொல்லாவிரதங் குவலய மெல்லா மோங்க எல்லார்க்குஞ் சொல்லும் இச்சைகொண் டிருப்பவர்களுக்கு இச்சங்கம் மிகவும் உபயோககரமாயிருக்கும். இச்சங்கத்தின் ஆபீஸ் சென்னை புரசை சுந்தரம்பிள்ளை வீதியிலிருக்கும் கனகசபா ஹாலில் அமைக்கப்பட் டிருக்கிறது.

*
* *

'குடந்தையில் கான்பரன்ஸ்' என்னும் விஷயமாய்ப் பலமாதங்களாக நமது பத்திரிகை தந்த போதத்தின் பலனாக, குடந்தைமா நகரத்தில் விஸ்வகர்ம கான்பரன்ஸ் கூட்டுவதற் கேற்ற பிரயத்தினங்கள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஷை கான்பரன்ஸ் குலாபி விருத்திக்குச் சாதகமா யிருக்குமாறு ஆக்கப்பட்டு, விமரிசையாய் நடை பெற்று, சீர்திருத்தத்திற் கநுகுணமான நன்னோக்கங்களை யுண்டுபண்ணி, விருத்தி வழிகாட்டுமென் றெதிர்பார்க்கிறோம். பலஜாதியார்களும் வியந்து பாராட்டத்தக்க விதமாகவும் அவர்கள் நன். மதிப்பும் ஒற்றுமைப்புஞ் சித்திக்குமாறும் காரியங்கள் நடத்தப் படவேண்டும். இங்ஙனஞ் செய்யப் பட்டால்தான் கான்பரன்ஸினால் நன்மை யுண்டாகும். தீமைக்கிட முண்டாக்கக் கூடிய பிறழ்வுகள் நேராதபடி கான்பரன்ஸ் அதிகாரிகள் எச்சரிக்கையுடன் நடத்தல் அவஸ்யமாயிருக்கிறது. சிறு பிழைகளும் பெருந் துன்பங்களை விளைவித்து நெடுங்கால மளவும் நீங்காத் துயரத்தை நிலைபெறுத்துவனவாயிருக்கின்றன வன்றோ? இனி, விஸ்வகர்மக் கைத்தொழி லபிவிருத்தி சாதனங்களும் ஷை கான்பரன்ஸின் கவனத்தைப் பெறுதல் அவஸ்யமாயிருக்கிறது. இதற்காக, கான்பரன்ஸை யநுசரித்து, விஸ்வகர்மத் தொழிற் பொருட் காட்சியொன்று நடத்தப் படவேண்டும். இதைப் பற்றிய அபிப்பிராயங்கள் நமது பத்திரிகையில் முன்னமே வெளிவந் திருக்கின்றன. கர்மகாரர்களாகிய நாம், மற்ற ஜாதியரைப்போல், கான்பரன்ஸ் மட்டுமே நடத்துதல் சிறப்பாகாது; பொருட்காட்சியும் நடத்தத்தான் வேண்டும். இங்ஙனஞ் செய்தற்குச் சௌகரிய மேற்படுமாறு கான்பரன்ஸ் காலத்தை நிச்சயிக்கவேண்டும். நாளது டிஸம்பர் மாதத்திலேயே அது நடைபெற வேண்டுமென்ற நிர்ப்பந்த மொன்றுங் காணோம். மாகாண கான்பரன்ஸ், ஜில்லா கான்பரன்ஸ் முதலிய பலகான்பரன்ஸ்கள் வேறு மாதங்களில் நடைபெறவில்லையா? செய்வன திருந்தச் செய்வதில் கண்ணுங் கருத்து மிருக்க வேண்டுமே யொழிய, காலத்திலேயே கவனம் வைத்து காரியத்திற் குறைவுண்டாக்கக் கூடாது. குடந்தையில் கான்பரன்ஸ் நடத்துவோர், மேற்சொல்லிய வாக்கியங்களையும், இதுவரையிலும் நமது பத்திரிகையில் வெளியாயுள்ள கருத்துகளையும், இனி வெளியாகக் கூடிய அபிப்பிராயங்களையுந் தழுவி நடப்பார்க ளென்று நம்புகிறோம்.

*
* *

ஆங்கிலங்கற்ற இந்தியர் இராஜ விசுவாசங் குறைந்தவர்களா யிருக்கிறார்களென்ற கருத்து இங்கிலாந்தில் சிலகாலமாய்ப் பரவி வந்தது. இப்போது ஐரோப்பாவில் நடக்கும் யுத்தங் காரணமாக, இந்தியாவிலுண்டான ராஜவிசுவாசக்



கிளர்ச்சியானது ஆங்கிலங் கல்லாதவர்களிடத்தேதான் அதிகமாய்க்காணப்படுகிறதென்று ஸர் வாலென்டைன் ஷிரால் என்பவர் இங்கிலீஷ் பத்திரிகையொன்றில் எழுதினார். அதற்குப் பதிலாக, சென்னை ஐகோர்ட் ஜட்ஜிகளில் ஒருவராகிய ஜஸ்டிஸ் அப்துல் ரஹிம் என்பவர் எழுதிய கடிதத்தில் கீழ்க்குறித்த அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன.—ஆங்கிலங் கற்ற இந்தியரில்லாவிட்டால், பிரிட்டிஷ் துரைத்தனம் இந்தியாவில் ஓர்தினமேனும் நடக்காது. கிராமக்கர்ணம்முதல் கலெக்டர் ஹைகோர்ட்ஜட்ஜ் வரையில், படித்த இந்தியரின் சகாயத்தினாலேயே பிரிட்டிஷ்துரைத்தனம் நடைபெறுதல் சாத்தியமாயிருக்கின்றது. நிர்வாக சபையிலுங்கூட இந்தியரில்லாதது நிர்வாகத்திற்குக் குறைவா யிருக்கிறதென்றறிந்து, இந்தியரை நிர்வாகசபை மெம்பர்களாக நியமித்திருக்கிறார்கள். இப்படி, இன்றியமையாதவர்களாயுள்ள படித்த வகுப்பாரின் உபயோகத்தையும் அவஸியத்தையும் பிரிட்டிஷ் ஜனங்கள் அறியாதது ஆச்சரியமாயிருக்கிறது. அன்றியும், படித்த இந்தியர்களில்லாவிட்டால், குறுகிய மனதுடைய அறியாத வைதிக இந்துக்களும் மகம்மதியர்களும் பாமரஜனங்கள்மீது செலுத்தும் செல்வாக்கு எவ்வாறுமுடியும்? பிரிட்டிஷாரிடத்தில் பாமர இந்து மகம்மதிய ஜனங்களுக்கு இயற்கையாயுள்ள நம்பிக்கைக்குறைவு, படித்த இந்தியர்களுடைய செல்வாக்கினாலேதான் வரவரக் குறைந்துவருகிறது. படித்தஇந்தியரில்லாவிட்டால், பிரிட்டிஷ் துரைத்தனத்தார் செய்யும் பற்பல சட்டதிட்டங்களும் மற்றகாரியங்களும் பாமரஜனங்களுக்கு விளங்காமல் அவர்கள் தப்பாய் அர்த்தஞ்செய்து தடுமாற்றமுண்டுபண்ணுவார்கள். அதனால் எத்தனையோ தீங்குகள்விளையும். பிரிட்டிஷார்களில் சிற்சிலர் அறியாமையும் பொறாமையுங் கொண்டு விளங்கியபோதிலும், பெரும்பான்மையோர் படித்த இந்தியர்களின் பிரயோசனங்களை யறிந்தவர்களாயுள்ளபடியால், படிப்படியாய் ஸ்வராஜ்பத்திற்கேற்ற சுதந்தரங்களைக் கொடுத்துவருகிறார்கள்.—படித்த இந்தியர்களால் இராஜாங்கத்திற்கு பலமுண்டாவதோடுகூட, அவரவர்களுடைய ஜாதி மதங்களுக்கும் பலமும் பெருமையு முண்டாகின்றனவன்றோ?

*
* *

சௌராஷ்டிர வகுப்பைச் சேர்ந்த மிஸ்டர் N. கிருஷ்ணய்யா என்பவர் ஐரோப்பாவிலிருந்து சில வாரங்களுக்குமுன் திரும்பி சேலத்திற்கு வந்தார். இவர் எடின்பரோ யூனிவர்சிடியில் B. Sc. என்னும் பட்டம் பெற்றதாகவும், நகரநிர்மாண சாஸ்திரத்திலும் சுகாதார சாஸ்திரத்திலும் நிபுணத்துவம் அடைந்திருப்பதாகவுந் தெரிகிறது. சௌராஷ்டிர வித்தியாநிதியில் இரண்டுலக்ஷ ரூபாய் சேர்ந்திருக்கிறதென்றும், சௌராஷ்டிர வகுப்பு வித்தியார்த்திகள் இங்கிலாந்து முதலிய தேசங்களுக்குச் சென்று பல சாஸ்திரங்கள் கற்று வருவதற்காக ஷை நிதியிலிருந்து பொருளுதவி செய்யப்படுகிறதென்றும் அறிகிறோம். இவர்களிடமிருந்தாகிலும் நாமொரு கற்பனை யேற்கலாகாதா!

*
* *

நமது கவர்னர் பிரபு அவர்கள் சமீபத்தில் தென்னாட்டில் சுற்றுப்பிரயாணஞ் செய்தபோது கொல்லங்கோட்டு ராஜாவைப் பார்க்கச்சென்றார். அப்போது கொல்லங்கோட்டு நம்பூத்ரிமார்கள் கவர்னர் பிரபுவுக்கு ஒரு அட்ரஸ் வாசித்தார்கள். அதில், தாங்கள் இதுவரையிலும் இங்கிலீஷ் படிக்காதபடியால் பிற்பட்டிருக்க நேர்ந்ததென்றும், இனி அக்குறை நீங்கும்பொருட்டாக ஆங்கிலங் கற்கப் பிரயத்தினப்பட்டு ஜனசமூகத்தின் முன்னேற்றத்தில் தாங்களுங் கலந்துகொள்ள உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார்கள். இங்ஙனம் இவர்கள் சொன்னது நம்பூத்ரிகளுடைய அபிவிருத்திக்கான நற்குறியே யாகு

மென்று கவர்னர் துரையவர்களும் மற்றோரும் மிகவுஞ் சந்தோஷமடைந்தார்கள். நம்பூத்ரிகள் வெளியிட்ட கருத்து அவர்களினும் அதிகமாய் நமக்குப் பொருந்தியிருக்கிறதல்லவா? பின்தங்கியிருந்து பெருமைகுலையாது ஜனசமூகத்தின் முன்னேற்றத்தில் கலந்திருக்க விரும்புவோர் எவரேயாயினும், ஆங்கிலக்கல்வி யடைவதில் அபிலாஷை காட்டவேண்டியது அவஸியமேயாகும். இவ்வுண்மையை நம்பூத்ரிகள் கண்டதுபோல் நம் மனோரும் கண்டு தெளிந்து நலமுறுவார்களாக.

* * *

இந்தியர்களுடைய தூர்வழக்க மொன்றைப் பற்றி, தொழிலிலாகா டைரக்டராகிய மிஸ்டர் ட்ரஸ்லர், தாம் வெளியிட்டுள்ள ரிபோர்ட் ஒன்றில் விஸ்தரித்திருக்கின்றார். அதாவது, இந்தியாவில் ஒருவன் ஒருதொழிலை ஸ்தாபித்து பலனடைவானானால், வேறு அநேகர் அதே தொழிலை யாரம்பித்து போட்டிசெய்துகெடுத்தலே! சாதாரணமாய் எல்லா தொழிலாளிகளும் அறிந்த விஷயமேயாகும் இது. கல்வித்தேர்ச்சியும், புத்தி விசாலமும், தொழிற்கல்வியும் இல்லாமையே இதற்கு முக்கிய காரணங்களென் றெண்ணுகிறோம். "தஞ்சாவூர் ஜில்லாவில் எங்கு பார்த்தாலும் நெல்குத்தும் இயந்திரங்கள் புதிது புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டுவருகின்றன. அவைகளால் தற்காலத்தில் நன்மை யுண்டாகலாம். ஆனால், ஒருவர் போனவழியே மற்றவரும் போகுங்குணம் இந்தியாவில் அதிகமாக விருத்தி பெற்றுவருகிறது. அளவுகடந்த போட்டியினால் பெஜவாடாவில் நெல்குத்துந் தொழில் பாழாய் விட்டது. தஞ்சாவூர் ஜில்லாவிலும் அப்படியே நேரிட்டால் எனக்கு ஆச்சரிய முண்டாகமாட்டாது"—என்று ஷெ யார் எழுதுகிறார்.

* * *

நகர நிர்மாணம் என்னுஞ் சிற்பசாஸ்திர சம்பந்தமான உபந்நியாசங்களைச்செய்வதற்கு, இங்கிலாந்திலிருந்து ப்ரொபஸர் கெட்டிஸ் என்னும் நிபுணர் இந்தியாவுக்கு வருகிறார். இந்தியாவிலுள்ள பெரிய பட்டணங்கள் பலவற்றின் சுகாதாரநிலை சீர்கேடா யிருக்கிறபடியால், அவற்றைச் சீர்திருத்தஞ்செய்யு மார்க்கத்தைப் போதிக்க, மாகாணக் கவர்ன்மெண்டார்களால் ஷெ நிபுணர் வரவழைக்கப்பட்டிருக்கிறார். இவர் ஏழுமாத காலம் இந்தியாவில் தங்கி பலபட்டணங்களுக்குஞ் சென்றுபார்த்து அங்கங்கு உபந்நியாசங்கள் செய்வார். இவருடைய உபந்நியாசங்களைக் கேட்பதற்காக இஞ்சினீயர்களும் முனிஸிபல் உத்தியோகஸ்தர்களும் அங்கங்கிருந்து அரசாங்கச் கச்செலவில் அனுப்பப்படுவார்களென்று தெரிகிறது. இந்தியாவிலுள்ளவர்களுக்குச் சிற்பசாஸ்திரம் போதிப்பதற்கு இங்கிலாந்திலிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் நிபுணர்கள் வரவேண்டியதாயிருக்கிறது. உலகமெல்லாம் பிரமிக்கும்படியாக இந்தியாவில் பலஅற்புத நிர்மாணகாரியங்கள் செய்த நமது சிற்பாசாரியர்கள் எங்கிருக்கின்றனர்? நமது சிற்ப வல்லபமும் சிற்பசாஸ்திர போதனாவல்லபமும் எந்த ஸ்திதியிலிருக்கின்றனவென்றும், நமது நாட்டிலேயும் மற்ற நாடுகளிலும் அவை இப்போது எவ்வளவு லக்ஷியம்பெற்றிருக்கின்றனவென்றும் நாம் கண்திறந்து பாராமல் காலங்கழித்துவருதல் அழகேயோ? பூர்வீக சிற்ப சாஸ்திராதாரங்கொண்டு புகழ்பெறுதலியலாதாயின், மேனாட்டுப்போதமாவது பெற்று மேம்பட வேண்டாமா? நண்பர்களே! நன்கு யோசித்து நடவுங்கள்!

* * *

இந்தியா கவர்ன்மெண்டின் கமர்ஷியல இன்டலிஜன்ஸ் டைரெக்டர் ஜெனராலாகிய மிஸ்டர் லே என்னும் உத்தியோகஸ்தர் சில வாரங்களுக்குமுன் பம்பாய்க்குச் சென்றிருந்தார். அப்போது அவ்வூர்ப் பிரபல வர்த்தகர்கள் அவரைக்கண்டு, சாயங்கள் செய்தல், கண்ணாடி செய்தல், தீக்குச்சுகள் செய்தல், சர்க்கரை செய்தல் போன்ற தொழில்கள் இந்தியாவில் ஸ்தாபிக்கப்படலாமென்றும், அப்படி நூதனமாய் ஸ்தாபிக்கப்படும் தொழில்களைக் கவர்ன்மெண்டார் பாதுகாப்பதாக உறுதிதர வேண்டுமென்றும், அவ்வித உறுதிவாக்கு கிடைத்தாலொழிய இந்தியர்கள் மூலதனம் போட்டு புதுத் தொழில்களை ஸ்தாபிக்க முடியாதென்றுந் தெரிவித்தார்கள். ஷெ கருத்துகளை இந்தியா கவர்ன்மெண்டுக்குத் தெரிவிப்பதாக மிஸ்டர் லே வாக்களித்துப்போயினர். இந்தியா கவர்ன்மெண்டின் அபிப்பிராயம் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்கள் என்ன உத்திரவு பிறப்பித்தபோதிலும், நாம் தற்காலமுள்ள ஸ்திதியில் நமக்கென்ன நன்மையுண்டாகப்போகிறது? காசுக்கொருகெஜந்துணி விற்பினும், கட்டாதார்கள் காண்பலனேது?



## இந்திய கைத்தொழில்

"சத்திய வசனன்" எழுதியது

ஜார்ஜ். சி. யம். பர்ட்வுட் (George C. M. Birdwood) என்பார் ஓர் இந்திய தொழில் வித்தியார்த்தி. இந்திய கைத்தொழிலில் எவ்வெவ் விதங்கள் இருக்கின்றனவோ அவ்வவ்விதங்களில் எச்சந்தேகம் எவர்க்கு நிகழினும் அவரது "இந்திய கைத்தொழில்" (The Industrial Arts of India) என்னும் புத்தகத்தை வாசித்தால் சந்தேக நிவர்த்தியாகும். ஐரோப்பிய கைத்தொழிலைப் பிரிவினை செய்வதுபோல், இந்திய கைத்தொழிலைப் பாகுபாடு செய்தற்கு இயலாது என்கிறார்.

ஏனெனில், ஐரோப்பிய கைத்தொழில் அநேகமாய் கையினால் செய்யப்படுவதில்லை. சிற்சிலவே கையினால் செய்யப்படுவன. மற்றவை யெல்லாம் யந்திர உபகரணங்களைக் கொண்டு செய்யப்படுகின்றன. முன்சொன்னது ஆர்ட் (கைத்தொழில்) எனப்படும். பின் விவரித்தது இண்டஸ்ட்ரி (தொழில்) எனப்படும். இந்தியாவிலோ ஆங்கிலேய துரைத்தனத்திற்குமுன் எத்தொழிலும் கையினால் செய்யப்பட்டு வந்தது. ஐரோப்பாவிலோ எத்தொழிலும் கைத்தொழில் எனச் சொல்வதிற்கிடமில்லை. எத்தொழிலையும் யந்திரத்தொழில் என்றே சொல்லவேண்டும். ஆகையினால், ஐரோப்பாவில் கைத்தொழில் என்னும் வார்த்தை அதன் அருத்தத்தையே இழந்து விட்டது. தொழிலாளியின் கூரியபுத்தியின் நவீனமும் கைப்பாடுமில்லாத எப்பொருளும் கைத்தொழிற்பொருள் எனச் சொல்வதற்கிடமில்லை. யந்திரப்பொருள் என்றே சொலற்பாலது.

ஜார்ஜ் பார்ட்வுட் துரை இந்தியர்க்கு யந்திர உபகரண உதவியில்லாதிருந்ததே அவர்களுடைய கைப்பாடான தொழிற்றேர்ச்சியின் உயர்வுக்கு காரணம் என்கிறார். அபாரமான தொழிலைச் செய்வதற்கே யந்திர உபகரணம் உபயோகமாகும். அபாரமான கைத்தொழிலில் வண்டித்தொடரை இழுத்தல், பஞ்சுப்பொதியைச் சுருக்கி மூட்டையாக்கல், கட்டிடங்களின் மேல் இரும்பு உத்தரங்களையும் கருங்கற்களையும் எற்றல், கரைதட்டிய அல்லது மணலிற் செருகப்பட்ட கப்பல்களை வலித்தல் முதலாயினசேரும். நீர் இறைத்தல் கிணறுதோண்டல் முதலியவற்றிற்கும் யந்திர உபகரணம் வேண்டும். தீக்குச்சிகளை ஏராளமாய்ச் சீவவேண்டியிருத்தலின் அவைகளைக் கையினால் செய்து முடியாது. ஆகையால் யந்திரத்தின் உதவிவேண்டும்.

நாகரிகம், நுட்பம் அழகு இவைகள் பொருந்திய தொழிலெல்லாம் நேர்த்தியான தொழில்கள் என்று சொல்லப்படும். ஆங்கிலத்தில் நேர்த்தியான தொழிலை (Fine-Arts) என்பார்கள். கவிசாதுர்யம் சங்கீதம் ஆகிய இவை பூரணமான மனோபாவத்திற் குரிய நேர்த்தியான தொழில்கள். சித்திரம், வர்ணமிடல், சிற்றுளிவேலை, ஆபரணநிர்மிதம், உருக்கு, இரும்பினாலேயும் சலவைகல்லினாலேயும் உருச்செய்தல், வாத்தியத்திற்குரிய சித்தார், வீணை, பிடில், புல்லாங்குழல், நாகசுரம், மிருதங்கம் இவைகளின் நிர்மிதம், ஆகிய இவைகளிலெல்லாம் கைப்பாடும் மனோபாவமும் வேண்டியிருத்தலின் நேர்த்தியான கைத்தொழில்களாகும். இவைகளெல்லாம் யந்திரங்களினால் செய்தற்கு இயலாது. யந்திரங்களெல்லாம் ஒரேமாதிரியான வஸ்துக்களைத்தான் உண்டாக்கித்தரச் சக்தியுள்ளன. தொழில்செய்யும்போதே மாதிரிக்கு அன்னியமான காரியங்களைச் செய்ய யந்திரங்களால் ஆகாது. நேர்த்தியான தொழில்களிலெல்லாம் ஒரே தடவையில் பல காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. மனோபாவமும் அனுபோகமும் அதிகமாய் வேண்டியிருக்கிறது. ஆகையினால் அவைகளெல்லாம் மானிடக்கைப்பாட்டினாலேயே ஆகவேண்டும்.

மேற்சொல்லிய காரணங்களுக்காக "யந்திரத்தை நாம் எப்பொழுதும் வேலைக்காரனாகவைத்துக்கொள்ளவேண்டும். யந்திரத்தை நமக்கு எஜமானனாக வைத்துக்கொள்ளக்கூடாது" என்று தன் அபிப்பிராயத்தை பர்ட்வுட் துரை தெரிவிக்கிறார். உயிர்வாழ்க்கையில் சந்தோஷமும் அழகும் வாய்ந்த சந்தர்ப்பங்களுக்கு இன்றியமையாத பொருள்களைச் சிருட்டிப்பதில் யந்திரம் உபயோகப்பட மாட்டாது. கஷ்டமான தொழிலைச் செய்யும் அடிமைத் தொழிலுக்கே யந்திர உதவி அடுத்தது. இவ்வுண்மையை இந்தியர்களும் ஆங்கிலேயரும் மனதில் பதித்துக்கொள்ளவேண்டியது. இங்கிலாந்தில் நாகரிகர்கள் நேர்த்தியான கைத்தொழிலில் யந்திர உபயோகத்தை நிறுத்துவார்களேயானால் செல்வமானது ஜனசமூகத்தில் எல்லோருக்கும் சமமாக பாகிக்கப்பட்டதுபோல் பரவும். தொழிலாளிகள், தினசரிவேலையின் உயர்வினாலும், சாமர்த்தியம், புத்திகூர்மை, கைத்தொழில் ஞானம் இவைகளின்பொருட்டு அதிக மரியாதை உண்

டாவதினாலும் ஜனசமூக, இராஜாங்க, தேச நாகரிக உன்னதநிலையை அடைவார்கள். அப்போது தேசமுழுவதும் உயர்ந்த வகுப்பினரே யிருப்பார்கள். கிரீஸ் தேசத்திலேயும் உரோம்தேசத்திலேயும் ஒருகாலத்தில் காணப்பட்டதுபோல, பூர்வீககாலம்போல் இப்போதும் கிழக்கு தேசங்களில் காணப்படும் திருப்தியையும் சந்துஷ்டியையும் ஐரோப்பியர் அனுபவிப்பார்கள்.

இந்தியாவில்நேர்த்தியான கைத்தொழில்கள் முன்காலத்தில் அபிவிர்த்தியை அடைந்ததற்கு இரண்டு காரணங்களை பர்ட்வுட் துரை எடுத்துக்காட்டுகிறார். (1) ஒவ்வொரு கைத்தொழிலும் ஒவ்வோர் கூட்டத்தாரால் தான் செய்யப்படுகிறது. அவர்கள் ஒவ்வோர் ஜாதியாரா யிருக்கிறார்கள். கைத்தொழில் தலைமுறை தலைமுறையாக ஓர் ஜாதியார்க்கு ஒன்றாகவே யிருந்துவருகிறது. அதினால் அவர்கள் புத்தியையும் அனுபோகத்தையும், மனோபாவத்தையும் அத்தொழிலிலேயே உபயோகித்து வந்தார்கள். தொழில் ஞானம் விருத்தியாயிற்று. இதுவே யல்லாமல் ஒவ்வொரு வகுப்பினர்க்கும் ஓர் எஜமானர் இருந்தார். அவர் அவ்வகுப்பின் ஒழுங்கீனங்களைத் திருத்திக்கொண்டிருந்தார். அவருக்கு கீழ்ப்பட்டு கைத்தொழில் ஞானம் அபிவிர்த்தியை அடைந்தது. (2) பூர்வீக அரசர்கள் கைத்தொழிளாளிகளை அரண்மனை உத்தியோகஸ்தர்களாக சம்பளத்திற்கு அமர்த்தி உயர்ந்த வேலைப்பாட்டிற்கு பரிசு கொடுத்து மரியாதை செய்து வந்தார்கள்.

இராமாயணத்தில் அயோத்தியா காண்டம் இரண்டாவது சருக்கம் 19-வது அத்தியாயத்தில் பரதன் இராமனைத் தேடிக்கொண்டு போனபோது தொழில் வகுப்பினர் வரிசைக்கிரம வரன்முறையாக, தங்கள் எஜமானர்கள் பின்வரச் சென்றார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆபரணக்காரர்கள், பொன்வெள்ளி வினைஞர், அயத்தொழிலாளர், மரவினைஞர், குயவர், தந்த வினைஞர், நெய்தற்றொழிற்காரர்கள், அத்தர் வினைஞர், வாத்தியங்கள் செய்வோர், ஆயுதத்தொழிலாளிகள், சித்திரக்காரர்கள், வர்ணக்காரர்கள், நவரத்தின வேலைக்காரர்கள், கண்ணாடி வினைஞர் ஆகிய கைத்தொழில் சமூகத்தார் புடைசூழ்ந்தார்கள் என்று விவரித்து இருக்கிறது.

மகம்மதியர் காலத்திலும் ஆக்பர் சக்ரவர்த்தி தன் அரண்மனையில் இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்து தொழிலாளிகளை வரவழைத்து சம்பளத்திற்கு அமர்த்தினார். ஆக்பர் சக்ரவர்த்திக்கு வர்ணம்தீடுவதில் அபரிமிதமான அபிலாஷையுண்டு. அநேக சித்திரக்காரர்களை வரவழைத்து ஒருவரை ஒருவர் கைப்பாட்டில் மிஞ்சும்படிச் செய்தார். கைதேர்ந்தவர்களுக்கு வாரத்தில் ஒருமுறை பார்வையிட்டு வெகுமதி அளித்தார். மாதச்சம்பளத்தை உயர்த்தினார். ஆயுதநிர்மாணமாகும்போது கொல்லக்கூடத்தை அந்தந்த சந்தர்ப்பங்களில் எந்நிலையிலிருக்கிறது என்று தாமே நோகப்போய்ப் பார்வையிட்டார். நெய்தற்றொழிற் காரர்களையும் பூப்போடுகிறவர்களையும் வர்ணம் தோய்க்கிறவர்களையும் தமது கண்காணிப்பிலேயே வைத்துக்கொண்டிருந்தார். அரண்மனை உபயோகம் போக மிகுந்த வஸ்திரங்களைப் பரிசுகொடுத்தார். இவைகளை யெல்லாம் ஆக்பருடைய மந்திரியாகிய ஆபூல் பாசல் (Abul Fazl) என்பவர் எழுதிய அயின் ஆக்பரி (Ayin Akbari)யில் பாக்கக்காணலாம்.

பூர்வகாலத்தில் தொழிலாளிகளுக்கு மிகுந்த மரியாதை யிருந்தது. அவர்களை மஹாராஜன் என்னும் பட்டத்தால் மரியாதையாய்க் கூப்பிட்டார்கள். இந்தியாவானது எப்போதும் கைத்தொழிலுக்குப் பிரசித்திபெற்றது. அழகு நாணயம் நாகரிகம் என்பவை இந்தியாவில் தான் பிறந்தன. மேல்நாட்டாருக்கு நாகரீகம் இந்தியர்களிடத்திலிருந்துதான் சென்றது. இந்தியர் பருத்தி நூலினால் செய்த ஆடை தரித்தபோது. மேல்நாட்டார் ஆட்டு உரோமத்தினால் ஆகிய உடை தரித்திருந்தார்கள். மேல்நாட்டார் அலங்காரமில்லாமல் ஆடுமாடுகளைப்போல் திரிந்து கொண்டிருந்தபோது இந்தியர் திவ்ய சுவர்ண ரத்நாபரணங்களை அணிந்துகொண்டார்கள். அலக்ஸாண்டர் (Alexander) படையெடுத்து வந்தபோது இந்தியர்களுடைய நாகரிகத்தைப் பார்த்து கிரேக்கிய சரித்திரக்காரர்கள் “இந்தியாவில் ஓர் மரம் இருக்கிறது. அதற்கு, ஆடுகளுக்கு உள்ளதுபோல், உரோமம் இருக்கிறது; அவ்விரோமத்தைக்கொண்டு வஸ்திரங்களைச் செய்து உடுத்திக்கொள்ளுகிறார்கள்” என்று எழுதியிருக்கிறார்கள்.

நாகரிகம் என்பது இந்தியாவிலிருந்தே மேல்நாட்டுக்குச் சென்றது. பாண்டவர் கௌரவர்களோடு ஆடிய சூதாட்டத்தில் எவ்வெப் பொருள்களைப் பந்தயமாக வைத்தார் என்று குறிப்பிடுவோமானால், பூர்வீக இந்தியத்தொழிற் றேர்ச்சிக்கும் நாகரிகத்திற்கும் சந்தேகத்திற்கு இடங்கொடா சாக்ஷியாகும். யுதிஷ்டிரர் ஒரு அழகிய மூகத்தையும், ஆயிரம் பொன் நாணயங்களுள்ள ஓர் பையையும், பெரூகைப்போல் நயமான ஓர் பொன் கட்டியையும், இரத்ன திவ்யாலங்கிருதம் செய்யப்பட்டு சுற்றிலும் பொன்மணிகள் தொங்கவிட்ட ஓரிரதத்தையும், வயிரங்கள்பதித்த பொன் அம்பாரி சுமத்திய 1000 யானைகளும், நல்ல பட்டுபீதாம்பரங்கள் உடுத்திக்கொண்டிருந்த 1,00,000 அடிமைத்தொழிலாளிகளையும் (தாசர்களையும்), உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் திவ்யமான பொன் ஆபரணங்களை அணிந்த 1,00,000 அழகிய அடிமைப்பெண்களையும் (தாசிகளையும்) தோற்றதாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய அழகும் நாகரிகமும்வாய்ந்த நமது கைத்தொழில்களை விர்த்திசெய்வது நமது கடமையாகும். ஆகையால், பர்ட்வுட் துரை அபிப்பிராயத்தின்படி நேர்த்தியான தொழில்களைக் கைப்பாடாகவும், அபார வேலைகளை யந்திர உபகரணத்தைக் கொண்டும் நடத்துவோமானால் நமது தேயத்தின் தொழிற் சம்மந்தமான பூர்வீக புகழை நிலைநிறுத்தச் செல்வமோங்கி சிறப்புறுவோம்



## தொழிற்கல்வி யுண்டாவதெப்படி?

“தொழிலாளி” எழுதியது.

சென்ற மாதப் பத்திரிகையில் “தொழிற் கல்வி” யென்னும் பெயரிட்டு, ‘சத்தியவசனன்’ என்பவர் எழுதியுள்ள வியாசத்தை, நமது குலாபிமானிகள் கவனமாய் வாசிக்கவேண்டும். இந்தியாவின் உயர்வுக்கும் விருத்திக்கும் ஐஸ்வரியத்திற்கும் கைத்தொழிலபிவிர்த்தியே முதற்காரணமாயின், நம்முடைய உயர்வுக்கும் விருத்திக்கும்ஐஸ்வரியத்திற்கும் கைத்தொழிலபிருத்தி எவ்வளவு அத்தியாவஸ்ய மென்பதை எடுத்துக் காட்டவேண்டுமோ! கைத்தொழில் ஏற்றத்திற்கு முதற்காரணம் தொழிற்கல்வியென்று ப்ரொபஸர் கஜ்ஜர் சொன்னது சத்தியமே! தொழிற்கல்வியும் தொழில் தேர்ச்சியும் நம்மவர்களுக்கு இருக்கத்தான் வேண்டும். இவையிருந்தால்தான் மற்றவை வரும். இவை யில்லாவிட்டால், கைத்தொழி லபிவிருத்தி சித்திக்கமாட்டாது, உயர்வு உண்டாகமாட்டாது, ஐஸ்வரியம் அணுகமாட்டாது.

தொழிலாளிகள் கற்கவேண்டிய சாஸ்திரங்களாக மேற்சொல்லிய வியாசத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பவை—தாதுசாஸ்திரம், மின்சார சாஸ்திரம், ஜங்கமசாஸ்திரம், உலோகசாஸ்திரம் ஆகிய இவை போன்ற சாஸ்திரங்கள். இந்த சாஸ்திரங்களை வாசிப்பதும், இந்த சாஸ்திரங்களறிந்தவர்களால் நடத்தப்படும் தொழிற்சாலைகளிற் பழகுவதுந் தொழிற் கல்வியெனப்படும். இந்த சாஸ்திரங்களை எப்படிப் படிக்க முடியும்? இவை தமிழ்ப்பாஷையி லிருக்கின்றனவா? இல்லை. தெலுங்கு கன்னடம் மகாராஷ்ட்ரம் சமஸ்கிருத முதலிய பாஷைகளி லிருக்கின்றனவா? இல்லை. சமஸ்கிருதபாஷையில் சில சாஸ்திரங்களிருக்கின்றனவென்று சொல்லிக் கொள்ளப்பட்டாலும், அந்த நூல்கள் கிடைப்பதும் அவற்றைக்கொண்டு சாஸ்திரஞான மடைவதும் சாத்தியமில்லை.

மற்று எப்படி மேற்காட்டிய சாஸ்திரங்களைப் படிக்க முடியுமென்று பார்த்தால், இங்கிலீஷ் படிப்பினாலே தான் அது கைகூடுமென்பது கண்கூடாக் காணப்படும். இங்கிலீஷ் தெரியாதவர்கள் தொழிற்கல்வி கற்க அருகர்க ளாகமாட்டார்கள். ஆதலால், நமது ஜாதியபிவிர்த்திக்கு இன்றியமையாததாக மேலே தீர்மானிக்கப்பட்ட தொழிற் கல்வியை யடையவிரும்புகிறவர்கள் இங்கிலீஷ் படிக்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள். நமது இராஜதானியில் தொழிற்கல்வி போதிப்பது இஞ்சினீரிங் (Engineering) காலேஜ் என்பதே. இதிற் சேருவதற்கு (School Final) ஸ்கூல்பைனல், (Intermediate) இன்டர் மீடியட், பி, ஏ முதலிய பரீக்ஷைகளில் தேறவேண்டும். அந்தப் பரீக்ஷைகளில் தேறி இஞ்சினீரிங் காலேஜில் சேர்ந்து வாசித்து சப் ஓவர்ஸியர், (Draughtsman) ட்ராப்ட்ஸ்மன், இஞ்சினீயர் முதலிய பதவிகள் பெற்றால் ரூபா 50 முதல் ரூபா 1000-க்கு அதிகமாக மாதந்தோறும் சம்பாதிக்கலாம். இது தொழிற்கல்வியின் பலனெனப்படத்தக்கது.

ஊசிக்காசிப் போடவும்,வாசற்கால்கதவு செய்யவும், சக்கரத்துக்குக் கட்டுப்போடவும், சொம்பு கூஜாவாட்டவும், உளியால் உடைக்கவும் பழகுவதா தொழிற்கல்வி? ஐயோ! நம்மவர்களுடைய தொழில்களையும், அவற்றை நாம் வைத்துக்கொண்டிருக்கும் விதங்களையும், நம்மவர்களுக்குக் கிடைக்குங் கூலிகளையும், அவற்றில் இவர்கள் போட்டாபோட்டி செய்வதையும், மற்றவர்கள் நமது தொழில்களில் பிரவேசித்து அவற்றைச் செய்து வாழ்வதையும், ஊரார்கள் நம்மைத் திரஸ்கரித்து நமது வேலைகளைச் செய்யும் வேறு ஜாதியார்களை ஆதரிப்பதையும் பார்த்தால் உள்ளம்பதைக்கிறதே! செய்ததையே செய்துகொண்டு க்ஷீணித்துப் போகாமல் தொழிற்கல்வி கற்றுத் துலங்குவோம் என்ற நாட்டத்தை நமது மக்களுக்கு நாமேன் உண்டாக்கலாகாது? நம்மைப்போலவே அவர்களும் கூலிவேலை செய்தே பிழைக்கவேண்டுமா? வேண்டாம், வேண்டாம். நாம் சிறுமைப்பட்டதும் தரித்திர முற்றதும் போதும் போதும். நமது மக்களுக்குத் தொழிற்கல்வி தருவோமாக.

அவர்கள் இங்கிலீஷ்படித்து ரயிடர்களாகவும், தாசில்தார்களாகவும், டிப்டிகலெக்டர்களாகவும், இன்ஸ்பெக்டர்களாகவும், வக்கீல்களாகவும், டாக்டர்களாகவும், ப்ரொபஸர்களாகவும் ஆக நாம் விரும்பாமலும் இடங்கொடுக்காமலும் தூண்டாமலும் சகாயஞ்செய்யாமலுமிருந்த போதிலும், அவர்கள் தொழிற்கல்விகற்று தொழிற்சாலைகளில் (Foreman) போர்மன்களாகவும் சூபரின்டென்ட்களாகவும் துலங்கவும், தொழிற்பாடசாலைகளில்

உபாத்தியாயர்களா யிருக்கவும், கவர்ன்மென்ட்தொழிலாகாவில் உத்தியோகங்கள்பெறவும், சிற்ப இலாகாவென்னும் இஞ்சினீரிங் டிபார்ட்மெண்டில் நல்லபதவிகள்பெறவும், கட்டடங்கள் வாராவதிகள் முதலியவற்றையியற்றும் (Contractor) கன்ட்ராக்டர்களாய்த் திகழவுஞ் செய்யக்கூடாதா?

எந்தத் தொழிற்சாலைக்கு உட்பிரவேசித்துப் பார்த்தாலும் வேலைசெய்கிறவர்கள் நம்மவர்களாகவும் மேய்க்கும் மேலதிகாரிகள் பிறஜாதியாராகவு மிருக்கிறார்கள். என்? அவர்களுக்குத் தொழிற்கல்வி கைவந்திருக்கிறது. நமக்குத் தொழில் மட்டுமே கைவந்திருக்கிறது. தொழிற் பாடசாலைகளென்று கவர்ன்மெண்டாராலும் மிஷனரிகளாலும் நடத்தப்படுமிடங்களில் பலஜாதிப் பிள்ளைகளுக்கும் தொழில்கல்வி போதிக்கிறவர்கள் யார்? வேறுஜாதியார்களே யல்லாமல் நம்மவர்களல்ல. ஏன்? நம்மவர்களுக்குத் தொழிலைக் கற்பிக்கத்தெரியாதென்பதா? இல்லை. இவர்களுக்கு இங்கிலீஷ் தெரியாதென்பதே காரணம். கவர்ன்மென்ட் தொழிலிலாகாவில் நம்மவர்களுக்கு என் உத்தியோகங் கிடைப்பதில்லை? தொழிற்கல்வி யில்லாமையினாலே யன்றோ?

இஞ்சினீரிங் டிபார்ட்மென்டில் நமக்கு வேலை கிடைக்கவேண்டுமானால் இங்கிலீஷ் படித்துப் பாஸ் செய்யவேண்டும். இப்போது உலகத்துள்ள இஞ்சினீர்களென்னும் சிற்பாசாரிகளில் ஒருவராவது நமது ஜாதியாருண்டா? எல்லாரும் வேறு ஜாதியார்களே! என்றாலும், நாமே சிற்பாசாரிகள், நமது வம்ஸமே சிற்பவம்ஸம், நமது ஜாதிக்காரரே தொழில்களுக்கெல்லாம் உரியவர்கள், நாமில்லாமல் உலகத்தில் ஒரு காரியமும் நடக்கமாட்டாதென்று வீரியம் பேசுகிறோம்! நமது சிற்பாசாரிகளுக்குக் கல்லை உளியால் வெட்டித்திரட்டித் தினமும் இரண்டணா முதல் ஒரு ரூபா வரையிலும் கூலிபெற்றுக் கொள்ளத்தான் தெரியும். சிற்பவம்ஸ மென்பதற்கு நமக்கு சிற்றுளியே பிருது. கிராமந்தோறும் உலைக்கட மிட்டுக்கொண்டு சம்மட்டியா லடிப்பதனாலும், கதவு வாசற்கால் கூரை இணைப்பதினாலும், கிண்ணம் தட்டு செய்வதினாலும், கருங்கற்களை ஒழுங்குபடுத்துவதினாலும், தாலி பண்ணுவதினாலுமே நாம் கைத்தொழில் களுக்கெல்லாம் உரிமைபெற்று விட்டோமென்று உள்ளமும் உடம்பும் ஒருங்கே பூரித்திருக்கிறோம்.

தொழிற்கல்வியின் அவஸ்யமறிந்து மற்ற ஜாதியாரெல்லாம் அதைக் கற்று அரும்பெரும் பதவிகள் அடைந்துவரு மிக்காலத்திலும் ஆயிரம்வருஷங்களுக்கு முன்னேயிருந்த ஸ்திதியிலேயே நாமிருக்கிறோம். நம்முடைய தொழில்களும் அந்தஸ்திதியிலேயே யிருக்கின்றன. உலகாபிவிருத்திக்கு ஏற்றபடி நாம் தொழிலபிவிருத்தி செய்யமாட்டோமென்பதை யறிந்து, பல ஜாதியாரும் நமதுநாட்டுத் தொழில்களை விருத்திசெய்ய வேண்டியும், நமது நாட்டுச் செல்வத்தையும் ஸ்தானத்தையுங் காப்பாற்ற வேண்டியும், தொழிற் கல்வி பயின்று தொழிலபிவிருத்திசெய்யத் தொடங்கினார்கள். இவர்களுக்கு அரசாங்கத்தாரும் ஊராரும் உதவிசெய்து வருகிறார்கள். பி. ஏ. எம். ஏ பாஸ் செய்தவர்களில் பலரைக் கவர்ன்மெண்டார் தெரிந்தெடுத்து, பல தொழில்முறைகளைக் கற்று வரும்படி ஸ்காலர்ஷிப் என்னும் உபகாரச்சம்பளங் கொடுத்து அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து முதலிய தேசங்களுக்கு அனுப்பி வருகிறார்கள், இப்படித் தேர்ச்சிபெற்றுத் திரும்புவோர்க்கு சிறந்த உத்தியோகங்கள் தருகிறார்கள். இந்த லாயக்கு நம்மவர்களுக்கு எப்படி யுண்டாகும்? இங்கிலீஷ் படித்தாலன்றி உண்டாகுமோ? இங்[illegible] இவ்வளவேதுக்கு—பம்பாய் (Victoria Technical Institute) விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் என்னும் பாடசாலையில் தொழிற்கல்வி கற்று எத்தனையோபேர் சிறப்புறுகிறார்களே!

அவ்விதத் தொழிற்கல்வி யில்லாதேபோயினும், நம்மவர்களுக்கு ஏற்கனவே தெரிந்துள்ள தொழில்களோடு இங்கிலீஷ்மட்டுந் தெரிந்திருந்தால் மிகவும் பிரகாசிக்குமல்லவா? கௌரவ முண்டாகுமல்லவா? தொழிற்கல்வி யில்லாமலே இங்கிலீஷ் பாஷையானது ஒரு தொழிலாளிக்குக் கௌரவத்தையும் மேன்மையும் அதிக சம்பாதனையையும் கொடுக்குமானால், தொழிற்கல்வியுஞ் சித்தித்தபிற்பாடு என்ன பெருமைதான் வரமாட்டாது? நண்பர்களே! நமதுகுலம் விருத்திபெற வேண்டுமானால், நமது தொழில்கள் விருத்திபெற வேண்டும்; நமது தொழில்கள் விருத்திபெற வேண்டுமானால் நமக்குத் தொழிற்கல்வி வேண்டும்; தொழிற்கல்வி வேண்டுமானால் இங்கிலீஷ் படிக்கவேண்டும். ஆதலால், நாம் ஒவ்வொருவரும் நமது மக்களுக்கு இங்கிலீஷ் படிப்பித்து தொழிற்கல்வி தந்து சீருஞ் சிறப்பு முண்டாக்குவோமாக. நமது குலம் பெருமையடைந்து தரித்திரமற்று வாழ்வதற்கு இந்தவழி யல்லாமல் வேறெந்தவழியுமில்லை. ‘கூலிக்காரஜாதி’ யென்ற பெயர் மாறவேண்டுமானால், நாம் இங்கிலீஷ் படிப்பை வெறுக்கலாகாது இங்கிலீஷ்படிப்பே ஜீவனந்தருவதாகவும் சிறப்பை யளிப்பதாகவும் எல்லாச் சௌகரியங்களும் இணைக்குவிப்பதாகவு மிருக்கிறது. அதை வெறுப்பவர்களை உலகம் வெறுக்கும், உண்மை!



## குடித்தனச் செட்டு

### வேகம்பூர்-ஸ்ரீ. குமாரசிவன்.

‘கம்மாளக் குடித்தனம் பண்ணாதே’ யென்ற பழமொழி எல்லோருக்குந் தெரிந்ததே. இவ்விதப் பழமொழி யொன்று பல காலமாக உலகத்தில் வழங்கப்பட்டு வருவதினால் கம்மாளக்குடித்தனம் செட்டுக்கெட்டது என்பது நிராக்ஷேபமாய் ஏற்பட்டிருக்கிறது. நாமெல்லாம் இதை நன்றாயறிந்திருக்கிறோம். என்றாலும், குடித்தனப் பாங்கிலுள்ள குறைகளைத் திருத்துவதற்கு நாம் யோசனை செய்வதில்லை. ஆதலால், நமது குடித்தனம் பழையபடியே இருந்து வருகிறது; நாம் ஏழைகளாகவே காலங்கழித்து வருகிறோம்.

நமது குறைகளைக் கண்ணாரக்கண்டு சீர்திருத்திவரும் இக்காலத்தில் குடித்தனச் செட்டுக்கான மாதிரியாக நடந்துகொள்ளப் பிரயத்தினப்படவேண்டியதும் அவசியமல்லவா? குடித்தனத்தில் செட்டு ஏற்பட்டாலொழிய நம்முடைய தரித்திரம் தொலையமாட்டாது. மாதமொன்றுக்கு ரூ. 10 சம்பளம் பெற்று வாழும் மற்றொரு ஜாதியானுடைய குடும்பத்தையும் அதே வருமானமுடைய நமது ஜாதிக் குடும்பத்தையும் ஒத்திட்டுப்பார்த்தால் வித்தியாசம் விளக்கமாய்த் தெரியும். மற்ற ஜாதி ஸ்திரீ புருஷர்கள் செட்டாய்க் குடித்தனஞ் செய்து செலவில் சிக்கனமாயிருந்து சீட்டுக்கட்டியோ சேர்த்துச் சேர்த்து வைத்தோ பொருளைக் கூட்டி நகைகள் வஸ்திரங்கள் பாத்திரங்கள் வீடுநிலம் முதலியவற்றை வாங்கிக்கொள்ளுகிறார்கள். அந்த சிக்கனம் நமது ஜாதிப்புருஷர்களுக்காவது பெண்களுக்காவது தெரிவதேயில்லை.

நமது குடித்தனக் கேடெல்லாம் நமது ஸ்திரீகளாலேயே பெரும்பாலும் உண்டாகின்றதென்று சொல்லலாம். மற்றஜாதிப் பெண்களுக்கும் நமது ஜாதிப் பெண்களுக்கும் முக்கியமானதொரு வித்தியாசமிருக்கிறது. அவர்கள், தமது கணவர் வீண்செலவு செய்யாமல் தடுத்து அவர்கள் கையிற் பணமிருக்க வொட்டாமல் தாமே கைப்பற்றிக்கொண்டு குடும்பச் செலவுகளைத் தாமாக நடத்திக்கொண்டு மிச்சம்பிடித்துவருகிறார்கள். நமது பெண்களோ, புருஷனுடைய செலவைப் பற்றிய விசாரமொன்றும் வைத்துக்கொள்வதில்லை. இதனோடுகூட, புருஷனுக்கு அதிகச்செலவும் தாமாக உண்டு பண்ணுகிறார்கள்: மாதவாரிச் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களா யில்லாதபடியால், நம்மவர்களுடைய வருமானம் இவ்வளவுதா னென்ற நிர்ணய மில்லை. இஃதில்லாது போகவே, பணம் கையிற் கிடைத்தபோது, அவ்வளவுஞ் செலவிட்டுவிடுகிறார்கள். பணமில்லாதபோது பட்டினியேனுங்கிடப்பார்கள். அன்றி, ஆக்ஷேபத்திற் கிடமான காரியங்கள் செய்யவும் சிற்சிலர் பின்வாங்குகிறதில்லை. இது பெரும்பிழையென்பதைத் தடுத்துப் பேசக்கூடியவர்கள் எங்கேனும் உண்டோ?

பணங்கிடைத்தபோது குடித்தனத்திற்கு வேண்டியவற்றையெல்லாம் அமர்த்திவிட்டு மறுவேலை பார்க்கவேண்டும். இப்படிச்செய்யும்படி குடும்பத்தலைவிகள் தமது கணவரை வற்புறுத்தவேண்டும். அப்படிச் செய்யாத தோஷத்தினாலேதான், கைப்பணத்திற்கு வீண்விரயமுண்டாவதும், காலாகாலத்தில் கஷ்டமுண்டாவதுமாகிய துர்ப்பாக்கிய நிலைமை சித்திக்கிறது. எவ்விதத்திலேனும் சம்பாதித்துக் கொள்ளலாமென்றும், எப்படியாகிலும் பொருள் கிடைக்குமென்றும் நம்பிக்கைகொண்டிருப்பதினால், நமதுஜாதிப் புருஷர்கள் கண்தெரியாமல் செலவுசெய்து வருகிறார்கள். அவசியமான செலவென்றும் அனாவசிய செலவென்றும பகுத்தறியுங்குணம் நம்மவர்களிடத்தில் சாதாரணமாய்க் காணக்கிடையாது. இத்தேசத்திலுள்ள எல்லா ஜாதியார்களிலும் வீண்செலவை அதிகமாய்ச் செய்கிறவர்கள் நம்மவர்களேயென்ற அபிப்பிராயம் பலருக்கிருந்துவருகிறது. இதற்கு சாக்ஷி, முதலிற் சொன்ன பழமொழியே யாகும்.

சம்பாதனையுஞ் செலவும் கௌரவமான வழிகளோடு கூடியதாயிருக்கவேண்டும். நியாயமான வழிகளில் கௌரவமாய்ச் சம்பாதிக்கப்பட்டா லொழிய பொருளுக்கு மதிப்பு கிடைக்காது. அகௌரவமான வழிகளில் ஆயிரம் ரூபாய் சம்பாதித்தவன், கௌரவ வழிகளில் கால்நூறு சம்பாதித்தவனவ்வளவு சிறப்பும் அடைவதில்லை. அப்படியே, செலவும் தர்மமான மார்க்கமுடையதா யிருக்கவேண்டும். கூத்திக்குக் கோடி பொன் தந்தவனைப்பார்க்கிலும், தர்மத்திற்கு தம்பிடி கொடுத்தவனே புண்ணியமும் புகழும் பெறுகின்றான். ஆதலால், நம்மவர்கள் மற்ற ஜாதியார்கள் சிலரினும் அதிக வருமான முடையவர்களாகவும் மிகுந்த செலவாளிகளாகவும் ஓரோரிடத்திற் காணப்பட்டாலும், மற்றவர்களத்தனை சீரும் சிறப்புங் கொண்டு வாழ்வதில்லை. ஆனபடியால், நமது சகோதரர்கள், அதிக மதிகமாய்ச் செலவு செய்யவேண்டுமென்று நோக்குங் கொள்வதைவிட, அதிக கௌரவமாய்ச் சம்பாதிக்க

வேண்டுமென்றும் செட்டாகவுந் தர்மமாகவுஞ் செலவிட வேண்டுமென்றும் நோக்கங்கொண்டு வாழ்வது சிலாக்யமாகும்.

இப்படிப் புருஷர்கள் நடந்துகொள்ளும்படி தூண்டிக் காவல்காத்து வரவேண்டியவர்கள் ஸ்திரீகளேயாவர். ஸ்திரீகளால் மற்ற ஜாதிக் குடும்பங்களில் உண்டாகும் நன்மையத்தனை நமது குடும்பங்களில் நடப்பதில்லை யென்பது உலகமறிந்த உண்மை. மற்ற ஜாதிப் பெண்கள் தமது குடும்பச் செலவுகளை எப்படியெல்லாங் குறைக்கலா மென்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து நடத்திவருகிறார்கள். நமது ஸ்திரீகளோ உள்ளசெலவுகளை உயர்த்தியுயர்த்தி இல்லாதசெலவுகளை உண்டாக்கி யுண்டாக்கி உபத்திரவஞ் செய்கிறவர்களாகவே யிருக்கிறார்கள். புருஷனுடைய வருமானத்தைப்பற்றிய ஞானம் இவர்களுக்கில்லை. எவ்வளவு செலவு சுமத்தினாலும் அவன் தாங்குவானென்று நம்பியிருக்கிறார்கள். செட்டு என்பது இன்னதென்று பரம்பரையாய் அறியாதவர்களானபடியால், ஒன்று செலவாகக்கூடியதற்கு ஒன்பது செலவிட்டுவிடுவார்கள். கேட்டாலோ, 'நமது கைக்கு அப்படித்தான் ஆகும்' என்று சொல்லுவார்கள். அப்படித்தான் ஏன் ஆகும்? மற்றப்படி ஆகக்கூடாதா? ஆகுமிடங்களிலெல்லால் அப்படித்தானா ஆகிறது?—என்று யோசிக்கமாட்டார்கள். புருஷர்களுக்கும் இந்த யோசனை யிருக்கக் காணோம்! இந்தஸ்திதியில் 'கம்மாளக் குடித்தனம்' என்னுஞ் சொல் தமிழ்நாட்டில் தலையெடுத்து விளங்கத் தடையேதிருக்கிறது?

இந்தச் சொல் மாறுவதற்கு இன்னு மெத்தனை வருஷங்கள் செல்லுமென்று நாம் சொல்லமுடியாது. என்றாலும், நாம் ஒவ்வொருவரும் நம்மாலானமட்டும் இந்தச் சொல்லை மாற்றுவதற்கு முயற்சிசெய்யவேண்டும். அப்படி முயற்சிசெய்வதினால், ஷை சொல் மறைந்துபோவது மட்டுமேயல்லாமல், நம்முடைய குடித்தனமுஞ் சீர்ப்படும், நம்முடைய பொருளும் மிச்சப்படும், நம்முடைய கௌரவமும் அந்தஸ்தும் அதிகமாகும், நமது தரித்திரம் நீங்கிச் செல்வமுண்டாகும், நமது சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கப் பொருளிருக்கும், எந்தக் கூலிக்காகிலும் இசைந்து வேலைசெய்யவேண்டிய ஏழ்மை தொலையும், நமக்குக் கிட்டக்கூடிய கூலி கிடைக்குமட்டும் பிகுவாயிருக்க அநுகூலஞ்செய்யும், நமது தொழில்களுக்கு மதிப்புண்டாகும், அததொழில்களை விருத்திசெய்வதற்கு மார்க்கந்தோன்றும். குடித்தனச்செட்டால் கொள்ளக்கிடைக்கலாம் நன்மைகளைக் கூறிமுடியாது; ஏட்டிலடங்க எழுதமுடியாது. குடித்தனச்செட்டில்லாமையே நமது குறைகளிலெல்லாம் பெரிது. அதினாலேதான் நமது நிலைமை மேம்படாமலிருக்கிறது. குடித்தனச்செட்டுண்டானாலொழிய நாம் மேம்படமாட்டோம். ஆதலால், சகோதரர்களே! செட்டுப்பிடியுங்கள். ஸ்திரீகளுக்குக் கற்பியுங்கள்.

## வியாச காசி

வேதவியாஸர் வேதங்களை யெல்லாம் வெளியிட்ட பிறகு காசியில் வாசஞ்செய்ய யோசனை கொண்டு 10,000 சீடர்களுடன் அங்குசென்றார். காசிக்ஷேத்திரம் சிவமணங்கமழ்வது; வேதவியாசருக்கோ விஷ்ணுவின்மீது விசேஷபற்றுண்டு. ஆதலினால், காசிவாசம் அவருக்கு நேசமாயிருக்கவில்லை. என்றாலும், அவரும் அவருடைய சிஷ்யர்களும் சிவனடியார்களால் சிரத்தையுடன் போஷிக்கப்பட்டு வந்தனர். ஒருசமயத்தில், மகாதேவர் அன்னபூரணியைக் கொண்டு, வேதவியாசருடைய சிஷ்யர்கள் வீடுதோறும் பிக்ஷைக்கு வரும்போது அன்னமிடவேண்டாமென்று ஆக்ஞாபனைசெய்தார். வீட்டுக்காரர்கள் அப்படியேநடந்தார்கள் வியாசரே வீடுவீடாய் வந்தார்; வழக்கம்போல் ஒருவரேனும் அமுதளிக்கவில்லை; அவருக்குப் பேராச்சரிய முண்டாயிற்று. இவ்விதம் மூன்று நாட்கள் நடந்தது. பசியதிகரித்தலுடன் அவருக்குக் கோபமும் அதிகரித்தது. அதின்மேல் சாபங்கொடுத்தார். தாம் மூன்று நாள் பட்டினி கிடந்தமையால், காசிப்பட்டணத்தில் மூன்றுதலைமுறைகளுக்கு தொடர்ச்சியாய் எந்தக் குடும்பமும் செல்வத்தில் நில்லாது, எந்தக் குடும்பமும் அடுத்தடுத்து மூன்றுதலைமுறைகளுக்குக் கல்வித்தேர்ச்சி பெறாது; அடுத்து மூன்றுதலைமுறைகளாக எந்தக்குடும்பத்தாரும் மோக்ஷத்திற்குச் செல்லமாட்டார்கள்—என்பதாக வேதவியார் சபித்தார்.

மகாதேவர் இதைக்கேட்டதும், பார்வதிக்கு ஓர் வீட்டுத்தலைவிபோல் வேஷமிட்டனுப்பினார். பார்வதி ஓர் வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டு, வியாசர் அங்குவந்ததும் அவருக்குவேண்டுமளவு அன்னங்கொடுத்தாள். தனக்குப்போசனந்தர ஒருபிராணி யிருப்பது கண்ட வியாசர், தமது சிஷ்யர்களுக்கும் போசனங் கேட்டார். அச்சமயத்தில், சிவபெருமான் அவ்வீட்டுக்காரர்போல் வேடமிட்டுக்கொண்டு தோன்றி "ஐயா! பெரியவரே! உமக்கு அன்னமிடுவதன்முன் நான் ஒன்று விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுகிறேன்" என்ன, வியாசர் உத்திரவின்மேல் "தர்மங்களிலெல்லாம் சிறந்தது எது?" என்று கேட்டார். 'பிழை பொறுத்தலும் பிறர் ஆக்கத்தைக்கண்டு பொறாமையுறாம லிருப்பதுமே தர்மங்களிற் சிறந்த தருமமாகும்"—என்று வேதவியாசர் விடையளித்தார்,



அப்போது சிவபெருமான் "உமக்கு மூன்றுநாட்கள் அன்ன மளிக்காததினால் இந்நகரத்தைச் சபித்த உம்மிடம் பிழை பொறுக்குந் தருமங் காணப்படவில்லையே! என் மெய்யடியார் ஆக்கங்கண்டு அசூயை கொண்டிருக்கும் உம்முடைய அதர்மத்தை யென்னென்பது!" என்றார்.

இவ்வார்த்தைகள் செவிப்பட்டதும், தம்மோடு பேசுகிறவர் மகாதேவரே யென்று வியாசர் அறிந்துகொண்டு, அவர்பாதங்களில் வீழ்ந்து "சுவாமி! நான் பதிதனென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். அடியேனை மன்னித்தருள்புரியவேண்டும்" என்று மிகவும் வேண்டிக்கொண்டார். விஸ்வேஸ்வரர் இவர் பிரார்த்தனைக் கிணங்கியருளினாராயினும், தம்மடியார்களைச் சபித்த தோஷத்தினால் வியாசரும் அவருடைய சிஷ்யர்களும் காசியிலிருக்கக்கூடாதென்று ஆக்ஞாபித்து, நதியின் அக்கரையில் அவர்களுக்கு ஓரிடங்காட்டினார். வியாசரும் அவரடியார்களும் அங்கு சென்று குடியேறி ஓர் ஆலயங்கட்டினார்கள். பிற்காலத்தில் அவ்விடத்தில் இராமநகரம் என்னும் பட்டணமும் கோட்டையு முண்டாயின. காசிமகாராஜா அங்குதான் வாசமாயிருக்கிறார். அவ்விடத்திற்குச் செல்பவர்களுக்கு வியாசரிருந்த இடமும் கோயிலுங் காட்டப்படுகின்றன. அவ்விடமே இன்னும் வியாசகாசி யென்று வழங்கப்பட்டுவருகிறது.

அப்பால், பார்வதிதேவியானவள் ஈஸ்வரனைவேண்டி பக்ஷமொன்றுக்கு இரண்டு நாள் காசிக்கு வருவதற்கு வியாசருக்கு அநுமதிவாங்கிக் கொடுத்தனள். அவ்விரு நாட்கள் அஷ்டமி சதுர்த்தசியென்னுந் தினங்களாம். இக்கதை வியாசருடைய காசிகாண்டத்திற் காணப்படுகிறது.

---

**தீக்குச்சிசாலை.**—திருவாங்கூர் சமஸ்தானத்தில் பாரெஸ்ட்டு கன்ஸர்வேடராக இருந்து பென்ஷன் பெற்ற ராவ் சாஹேப் C. ராமராவ், நெருப்புப் பெட்டித் தொழிலைப்பற்றிய நுட்ப விஷயங்களைத் தீர ஆராய்ந்து அறிந்துகொண்டு வருவதற்காக, ஜெர்மனிக்குப் போயிருந்தார். அவர் அதை நன்றாகக் கற்றுக்கொண்டு இப்பொழுது திரும்பி வந்துவிட்டபடியால், அவருடைய ஆலோசனையின்பேரில் கொல்லத்தில் நெருப்புப்பெட்டிகள் செய்யப்படும் சாலையொன்றுகட்ட ஆரம்பிக்கப்பட்டது.

## கைத்தொழில்

கைத்தொழில் என்பது கையாற் செய்யப்படுந் தொழில், கைக்குரியதொழில், கையினதுதொழில், கையின்கண் தொழில் என வேற்றுமை வழியில் நான்கு பொருளில் மயங்கிய தொகைநிலைத் தொடராக இருக்கின்றது. பல பொருள் குறிக்கும் ஒருபெயர்த் திரிசொல்லாகிய கை என்னும் சொல்லுக்குச் சிறுமை என்னும் பொருள் கொள்ளுமிடத்துச் சிறிதாகிய தொழில் என அவ்வழிக்கண் பண்புத் தொகைநிலைத் தொடராக இருக்கின்றது.

இனி, கையால் செய்யப்படும் தொழிலைப் பற்றிப் பேசுமிடத்துப் பிராமணர்கள் யாகத்தைச் செய்தலும், க்ஷத்திரியர் வில்லிற் பயின்று வேட்டைபோர் முதலிய இயற்றுதலும், வைசியர் வாணிபம் புரிதலும், சூத்திரர் பயிர்த்தொழிலாக்குதலும், இவர்கள் மனைவிகள் மடைப்புறத்துச் செய்யும் பலதொழில்களும், மக்கள் விளையாட்டயரும் பல தொழில்களும் கைத்தொழில்களிலேயே அடங்குகின்றன. இவ்வாறாகப் பலவும் கைத்தொழிலில் அடங்குகின்றமையால் கைத்தொழில் என்பது எதனை மாத்திரம் குறிக்கும் என்பதையே நாம் நன்கு ஆராய்ந்து தெளியவேண்டும்.

கைத்தொழில் என்பதை நமது முன்னோர்கள் நிகண்டு திவாகரம் முதலிய நூல்களில் எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல் என்ற இவையெனத் தொகைப் படுத்தி எழுதிவைத்தனர்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

(நன்னூல், உரிச் சொல்லியல், சூ-21)

என்ற விதிப்படி இவ்வைந்து தொழில் மட்டில் நில்லாது மாறி இருக்கின்றது. சேற்றில் உற்பத்தியாவது என்னும் பொருளைத் தருகிற பங்கஜம் என்னுஞ் சொல் ஆம்பல், அல்லி, நெய்தல், கொட்டி முதலிய சேற்றில் உற்பத்தியாகும் பொருளைக் குறியாமல் யோகரூடியாய் தாமரை என்னும் ஒரு பொருளையே குறிப்பது போலக், கைத்தொழில் என்பது பிராமணர்களது தொழிலாகிய ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றலாகிய அறுவகைத் தொழில்களையும், க்ஷத்திரியர்களது தொழில்களாகிய ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைபயிறல், பொருதல் ஆகிய தொழில்களையும், வைசியர்களது தொழில்களாகிய ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்காத்தல், உழுவித்தல் முதலாகிய தொழில்களையும் குறித்ததல்ல; சூத்திரர்களது தொழில்களாகிய குயிலுவத்தொழில், காருகத்தொழில்களிலேயே அடங்கியனவாகவும், கருவிகளும், புத்திகூர்மையும் ஆதாரமாகக்கொண்டு நவநவமாக வியப்பைத் தரத்தக்க செய் தொழிலை மாத்திரம் கைத்தொழில் என்றும், முன் சொன்ன ஏனையதொழில்கள் யாவும் கைத்தொழில் அல்ல என்றும் ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது.

இனி, நவநவமாக வியப்பைத்தருகிற கைத்தொழில் அதாவது காருகத்தொழில் எவையென ஆராய்ந்து அவை இவையெனத் தெளிவோமாக. காருகமென்னும் பதம் செய் யென்னும் பொருளைத் தருகிற க்ரு என்னும் தாதுவிலிருந்து ஆதிவிருத்தி சந்தியால் கார் எனத் திரிந்து கப்பிரத்தியயத்தையும் அஃறிணைப் பொருளைத்தருகிற மகாவீற்றையும் பெற்று காருகம் எனமுடிந்தது. கரசம்பந்தம் காருகமெனவுமாகும். காருகம் அல்லது கைத்தொழில் என்ற பதங்களில் நவநவமாக அதாவது புதுமை புதுமையாக வியப்பைத்தரத்தக்கது எனப் பொருள்தரவில்லை.

ஆயினும், இப்பாரதகண்டமாகிய இந்து தேசத்தில் கம்மியர், நெசவாளர், குலாலர் முதலிய தொழிலாளர்களிடத்துக் கல், உலோகம், செங்கல், மரம், சுதை, தந்தம், வண்ணம், கண்டசர்க்கரை, மெழுகு முதலிய கருவிகளால் செய்யுஞ் சிற்பங்களும், வண்ணம், பிசின், துகிலிகை முதலிய கருவிகளாற் செய்யும் வரைவும், அலகு, திரிவட்டம், பரிவட்டம், பாவுகருளை முதலிய கருவிகளாற் செய்யும் நெய்வும், கண், கண்டம், சக்கரம் முதலிய கருவிகளாற் செய்யும் வனைவும், ஊசி, கத்திரி, நூல் முதலியவைகளாற் செய்யும் தைத்தலும் ஆகிய தொழில்களில் கைத்தொழில்களை நாம் காண்கிறோம்.

பாரதகண்டமல்லாத இதரக் கண்டங்களில் சாதிவரம்பில்லாத பலரும் பழக்கத்தினாலும் புத்தி கூர்மையினாலும், முன் சொன்ன கைத்தொழில்களன்றியும், யந்திர முதலிய அநேகவிதமான கைத்தொழில்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவ்வகைத்தாகிய கைத்தொழில்களை நமது தேசத்தில் மஹாபலிபுரம், யாளைத்தீவு, மதுரை முதலான சிறந்த ஆலயங்களில் கருங்கல்லிற் செய்யும் சிற்ப நயத்தாலும், இரதமுதலியவை மரங்களிற்செய்யும் அருமையாலும், இரும்பு முதலியவைகளைச் செய்யுங் கருமாரத்தொழிலின் பெருமையாலும், பித்தளை, செம்பு, தரா, துத்தநாகம், ஈயம் முதலியவைகளாற் செய்யுங் கன்னாரத்தொழிலின் சிறப்பாலும், செம்பொன், வெண்பொன் என்ற பொன்வகைகளில் எத்தனையோ அருமைப்பாடுகளாகச் செய்யும் தட்டாரத்தொழிலின் வளத்தாலும், விதம்விதமாக நெய்யும் நெசவாளர்த் தொழிலின் தகைமையாலும், மட்பாத்திரம், பீங்கான், கண்ணாடி, வளையல் முதலான வகைகளைச் செய்யும் குலாலத்தொழிலின் நேர்மையாலும் காண்கின்றோம். இவ்வகைகளி லடங்கத்தக்க சித்திரவேலை, வர்ணவேலை, கொல்லற்றுவேலை, பாணவேலை, தையல்வேலை முதலிய வேலைகளில் புதுமை புதுமையாகக் கைத்தொழிலின் அருமையையும் பெருமையையும் நாம் கண்ணாரக்கண்டு மகிழ்ந்தே இருக்கின்றோம். இவ்வாறே இதர கண்டங்களிலும் அநேகமாய் கைத்தொழிலின் பெருமை ஒண்டர்ஸ் (Wonders) என்ற அத்தியாச்சரியப் பொருள்களில் அடக்கி இருக்கின்றார்கள். இத்தன்மையான தொழில்களை மாத்திரம் கைத்தொழிலென்று சொல்லலாம். தொழிற்கல்வி.

## மணிலாக்கொட்டை

சென்னைத் தொழில்டைரெக்டர் மிஸ்டர் டிரெஸ்லர் சென்னை மாகாணத் தொழில்கள் சிலவற்றின் நிலைமையைப்பற்றிய குறிப்புகள் எழுதி கவர்ன்மெண்டுக்கு அனுப்பி யிருக்கிறார். அக்குறிப்புகளில் அவர் மணிலாக்கொட்டையைப்பற்றி எழுதியிருக்கும் குறிப்பின் முக்கியாம்ஸங்கள் கீழே விளக்கப்படுகின்றன

சோழமண்டலக் கரையி லிருந்து சாதாரணமாய் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள மணிலாக்கொட்டை மேல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. கோடைமாசூல் ஜூலை மாதத்திலும், கார்மாசூல் டிசம்பரிலும் மார்க்கட்டுக்கு வருவது வழக்கம். இந்த மணிலாக்கொட்டைகளில் சிறிதுபாகம் இம்மாகாணத்திலேயே உணவுப்பொருளாய்ச்செலவாய்ப்போக, பாக்கி அவ்வளவும் விதையாகவே ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. அப்படி ஏற்றுமதிசெய்யப்படும் விதையில் பெரும்பாகம் பிரான்ஸிலுள்ள துறைமுகப் பட்டணமாகிய மார்ஸேயில்ஸுக்குப் போய்ச்சேருகிறது.

சென்ற ஆகஸ்ட்மாதக் கடைசியில் 30 லட்சம் ரூபாய் பெறுமான 2 லட்சம் மூட்டை விதைகள் ஏற்றுமதிக்காரர்கள் வசமிருந்தன. அவைகள் போனவருஷம் அறுவடையான சரக்கு. அதனில் பெரும்பான்மையான சரக்கு ஏற்கெனவே ஏற்றுமதியாய்விட்டது. இப்போது கோடைக் கொட்டைகள் மார்க்கட்டுக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இப்போது யுத்தகாலமாயிருப்பதால் அவைகளைக் கொள்ளும் வியாபாரிகள் இல்லை. அவைகள் விவசாயிகளின் கையை விட்டுப் போகாமலிருக்கின்றன.

டிசம்பர்மீ பிறந்துவிட்டால் இப்போது பயிராய்க் கொண்டிருக்கும் கார்ப்பயிர் அறுவடையாய் மார்க்கட்டுக்கு வந்துவிடும். ஏற்றுமதி யில்லாமல் இப்போது சரக்கு கிடையாய்க் கிடைப்பதால் அச்சரக்கின் நயம் குறைந்து கொண்டு வருகிறது. இன்னும் 3 அல்லது 4 மாத காலத்தில் அச்சரக்கு அழுக ஆரம்பித்துவிடும். அழுகாமல்காக்க அவைகளிலிருந்து எண்ணெயை இறக்கி விடுவதைத் தவிர வேறுவழியில்லை. எண்ணெய் ஒரு வருஷத்துக்கு மேலாகவே கெட்டுப் போகாமலிருக்கும். ஆகவே, இப்போது மணிலாக் கொட்டையிலிருந்து எண்ணெய் இறக்கும் யந்திரங்



கள் வாங்குவது உசிதமாகுமா வென்றபிரச்னை உண்டாகிறது.

ஆனால், இந்தியா இதுவரை மணிலாக் கொட்டை எண்ணெய் ஏற்றுமதி செய்ததில்லை. விதைகளை ஏற்றுமதி செய்யக் கோணிகள் போதும். எண்ணெயை ஏற்றுமதிசெய்யவோ ஒழுகாத தகரங்களோ, பீப்பாய்களோ, வேறு சாதனங்களோ வேண்டி யிருக்கும். ஒழுகாத பாத்திரங்களில் அடைத்து எண்ணெயை அனுப்புவதாயிருந்தாலும், அப்படி அனுப்பப்படும் எண்ணெயை வாங்குவோர், அன்னிய நாடுகளில் ஏற்படவேண்டும்.

மார்ஸேயில்ஸ்தான் எண்ணெய் வியாபாரத்துக்கு மத்திய ஸ்தலமாயிருந்து வந்திருக்கிறது. இப்படி மணிலாக்கொட்டையிலிருந்து எண்ணெய் இறக்குவதிலும் அதற்குக் கிராக்கியைத் தேடுவதிலும் சங்கடங்களிருப்பதால் எண்ணெய் இறக்கும் யந்திரங்களைக் கன விலை கொடுத்து வாங்குவது நஷ்டத்தை எங்கே யுண்டாக்குமோ வென்று யோசிக்க வேண்டிய பாகமாகும். ஆனால், இப்போதைய யுத்தம் இன்னும் 6-மாதத்திற்கு மேலாகவே இழுபறியாய் நடந்துகொண் டிருக்குமானால், மணிலாக் கொட்டையின் ஏற்றுமதியே அடியோடு நின்று 4 கோடி ரூபாய் பெறுமான அவ்விதைகள் அவ்வளவும் அழுகிப்போய் விடுமாகையால், அவ்விதைகளி லிருந்து எண்ணெ யிறக்குவதற்கு இரண்டு ஆண்டர்ஸன் பிரெஸ்கள் ரூபா 35,000 க்கு வாங்கப்படலாமென்று நான் சிபார்சு செய்கிறேன். யுத்தம் முடிந்து மணிலாக்கொட்டை எற்றுமதி மறுபடியும் ஆரம்பமாகிவிடுமானால், யந்திரங்களை விற்றுவிடலாம்.

---

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும்
பிறர்க்குறுதிதனைச் சொன்னாலும்
அங்கனுலகினிற் சிறியோர் தாமடங்கி
நடந்துகதி யடைய மாட்டார்
திங்களணி சடையாரே தண்டலையாரே
சொன்னேன் சிறிதுகாலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய்
நல்லசுரைக் காயாகாதே.

—தண்டலையார் சதகம்.

## பால்—நெய்

சென்னை விவசாய இலாக்காவில் டிப்டி டைரக்டராயிருக்கும் மிஸ்டர் H. C. ஸாம்ப்ஸன் சென்னை ராஜதானியிலுள்ள கால்நடைகளின் நிலைமையைக்குறித்து தாம்தயாரித்த ரிபோர்ட்டில், மேலேகண்ட விஷயத்தைப்பற்றி பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"தற்காலம் நடந்துவரும் பால் ஸப்ளையைக் கவனித்துப் பார்க்கும்பொழுது மிகவும் அதிருப்தியாயிருக்கிறது. பால்காரர்கள் நம்வீடுகளுக்குப் பசுக்களைக் கொண்டுவந்து, அவர்கள் பால்கறந்து கொடுக்கும்பொழுது, நாம் அதைச் சரிவர மேற்பார்வை பார்த்து வந்தாலொழிய, நமக்குச் சுத்தமான பால் கிடைக்க வழியில்லை. சில குடும்பங்களில் பசுமாடுகளைத் தாங்களே வளர்த்தோ, அல்லது அருகிலுள்ள கிராமத்திலிருக்கும் குடியானவனிட மிருந்து பால் பசுவை வாடகைக்கு வாங்கியோ வைத்திருப்பதால், அவர்களுக்கு சுத்தமான பால் கிடைக்கிறது. அவ்வாறு செய்யும்பொழுது, வீட்டிலேயே கிடைக்கக் கூடிய தவிடு, கஞ்சி, கழுநீர், வீட்டில் மீதியான உணவுகள் முதலியவைகளை மாடுகளுக்குப் போட்டு வருவதால் மாட்டைக் காப்பாற்றும் செலவு அதிகமாவதில்லை.

பால் கொடுக்கும் மாடுகளை விருத்திசெய்தாலொழிய நமக்குச் சரியான பால் கிடைக்காது. சிற்சில பட்டணங்களில் பாற்சாலைகள் இருக்கின்றன. ஆயினும், அச்சாலைகளிலெல்லாம் ஐரோப்பியர்களுக்கென்று வெண்ணெய்தான் விற்கப்படுகிறது. மேலும், பாலிலிருந்து ஆடையைப் பிரித்தெடுக்கும் யந்திரம் (Cream Separator) ஒன்றினால் பாலிலிருந்து ஆடையைப் பிரித்தெடுத்த பிறகு, அப்பாலை சுமாரான விலைக்கு விற்று வருகிறார்கள். அல்லாமலும், பசுவின் பாலைவிட எருமைப்பாலில் அதிக ஆடையும், வெண்ணெயும் கிடைப்பதால் அச்சாலைகளில் எருமைப்பாலே விசேஷமாய்க் கையாளப்படுகிறது. இக்காரணத்தினாலும், பசுவைவிட எருமையின் தீனிச்செலவு கம்மியா யிருப்பதாலும், கிராமங்களில் எருமையையே அதிகமாகவளர்த்து வருகிறார்கள். போக்கு வரவுக்குரிய சாதனங்கள் பல ஏற்பட்டுவிட்டதால் சிலகாலமாக நெய்வியாபாரம் முற்றிலும் மாறி விட்டது. முற்காலங்களில் பரிசுத்தமான நெய் கிடைத்து வந்தது; இப்பொழுதோ அப்படி யில்லை.

## கலப்படமான நெய்.

நெய் வியாபாரிகள் இந்தியா பர்மா முதலியவைகளிலுள்ள மூலை முடுக்கான சகல இடங்களிலிருந்தும்நெய் தருவிக்க ஏற்பாடு செய்துவருகிறார்கள். ஆதலினால், நெய் ஒருவர் கையிலிருந்து மற்றொருவர்கைக்கு மாறும் பொழுது கலப்படமாய் விடுகிறது. பல்லாரி, அனந்தப்பூர் முதலியஜில்லாக்களில் குசும்பா எண்ணெயை நெய்யுடன் கலந்து விடுகிறார்கள். 4 டின் நெய் சேர்ந்ததும் அதில் குஸும்பா எண்ணெய், மாட்டுக் கொழுப்பு முதலியவைகளைக் கலந்து சில்லரை வியாபாரிகள் 6 டின் ஆகச் செய்துவிடுவது வழக்கமாம். சில்லரை வியாபாரியினிட மிருந்து பெரிய வியாபாரிகளிடம் அந்த நெய்டின்கள் சேரும்பொழுது அவர்களும் 4 டின் நெய்யை 6டின்னாகச் செய்துவிடுகிறார்கள். இம் மாதிரியே ஒரு வியாபாரியிட மிருந்து மற்றொரு வியாபாரியினிடம் நெய் டின்கள் சேரும் பொழுதெல்லாம் அவைகள் கலப்படமாய் விடுகின்றன. நெய் கலப்படமா யிருப்பதுடன் அதிக விலைக்கும் விற்கப்படுகிறதென எங்கு பார்த்தாலும் புகார் கிளம்பியிருக்கிறது. சென்னை ராஜதானி முழுவதிலும், இறந்துபோன பிராணிகளின் கொழுப்பு நெய்யுடன் சேர்க்கப் படுகிறது. தோல்களைப் பதனிடுவதற்கும், மெழுகு வர்த்தி, சோப்பு முதலியவைகள் செய்வதற்கும் காட்டுக் கொழுப்பு உபயோகிக்கப்பட்டபோதிலும், அக்கொழுப்பு நெய்யுடன் கலக்கப் படுவதற்கும் பல இடங்களி லிருந்து சிற் சில சமயங்களில் ரயில் மார்க்கமாய் அனுப்பப் படுகிற தென்று தாம்விசாரித்ததில் தெரிய வருகிறதென தென்னிந்தியா இருப்புப் பாதையின் மானேஜர்சொல்லுகிறார். பாலுக்குக் கிராக்கி அதிகமாக ஆக நெய்யைக் கலப்படஞ்செய்தல் அதிகமாகிக்கொண்டே வருகிறது. சிற்சில இடங்களில் நல்ல நெய் கிடைக்கிறதாயினும் நல்ல நெய் கெட்ட நெய் இரண்டும் ஒரே விலைக்கு விற்கப்படுவதாலும், தற்கால வியாபார நிலைமையினாலும், வியாபாரிகளிடம் நல்ல நெய் வந்துசேர மார்க்கமில்லை. தற்காலம் நெய்க்கு ஏற்பட்டிருக்கும் அதிக கிராக்கியினால் நெய்யைக்கலப்படஞ் செய்யவேண்டியது அவசியமெனத் தோன்றும். ஆகவே, நெய்யோடு அசுத்தமான மிருகங்களின்கொழுப்பைச் சேர்ப்பதை விட, வித்துகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயைக் கலப்பது நலமாயிருக்கும்.

## கூட்டுறவுச் சங்கங்கள்.

நெய் ஸப்ளை விஷயமாய்க் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படவேண்டியது அவசியம். ஆகவே நெய் அதிகமாகக் கிடைக்கக்கூடிய கிராமவாசிகள் ஒன்றுசேர்ந்து, பட்டணங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு நெய்யை அனுப்புவார்களானால் நெய்க்கு நல்ல விலை கிடைப்பதுடன், விலை அதிகமாயிருந்தாலும் சுத்தமான நெய் வேண்டுமென விரும்புகிறவர்களுக்கு நல்ல நெய் கொடுக்கமுடியும். கிராமங்களிலுள்ள கறவைமாடுகளெல்லாம் காலையிலும் மாலையிலும் ஏககாலத்தில் கறக்கப்படுகின்றன. அந்தப்பால் முழுவதையும் சேகரித்து, ஆடையைப் பிரித்தெடுக்கும் யந்திரத்தினால் அப்பாலிலிருந்து ஆடையைப் பிரித்தெடுத்து, அவ்வாறு பிரிக்கப்பட்ட பாலை, மோர் தயிர் செய்வதற்கு உபயோகப் படுத்தலாம்.

## பால் ஸப்ளையை அதிகப்படுத்தல்

சென்னையிலுள்ள ஒரு பால்காரன் தன்னிடமிருந்த ஒரு நெல்லூர் பசு இனி பிரயோசனப்படாதென்று அதை விற்றுவிட்டான். சைதாப்பேட்டையிலுள்ள விவசாய காலேஜில் முன்பு ப்ரின்ஸிபலா யிருந்த மிஸ்டர் ராபர்ட்ஸன் அதை வாங்கி தம்முடைய விவசாயப் பண்ணையில்வைத்து சரிவர தீனிபோட்டு அதை வளர்த்து வந்ததில், அப்பண்ணையிலிருந்த மற்ற பசுக்களைவிட இப்பசு அதிகப்பால் கறந்ததென்று சொல்லியிருக்கிறார். ஆதலின், இனி கறப்பதற்கு லாயக்கல்லவென்று கசாப்புக்கடைக்காரர்களுக்கு விற்கப்படும் மாடுகளை வாங்கி, அவைகளை நன்றாய்ப் போஷித்து வந்தால் கறவைமாடுகளின் தொகை குறைந்துகொண்டு வருவது நின்றுபோய், அவை விருத்தியாகிக்கொண்டேவரும். சென்னையிலுள்ள பால்காரர்கள் தங்களிடமிருக்கும் பசுக்கள் ஒரு ஈத்து கறந்ததும், அவைகளைக் கசாப்புக் கடைக்காரர்களுக்கு விற்றுவிடுவதால், பல பசுக்கள் அழிந்துபோய்விடுகின்றன. ஆதலினால், அத்தகைய மாடுகளை சென்னைக் கார்பொரேஷன் வாங்கி, தங்களுடைய வடிகால் பண்ணையில்விட்டு வளர்த்து வருவது நல்லது. இல்லாதுபோனால், தாங்களே பாற்சாலைத் தொழில் ஸ்தாபித்து, பால் ஸப்ளை செய்து, அப்பசுக்களிலிருந்து உற்பத்தியாகும் காளை மாடுகளைப் பட்டண வேலைகளுக்கு வைத்துக்கொள்வதும் நலம். கார்பொரேஷன் இம்மாதிரிசெய்தால் பால்காரர்களின் வியாபாரத்திற்கு பாதகம் ஏற்படலாம். ஆயினும், தற்காலத்தில் விற்கப்பட்டுவரும் கலப்படமான பாலை உபயோகிப்பதால் நகரவாசிகளின் சுகாதாரம் கம்மிப் படுவதை அந்த கார்பொரேஷன் அதிகம் கவனிக்க வேண்டும். சென்னைக் கார்பொரேஷன் பாற்சாலைத் தொழிலை ஸ்தாபித்து அதில் இலாபம் பெறுகிறார்களெனத் தோன்றியவுடனே, மற்ற முனிசிபாலிடிகளும் அம்மாதிரியேசெய்யத் தொடங்குவார்கள். ஆகவே கறவை மாடுகளின்வர்க்கம் விருத்தியடைய மார்க்கமுண்டு.



## அஸ்வினிதேவர்

இவர்களுடைய பிறப்பின் வரலாறு பின்வருமாறு: துவஷ்டாவின் புத்திரியும் சூரியன்மனைவியுமாகிய சஞ்சிகையென்னுஞ் சஞ்சாதேவி, சூரியனுடைய தேகவெப்பத்தைச் சகிக்கலாற்றாது பயந்து, தன்னிழலைத் தன்வடிவமாகச்செய்து தன் கிருகத்தில் விட்டு, உத்தரகுருவில் தவஞ்செய்திருந்தனள். இதையறிந்த சூரியபகவான் அங்குசெல்ல, சஞ்ஞாதேவி பெண்குதிரை ரூப மெடுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தனள். அது கண்ட சூரியன் ஆண்குதிரை வடிவாய்ப் பின்தொடரும்போது இரு நாசிவழியே வீரியம் ஒழுகியதால் அஸ்வினி தேவர் தோன்றினராம். இதனை,

சஞ்ஞையாம் பகற்கடவுள் மனைவியவன்
கனலுடலந் தழுவலாற்றா
தஞ்சுவாள் தன்னிழலைத் தன்னுருவா
நிறுவிவன மடைந்துநோற்க
விஞ்ஞையா லறிந்திரவி பின்தொடர
மாப்பரியா மின்னைத்தானும்
செஞ்செவே வயப்பரியாய் மையல்பொரு
திந்தியத்தைச் சிந்தினனே.—

என்னும் பாட்டினால் அறிகிறோம்.

இவ்விதந்தோன்றிய அஸ்வினிதேவர் அழகில் மிக்கவர்கள்; எவ்விடத்திலுந் தங்காமல் உலக முழுவதும் சஞ்சரித்து அற்புதமாய் வைத்தியஞ்செய்யும் தேவமருத்துவர். 'இவர் ஒருகாலத்தில் சுகன்னிகையென்பவளைக் கண்டு 'நீ பேரழகியாயிருந்தும் குரூபியும் தீராரோகியுமாகிய சியவனனை என் விவாகஞ் செய்துகொண்டாய்?' என்று கேட்க, அவள் நேரே பதில் சொல்லாமல் 'ஐயா! உமது குற்றத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாத தாங்கள் பிறர்குற்றத்தைக் கவனித்தல் சிறப்பல்ல' வென்று பதில் கூறினாள். இது கேட்ட அஸ்வினிதேவர் 'எங்குற்றம் யாது?' என்று வினவினர். சுகன்னிகை யானவள் 'என் கணவன் நோயை முன்னே தீர்த்துவிடுவீர்களானால், பின்னே உங்கள் கேள்விக்குப் பதில் தருவேன்' என்றனள். உடனே அவர்கள் சியவனன் வியாதியைத்தீர்க்க, சுகன்னிகை அவர்களை நோக்கி 'நீங்கள் தேவமருத்துவர்களாயிருந்தும், யாகங்களில் உங்களுக்கு அவிர்ப்பாகங் கொடுக்கப்படுவதில்லையல்லவா?' என்று கேட்டனள். அஸ்வினிதேவர் நாணமடைந்தனர்.

இவர்களால் நோய் தீரப்பெற்ற சியவனன் மிகுந்த அன்போடும் தன் மாமனாகிய சையாதியைக் கொண்டு ஒரு யாகஞ் செய்வித்து அஸ்வினி தேவர்களுக்கு அவி தந்தனன். இதனால் இந்திரனுக்குக் கோபமுண்டாகி அவன் தனது வச்சிராயுதத்தை யெடுக்க நினைக்க, அஸ்வினிதேவரால் அவன் கையில் சோர்வாத ரோகமுண்டாக, இந்திரன் பயந்து அவர்களை வணங்கி வியாதி நீங்கி அஸ்வினி தேவர்க்கு யாகாதிகளில் அவி கொடுக்க இசைந்தான்.

## ஜெர்மன் தேசாபிமானக் கட்டளைகள்.

ஜெர்மன்சக்கரவர்த்தி கீழ்க்கண்ட கட்டளைகள் அடங்கிய துண்டுப் பத்திரிகைகளைக் கோடிக்கணக்காக அச்சிட்டு ஜெர்மனி தேசமெங்கும் பரப்புமாறு செய்திருக்கின்றாரென்று பத்திரிகைகளால் தெரிகின்றது:—

1. நீ செலவுசெய்ய நேரிடும் போதெல்லாம் உனது தாய் நாட்டாரின் நன்மை உனது மனதிலிருக்கட்டும்.

2. நீ ஒரு விதேச (அன்னிய தேச) வஸ்துவை வாங்கும்பொழுது உனது தேசம் வறுமையடைகின்றதென்பதை நீ யென்றும் மறவாதே.

3. உனது பொருள் ஜெர்மனியரைத் தவிர வேறு அயலாருக்குச் செல்லாதவாறு கவனித்துக்கொள்.

4. அந்நிய நாட்டு யந்திரங்களை உபயோகித்து ஜெர்மன் தொழிற் சாலைகளைப் புறக்கணியாதே.

5. உனது சாப்பாட்டில் விதேச வஸ்துக்களை என்றும் உபயோகியாதே.

6. ஜெர்மன் கடுதாசியில் ஜெர்மன் பேனாவால் எழுது; ஜெர்மன் மையொற்றுங் காகிதத்தை (Blotting Paper) உபயோகப்படுத்து.

7. ஜெர்மன் மா, ஜெர்மன் பழங்கள், ஜெர்மன் பீர், இவையே உனது சரீரத்திற்கு உண்மையான ஜெர்மன் சக்தியைக்கொடுக்கும்.

8. ஜெர்மனியில் உற்பத்தியாகும் காபி உனக்கு விருப்பமில்லாவிடின், ஜெர்மன் குடியேற்ற நாடுகளிலிருந்து வரும் காபியை உபயோகப்படுத்து.

9. உனது உடுப்புக்கு ஜெர்மன் துணியையே உபயோகப்படுத்து; உனது தலையில் ஜெர்மன் தொப்பியையே வை.

10. அந்நிய நாட்டாரின் கேலியைக் கருதி இந்த உத்தம நீதிகளினின்றும் நீ வழுவிவிடாதே. பிறர் என்னசொன்னாலும், ஜெர்மனியில் உற்பத்தியான வஸ்துக்களே ஜெர்மனியைத் தாய்நாடாகக் கொண்ட ஒருவனுக்குத் தகுதி யானவையென்பதில் உறுதியாகவிரு.

## நமது வாசகர்கள்

### சிறுதெய்வப் பெயர்கள்

இவற்றின் பெயர்களை மக்கள் கொண்டு வாழுதல் ஏளனத்திற் கிடமாயிருக்கிறதென்று சொல்வதில் பிசகொன்றுமில்லை. நம்மவர்களுடைய கௌரவத்தைக் குலைக்கும் காரணங்களில் ஒன்றாக நம்மவர்களுடைய பெயர்களைச் சொல்லலாம். சிறுதெய்வப் பெயர்களினும் ஆபாசமான பெயர்களையும் சிலரிட்டுக் கொள்ளுகிறார்கள். இது மற்றதைவிட அதிக கேவலத்தை உண்டாக்குவதாயிருக்கிறது. ஆதலால், பிள்ளைகளைப் பெறுகின்றவர்கள் அவர்களுக்கு நல்ல பெயர்களையிட்டு ஜாதிக் கௌரவத்தைக் காப்பாற்றுவார்களாக. பத்துப்பேர்களை ஒன்றாய் நிற்கவைத்து அவர்கள் பெயர்களைக் கேட்டால் பத்தும் முத்தா யிருந்தால் சந்தோஷமாயிருக்கும்; பத்துஞ் சொத்தையா யிருந்தால் பரிகாசமுண்டாகு மல்லவா?

மா. சிவக்கொழுந்து.

### யார் செய்வார்கள் ?

உபநயன நிர்ப்பந்தத்தைக் குறித்தும், அந்த நிர்ப்பந்தத்தினால் நமது ஜாதிக்கு ஏற்படக்கூடிய நானாவித நன்மைகளைக்குறித்தும், சென்ற மாதப்பத்திரிகையில் எழுதப்பட்டிருந்த விஷயத்தை வாசித்தோர் ஒவ்வொருவரும் சந்தோஷத்தை யடைந்திருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. அந்த நிர்ப்பந்தம் ஏற்பட்டாலல்லவா நன்மைகள் சித்திக்கப் போகின்றன ! அவ்வளவு நிர்ப்பந்தம் யார் செய்யப்போகிறார்கள் ? ஜாதி நாட்டாண்மைக்காரர்களும் காரியஸ்தர்கள் முதலானவர்களும் நிர்ப்பந்தஞ் செய்யவேண்டுமென்று விரும்பப்படுகிறது சரியே! ஆனால், நாட்டாண்மைக்காரர்களுடைய வார்த்தைகளை இக்காலத்தில் யார் கேட்கிறார்கள் ? அவரவர்கள் தங்களுக்குத் தாமே நாட்டாண்மை செய்துகொள்ளப்பார்க்கிறார்கள். நாட்டாண்மைக்காரர் வார்த்தைகளை மீறி நடப்பது சிலாக்ய மென்றுஞ் சிலர் நினைக்கிறார்கள். நமக்குள் இப்போது கட்டுப்பாடு குலைந்து போய் விட்டது. ஒவ்வொருவரும் தமக்குத் தோன்றியபடி நடக்கத் தலைப்பட்டிருக்கு மிப்போது நாட்டாண்மைகளின் தாக்கீது செல்லாது. ஜாதியார்களுக்கெல்லாம் இவ்விஷயத்தில் சிரத்தையுண்டாகவேண்டும். இதற்காக கான்பரான்ஸ் கூட்டித் தீர்மான மொன்றுசெய்து ஊரூரா யனுப்பவேண்டும். அப்போது கொஞ்சம் கவனிக்கப்படலாமென்று தோன்றுகிறது.

நாட்டாண்மை யுடையோன்.

### அத்தியயன பாடசாலைகள்

அத்தியயனமானது சாதாரணமாய்க் கோவில்களிலும் மடங்கள் முதலிய வைதிகப்பொது ஸ்தானங்களிலும் அதற்கு யோக்கியமானவர்களால் செய்யப்பட்டு வருதல் முறை. நமது ஜாதியார்க்கென்று கோயில்களும் மடங்களுமிருக்கின்றன. அங்கு அத்தியயனஞ் செய்யப்படுதல் அவஸ்யம் அத்தியயனத்திற்குரிய இடங்களும் அவையேயாகும். அத்தியயனஞ் செய்யுஞ் சந்தர்ப்பம் வேறிடங்களிற் கிடைப்பதில்லை. கோவில்களிலும் அத்தியயனஞ் செல்லாதென்பதற்குத் திருஷ்டாந்தங்களில்லாமற் போகவில்லை. அன்றியும், நமது சிறுவர்கள் செய்யக்கூடிய அத்தியயனம் பெருங்கலகத்திற்கு ஆஸ்பதமாகு மென்பதற்கு அத்தியாபகரொருவருடைய ஆதாரமுமிருக்கிறது. “ வேதாத்தியயன பாடசாலைகள் ஸ்தாபித்தால் அவற்றில் பயிலும் வித்தியார்த்திகளுக்கு அத்தியயனஞ்செய்ய எப்போது சமயம் வாய்க்கும் ? ” என்று அவர் கேட்கிறார். வாய்த்தாலும், வருவது கலகமாயின் அதை யேன் விலைகொடுத்து வாங்கவேண்டும் ?

கோ. மாசிலாமணி.

### விஸ்வகர்ம கான்பரன்ஸ்.

நமது ஜாதியார் தென்னாட்டில் ஒரு மகா ஜனக்கூட்டம் நடத்தவேண்டியதின் அவசியம் நாளுக்குநாள் அதிகமாக நம்மவர்களால் போதிக்கப்பட்டு வருவது, நமது ஜாதியின் முன்னேற்றத்திற்கு நல்ல சகுனமேயாகும். நமது பத்திரிகையிலும், இது ஆரம்பமாவதற்கு முன் நமது சபைப் பிரசுரங்களிலும், ஆந்திர விஸ்வப்பிராம்மண கான்பரன்ஸைப்பற்றி எழுதப்பட்ட காலமுதலாக இந்த உத்தேசம் தென்னாட்டில் உண்டாயிருக்கிறது. குடந்தையில் கான்பரன்ஸ் முயற்சிகள் நடைபெறுவதா யறிகிறோம். தூத்துக்குடியில் கான்பரன்ஸ் நடத்தப்பட வேண்டுமென்று ஸ்ரீ. தூ. சு. கதிரேசன் ஆச்சாரியா ரவர்கள் எழுதுகிறார்கள். தூத்துக்குடியும் குடந்தையேபோல் கான்பரன்ஸ் நடத்துவதற்கு வசதியான இடமாகும். அன்றி, குடந்தையிலும் தூத்துக்குடியிலுந்தான் கான்பரன்ஸ் நடத்தப்படவேண்டுமென்ற பிரமேய மொன்றுமில்லை. எந்த விடத்தில் நடத்தப்பட்டாலும் நல்லதே ; எத்தனை இடங்களில் நடந்தாலும் சிறப்பே யாகும். பெரும்பட்டணங்களில் நடப்பதாயின் சுலபமாய் நிறைவேறும். இடசௌகரிய முதலியவை நன்றாய் வாய்க்கும். வேண்டிய பொருள் சீக்கிரம் வசூலாகும். அப்படிப்பட்ட பட்டணங்களாக, காஞ்சீபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம் முதலியவற்றைச் சொல்லலாம். இவ்வூர் வாசிகளும் இவர்களைச் சார்ந்த ஜில்லா வாசிகளும் தாங்கள் கான்பரன்ஸ்கூட்டு முயற்சியில் யோசனைபுரிந்து வேண்டிய நடவடிக்கைகள் செய்வார்களென்று வேண்டுகிறேன்.

சேலத்தான்.



### மொட்டையடிக்க வேண்டுமோ ?

விதவைகளுடைய தலைகளை முண்டனஞ் செய்வது பிராம்மண வழக்கமென்றும், அங்ஙனம் நாம் செய்யாமை நாம் பிராம்மண ரல்லவென்பதைக் காட்டுங் குறிகளில் ஒன்றென்றும், சென்ஸஸ் அதிகாரிகளாலும் அவர்களைப் போன்றவர்களாலும் வாதிக்கப்படுகிறது. இந்த நியாயம் எம்மட்டும் பொருந்துமென்று பார்ப்போமானால், இந்தவாதம் செல்லாது என்பது நன்றாய்த் தெரியவரும். முண்டனஞ் செய்தல் பூர்வீகமாய்க் கொள்ளப்பட்டுவந்த ஆசாரமாயிருக்குமென்று சொல்வதற்கு இடங்காணோம். சாஸ்திரங்களும் இதற்கு இடந்தருவதாகத் தெரியவில்லை. இந்தப் பழக்கம் தென்னாட்டிலேதான் ஆசரிக்கப்பட்டுவருகிறது. வடநாட்டுப் பிராம்மணர் தம்து விதவைகளுடைய தலைகளை மொட்டையடிப்பதாகத் தோன்றவில்லை. தென்னாட்டிலும், பிராம்மணரில் ஒரு பகுதியார் இவ்விதஞ் செய்கிறார்களே யல்லாமல் எல்லோருஞ் செய்யவில்லை. வைணவப்பிராம்மண விதவைகள் தலைமயிரோடுதான் காணப்படுகிறார்கள். இக்காரணங்கொண்டு இவர்கள் பிராம்மணராக மாட்டார்களென்று சொல்லிவிடலாமா? கூடாதென்றால், நம்மைமட்டும் எப்படிச் சொல்லலாம்? இதுவுங் கூடாது. ஆனபடியால், ஷை வாதம் நிலைநிற்க மாட்டாதென்பது நிச்சயம். ஆந்திர விஸ்வப்பிராம்மணர்களும் தென்னாட்டாரைப் போலவேதான் இவ்விஷயத்தில் நடந்துவருவதாய்த் தெரிகிறது. ஆயினும், சமீபகாலத்தில் சிற்சிலர் மொட்டையடிக்கும் அநுஷ்டானத்தைத் தங்கள் குடும்பங்களில் நூதனமாய் நுழைத்து வருவதாய்ச் சொல்லிக்கொள்ளப்படுகிறது. இதற்கு யாதொரு அவசியமில்லை யென்றே நினைக்கிறேன்.

திரு. சிதம்பராச்சாரி.

### பௌரோகிதம்

நமது சென்னை ராஜதானியின்கண் வசிக்கும் 274693 விஸ்வப்பிராமணர்களில் 500-ல் ஒருபங்காவது பௌரோகிதர்கள் இருக்கின்றனர் என்று யோசிப்பதற்கு இடமில்லை. சிலவிடங்களில் நமது பௌரோகிதர்கள் இருக்கின்றனர், சிலவிடத்தில் இல்லை. இருக்கின்ற ஊர்களிலும் சிலர் ஆருஷேயரிடமே சுபாசுப காரியங்களை நடத்திக்கொள்ளுகிறார்கள். இதற்குக் காரணம், நம்மவர்களிலும் அவர்கள் பலவிதங்களிலுஞ் சிறந்தவர்களெனக் கொள்ளும் எண்ணமா யிருக்கலாமென்று தோன்றுகிறது. நமது பௌரோகிதர்கள் பலரிடத்தில் பௌரோகிதலக்ஷணங்கள் பல காணப்படுவதில்லையென்பது நிச்சயமே. முதலாவது பெரும்பாலார்க்கு வேதசாஸ்திரஞானம் மிகக்குறைவல்லவா ? ஆதலால், உள்ளபௌரோகிதர்களை முதலில் நாம்சீர்திருத்த வேண்டியவர்களா யிருக்கிறோம். பிறகு புதுபௌரோகிதர்களை உண்டுபண்ணவேண்டும். அவர்கள் ஆருஷேய பௌரோகிதர்களும் கொண்டாடும்படியான வித்தியாவந்தர்களாகவும் ஆசாரபரர்களாகவு மிருக்கச் செய்யவேண்டும். இப்படித் தயாரிக்கப்படுவதற்குத் தக்கவர்கள் கிடைப்பது எவ்வளவு கஷ்டமென்பதை யோசியுங்கள். கஷ்டமாயிருந்தாலும், பௌரோகிதர்கள் எந்த ஜில்லாக்களில் எந்தெந்த தாலுக்காக்களில் குறைவாயிருக்கிறார்க ளென்பதை ஆராய்ந்தறிந்து, அந்தந்த இடங்களிலுள்ள சத்சம்பிரதாயக் குடும்பத்திலிருந்து புத்திசாலிப் பிள்ளைகளைப் பொறுக்கி யெடுத்து, அவர்கள் பௌரோகித விருத்தியையே கைக்கொள்வதாக அவர்களிடத்திலும் அவர்களுடைய பெற்றோர்களிடத்திலும் வாக்குத்தத்தம் பெற்றுக்கொண்டு, அன்னோருக்கு ஒருவருஷமோ இரண்டுவருஷமோ வேண்டிய சாஸ்திரங்களையும் மந்திரங்களையுங் கற்பித்துக் கொடுத்து, அவர்களுக்குப் போதியதேர்ச்சி வந்தபிற்பாடு, பௌரோகிதக்குறைவு ஏற்பட்டிருக்கும் பிராந்தியங்களில் அவர்களைக் குடியேற்றவேண்டும். இதுதான் இப்போது செய்யப்படவேண்டிய வேலை. இப்படிச் செய்தால்தான் இந்தக் குறை தீரும். குறைதீரவேண்டுமானால் செய்யக்கடவதிது, இதையன்றி மற்றொன்றுமில்லை. பௌரோகிதர்களில்லாமல் ஊரூராகப் பரிதவித்துக்கொண்டிருக்கும்போது, அந்தக் குறையை நிவர்த்திசெய்வதற்கு ஏற்பாடு செய்யாமலும் அதில் பொருள்செலவிடாமலும், பௌரோகிதர்கள் மலிந்து கிடக்குமிடங்களி லுள்ளவர்களுக்கும் பௌரோகித ஜீவனங்கொள்ளாப்பாமரர்க்கும், பௌரோகிதலக்ஷணங் கைவராதவிதமாய்ப் பாடசாலைப்போதனை தருவதினாலும் அதில் பொருள்விரயஞ் செய்வதினாலும் யாது பிரயோசனம் உண்டாகப்போகிறதோ தெரியவில்லை. இப்படி பலவருஷங்கள் கழித்தும் பெரும்பொருள் விரயஞ்செய்தும் யாதொரு பிரயோசனமும் ஜாதிக்குச் செய்யமாட்டாதவர்கள் இன்னுமின்னுங் காலவிரயஞ்

செய்வதிலும் பொருள் விரயஞ்செய்வதிலும் பிடிவா தங்காட்டினால் ஜாதிக்குக்கெட்டகாலமென்றே சொல்ல வேண்டும். மற்று, வேறுவிருத்தி யுள்ளவர்கள் பௌரோகிதங் கற்றுக்கொள்வதினால் ஜாதிக்குறை தீரமாட்டாது. அவர்கள் தமது தொழிலையும் கிராக்கிக்காரர்களையும் கவனிப்பார்களேயல்லாமல் பௌரோகிதத்திற்கு அழைப்பவரை லக்ஷியஞ்செய்ய மாட்டார்கள். அன்றி, இணங்குவாராயின் குறித்தகாலத்தில்போய் நடத்திவைக்கச் சாத்தியமாகுமா? தொழிலிலீடுபட்டுள்ளவர்கள்மேல் குறைகூறவும் நியாயமில்லை. இதையெல்லாம் நமது குலாபிமானிகள் நன்றாய்க் கவனித்து ஜாதியீடேறும்விதமாக ஜாதிப்பணத்தை விநியோகிப்பார்களாக.

துன்னூர் T. தங்கவேல்
திருநெல்வேலிபாலம்

## ஆகாரத்தில் அதிக கவலையேன் ?

சிற்சிலர் சாப்பாட்டு விஷயத்தில் மிகுந்த யோசனை செய்வது பரிகாசத்திற்கு இடங்கொடுக்கிறது. ஆகாரத்தில் அதிககவலை வைப்பதினால் பலகாரியங்கள்கெட்டுப் போகின்றன. வர வர நம்மவர்களுக்கு இந்தக் கவலை குறைந்து வருவது சந்தோஷத்திற் கிடந்தருகின்றது. பிராம்மணர்களிடஞ் சாப்பிடுவதில்லையென்ற நியமம் வைத்துக் கொண்டால் சங்கடம் அதிகமாய்உண்டாகும். வியாபார நிமித்தமாகவும் யாத்திரா காரியமாகவும் வெளியூராய்ச் செல்வது பங்கப்படும், விருத்தியடைவது கெட்டுப்போகும் எந்த ஜாதியார் அதிக தூரஞ் செல்லுகிறார்களோ அவர்கள் அதிக செல்வமும் மேன்மையும் பெற்றிருக்கக் காண்கிறோம். இதற்கு நமது இராஜாங்க பரிபாலனஞ் செய்யும் ஆங்கிலேயர்களே சாக்ஷி. நமது நாட்டாருள்ளும் பலஜாதியார் தேசப் பிரயாணஞ் செய்யப் பின் வாங்குவதில்லை. நாட்டுக்கோட்டைச் செட்டிகளை நானா தேசங்களிலுங் காணலாம். ரங்கூன், பினாங்கு, சிங்கப்பூர், நெடால் முதலிய பலவிடங்களுக்குச் சென்று வியாபாரம்பண்ணி திரவியந்திரட்டுகிறார்கள். இப்படியே பிராம்மணரும் பல தேசங்களுக்குச் செல்லுகிறார்கள். ஆகாரத்தில் கவலை வைத்து இங்கிலாந்து செல்லாவிட்டால் ஐ. ஸி. எஸ். பாஸ்பண்ணிக் கலெக்டராக முடியுமோ? முடியாது. எனவே, ஆகாரத்தில் கவலையதிகமிருந்தால் கலெக்டராக முடியாதென்பது பெறப்பட்டது. இப்படியே, ஆகாரத்தில் அதிக கவலைவைக்கும் பக்ஷத்தில் அநேக நன்மைகளைத் தொலைக்க வேண்டியதாய் வரும். நன்மைகளின் விசேஷத்தை உத்தேசித்து ஆகாரக்கவலையை யகற்றவேண்டும். அப்படி, நம்மவர்களுக்கு ஆகாரத் தொந்திரவு எங்குண்டாகப்போகிறது? இங்கிலாந்து அமெரிக்காவுக்குப் போகிறவர்கள் இப்போ தொருவரையுங் காணோம். தென்னாட்டிலேயே சஞ்சாரஞ் செய்வதிலுங் கூடவா ஆகாரக்கவலை யுண்டாகவேண்டும்? இடத்திற்கிடம் பிராம்மணாள் சாப்பாடு போடுகிறார்கள். இவர்களிடத்தில் சாப்பிடும் வழக்கம் இப்போது சாதாரணமாய் விட்டது. அன்றி, பிராம்மணாளிடத்தில் சாப்பிடப் பிரியமில்லாதவர்கள் விஸ்வப் பிராம்மணாளிடம் சாப்பிடலாமல்லவா? இதிலும், பந்துக் கட்டு கொள்வன கொடுப்பன விசாரிக்க வேண்டுமோ? சாப்பாட்டு விஷயத்தில் இந்த விசாரமெல்லாம் வைத்துக் கொள்வது அனாவசியம். கொள்வது கொடுப்பதா யிருந்தால் எல்லாம்விசாரிக்கலாம். சாப்பிடுவதற்கு இந்த விசாரணை எதுக்கு? நமக்கு வேண்டிய மாதிரியாகச் சுத்தமாக அன்னஞ் சமைத்திட்டால் நமது ஜாதியார் வீட்டில் நாமேன் சாப்பிடக்கூடாது? பிராம்மணர் என்னப்பட்டவர்களிடத்திலெல்லாம் அக்குலத்தவர் சாப்பிடவில்லையா? அப்படியே நாமும் என் செய்யக்கூடாது? ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிடும் அநுஷ்டான முண்டானால் ஒருவருக்கொருவர் அந்நியோந்ய முண்டாகும்! ஜாதியே கட்டுப்படும். ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிட மாட்டோமென்றால் அப்போதே வேற்றுமை யுண்டாய் ஜாதிகட்டுவிட்டுக் கலகலத்துப் போகின்றது. பிராம்மணருக்குள் அதிக ஐக்கியம் உண்டா யிருப்பதற்கும் நமது ஜாதிக்குள் அந்த ஐக்கியம் உண்டாகாமலிருப்பதற்கும் இந்தச் சாப்பாட்டு வித்தியாசமே முக்கிய காரணம். இந்த வித்தியாசம் தீர்ந்து விட்டால் நமது ஜாதிக்குறைகளெல்லாம் மெள்ள மெள்ளத் தீர்ந்துவிடும்.

மா. உலகநாத ஆச்சாரி.

---

**கொச்சிசமஸ்தானம்.**— இப்போது பட்டணத்தினின்று நீங்கிய ராஜா 1885ளு பட்டத்திற்கு வந்தவர். அப்போது அந்த சமஸ்தானம் 25 லக்ஷம் ஜனத் தொகையும் $66\frac{1}{2}$ லக்ஷம் ரெவினியூவும் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள போக்கு வரத்து வியாபாரமும் கொண்டதா யிருந்தது. இந்த 29 வருஷத்திற்குள்ளாக ஜனத்தொகை 25லக்ஷமும், ரெவினியூ 150 லக்ஷமும், போக்கு வரத்து வியாபாரம் $6\frac{1}{2}$ கோடியுமாக அதிகரித்து விட்டன.



## சண்டையைச் சார்ந்தவை

சைனாவிலுள்ள சிங்டோ துறைமுகத்தை ஜெர்மனியரோடு சண்டையிட்டு ஜப்பானியர் பிடித்துக்கொண்டார்கள்.

***

ஜெர்மன் குதிரைப் படைத் துருப்புகளுக்கு உலான்கள் என்று பெயர். ஜெர்மன் சேனையில் அவர்கள் தான் மிகவும் சிரேஷ்டமானவர்கள்.

***

இந்தியத் துருப்புகளைப் பார்வையிடுதற்கு பிரான்ஸ் தேசஞ் சென்ற லார்ட்ரா பர்ட்ஸ் என்னும் இங்கிலீஷ் ராணுவவீரர் குளிர் கண்டு இறந்தார்.

***

விக்டோரியா மகாராணியின் கடைசிக் குமாரியினுடைய குமாரர் ப்ரின்ஸ்மாரிஸ் போர்முனையில் தம்முடைய படையோடு சண்டை செய்துகொண்டிருக்கையில் காயம் பட்டு இறந்து போனார்.

***

ஐரோப்பிய யுத்தம் ஆரம்பமானதும், மிகவும் பலமான பெரிய முற்றுகை பீரங்கிகள் பலவற்றை ஜப்பானிட மிருந்து ருஷியாதேசம் விலைக்கு வாங்கி போர் முனையில் உபயோகித்து வருகிறது.

***

யுத்தத்தில் ஜெர்மானியத் துருப்புகளைத் தாக்கி விரட்டியடித்த இந்தியப்படைகளில் முதலானது வங்காள ஈட்டிப்படை. அதில் ஸீக்கியர், ரஜபுத்திரர், பட்டாணிகள், கூர்க்கர் முதலியவர்கள் சேர்ந்திருக்கிறார்கள்.

***

யுத்தங்காரணமாக மலையாளத்திலிப்போது மிளகு, இஞ்சி, கொப்பரை, பலவகைக்கயிறுகள் மிகவும் விலை குறைந்திருக்கின்றன. இதனால் கயிறுதிரித்து விற்போர் முதலியோர் மிகவும் தரித்திரத்தினால் வருந்துகின்றனர்.

***

எழுபது லட்சம் பெல்ஜிய ஜனங்களில் பதினைந்து லட்சம் ஜனங்கள் இங்கிலாந்துக்கும் ஹாலண்டுக்கும் ஓடிப்போ யிருக்கிறார்கள் என்று உத்தேசிக்கப்படுகிறது. பாக்கி ஜனங்கள் தங்கள் சொத்துக்கள் பாதி நாசமாய் விட்டபோதிலும் தங்கள் ஊர்களிலேயே இருக்கிறார்கள்.

ஸெப்பளின் ஆகாயக் கப்பலொன்றும், 70 ஆகாய விமானங்களும், வாரந்தோறும் ஜெர்மனியில் செய்யப்பட்டு வருகின்றனவாம். அந்த ஆகாயக்கப்பல், விமானங்கள் இவைகளில் ஏறிச் சென்று தமது தேசத்திற்கு உழைப்பதாக 10-ஆயிரம் ஜெர்மானியர்கள் முன் வந்திருக்கிறார்கள்.

***

யுத்தகளத்திலிருக்கும் பிரெஞ்சு, ருஷியா, இவ்விரண்டு தேசங்களின் குதிரைப்படைகளுக்கு லாடங் கட்டுவதற்காக 60 லட்சம் குதிரை லாடங்களைத் தயார் செய்து அனுப்பும்படியாக அவ்விரண்டு தேசத்தாரும் பிட்ஸ்பர்க்கு தொழிற்சாலைகளுக்கு உத்தரவு செய்திருக்கிறார்கள். இரவும் பகலும் லாடங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

***

பெல்ஜியத்திலும் பிரான்சின் சில பாகங்களிலும் ஜெர்மானியர் போட்டிருக்கும் யுத்தவரிப் பணத்தின் மொத்தம் 2 கோடியே 84 லட்சத்து 12 ஆயிரம் பவுன். அதாவது 42 கோடியே 62 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய். இத்தொகையில் எவ்வளவு வசூலா யிருக்கிறதென்று தெரியவில்லை. அநேகமாய் அத்தொகை வசூலிக்கப்பட்டிருக்கலாம்.

***

ஜெர்மனி தேசத்தின் மேற்கெல்லை ஓரமாய் எயிலாஷாபெல் என்று ஒரு நகர் உண்டு. சில வாரங்களுக்கு முன் அங்கிருந்து பெல்ஜியத்திற்கு 2-மைல் நீளமுள்ள ஒரு ரயில்வண்டி போயிற்று. அதில் 200 வண்டிகள் பிணைக்கப்பட்டிருந்தன, முன்னே 3 எஞ்சின்களும், நடுவே இரண்டும், பின்னே இரண்டும் இருந்தன. அதிற் பிரயாணஞ் செய்தவர்கள் 16 ஆயிரம் பேர்.

***

ஐரோப்பிய யுத்தத்தால் பெல்ஜிய தேசத்திற்கு நேர்ந்திருக்கும் மொத்தச் சேதம் நானூறுலட்சம் பவுன் அதாவது ஆறாயிரம் கோடி ரூபாய். இந்த மதிப்பு ஒரு மாதத்திற்கு முன்பு ஏற்பட்டதாகும். அதற்குப் பிறகு எவ்வளவு நஷ்டம் நேர்ந்திருக்கிறதோ தெரியவில்லை. இந்த ஐரோப்பிய யுத்தத்தால் பெல்ஜிய தேசந்தான் மற்ற தேசங்களைவிட அதிக நஷ்ட நஷ்டங்களையும் உயிர்ச் சேதங்களையும் அடைந்திருப்பது.

திருக்கி தேசத்திற்கு உதவியாக ஜெர்மனி தேசத்திலிருந்து ஜெர்மானிய ஸோல்ஜர்களும், எஞ்சினியர்களும், சுரங்கம் வைப்பவர்களும், ஒரு ராணுவத் தலைவரும், தேசசஞ்சாரிகள் போல் வேடம் பூண்டு திருக்கி போய்ச் சேர்ந்திருப்பதுடன், பீரங்கி முதலிய யுத்த ஆயுதங்களும் போயிருக்கின்றன. திருக்கிக்கு ஜெர்மனி தேசம் லட்சக் கணக்கான பவுன் கடன் கொடுத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

*
* *

இந்தியாவிலுள்ள எல்லா ரயில்வே கம்பெனிகளுக்கும் முன்னிருந்த வரும்படியில் 73 லட்சம் ரூபாய் குறைந்துபோய் விட்டது. இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்னவெனில், யுத்தம் ஆரம்பமானது முதல், வியாபாரம் மும்முரமாய் முன்பு நடந்து வந்தது நின்றுபோனபடியால், ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சாமான்கள் அனுப்புவது குறைந்துபோய் விட்டதே யாகும்.

*
* *

இங்கிலாந்தில் வசித்த ஜெர்மானியர்கள் அங்கு நடக்கும் ராணுவ ஏற்பாடுகளின் உளவுகளை எழுதிப் புறுக்கள் மூலமாய் ஜெர்மனிக்கு அனுப்பி வந்தார்கள். ஜெர்மானியக் கைதிகள் பந்தோபஸ்தாய் வைக்கப்பட்டிருந்த கட்டிடமொன்றிலிருந்து ஒரு புறு சிலவாரங்களுக்குமுன் பறந்து சென்றதறிந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் உடனே அப்புறுவைச் சுட்டு வீழ்த்தி எடுத்துப்பார்க்க அதன் இறக்கைகளுக்குக் கீழே ஜெர்மன் பாஷையில் எழுதப்பட்ட ஒரு கடிதம் இருந்தது.

*
* *

சென்னை கிறிஸ்டியன் காலேஜில் வாசித்துவிட்டு இங்கிலாண்டு சென்று இஞ்சினீரிங்கும் லாவும் (Engineering & Law) படித்து அங்கிருந்து இந்தியாவுக்குத் திரும்பிவந்த மிஸ்டர் A. S. ராமலிங்க செட்டி தம் சுற்றத்தார்க்கெழுதியிருக்கும் கடிதத்தில், பிரிட்டிஷ் படையில் சேர்ந்து சேவகம் செய்யவேண்டுமென்ற ஆசை மேலிடத் தாம் அப்படையைச் சேர்ந்துவிட்டதாய்ச் சொல்லியிருக்கிறார். அவர் தென் ஆற்காடு ஜில்லா ஆலம்பாடி வைத்திலிங்கம் செட்டியாரின் குமாரராம்.

சில வாரங்களுக்கு முன் பெல்ஜிய அரசர் தமது சேனைகளைப் பார்வையிடுவதற்காக ஜெர்மன் சேனை நிற்குமிடத்தை நோக்கி ஒரு மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டுபோனார். அம்மோட்டார் வண்டிக்காரன் வண்டியை அரசர் குறித்த இடத்திற்கு செலுத்தாமல் மாறாக ஓட்டிக்கொண்டு போனான். அரசர் சந்தேகங்கொண்டு அவனைச் சுட்டுக் கொன்றுபோட்டார். பின்பு, அவன் பையைச் சோதனை போட பெல்ஜிய அரசரைப் பிடித்துத் தருபவர்களுக்கு 20 ஆயிரம் பவுன் இனாமளிக்கப்படுமென்ற விளம்பரமொன்று காணப்பட்டதாம்.

*
* *

தற்கால ஐரோப்பிய யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் தேசங்களில், 102 கோடியே 90 லட்சம் பவுன் பெறுமான சாமான்களை ஜெர்மனியும், 61 கோடியே 50 லட்சம் பவுன் பெறுமான சாமான்களை பிரான்ஸும், 32 கோடியே 60 லட்சம் பவுன் பெறுமான சாமான்களை பெல்ஜியமும், 27 கோடியே 50 லட்சம் பவுன் பெறுமான சாமான்களை ருஷ்ஷியாவும், 75 கோடியே 60 லட்சம் பவுன் பெறுமான சாமான்களை ஆஸ்டிரியாவும் வெளி நாடுகளுக்குக் கடல் மூலமாய் வருஷந்தோறும் அனுப்பி வருவதுண்டு.

*
* *

உலகத்திலுள்ள முகம்மதிய ராஜ்யங்களில் மிகப்பெரிதும், திருக்கி ராஜ்யத்தினிடம் அத்தியந்த சிநேகபாவமுள்ளதும், அது ஐரோப்பாவில் நிலைத்திருக்க வேண்டிய ஒத்தாசையை நிரந்தரமாய்ச் செய்துவந்ததும் பால்கன் யுத்தத்தினால் ஆடிப் போய்விட்ட திருக்கிக்குப் பழைய உறுதி ஏற்படும்படி செய்ததுமாகிய கிரேட்பிரிட்டன், இப்பொழுது ஆஸ்டிரிய ஜெர்மன் கவர்ன்மெண்டால் திருக்கி புத்தி பேதிக்கப்பட்டு நன்றியறிதலை மறந்து, கிரம விரோதமான காரியங்களைச் செய்ததால் பிரிட்டிஷ் ராஜ சக்கிரவர்த்திக்கும் திருக்கிசுவர்ன்மெண்டுக்கும் யுத்தம் உண்டாய் விட்டது.

*
* *

லொவேன் நகரை யழிக்க ஜெர்மானியர் வருவதற்குச் சில நிமிஷங்களுக்குமுன் அங்கு டெலிபோன் ஆபீஸில் குமாஸ்தாவாக விருந்த இரண்டு பெல்ஜியச் சிறுமிகள் பெல்ஜியப்படை பின்வாங்கிப் போக வேண்டிய திக்கை, அப்படைக்கு டெலிபோன் வாயிலாக அறிவித்



துக்கொண்டிருந்தனர். அவர்களவ்வாறு செய்ததால் பெல்ஜியப்படை தப்பிப் பிழைத்தது ; இல்லாவிட்டால் மாண்டுபோயிருக்கும். அச்சிறுமிகள் தாமிருக்குமிடத்தருகே பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடிப்பதையும், வீடுகள் தீப்பற்றியெறிவதையும் கவனியாது தாம்செய்யவேண்டிய வேலையைச் செய்து தமது தேசத்துச்சேனையைக் காப்பாற்றினர்.

*
* *

பிரஞ்சு தேசத்துள்ள ஒரு மாகாணத்தில் ரயில்வே இலாகாவிலிருந்த கார்டுகள் யாவரும் சேனையிற் சேர்ந்து சண்டைக்குப் போய்விட்டனர். அவர்களுக்குப் பதிலாகப் புருஷர்கள் கிடைப்பது கஷ்டமாய் விட்டது. இதனை அங்குள்ள ஸ்திரீகளறிந்து ரயில்வே இலாகாவில் சேர்ந்து கார்டுவேலைகளைச் செய்துவருகின்றனர். அங்கு ஜன சமூகத்திற்கு வேண்டிய ஆகாரங்களைச் செய்து விற்றுவரும் ஒரு கம்பெனியில் வேலை செய்து வந்த 500 புருஷர்கள் சேனையிற் சேர்ந்து சண்டை செய்யப் போய்விட்டனர்; அவர்களுக்குப் பதிலாக ஸ்திரீகள் சேர்ந்து வேலை செய்து வருகின்றனர்.

*
* *

அமெரிக்காவிலுள்ள ஜெர்மன் தூதரும் ஒரு பிரபல அமெரிக்கரும் தற்கால ஐரோப்பிய யுத்தத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தபொழுது, "யுத்தம் முடிந்த பிறகு பிரான்ஸை என்ன செய்வீர்" என்று அத்தூதரை அமெரிக்க பிரபு கேட்க, அத்தூதர் பின்வருமாறு சொன்னாரென்று மான்ஷியர் கிளிமன்ஸ் என்பவர் சொல்கிறார்:—பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகள் அனைத்தையும் இன்னும் சிலவற்றையும்நாம் (ஜெர்மானியர்) எடுத்துக் கொள்வோம். பிரெஞ்சுக்காரரை 10-ஆயிர லட்சம் பவுன் யுத்தவரி கொடுக்கச் செய்வோம். வரியின்றி ஜெர்மன் சாமான்கள் 25-வருஷ காலம் பிரான்ஸில் வியாபாரமாகும்படி செய்வோம். 25 வருஷம் வரையில் அவர்கள் சேனைக்கு ஆட்கள் சேர்த்தல் கூடாது. 30 லட்சம் தோட்டாக்களும், 3 ஆயிரம் பீரங்கிகளும், 40 ஆயிரம் குதிரைகளும் அவர்களைக் கொடுக்கும்படி செய்வோம்.

*
* *

மூழ்கிச் செல்லும் சப் மரைன்கள் சுமார் 130 அடி நீளமிருக்கும். எதிரியை எதிர்க்கவேண்டியதென்றால், அவை தண்ணீருக்குள் மூழ்கிச் சென்று எதிரிக்கு அருகாமையிற் சென்றதும் அவர்களின்பேரில் சுடும். அவை தண்ணீரில் மூழ்கிச் செல்லும் பொழுது வெளியிலிருப்பன வெல்லாம் நன்கு தெரியும்படி கண்ணாடிகளின் உதவியைக்கொண்டு சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். உள்ளே மூழ்கிச் செல்லும்பொழுது உள்ளிருக்கும் நபர்களுக்கு வேண்டிய காற்றும் அவைகளின் ஓர் பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும். அவை சுமார் 4-மணி நேரம் வரையில் தண்ணீரில் மூழ்கியிருக்கலாம்.

*
* *

குரூஸர் கப்பல்கள் பொதுவாய் எதிரிகளின் நடமாட்டங்களைக் கவனிப்பதற்கும் எதிரிகளின் வியாபாரக்கப்பல்களை அழிப்பதற்கும் ஏற்படுத்தப் பட்டிருப்பன. அவை அதிக வேகமாய் ஓடும். சண்டைக் குரூஸர் என்றும், சாதாரணக் குரூஸர் என்றும் இருவகையுண்டு. சண்டைக் குரூஸர்கள் சண்டைக்கப்பல்களைப் போல் பலமாய்க் கட்டப்பட்டும் பெரிய பீரங்கிகள் கொண்டுமிருப்பதுடன், சாதாரணக் குரூஸர்களைப்போல் வேகமாய் ஓடக்கூடியவையாகவுமிருக்கும். இவ்வாறு இருப்பதினால் ஒரு பெரிய சண்டைக் கப்பலுடன் எதிர்த்து சண்டை செய்தாலும் செய்யலாம். அல்லது அப்பெரிய கப்பலின் கைக்கு அகப்படாமல் ஓடிவிட்டாலும் ஓடிவிடக்கூடும். இவைகள் சண்டைக் கப்பல்களைப்போல் 20 லட்சம் பவுன்களுக்குமேல் விலையுள்ளவையாகும்.

*
* *

1906 வருஷத்திற்கப்புறம் கட்டப்பட்ட சண்டைக் கப்பல்களுக்கு ட்ரெட்நாட்ஸ் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இக்கப்பல்களின் பக்கங்கள் மிகவும் உறுதியான 11 அங்குலகனமுள்ள எஃகுத்தகட்டினால் மூடப்பட்டிருக்கும். இத்தகைய கப்பல்களில் சுமார் 12 அங்குல பீரங்கிகள் 5, சிறு பீரங்கிகள் 10, டார்பிடோ டியூப்கள் 5 இருக்கின்றன. இவை சுமார் 20,000 டன்களுக்கு மேலுள்ளவை. நீளம் 500 அடி இருக்கும். கப்பலின் மேல்தட்டின்பேரில் கோபுரமாதிரி கட்டி அதில் அதிக நீளமுள்ள பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும். வேகம் சுமார் 21 நாட்டுகள் கொண்டதாகும் (1) நாட் என்பது ஒன்றே அரைக்கால் மைல்) இக்கப்பல்களில் 3000 டன் நிறையுள்ள கரியும் சுமார் 900 ஆட்களையும் ஏற்றிக்கொள்ள இடமுண்டு. நீரை அமுக்குவதினால் உண்டாகும் வேகத்தினால் (Hydraulic power) பெரிய பீரங்கிகளெல்லாம் திருப்பப்பட்டு உபயோகிக்கப் படுகின்றன.

டார்பீடோ என்பது மீன்போல் உருவமுள்ளதாய் சுமார் 14-அடி நீளமும், 18-அங்குலக் குறுக்களவும் உள்ளது. ஒவ்வொரு கப்பல், குரூஸர் முதலியவற்றில் டார்பீடோ டியூப் என்று சொல்லப்படும் குழாய்கள் இருக்கின்றன. இந்த டார்பீடோவில் நிறைய வெடி மருந்துகளும் குண்டுகளும் அடைக்கப்பட்டிருக்கும். இவற்றின் தலைபபக்கம் கூர்மையாயும், வால்பக்கம் காற்றாடிபோலுள்ள யந்திரம் கொண்டதாகவுமிருக்கும். எதிரிக் கப்பலைக் கண்டதும் இந்த டார்பீடோவை அக் குழாய்க்குள் போட்டு காற்றை ஓர் இடத்தில் அடைத்து நெருக்கப்படுவதால் உண்டாகும் சக்தியைக் கொண்டு தண்ணீருக்குள் தள்ளப்படும். தள்ளப்பட்டதும் இதன் பின்பக்கத்திலுள்ள காற்றாடி யந்திரம் சுற்றுவதினால் தண்ணீருக்குள் அதிக வேகமாய்ச் சென்று எதிரியின் கப்பலின் அடிப்பாகத்தில் மோதி, உள்ளிருக்கும் மருந்துகள் நெருப்புபபற்றி வெடிப்பதினால் கெடுதியை உண்டாக்கும். இது சுமார் 2000 கெஜம் வரையில்போய் கெடுதியை விளைவிக்கக்கூடும்.

*
* *

வெடிகுண்டுச் சுரங்கங்கள், மிதந்து போகும் சுரங்கங்கள், மிதந்து ஓரிடத்தில் இருக்கும் சுரங்கங்கள், மின்சார சக்தியினால் வெடிக்கும் சுரங்கங்கள், என்று மூன்று வகையுண்டு சுரங்கங்கள் உருவத்தில் பொதுவாய் சமுத்திரங்களில் மிதப்புகள் போட்டிருப்பதைப் போல் (Buoys) இருக்கும். கிரோஸைன் எண்ணெய் வரும் டிரம்கள்போலும் சில இருக்கும். இவற்றுள் சுமார் 100 பவுண்டு நிறையுள்ள வெடிமருந்து குண்டுகளிருக்கும். முதலில் சொல்லிய சுரங்கங்கள் கப்பலில்மோதியவுடனே வெடித்து நாசத்தை உண்டாக்கும், இரண்டாவது சொல்லியவை தண்ணீருக்குள் சிறிது ஆழத்தில் மூழ்கிக் கிடக்கும். இவற்றின் பேரில் கப்பல் தட்டுப்பட்டதும் வெடித்து கெடுதியை உண்டுபண்ணும். சிலவற்றில் மின்சாரக் கம்பிகளிட்டு வெகு தூரத்திற் கப்பால் வைக்கப்பட்டிருக்கும். கப்பல் அருகாமையில் வந்ததை அந்தக் கம்பிகளிருக்கும் இடத்திலிருப்பவன் பார்த்ததும் கம்பிகளைச் சேர்த்தால் உடனே அந்தச் சுரங்கங்கள் வெடித்துநஷ்டத்தை விளைவிக்கும். முதலில் சொல்லிய சுரங்கங்களை ஒரு துறைமுகத்தின் வெகு தூரத்திலும், அதன் பின்னர் இரண்டாவது சொல்லிய சுரங்கங்களையும், மூன்றாவது சொல்லியவற்றை துறைமுகத்திற் கருகாமையிலும் போட்டு வைப்பது வழக்கம்.

*
* *

முற்காலத்தில் குண்டுகள் என்றால் ஓர் இரும்புக் குண்டாகவே யிருக்கும். தற்காலத்தில் அவவாறில்லை. குண்டென்பது கனமான இரும்புத் தகட்டினால் செய்யப்பட்டு, நுனி சிறுத்து அடிபெருத்து வெடி மருந்துகளும் கண்ணாடித் துண்டுகளும் சிறு ஆணி முதலிய இருப்புத் துண்டுகளும் போடப்பெற்ற பெட்டிபோ லிருக்கும். இந்தக் குண்டுகள் பீரங்கியிலிருந்து வெளிக்கிளப்பினால் அவை வெகு வேகமாய்ப் போய் கீழே விழுந்ததும் வெடிக்கும். வெடித்ததும் 40 கெஜம் வரையில் பரவி அதிக சேதம் உண்டுபண்ணக் கூடியவை. இவை, 300 டன் நிறைகொண்ட சாமான்களை இழுத்துக்கொண்டு ஓடும் ஓர் ரயில் வண்டித்தொடர் மணிக்கு 96 மைல் வீதம் ஓடினால் என்ன வேகமாயிருக்குமோ அவ்வளவு வேகமுள்ளவைகளாயிருக்கும். 12 அங்குல பீரங்கிகளை விட 13, 15, அங்குல பீரங்கிகள் அதிகக் கெடுதியை விளைவிக்கக் கூடியவை. 13 அங்குல பீரங்கியின் குண்டு 1250பவுண்டும், 15 அங்குல் பீரங்கியின் குண்டு 1400 பவுண்டும் நிறையுள்ளதாகவிருக்கும்.

*
* *

17-அங்குலம் குறுக்களவுள்ள குழாய்கள் கொண்ட முற்றுகை பீரங்கிகளை ஜெர்மானியர் உபயோகித்துவருகின்றனர். அபபீரங்கிகளுக்கு பிரம்மர் எனப் பெயர். ஜெர்மனி தேசத்திலிருக்கும் க்ருப் தொழிற்சாலையில் அபபீரங்கிகள் செய்யப்படுகின்றன. மிகுந்த நாசத்தை விளைவிக்கக் கூடியன வாதலால் அவைகளின் உதவியைக்கொண்டே லீஜ், நாமூர், ஆண்ட்வர்ப் முதலிய பலயான கோட்டைகளை ஜெர்மானியர் வசப் படுத்திவிட்டனர். அவைகளிலிருந்து குண்டுகளைப் பிரயோகிப்பதற்கு பிரத்தியேகமான எஞ்சினீயர்களை மேலேசொன்ன குருப் தொழிற்சாலையார் அனுப்புகின்றனர். மின்சார விசையினால் அவைகளிலிருந்துகுண்டுகள் பிரயோகிக்கப் படுகின்றன. குண்டுகள் புறப்படும் பொழுது, அப்பீரங்கிகளில் வேலை செய்வோர், அவைகளின் அருகேயிருக்க முடியாது, சிறிது தூரத்திற் கப்பால்சென்று நிற்கவேண்டியே. அவைகளிலிருந்து புறப்படும் குண்டுகள் 2100 பவுண்டு எடையுள்ளன. அக்குண்டுகள் பீரங்கியிலிருந்து புறப்பட்டதும், சாய்வாக உயர ஆகாயத்திற் கிளம்பி 12 மைல் தூரம் போனதும், சுமார் மூக்கால்மைல் உயரத்திலிருந்து கீழே விழுகின்றன. கீழே விழுந்ததும், சாவையுண்டு பண்ணக் கூடிய ஒரு வகையான கொடிய புகை அக்குண்டுகளிலிருந்து புறப்படுகிறது. இப்போது 20-க்குமேல் 21-அங்குலம் குறுக்களவுள்ள குழாய்கள் கொண்ட பீரங்கிகளை ஜெர்மானியர் செய்து வருகின்றனராம்.



## விசேஷ வர்த்தமானம்

**விக்ரமாதித்தன் உருவச்சிலை.**—நவத்வீபபுரம்என்னும் நாடியாவிலுள்ள பண்டிதர்கள் சிலர் அங்கே ஒருபெரிய உருவச்சிலையைக் கண்டுபிடித்தனர். அதன் அடியிலுள்ள குறிப்புகளால் அஃது 6-வது நூற்றாண்டில் இந்தியாவை ஆட்சிபுரிந்த சக்ரவர்த்தியான விக்கிரமாதித்த மன்னனின் உருவச்சிலை யென்று தெரிகின்றது.

*
* *

**மைசூர் வரவுசெலவு**—1913-14-ம் வருஷத்தில் ஷை சமஸ்தானத்து ரெவினியூ 317.30 லக்ஷமாகவும், செலவு 237.23 லக்ஷமாகவும், மிகுதி 80 07 லக்ஷமாகவும் இருந்தன. இந்த 1914-15ஷத்தில் ரெவினியூ 285 லக்ஷம் ரூபாயும், செலவு 358 லக்ஷம் ரூபாயும், அதிகச் செலவு 73 லக்ஷம் ரூபாயுமாகத் திட்டம் போடப்பட்டிருக்கின்றது. இந்த அதிகச் செலவு கண்ணம்பாடி பிராஜக்டுக்காகவும், காவேரி ஜலத்திலிருந்து மின்சாரவிசை உண்டுபண்ணுவதற்காகவும், புது ரெயில்வேக்கள் போடுவதற்காகவும் பெங்களூரில் எலக்டிரிக்ட் டிராம்வே ஸ்தாபிப்பதற்காகவும், ஏற்பட்டதாகத் தெரிகிறது.

*
* *

**பரோடா மகாராஜாவின் செல்வம்.**—லண்டன் டெயிலி கிரானிகில் பத்திரிகையில் ஒருவர் பின்வருமாறு எழுதியிருக்கின்றார்:—பரோடா மகாராஜா நமது சக்ரவர்த்தியாரைவிடச் செல்வத்தில் மிகுந்தவர். அவரது வருஷ வருமானம் 1,000,000 பவுண்டு, அல்லது 15 கோடி ரூபாயாகும். அவரிடமுள்ள வைரம், பச்சை, நீலம், முத்து முதலிய நவரத்னங்களின் மதிப்பு சுமார் 2,000,000 பவுண்டு, அல்லது 3 கோடி ரூபாயிருக்கலாம். அவர் தர்பார் கூடும்போது அணிந்து கொள்ளும் நவரத்னமாலை யொன்றில் 80000 பவுண் அல்லது 12 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள ஒரு வைரமணியிருக்கின்றது. அது பிரேவில் தேசத்தில கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குத் 'தட்சணதாரகை' யென்று பெயர். அது ஆதியில் மகாநெப்போலியன் சக்ரவர்த்தியிடமிருந்தது.

*
* *

**வீட்டுக்காரிய சிக்கன வகுப்புகள்:**—சென்னையிலுள்ள பல ஸ்கூல்களில் வாசிக்கும் பெண்களுக்குச் சமையல் முதலிய காரியங்களைக் கற்றுக்கொடுப்பதற்காக, சென்னைக் கவர்ன்மெண்டார் மிஸ் பார்க் என்பவரை நியமித்திருக்கிறார்கள். சென்ற மாசம் 6-ந் தேதி அவ்வித வகுப்புகள் சென்னை மவுண்ட்ரோட் 35-வது நெம்பர் கட்டடத்தில் ஏற்பட்டு வேலை துவக்கமாயிற்று. செவ்வாய்க்கிழமைகள் தோறும் சமையல் காரியங்களைப் பற்றிய பாடங்கள் பெண்களுக்கு கற்பிக்கப்படும். உபாத்திமார்களுக்கு சமையல் காரியங்களைப் பற்றிய பாடங்கள் சனிக்கிழமைகள் தோறும் காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும், வீட்டுக் காரியங்களைப் பற்றிய பாடங்கள் 10-30-மணிமுதல் 12-30 மணி வரையிலும் கற்பிக்கப்படும். சனிக்கிழமையன்று தேகப் பயிற்சி வகுப்பு ஒன்று ஏற்படுத்தப்படும்.

*
* *

**புலாலகற்றல்.**—மிஸ்டர் லட்ஷங்கர் லட்சுமிதாஸ் என்பவர் சால்வேஷன் ஆர்மி யென்னும் இரட்சணிய சேனையின் தலைவர்க்குப் பின்வருமாறு எழுதி யிருப்பதாயறிந்து சந்தோஷிக்கிறோம்: மாம்சமுண்ணும் வழக்கம் கொடியதென்று இந்தியாவில் பலர் கண்டித்துக் கூறியிருக்கின்றனர். ஆகையால், தாங்கள் தயவுசெய்து இனி மாம்சம் சாப்பிடுவது கூடாது என்பதுபற்றியும், அதனால் விளையும் கெடுதிகளைப்பற்றியும், சாகபட்சணத்தாலுண்டாகும் பல வகையாய நன்மைகளைப் பற்றியும், ஜனங்களுக்குப் போதித்து, இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள சால்வேஷன் ஆர்மியைச் சேர்ந்த மெம்பர்களுக்கு மாம்சமுண்பதை விட்டொழிக்குமாறு உத்தரவு செய்ய வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்; அவ்வாறு செய்தால் இலட்சக் கணக்காக வாயில்லாப் பிராணிகளை வதைப்பது நின்றுபோம்; மாம்சமுண்பதை யொழித்துச் சாகபட்சணம் செய்யும் மிஷனரிகளை இந்தியாவிற்கனுப்பி, அவர்கள் வாயிலாக மாம்சமுண்ணும் கிறிஸ்தவர்களுக்கு மாம்சமுண்பது கூடாதென்றும், அதனால் பல கெடுதிகளுண்டாகின்றன வென்றும், சாகபட்சணத்தால் பல நன்மைகளும் சுகங்களுமுண்டாகின்றன வென்றும் போதிப்பிக்க வேண்டும் என்பதாம். இவ்வாறு இவர் பிரிட்டிஷ் அந்நியநாட்டுப் பைபில் சங்கத்தாருக்கும் விண்ணப்பஞ் செய்திருக்கின்றனர்.

**நவராத்திரி பூஜாபலன்.** 'ந்யூ இந்தியா' பத்திரிகைக்கு ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்.—இவ்வுலகில் இல்லறவாழ்க்கை நடத்துவோர்கள், நவராத்திரியை ஒரு பெரிய பண்டிகை நாளாகக்கொண்டாடுகிறார்கள். இது துறவிகளும் ஞானிகளும் கொண்டாடும் தினமல்ல. நவராத்ரி பண்டிகை என்பது ஒன்பது நாள் பண்டிகை என்றுபொருள். முதல் மூன்றுநாள் துர்க்கா பூஜை செய்யும் தினம். அதற்கடுத்த மூன்று நாள், லட்சுமி பூஜை தினம் கடைசி மூன்று நாள் சரஸ்வதி பூஜைதினம். இம்மூன்று தேவிகளும் ராஜராஜேஸ்வரியின் அமிஸங்கள். முதல் மூன்று நாள் துர்க்கா பூஜை செய்கிறவர்கள் த்ரிட காத்திர முள்ளவர்களாவார்கள். இந்திரியங்களை ஜெயிக்கும் சக்தி அவர்களுக்கு உண்டாகும். அடுத்த மூன்றுநாள் லட்சுமி பூஜைசெய்கிறவர்களுக்கு அந்த தேவி தன் கிருபையால் தனதானியங்களை எதேஷ்டமாய் அருளுவாள். அதைப்பெறும் பக்தர்கள் தாங்கள் சுகமாய் வாழ்வதுமன்றி பிறருக்கும் உதவி புரிவார்கள். கடைசி மூன்றுநாள் சரஸ்வதி பூஜை செய்கிறவர்கள் சரஸ்வதியின் அருளால் ஞானத்தை அடைவார்கள். உலகத்திற்கும், தனக்கும், பிரம்மத்திற்குமுள்ள சம்பந்தத்தை அறிந்துகொள்ளுவார்கள். பத்தாவது நாள் ராஜராஜேஸ்வரி ஆயுதபாணியாய்த் தோன்றி, மனிதர்களிடத்திலுள்ள காமக்குரோத லோப மோஹ மதமாச்சரியங்களான கெட்டவைகளை அழித்து விடுகிறாள். அக்கெட்டவைகளைத்தான் மஹிஷாசுரன் என்று சொல்லுவது. அதை ராஜ ராஜேஸ்வரி அழித்து விடுகிறாள். அதனால் பக்தர்கள் நல்ல கதியடைகிறார்கள்.

*
* *

**சென்னை ஸ்திரீகளின் காலேஜ்.**—இதில் படிக்கும் ஒரு ஸ்திரீ ஹிந்து பத்திரிகைக்குப் பின் வருமாறு எழுதுகிறார்:—இந்தக் காலேஜ், பீச்சுரோட்டில் மைலாப்பூருக் கடுத்தாற்போலுள்ள காப்பர் ஹவுஸ் ஹோட்டல் என்னும் மூன்றடுக்கு மெத்தையிலிருக்கிறது. சென்னை ராஜதானியில் ஸ்திரீகளுக்கு கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட முதல் காலேஜ் இதுதான். இந்தக் காலேஜுக்கு ஒரு ஹோஸ்டல் உண்டு. அதில் ஐரோப்பிய செக்ஷன், இந்திய செக்ஷன், உயர்குல வகுப்பு செக்ஷன் என்ற மூன்று செக்ஷன்கள் உண்டு. இவற்றில் முதல் செக்ஷனில் 7 பேர்களும், இரண்டாவதில் 5 பேர்களும், (அவர்கள் அனைவரும் கிறிஸ்துவர்கள்) மூன்றாவதில் 6 பேர்களும் (அவர்களில் 5 பேர் மலையாளிகள், ஒருவர் பிராமண ரல்லாதவர்) மெடிகல் காலேஜ் அபாதிகிரி பரிட்சைக்கு வாசிக்கும் இரண்டு மலையாள ஸ்திரீகளும் இருந்து வருகிறார்கள். இந்தியர்களுக்கு ஒருமாதத்திற்கு 20 ரூ. ஹோஸ்டலுக்குச் செலவாகிறது. ஹோஸ்டல் கணக்கு வழக்குகளையும் அதிலிருக்கும் ஸ்திரீகளையும் மேற்பார்வை பார்ப்பதற்கு ஒரு ஐரோப்பிய ஸ்திரீ நியமிக்கப்பட்டிருக்கிறார். உயர்ந்த ஜாதி செக்ஷனில் பிராமண சாப்பாடு தயார்செய்யப்படுகிறது. இப்பொழுது காலேஜில் 40-ஸ்திரீகள் படித்து வருகிறார்கள். ஜூனியர் இன்டெர்மீடியேட் வகுப்புவரை கற்பிக்கப்பட்டு வருகிறது. பிரஸிடென்ஸி காலேஜ் ஸீனியர் இன்டெர்மீடியேட் வகுப்பில் படிக்கும் ஒரு ஸ்திரீ இந்த ஹோஸ்டலில் இருந்து வருகிறார். சாஸ்திர ஸயன்ஸ் பாடத்தை இஷ்டமான பாடமாக எடுத்துக்கொண்டு படிக்கும் சில ஸ்திரீகள் பிரஸிடென்ஸி காலேஜுக்குப்போய் அப்பாடத்தைப்படித்து வருகிறார்கள், பிரஸிடென்ஸி காலேஜுக்குப் பாடத்தை படிக்கப் போகும் ஸ்திரீகளை ஏற்றிக்கொண்டு போவதற்கும், அவர்களை மறுபடியும் கொண்டுவந்து விடுவதற்கும் 3-4-கவர்ன்மெண்ட் ரிக்ஷாக்கள் ஸ்திரீகள் காலேஜில் இருக்கின்றன. ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஒரு ஸ்பிரிங்கு கட்டிலும் ஒரு படுக்கை ரூமும் ஸ்நான அறையும் உண்டு. டென்னிஸ், பாட்மிண்டன் விளையாட்டுகளுக்கு இடம் ஏற்பட்டிருக்கிறது. சகல சௌகரியங்களும் ஹோஸ்டலிலிருக்கும் ஸ்திரீகளுக்குண்டு. பகலில் வாசிக்கும் ஸ்திரீகளில் 6-பேர் பிராமணர்கள். அவர்களில் இருவர் கைம் பெண்கள், 4-பேர் கிறிஸ்துவர்கள், முதலியார் பெண் ஒருவர், மற்றவர்கள் ஐரோப்பியர்களும், யுரேஷியர்களுமாம்.

26. ... MADRAS.

உ

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] 1914ஞ டிசம்பர்மீ [சஞ்சிகை 3

## ஒளிவளர் விளக்கு

1914ஞ நவம்பர் மாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களுடைய எண்ணிக்கை 498.

*
* *

கடைசியாய் நடந்த சட்ட சபை மீடிங்கில் ஜனப் பிரதிநிதி மெம்பர்கள் மூவர், இந்தியத் தொழில்களைக் கவர்ன்மெண்டார் அபிவிருத்தி செய்யவேண்டிய விஷயமாய், நான்கு பிரேரபணைகளைக் கொண்டுவந்தார்கள். ஆயினும், இந்தியத் தொழில்களை விருத்திசெய்யும் விஷயத்தில் அரசாங்கத்தார் கண்ணுங் கருத்துமாகவே யிருக்கிறார்களென்று கனம் கவர்னர் அவர்கள் தெரிவித்ததின்பேரில் ஷை பிரேரபணைகள் நிறுத்திக் கொள்ளப்பட்டன.

*
* *

இவ்வருஷத் தீபாவளித் தண்டற் பணம், கோபிசெட்டி பாளயம், ஆற்காடு, திருப்பத்தூர், மதுரை, இண்டூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி யாகிய இவ்விடங்களிலிருந்து மட்டுமே இது வரையிலுங் கிடைத்திருக்கிறது. மற்ற ஊரார்களுஞ் சீக்கிரமே தங்களூர் வசூல்களை யனுப்பியருள வேண்டுகிறோம். கிடைக்குந் தொகை, அனுப்பினோர் சகாயிகள் முதலியோர் பெயர்களாதிய விவரங்கள் நமது பத்திரிகையில் அச்சிடப்படும்.

தூத்துக்குடி ஸ்ரீ தூ.சு. சுதிரேசன் ஆச்சாரியாரவர்கள், தொழிற்சாலை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய மெஷீன் வகைராக்களையும் அவற்றின் விலை விவரங்களையுந் தெரிவித்து, திருநெல்வேலி ஜில்லாவில் நெல்குத்தும் யந்திரசாலை ஸ்தாபிப்பதின் அவசியத்தை விளக்கிக்காட்டி யெழுதியுள்ள வியாசமொன்று இம்முறை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதை நமது வாசகர்கள் கவனமாய்ப் படிக்க விரும்புகிறோம்.

*
* *

சென்னையில் சிற்பகலாசாலை யொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று, யூனிவர்ஸிடி யென்னுஞ் சர்வகலா சங்க அதிகாரிகளுக்கு ஒருவர் யோசனை சொன்னார். யூனிவர்ஸிடி சகாக்களிலொருவரால் ஸெனட் மீடிங்கில் ஷை விஷயம் ஆலோசனைக்குக் கொண்டுவரப்படுமானால், அதைப்பற்றி கவனிக்கப்படுமென்று ரிஜிஸ்டிரார் தெரிவித்தார். சிற்பசாஸ்திரப் பயிற்சி செய்யவேண்டுமென்னும் அவாவே யல்லவா ஷை யோசனைக்குக் காரணமாயிருக்கவேண்டும்? அந்த அவா சிற்ப வகுப்பாரிடங் காணாமைக் கென்செய்வோம்! யூனிவர்ஸிடியார், சமீபகாலத்திலில்லையாயினும், இன்னுஞ் சில வருஷங்கள் கழித்தாவது, சிற்பகலாசாலையொன் றேற்படுத்தலாம். அப்போதாயினும், அதிற்சேர்ந்து படிக்க லாயக்கு நமக்கிருக்கவேண்டுமே! இந்த யோக்கியதை இங்கிலீஷ் வாசிப்பினாலன்றோ சித்திக்கவேண்டியதாயிருக்கிறது?

‘இந்தியாவின் புதுப்பிறப்பு’ என்னும் விஷயமாய் நடந்ததோர் உபந்நியாச காலத்தில், சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் ஸர். ஸி. சங்கரன் நாயர் அவர்கள் “உங்கள் முன்னோர்கள் எவ்விதத்திலும் மிக மேலானவர்களென்று முகஸ்துதி செய்பவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு மோசம் போகாமல், உங்களுடைய தற்கால ஸ்திதியை உங்கள் புத்தியைக்கொண்டே நன்றாய் ஆலோசித்து, எதுசெய்வது உங்கள் க்ஷேமத்துக்கும் தேச நன்மைக்கும் தகுந்ததென்பதை நீங்களே தீர்மானித்து அதன்படி ஊக்கத்துடன் உழைத்து வருவீர்களாக” என்று உபதேசித்தார். இவ்வுபதேசம் பொதுவாகப் பல ஜாதி மதத்தினருள்ளிட்ட இந்திய ஜனங்களுக்குச் சொல்லப்பட்டதாயினும், நமக்கு மிகவும் பொருந்தியதா யிருக்கிறதென்று நினைக்கிறோம். ஆதலால், சுஜாதிச் சகோதரர்கள் ஷை உபதேசத்தாற் பயன்பெற முயல்வார்களாக.

*
* *

ஸ்ரீ பஞ்சாநந நியோகி யென்னும் ராஜ்ஷாஹி காலேஜ் ப்ரொபஸர், இந்தியாவில் எக்காலமுதல் இரும்பு கையாளப்பட்டு வந்ததென்பதை யெடுத்துக்காட்டியிருக்கிறார். வேதகாலத்தில், அதாவது 3600 வருஷங்களுக்குமுன், இரும்பினாற் செய்யப்பட்ட பீரங்கிகள் உபயோகிக்கப்பட்டன வென்பதற்குஆதாரமாய் கிருஷ்ணயஜுர் வேதத்திலிருந்து ஒரு வாக்கிய மெடுத்துக்காட்டுகிறார். 2,900 வருஷங்களுக்குமுன், யுத்தத்தில் இரும்பாயுதங்கள் விசேஷமாய்க் கையாளப்பட்டு வந்தன வென்பதற்கும், வைத்திய சிகிச்சையில் சுமார் நூறுவித இரும்புக் கருவிகள் உபயோகிக்கப்பட்டுவந்தன வென்பதற்கும், ஆதாரங்கள் காட்டப்படுகின்றன. திருநெல்வேலி ஜில்லாவிலும், புத்த கயாவிலும் மற்றும் பல இடங்களிலுமிருந்தெடுக்கப்பட்ட சட்டங்கள் ஈட்டிகளாதிய இரும்பு சாமான்கள் மிகப் பழையனவா யிருக்கின்றன. டெல்லிக்கருகிலுள்ள குடுப்மினர் என்னும் இருப்புஸ்தம்பம் 23 அடி 8 அங்குல நீளமுள்ளது; தாரிலும் மவுண்ட் அபூவிலுமுள்ள இருப்புஸ்தம்பங்கள் முறையே 43 அடி 8 அங்குலமும், 12 அடி 9 அங்குலமும் நீளமுள்ளவையா யிருக்கின்றன. இவையெலாம் 1000 வருஷங்களுக்கு முன் செய்யப்பட்டவை. பூர்வகாலத்தில் இவ்வற்புத இரும்பு வேலைகளைச் செய்தவர்கள் நம் முன்னோர்களேயா யிருக்கவேண்டும். தற்காலத்திலோ இரும்புத் தொழிலில் கிராமாந்தர உலைக்களவேலைகளும் அவை போன்று நகரங்களில் நடப்பனவுந்தவிர வேறேதும் நமதுகைப்பட்டிருக்கக் காண்கிலம். நமதுஐந்துவகுப்பாருள் ஆதிவகுப்பாரடைந்துள்ள நிலைமை என்னென்போம், அந்தோ!

*
* *

இவ் வருஷச் சர்வகலா சங்கப் பி-ஏ. பரீட்சையில் தேறி ஷை பட்டம் பெற்றவர்களில் நம்மவர்கள் இருவர். இவ்விருவரில் ஒருவர் திருநெல்வேலி ஜில்லாவினராகிய ஸ்ரீ M. கிருஷ்ணசாமி பத்தரவர்கள்; இவர் போஸ்டல் அகவுண்ட்ஸ் டிபார்ட்மெண்டில் உத்தியோகமாயிருக்கிறார். மற்றவர், காகினடா கலெக்டராபீசில் உத்தியோகஞ் செய்யும் ஸ்ரீ பொல்லோஜு-வீரபத்திர ஆச்சாரியாரவர்கள். சர்வகலா சங்கப் பரிசளிப்பு மறுநாளாகிய சென்ற 20-11-14 தேதி யன்றுமாலை, நமது சபா மண்டபத்தில் இவ்விரு கனவான்களுக்கும் வந்தனோபசாரங்கள் செய்யப்பட்டன. புள்ளாங்குழல் கச்சேரி சற்றுநேரம் நடந்த பிற்பாடு, ஸ்ரீ M. ஜீவரத்தின ஆச்சாரியார், பி. ஏ. அவர்கள் புதுப் பி.ஏக்களுக்கு வந்தனஞ்சொல்லி, அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றி மற்றும் பலரும் பி. ஏ முதலிய பரீக்ஷைகளில் தேறி உயர்பதவிகளடைந்து குலவிளக்குகளாகவேண்டுமென்று கூறினார். பிறகு, சென்னை அகவுண்டன்ட் ஜெனரலாபீஸ் சூபரின்டென்டெண்டாயிருந்து பென்ஷன் பெற்றவரும், நிரம்பிய குலாபிமானியுமாகிய எதுமலை ஸ்ரீ T. கேசவாச்சாரியாரவர்கள் பிரிட்டிஷ் ராஜ்யத்தில் நம்மவர்களடைந்திருக்கும் நன்மைகளை யெடுத்துவிளக்கி, நமது ஜாதியார் முன்னேற முயற்சி செய்தற்கேற்றகால மிதுவே யென்றும், நமது ஜாதிமுன்னேற்றம் ஆங்கிலக் கல்வியினாலன்றி மற்றப்படி கைகூடமாட்டாதென்றும் வற்புறுத்தி, காலஞ்சென்ற இஞ்சினீர் செஞ்சி ராவ்பகதூர்—சுப்பராய ஆச்சாரியார் பி. ஸி. இ. அவர்களுடைய குடும்பத்தார் இங்கிலீஷ் கல்வி கற்று சிறந்திருப்பதுபோல் மற்ற குடும்பத்தாருங் கற்றுவிளங்குவாராயின் நமது குலத்தின் சிறப்பு நன்கு விளங்குமென்று தெரிவித்து, அரசாங்க உத்தியோகங்களில் விருப்போர் நடந்துகொள்ளவேண்டிய மாதிரிகளிற் சிலவற்றைப்பற்றிய தமது அநுபவங்களை யெடுத்துபதேசித்தார். ஸ்ரீ செஞ்சி ஆண்டி சுந்தராச்சாரியார். பி.ஏ.பி.எல் அவர்களால் அனைவர்க்கும் வந்தன மளிக்கப்பட்டது ப்ரொபஸர் K. அங்கப்பாச்சாரியார் சில ஜாலவித்தைகளைச் செய்து மகாஜனங்களைக் களிப்பித்தனர். இவ்விதக் கொண்டாட்டங்கள் வருஷந்தோறும் நிகழுமாறு அருட்பெருங் கடவுள் அருள்செய்வாராக.

26 MAR 1915 MADRAS



*
* *

விஸ்வகர்மச் சிறுவர் வித்யா நிதியைப்பற்றி நாம் ஏற்கனவே விளம்பரப்படுத்தியிருப்பது நண்பர்களுக்கு ஞாபகமிருக்கும். ஷை 20-11-14-உக் கூட்டத்தில் இந்நிதியைப்பற்றிய பிரஸ்தாபமும் நிகழ்த்தப்பட்டது. ஸ்ரீ பொல்லோஜு—வீரபத்திர ஆச்சாரியார், பி. ஏ. அவர்கள் ஷை நிதியைச் சுஜாதிக்கனவான்கள் ஆதரிக்கவேண்டிய அவஸ்யத்தை வற்புறுத்தினார். இந்நிதிக்கு நன்கொடைகள் பெறுதலை அம்மீட்டிங்கிலேயே ஆரம்பித்தல் நன்றென்று ஸ்ரீ T. கேசவாச்சாரியார் கூறிய ஆலோசனைப்படி செய்ததில் கீழ்க்குறித்த தொகைகள் கையொப்பஞ் செய்யப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ B. வீரபத்திராச்சாரி ரூபா * | 1 | 0 | 0 |
| ,, S. கந்தசாமி ஆச்சாரி | 100 | 0 | 0 |
| ,, T. கேசவாச்சாரி | 25 | 0 | 0 |
| ,, S. ஆண்டிசுந்தராச்சாரி | 10 | 0 | 0 |
| ,, M. கிருஷ்ணசாமி | 1 | 0 | 0 |
| ,, N முத்தியாலய்யா (பிரதிமாதம்) | 1 | 0 | 0 |
| ,, M. ஜீவரத்தினம் | 10 | 0 | 0 |
| ,, A. சுந்தரமூர்த்தி | 1 | 0 | 0 |
| ஓர் அபிமானி | 1 | 0 | 0 |
| ,, A. ஜெகந்நாத ஆச்சாரி * | 1 | 0 | 0 |
| ,, P. சாம்பசிவபத்தர் | 1 | 0 | 0 |
| ,, E. T. குமாரசாமி ஆச்சாரி | 1 | 0 | 0 |
| ,, A. தணிகாசலம் | 1 | 0 | 0 |
| ,, N. C. அருணகிரி ஆச்சாரி | 1 | 0 | 0 |
| ,, A. M. முருகேச ஆச்சாரி | 1 | 0 | 0 |
| ,, E. K. சண்முகம் | 0 | 8 | 0 |
| ,, N. வீராசாமி ஆச்சாரி | 0 | 8 | 0 |
| ,, T. பாட்சா ஆச்சாரி | 100 | 0 | 0 |
| ஒரு நண்பர் | 5 | 0 | 0 |
| ,, N. நடேசன் | 1 | 0 | 0 |
| ,, T. M. தெய்வசிகாமணி * | 1 | 0 | 0 |
| ,, P. செங்கல்வராய பத்தர் * | 1 | 0 | 0 |
| ,, B. M. சிவசங்கராச்சாரி | 1 | 0 | 0 |
| | 266 | 0 | 0 |

* அப்பொழுதே செலுத்தப்பட்டது.

உள்ளூர் வெளியூர் வாசிகளாயுள்ள நங்குலோத்தமர்களில் மற்றவரும் ஷை நிதிக்குத் தம்மாலான சகாயஞ்செய்தருளக்கோருகிறோம். பெருந்தொகைகளைக் கொடுக்க இயலாதவர்கள் மாதச் சந்தாவாகக் கொடுத்தல் நன்று. சென்னை, திருச்சிராப்பள்ளி, இராஜமகேந்திரம், மசூலிப்பட்டணம் முதலியவிடங்களில் காலேஜ் வகுப்புகளிலும் ஹைஸ்கூல் வகுப்புகளிலும் விஸ்வகர்மகுல வித்தியார்த்திகளிருக்கிறார்கள். இவர்களிற் சிலர் பொருளாதரவின்றி சங்கடப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். பணச்சகாய மேற்பட்டால் படிக்க பலர் முன்வருவார்களென் றெண்ண இடமிருக்கிறது. இத்தகையாளர்க்கு வேண்டிய சகாயந்தருமாறு நமது விஸ்வகர்மச் சிறுவர் வித்யாநிதியைப் பலப்படுத்த வேண்டாமா? இவ்வித நிதியொன்று, மற்ற ஜாதியார்க் கேற்பட்டது போல், முற்காலத்தே நமக்கேற்பட்டு குலச்சிறுவர்களுக்குச் சகாயஞ் செய்திருந்தால், இதுவரையிலும் எத்தனையோ பேர்கள் உயர்தரப் பட்டங்கள்பெற்று நமது ஜாதியின் மயலுறு வாழ்க்கையை மாற்றி மகோன்னதந் தந்திருப்பார்களே! சென்னைச் சர்வகலா சங்கத்து அறிக்கைப்படி 1913ஆம் வரையிலும் பி. ஏ-11,871; எம். ஏ-314; உபாத்திமைப் பட்டக்காரர்கள்-1361; பி. எல்-2536; எம். எல்-32; எல். எம். எஸ் (டாக்டர்)-309; எம். பி. ஸி. எம் (டாக்டர்)-134; எம். டி (டாக்டர்)-12; பி. ஸி. இ (இஞ்சினீர்கள்)-131 பேர்கள் பட்டப் பரீக்ஷைகளில் தேரியவர்களாகத் தெரிகிறது. இவ்விதப் பட்டதாரிகளில் நம்மவர்கள் எல்லாங்கூடி (நாமறிந்த மட்டில்) 12 பேர்களே! இவர்களாவார்—

ஸ்ரீ செஞ்சி. சுப்பராய ஆச்சாரியார், பி. ஸி. இ (இறந்துபோயினர்).

ஸ்ரீ செஞ்சி. ஆண்டி சுந்தர ஆச்சாரியார், பி. ஏ, பி. எல் (சென்னை ஹைகோர்ட் அபலெட்ஸைட் மானேஜர்)

ஸ்ரீசெஞ்சி. முத்துமாணிக்க ஆச்சாரியார், பி.ஏ (ப்ளீடர்)

ஸ்ரீ N. துரைவேலுஆச்சாரியார், பி.ஏ(சென்னை வருமான வரி இன்ஸ்பெக்டர்—Inspector of Income Tax)

ஸ்ரீ L. S. முருகேச ஆச்சாரியார், பி. ஏ. (இறந்து போயினர்)

ஸ்ரீ சித்தூர். சுப்ரமண்யஆச்சாரியார் பி, ஏ, எல். டி (பல்லாரி வார்ட்லா காலேஜ் உபாத்தியாயர்)

ஸ்ரீ T. வடிவேலு ஆச்சாரியார்(பல்லாரி வார்ட்லா காலேஜ் உபாத்யாயா)

ஸ்ரீ கந்துகூரி. மல்லிகார்ச்சுன ஆச்சாரியார் பி: ஏ (டிப்டி தாஸில்தார், காகிநாடா)

டாக்டர் R. சுந்தராச்சாரியார் எம். டி (கர்நூல் டிஸ்ட்ரிக்ட் மெடிகல் அண்ட் ஸானிடரி ஆபீஸர்)

ஸ்ரீ M. ஜீவரத்தின ஆச்சாரியார் பி. ஏ (சூபரின்டென்டென்ட், சீப் செகிரிடேரியட்)

ஸ்ரீ M. கிருஷ்ணசாமி பத்தர் பி. ஏ (போஸ்டல் அகவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட், சென்னை)

ஸ்ரீ பொல்லோஜு - வீரபத்திர ஆச்சாரியார் பி. ஏ (காகிநாடாகலெக்டராபீஸ்) உயர்தரப்பட்டதாரிகளில் 1000 ல் ஒருவரேனும் நம்மவரில்லை. என்றால், ஜனசமூகத்தில் நமக்கேற்பட்டுள்ள செல்வாக்குக் குறைவுக்குக் காரணம் வேறு வேண்டுமோ? நம்முள் மத்தியதரப் படிப்பும், கீழ்த்தரப்படிப்பும் இவ்வளவிலேயே யிருக்கின்றன. ஆயினும், படித்தற்குரிய புத்திகோசரம் நம்மக்களிடங் காணாமற்போகவில்லை. படிக்கக்கூடியவர்களையும் படிக்க விரும்புகிறவர்களையும் ஆதரித்து, அவர்களுடைய நாட்டத்தை உயர்தரக் கல்வியிற் புகுத்தி முன்னேற்றுதது குலத்தலைவர்களுடைய குற்றமாகும். எந்தெந்த குலங்கள் தமது சிறுவர்களுடைய வித்தியாபிவிருத்திக்கு அநுகூலங்கள் தந்தனவோ அந்தந்த குலங்கள் ஆனந்தபதவி யடைந்திருக்கக் காண்கின்றோம். ஆதலால், நண்பர்களே! நமது குல வித்தியார்த்திகளுக்குச் சகாயஞ்செய்ய இப்போது முதலாவது நாம் தப்பாதுழைக்கவேண்டும். பாடசாலைச் சம்பளங்களோ அதிகமாய்விட்டன. ஒவ்வொரு வகுப்பில் ஒருவரை வாசிக்கச் செய்வதாயினும் வருஷ மொன்றுக்கு ரூபா * 2413--செலவாகும். இவ்வளவு வருமானமேனும் நமது விஸ்வகர்மச் சிறுவர் வித்யா நிதிக்கு வருஷந்தோறுங் கிடைக்குமாறு நமது சகோதரர்கள் சகாயஞ்செய்யவேண்டியது அவஸியம். குலமக்களுடைய வித்தியாபிவிருத்தியில் நம்மவர்கள் உள்ளபடியே ஊக்கங்கொள்ளும் பக்ஷத்தில், மேற்குறித்த தொகைக்கு நூறு மடங்கதிகமாக இத்தருமத்திற்குப் பொருள் கிடைக்குமென்பது நிச்சயம். அவ்வளவுந்திரட்டி வித்தியாதானஞ்செய்து வருவோமானால், பத்து வருஷங்களுக்குள் சித்தங்களிக்கச் சிறப்பெய்தலாகும். நங்குல மேம்பாட்டிற்கு ஏற்றமார்க்கமிதுவே. இதனினும் நிச்சயமானது ஏதுவுமில்லை. பலவகைத் தானங்களின் பலன்களையெல்லாம் இலகுவில் கொடுப்பதாகிய வித்தியானஞ் செய்வதினும் விசேஷமாக ஒருவர் தம் பொருளை விநியோகிக்க முயுமோ? முடியாது, முடியாது. ஆதலால், ஒவ்வொருவரும் தமது சக்திக்கேற்றபடி உதவி செய்வார்களாக!

| * | ரூ | ௵ | மொத்தரூ |
|---|---|---|---|
| இண்டர்மிடியேட் (எப், ஏ) | 83 | 2 | 166 |
| பி. ஏ | 106 | 2 | 212 |
| வக்கீல் { எப். எல் | 150 | 1 | 150 |
| வக்கீல் { பி. எல் | 200 | 1 | 200 |
| டாக்டர் { எல். எம். எஸ் | | 4 | 490 |
| டாக்டர் { எம். பி. வி. எம் | | 5 | 635 |
| இஞ்சினீர் பி. வி. இ. | | 4 | 560 |
| | | ஆ | 2413 |

* * *

குடந்தை யென்னும் கும்பகோணத்தில் விஸ்வகர்ம ஜாதீய கான்பரன்ஸ் ஒன்று நடத்தும் விஷயமாய், சென்றமாதத்தில் அங்கு நடைபெற்றதோர் மீடிங்கைப்பற்றிய விபரம் வேறிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நாளது 1915-வருஷம் ஏப்ரல்மீ 2, 3, 4, உ களில் வரும் ஈஸ்டர் விடுமுறை காலத்தில் கான்பரன்ஸ் நடத்துவதாக அம்மீட்டிங்கில் தீர்மானிக்கப்பட்டதறிய நமது வாசகர்கள் சந்தோஷ முறுவார்களென்பதிற் சந்தேகமில்லை. தமிழ் நாட்டில் முதன்முதல் விஸ்வகர்ம கான்பரன்ஸ் நடத்த முன்வந்துள்ள குடந்தை யாருடைய குலாபிமானமும் பெருந்தகைமையுங் கொண்டாடற் குரியனவாயுள்ளன. இக்கான்பரன்ஸ் அந்நகரொன்றையே சார்ந்து நடத்தப்படுமோ, அன்றித் தஞ்சைஜில்லா முழுவதையுமே தழீஇ நடத்தப்படுமோ வென்பது திட்டமாய்த் தெரியவில்லை. இக்கான்பரன்ஸின் தலைமை வகிப்பவரும், உபசரணைக் கமிட்டியின் தலைமை வகிப்பவரும் காலதேச வர்த்தமான ஸ்திதிகளைக் கண்டொழுகுபவராய், நம்மவர்களுடைய நாட்டவோட்டங்களையும் குற்றங்குறைகளையும் நன்காய்ந்தறிந்தவர்களாய், இக்குலத்தை யீடேற்று மார்க்கங்களை ஐயந்திரிபற ஆலோசித்துணர்ந்து போதிக்கும் வன்மை பொருந்தியவராய், சுஜாதியினரேயன்றி விஜாதியினரும் கவுன்மெண்டாரும் கௌரவிக்கக்கூடிய கல்வியந்தஸ்துகளுடையவராயிருக்கவேண்டியது அத்தியாவஸ்யமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? கான்பரன்ஸின் ஆலோசனைக்குக் கொண்டுவரப்படவேண்டிய விஷயங்கள் யாவை யென்பதுபற்றிப் பலருடைய அபிப்பிராயங்களையும் முன்னதாகக் கேட்டறிந்து கொள்வது நன்றெனத் தோன்றுகிறது. எந்தெந்த விஷயங்களைப்பற்றி யாரியார் பேசவிரும்புகிறார்களென்பதைத் தெரிந்துகொள்வதும் நன்றே. இதை யிப்போதே நிச்சயித்துவிட்டால், அவரவர்கள் தாங்கள் குறிக்கொண்ட விஷயங்களைப்பற்றி நன்காலோசித்து, அவற்றிற்கான ஆதாரங்கள் தேடிக்கொள்வதற்குச் சௌகரியமதிகமேற்படும். ரிஸப்ஷன் கமிட்டி சேர்மன் உடனே தெரிந்தெடுக்கப்படவேண்டும்; கான்பரன்ஸ் பிரஸிடென்ட் 1915௵ ஜனவரிமாத முடிவிற்குள்ளாவது தெரிந்தெடுக்கப்பட வேண்டும். நாம் ஏற்கெனவே கூறியிருக்குமாறு கூட்டாயமாக விஸ்வகர்மத் தொழிற் பொருட் காக்ஷியொன்றும் ஷை கான்பரன்சுடன் நடைபெறுவதற்கேற்ற ஏற்பாடுகள் செய்யப்படுமென்று நம்புகிறோம். நமது வாசகர்களும் மற்ற குலாபிமானிகளும், ஷை கான்பரன்ஸ் நடவடிக்கை சம்பந்தமாகவும், ஆலோசனைக்குரிய விஷயங்களைப் பற்றியும் தாங்கள் கொண்டிருக்கக்கூடிய கருத்துக்களை நமது பத்திரிகை வாயிலாக வெளியிடவேண்டுகிறோம்.

மிஸ்ஸஸ் பெஸண்டு சமீபத்தில் செய்ததோர் உபந்நியாசத்தில் பின்வருமாறு சொன்னார்;—உலகத்தில் பகவத்கீதை பரவியிருக்கிறதுபோல, அவ்வளவு விஸ்தாரமாய், பய்பில் ஒன்றுதான் பரவியிருக்கிறது. கீதையை உலகத்திலுள்ள பலதேசத்தார் தங்களுடைய சொந்த பாஷையில் தர்ஜிமா செய்திருக்கிறார்கள். அமெரிக்கர்களுடைய பார்வைக்கு முதல் முதலில் வந்த ஸம்ஸ்கிருதநூல் கீதைதான். பாராயணஞ்செய்வதற்கும், தினப்படி சிந்திப்பதற்கும் யோக்கியதையுள்ள நூல் கீதையே கீதையை. எத்தனை முறை படித்தாலும், படிக்கப்படிக்கப் புதிது புதிதாய் அர்த்தங்கள் விளங்கும்.



## நமது மடங்கள்

விஸ்வகர்ம வம்ஸத்திற்கென்று தனியாய் மடங்களும் கோவில்களும் தென்னாட்டில் இருக்கின்றன. வடநாட்டிலும் அங்ஙனமே யிருக்குமென்று நம்புகிறோம். நமதுஜாதி மடங்களானவை, திருநெல்வேலி, திந்திரிணிபுரம் என்னும் திண்டிவனம், போதலூர், அந்தியூர் (பவானி), சிதம்பரம் முதலிய இடங்களிலிருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு மடத்திற்கும் ஒரு அதிபதி இருக்கின்றார். இவருக்கு சிஷ்ய ஜனங்கள் பலரிருக்கின்றார்கள். அவர்களிடமிருந்து கிடைக்கும் காணிக்கைகளினாலும், மடத்திற்குச் சொந்தமாக ஏற்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களினால் கிடைக்கும் வருமானத்தினாலும் ஷை மடாதிபதிகளும் அவர்களுடைய பரிவார ஜனங்களும் ஜீவித்து வருகின்றார்கள். நமது மடாதிபதிகளெல்லாம் லௌகிகஸ்தர்களாய் விவாகஞ் செய்துகொண்டு பெண்டுபிள்ளைகளோடு வாழ்ந்துவருவதாகத் தெரிகிறது. சந்நியாஸ ஆசிரமம் கொண்டவர்களாய் எவரும் இல்லைபோலும்!

இம்மடாதிபதிகள் அடிக்கடி சுற்றுப்பிரயாணஞ்செய்வதும், ஊரூராகத்தங்கி அங்கங்குள்ள நமது ஜாதியாரிடம் மரியாதைகளும் காணிக்கைகளும் பெறுவதும் சகசமாயிருக்கவேண்டும். என்றாலும், மற்ற ஜாதி மடாதிபதிகளுக்குக் கிடைப்பதுபோன்ற வருமானம் இவர்களுக்குச் சித்திக்குமென்று எண்ணுவதற்கு இடமில்லை. சிற்சில மடங்களுக்கு, அத்தியாவசியமாய்ச் செலவுக்கு வேண்டிய அளவு வருமானங்கிடைப்பதுங் கஷ்டமென்று சொல்லிக்கொள்ளப்படுகிறது. இது உண்மையானால், மிகவும் விசனத்திற்கிடமான நிலைமையேயென்று சொல்லவேண்டும். இந்தஸ்திதியில் நமது மடாதிபதிகளிருப்பார்களானால், அது மடாதிபதிகளுக்குச் சிறப்பாகாது, நமக்கும் யோக்கியதையல்ல. ஆதலால், அந்தஸ்திதி ஏற்பட்டிருந்தால் அதை மாற்றவும், அவ்வண்ணம் ஏற்படக்கூடுமானால் அதை விலக்கவும் வேண்டியது விஸ்வகர்ம வம்ஸத்தில் ஜனித்தவர்களாகிய ஒவ்வொருவருக்கும் கடமையாயிருக்கின்றது. நமக்குள்ள கடமைகள் ஒன்றல்ல, அநேகமானவையா யிருக்கின்றன. அவற்றுள் ஒன்றை மறந்து மற்றொன்றைச் செய்வது சிலாக்யமல்ல. எந்தக் கடமையையுங் கைவிடக்கூடாது. அந்தந்தக் கடமையின் விசேஷத்திற்குத் தக்கபடி அதனதனிடத்தில் கவனம் வைக்கவேண்டும்.

இப்படி யோசிக்கும்போது, நமது மடங்களும் நம்முடைய கவனத்திற்குப் பாத்திரமானவைகளா யிருக்கின்றனவென்பது புத்திக்குப் புலப்படும். இப்போது இவற்றைப்பற்றித் திட்டமாய் ஒன்றும் பலருக்குத் தெரியவில்லை. எத்தனை மடங்கள் நம்மவர்களுக்குத் தென்னாட்டில் ஏற்பட்டிருக்கின்றன? இவை எங்கேயிருக்கின்றன? இவற்றிற்கு அதிபதிகளாயிருப்பவர்கள் யார்? அவர்களுடைய கல்வி, ஆராய்ச்சி, வியாபகம், ஒழுக்கம், பெருமை, வயது முதலியவைகள் எப்படிப்பட்டவை? ஒவ்வொரு மடத்தின் செல்வாக்கு எவ்வளவு? இம்மடாதிபதிகளால் நம்மவர்களுக்கு உண்டாகும் நன்மைகள் யாவை?—என்னும் விஷயங்களைப்பற்றிய விபரங்கள் திட்டமாகவும் உண்மையாகவும் நமது வம்ஸத்து ஜனங்களுக்கெல்லாம் தெரிந்திருப்பது மிகவும் பிரயோசனகரமாகும். எற்கனவே இவ்விபரங்கள் தெரிந்திருக்கக்கூடியவர்கள் நமது பத்திரிகை மூலமாக அறிவித்தல் நன்று. ஒவ்வொரு மடத்தைச்சார்ந்தவர்கள் அல்லது சிஷ்யர்களாயிருப்பவர்கள் தமது மடத்தைப்பற்றிய விவரங்களை யெழுத முன்வருவார்களானால், ஜாதியார்க்குப் பெருநன்மையுண்டாக்கினவர்களாக மதிக்கப்படுவார்களெனலாம்.

இவ்வளவுதூரம் மடங்களைப்பற்றிச் சிந்திக்கவேண்டியது ஏனென்றால், அவற்றாலேதான் நம்முடைய ஜாதிநிலைமை நிர்ணயிக்கப்படுகிறது. நமக்கு ஆச்சாரியர்களாகவும், எஜமானர்களாகவும், பௌரோகிதர்களாகவும் இருக்கப்பட்டவர்களுடைய கல்வி அறிவு ஆசாரம் யோக்கியதை வியாபகம் கண்ணியம்முதலியவற்றைக்கொண்டுதான், நமது வம்ஸத்துப் பிரஜைகளுடைய லக்ஷணங்கள் கணிக்கப்படும். இது ஒவ்வொரு ஜாதி மதத்திற்கும் பொருந்திய உண்மையேயல்லாமல் வேறல்ல. யதாகுரு ததாசிஷ்ய; யதாஎஜமானஃ ததா சேவக; யதாராஜா ததாபிரஜா—என்பது போன்ற வாக்கியங்கள் எல்லாரும் அறிந்தனவே யல்லவா? மடாதிபதி கல்வியாளராயிருப்பாரானால், தமது சிஷ்யர்கள் கல்வியாளராயிருக்கத் தூண்டுவார். தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்—என்றார் நாயனார். மடாதிபதிகள் ஒழுக்கசீலராயிருப்பார்களானால், சிஷ்யர்கள் ஒழுக்கசீலராயிருக்கும்படி வற்புறுத்துவார்கள். காலதேச வர்த்தமானப் போக்கைக் கைப்பற்றி நடவாத மடாதிபதி தமது சிஷ்யர்களைச் செந்நெறியிற் செலுத்திச் சிறப்புக்கு இலக்காக நடத்துவித்தலும், அம்மடாதிபதியினால் சிஷ்யர்களுக்குப் பயனுண்டாதலுங் கூடாமையாகும். அவ்வித மடாதிபதி தம்முடைய சிஷ்யர்களுடைய மதிப்பையடைந்து வாழ்வது கஷ்டம்.

மடாதிபதியாயிருப்பவர் சிஷ்யர்களைவிடச் சில அம்ஸங்களிலேனும் சிறந்தவரா யிருக்கவேண்டும். இல்லாதபக்ஷத்தில் குருசிஷ்ய பாவனை யேற்படமாட்டாது. ஏற்படாவிட்டால், குருவினால் சிஷ்யனுக்கும் சிஷ்யனால் குருவுக்கும் யாதொரு பிரயோசனமும் உண்டாகாது. மடங்கள் ஏற்பட்டது நமது ஜாதியின் நன்மைக்கே யென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அந்நன்மையானது வைதிகார்த்தமானது மட்டுமே யல்லாமல் லௌகிகார்த்தமானதாகவுங் கொள்ளப்படத்தக்கது. ஆதலால் மடாதிபதிகள் இரண்டுவிதங்களிலும் சிஷ்யர்களுக்கு உபயோகப்படவேண்டியவர்களாயிருக்கின்றனர். இரண்டுவிதங்களில் ஒருவிதத்திற்காவ துபயோகப்படாமல், ஒருவர் காணிக்கைக்குமட்டும் கைநீட்டுவாரானால், அந்த மடாதிபதியை எந்த சிஷ்யன்தான் மதித்து மரியாதை செய்வான்! சொந்த ஜாதியாராகவும் சிஷ்யஜனங்களாகவு மிருப்போருடைய மரியாதையே ஒரு மடாதிபதிக்குக் கிடைக்கவில்லையென்றால், வேறுஜாதியார் அம்மடாதிபதியை மதிக்கப்போகிறார்களா? அதுதானில்லை. மதியாததோடு விட்டாற்போதுமே! அம்மடாதிபதியின் ஆதிக்கியத்திற்கு அடங்கியிருக்கும் நம்மவர்களைப் பரிகாசஞ்செய்யவுந் துணிகிறார்கள்! ஜாதியினுடைய பெருமை நிர்ணயிக்கப்படுதற்கு மடாதிபதிகளின் நிலைமையும் ஒருகாரணமென்பது இதனால் எல்லோருக்கும் எளிதில் விளக்கமாகும். எனவே, அவற்றைச் சீர்திருத்தவேண்டிய அவசியமும் விளக்கமாகும்.

ஜாதியாருடைய வைதிக ஸ்திதிக்கும் லௌகிகஸ்திதிக்கும் காரணபூதர்கள் மடாதிபதிகளேயல்லாமல் வேறெவருங் கிடையாது. ஒரு மடத்தைச்சேர்ந்தவர்கள் ஆசாரஹீனர்களாயிருப்பார்களானால் அந்தபழி அம்மடத்தைச்சாரும். ஒருபந்துக்கட்டாருடைய ஒழுக்கம்கெட்டிருக்குமாயின், அதற்கு ஜவாப்தாரிகள் அப்பந்துக்கட்டின் எஜமானகாரியஸ்தர்களேயல்லவா? ஒரூரார் வித்தியாசூன்யர்களா யிருப்பார்களானால் அக்குறை அவர்களுடைய மடாதிபதியையே பாதிக்கும். வித்தியாவல்லபராகிய சற்குருவின் சீடர்கள் வித்தியாவிஹீனத் துன்மார்க்கர்களா யிருப்பதொல்லுமோ? நமது ஜாதியாரின்



சீர்திருத்தம் நமது மடாதிபதிகளாலேதான் கைகூடவேண்டும். அவர்களுக்கு அதிகாரமுண்டு, செல்வாக்குண்டு, வருமானமுண்டு, வசதிகளுண்டு, எல்லாமுண்டு. அவர்களுக்குக் கட்டுப்படாத ஜனங்கள் யாருக்குத்தான் கட்டுப்படுவார்கள்! அங்கங்குள்ள நாட்டாண்மைக் காரர்களைத் தமது வழிப்படுத்திக்கொள்வார்களானால், எல்லாமுஞ் சரிவர நடத்துவிக்கக்கூடும்.

இவ்வளவு செய்வதற்குத் தக்க ஞானமுங் கல்வியும் பெருந்தன்மையும் வைராக்கியமும் பொறுமையும் விடாமுயற்சியும் மடாதிபதிகளிடம் பொருந்தி விளங்கவேண்டும். இந்த லக்ஷணங்களையுடைய மடாதிபதிகள் இப்போதே ஜாதிச்சீர்திருத்த வேலையை ஆரம்பிக்கவேண்டும். சமஸ்கிருத பாடசாலைக்கும், சிற்பகலாசாலைக்கும், பௌரோகித வகுப்புக்கும் ஸ்தானம் நமது மடங்களேயாகுமல்லவா? இவற்றைஸ்தாபித்து நடத்தவேண்டியவர்கள் நமது மடாதிபதிகளன்றி வேறு யாவர்? இதையறிந்து நமது மடாதிபதிகள் நடந்திருப்பார்களானால், இதுவரையிலும்எவ்வளவோ சமஸ்கிருதத்தேர்ச்சி நயது ஜாதிக்குள் உண்டாயிருக்குமே! சிற்பசாஸ்திரம் இருந்தவிடந்தெரியாமல் நசித்துப்போயிருக்கமாட்டாதே! பௌரோகிதக் குறைவால் நாம் பரிதபிக்கமாட்டோமே! மடத்துக்குமடம் கல்விச்சாலை யேற்பட்டிருக்கும்பக்ஷத்தில், வேறிடத்தில் இவை வேண்டப்படுமோ! அல்லது, இவற்றினும் பொருத்தமான ஸ்தானம் ஷை கலாசாலைகளுக்கு வாய்க்குமோ? நண்பர்களே! நன்றாய் யோசித்துப்பாருங்கள். மடாதிபதிகளினும் மிக்கவர்களான அதிகாரிகளை ஷை பாடசாலைகளுக்கு நாம் எங்குதேடப் போகிறோம்?

மடாதிபதிகள் சிஷ்யர்கள் ஆகிய இருதிறத்தினரும் பழிப்புக்கிடந்தனரென்று சொல்லலாம். அஃதெப்படியாயினும், இப்போது குருசிஷ்யர்களாகிய இருதிறத்தினரும் சீர்திருத்தப்படவேண்டியவர்களாயிருக்கிறார்கள். குருக்களைச் சீர்திருத்துவது சிஷ்யர்களாலும், சிஷ்யர்களைச் சீர்திருத்துவது குருக்களாலும் ஆகவேண்டிய வேலை. இந்தச் சீர்திருத்தம் இருதிறத்தாருக்கும் நன்மையையும் பெருமையையும் உண்டாக்குமென்பதில் சந்தேகமேயில்லை. மடங்கள் சீர்திருந்தினால், ஜாதியார்க்குச் சீர்திருத்தமும் கௌரவமும் உண்டாகும். ஜாதிசீர்ப்பட்டால் மடங்களுக்கு மரியாதையும் வருமானமும் அதிகப்படும். இருவகையாரும் ஒருவழிப்பட்டு உள்ளங் கலந்தொழுகினால் உன்னதமுண்டாதல் ஒருதலையென்பது உலகசம்மதமான உண்மை. இவ்வுண்மை கடைப்பிடித்து நடப்போமாயின், நாம் உயர்வடைதல் நிச்சயம். இதிற்கண்ட அபிப்பிராயங்களைப்பற்றி முக்கியமாய் மடாதிபதிகள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தல் விசேஷமாகும். இதனிலும் மேலானகாரியம் அவர்களுக்கு வாய்க்குமென்று தோன்றவில்லை. மடங்களின் சீர்திருத்த விஷயமாகவும் ஜாதியாசாராதி விஷய சீர்திருத்த சம்பந்தமாகவும் மடாதிபதிகள் தாம் தெரிவிக்கவேண்டியவற்றை யெல்லாம் இப்பத்திரிகை மூலமாக வெளிப்படுத்தலாம்.

## தொழிற்சாலை—நெல்குத்துஞ்சாலை.

ஸ்ரீ தூ. கு. கதிரேசன் ஆச்சாரியார்,
ஜெனரல் இஞ்சினீர், தூத்துக்குடி

1914௵ அக்டோபர்௴ நமது சபையின் பத்திரிகையில் வெளிவந்த விஸ்வகர்மத் தொழிற்சாலையென்னும் வியாசம் வெகு உற்சாகத்தைக் கொடுக்கின்றது. அவ்விதமுயற்சி நமது விஸ்வகர்மகுலத்தினர் யாவரும் நல்ல நிலைமைக்கு வருகிறதற்கு தக்க வுபாயமாகும். கூலி வேலை செய்வதினால் பற்பலவித அவஸ்தை யடையும் நம்மவர்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு, குலாபிமானிகள் யாவரும் திருவுளம்பற்றி தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்துவார்களாகில் நம்குலத்தினரில் எத்தனையோ பேர்கள் ஈடேறுவார்கள்; எத்தனையோ ஏழைகள் பிழைப்பார்கள்; சிறுவர்கள் நன்றாய் வேலை கற்றுக்கொள்வார்கள்.

நமது குலத்தார் அனேகர் பற்பல அருமையான வேலைகளில் மிகத் தேர்ச்சியடைந்தவர்களா யிருக்கிறார்கள். ஒவ்வொருவர் செய்கிற அற்புத வேலைகளைப் பார்க்கப்பார்க்க மிக அருமையாயிருக்கிறது. என்றாலும், அவை நன்றாய்ப் பிரகாசிக்காமலும் பிறருக்குப் பிரயோசனப்படாமலும் போய்விடுகின்றன. நல்லவேலைகளுக்கு சரிடானசம்பளம் கிடைக்கவில்லை. அதனால் எந்தத் தொழிலும் முன்னுக்குவர மார்க்கமில்லாமல் போய்விடுகிறது. வேலையை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் பொருள் அதிகமாய் வேண்டியதாயிருக்கிறது. பொருளைவைத்துப் பொருளைச் சம்பாதிக்கவேண்டியதே தவிர பொருளில்லாமல் ஒன்றும் முடியாது.

நமது தேசத்தில் எத்தனையோ கம்பெனிகள் இருக்கின்றன. பற்பல மில்களிருக்கின்றன. அவற்றில் சிலவற்றில் விஸ்வகர்ம குலத்தினர் இஞ்சினீராகவும் மேஸ்திரிகளாகவுமிருந்து வேலை நடத்துகிறார்கள். கொல்லாச்சாரி, தச்சாச்சாரி முதலியவர்களும் வேலைபார்த்து வருகிறார்கள். நம்மவர்கள் இங்கிலீஷ் படியாததால் பிரமோஷன் பெற்று பெரிய உத்தியோகங்களை யடைவது கஷ்டமாயிருக்கிறது. அதினாலேதான் நமது குலத்தினர் தமது பிள்ளைகளை நன்றாய் வாசிக்கவைக்க வேண்டுமென்று தெரிந்தவர்கள் முறையிடுகிறார்கள். நமது மாசாந்தரப் பத்திரிகையிலும் இதுவே போதிக்கப்படுகிறது. இப்படி யிருந்தும், சிலர் இன்னும் வாசிப்பைக் கவனியாமலிருப்பது என்ன பரிதாபம்! இவர்கள் இனியாவது பிள்ளைகளுக்கு இங்கிலீஷ்ப் பாஷையை

நன்றாய்க் கற்றுக்கொடுப்பார்களாக. இந்தக் காலத்தில் இங்கிலீஷில்லாவிடில் யாதும் பிரயோசனமில்லை.

விஸ்வகர்மத் தொழிற்சாலை யேற்படுத்தினால் நன்றாய் வேலை நடக்கும்; நல்ல வரும்படியும் வரும்; நம்மவர்கள் ஏற்பாடுசெய்ய மற்றயாவரும் மிக ஆசையுடையவர்களா யிருக்கிறார்கள்; இதற்கு இஞ்சினீர் சூப்பிரண்டென்டின்டன்ட், போர்மென், மேஸ்திரி, பிற்றர்கள், மானேஜர், ரயிடர்கள் நம்முடையவர்களில் அதிகமாயிருக்கிறார்கள். சென்னை, நாகப்பட்டணம், திருச்சி, போத்தனூர், கோயமுத்தூர், மதுரை, தூத்துக்குடி முதலிய விடங்களில் நம்முடையவர்கள் இஞ்சினீர்களா யிருக்கிறார்கள்.

ஆனால் மெக்கானிகல் ஓர்க்ஷாப்பென்றால் சாமானியமானதல்ல. ஓர்க்ஷாப் மிஷினெரி வகைக்கு குறைந்த பக்ஷம் ரூபா 10,000, கைமுதல் வகைக்கு ரூபா 5000 ஆக ரூபா 15,000 இருக்குமாகில் கவர்ன்மென்ட் ஆடர், முனிசிபல் ஆடர், லோகல் பண்டு ஆடர், ஸ்கூல் வேலைகள் முதலியவை தைரியமாய்ச் செய்யலாம். சூப்பிரின்டென்ட், இஞ்சினீர், மானேஜர், போர்மென், மேஸ்திரி, ரயிடர், பிட்டர்கள், டர்னர், (ப்ளாக்சிமித்) கொல்லாச்சாரி, தச்சாச்சாரி முதலியவர்களுக்கு சம்பளம் குறைந்த பாகம் ரூபா 100, 75, 60, 50, 45, 40, 35, 30, 25, 20, 18, 15 நேமித்து, 3 மாதம் வரை கைவிட்டு சம்பளம் கொடுக்க பண்டு ரூபா 1500 வேண்டும். மரம் இரும்பு வகைக்கும் கைவசம் நேரிடும் செலவுக்கும் ரூபா 3600 வேண்டும். வேலை துவக்கினவுடன் ஓர்க்ஷாப் தகுந்த லாபம் கொடாது. மூன்று மாதம் சென்றபின் தான் அதிலிருந்து வரும்படி பார்க்கலாம். எந்த வியாபாரமும் திடீரென்று லாபத்தைக் கொடுக்கமாட்டாது; முதலில் லாபமில்லை என்று கவலைவைக்கக்கூடாது.

என்பார்வைமட்டிலும்சென்னைப்பட்டணத்திலிருந்து கோயமுத்தூர் பக்கம்வரையும், அதைத் தவிர்த்து திண்டுக்கல் முதல் தூத்துக்குடிவரையிலும் எத்தனையோ இங்கிலீஷ் தொழிற்சாலைகளும் சுதேசிகளுடைய சாலைகளும் இருக்கின்றன. திருநெல்வேலி ஜில்லா தென் பாகத்தில் அதிகமில்லை. இந்தக் காலத்தில் பருத்திக்கு எவ்வளவு பிரியமோ அவ்விதம் அரிசிக்கும் பிரியமிருக்கிறது. ஆனதால், நமது குலத்தினர் யாவரும் சேர்ந்து ஒரு (ரயிஸ்மில்) நெல்குத்துஞ்சாலை வைத்தால் எவ்வளவோ லா மிருக்கும். நம்மவர்கள் ஓர்க்ஷாப் துவக்க வேண்டுமானால் அதிகமாக பணச்செலவு நேரிடும். ஆனதினால், ரயிஸ்மில் இல்லாதவிடத்தில் ஒன்று துவக்கினால் அதினால் அதிக லாபம் கிடைக்கும். அதைக் கொண்டு நாம் என்னென்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யலாம்.

நான் சொந்தக்காரியமாகத் திருநெல்வேலி ஜில்லாவுக்குத் தென்பாகம் போயிருந்தபோது அவ்விடம் எனக்குத் தெரிந்தது. அங்கு அதிக நெல்லும் பருத்தியும் விளைகிறது. எந்தக் காலமும் நெல்லுக்குத் தடை கிடையாது. ரயிஸ்மில்லுடன் ஜின்வைத்தால் நெல்லும் அறுவையாகும் பஞ்சும் அறுவையாகும். சரியான துரையார்களைக்கொண்டு பஞ்சை வாங்கும்படி செய்யலாம். நெல் அறைத்தால் சரியான லாபம் கிடைக்கும்; கைகண்ட லாபமுண்டு. முதலில் ஓர்க்ஷாப் துவக்கினால் பயன்படமாட்டாது.

அப்படி அபேக்ஷயிருக்கும் பக்ஷத்தில் ரயிஸ் மில்லுடன் எல்லாவேலையும் செய்யலாம். சரியான (சென்ட்ரல் பிளேஸ்) மத்தியஸ்தானம் அந்த இடத்தைத் தவிர மற்ற யாதும் கிடையாது. அவ்விடமிருக்கிற ஆள்கள் ஏன் இதைக் கவனிக்கவில்லை என்று கேள்வி பிறக்குமாகில், அவ்விடமிருக்கும் மனுஷாள் மேலும் மேலும் வயலைவாங்குகிறதினால் இப்பேர்ப்பட்ட சங்கதிகளில் அவர்கள் தலைப்படவில்லை; அதுதான் காரணம். நாம் பொருள்வரும் வழியைக் கவனித்து சம்பாதித்து அப்பொருளைக்கொண்டு பற்பல காரியங்களைத் துணிவுடன் செய்வது நன்று. ரயிஸ்மில் துவக்கவேண்டுமானால் ரூபா 10,000 மிருந்தால் போதுமானது அதிகம் வேண்டாம்; அதிலிருந்து எவ்வளவோ மேம்பாடடையலாம். இதை நமது குலாபிமானிகள் கவனித்து தக்கவற்பாடு செய்யவேண்டும். ரயிஸ்மில் துவக்குகிற இடம் தெரிய வேண்டுமானால் அதை வேண்டுவோர்களுக்கு உடனே பதில் எழுதுகிறேன். நம் குலத்தினர்கள் வியாபாரப் பழக்கத்திலிருக்கவேண்டியது மிக முக்கியம். பல வியாபார விஷயமும் தெரிந்தால் எல்லாக்காரியமும் கைகூடும். ரயிஸ் மில்லைப் பற்றி நான் நிரம்ப தைரியமாகவும் உறுதியாகவும் சொல்லக்கூடும். எந்தவித வுபகாரமும் அவ்விடமிருக்கிற ஆள்களைக்கொண்டு நமக்குச் செய்துகொள்ளமுடியும். நான் பார்த்தவிடம் யாவருக்கும் பொருந்தியவிடம், சரியான பட்டணம். ரயிஸ்மில் துவக்குகிறதற்கு இது நல்ல சமயம்; இந்த சமயம் துவக்கினால் சரியானவேலை சுளுவாகவும் கூடிய சீக்கிரத்திலும் நடக்கும். ஜனவரிமுதல் நெல் அறுவையாகும். 4-பங்கு சேர்ந்தாலும் அல்லது 8 பங்கு சேர்ந்து நடத்தினாலும் சீக்கிரம் முடியும்.

## For Work Shop Machinery.

| | Rs. |
|---|---:|
| One 20 feet Screw Cutting Lathe ... | 2,200 |
| One 10 feet Screw Cutting Lathe ... | 850 |
| One Steam Hammer ... | 750 |
| One Planing Machine ... | 875 |
| One Punching Machine ... | 900 |
| One Wheel-cutting Machine ... | 855 |
| One Box Taps and Dies ... | 200 |
| One Box Common Taps and Dies ... | 125 |
| One Oil Engine or Steam Engine ... | 1,500 |
| Black smith's tools ... | 200 |
| Carpenter's tools ... | 80 |
| Files and Hammers ... | 90 |
| Vice, Grinding stone &c., ... | 350 |
| Casting Furnace ... | 750 |
| | 9,725 |



## சிற்பசாஸ்திரப் பயிற்சி

### "தொழிலாளி" எழுதியது

'சிற்பிகள் கை அற்புதங்கள்' என்று நமது பத்திரிகையில் இதுவரையிலும் வெளிவந்துள்ளவை அற்புதமானவையாகவே காணப்படுகின்றன. இவற்றினும் அற்புதமான வேலைகள் தென்னாட்டிலும் மற்ற இடங்களிலும் நமது சிற்பாசாரியர்களால் செய்யப்பட்டிருப்பதாய்ச் சொல்லிக்கொள்ளப்படுகிறது. இப்படி அதிசயமதிசயமாய் இவர்கள்செய்வதற்கு வல்லமை தந்ததியாது? சிற்பசாஸ்திரமேயாகும். அவ்வித சிற்பசாஸ்திரங்கள் முக்கியமாய் சமஸ்கிருதபாஷையிலேயே யிருந்துவந்தன. நம்மவர்கள் பூர்வகாலத்தில் சமஸ்கிருதக் கல்வியில் வல்லவர்களா யிருந்தார்களென்பதற்கு சிற்பசாஸ்திரங்களே சாக்ஷி. அதனாலேதான் அந்தசாஸ்திரங்கள் சமஸ்கிருதபாஷையில் எழுதி வைக்கப்பட்டன. அந்தகாலத்தில் நமது ஜாதியார் எல்லோரும் கல்வியிற் சிறந்தவர்களா யிருந்துவந்தார்கள். சிற்பவகுப்புக் குடும்பங்களில் சமஸ்கிருதம் முக்கியமாய்ப் போதிக்கப்பட்டுவந்தது. நாளடைவில் அந்தக் கல்வியைக் கைவிட்டுவிடவே சிற்பசாஸ்திரஞானங் குன்றந்து போயிற்று.

சமஸ்கிருதபாஷையை யறியாதவர்கள் சிற்ப சாஸ்திரத்தினால் பிரயோசனமடையக்கூடுமோ? கூடாது. பிரயோசனந் தராததொன்றின் அருமைவிளங்காது. ஆதலால், சிற்பவகுப்புக் குடும்பச்சிறுவர்களும் பெரியவர்களும் தமது வீடுகளிலிருந்த சிற்பசாஸ்திர ஓலைகளின் அருமைதெரியாதவர்களாய் அவற்றைப்போக்கடித்துக்கொண்டனர். இப்போது சிற்பசாஸ்திரங்கள் வேண்டுமென்று தேடினாலும் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. கிடைத்தாலும், நம்முள் படிப்பவர்களெங்கே, அர்த்தஞ்சொல்லுகிறவர்களெங்கே? பரம்பரையாய்ப் பழகினவர்களும் பாடங்கேட்டவர்களுமாகிய சிற்பாசாரிகளால் அந்த சாஸ்திரங்களுக்கு அர்த்தஞ்சொல்லிச் செய்துகாட்ட முடியுமேயல்லாமல், சாதாரண சமஸ்கிருதபண்டிதர்களுக்கு சிற்பசாஸ்திர வாக்கியங்கள் விளங்கமாட்டாவென்று சொல்லிக்கொள்ளப்படுகிறது. ஆதலால், சமஸ்கிருதம் தெரிந்துகொண்டாலும் சிற்பசாஸ்திரம் அவ்வளவாகப் பயன்படமாட்டாதென்று பயப்படவேண்டியதாயிருக்கிறது அன்றி, பயன்படுத்திக் கொள்வோமென்று புறப்பட்டாலும் சாஸ்திரங்கள் கிடைப்பதோ துல்லபமாயிருக்கிறது. ஆதலால், சிற்பசாஸ்திரப்பழக்கமில்லாதவர்கள், இனி புதிதாய் சமஸ்கிருதம்பயின்று சிற்பம்பழகுவது சாத்தியமில்லையென்பது வெளிப்படை.

அப்படியானால், சிற்பத்திற் குரியவர்களாகிய நாம் அந்த சாஸ்திரஞானமே வேண்டாமல் அத்தொழிலைக் கைவிட்டுவிடலாமா? விடமுடியாது, விடவுங்கூடாது. மற்று, சிற்பசாஸ்திரஞானம் அடைவதெப்படி? இங்கிலீஷ் வாசிப்பினாலேதான் இது முடியவேண்டும். சிற்பசாஸ்திரப் பிரவீணர்களென்று உலகத்தார்கொண்டாடும்படி அதியற்புதமான காரியங்களைச் செய்துவரும் இங்கிலீஷ்காரர்கள், ஜெர்மானியர், அமெரிக்கர், ஜப்பானியர் முதலானவர்கள் எந்த சாஸ்திரங்களிற் பழகிப் பிரக்யாதியடைந்தார்களோ அந்த சாஸ்திரங்களை நாம் படித்தால், அவர்கள் அடைந்துள்ளதுபோன்ற ஞானம் நமக்கும் வாய்க்கும். அதற்காக நாம் ஆங்கிலேய பாஷையைப் படிக்கவேண்டியது அத்யாவஸ்யமாயிருக்கிறது.

எலக்ட்ரிஸிடி யென்னும் மின்ஸாரத்தினால் இப்போது என்னென்ன நடக்கிறதென்று விசாரித்துப் பார்த்தால் பிரமிப்பு உண்டாகிறது. மின்சார சாஸ்திரம் சிற்பசாஸ்திரங்களி லெல்லாம் மேலானதென்று சொல்லவேண்டும். இதில் எந்த தேசத்தார் வல்லவர்களா யிருக்கிறார்களோ அவர்கள் மற்ற தேசத்தார்களை ஊழியர்களாகக் கொள்ளுகிறார்கள். இந்த சாஸ்திரத்தை நாம் படிப்பது இங்கிலீஷ் பாஷையின் உதவியில்லாமல் ஆகுமா? தாதுசாஸ்திரம், உலோகசாஸ்திரம், ரசாயனசாஸ்திரம் முதலிய வெல்லாம் சிற்பசாஸ்திரங்கள் எனப் படத்தக்கவையேயல்லாமல் வேறல்ல. இவற்றைப் படிப்பதற்கும் இங்கிலீஷ் தெரிந்திருக்கவேண்டும். தமிழ்ப்புத்தகங்களையோ, தெலுங்கு கிரந்தங்களையோ, சமஸ்கிருத ஏடுகளையோ படித்து சிற்பசாஸ்திர நிபுணத்துவ மடைதல் இக்காலத்தில் இசையாது. மேலே கூறிய மின்சாரசாஸ்திரம், தாது சாஸ்திரம், உலோகசாஸ்திரம், ரசாயனசாஸ்திரம், விஞ்ஞானசாஸ்திரம் என்பவைகளெல்லாம் சிற்பசாஸ்திரப் பகுதிகளேயாதலால், இவற்றைப் படித்தல் சிற்பசாஸ்திரம் படித்தலாகும். நாம் இப்படி சிற்பம் பயில முடியுமேயல்லாமல் வேறு விதத்தால் முடியாது. ஆதலால், சிற்ப வகுப்பாரும் மற்ற வகுப்பாரும் தமது மக்களுக்கு இங்கிலீஷ் பாஷையைக் கற்பித்துக்கொடுத்து, அவர்களை இஞ்சினீரிங் காலேஜ்களில் நுழைத்து சிற்பாசாரிகளாக்கி, நமது வம்ஸத்தின் பூர்வீக சிற்ப கௌரவம் மறைந்தொழியாதபடி காப்பாற்றுவார்களாக.

## விஸ்வகர்மகுல வித்தியார்த்திகள்.

(14-ம் பக்கத்துத் தொடர்ச்சி)

ஸ்ரீ G. T. வெங்கடாச்சாரியார், சென்னை.

இங்கிலீஷ் படிப்பின் அருமைதெரிந்துள்ள பலஜாதிக்கனவான்கள் அந்தப் படிப்பை விரும்பும் தமது ஜாதிப்பிள்ளைகளுக்கோ வேறுஜாதிப் பிள்ளைகளுக்கோ பொருள் சகாயஞ்செய்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவருவதுபோல, விஸ்வகர்மகுலக் கனவான்கள் சுஜாதிப்பிள்ளைகளுடைய கல்விப்பயிற்சிக்குத் துணைசெய்யவேண்டும். இங்ஙனஞ் செய்வதினால் அவர்கள் புகழ் எங்கும்பரவும். வித்தியாதானஞ்செய்த புண்ணியம் அவர்களுக்குச் சித்திக்கும்; அவர்கள் குடும்பத்துப் பிள்ளைகள் நன்றாய் வாசித்து பிரக்யாதிபெறுவார்கள்; விஸ்வகர்மகுலத்தில் கல்வியுஞ் செல்வமும் அதிகமாய்ப் பரவும்; அதனால் இக்குலத்தினர் நன்மதிப்பை யடைவார்கள்.

பொதுவாக, அதிக சிரத்தையுடனும், கவலையுடனும் வாசிப்பவர்களும், அப்படிப்பையே ஜீவனத்திற்காதாரமாய்க்கொண்டு மேன்மேலும் விருத்திசெய்யும்நோக்கமுள்ளவர்களும் ஏழைச்சிறுவர்களேயா யிருக்கிறார்கள். இவர்கள் பாடசாலைச்சம்பளத்திற்குப் பணங்கிடைக்காமல் பரிதபிப்பது சகசமாயிருக்கிறது. சிற்சிலருக்கு தமது வீடுகளில் அன்னங்கிடைப்பதும் அரிதாகிறது. கல்வியில் நாட்டமுடையவர்களாகவும் வாசிப்பில் தீவிரமுள்ளவர்களாகவு மிருக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு பாடசாலைச்சம்பளங் கொடுத்து, இருப்பதற்கு விடுதியும் உண்ண ஆகாரமும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது தனவான்களுடைய கடமையேயென்று சொல்லலாம். இவ்வித உதவிபெற வருபவர்கள் தற்காலத்தில் நமதுஜாதியில் சொல்பமேயாவர். ஏனென்றால், அநேகர் தங்கள் குழந்தைகளை விட்டுப்பிரிய மனந்துணியாதவர்களாகவும் பிறருடைய ஆதரவு தேடி வாசிப்பது அகௌரவமென் றெண்ணுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். உயர்தரக்கல்வியை நாடியுழைக்கும் வித்தியார்த்திகள் நம்முள் மிகச் சிலராயிருக்கின்றனர். ஆகையால் தர்மகுணவான்களெல்லாம் உதவிசெய்யத் தலைப்படுவார்களானால் அவ்வுதவி பெறுதற்கு மாணவர்களகப்படுவது அருமையாய் முடியும்.

இனி, வித்தியார்த்திகளுக்கு உதவிபுரிய விரும்புகிறவர்கள் தாம்தாம் தனித்தனி வித்தியார்த்திகளைத் தேடிப் பொருள் சகாயஞ்செய்வது இயலாது. வித்தியார்த்திகளும் தர்மகுணசீலர்களைத் தேடியலைந்து பணஞ்சேகரிப்பது அசாத்திய காரியம். அப்படிச் செய்யப் புறப்படுவார்களானால் அவர்களுடைய வாசிப்புக்குப் பங்கம் நேரிடும். இந்தத் தொல்லைகளைத் தொலைப்பதற்காகத்தான் வித்தியாநிதி (பண்டு) கள் அங்கங்கு பல ஜாதியாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நமது குல வித்தியார்த்திகளுக்கென்று சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையார் ஒருநிதி ஏற்படுத்தியிருக்கின்றபடியால், வித்தியாபிவிருத்திக்குச் சகாயஞ்செய்ய விருப்பமுடையவர்களெல்லாம், ஷை நிதிக்குச் சேரும்படியாக நமது சபையார்க்குப் பொருள் அனுப்பலாம். சகாயஞ்செய்வோர் மொத்தமாய்ப் பெருந்தொகை தந்தாலும், அன்றி மாதந்தோறுஞ் சிறுதொகைகள் தரினும் நன்றே! இப்படிச்சேரும் நிதியிலிருந்து விஸ்வகர்ம வித்தியார்த்திகள்யாவருக்கும் சகாயங்களைச்செய்வது சுலபசாத்தியமாகும்.

பிராம்மணகுல வித்தியார்த்திகளில் ஏழைகளாயுள்ளவர்கள், அக்குலக் கனவான்களுடைய ஆதரவால் தினமொரு வீடாகச் சாப்பிட்டுக்கொண்டு வாசிக்கிறார்கள். இப்படிச் சாப்பாடிடுவோர்க்கு அதனால் நேரிடுஞ் செலவு ஒருபொருட்டாகத் தோன்றுவதில்லை. இவர்களை பணமாகக் கைவிட்டுச் சாப்பாட்டுச் செலவுக்குக் கொடுப்பதென்றால் பின் வாங்கலாம். நமதுகுல வித்தியார்த்திகளுக்கோ இந்த சௌகரியங்கிடையாது. நம்மவர்களில்லங்களில் போஜனந் தயாராகும் வேளைக்கும் பள்ளிக்கூட வேளைக்கும் ஒவ்வாது. சாதாரணமாய் உத்தியோகஸ்தர்கள் வீடுகளில்தான் வேண்டிய வேளைக்குச் சாப்பாடாகும். வாரத்தின் ஏழு நாட்களுக்கு ஒவ்வோர் வீடாகச் சாப்பிடுவதற்கு ஏழுபேர் உத்தியோகஸ்தர்களை ஓரிடத்திற் காண்பதோ மகா துல்லபம். ஆகலால், நமது வித்தியார்த்திகளுக்கு சாப்பாடளிக்கவேண்டுமானாலும் பொது நிதியிலிருந்து பொருளாகத்தான் கொடுத்துதவவேண்டும்.

புத்தகங்கள் முதலியவற்றிற்கும் பொருள் வேண்டியதாயிருக்கிறது. இவற்றிற்கெல்லாம் உதவும்படியாகத்தான் விஸ்வகர்மச் சிறுவர் வித்யாநிதி சேர்க்கப்படுவதாய்த் தெரிகிறது. இதை நமது குலத்தினர் நன்றாய் ஆதரிப்பார்களானால், மற்ற ஜாதியார்களில் பற்பலர் படித்துப் பாஸ்பண்ணி பெரிய உத்தியோகங்களைப்பெற்று தமது ஜாதியாரையுயர்த்தி அவர்களை மேலுக்குக் கொண்டுவருவதுபோல், நமதுஜாதிப் பிள்ளைகளும் நடப்பார்களென்பதிற் சந்தேகமில்லை.



## இந்தியப் பழங்குடிகள்

காயிரம்பேடு-ஸ்ரீ. திருவேங்கட ஆச்சாரியார்.

மிகப்பழைய காலத்தே இந்தியாவின் வடபாலில் ஆரியர் படிப்படியாகக் குடியேறிப் பரவிவரும்போது அவர்க்கு முன்னும் பின்னும் வேறு சில ஜாதியாரும் வடகீழ் நாடுகளிலிருந்து இத்தேசத்திற் குடியேறத் தொடங்கினரென்பது நவீன சரித்திர வறிஞர் பலரது கொள்கையாக இருக்கிறது. ஆரியர் தங்குடியேற்றத்தில் இத்தேசப்பழங்குடியினருடன் பெரும்போர்புரிந்து அவரை அடக்கியாளவேண்டியிருந்ததோடு, தம்மைப்போல வேறிடங்களிலிருந்துவந்து குடியேறிய ஜாதியாரோடும் அவ்வாறு எதிர்க்கநேர்ந்தது இப்பெருங்கருமத்தைச் சிறிதும் சலிப்பின்றித்தொடர்ந்து நடத்தி முடிவில் ஆரியரே வெற்றிபெற்றனர். ஆரியரது அறிவாற்றலுக்குச் சிறிதும் ஆற்றாராய்ச் சுதேசிகளும் விதேசிகளும் ஆகிய எதிரிகள் அவ்வாரியர்களுக்குப் பணிந்து அவரால் ஆளப்படுவோராய் அமர்ந்தனர்.

இவ்வாறு ஆரியர் தம் வெற்றியால் இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையிலுள்ள பெரும்பிரதேசத்தைத் தம்மடிமைப்படுத்தி ஆரியாவர்த்தம் என்னும் பெயரை அதற்கிட்டு தமக்குரிய புண்ணிய பூமியாகக் கொண்டனர். ஆனால், விந்தியமலையின் தெற்கேயுள்ள பிரதேசம் நீண்டகாலம் அவர்களால் குடியேறப்படாதிருந்தது. தமக்குரிய பூமியாகிய ஆரியாவர்த்தத்தினின்று விலகி தக்ஷணமுதலிய பிரதேசங்கட்குச் சென்றுவரும் ஆரியன், "புனஸ்தோமம்" அல்லது ஸர்வ பிரஷ்டயாகமொன்று செய்தே தன் புண்ய பூமியை அடைதற்குரியவன் என்னும் விதி ஆரியர்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது. தக்ஷிணப் பிரதேசமும் ஆரியரால் அக்காலத்து வெல்லப்பட்டிருத்தல் கூடுமாயினும் அடர்ந்து செறிந்த விந்தியமலைத் தொடர்ச்சி இடைநின்று தடுத்தமையால் அது எளிதில்கூடவில்லை.

ஆரியா வர்த்தத்தில் விளங்கிய ஆரியர் தம்மை மூவகையாகப் பகுத்து ஆரிய ஆசாரணைக்குரிய "துவிஜர்" எனக்கொண்டதோடு, சுதேச குடியினரினும் நாகரிக மிக்க வரும் தம்மைப்போல் வந்தவருமாகிய வேற்றுநாட்டாரை நான்காம் வருணத்தவராகவும் இந்நாட்டுப் பூர்வகுடிகளை அவரினும் இழிகுலத்தவராகவும் பிரித்தனர். விதேசிகளாகிய நான்காம் வருணத்தார் "சூத்திரர்" எனப்பெயர்கொண்டு ஆரியர்களுக்கு குற்றேவல் புரியும் வகுப்பினராகவும் அவர்க்குங் கீழான நிலையில் ஆரியரைக் கண்டால் விலகுதற்குரியராகவுந் தாழ்வையடைந்தனர். இதற்குப் பேதிய சான்றுகள் இருக்கின்றன.

கீழ்நாடுகளினின்று வந்த விதேசிகள் ஆரியர் வருகைக்கு முன்னும் பின்னும் இத்தேயத்திற் குடியேறியுவர்களென்று கூறுவது நல்லறிஞர் பல்லோருடைய கொள்கையா யிருக்கிறது. இவர்கள் வங்காளக் கடற்கரைவழியே ஆரியர்புகுதற்கு முன்னரும் தக்ஷிணத்திற் புகுந்திருந்தனர். விந்தியமலையின் தென்பாகம் பெரிதும் அடர்ந்து செறிந்த ஆரணியமாதலால் இவ்விதேசிகள் கடற்கரைப்பக்கத்துள்ள காடுகளைத்திருத்தி நாடாக்கி ஆங்கு வசித்தனர். தக்ஷிணத்துப் பழங்குடியினருடன் இவர்கள் ஒற்றுமையுடன் கலந்துவந்தமையால் அவரது அன்பும் ஆதரவும் இவ்விதேசிகட்கு வாய்த்தன.

இக்குடியேற்ற வகுப்பார் இயற்கையின் ஊக்கமும் நாகரிகமுமுடைய மக்களாதலால் இவர்களது கூட்டுறவு சுதேசிகட்குப் பெருவிருப்பா யிருந்திருக்க வேண்டும். இக்கூட்டத்தாரில் சேரனே மிகப் பழைய தலைவனாகக் கருதப்படுகிறான். பிற்காலத்தில் ஆரியரது பிரவேசம் தக்ஷணத்திலும் நிகழ்ந்தபோது இவ்விதேசிகள் இந்நாட்டில் இங்கும் அங்கும் நீளக்குடியேறியிருந்ததை நோக்கி இவர்கட்கு "திராவிடர்" என்ற பெயரை ஆரியர் வழங்கலாயினர். இப்பதத்திற்கு "ஓடி வளைந்தவர்" என்பது பொருளாம். இத்திராவிடர் மிகப் பழையகாலத்தே வடகீழ்நாடுகளினின்று வந்த விதேசிகளென்பதனைச் செந்தமிழில் வெளிவந்த "தமிழ்ப்பெருமை" என்னும் அரிய வியாசத்தாலும் அறிக.

---

**கண்ணாடித் தொழில்.**—புனவுக்கருகிலுள்ள தலிகானில் 1907-ம் வருஷமுதல் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை நடந்து வருகிறது. இதற்கு அப்பாக்கங்களில் பொது ஜனங்களிடத்தில் பைஸா நிதி யொன்று ஏற்படுத்தி ஒவ்வொரு பைஸாவாக வசூல் செய்து மூலதனம் சேர்க்கப்பட்டதாம். இந்தத்தொழிற்சாலையில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து சென்று 12 சிறுவர்கள் கற்றுவருகிறார்கள்.

## சிற்பிகள்கை அற்புதங்கள்

### இந்திய ஆகாயவிமானம்

ஆகாய விமானமென்பது நவீன சிருஷ்டியல்ல. இந்தியப் புராணேதிகாசங்களில் இதைப்பற்றிய பிரஸ்தாபங் காணப்படுகிறது. ஆகாயவிமான சிருஷ்டியைப் பற்றிய கீழ்க்கண்ட சரித்திரம் ஸிலோனீஸ் என்னும் பத்திரிகையிற் காணப்படுகிறது.

சுமார் 2500 வருஷங்களுக்குமுன் ஜம்புத்வீபத்தின் ஒருபாகத்தை போதிராஜா என்பவர் அரசாண்டுவந்தார். இவர் பெருஞ்செல்வப் பிரதாபராயிருந்தபடியால், உயர்வொப்பில்லாததாயும் உலகெலாங்கண்டு வியப்பதாயுமிருக்கக்கூடிய அரண்மனையைத் தமக்காகக் கட்டுவிக்க வேண்டுமென்று கருத்துகொண்டார். அரசனிச்சைப்படியே அதியற்புதமாக அரண்மனையொன்று நிர்மிதஞ்செய்வதாக ஒரு சிற்பாசாரியர் ஒப்புக்கொண்டனர். கட்டடம் பூர்த்தியாயிற்று. அதற்குக் கோகனதம் என்னும் பெயரிட்டனர். ஆனால், போதிராஜனுக்கு ஒரு துர்ப்புத்திதோன்றிற்று. தன்மாளிகை போன்றதொன்று உலகெங்கு மிருக்கலாகாதென்னும் எண்ணங்கொண்டவனு யிருந்தபடியால், அதை யியற்றுவித்த சிற்பாசாரியர் உயிரோடிருந்தால் அவர்வேறிடங்களில் தன்னரண்மனைபோன்ற கட்டடத்தை நிர்மிக்கலாமாதலால், அங்ஙனம் நிகழாவாறு அந்த சிற்பாசாரியருடைய ஆயுளை உடனே முடிவு செய்யவேண்டுமென்று கோரினான். இக்கோரிக்கையை போதிராஜன் தன் நண்பனாகிய சங்கிகபுத்திரனிடந் தெரிவித்து அதை யீடேற்றுவிக்கவேண்டினான். சங்கீகபுத்திரனோ சிற்பாச்சாரியர்மீது சிந்தாவன்புடையவனாதலினால், அரசனுக்கினையை அந்தரங்கமாக அவருக்கறிவித்தான்.

சிற்பாசாரியார் அற்புதவல்லபர். தாம் தப்பிப்பிழைப்பதற்காக தக்கதொரு சூழ்ச்சியைத் தீர்மானித்துக்கொண்டு, போதிராஜன் மறுபடி தம்மைக்காணவந்தபோது, இலேசானவையும் உலர்ந்தவையுமான சிலவித மரத்துண்டுகள் தமக்குத் தேவையென்றும், அவைகிடைக்கப்பெற்ற சிலநாட்களுக்குள் அரண்மனை வேலையை முற்றுவிக்கக் கூடுமென்றுந் தெரிவித்தனர். அரசன் அவ்வாறே தந்தனன். தமது வேலையாட்களையெல்லாம் கணக்குத்தீர்த் தனுப்பிவிட்டு, தாமொருவராகவே அரண்மனைக் குள்ளிருந்துகொண்டு சிற்ப வல்லபர் வேலைசெய்துவந்தனர் கோகனதத்தைச்சுற்றி அரசன் காவலிட்டிருந்தான். இதன் கருத்து, சிற்பாசாரியாருடைய வேலைக்குப் பங்கமொன்றும் நேரிடாது பாதுகாத்தலேயென்று பகிரங்கத்திற் சொல்லிக்கொள்ளப்பட்ட போதிலும், அந்தரங்கத்தில், இவர் வெளிச்செல்லாது தடுத்தலேயாயிருந்தது. இவ்வுட்கருத்து சிற்பாசாரியர்க்கு நன்றாய்த் தெரியும். அரண்மனைக்கு உட்செல்லுஞ் சுதந்திரம் சிற்பாசாரியருடைய மனைவிக்குமட்டுங் கொடுக்கப்பட்டிருந்தது. இப்பாக்கியவதி அவருக்கு இரவும் பகலும் அன்னங்கொண்டுவந் தளிப்பதுண்டு.

கோகனகத்தில் தனித்து வேலைசெய்துகொண்டிருந்த சிற்பாசாரியர் அரண்மனைக்காரிய மொன்றுங் கவனித்தாரில்லை. அரசனளித்த மரங்களைக்கொண்டு ஆகாயவிமான மொன்றை நிர்மித்துக்கொண்டிருந்தார். இது சிலநாட்களில் முடிந்துவிட்டது. இடையில், தமக்கேற்பட்டுள்ள ஆபத்தைத் தமது மனையாட்டிக் கறிவித்து, தமது சொத்துக்களையெல்லாம் பொன் வெள்ளியாக மாற்றிக் கொண்டுவரச்செய்தார். அனைத்தும் ஆயத்தமானபின் சிற்பாசாரியரும் அவர் அன்பிற்கினியாளுமாக விமானத்திலேறி ஆகாயத்திற் கிளம்பினார்கள். அதுகண்ட ஊரார் அதியாச்சரியமெய்தினர். காவலாளிகள் கைபிசைந்தனர். போதிராஜன் புத்தி கலங்கினான். சங்கீகபுத்திரன் சந்தோஷமுற்றான். அவனியோரெல்லாம் ஆகாயமே நோக்கினர். சிற்பவல்லபத்தின் சிறப்பைக்கண்டு சிந்தைகளிகூர்ந்தனர். அந்தரத்தெழுந்த ஆசாரியரை மந்திரவாதியாய் மதித்தனர் சிலபேர். சித்தபுருஷனெனச் செப்பினர் சிலபேர். தெய்வீகமென்று கைதூக்கிக் கும்பிட்டனர் சிலபேர். 'சிற்பிகள் அற்புதர்' எனச் செவிடுபடக் கூவினர் சிலபேர். எல்லாம் வல்லார் இவரென்றார்த்தனர் எண்ணில் பேர்கள்.

போதிராஜன் நாடு பொங்கெழுச்சியி லிங்ஙன் மிருக்கும்போது, அதை ஒருமுறை சுற்றிவிட்டு சிற்பாசாரியர் இமயமலையை நோக்கி வடதிசைச் சென்றார். அம்மலைச்சாரலில் ஓர் நகரத்தை நிர்மித்து, "கஸ்தவாஹனன்" என்னும் பெயருடன் அரசாண்டிருந்தார்.

> தேவனருள் பெற்றார்போல்
> செய்தொழிலின் மேன்மையினால்
> தேவப் பிராம்மணராய்ச்
> செப்பியதின் றெங்கேகாண்?
> —விஸ்வகர்மோபதேச வீரகண்டாமணி.



## கும்பகோணம்

## விஸ்வகர்ம ஜாதீய கான்பரன்ஸ்

1

1914-ம்வூ நவம்பர்மீ 14வ ஸ்திரவாரம் மாலை 4-30-க்கு குடந்தைமாநகர் விசுவகர்ம குலோத்தமர்கள் புதுப்பாளையத்தெரு ஸ்ரீ T. K. சுந்தரமாசாரியாரவர்களின் திவ்விய மாளிகையில் சபை அலங்காரத்துடன் டை கான்பிரன்ஸ் விஷயமாய் பேட்டை ஸ்ரீ. ப. முத்துவீரப்பத்தரவர்கள் அக்கிராசனத்தின்கீழ்கூடி அடியில் கண்டவிஷயங்களைத் தீர்மானிக்கலானார்கள்.

**விஷயங்கள்.**—கான்பரன்ஸை டிசம்பர்மீ இறுதியில் அவசியம் நடத்தியே தீரவேண்டுமென்று மஹாஜனங்களை, சென்னையிலிருந்து வந்திருந்த ஸ்ரீ. தி. மு. மூக்கண்ணாச்சாரியாரவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

**உபன்னியாசகர்.**—நமது பழுத்த குலாபிமானியும் பென்ஷன் டிராயிங் உபாத்தியாயருமான ஸ்ரீ. தி. மு. மூக்கண்ணாச்சாரியாரவர்கள் தாம் இங்கு விஜயம்செய்த காரணத்தை வெளியிட்டுக் கான்பிரன்ஸை அவசியம் நடத்தியே முடிக்க வேண்டுமென்றும், கான்பிரன்ஸ் விஷயமாய் இந்நகரில் வசிக்கும் புரோஹிதம் ஸ்ரீ சதாசிவ உபாத்தியாயரவர்கள் முதல்முதல் லெட்டர் மூலமாய் 12 முக்கிய இடங்களிலுள்ள முக்கியஸ்தர்களுக்கு அறிவித்ததைப்பற்றியும் பிரஸ்தாபித்தார்கள்.

இவ்வூரில் சென்ற வருஷத்தில் வைசிய கான்பிரன்ஸை முன்னிட்டு சிற்சிலருக்கு ஊக்கமுண்டாயிருக்கிறது. தங்கள் தங்கள் ஜாதீயவிஷயங்களை சீர்திருத்தும்வண்ணம் அநேக இடங்களில் வன்னியர்கள், க்ஷத்திரியர்கள், செங்குந்தர்கள், வைசியர்கள், நாயர்மார்கள் முதலானவர்கள் கான்பிரன்ஸ்நடத்தி ஏதோ ஒருவிதமான மாறுத லடைந்திருக்கிறார்கள். நம்மினத்தவர்களோ விவஹார விஷயங்களில்மாத்திரம் தேர்ச்சியடைந்திருக்கிறார்களே தவிர கல்விவிஷயங்களில் அதிக சிரத்தை எடுப்பாரில்லை. சுமார் இரண்டுவருஷத்திற்கு முந்தி கான்பிரன்ஸு விஷயமாகவே, இவ்வூர் கனவான்களில் இரண்டுபேர், அதாவது ஸ்ரீ. த. கு. சு. பஞ்சநதீஸ்வராசாரியாரும் ஸ்ரீ V. கலியாணசுந்தராசாரியாரும் கொடைவாசல் சென்று, காலஞ்சென்ற மாஜிஸ்திரேட் ஸ்ரீ முருகேஸ ஆசாரியாரவர்களை ரிசெப்ஷன் கமிட்டி சேர்மன் ஸ்தானத்திற்கு இணங்கவேண்டிய இனியவார்த்தைகளைச்சொல்லி இறுதியில் ஒப்புக்கொள்ளும்படிசெய்தனர். பரிதாபம்! பிரசிடெண்டுக்காக (1) சென்னை ஸ்ரீ ராவ்பகதூர் இஞ்சினிர் சுப்பராசாரியாரவர்களின் குமாரர் ஸ்ரீ ஆண்டி சுந்தராசாரியாரவர்கள் B,A.B,L, (2) வண்ணாரப்பேட்டை ஹைஸ்கூல் எட்மாஸ்டர் ஸ்ரீ. C. சுப்பிரமணிய ஆசாரியாரவர்கள் B,A.L,T, (3) அகௌண்டெண்டு ஜெனரல் ஆபீஸ்பென்ஷனர் பிர்மஸ்ரீ, T. கேசவாசாரியாரவர்களுக்கும் லெட்டர் எழுதியிருந்தார்கள் ஏதோகாலவித்தியாஸத்தினால் தடைப்பட்டது. தாம் இரண்டுமாசத்திற்குமுந்தி இவ்வூருக்கு விஜயம்செய்தபோது சில முக்கிய சிரோன்மணிகள் தம்மைப்பார்க்கவந்தபோது கான்பிரன்ஸைப்பற்றிக் கேட்டதில் முடிக்கலாமென்று தெரிவித்தார்கள். முக்கியமாய் நாம் கவனிக்கவேண்டியது குண்டூர், பந்தர், விசாகபட்டணம், தூத்துக்குடி, நெல்வேலி, திருவனந்தபுரம் மற்றுமுள்ள இடங்களிலிருந்து இக்குலத்தினர் வந்தால் போஜனாதி விஷயங்களைக் கவனித்து, அப்படி வரப்பட்டவர்களை முகமன் செய்வதற்கு மாயவரம் சப்கோர்ட்டு, சிரஸ்தார் ஸ்ரீ. கந்தசாமி ஆசாரியார் அவர்களை இப்போதிருந்தே நாம் கேட்டுக்கொள்ளவேண்டும். பிரசிடெண்டு ஸ்தானம் வகிக்கக்கூடியவர்கள் இரண்டு பாஷைகள் நன்றாய்த் தெரிந்தவர்களாயிருக்கவேண்டும். தகுந்த இடத்தையும் அன்னபானாதி விஷயத்தையும் கமிட்டியார்களே முகமலர்ச்சியோடு உபசரிப்பார்கள். வெளி ஜில்லாக்களிலிருந்து வரப்பட்ட கனவான்கள் 200, 300 பேர்களுக்கு அதிகமேற்படாதென்றும், அப்படி அவர்கள் தூலதூரமிருந்து வருவதே துர்லபம், வந்துவிட்டாலும் நாம் சளைக்கப்பட்டவர்களல்ல; (உதாரணம்) நம்மூரில் சித்திரைமீத்தில் நடக்கும் சப்தஸ்தான திருவிழாகாலங்களில் சுவாமிமலையின்கண் சுமார் 1000 ஜனங்கள் வரையிலும் சாப்பாடு செய்கிறோமல்லவா? கூடவேண்டிய இடமும், போஜன இடமும் பிந்தி மாறுதலாயிருந்தாலும் தற்போது சிலஇடத்தைக்குறிப்பிட்டதாவது: கூடுமிடம்-அரண்மனைத்தோட்டம், பிரின்ஸ் ஆப்வேல்ஸ் ஹால்; போஜன இடம்—காலஞ்சென்ற கனம் அய்யாசாமிப்பத்தரவர்கள் சத்திரம் போதுமானதென்றும் தீர்மானிக்கலானார்கள். மேலே சொன்ன கனவான்களைத் தவிர இதற்கு மூன்று கனவான்கள் பிரசிடெண்டு ஸ்தானத்திற்குவ ாலாயக்குள்ளவர்கள் (1)

ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ் சூப்பிரன்டெண்டு ஸ்ரீ M. வேலாயுத ஆச்சாரியார்அவர்கள் (2) ஜோசியர் ஸ்ரீ. A. முத்து ஆசாரியார் அவர்கள், சமஸ்கிருதவித்வான் (3)பழனிஸ்தலம் Ex. முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்ரீ மௌன குரு ருத்திரமூர்த்தி ஆசாரியார் அவர்கள்.

**அபிப்பிராயம்.**—அக்கிராசனாதிபதியவர்கள் மஹாஜனங்களின் அபிப்பிராயத்தை அறிந்தார்கள். டிசம்பரில் கான்பிரன்ஸ் நடக்கவேண்டுமென்று முயற்சி செய்யக் காலமோ சமீபித்துவிட்டது. வரும் ஈஸ்டர் விடுமுறையில் நடத்தலாமா என்கிறதை ஸ்ரீ பஞ்சனதீஸ்வர ஆசாரி பிரரேபித்தார். அதை ஸ்ரீ சோமுப்பத்தர் அவர்கள் ஆமோதித்தார். பின், டிராயிங்மாஸ்டர் ஸ்ரீ. கிருஷ்ணசாமி ஆசாரியார் அவர்கள் கான்பிரன்ஸில் இரண்டுவிஷயம் (1) இராஜாங்க சம்பந்தமான அரியபெரிய விஷயங்களடங்கியதும், உலகத்தில் பற்பல பாகங்களிலிருந்து பற்பலசமயத்தார்களும் ஒருங்கே கூடி அலகாபாத், காசி, சூரத், டில்லி முதலிய இடங்களில் ஏற்பட்டு நடந்துவந்ததை இவ்வருஷம் சென்னையில் ஏற்படுவதினால் நம்மில் அநேகர்கள் அதைப்போய் பார்வையிட்டுவரவேண்டியதவசியம் என்றும் (2) கான்பிரன்ஸ் என்பது ஜில்லாவாசிகள் கூடி தங்கள் தங்கள் ஜில்லாவிலுள்ள முக்கிய விஷயங்களைமாத்திரம் பேசுவது என்றும், டெலிகேட் என்றால் வெளியூர்களிலிருந்து அவாளவாள் ஊரில் மீட்டிங்மூலமாய் தெரிந்தெடுத்து அவ்வூர்களுக்கு பிரதிநிதியாய் வந்து மஹாஜனங்களின்முன் அபிப்பிராயத்தைச் சொல்லுவார்கள். அப்படி டெலிகேட்கள்வந்து சபையின்முன் சொல்லியதை ஆலோசித்து தீர்மானிக்கப்படும் என்று எடுத்துரைத்தனர்.

**தீர்மானங்கள்.**—(1) அவசியம் ஈஸ்டர் விடுமுறையில் அதாவது பங்குனிமீ ஏப்பிரல்மீ கான்பிரன்ஸை நடத்தியே தீரவேண்டும். (2) அடியில்காணும் மூன்று கனவான்களையும் காரியதரிசிகளாக சபையார்கள் நியமகஞ்செய்தார்கள் (*a*) ஸ்ரீ G. கிருஷ்ணசாமி ஆசாரியார் அவர்கள்(*b*)ஸ்ரீ T. K. S. பஞ்சனதீஸ்வரசாரியார் (*c*) ஸ்ரீ A. சொக்கலிங்கப்பத்தர் அவர்கள்.

**வாலண்டியர்கள்.**—நியமிக்கவேண்டிய விஷயங்களுக்குபிள்ளைகளை இப்போதிருந்தே தயாரிக்கவேண்டும்.

**போஜன விஷயம்.**—சமாராதனை கமிட்டிமெம்பர்கள் ஒவ்வொரு தெருவிலுமுள்ள முக்கியஸ்தர்களை ரிசலூஷன் காப்பியில் எழுதப்பட்டவர்களை நியமகஞ் செய்தார்கள்.

**கட்டணம்.**—ரிசெப்ஷன் கமிட்டி மெம்பர்களுக்கு ரூபா 5 என்றும் டெலிகேட்டுகளுக்கு ரூபா 3 என்றும் சபையார்களைக்கேழ்க்க ஸ்ரீ தே ம. சொக்கலிங்கப்பத்தர் அவர்கள் ரூபா 3, 2 மாக போதுமானதென்று தெரிவித்தார். அதை ஸ்ரீ துரைசாமிப்பத்தர் அவர்கள் ஆமோதித்து எல்லோரும் ஒரே மனதாய் தீர்மானித்தார்கள்.

**விசிடர்களுக்கு.**—கட்டணம் பிந்தி தீர்மானிக்கலாமென்று ஸ்ரீ T. K. சுந்தராசாரியார் அவர்கள் தெரிவிக்க, அதை நாட்டாண்மை ஸ்ரீ திருச்சிற்றம்பலப்பத்தர் அவர்கள் ஆமோதித்து தீர்மானஞ்செய்தார்கள். நமது பிரிட்டிஷ் அரசாங்கம் ஜெயமடையும்படியாய் ஸ்ரீ காமாக்ஷி அம்மனை சபையார்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள். சேர்மன் அவர்களுக்கும் உபன்னியாசகர் அவர்களுக்கும் புஷ்பமாலைதரித்து வந்திருந்தவர்களுக்கெல்லாம் சந்தனதாம்பூலம் வழங்கி சபைகலைந்தது. இதேவிஷயத்தைக்குறித்து ஆத்தங்கரைத் தெருவிலும் கர்ணகொல்லைத் தெருவிலும் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன.

**ரிபோர்டர்.**

2

நமது சபைப் பிரசுரங்களை யடையும் பரமபாக்கியம் பெற்றவர்கள் மேற்குறித்த கான்பரன்ஸ் விஷயமாக வெளிவந்த வ்யாசங்களை கண்ணுறாமலிரார். நோக்கினவருள் 'கான்பரன்ஸ்' என்னும் விஷயம் தமக்குத் தெரியாததென்று தவிர்த்தனர் அனேகர். 'முடவன் கொம்புத்தேனுக்கு இச்சித்ததுபோல' நம்மவர் கான்பரன்ஸ் கூடுவது அசாத்தியமென அலட்சியம்செய்தனர் அநேகர். அவ்விஷயமாகப் பேசினால் அது நம்மைச்சார்ந்து வாய்ப்பேச்சிலிருந்து கைப்பணத்திற்குக் கரைவுவந்துசேருமென்று மௌனமாயிருந்தனர் சிலர். இன்னுஞ் சிலர் "கான்பரன்ஸ் கூடுவது ஆங்கிலம் படித்தவர்களின் ஏற்பாடு இது கர்நாடக வழக்கத்திற்கு விரோத"மென்று விரும்பாதொழிந்தனர். பெரும்பான்மையோர் எவ்விதம் கவனிக்காமலிருந்தும், "மெய்வருத்தம்பாரார் —கருமமேகண்ணாயினர்" என்ற முதுமொழிக்கிணங்க குலாபிமானம் பூண்ட சிற்சிலர் மட்டும் பகலிரவென்றெண்ணாது கான்பரன்ஸ் நடத்தவேண்டுமென்ற ஊக்கமேகொண்டு ஏக்கமுற்று தூக்கமற்றவர்களாயிருந்து பாடுபட்டுழைக்கின்றனரெனத் தெரியவருகிறோம்.



அன்னோர்களைப்போலவே மற்றவர்களும் கவனம் செலுத்தியிருப்பாராயின் இதுகாறும் இரண்டு மூன்று கான்பரன்ஸ்கள் நடத்தியிருக்கலாமன்றோ? யானும் கான்பரன்ஸ் என்னும் வார்த்தையைக் கேட்டிருக்கிறேனேதவிர நேராக ஒரு கான்பரன்சுக்கும் போய்ப்பார்த்தறியேன். ஆனாலும், இவ்விராஜதானிக்குள் தகுந்தவர்களைத்தெரிந்தெடுத்து ஓர் சீப்கமிட்டி(Chief Committee) சேர்த்துக்கொள்வது உசிதம். பிறகு ஒவ்வொரு பிரதான ஜில்லாக்களிலும் சப்கமிட்டி (Sub-Committee) ஏற்படுத்திக்கொண்டு ஒவ்வொருவருடக்கடைசியிலும் சப்கமிட்டியார் வேண்டுகோளின்பேரிலும் சீப்கமிட்டியார் சம்மதத்தின்பேரிலும் நியமித்த ஸ்தலத்தில் கான்பரன்ஸ் நடத்தப்படவேண்டும். இவ்வாறு எத்தனை கான்பரன்சுகள் சீக்கிரத்தில் நடைபெறுமோ அவ்வளவு சீக்கிரம் நாம் கல்வியிலும் சிறப்திலும் நாகரீகத்திலும் அபிவிருத்தி யடையக்கூடும். நாம் ஒருங்குகூடி சிலமுக்கியமான விஷயங்களைப்பற்றி ஒருவித தீர்மானத்திற்கு கொண்டுவர கலந்துபேசக்கூடிய கூட்டமே கான்பரன்ஸ் எனப்படுவது. பூர்வகாலங்களில் மஹாநாடு என்னப்பட்டது. இது நமது வம்சத்தினருக்கு புதியதல்ல. தனிமரம் தோப்பாகுமா! ஒருவன் தனியே ஒருவிஷயத்தில் பிரயத்தனப்படுவதிலும் பலர்கூடி அநேகாரியத்தில் பிரயத்தனப்பட்டால் அது சீக்கிரத்தில் எவ்வளவு பலனைத்தருமென்று ஆலோசியுங்கள்! இனி, முதன்முதல் நடக்கப்புகும் கான்பரன்ஸில் ஆலோசித்து தீர்மானிக்கவேண்டிய விஷயங்கள் பலவுளவெனினும் எனக்குத் தெரிந்த சிலவற்றை ஈண்டு கூறியிருக்கிறேன்.

1. ஆச்சார்யபட்டம் சாஸ்திரோக்தமாய் நமக்கேயுரியது. ஆஸாரியென்னும் நவீனப் பிரயோகத்திற்கும் நமக்கும் யாதொரு சம்பந்தங்கிடையாது.
2. நம்குல மாணாக்கர்களின் கல்வி அபிவிருத்திக்கு மூலதனம் ஏற்படுத்தவேண்டியது.
3. நம்மவருள் சமபந்திபோஜனம் மிக்க ஆவசியகம்.
4. நம்மவருள் (சொல்லிவருகிற)பிறப்பிலும், தொழிலிலும் அனேக உட்பிரிவுகளிருப்பினும் வித்யாசமில்லாமல் விவாகம்முதலிய சம்பந்தம்செய்வது தவறன்று.
5. பெண்களுக்கு இளமையிலே விவாகம் செய்வதை நிறுத்துவது.
6 பெண்களுக்கு கல்வி அவசியம்.
7. பெண்கள் வெளிப்பார்வைக்கு நடையுடையில் ஒரே நாகரீகமுள்ளவர்களாக காணப்படவேண்டும். —என்றவைபோலாம்.

*கான்பரன்ஸ்காணக் களிப்போன்*

**து. ப. வே. ஆச்சார்யா**

## பாய்களை நெய்தல்.

சுற்றித்திரியும் நெசவுத் தொழில் இலாகா சூப்ரின்டெண்டெண்டாகிய மிஸ்டர் N. சுப்ரமணியய்யர் ஹிந்துப் பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

துணிநெசவுத் தறிகளைப்போல பாய் நெசவுத் தறிகளிலும் குறுக்கு நெடுக்குக் கயிறுகள்போன்றவைகளுண்டு. இவைகளில்லாமல் நெசவுத்தொழிலே கிடையாது. நூல், பட்டு, நெசவு வேலைகளில் குறுக்கு நெடுக்குவஸ்துக்கள் ஒன்றேஆகும். ஆனால் பாயிலோ அப்படியல்ல, இரண்டும் வெவ்வேறு வஸ்துக்களாகும். நெடுக்குக் கயிறுக்கு நூல்கயிறோ அல்லது நார்க்கயிறோ உபயோகிக்கப்படுகிறது. குறுக்குக் கயிற்றுக்கு பதிலாய் கோரையே கயிறாக உபயோகிக்கப்படுகிறது. நேர்த்தியான பாய்களுக்கு நூல்கயிறும் சாதாரணப் பாய்களுக்கு நார்க்கயிறும் உபயோகப்படுத்தப்படுகிறது.

**சாதாரணப்பாய்கள்.**—பாய் 1-க்கு 5-அணா முதல் 1-2-0 வரை விலையாகிறது. இவைகளின் நீளம் $5\frac{3}{4}$ அடியும் அகலம் $3\frac{1}{2}$ அடியும் சாதாரணமாயிருக்கும். சாதாரணப் பாய்களுக்கு நெடுக்குக்கயிறுக்கு உபயோகப்படுத்தப்படும் நார் சீப்புக்கற்றாழையிலிருந்து எடுக்கப்படுகிறது. இதற்கு இங்கிலீஷில் "Ajanavera-Cruz" என்று பெயர். இந்தக் கற்றாழை அனேகமாய் எல்லா பூசாரங்களிலும் வளருகிறது. பாய்கள் செய்யும் இடங்களில் இந்த நாரை விவசாயிகள் சேகரித்து விற்கிறார்கள். இதின் விலை 5 வீசைக்கு ரூபா 1-8-0 ஆகிறது இந்த நாரை பாய்த்தறிக்காரர்களின் வீட்டுப் பெண்களே கயிறாக முறுக்குகிறார்கள். துடையில் வைத்து முறுக்குவதைவிட இராட்டினத்தில் வைத்து முறுக்கினால் நேர்த்தியாக இருக்கும். குறுக்குக் கயிற்றுக்குப் பதிலாய் கோரையே உபயோகப்படுத்தப்படுகிறது. பாய்த்தறிக்காரர்கள் 4-விதக்கோரைகளை உபயோகிக்கிறார்கள். கோரையானது ஆற்றங்கரைகளிலும் வாய்க்கால் கரைகளிலும் குளக்கரைகளிலும் வளருகிறது. கோரை அனேகமாய் ஈரமுள்ள இடங்களில் வளருகிறது. தஞ்சை ஜில்லாவில் அனேக இடங்களில் இது தானாகவே வளருகிறது. ஆனால் திருச்சியிலோ இதைப் பயிர்கள்போலப் பயிரிடுகிறார்கள்.

இந்தக் கோரை பயிரிடும்விதத்தைப் பற்றிச் சொல்லுவோம். வெங்காயத்தை கிட்டக்கிட்ட புதைப்பதுபோல் கோரைக் கிழங்குகளையும் கிட்டக்கிட்ட புதைக்கிறார்கள். ஒரு மாதம்வரை ஒரு வாரத்துக்கு ஒரு தடவை இதை ஜலம்பாய்ச்சிக் காப்பாற்றவேண்டும். 8 முதல் 10 மாதங்களுக்குள் உயர்ந்த கோரையாகப் பயிராகிவிடுகிறது. இப்படிப் பயிராக்கப்பட்டதானது தானாக வளருவதைவிட நிரம்பவும் சிரேஷ்டமுள்ளதாய் 7, 8 வருஷங்களுக்கு நல்ல பலனைக்கொடுக்கும் திருச்சிக்கடுத்த உறையூரின் குடமுருட்டி யாற்றுப் படுகையில் கோரைப்பயிர் செய்யப்படுகிறதென்றும், அதனால் நல்ல லாபம் கிடைக்கிறதென்றும் தெரிகி

றது. கோரையைப் பிடுங்கினவுடன் நெசவுக்கு உபயோகப்படுத்தமுடியாது. இதை இரண்டு மூன்று பிளப்புகளாகக்கிழித்து உலரவைக்கவேண்டும். இது உலர்ந்தவுடன் மஞ்சள்வர்ணமாக ஆகிறது. அதை நெசவுக்காகப் பத்திரப்படுத்திவைக்கிறார்கள்.

நெடுக்குக் கயிறுக்கு உபயோகப்படுத்தப்படும் கற்றாழை நாரின் விலை 5 வீசைக்கு ரூபா. 1-8-0 ஆகிறது. இதைக் கயிறாக முறுக்க ரூபா. 1-14-0 கூலியாகும். இப்படி முறுக்கின கயிறு 40-பாய்களுக்குப் போதுமானது. குறுக்குக் கயிற்றுக்காக உபயோகப்படுத்தப்படும் கோரையின் விலை நல்லதாயிருந்தால் 40 பாய்களுக்கு ரூபா 20 ஆகும். இந்த 40 பாய்களைப் பின்ன ரூபா 15 கூலியாகும். ஆகையினால் முதலாளிக்கு 40 பாய்களுக்குச் செலவு மொத்தம் ரூபா 38-6-0 ஆகிறது. 40 பாய்களை மொத்த விலைக்கு ரூபா 40-கும், சில்லரை விலைக்கு ரூபா 45-க்கும் விற்கலாம். சாதாரண பாய்களில் இந்தப் பாய்கள் உயர்ந்தவைகள் 5 அணாமுதல் 8 அணாவரையில் விற்கப்படுகிற பாயின் கோரையானது தாழ்ந்த கோரை. இந்தக் கோரையை 40 பாய்களுக்கு ரூபா 7 முதல் 9 வரை வாங்கலாம். உயர்ந்த கோரையா யிருந்தால் ரூபா 20-பிடிக்கும். பாய்களைச் செய்வதற்குக்கூலி அடியில்கண்டபடி கொடுக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 4-அணா முதல் 6-அணா வரை விலையுள்ள பாய் நெய்ய கூலி | | 0 | 1 | 0 |
| 8-அணா முதல் 10-அணா வரை | ,, | 0 | 3 | 0 |
| 12-அணா முதல் 14-அணா வரை | ,, | 0 | 4 | 0 |
| 1-ரூபா முதல் 2 ரூபா வரை | ,, | 0 | 6 | 0 |

சாதாரணமாய் தினம் 1-க்கு 6-அணா சம்பாதிக்கிற ஒரு ஆள், 1-ரூபாய் பெறும்படியான ஒன்றை ஒரு நாளில் நெய்வான். கஷ்டப்பட்டு வேலை செய்தால் இன்னம் ஜாஸ்தி வேலை செய்யக்கூடும். குறைந்த விலைகளுள்ள பாய்களை ஜாஸ்தியாய் நெய்தாலும் 6-அணா கூலிதான் சம்பாதிப்பான். இந்த வேலை செய்யும் ஆண்கள் இதே வேலை செய்யாமல் விவசாயத்திலும் இன்னம் மற்ற வேலைகளிலும் உழைக்கிறார்கள். அநேகமாய் எல்லா இடங்களிலும் வேலையைப் பெண்களே செய்கிறார்கள். தங்கள் வீட்டு வேலைகளோடு இதையும் செய்துகொண்டு நாள் 1-க்கு ஒரு நபர் இரடணாவீதம் சம்பாதிக்கிறார்கள். சாதாரணமாய் ஒரு ஆண் கூலிக்குப் பாய் செய்வதில் 6 அணாவும் பெண் கூலிக்கு 2 அணாவும் கிடைக்கிறது. பாய் வியாபாரிகளுக்கு பாய் 1-க்கு 9 பைசாமுதல் 3 அணா வரை லாபம் கிடைக்கிறது. சாதாரணமாய் இந்தத்தொழிலும் வியாபாரமும் செய்பவர்களும் கஷ்டமற்ற ஜீவனம்செய்து வருகிறார்கள். இந்த வகையில் சொல்லப்பட்டிருக்கும் புது மாதிரிகளைக்கொண்டு இந்த வேலை செய்வார்களேயானால் இன்னம் அதிகலாபம் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை.

## மங்கள கௌரி.

இந்தியாவின் மேற்குப்பாகங்களில், அதாவது பம்பாய் மாகாணத்தைச் சார்ந்த மகாராஷ்டிரதேசத்தில், சுமங்கிலிகளாயுள்ள இந்துஸ்திரீகளால், ஆவணிமாதத்துப் பிரதிமங்களவாரமும் மங்களகௌரி விரதமென்பதொன்று கேதாரகௌரி விரதம்போல் அநுஷ்டிக்கப்பட்டுவருகிறது. புதிதாய் விவாகமாகப்பெற்ற ஸ்திரீகள் இதை மிகமுக்கியமாய்க் கொண்டாடுகிறார்கள். இதனால் மாங்கல்ய சம்ரக்ஷணை யுண்டாகுமென்பதே கொள்கை. இம் மங்களகௌரி விரதத்தின் உற்பவம் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவினால் பாண்டவர்களுடைய பாரியையாகிய துரௌபதைக்கு காமிகவனத்தில் திருவாய்மலர்ந்தருளப்பட்டதாகும். அதன் விபரம் கீழே சுருக்கி எழுதப்படுகிறது.

ஓரூரில் ஓர்வணிகன் தனது மனைவியுடன் வாசஞ்செய்துகொண்டிருந்தான். அவ்வூரில் ஓர் சாது தெருத்தோறுஞ் சென்று பிச்சைவாங்குவதுண்டு. இவ்வணிகனுடைய வீதிவழியாகவும் வருவார். ஆனால், அவன் கிருகத்திற்கு நேரேவந்து 'பிக்ஷாம்தேஹி' என்று கூச்சலிடுவாரேனும், வீட்டிலுள்ளார் அமுதுபடைப்பதன் முன் விலகிச்செல்வார். இதை நன்கு கவனித்திருந்த அவ்வணிகன்மனைவி ஒருநாள் தனது நாயகனிடம் அறிவித்தாள். அவன் "நாளை அச்சாது வருவதற்கு முன் அமுதுகைக்கொண்டவளாய் தெருவாசற்கதவின் பின்புறமாக மறைந்திருந்து, அவர் நமது வீட்டிற்கு நேரே வந்தமாத்திரத்தில் சரேலென்றோடி, அவருடைய பாத்திரத்தில் அமுதிடு ; பிறகு நடப்பதைக் கவனிப்போம்" என்று தன் மனைவிக்குத் தெரிவித்தான். மறுநாள் காலையில் அவள் அப்படியே செய்தனள். சாதுவோ கோபமீறியவராய் "ஹா! புத்திர பாக்கியமற்றவளே! உன் குடும்பத்திற்கு நீயே சனியாயுள்ளாய், பெண்டிர் பெருமை குலைக்கவந்தவளே" என்று சொல்லிக்கொண்டே தம் கைப்பாத்திரத்தை அலம்பும் பொருட்டாக அருகிலிருந்ததோர் தடாகத்திற்கோடினார். இதைப் பார்த்துக்கொண்டே யிருந்த வணிகன் அவர்பிறகோடிச் சாஷ்டாங்கமாய்த் தெண்டனிட்டுப் பணிந்துபோற்றி அவர் கோபத்தைத்தணித்து உபசாரங்கள் புரிந்து, தன் குறைதீரு மார்க்கத்தைக் காட்டவேண்டுமென்று கனிவாய் வேண்டினான். சாதுவானவர் மனங்கசிந்தவராய், அவ்விடத்திற்கு அடுத்திருந்ததோர் குன்றின்மீது சென்று தவம்புரிந்து அங்கு கோயில்கொண்டிருந்த தேவியினருளைப் பெறும்படி ஆக்ஞாபித்தனர்.



வணிகன் அவ்வாறு சிலகாலஞ் செய்தபின் தேவி பிரசன்னமாக, வணிகன் புத்திரப்பேறு தரவேண்டுமென்று மெத்தவும் வேண்டினன். "கர்மபலவசத்தால் உனக்குப் புத்திரனாவது புத்திரியாவது உண்டாவதற்கு ஹேதுவில்லை, ஆயினும் உன் தபோமுயற்சியினால் நீ என்னை மகிழ்வித்ததால் நான் உனக்கொரு வரங்கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். அற்பாயுளுடையவனாய்ப் பதினறுவயதி லிறக்கும் புத்திரன்வேண்டுமோ, அன்றி, தீர்க்காயுளுடைவளாய் இளமையிலேயே விதவையாகும் புத்திரிவேண்டுமோ? இரண்டிலொன்றைக் கேள், தருகிறேன்" என்று பகவதி சொன்னதும், வணிகன் "அற்பாயுளுடையவனானாலும் புத்திரனே வேண்டும்" என்றான். உடனே, "என் ஆலயத்திற்குப் பின்புறத்தில் ஓர் மாமரமிருக்கிறது ; அதன்கீழிருக்கும் விநாயகர் தலைமீதேறி நின்று கைக்கெட்டிய மாங்கனியொன்றைப் பறித்துக்கொண்டுபோய் உன் மனைவிக்குக் கொடுத்து புசிக்கச்சொல். நீ கோரியபடி புத்திரன் பிறப்பான்" என்ற உத்திரவுவந்தது. வணிகன் ஆனந்த பரவசனாகி நெடுநேரம் அம்பிகையைத் துதித்துப் பின்னர் மாமரத்தை நோக்கிச்சென்றான். விநாயகரையுங் கண்டான். அவரைச் சற்றுநேரந் துதிசெய்து கட்டளைப்படி அவர்மீதேறிநின்று ஒருபழம் பறித்தான். அவ்வளவோடு ஆசைதீரவில்லை. மரம் நிரம்பக் கனிகள் மனோகரமாயிருந்தன. அவற்றில்பலவற்றை அறுத்தறுத்துக் கீழேபோட்டுக் குதித்திறங்கிப் பார்க்கும்போது ஒரே பழங்காணப்பட்டது. வணிகன் பிரமித்து விநாயகரை நோக்கினான். அவர் புன்முறுவல் பூப்பவர்போற் காணப்பட்டார். இதுவும் திருவருட்செயலென்றுதேறி தன்மனைவிக்கு அப்பழத்தைக் கொண்டுபோய்க் கொடுத்தான். அவள் மிகுந்த பக்தியுடன் அதை யுட்கொண்டாள்.

காலாந்தரத்தில் காமனழகுங் கதிரவனொளியுங்கொண்டதோர் பிள்ளை பிறந்தான். அவனுக்கு சந்திரசேகரனெனப் பெயரிட்டு வளர்த்துவரும்போது பதினாறுண்டு நெருங்க நெருங்கப் பெற்றோருற்ற பெருந்துயர் மிகுதியாயிற்று. இதுகண்டு பொறாதவனாய் சந்திரசேகரனுடைய தாய் மாமன் தனது மைத்துனனையுஞ் சகோதரியையும் நோக்கி "நீங்கள் இங்ஙனம் வருந்திநிற்பதினால் அவனுடைய ஆயுளை அதிகப்படுத்த முடியாது. நான் ஒரு உபாயஞ்சொல்லுகிறேன் கேளுங்கள். காசிநாதரைக்கண்டு பணிவதற்காக சந்திரசேகரனை காசிக்ஷேத்திரத்திற்கு அழைத்துச் செல்லுகிறேன். அவரருள்கிடைத்து அவன் ஆயுள்வளர்ந்தால் அனைவர்க்கும் ஆனந்தமுண்டாகும். அன்றி, இறப்பானானால் காசியிலிறந்து கங்கையிற்படியும் பலத்தால் அவன் முக்தியடைவான்"—என்று கூறினன். பெற்றோரிருவரும் ஒருவாறு இசையவே, சந்திரசேகரனும் அவன் மாமனுமாகக் காசியாத்திரைக்குப் புறப்பட்டனர்.

இவர்கள் மண்டோதர மகாராஜனுடைய நாட்டு வழியேசென்று அங்கோர் நந்தனவனத்தில் ஓருநாள் இளைப்பாறிக் கொண்டிருந்தனர். இவர்களிருந்த ஸ்தலத்திற்குச் சற்றுதூரத்திற் கப்பால் சிலபெண்கள் பூக்கொய்து கொண்டிருந்தனர். அவர்களிலொரு பெண்மணி அதிரூபலாவண்யமுடையவளாய் பக்தியொளி கொண்டு விளங்கினள். அவள்மீது சந்திரசேகரனுடைய நாட்டமெல்லாஞ் சென்றபடியால், அவன் அவளையே உற்றுநோக்கிக் கொண்டிருக்கும்போது, மற்றொரு பெண்ணணங்கு தான் வளைத்த கிளையில் அவள் பூக்கொய்தாளென்ற கோபத்தால் அவளை வைது கடைசியாய் "முண்டை" யென்றாள். சந்திரசேகரன்மனம் திடுக்கிட்டது. வசை மொழிகொண்ட மாதுநல்லாள் மனங்கோணாமல் "முதல்வ னருள்பலத்தால் முண்டையாகமாட்டேன். என் மணாளர் அவர் எவரேயாயினும் எனக்கு முன் இறக்கமாட்டார். இன்று மங்களகௌரி விரதநாளென்பதும், இம்மலர் அவள் பூசைக்கெடுக்கப்பட்டதென்பதும் உண்மையல்லவா? நான் முண்டையாகாது அவளென்னைக்காப்பள்!" என்று உள்ளமுருக உரைசெய்தனள். இவ்வார்த்தைகள் செவிப்பட்ட சந்திரசேகரன் புளகாங்கிதனாகித் தன் மாமனைநோக்கி "மாமா! அப்பெண்மணி என் மனைவியாக வாய்க்கப் பெற்றால் என் கொடியவினை தீருமென்று நம்புகிறேன்" என்று சுட்டிக்காட்டி விபரமுழுவதும் வெளியிட்டான்.

சற்று நேரத்திற்குள் அப்பெண்களெல்லாம் மலர் கொய்தல் முடித்து தங்கள் இல்லங்கள்நோக்கிச் செல்லலாயினர். சந்திரசேகரனும், அவன் மாமனும் அவள் பின்நடந்தனர். அவள் மண்டோதரமகாராஜன் மகளே

ன்றும், அவளை மந்திரிமகனுக்கு விவாகஞ் செய்வதாக எற்கனவே ஏற்பாடுசெய்யப்பட்டிருந்ததென்றும், அவ்விரவே விவாகம் நடக்கப்போவதாகவும் அவர்களுக்குத்தெரிந்தது. மந்திரி புத்திரனே மகாகுரூபி, மைவண்ணன். இவ்வுண்மை மகாராஜாவுக்குத்தெரியாது. விவாகச்சடங்குகள் பலகனவான்கள் முன்னிலையில் ஆரம்பமாய்விட்டால் அப்புறம் பெண்ணேனும் அவள் பெற்றோரேனும் விவாகபந்தத்தை விலக்கமுடியாதென்ற நம்பிக்கைகொண்டிருந்தான் மந்திரி. சுந்தரமிகுந்த சந்திரசேகரன் மந்திரிகண்ணில் அந்திவேளையில் அகப்படவும், அவன் சந்தோஷமடைந்து சந்திரசேகரனுடைய மாமனைநோக்கி " இந்தச் சிறுவனை இன்றிரவு என்னோடுவிட்டிரும் " என்றுகேட்டான். அவன் ஒப்பி அனுப்பினான். சந்திரசேகரனை மணவாளனாகக் காட்டினால் அன்றிராச் சடங்குகளெல்லாம் நிராக்ஷேபமாய் நடைபெறுமென்றும், பொழுதுபுலர்ந்ததும் தன் மகனை மாற்றிவிடலாமென்றும் மந்திரி உத்தேசித்திருந்தான்.

பிள்ளையோ தூங்கிவிட்டான், பெண்ணுக்கோ நித்திரை வரவில்லை. அவள் மனதில் ஏதோ ஒருவித சஞ்சலம் குடியேறி யிருந்தது. இப்படியிருக்கத் திடீரென்று விளக்கவிந்துவிட்டது. அந்தோ ! அச்சமயத்தில் ஓர் கருநாகம் சீறிக்கொண்டு சந்திரசேகரனை நோக்கிவந்தது. இராஜ குமாரத்தி இதைப்பார்த்ததும் மனம்பதைத் தொருநொடியிலெழுந்து, அங்கு சிந்திக்கிடந்த அக்ஷதைகளைக் கிடைத்தமட்டுமெடுத்து, மங்களகௌரியை வந்தித்துத் தன் நாயகன் உயிரை ரக்ஷிக்கும் பக்ஷத்தில் தான் அவ்விரதத்தைத் தவறாமல் அநுஷ்டிப்பதாகச் சொல்லித் தன் கையிலிருந்த அக்ஷதைகளை நாகத்தின் மீதெறிந்தாள். கௌரியின் கடாக்ஷத்தால் கரும்பாம்பு மாண்டது கண்டு களிமகிழ் சிறந்தவளாய் மன்னன் மகள் மகாதேவியை மனதாரவாழ்த்திவிட்டு மஞ்சமடைந்தனள்.

மறுநாள்காலையில் மங்கையினெதிரே மணாளனாக சுந்தரனுக்குப் பதிலாய் மந்திரிமகனாகிய மகாகுரூபி வைக்கப்பட்டிருந்தான். அவள் தன் பெற்றோரிடமோடி, முன்னிரவிருந்த மணவாளன் அக்குரூபி யல்லவென்று அழுதுரைத்தனள். மண்டோதர மன்னனுக்கோ ஒன்றுந்தோன்றவில்லை அவன் சற்றாலோசித்துக் கர்மவசப்படி எதுவும் நடக்குமென்று தன் மகளுக்குரைத்து, ராஜகுடும்ப கௌரவங் கெடாதபடி காக்கவேண்டுமாதலால், வசைமொழிக் கிடமுண்டாகாதவாறாக நடந்துகொள்ளவேண்டுமென்று கூறினான். மகளுடைய மனக்கலக்கமோ மாறவில்லை. அவள் தன் தந்தையை நோக்கி " தருமநெறி தவறாத் தந்தையே ! தாங்கள் எனக்கொரு சகாயஞ் செய்யவேண்டும். இவ்விவாகத்தின் மற்ற சடங்குகளை இப்போது நிறைவேற்றக்கூடாது. நான் இப்போது ஒரு விரதத்தை யநுஷ்டிக்கவேண்டியவளாயிருக்கிறேன். அதாவது, பெரிய தோர் அன்னசத்திரத்தில் நானே ஆறுமாதகாலமட்டும் ஏழைகளுக்கும் பரதேசிகளுக்கும் அன்னம் படைக்கவேண்டும். இதை அனுக்கிரகிக்கப் பிராத்திக்கிறேன்"- என்று அடிபணிந்தனள். அரசனும் அவ்வாறே இசைந்தான்.

இராஜகுமாரத்தி உண்ணவந்தார் ஒவ்வொருவரையும் உற்றுநோக்கி வந்தாளேனும் கடைசி நாளளவும் தன் நாயகன் காணப்படவில்லை. கௌரி பூசையினாலும், கணவனைக் காணாக் கவலையினாலும், தேகசிரமத்தினாலும் மெலிந்து வாடினாள். கடைசிநாளிற்குள் தன்னிறைவன் தோன்றாவிடில் உயிர்மாய்த்துக் கொள்வதாகத் தீர்மானித்துக் கொண்டாள். கடைசியாய், சந்திரசேகரனும் அவன் மாமனுஞ் சத்திரத்தில் தோன்றினர். அப்போது அவளடைந்த ஆனந்தத்திற் களவுண்டோ ? உடனே தன் தந்தையை வரவழைத்துக் காட்டினாள். மண்டோதர மன்னன் தன் மருமகனைத் தெரிந்துகொண்டு, மந்திரியை யழைத்து விசாரித்தபோது உண்மை முழுவதும் ஒருங்கே வெளிப்பட்டது. மந்திரி தக்க சிக்ஷையடைந்தான். சந்திரசேகரனுடைய தாய் தந்தையர் வரவழைக்கப்பட்டனர். மணவினை மகா சம்பிரமமாய் முடிக்கப்பட்டது. மங்கள கௌரியின் மலரடி வாழ்க. மங்களம்.

---

**சேலம்—ஆத்தூர் ரயில்.**—சூரமங்கலத்திலிருந்து சேலம் டவுனுக்கும், அங்கிருந்து 36.60-மைல் தூரமுள்ள ஆத்தூருக்கும் இருப்புப்பாதை போட வேண்டுமென்று சென்னை கவர்ன்மெண்டார் செய்த சிபார்சை சேலம் டிஸ்ட்ரிக்ட் போர்டார் ஒப்புக்கொண்டு விட்டார்கள். சூரமங்கலத்திலிருந்து சேலம் டவுனுக்கு 3.86-மைல்தூரம். அதற்கு பெரிய லயன் போடப்படும் சேலம் டவுனிலிருந்து ஆத்தூருக்கு 32.74-மைல். அதற்கு சின்ன லயன் போடப்படும்.



## மதிப்புரை

**தமிழ்ப் புலவர் வரலாறு—எண் 1.**—(ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்—விலை எட்டணா).

இது, கோயமுத்தூர் சாரதா விலாஸ சபையின் காரியதரிசியும், 'பரத்தையர் கேண்மை விளக்கு' என்னும் நூலின் ஆசிரியருமாகிய நமது நண்பர் ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்டது. இதில், ஒட்டக்கூத்தர் சரித்திரம், இரட்டைப்புலவர் சரித்திரம், படிக்காசுப்புலவர் சரித்திரம் ஆகிய மூன்று சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இம்மூன்றனுள், ஒட்டக்கூத்தர் சரித்திரம் மற்றிரண்டினும் விரிவாயெழுதப்பட்டிருக்கிறது. சரித்திர இலக்கணங்களைத் தழுவி, ஊர், மரபு, காலம் முதலியவற்றைத் தக்க ஆதாரங்களுடன் விளக்கி ஷை சரித்திரங்களை யெழுதிய ஆசிரியருடைய கல்வி வன்மையும் ஆராய்ச்சித்திறனும் மிகப்பாராட்டற்குரியனவா யிருக்கின்றன ; தமிழ் நடையுஞ் சிறந்ததாயிருக்கிறது. மூன்று சரிதங்களும் செங்குந்தமரபுப் புலவர்களுடையனவாகவே யமைந்துளதால், ஆசிரியருடைய குலாபிமானம் நன்குவிளங்குகிறது. இங்ஙனம் ஒவ்வொரு ஜாதிப் புலவரும் தங்கள் மரபிற்றோன்றி விளங்கிய புலவர் சரிதங்களை ஆராய்ந்து வெளியிடத் தலைப்படுவரேல், சரித்திர விவரங்கள் கிடைத்தல் சுலப சாத்தியமாகும்.

ஒட்டக்கூத்தர் சரித்திரத்தில், 'இரண்டொன்றாய் முடிந்துதலை யிறங்கப்போட்டு வெட்டுதற்கோ கவியொட்டக்கூத்தனில்லை' யென்னும் பாடற்கருத்தும், விநோத ரசமஞ்சரியிற் காணப்படும் 'மல்லிகையே வெண்சங்கா' என்னும் நளவெண்பாப் பாட்டாட்சேபம், 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்ற விஷயம், கம்பர் இராமாயணம் பாடிய வரலாறு முதலியவைபற்றிய விருத்தாந்தங்களும் மறுக்கப்படுகின்றன. புலவர்களைக் கூத்தர்சிறையிலிட்டாரென்னும் வரலாறுனது, பிற்காலத்துப் புலவர்களால் 'உருவகப்படு' த்தப்பட்டு 'உயர்வு நவிற்சி' யாய் இயன்றுள்ளதென்பது இந்நூலாசிரியர் துணிபு. ஆதலினால், குயவன் அம்பட்டன் கொல்லனாதியர் கூத்தர் வினாவுக்கு விடையாகச்சொற்ற பாடல்களென்று வழங்கப்படுபவை 'புனைந்து' 'கற்பிக்கப்' பட்டவையெனக் கொள்ளலாயினர். இக்கொள்கையாளர்க்கு, கூத்தர் தம்மரபுத் தலைப்பிள்ளைகளின் தனிச்சிரங்கள் ஆயிரத்தெட்டைச் சிங்காதனமாகக்கொண்டு ஈட்டியெழுபது பாடினாரென்னும் வரலாறும் 'உருவக'மாகவும் 'உயர்வு நவிற்சி' யாகவுமே யிருக்கலாமென்றும், ஷை வரலாற்றுக்காதாரமாய்க் கிடைத்துள்ள ஈட்டியெழுபது, செங்குந்தர்மாலை, வீரநாராயணர்விஜய மிவற்றின் பாடல்களும் 'புனைந்துரை' பாடல்களா யிருக்கலாமென்றுந்தோன்றாதது வியப்பே! இன்னும், புலவர்களைச் சிரந்தோடு சிரஞ் சேர்த்திச் சேதிக்கச்செய்தார் கூத்தர் என்பது அபவாதமென்று ஆட்சேபிக்குவர், 'கல்லானிழற்கீழாயிடர்காவாய்' என்னுந் தேவாரப் பொருள் கூறவறியாத சிவயோகியாரைக் கூத்தர் கொன்றார் என்பதையும் அபவாதமாக் காணாததென்னோ? கம்பர் இராமாயணச் செய்யுட்களை 'நாளொன்றுக்கு எழுநூறு விழுக்காடு பாடிமுடித்தனர் என்று அத்தனை லேசாகக்கூறுவது சுத்த அசம்பாவிதமேயாம்' என்கின்றார் இச்சரித்திரக்காரர். ஆயின், 'மூளைச்சாளம்மை' யென்னுங் காளி முனைந்தெழுத ஒட்டக்கூத்தர் ஓரிரவில் தக்கயாகப் பரணியைப் பாடி முடித்தார் என்பதும் அசம்பாவிதமாகாதோ?

இரண்டாவதாகிய இரட்டைப்புலவர் சரித்திரம் இனிமைமிகுந் திலங்குகின்றது. இவர்கள் பாடல்கள் தெவிட்டாத் தீஞ்சுவையன. இரட்டையர்களுடைய ஆசுகவித்திறமை காளமேகமொருவர்க்கே பிறப்பட்டது. கலம்பகம்பாடுவதில் இவர்க ளிணையற்றவரென்பதற்கு 'கலம்பகத்திற்கிரட்டையர்கள்' என்னும் பழஞ்சொல்லே போதிய சான்றாம். முடவருங் குருடருமாயிருந்த இவ்விருபுலவர்களுடைய சரிதம், கூடிவாழ்வோரின் குன்றா வலிமையைக் குவலயங்காண நிலைநிறுத்துகின்றது.

படிக்காசுப்புலவரும், மற்றிரு சரிதத் தலைவர்போன்று, தெய்வீகம்பெற்றவராகச் சொல்லப்பட்டிருக்கிறார். இம்மூன்று சரித்திரங்களும், தமிழ்ப்புலவரும் தமிழ் மாணவரும் விரும்பிவாசித்தற்குரிய விழுப்பங்கொண்டு விளங்குகின்றன. தமிழ்ப்புலவர் சரித்திரங்களை உண்மைக்கொப்ப பூர்வ சாஸனங்கள், தலைவன்கூற்று, அவன் காலத்தோர்மொழி, தொன்னூற்றுணிபாதிய ஆதாரங்காட்டி யெழுதவிழைவார்க்கு இந்நூல்வழிகாட்டியாகவுந் தூண்டுகோலாகவு மிருக்குமென்பதிலையமில்லை. இந்நூலாசிரியரே வேறுபல சரித்திரங்களுமெழுதி வெளியிடுமாறு தமிழுலக மிவர்க்காதரவு தருதல்வேண்டும். இக்காலத்துப் பலர் விரும்பிப்படிக்கும் 'நாவல்'களினும் நானாவிதங்களில் நனிசிறந்துள்ளதாகுமிந்நூலைத் தமிழறிந்தோர் யாவரும் தப்பாமல் வாசிப்பார்களாக.

நமக்குக் கிடைத்த பிரதி நமது சபையின் புத்தகாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதை அன்போடெமக்கனுப்பிய ஆசிரியர்க்கு அநேக வந்தனங்கள் அளித்திடுகின்றோம்.

## நமது வாசகர்கள்

### 1. கோட்ட பாளயம்

### விஸ்வகர்ம குலோத்தாரண சபை

அவிநாசிதாலூகா கஸ்பா ஆலத்தூர் வெங்கடாச்சார் குமாரர் சிற்பி கற்பிளி ஆச்சாரி என்பவர் அனேக பண்டிதர்களிடமும் ராஜாங்கங்களிலும் பரிசுபெற்றவர். இவர் கை வேலைகள் மைசூர், பெங்களூர், கொச்சி, மலையாளம், கள்ளிக்கோடு, கோயமுத்தூர், சேலம், திருச்சி இங்கெல்லாம் பரவி யிருக்கிறது. பிரதிஷ்டா காரியமாகிய ஜலாதிவாசம், தானியவாசம், க்ஷீராப்தி வாசம், பஞ்சசயனம், அஷ்டபந்தனம், யந்திரஸ்தாபனம், பிராணப்பிரதிஷ்டை, அபிடேகம் முதலிய அனைத்தும் இவரே நடத்தியபின்தான் பூஜகர் ஆலயத்தினுள் பிரவேசிக்க வேண்டியது. இவர் வம்சமானது நமது குருஸ்தானமாகிய வீபூர்சுவாமிகள் வம்சத்தைச் சார்ந்தது.

இப்பொழுது இவர் காலமாய் 12 வருடமாகிறது. இவரது குமாரரும் சிலாவிக்கிரக வேலைதான் செய்து வருகிறார். தற்காலம் இவரால் நமது குல நன்மைக்காக கோயமுத்தூர் தாலூக்கா கோட்ட பாளத்தில் விஸ்வகர்மகுலோத்தாரண மகாசபை யொன்று ஏற்படுத்தி மாதமாதம் 11 தேதியில் மகா சபை நடத்தப்பட்டு வருகிறது. தவிர, நமது ஜாதியார் அனைவரையும் சீர்திருத்தி வேதசாஸ்திர யுக்தமாய் சகல அனுஷ்டானங்களையும் கைவிடாமல் ஒழுங்காய் நடந்துவரச் செய்திருக்கிறார். இவர் சபா மானேஜராயும், ஷை கோட்டை பாளயம் ஸ்ரீ சரவண ஆச்சாரி காரியதரிசியாயும் இருந்து இந்த 2 வருஷகாலமாய் மஹாசபை நடத்தப்பட்டு வருகிறது.

ஆ. க. வெங்கடரமண ஸ்தபதியார்

### 2. தனிப்பாடசாலைகள்

நம்முள் பலர் கல்வியின் பொதுத்தன்மையை யறியாமல் தடுமாறுகின்றனர். கல்வியென்பது மனிதர்க்கெல்லாம் பொதுவானது; அதற்கு ஜாதி, மதம், தேசம், பாஷையென்ற வித்தியாசங்கள் கிடையாது. கல்வியை எவரிடத்தேனுங் கற்கலாம். மிகவுயர்ந்த குலத்தானென்று சொல்லிக்கொள்பவனும் மிகத் தாழ்ந்த குலத்தானென்பவனிடம் கல்வி கற்றுக்கொள்ளலாம். இதில் யாதொரு குறைவுமில்லை யென்பதற்கு சரித்திராதாரங்களிருக்கின்றன. நமது சிறுவர்கள் ஆங்கிலமோ, சமஸ்கிருதமோ, தமிழோ, தெலுங்கோ படிப்பதற்கு தனிப் பள்ளிக்கூடங்கள் வேண்டியதில்லை. தனிப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவது சாத்தியமாகாது; பெருஞ்செலவுபிடிக்கும்; அந்தந்த ஸ்தானங்களில் போதுமான மாணாக்கர்கள் கிடைக்கமாட்டார்கள். ஆதலால் பலருடைய வித்தியாபிவிருத்திக்காக அங்கங்கு நடைபெற்றுவரும் பாடசாலைகளுக்கே நமது பிள்ளைகளை யனுப்பவேண்டும். இங்ஙனஞ் செய்வித்தலே கஷ்டமா யிருக்கும்போது, தனிப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து அவற்றிற்குண்டான செலவுகளைச் செய்தல் நம்மாலாகுமா? பொதுக்கலாசாலைகளில் சமஸ்கிருதம் இங்கிலீஷ் முதலிய பாஷாஞானத்தைப் பெற்றுக்கொண்டால், அந்த ஞானத்தைக்கொண்டு அவரவர்கள், பாடசாலை யுதவி யில்லாமலே, தமக்குவேண்டிய சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்துகொள்ளலாம். பாஷாஞானம்தான் முக்கியமாய் வேண்டப்படுவது. அதிலேதான் நம்மவர்கள் கவனஞ்செலுத்தவேண்டும். அந்தஞானங் கிடைக்கக்கூடிய இடம் எதுவாயினும் ஆக்ஷேபமின்றி அடையவேண்டும். இடத்திற்கு ஆக்ஷேபஞ்சொல்லி பாஷாஞானம்பெறாது பல்லவி பாடுகிறவன் பங்கமேயடைவானென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

சீர்காழி. நெ. மாணிக்காச்சாரி.

### 3. பௌரோகிதர் நோக்கத்தக்கதேது?

நமது குலத்தினரா யிருப்பவர்கள் பௌரோகிதங்கற்றுக்கொள்வது நம்மவர்களுக்குமட்டும் உபயோகப்படுவதற்காகவென்று வரம்பிடக்கூடாது. அவர்கள், நமது ஆருஷேய சகோதரர்களைப்போல், மற்ற ஜாதியார்களுக்கும் பௌரோகிதஞ் செய்யவைக்கவேண்டும். இது சாத்தியமில்லையென்று சிலர் நினைக்கலாம். சாத்தியமென்றே நான் நினைக்கிறேன். ஏனென்றால், பெரும் பட்டணங்களிலுள்ள மற்ற ஜாதியார்களாகிய செட்டிகள் முதலியவர்கள், பிரக்யாதியுற்றிருக்கும் விஸ்வகர்ம குலப் பௌரோகிதர்களைக்கொண்டு சுபாசுப காரியங்களையும், சாந்திகள் முதலியவற்றையும் நடத்திக் கொள்வது சகசமாயிருக்கிறது. மஹாலய அமாவாசையன்று நமது பௌரோகிதர்களிடம் தர்ப்பணம் செய்பவர்கள் கோடானுகோடி பேர். ஆகவே, நமதுகுலப் பௌரோகிதர்கள் மேலானகல்வியறிவும், ஆசாரமும், வாக்குச் சாதுர்யமும் பொருந்தியுள்ளவர்களாய்க் கிடைக்கும் பக்ஷத்தில் அவர்களைக்கொண்டு பலகாரியங்கள் நடத்துவிக்க மற்ற ஜாதியார்கள் ஒருப்படுவார்கள். ஆனால் தற்போதுள்ள சராசரி (average) பௌரோகிதர்களை அவர்கள் விரும்புவதுகஷ்டம். இந்த பௌரோகிதர்களும் ஷையார் அழைத்தாலும் அவர்கள் வீடுகளிற்போய் தைரியமாய்க் காரியங்கள் நடத்துவிக்கமாட்டார்கள். நமது வீட்டுக் காரியங்களுக்கே அவர்களை வேண்டா வெறுப்பாய் அழைக்க வேண்டியதா யிருக்கிறது. பௌரோகிதலக்ஷணங்களும் கல்வியும் ஆசாரமும் வசீகாரமும் கெட்டவர்களாயிருந்தாலும், சுஜாதியார்களைக் கொண்டே எல்லாகாரியங்களும் நடத்துவிக்க வேண்டுமென்ற தலையெழுத்து நமக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது மற்றவர்களுக்கப்படி நிர்ப்பந்தமில்லை யல்லவா? ஆதலால், யாருக்குப் பௌரோகிதஞ் செய்த போதிலும், பயமில்லாமற் செய்யக்கூடிய பாண்டித்யத்தை நாம் இனிசிருஷ்டிக்கும் பௌரோகிதர்களுக்கு உண்டுபண்ணவேண்டும். நமதுஜாதிப் பௌரோகிதர்களை நாம் தேடுவதிலும் மூடிமூடிக்கொண்டாடுவதிலுஞ் சிறப்பொன்றுமில்லை. அவர்களை மற்ற ஜாதியார் தேடும்படியாகவும் அவர்கள் கொண்டாடும்படியாகவுஞ் செய்யவேண்டும். அதற்குத்தக்க பௌரோகித பாடசாலைவேண்டும். அப்படிப் பிரகாசிக்கக்கூடியவர்களுக்குப் பாடஞ்சொல்லிவைக்கவேண்டும். அந்தக்காரியத்தில் செலவாகும்பொருள்தான் பலன்தரும். அதுதான் குலத்திற்கு மேன்மைதரும்.

மோ. முத்தியாலைய பத்தர்

---

**3 குழந்தைகளை 9 மாதத்தில் பெற்றாள்.**—திருச்சூரை யடுத்துள்ள ஒரு கிராமத்தில் ஒரு நாயர் ஜாதி ஸ்திரீ 9 மாதங்களில் 3 குழந்தைகளைப் பெற்றாளென்று சொல்லப்படுகிறது. இவ்வருஷம் பிப்ரவரி மாதத்தில் முதற் குழந்தை பிறந்தது; பின் நாலுமாதங்கள் வரை அவள் சுகவீனமாகப் படுக்கையில் இருந்தாள். அக்டோபர் மாதத்தில் இரண்டாவது குழந்தை பிறந்தது. ஆறுநாட்கழித்து மூன்றாவது குழந்தை பிறந்தது. முதலாவது குழந்தை உயிரோடிருக்கிறது. மற்ற இரண்டு குழந்தைகளும் பிறந்த சில தினங்களில் இறந்துபோயின.



## ஆரோக்ய போதம்

### வாந்திபேதி மருந்து

சட்டியைச் சிவக்கக்காய்ச்சி, அதில் இரண்டு தம்பிடியெடை கர்ப்பூரத்தைப் பொடிசெய்து, அதிலேயே கரிவேப்பிலையைப் போட்டுச் சிவக்க வறுத்து, அரையாழாக்கு ஜலம்விட்டுக் காலாழாக்கு ஜலமாகக் காய்ச்சி இறக்கி வாந்திபேதி கண்டவுடனே கொடுத்தால், அது நின்றுபோம்; நிற்காவிட்டால், அவ்வாறே செய்து மணிக் கொருமுறை கொடுக்கவேண்டுமென்று ஒரு வைத்தியர் கூறுகின்றார்.

### புகையிலையின் தீங்கு

புகையிலையை அடிக்கடி தொடர்ந்து உபயோகித்து வந்தால், இருதயத்தோடு சம்பந்தப்பட்டுள்ள நரம்புகளின் சக்திக்கு இடையூறு நேரிடுகிறது. அதனால் அதன்வேலை மந்தப்படுகிறது. பின் காலக்கிரமத்தில் அஃது ஒழுங்கீனமாகவும் விட்டுவிட்டும் துடிக்க ஆரம்பிக்கும். பிராணுபாயம் நேரிமோறு இருதயத்திற்கு மிகுந்த பலக்குறைவு புகையிலையினால் ஏற்படுகிறதென்று தெரிகின்றது.

### மக்காசோளத்தின் உபயோகம்

மக்காச் சோளக்கதிரில் தொங்கும் பட்டுநூல் குஞ்சம் போன்ற வஸ்துவைக் கஷாயம்வைத்துச் சாப்பிட்டால் நீரடைப்பு, நீர்ச்சுருக்கு முதலிய வியாதிகள் நீங்கிப் போமென்று சொல்லப்படுகின்றது. மக்காச்சோளக் கதிரைத் தானியத்தை உதிர்த்தபின் அதன் கத்தையை எரித்து அதன் சாம்பலுடன் உப்பைக்கலந்து சாப்பிட்டால், நெஞ்சுச்சளியும் அதனாலுண்டாகும் கக்குவாய் இருமலும் குணமாகின்றனவாம்.

### நாய்விஷத்திற்குமருந்து

மணத்தக்காளித் தழையை யிடித்து ரஸம்பிழிந்து வழுமுறை சல்லாத்துணியால் வடிகட்டித் தினந்தோறும் அரைக்கால்படிவீதம் மூன்றுநாள் உட்கொள்ள வேண்டும்; ஆறுநாள் உப்பில்லாப் பத்தியமாகவிருந்து கஞ்சிமட்டும் சாப்பிடவேண்டும்; ஏழாவதுநாள் ஓமத்தை அரைத்து வெந்நீர் ஸ்நானஞ்செய்ய வேண்டும்; பின் ஆறுவாரம் நல்லெண்ணெய் சேர்க்காமல் ஸாதாரண ஆகாரம் உட்கொண்டு வரவேண்டும். இவ்வாறு செய்து வந்தால் நாய் விஷம் முற்றிலும் நீங்கிவிடுமாம்.

## பாகசாஸ்திரம்

**காரப்பொடி.**—காலுபலம் மிளகாய், 8 பலம் உப்பு, ஒருபலம் பெருங்காயம் இம்மூன்றையும் தனித்தனியே பொடிசெய்து ஒன்ருய்க் கலந்து மற்ெருருதரம் கொஞ்சம் இடித்து வைத்துக்கொள்ள வேண்டியது.

**தேங்காய் வடாம்.**—அரைப்படி அவலைக் கொஞ்சம் ஜலத்தில் ஊறவைத்திருந்து, பின்பு ஜலத்தை நன்ருய் வடித்துவிட்டு உரலிற்போட்டு, முதிர்ந்த தேங்காய்த் துருவல் ஒருவீசை அதிற் கொட்டி அரைத்து எடுத்து, ஈயம் பூசியதோர் பாத்திரத்தில் வைத்துக் கொண்டு, ஒன்றே முக்கால்பலம் காரப்பொடியை அதனேடு சேர்த்து, 8 எலுமிச்சம்பழ ரஸத்தை அதில் பிழிந்து ஒன்ருய்க்கலந்து நன்ருய்ப் பிசைந்து மற்ற வடாம்போல் இட்டு உபயோகிக்கலாம்.

**பருப்பு பொடி.**—உளுத்தம் பருப்பு அரையாழாக்கு; துவரம்பருப்பு மூன்ருழாக்கு; கடலைப் பருப்பு இரண்டாழாக்கு—இம்மூன்றையும் தனித் தனியாக வாணலியிற் போட்டு சிவந்து வாசனை வருகிறமட்டும் வறுத்துக் கொள்ளவேண்டும். அரைக்கால் பலம் மிளகாய், முக்காற்பலம் உப்பு—இவற்றையும் வெவ்வேருக வறுத்துக்கொண்டு, ஷை பருப்புகளுடன் சேர்த்துக்கலந்து கொஞ்சங் கொஞ்சமாய் இயந்திரத் தில் போட்டு அரைத்து வைத்துக்கொள்ளவும். இந்தப் பொடியில் கொஞ்சம் சாதத்திலிட்டு நெய்விட்டுக் கொண்டு சாப்பிடலாம். பிரியமானவர்கள் எலுமிச்சம் பழரஸத்தையும் பிழிந்து கொள்வதுண்டு.

**கறிமாப் பொடி.**—காய்வகைகளைக் கறி சமைப்பதில் உபயோகிக்கப்படுவது—

| | | |
|---|---|---|
| கடலைப்பருப்பு | $2\frac{1}{2}$ | பலம் |
| உளுத்தம்பருப்பு | $2\frac{1}{2}$ | ,, |
| அரிசி | 3 | ,, |
| மிளகாய் | $2\frac{1}{2}$ | ,, |
| கொத்துமல்லி விரை | 4 | ,, |
| மிளகு | $\frac{1}{4}$ | ,, |
| சீரகம் | $\frac{1}{8}$ | ,, |
| மஞ்சள் | $\frac{1}{8}$ | ,, |
| காயம் | $\frac{1}{8}$ | ,, |
| கருவேப்பிலை | $\frac{1}{2}$ | ,, |

இவைகளில், காயம் மிளகாய் என்னுமிரண்டு வஸ்துக்கள் தவிர மற்றவற்றை வெவ்வேருக பக்குவமாய்க் காந்திப்போகாமல் வறுத்து, காயத்தைத் தணலின்மேல் வைத்துப் பொரிபோலாக்கி, எல்லாவற்றையும் ஒன்ருகச்சேர்த்து இயந்திரத்திற்போட்டுக் குங்குமம் போலரைத்தெடுத்து ஓர் மரவையிற்போட்டு நன்ருய்மூடி வாசனைபோகாமல் வைத்துக்கொள்ளவேண்டியது.

**குழம்புப் பொடி.**—

| | | |
|---|---|---|
| உளுத்தம் பருப்பு | 5 | பலம் |
| தேய்த்த எள் | 5 | ,, |
| வெந்தயம் | 1 | ,, |
| மிளகாய் | 2 | ,, |
| கொத்துமல்லி விரை | 5 | ,, |
| கடுகு | $\frac{1}{2}$ | ,, |
| சீரகம் | 1 | ,, |

இவற்றில் மிளகாயை நல்லெண்ணெய் விட்டும் மற்றவற்றை வெவ்வேருக அஃதில்லாமலும் வறுத்துக்கொண்டு, எல்லாமொன்ருகக் கலந்து நன்ருயரைத்து வாசனை போகாமல் மூடிவைத்துக் கொள்ள வேண்டும்.

**தயிர்வடை.**—அழுத்தமானதோர் கனத்த வெள்ளைச் சவுக்கத்தின் நான்கு மூலைகலைகளையும் கட்டி பைபோலாக்கி ஓர் மூலையில் தொங்கவிட்டு அதில் தயிரைக் கொட்டி ஒரு நாளெல்லாம் தொங்கவிட்டிருந்தால், அதன் ஜலமெல்லாம் வடிந்து இறுகலாய்விடும். இப்படியிறுகிய தயிருக்கு கட்டித்தயிர் என்று பெயர். அவ்விதக் கட்டித்தயிரில் 5 பலம் நிறையை ஈயம் பூசியதோர் தாம்பாளத்தில் போட்டு வைத்துக்கொள்ளவேண்டும். வேர்கிள்ளிய கொத்துமல்லி கால்பலம், காம்பில்லாத பச்சைமிளகாய் அரைபலம், தோல்சீவிய இஞ்சி அரைக்கால் பலம், இவற்றைச் சிறுதுண்டுகளாக நறுக்கிவைத்துக்கொள்ளவேண்டும். இவற்றையும், 3 பலம் கோதுமை நொய்யும், காலேயரைக்கால் பலம் பொடிசெய்த உப்பும் ஷை கட்டுத் தயிரில்போட்டு, நன்ருய்க் கலந்தும் பிசைந்து தட்டி நெய்யில் வேகவைத்தெடுத்துக் கொள்ளவேண்டும். தயிர் சம்பந்தப்பட்ட பக்ஷணமாதலால், கொஞ்சம் சூடாயிருக்கும்போதே இதைச் சாப்பிடவேண்டும். கோதுமை நொய்க்குப் பதிலாக கோதுமைமாவைச் சேர்ப்பதுமுண்டு.



## சண்டையைச் சார்ந்தவை

பிரான்சு தேசத்தில் யூஜினியென்னுமொரு ஸ்திரீ ராணுவ வுடையொன்றை யெப்படியோ சம்பாதித்துத் தரித்து, பிரெஞ்சு சேனையுடன்கூடித் தைரியமாகச் சண்டைசெய்தனள். அவள் காயமடைந்து கீழேவிழுந்து ரணசிகிச்சைக்கு அனுப்பப்பட்டபொழுது, அவளைப் பெண்ணென் றறிந்தனராம். இவள் வண்ணா ஸ்திரீயாம்.

*
* *

யுத்தம் காரணமாக இங்கிலாந்தில் மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் சம்பளம்பெறுகிறவர்கள் வருமான வரிக்காக மாதம் ஒன்றுக்கு 25-ரூபாய் கொடுக்கவேண்டுமென்றும் அதற்குமேல் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் 12-8-0 சேர்த்து வருமானவரி கொடுத்துவரவேண்டுமென்றும் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது.

*
* *

ஜெர்மனி தேசத்தின் தலைநகராகிய பெர்லினில் ஓடும் மின்சாரவண்டியில் (டிராம்கார்) வேலைசெய்து வந்த ஆண்மக்கள் அனைவரும் சேனையிற்சேர்ந்து போர்முனைக்குப் போய்விட்டார்களாதலின், அந்நகரிலுள்ள ஸ்திரீகள் மின்சாரவண்டியை நடத்துபவர்களாகவும், விருத்தர்கள் அவ்வண்டியை ஓட்டுபவர்களாகவும், வேலைபார்த்து வருகின்றனரென்று தெரிகிறது.

*
* *

இங்கிலாந்தில் பர்மிங்ஹாம் என்று ஒரு நகர் உண்டு. கடிதம் கொண்டுபோய்க் கொடுப்பதற்கு புருக்களைப் பழக்குவதற்காக அந்நகரில் மிகப்பெரிய சங்கமொன்று இருக்கிறது. கம்பியில்லாத் தந்தி அனுப்புவதற்கு வேண்டிய வசதிகளில்லாத ஸ்தலங்களுக்கு கடிதங்களைக் கொண்டுபோய்க்கொடுத்துப் பதில்வாங்கி வருவதற்காக 30 ஆயிரம்புருக்களை அச்சங்கத்தார் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குக் கொடுத்திருக்கிருர்கள்.

*
* *

பலவகைப் பீரங்கிகளில் ஹாவிட்ஸர் என்பது ஒரு வகைப் பீரங்கி. அது மற்றப் பீரங்கிகளைவிட வன்மையிலும், விலையிலும், அமைப்பிலும் சிறந்ததாகும். அந்த பீரங்கிகளில் 17-அங்குலம் குறுக்களவுள்ள குழாய்கள் இருக்கின்றன. 10-நிமிஷங்களுக்கு ஒருமுறைதான் அப்பீரங்களிலிருந்து வெடிகுண்டுகள் வெளியாகும் மிகவும் தேர்ந்த அறிவுடைய இஞ்சினியர்களே அந்த பீரங்கிகளைப் பிரயோகிக்க முடியும் அவைகளைப் பிரயோகிக்கும்பொழுது, இஞ்சினியர்கள் வெகு தூரத்திலிருந்துகொண்டு, மின்சாரவிசையினுல் குண்டுகளைப் பிரயோகிப்பார்கள். ஜெர்மன் சேனைப் பிரிவு ஒவ்வொன்றுக்கும் அம்மாதிரியான இரண்டு பீரங்கிகளே இருக்கின்றன. அவைகள் தண்டவாளத்தின்மீதுதான் செல்லமுடியும். அவைகளிலிருந்து ஒருமுறை வெடிகுண்டைப் பிரயோகிக்க 1250-பவுன் அதாவது 18-ஆயிரத்து 750-ரூபாய் செலவாகிறது.

*
* *

போர்முனையில் காயம்பட்டு சிகிச்சையிலிருந்துவரும் ஒரு பிரெஞ்சு ராணுவத்தலைவர் பின்வருமாறு சொல்கிருர். "ஐரோப்பிய யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னும் அதற்குப் பின்னும், அன்னியநாட்டார்பலர் பிரான்ஸுக்கு வந்தபொழுது, தங்களுடன் நாய்களை கூட்டிவந்தனர். அவர்கள் திரும்பிப்போனபொழுது, தங்களுடைய நாய்களை பிரான்ஸிலேயே விட்டுவிட்டுப் போனுர்கள். ஆகவே, பிரென்சுக்காரர்கள் அந்த நாய்களைப் பட்சமாய் நடத்திவந்தனர். ஆயினும் சிறிது நாட்களுக்கெல்லாம் அந்நாய்கள் பிரான்ஸின் எல்லையைத் தாண்டி, பெல்ஜியத்திற்குள்ளும் ஜெர்மனிக்குள்ளும் சென்றன. அவை ஒவ்வொன்றும் கடிதங்கள் கொண்டுபோய் ஜெர்மனியாரைச் சேர்ந்துவிட்டதாகத் தெரியவந்தது. ஆகவே பிரென்சு எல்லையைத்தாண்டிப்போகும் நாய்கள் அனைத்தையும் சுட்டுக் கொன்றுபோடும்படி உத்தரவாயிற்று."

*
* *

உலகத்தில் யுத்த தளவாடங்கள் செய்யும் தொழிற்சாலைகளில் மிகவும் பெரியது ஜெர்மனியிலுள்ள க்ருப் தொழிற் சாலை. அத்தொழிற்சாலையில்தான் ஜெர்மனிக்கு வேண்டிய யுத்த தளவாடங்கள் அனைத்தும் செய்யப்படுகின்றன. வேறு சில தேசங்களும் அத்தொழிற்சாலையிலிருந்து வருஷந்தோறும் ஆயுதங்கள் தருவிக்கின்றன. இந்த ஐரோப்பியயுத்தம் ஏற்படுவதற்குமுன், பிரிட்டிஷ் சேனைக்கு வேண்டிய கத்தி முதலியவைகள் வருஷந்தோறும் அத்தொழிற்சாலையில்தான் தயாராயின. சாதாரண காலங்களில் நாள்தே

றும் அத்தொழிற்சாலையில் 80 ஆயிரம் மனிதர்கள் வேலை செய்வதுண்டு. இப்பொழுதோ கணக்கற்ற வேலையாட்கள் வெகு துரிதமாய் வேலைசெய்து வருகின்றனரென்று சொல்லப்படுகிறது. அத்தொழிற்சாலைக்கு செலவு அழிவு எல்லாம்போக வருஷந்தோறும் 20 லட்சம் பவுன் அதாவது 300லட்சம் ரூபாய் லாபம்கிடைக்கின்றது. அங்குவேலைசெய்யும் மனிதர்களுக்குப் பண்டிகை காலங்களில் இனும்கொடுத்தல், பென்ஷன்கொடுத்தல், இவைகளுக்காக ஒவ்வொரு வருஷமும் 3 லட்சத்து 50 ஆயிரம்பவுன் அதாவது 52 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. குருப் தொழிற்சாலையில் கெயிஸர் சக்கரவர்த்தியும் ஒரு பங்காளி.

---

## அதிமதுரம்

கல்வியிற் பெரியாராய கம்பர் ஓர்காலத்தில் எச்சாதியர்க்கு புத்திகூர்மை அதிகமாயுளது என்பதை அறிய வேண்டி சமயமும் சந்தர்ப்பமும் நேரிடும்போதெல்லாம் ஒவ்வோர்ஜாதியின் அங்கத்தினரைப்பார்த்து ஓர் பாவினத்தை திருவாய்மலர்ந்து தம் உள்ளக்கருத்து அவர் புந்தியில் பட்டதோவெனப் பரிசோதித்துக்கொண்டே வந்தார். அத்தகைய பரிசோதனையில் எச்சாதியரும் தாம் தம் பாவின்கண் அமைத்துள்ள உள்ளக்கருத்தை அறியும் கூரிய புத்தியில்லாதவர் என்று கண்டனர். கடைசியாக அவர் தென்தேயத்தில் மதுரையம்பதிக்குச் சமீபத்தில் ஓர் சிற்றூரில் விஸ்வபிராம்மண சந்ததியில் அவதரித்து விளங்கிய ஓர் குலோத்தமரைக் கண்டு,

உதிரிக்கு மண்சுமந்த வுத்தமனூர் வாழும்
மதுரைக்கு யான்சென்று வாரேன்—குதிரைக்கு
பின்னொன்றுவேண்டும் பிரமாண்டையாச்சாரி
என்னென்றிராதேயினி.

என்று திருவாய்மலர்ந்து ஓர் குதிரையின்மீது ஆரோஹணித்து பிரயாண சந்நத்தராய் நின்றவர் சென்றார். சென்றவர் திரும்பி வருவதற்குள்ளாக "குதிரைக்கு பின்னொன்று" என்னும் சொற்றொடருக்கு அஸ்வினிக்குப் பின் பரணி என்று அருத்தம்கொண்டு ஓர் பரணியை தயாரித்து வைத்திருந்தனர். கம்பர் திரும்பி வந்து தான்வேண்டிய பரணியைப் பெற்றுக்கொண்டு அத்துவஷ்டாச்சாரிய சுவாமிகளது புத்தியின் சாதுர்யத்திற்காக சந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் ஒருங்கே எய்தினர்.

சத்தியவசனன்.

## விசேஷ் வர்த்தமானம்

**தயிராற் செய்யப்படும் பொருள்கள்.**—மேல் நாடுகளில் வசிப்பவர் தயிரைக் கெட்டிப்பொருளாக்கு முறையைக் கண்டு பிடித்து, அதிலிருந்து, போலிச்சலவைக்கற்கள், சீப்புகள், சிகரெட் வைத்துக் கொள்ளும் குழாய்கள் முதலிய வற்றைச்செய்து வருகின்றனர்.

* * *

**மண்பாண்டத் தொழில்.**—குவாலியர் தர்பார் செலவில் மண்பாண்டத் தொழிற்சாலையொன்று ஸ்தாபிப்பதற்கு வேண்டிய எற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அத்தொழிற்சாலைக்கு ஐரோப்பாவிலிருந்து கொண்டுவரப்பட்ட யந்திரங்கள் பதிக்கப்பட்டு வருகின்றன. அதனில் மட்பாண்டங்களும் பீங்கான் பாத்திரங்களும் ஓடுகளும் செய்யப்படும்.

* * *

**தம்பலம் உமிழ்ந்தவர்க்குத் தண்டனை.**—வடநாட்டு வாசியான ஓர் இந்து, பம்பாய் ஹார்ன்பி ரோட்டில் போய்க்கொண்டிருந்தபொழுது வெற்றிலைச் தம்பலம் உமிழ, அது சமீபத்தில் போய்க்கொண்டிருந்த வில்லியம் வாக்கர் என்பவர் மீது பட்டு அவர் உடுப்பு ஆபாசமாய்ப் போயிற்று. மிஸ்டர் வாக்கர் அவ்விந்துவின் மீது கேஸ் கொண்டு வந்தார். இது தவறுநேர்ந்ததென்றும் தாம்வேண்டுமென்று உமிழவில்லையென்றும் இந்து கூறினும், பொது வீதிகளில் அசிங்கப்படுத்தும் கெட்ட வழக்கங்களை ஜனங்கள் ஒழிக்கும் நோக்கத்துடன் இந்தக் கேஸ் கொண்டுவந்தேனென்று மிஸ்டர் வாக்கர் சொன்னதால் பம்பாய் சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் இந்துவுக்கு 5 ரூபாய் அபராதம் விதித்தார்.

* * *

**மகம்மதியர்களின் தொகை.**—உலகத்திலுள்ள ஜனங்களின் தொகை 180 கோடியில் மகம்மதியர்கள் தொகை மட்டும் இருபத்துமூன்று கோடியாம். இது சராசரிக் கணக்குக்கு நூற்றுக்குப் பதினைந்தரை வீதமாகும். இவர்கள் ஆசியாக்கண்டத்தில் பதினாறுகோடியே தொண்ணூறு லட்சமும், ஆப்பிரிக்காகண்டத்தில் ஐந்துகோடியே தொண்ணூறு லட்சமும், ஐரோப்பாவில் ஐம்பது லட்சமும், துருக்கி இராச்சியத்தில் ஒரு கோடியும், பெர்ஷியா ஆப்கானிஸ்தான் தேசங்களில் ஒரு கோடியே இருபதுலட்சமுமாகப் பிரிந்து பரவியிருக்கின்றனர். கிறிஸ்தவ இராஜாங்கங்களில் மட்டும் பதினாறுகோடியே பத்துலட்சம் மகம்மதியர் இருக்கின்றார்கள். இவர்களில், பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் வசிப்போர்கள் எட்டு கோடியே பத்து லட்சம் பேர்; பிரான்சு, உலாந்தா இராஜாங்கங்களில் ஆறு கோடியே பத்துலட்சம் பேர்; ருஷிய இராஜாங்கத்தில் ஒருகோடியே அறுபது லட்சம் பேர்; ஆப்பிரிக்கா கண்டத்தில் ஜெர்மானியருக்குச் சொந்தமான பாகங்களில் இருபத்தைந்து லட்சம் பேர். உலகத்திலுள்ள இந்துக்களின் மொத்தத் தொகை சுமார் 33 கோடி; புத்த மதத்தினரின் தொகை 40 கோடிக்கு அதிகம்.

OFFICE OF THE REGISTRAR O
3-...1915

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] 1915ஹு ஜனவரிமீ [சஞ்சிகை 4

## ஒளிவளர் விளக்கு

1914ஹு டிஸம்பர் மாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களுடைய எண்ணிக்கை 434.

* * *

விஸ்கவர்ம குலோற்பவரும் நரசிங்கநல்லூர்ச் சாதுசங்க மகாசபைத்தலைவரும், மௌனவிரதம் பூண்ட முனிபுங்கவருமாகிய சாதுஸ்ரீ கருணானந்த சுவாமிகள், இவ்வருஷச் சங்கமஹோற்சவத்தை, புண்ணியப் பெருநதியாகிய கங்கையின் உற்பத்திஸ்தானமாகிய ஹரித்துவாரத்தில் நடத்துவதாகத் தீர்மானித்திருக்கிறார். இது நாளது ஏப்ரல்மீ 9உ-முதல் ஒருமாதகாலமட்டும் வெகு கம்பீரமாய் ஷை இடத்தில் நடைபெறும்.

* * *

கிருஷ்ணா குண்டூர் மண்டல விஸ்வப்பிராம்மண மகாஜனசபையானது, கொல்லூர் விஸ்வப்பிராம்மண பால சமாஜத்தாருடைய ஆதரணையின்கீழ், சென்ற டிஸம்பர்மாதத்தில் குண்டூரில் நடைபெற்றது. இது பழையபடியே நடைபெறுமாறு பிரயாசையெடுத்து முடித்தவர் பண்டித ஸ்ரீவட்டேபாடி நிரஞ்சன சாஸ்திரிகளே! 'பிரபோதினி' யென்னுந் தெலுங்குபத்திரிகை இனிக் கிரமமாய் வெளிவருமென்று கேட்டு ஆனந்தமெய்தினோம்.

* * *

சென்னை பச்சையப்பன் காலேஜில் ஜூனியர் பி. ஏ. வகுப்பில் வாசிக்கும் ஸ்ரீ K. S. முத்துக்குமாராச்சாரியார்க்கு நமது சபையார் இப்பாதியாண்டுக்கு ரூபா 35 ஸ்காலர்ஷிப் கொடுப்பதாய்த்தீர்மானித்திருக்கிறார்கள். நாளது ஜூலை மாதத்திலிருந்து ஆரம்பமாகும் புதுவித்யா வருஷமுதல் விஸ்வகர்மகுல வித்யார்த்திகளுக்கு கூடுமானவரையிலுந் திரவியசகாயஞ் தருதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். காலேஜ் வகுப்புகளில் வாசிப்போரில் பொருளாதரவு வேண்டுவோர் ஜூன்மாதத்தில் மனுசெய்துகொள்வார்களாக.

* * *

சென்றமாதப் பத்திரிகையில் நாம் பிரசுரித்த சென்னைச் சர்வகலாசங்கப் பட்டதாரிகளாகிய நமது ஜாதிக் கனவான்களுடைய ஜாபிதாவில்,

கீழ்க்குறித்த மூன்றுபேர்கள் விடுபட்டுப்போனதற்காக விசனிக்கிறோம்.

1. ஸ்ரீ. W. நாகபூஷண ஆச்சாரியார், பி. ஏ, ஹுஜூர் சிரஸ்தாதார், காகிநாடா.

2. ஸ்ரீ. R. இரத்தினவேலு ஆச்சாரியார், பி. ஏ, (இறந்துபோயினர்.)

3. ஸ்ரீ சிம்ஹாத்ரி சூரிய நாராயணமூர்த்தி ஆச்சாரியார், பி. ஏ; சப்ரிஜிஸ்திரார், விசாகப்பட்டணம்.

* * *

புதுவருஷக் கௌரவப்பட்டங்கள் வழக்கம்போல் இம்மாத முதல்தேதியன்று வெளியிடப்பட்டன. அவைகளை ஆவலோடெதிர்பார்த்திருந்தவர்களில் தம்பெயர் காணப்பெறாதவர்கள் தலையிறக்கமடைந்தனர். கிறிஸ்துவர்முதலாய தனிவகுப்பினர் சிலர் தாங்கள் சரியானபடி கவனிக்கப்படவில்லையென்று கூக்குரலிடலாயினர். இவ்விதப் பிராந்தி நம்மனோர்க் கில்லாமைபற்றிக் களிக்கவோ கலுழவோ வென்றறிகிலோம்! நாமறிந்தமட்டில், இஞ்சினீர் ராவ்பகதூர் செஞ்சி சுப்பராய ஆச்சாரியா ரொருவரைத் தவிர நம்முள் மற்றெவரும் தென்னிந்தியாவில் கௌரவப்பட்டம் பெற்றாரில்லை.

* * *

குலாபிமானத்தை உள்ளபடியே கொண்டவராய்ப் படாடோபமின்றிப் பக்தியோடு பாடுபட்டுவரும் நமது நண்பசிகாமணியாகிய அரக்கோணம் ஸ்ரீ தி. குருசாமி ஆச்சாரியாரவர்கள், சமீபகாலத்தில் கூடலூர், திருப்பாதிரிப்புலியூர், சிதம்பரம், திருவிடைமருதூர், திருவாரூர், பண்ணுருட்டி முதலிய இடங்களுக்குச்சென்று ஆங்காங்கு நமது சபையைப்பற்றிய உண்மைகளை யெடுத்துரைத்ததோடு நமது பத்திரிகைக்குப் பல சந்தாதார்களைச் சேர்த்துக்கொண்டுவந்தனர். இவருக்குத் துணைநின்று பல உதவிகள் புரிந்தருளிய சகோதரர்க ளொவ்வொருவருக்கும் சபையாருடைய வந்தனங்களைச் சந்தோஷமாயளிக்கிறோம்.

* * *

மாத்வ வகுப்பைச்சேர்ந்த பாரிஸ்டர் மிஸ்டர் J. கிருஷ்ணராவின் குமாரத்திக்கும், ஸ்மார்த்த வகுப்பைச்சேர்ந்த ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் திவான்பகதூர் T. சதாசிவ அய்யரவர்களுடைய இரண்டாவது குமாரரான மிஸ்டர் T. S. கிருஷ்ணமூர்த்திக்கும் இம்மாதம் 20உயன்று விவாக மகோற்சவம் நடைபெற்றது. இருதிறத்தினரும் பிராம்மணரேயா யிருந்தபோதிலும், வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்தவர்களென்பது கவனிக்கற்பாற்று. வெவ்வேறாய் நின்றிலகும் வகுப்புகளை இப்படி ஒன்றாய்ப் பிணைக்கக்கூடிய சம்பந்தங்கள் ஏற்படுவது மிகவுஞ் சிலாக்கியமென்றே சொல்லவேண்டும். ஒரு ஜாதிக்குள்ளேயே வகுப்பு பேதங்களைப் பாராட்டிப் பிரிவுபட்டிருப்பது பெருமையல்ல. பிரிவுகளையெல்லாம் ஒன்றுபடுத்துவதே பெருமைக்கும் வலிமைக்கும் இடமாகும். இதையறிந்து நாமும் மற்ற ஜாதியாரும் நடந்துகொள்வது நலம்.

* * *

பஞ்சாப் மாகாணத்திலுள்ள பகாட் என்னும் கிராமவாசியாகிய கன்யாலால் என்னும் பிராம்மண ரொருவர் சென்ற மாதத்தில் இந்துமதத்தைவிட்டு முஸ்லீம் மதத்தைத் தழுவியதாக ஒரு பத்திரிகை உரைக்கின்றது. இந்துக்களாயுள்ளவர்கள் பிரமதங்களைத் தழுவுவது சகசமாய் விட்டது. கிறிஸ்துவர்களாய் விட்ட இந்துக்களோ கணக்கிறந்தவராயினர். இவர்களைப் பற்றியும், இவ்வாறு ஏற்பட்டுவரும் இந்துமத ஜனக்குறையைப்பற்றியும் இந்துமதப்பிரசாரர்கள் கவனியாதுவாளாயிருப்பது பிழையென்றே எண்ணுகிறோம். இடங்கொடுத்தால், பிரமதங்களைப்புதிதாய்த்தழுவியவர்களும் அவற்றையே பழமையாய் அவலம்பித்திருப்பவரும் இந்துக்



களாதல்கூடும். இதுவும், இந்துக்களில் தாழ்ந்த வகுப்பினரெனப் புறக்கணிக்கப்படுபவர் உயர்ந்த வகுப்பாரென் றிருமாந்துள்ளார்பா லடையும் அவமரியாதைகளினின்று மனுஷனுக்குரிய மரியாதைகளைப் பெரும்பொருட்டு கிறிஸ்துவமாதி மதங்களைத் தழுவநேரிடுவது பற்றி இந்துமதத்திற்கும் இந்துமகா தேசத்திற்கு முண்டாகும் நஷ்ட கஷ்டங்களும் இந்து மடாதிபதிகளாலும், இந்து மதச்சபைகளாலும், இந்துமதக்கான்பரன்ஸ்களாலும் முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டிய விஷயங்களாகும். அவர்களால் இவை கவனிக்கப்படுகின்றன வென்பதற்கு இப்போது யாதொரு அறிகுறியுங்காணப்படாமைக்காக மிகவும் வருந்துகின்றோம். இனியேனும் இவ்வருத்தந்தீருமாறு இறைவாருள் செய்வாராக.

* * *

ஸ்ரீகனடி மறவாக் குணப்பெருந் தகையரும், அவனருட் செல்வம் அடைந்தொளிர்பவருமாகிய நமது நண்பர் யாழ்ப்பாணம் பிறக்தர் ஸ்ரீ சிவக்கொழுந்தாச்சாரிய சுவாமிகளால் பாடப்பட்ட யுத்தப் பதிகத்தை வேறிடத்தி லச்சிட்டிருக்கிறோம்.

இது ஜெர்மானிய எம்டன் சண்டைக் கப்பல் பல இங்கிலீஷ் வியாபாரக் கப்பல்களை நீருளாழ்த்தியபின் பிஞங்கில் இருசண்டைக் கப்பல்களைக் கூடத்தாக்கி அழித்ததெனக் கேள்விப்பட மனவருத்த முண்டாகி அன்றைக்கு அல்லது அடுத்ததினம் ஒன்றில் பாடப்பட்டது. பத்திரிகையிற் பிரசுரஞ் செய்கிறதென்று எண்ணத்துடன் செய்யப்பட்டதல்ல. பிரசுரஞ் செய்கிற தென்றும் நினைக்கவில்லை. இதன் பாடல்களிற் சிலவற்றைக் கோர்டில் உள்ள நண்பர்கள் சிலர்க்கு ஆசிரியர் சொல்ல, அவர்கள் பத்திரிகையிற் போடவே வேண்டுமென்று நெருக்கினபடியால் யாழ்ப்பாணத்து இங்கிலீஷ் ‘இந்து சாதன’ப் பத்திரிகையில் இங்கிலீஷ் மொழிபெயர்ப்போடு வெளியிடும்படி கொடுக்கப்பட்டது. இங்கிலீஷ் இந்துசாதனத்தில் வெளியானபின் “எம்டன் என்னுங் கப்பல் அழிக்கப்படு முன்பே ஷை செய்யுட்கள் எமக்கனுப்பப்பட்டன. ‘எரிய’ என ஆங்குக் கூறியபடியே அக்கப்பல் ஆழிவாய்ப்படாது அக்கினிவாய்ப்பட்டது ஈண்டுநோக்கற்பாலதாம்” என்ற பத்திராசிரியர் குறிப்போடு தமிழ் இந்துசாதனத்தில் வெளியாயிற்று. இப்பதிமானுக்கு இப்பதிகத்தைப்பற்றி அநேக கடிதங்கள் வந்திருப்பதாகவும், விக்டோரியா காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ‘ஷஷ்டியிலன்று எறிந்து பட்டதென்று அதைக் கணக்குப் பார்த்தபொழுது அதற்கு முந்திய ஷஷ்டியிற் பாடியிருக்கிறதாய் அறிந்தேன்.’ என்றறிவித்ததாகவுந் தெரிகிறது. இப்பாடற் சம்பவத்தை அறிவாளிகள் உள்ளபடி கிரகித்து ஆநந்தங்கொள்ளுகிறார்கள். ஆகையால் எம்பெருமான் எம்மையன் குமரன் கதிர்காமலைக் குருவின் அருள்விளையாட்டை நங்குலத்தினர் அறிந்து ஆநந்திக்கும்படி அப்பதிகத்தைப் பிரசுரித்திருக்கிறோம்.

* * *

இந்திய தொழிலபிவிருத்தியில் சிரத்தைமிகக் கொண்டவரும் மைசூர்சமஸ்தானத்தில் தொழிலிலாகாத் தலைவராக நியமனம் பெற்றிருப்பவருமாகிய மிஸ்டர் ‘A சாட்டர்டன்’ கடந்த மாதத்தில் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் மண்டபத்தில், தொழில்களி னபிவிருத்திக்கு கவர்ன்மெண்டு என்ன விதமாய் உபகாரம் செய்பலாமென்று பேசினார். இந்தியாவில் தொழில்கள் அபிவிர்த்தியாகவில்லை யென்றும், போதுமான ரெயில் பாதைகளில்லை யென்றும், தொழிற்சாலைகளில்லையென்றும், ஜனங்களுக்குத்தொழிற் படிப்புச் சொல்லி வைப்பதில்லையென்றும், ஜனங்கள் வருந்துகிறார்கள். கவர்ன்மெண்டின் மனநிலைமையும் முன்போலில்லை. தொழில்களுக்கு உதவி

செய்யக்கூடாதென்று எண்ணியிருந்த கவர்ண்மெண்டு இப்போது அந்த எண்ணத்தை சற்று தளர்ச்சி செய்திருக்கிறார்கள். கவர்ன்மெண்ட் இந்தியாவுக்குள்ள பொருளாதாரங்களை நிபுணர்களைக்கொண்டு சோதிக்கவேண்டும்; சிலதொழில்களைச்செய்து காட்டவேண்டும்; வேலைக்காரர்களுக்குப் படிப்பு சொல்லிவைத்து அவர்களிடம் வேலைவாங்கும் எஜமான்களுக்கு தொழில் சாஸ்திரக் கல்வி கற்றுக் கொடுக்கவேண்டும். இவை மட்டுமே போதா. சரியான யந்திரங்களைத் தருவித்து வேலைசெய்வதுமல்லாமல் அவைகள் சரியான நிலைமையில் இருக்கின்றனவா வென்று கவனிக்கவேண்டும். அப்படிக் கவனிக்க, தக்கசம்பளத்தில் நிபுணர்கள் நியமிக்கப்பட வேண்டும். கம்பெனிகளில் கணக்கு சரியாய் வைக்கப்படுகின்றதா வென்று சோதிக்கவேண்டும். நமது தொழில்களின் நிலைமையிலுள்ள குறைகளையறிந்து அவைகளை நீக்க நாம் முயலவேண்டும். இவைகளுக்கெல்லாம் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன்மெண்ட் தொழில் இலாகாவை விஸ்தரித்து, அதற்கு அதிகமான அதிகாரம் கொடுக்கவேண்டும். மேல் நாடுகளிலிருப்பது போல், பெரிய பட்டணங்களில் தொழிற்சாலைகள் ஸ்தாபித்து அவைகளில் ஆயிரக் கணக்கான வேலையாட்களைக்கொண்டு விட்டு, சில முதலாளிகள் கையில் பணம் குவியும்படி செய்வது கவர்ன்மெண்ட் நோக்கமாயிருக்கக்கூடாது. தொழில் செய்யும் லக்ஷக்கணக்கான ஏழைகள் தங்கள் பாரம்பரையான தொழில்களையே திறமையாய்ச் செய்ய சக்தியும் பயிற்சியும் பெறும்படி செய்யவேண்டும் என்றார்.

## தந்தவேலை

தந்தம் என்பது பற்களின் சம்பந்தமானவஸ்து. ஜங்கமசாஸ்திரிகள் (Chemists) என்புக்கும் மிருககொம்பிற்கும் மத்தியதரமான வஸ்து என்கிறார்கள். சாதாரணமாய் யானைக்கொம்பைத்தான் தந்தம் என்பார்கள். ஆப்பிரிக்கா ஆசியாகண்டங்களில் உள்ள யானைகளின் தந்தத்தை நீட்டளவில் அறுத்தால் அறுத்த உட்பரப்பில் வளைவான கோடுகள் தோன்றலைப்பார்க்கலாம். வால்ரஸ் (Walrus) நார்வல் (Narwhal) ஹிப்போபொடமஸ் (Hippopotamus) என்னும் மிருகங்களின் கொம்புகளும் அம்மிருகங்களின் பற்களும் தந்தத்தை கொடுக்கின்றன. தென் ஆப்பிரிக்காவில் காமீ (Ngamie) என்னும் ஏரிக்கு சமீபத்தில் கொல்லப்பட்ட மிருகத்தின் 325 பவுன் எடையுள்ள ஒரு ஜதை தந்தக்கோடுகள் 1851 ஹுத்திய பெரிய பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொருகோடும் 8 அடி 6 அங்குலம் நீளமாயும் 22 அங்குலம் தடிப்பாக சுற்றளவையும் உடையதாயிருந்தது. யானையை வீட்டு மிருகமாக்குவதினால் கோடுகள் நீளத்திலும் குணத்திலும் க்ஷீணத்தை அடைகின்றனவென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்திய யானைக் கோடுகளைக்காட்டிலும் ஆப்பிரிக்கா யானைக் கோடுகள் சிரேஷ்டமானவை. ஏனென்றால் ஆப்பிரிக்கா யானைகளின் கோடுகள் அழுத்தமானவை. மஞ்சள் நிறமாக மாறாதவை. கத்திப்பிடிக்கும், பில்லியர்ட் ஆட்ட குண்டுகளுக்கும், வாத்தியபெட்டி வாத்தியக் கருவிகளின் மூலைகளுக்கும், மூறுக்காணிகளுக்கும் கணித அளவுக்கோல்களுக்கும், சொக்கட்டான் பாய்ச்சிகைகளுக்கும் பெட்டிகளுக்கும் மற்ற மாசாமான்களுக்கும் பதிப்பதற்கும், சிறு சாமான் செய்வதற்குரிய மெல்லிய தகட்டிற்கும், சிற்றுளி சித்திரவேலைக்கும் இன்னும் அநேக காரியங்களுக்கும் தந்தம் வேண்டியதாருக்கிறது. கிழக்கு சைபீரியா, வடதிருவப்பிராந்திய சதுப்பு பூமிகள் இவைகளில் மாமத் (Mammoth) இன்னும் இதர மிருகங்களின் கோடுகளை சைபீரியா தந்தம் அல்லது பூமியில் வெட்டி எடுக்கப்பட்ட தந்தமென்று விற்றுவிடுகிறார்கள். வாஸ்த்தவத்தில் அத்தந்தங்கள் மண்ணில் புதைக்கப்பட்டிருந்து வெட்டி எடுக்கப்பட்டவையல்ல. ஆனால் தந்தவினைஞருக்கு அதிக உபயோகமுள்ளவையா யிருக்கின்றன.



சைபீரியா தந்தத்தை இந்தியாவில் உபயோகிக்கிறார்கள் என்பது நமக்கு சந்தேகமறத் தெரியாது. ஆனால் ஐரோப்பாவில் தந்தவினைஞரால் அபரிமிதமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆப்பிரிக்கா தந்தம் புதிதாய் அறுக்கப்பட்டபோது, கனிந்த பழத்தின் மஞ்சள் நிறத்தையும் பளபளப்பையும் உடையதாயிருக்கிறது. காற்றில் நெய்ப்பசை உலர்ந்தபோது அந்நிறம் சிறிதுமாறுகிறது. ஆசியாதந்தம் புதிதாய் அறுத்தபோது, நெடுநாள் காற்றில் உலர்ந்த ஆப்பிரிக்கா தந்தத்தைப்போல் இருக்கிறது. ஆனால் காற்றில் உலர்ந்தபோது மஞ்சள் நிறமாகிறது.

ஆசியா தந்தத்தைவிட ஆப்பிரிக்கா தந்தம் அழுத்தமானது—(சடையை அல்லது தக்கையைப்போன்றதல்ல). வேலைக்கு தாங்குகிறது. அதிகமெருகை ஏற்றுக்கொள்ளுகிறது. ஆசியா ஆப்பிரிக்கா தேசத்து யானைகளின் பற்கள் குணத்திலும் அழுத்தத்திலும் வித்தியாசப்பட்டிருக்கின்றன. ஆகையால் தந்தம் கொள்ளுகிறவர்கள் ஏமாறாதபடி ஜாக்ரதையா யிருக்கவேண்டியது. தந்தங்களை அறுத்து பார்க்கும்போதுதான் பிளவுபட்டதும், பொரையானதும் தெரியும். வேட்டைக்காரர்களின் குறிதப்பிய குண்டுகள் தந்தத்தில் அகப்பட்டுக்கொண்டு தந்தத்தை பிளவுபடும்படிக்கும் கருநிறத்தை எய்துவதற்கும் ஆஸ்பதமாகின்றன. ராஜாக்களால் சுடப்பட்ட யானைகளின் தந்தங்களில் பொன் வெள்ளி துப்பாக்கி குண்டுகள் அபூர்வமாய் காணப்படுகின்றன. தந்தம் அல்லது பல், பாதி நீளம் அழுத்தமாயிருக்கிறது. அறுக்கப்பட்டால் வட்டவடிவைக்காட்டுகிறது. என்பில் காணப்படுவதுபோல் பொரைகள் இல்லை. அதிகமாக சுண்ணம்பு சேர்மானமிருந்தபோதிலும் என்புக்குரிய கடினமும் இழிகுணமும் அதற்கில்லை. அதிக மிழமழுப்பும், வேலைக்காரர்களுக்கு நயநயப்பும் உடையது.

தந்தத்தை அறுக்கும்போது ஒவ்வொரு பாகமும் உபயோகமுள்ளதா யிருக்கும்பொருட்டு ஜாக்ரதையாய் அறுக்கவேண்டும் தந்த வாள் 15-முதல் 30-அங்குலத்தில் 40-ல் ஒருபாக கனத்தையுடையது. அது எஃகு சட்டத்தில் பிகுவாய் அமைக்கப்பட்டிருக்கும். அது நேராக அறுக்கும். வெளிப்பக்க பிளவுகள் பேனுகத்திபிடிகளுக்கு உபயோகப்படும். துண்டுகளையும், சிதல்களையும் தந்தமை செய்வதற்கு நெருப்பிலிட்டு எரிக்கிறார்கள். சீவல்தூளும் வாள்தூளும் வச்சிரம் காய்ச்ச உபயோகப்படுத்துகிறார்கள். அறுக்க வாளை உபயோகப்படுத்துவதற்கு முன்னமே அடையாளமிட்டு அதின் பிரகாரம் பழுதுபோகாமல் அறுக்கவேண்டும். குறுக்காக அறுப்பதிலும் நெடுக்காக அறுக்குங்கால் தந்தம் தளர்ச்சியைக் கொடுக்கிறது. ஒரு பில்லியர்ட் பந்து (Billiard ball,) சீதோஷ்ணம் மாறியுள்ள ஓர் அறைகளில் உபயோகிக்கப்பட்டால் குறுக்களவில் வித்தியாசங்களை காட்டிக்கொண்டே இருக்கும். ஆகையால் பில்லியர்ட் பந்துகளை கரடுமுரடாகச்செய்து அவைகள் பூர்த்தியான கோளவடிவத்தை அடைவதற்கு முன் சில மாதக்கணக்காக பில்லியர்ட் ஆட்ட அறையில் வைத்திருப்பது வழக்கம்.

பியானோ வாத்தியப்பெட்டியின் சாவிகளுக்கும், சாமான்கள் உட்பதிவிற்கும், இன்னும் இத்தகைய வேலைகளுக்கும், உபயோகிக்கப்படும் மெல்லிய தந்த பலகைகள் ஒரு நேர்த்தியான இறகைப்போன்ற வெனீயர் வாளினால் (Feather edged veneer saw) ஒரு பெரிய அழுத்தமான தந்த துண்டிலிருந்து வழக்கமாய் அறுக்கப்படுகின்றன. இப்படி அறுப்பதில் ஏராளமான வாள் தூள் அல்லது ரம்பத்தூள் விழும் ஒரு திரணையான மரத்திலிருந்து அதே அளவுள்ள ஓர் கத்தியைக் கொண்டு சுழன்று சுழன்று வெனீயர்களை அறுக்கும் ரஷ்யாதேசத்து மாதிரியை, தந்தத்தை அறுப்பதிலும் உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் இச்சந்தர்ப்பங்களில் கத்தியால் அறுக்கும்போதே மற்றொரு பக்கத்தில் அறுக்கக்கூடிய ஓர் ரம்பத்தை உபயோகப்படுத்துகிறார்கள். இதற்கு (Reciprocating saw) ரிஸிப்ரோகேடிங்சா என்று பெயர். (தந்தப்பலகைகள் வெனீயர் என்று சொல்லப்படும்.) இப்போதும் தந்த தூள் உண்டாகிறது. இம்மாதிரியான 30/150 அங்குலமுள்ள பெரும் பலகைகளை பாரிஸ் நகரத்தில் மான்ஷியர் போப் என்பவர் தயாரித்துத்தருகிறார். அவர் ஒரு பியானோ வாத்திய பெட்டியை முழுவதும் தந்தப்பலகையினாலேயே அமைத்திருக்கிறார். ஆனால் அவ்வளவு மனோரம்மியமாயில்லை.

பின் வருவது சிந்தில் டாண்டோ என்னுமிடத்தில் வளையல்களை நிர்மாணிக்கும் மாதிரியின் வருணனை:—

(1) முதலில் தந்தத்தின் மேல்பாகம் ஒரு கைவெட்டுக்கத்தியால் சீவப்படுகிறது. பிறகு சுத்தப்படுத்தப்

படுகிறது பிறகு இதற்சென்று அமைந்துள்ள ஓர் மர சட்டத்தில் அசையாமல் பிகுவாய் வைக்கப்படுகிறது. அந்த மரயந்திரத்தில் தந்தத்துண்டு இருபக்கமும் அந்த யந்திரத்திலுள்ள கூரிய இருப்பு முனைகளில் (Jandi) அகப்பட்டு நிற்கும்படி வைக்கப்படுகிறது.

(2) தந்தத்துண்டு அந்த யந்திரத்தின் ஓர்பாரத்தில் சேர்ந்துள்ள ஒருமரத்தடியைக் கொண்டு சுற்றப்படுகிறது. அப்போது கூரிய ஓரத்தையுடைய ஓர் ஆயுதத்தால் (Karmus) சிவிபூரண திரண்ட. உருவத்தை அடையச் செய்யப்படுகிறது. பிறகு அந்த தந்த துண்டை ஓர் ஆயுதத்தால் (Mathni) மழமழ வென்று சுத்தப்படுத்துகிறார்கள். பிறகு ஓர் ஆயுதத்தால் (Baraki) கோளகாரமாக கோடுகள் வரிக்கப்படுகின்றன. பிறகு கோடுகள் வரிக்கப்பட்ட பாகங்கள் (Chhino) என்னும் ஆயுதத்தால் அறுத்து பிரிக்கப்படுகிறது. முதல் பிரிக்கப்படுகிற வட்டகாரபாகம் பெரியவளையல்கள் ஆகின்றன அதற்கு உள்ளான வட்டாகார பாகங்கள் சிறுவளையல்கள் ஆகின்றன. ஒவ்வொருவளையல்களின் வளையல்களை (Puths) என்னும் ஓர் ஆயுதத்தால் பிரித்தெடுக்கிறார்கள். கடைசியாக அந்த வளையல்களின் பக்கங்கள் (Kindho) என்னும் ஆயுதத்தால் மழமழ வென்று சுத்தப்படுத்தப்படுகிறது.

இந்தமுறை ஐரோப்பியமுறையைக் காட்டிலும் நிதானமானது. நாணயமாகவும் இல்லை. இம்முறையில் தந்தம் அதிகமாய் சேதாரமாகிறது. சிறு துண்டுகளையும் வாள்தூள்களையும் எதற்கும் உபயோகப்படுத்துகிறார்களில்லை. இந்தியவேலைக்காரன் ஐரோப்பிய தந்தவினைஞரோடு செய்யும் போட்டியில் பின்னிடுகிறான்.

(இன்னும் வரும்)

---

வறுமைவந்தடைந்தபோது தெய்வங்களை நோக்கி இரட்டையர்கள் பாடியது :—

கேட்ட வரமளிக்குங் கீர்த்தியுள்ள தெய்வங்காள்
கூட்டோடே யெங்கே குடிபோனீர்—பாட்டாய்கேள்
செல்கால மெல்லாஞ் செலுத்தினோ மல்காலங்
கல்லானோஞ் செம்பானோங் காண்.

## சமயாலோசனை

(முன் 111-ம் பக்கத்தொடர்ச்சி)

முந்திய வியாசத்தில் (1) கண்காணிக்குஞ் சபை ஒன்று (2) செண்ட்ரல் சபை ஜில்லாவுக்கொன்று (3) ஊர்ச்சபை பிரதிகுல தேவதையின் கோயில் இலாகாவிலொன்று இருத்தல்வேண்டும் என்று கூறியதில் இச்சபைகளின் காரியங்களை யெடுத்துக்கூறினேன் இவற்றின் ஆவசியகத்தைப்பற்றியும் இவற்றாலாகும் நன்மைகளைப்பற்றியும் சிறிது கூறவேண்டியதாயிருக்கிறது. முற்காலத்தில் நம்மவர்களுக்குரிய சமயத்தைப்போதிப்பதற்காகவும் பரிபாலிப்பதற்காகவும் நம் முன்னோர்களில் குருஸ்தானங்கள் ஏற்பட்டு அக்காரியங்களை நடத்திவந்தார்கள். காலக்கிரமத்தில் அவர்கள் வழி வந்தவர்கள் தங்கள் கடமைகளைக் கிரமமாய்ச் செலுத்தாமல் செல்வாக்கு குறைந்தவர்களாய்விட்டது மல்லாமல் தங்கள் சமயக்கோட்பாடுகளில் அன்னியர் கோட்பாடுகளைக் கலந்து மயங்கவைத்துக்கொண்டார்கள். அதனால் இக்காலத்தில் நம்மவர்களுக்கு நம் சொந்த சமயத்தின் உண்மை இப்படிப்பட்டதென்றும் அதன்கோட்பாடு இத்தன்மைத்தென்றும் அறிந்தொழுகுவதற் கிடமில்லை. நாகரீகமிகுந்த இக்காலத்தில் நம்மவர்கள் அவற்றையறியாதிருப்பது மிகவும் வெட்கமானகாரியம். தற்காலத்திலுள்ள நம் குருஸ்தானங்கள் அவற்றின் உண்மைகளை யறிந்து தங்கள் கடமைகளைக் கிரமமாய்ச் செலுத்துமளவும் அக்காரியங்களுக்கென்றே மேற்கூறிய சபைகள் ஏற்படுவது மிகவும் அத்தியாவசியகமாயிருக்கிறது.

நான்முந்திய வியாசங்களிற் கூறியபடி இத்தேசத்தில் தொழில்செய்பவர்களெல்லாம் மூன்றுபிரத்தியேக குலஸ்தர்களாயிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் ஒரே குலத்தாராக மதித்து குலாசார சீர்திருத்தஞ் செய்யப்புகுந்தால் அவர்கள் எல்லாரும் ஒருமிக்க சீர்திருந்த மாட்டார்கள். இதற்குக்காரணம் பின்னொருவியாசத்தில் வெளியிடுகிறேன். அவர்களை யெல்லாம் ஒரே சமயத்தாராக மதித்து சமயாசார சீர்திருத்தஞ் செய்யப்புகுந்தால் அவர்கள் எல்லாரும் ஒருமிக்க சீர்திருந்திவிடுவார்கள். அவர்கள் ஆரம்பத்திலேயே சமயத்திற் கட்டுப்பட்டு சபையைப்பற்றுடையவர்களாய் விடுவார்கள். அப்போது நாம் நமது பூர்வீகபலம் சிறிதுபெற்றவர்களாவோம். ஆகையால் இப்படிப்பட்ட சமயவிஷயமாய் மேற்கூறிய சபைகள் ஏற்படுவது நம்மவர்களுக்கு மிக்க நன்மை பயக்குவதாயிருக்கிறது. இனி இச்சபைகளின் காரியங்களாவன.



இச்சபை பிரகடனம், பரிபாலனம் என இரண்டு பெரும் பிரிவுகளையுடையது. பிரகடனம் என்பது சமயவிஷயங்களை வெளியிடுவது. அதுமீண்டும் கீழ்க்குறிக்கப்படும்விதமாய் மூன்று பிரிவுகளையுடையது. இம்மூன்றிற்கும் ஆதாரமாய் நிற்பவை நம்பழய சமய நூல்கள். அவற்றில் முக்கியமானவை விஸ்வகர்மாகமம், விஸ்வகர்மபுராணம் மூலஸ்தம்பம் என்பன. இவை இப்படிப்பட்டவை யென்று நம்மில் சிலருக்குத்தெரிந்திருந்தாலும் மற்றவர்களுக்கும் நன்கு விளங்குவதற்காக அவைகள் ஓரிடத்தில் சேகரித்துவைக்கப்படவேண்டும். அவைகளல்லாமல் இவ்விஷயமாய் இன்னம் என்னென்ன நூல்கள் இருக்கின்றனவென்பதையும் ஆராய்ந்தறிந்து அவைகளும் அவ்விடத்தில் சேகரித்து வைக்கப்படவேண்டும். இதுவே இவ்விஷயத்தைப் பற்றிய முதற்காரியம். இக்காரியங்களுக்காக இவ்விராஜதானியின் ஓரிடத்தில் ஒரு பெரிய புத்தகாலயம் ஸ்தாபிக்கப்படவேண்டும். சமஸ்கிருதம் உட்பட இத்தென்னிந்திய பாஷைகள் தெரிந்த நம்மில் ஒருகனவான் இதில் தலையிட்டு நூல்கள் கிடைக்குமிடங்களுக்குப்போய் ஆராய்ந்து கிடைப்பவற்றைச் சேகரித்து மேற்கூறிய புத்தகாலயத்துக் கனுப்பிக்கொண்டிருத்தல் வேண்டும். இப்புத்தகஞ் சேகரிக்குங் காரியம் நீடித்து நடக்கத் தக்கதல்ல. சிறிதுகால வரையில்தான் நடப்பதாகும். இவ்விதமாய்த் தேவையான புத்தகங்கள் சேகரிக்கப்பட்டதன்மேல் மேற்கூறிய கண்காணிக்குஞ் சபையும், செண்ட்ரல் சபைகளும் காரியம் நடத்தத் துவக்கவேண்டும்

1. கண்காணிக்குஞ் சபையின் காரியம்:—

இச்சபை பிரகடனம் பரிபாலனம், என இரண்டு பெரும் பிரிவுகளை யுடையதென்று மேலே கூறப்பட்டது. அவற்றில் பிரகடனம் என்பது (a)மேற்கூறியபடி சேகரிக்கப்பட்ட சமயநூல்களின் அபிப்பிராயங்களை அதற்கென்று பிரத்தியேகமாய் ஏற்படும் பத்திரிகை வாயிலாய் வெளியிடுவதும் (b) சமயநூல்களை இருந்தபடியும் அதே பாஷையில் மொழிபெயர்த்தும் அச்சிட்டு வெளியிடுவதும், (c) டை சபையிருக்குமிடத்தில் சமய நூல்கள் பயிலும் பாடசாலை யொன்று ஸ்தாபித்து அதில் பயிலத்தக்கவர்களைப் பயிலச்செய்து சமயபோதகர்களாக்கி அவர்களால் சமய உண்மைகளைப் பிரசங்க வாயிலாய் வெளியிடுவதுமாகிய காரியங்கள் கண்காணிக்குஞ் சபையால் நடை பெறவேண்டும். (1 *)

2. செண்ட்ரல் சபைகளின் காரியம்:—

ஜில்லாக்களின் முக்கிய பட்டணங்களில் இச்சபைகள் ஸ்தாபனமாகவேண்டும். அவற்றில் சிறு சிறு புத்தகாலயங்களும், புரோகிதம் பயிலும் பாடசாலைகளும் ஏற்படவேண்டும். (a) மேற்கூறிய கண்காணிக்குஞ் சபையார் வெளியிடும் பத்திரிகைகளிலுள்ள அபிப்பிராயங்களைத் துண்டு பத்திரிகைகளில் (நோடீஸுகள்) அச்சிட்டு வெளியிடுதும், (b) கண்காணிக்குஞ் சபையார் அச்சிட்டு வெளியிடும் சமயநூல்களைத் தம்மிலாகாவில் விற்பனை வகையில் பரப்புவதும், (c) புரோகிதம் பயிலத்தக்கவர்களைத் தம் பாடசாலையிற் பயிற்றி அது குறைவான பிராந்தியங்களில் அவர்களைக்கொண்டு பார்த்தி செய்வதுமாகிய காரியகள் செண்ட்ரல் சபைகளால் நடைபெறவேண்டும். (2 *)

[மேற்கூறியவை மேல் 1. 2. சபைகளின் முக்கிய காரியங்கள். இவையல்லாமல் இன்னஞ் சில காரியங்களு மிருக்கின்றன. அவற்றைப் பின்னொரு வியாசத்தில் விளக்கக்கருதி (*) இவ்வடயாளமிட்டு விடப்பட்டன.]

3. பிரதேச சபைகள் இவை சமயபரிபாலனை காரியங்களை மேற்கொண்டவை. இவை இப்போது நூதனமாய் ஸ்தாபிக்கப்பட வேண்டுவதில்லை. ஏற்கெனவே நம்முன்னோர்களால் நாட்டுக்கொன்றும் நகரத்துக்கொன்றுமாக ஸ்தாபிக்கப்பட்டு பாரம்பரியமாய் நடந்தேறிவருகின்றன இப்போது நூதனமாய் ஸ்தாபனமாக வேண்டியவை மேற்கூறிய 1. 2. சபைகளே. நாம் 3-வது சபைகளிற் பிரவேசித்து இப்போதிருக்கும் அவற்றின் வன்மையைமாற்றி அவற்றில் நம் நூதன காரியங்களை நுழைக்கையில் அவைமதித்து கைப்பற்றி நடக்காவிட்டால் உபயபிரஷ்ட முண்டாகுமாகையால் அவை இருந்தபடியே இருக்கட்டும்.

மேல்கண்ட 1-2-சபைகள் கூடிய சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படவேண்டும். அல்லது இப்போதிருக்கும் சபைகள் தாம் உத்தேசித்திருக்கும் தம் சொந்த சபைக் காரியங்களைப் பிரத்தியேகமாய் நடத்திக்கொண்டே இச்சபைகளின் பேரையும் இட்டுக்கொண்டு இவற்றின் சம்பந்தமான காரியங்களையம் பிரத்தியேகமாய் நடத்திவரவேண்டும். அல்லது இக்காரியங்களுக்கேற்கத் தங்கள் சபைகளின் யாதாஸ்துகளைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். அல்லது திருத்திக்கொள்ளவேண்டும். சிலவேளை ரிஜிஸ்டராயிருந்து அது கூடாத காரியமாயிருந்தால் பிரத்தியேக ஸ்தானங்கள் செய்யப்படவேண்டும். ஏனென்றால் நம்மவர்களுக்கு தொழில் விஷயம் ஒன்றிருக்கிறது. அது இச்சமயத்திற் சம்பந்தப்படாது வேறுபட நிற்கும். அதை நவீனநாகரீகத்துக் கேற்றவாறு நடத்திவரலாம். இப்போதிவ்வியாசம் நண்பர்களின் அபிப்பிராயம் துணைபடுமாயின் சுருங்கியவிடங்கள் விரிந்துமீண்டும் வெளிப்படும். இல்லாவிட்டால் இம்மட்டோடு நிற்கும் ஆயினும் ஸ்ரீமான் பண்டித மார்க்கசகாய ஆச்சாரியார் வரலாறும் வேறு வியாசங்களும் இதில் நடைபெறும்.

அந்தியூபாக லிங்காச்சாரி.

## நமது விவாகங்கள்

தைமாதம் பிறந்துவிட்டது. இனி எங்கெங்கும் விவாகங்கள் நடைபெறும். அவையெல்லாம் சந்தோஷத்திற்கிடமாய் முடியவேண்டுமென்று கோரியே நடத்தப்படுகின்றன. ஆனால், எத்தனை அவ்விதம் முடிகின்றனவென்றும், எத்தனை வேறுவிதமாக முடிகின்றனவென்றும் ஆராய்ச்சிசெய்யப் புறப்பட்டால், அகமகிழ்ச்சிக்குக் குறைவுண்டாகக்கூடிய அனந்த விஷயங்கள் வெளிப்படுவது திண்ணம்.

நம்மவர்களிற் பெரும்பாலார் கடன்பட்டே விவாகஞ் செய்துகொள்பவரா யிருக்கின்றனர். நமது விவாகங்களில் நேரிடுஞ் செலவுகளோ விபரீதமாயிருக்கின்றன. சாதாரணமாய், ஐந்துநாட்களுக்குக் குறையாமல் இவை நடத்தப்படுகின்றன. இத்தனை நாட்களும் சாப்பாட்டிற்காகவும் மற்றவற்றிற்காகவுஞ் செலவாகும் பெருந்தொகை, விவாகமான குடும்பத்தை தீராக்கடனில் திகைக்கவைத்திருக்கிறது. இவ்வகாத செலவினால் நேரிடுந் தீங்குகளோ அநேகமா யிருக்கின்றபடியால், அவற்றைப்பற்றி நமது குலத்தலைவர்கள் சற்றுலோசிப்பது நன்று.

நம்மவர்களுடைய வருமானமோ, சராசரியில், கொஞ்சமாகவேயிருக்கிறது. பொதுவாய்ப் பார்க்குமிடத்து இவ்வருமானம் அந்தந்த குடும்பத்தினுடைய தினசரிச் செலவுக்கும் போதாமலிருக்கிறது. நம்மைப்போன்ற வருமானமேயுடைய வேறு ஜாதியார் பலர் நம்மவர் போல் அத்துணை நிராதரவான நிலைமையிலிருக்கக் காண்கிலம். இதற்கு முக்கிய காரணம், மற்றவர்களுடைய குடித்தனச்செட்டு நம்மவர்களிடங் காணப்படாமையேயென்று தோன்றுகிறது. கூழுக்கழும் கும்பியோடு காலங்கழித்துவருங் குடும்பத்தில் ஒரு விவாகம் நடக்க நேரிட்டுவிட்டால் அக்குடும்பம் என்னபாடுபடுமென்பதை யெடுத்துரைக்கவும் வேண்டுமோ? அவ்விவாகமோ மற்ற ஜாதிகளில் நடப்பதுபோன்றதல்ல, பெருஞ்செலவுக்கிடமானது! இப்படிப்பட்ட விவாகமொன்றே ஒரு குடும்பத்தைக் குலைக்கப்போதுமானதாயின், ஐந்தாறு விவாகங்கள் நடக்கவேண்டிய குடும்பங்களின் கதியென்னே!

வியாபாரத்தினாலும், உத்தியோகத்தினாலும் விவசாய முதலியவைகளினாலும் பெரும்பொருள் சம்பாதித்துச் சிக்கனமாய்ச் செலவிட்டு மிகுத்திச் சேர்த்துக் குவித்து வைத்திருக்கும் செட்டிகள், முதலிமார், நாயுடுகள் முதலான ஜாதியாரெல்லாம் ஓரிரண்டு தினங்களில் தமது விவாகங்களைச் சுலபமாகவும் படாடோபமாகவும் முடித்துச் சந்தோஷமடைகிறார்கள். ஒவ்வொரு குடும்பத்தாரும் தமது வருமானத்திற்கேற்றவாறு செலவிட்டால் அவர்கள் சுகஜீவிகளாயிருக்க முடியும். இல்லாவிட்டால் ஹிம்சைக்கல்லவோ இடமுண்டாகும்? ஐந்து அல்லது பத்துவருஷச் சேமிப்பு ஒரு விவாகத்தில் ஒழிந்துவிடுகிறதென்று பொதுவாய்ச் சொல்லிக் கொள்ளப்படுகிறது. சேமிப்பே யில்லாதவர்கள் எங்கிருந்து செலவு செய்யமுடியும்? பூர்வீகமா யேற்பட்ட ஆஸ்தியேனுமிருந்தால் அதையழிக்கவேண்டும்; அன்றிக் கடன்படவேண்டும். இருவிதங்களினாலும் பிற்கால ஜீவனத்திற்குக் கஷ்டம் நேடுவது நிச்சயம். ஆதலால், அப்படிப் பழம்பொருளையழிப்பதையும் கடன் படுவதையும் எவ்வளவுதூரங் குறைக்க முடியுமோ அவ்வளவு தூரங் குறைக்கவேண்டியது குடும்பக்ஷேமத்தின் பொருட்டு அத்தியாவஸ்யமாயிருக்கிறது. எனவே விவாகச் செலவுகளைக் குறைக்க வேண்டுமென்பது நிதரிசனமாகிறது.

இதற்காக, விவாககாலஅளவை ஐந்து நாட்களிலிருந்து குறைக்க வேண்டியது அவசியமாகும் போல் தோன்றுகிறது. நமது ஆருஷேய சகோதரர்கள் சமயோசிதமாய் நாட்களைக் குறைத்து கொள்வதாகத் தெரிகிறது. நாமும் அப்படிச் செய்வதில் ஏதேனும் ஆக்ஷேபமுண்டாவென்பதைப் பற்றி நமது பண்டிதர்களுடைய அபிப்பிராயம் வேண்டும். அங்ஙனஞ் செய்யலாமென்றேற்பட்டால் விவாகச்செலவுகள் குறைவுபடும். அப்படி நாட்களைக் குறைப்பதற்குச் சாஸ்திரங்கள் சம்மதியாவாயின், கிரியைகளையெல்லாம் சாஸ்திரப்படியே நடத்துவிக்கட்டும். ஊராரையும் பந்துஜனங்களையும் அழைத்து விருந்திடும் வேளைகளின் கணக்கையாவது குறைவுபடுத்தலாகாதா? அல்லது, நிக்ரகிக்கக் கூடிய வேறு செலவுகளையேனும் விலக்கலாகாதா? இதைப்பற்றி, நமது நாட்டாண்மைக்காரர், காரியஸ்தர், குலாபிமானிகள் முதலானோருடைய அபிப்பிராயங்கள் வெளிப்படவேண்டும்.

இங்ஙனம் செலவைக்குறைக்க விரும்புவது ஏழைக் குடும்பங்களுடைய கஷ்டங்களைக் குறைத்து, அவர்கள் விவாகச்செலவுக்கஞ்சி யுக்தப் பிராய மடைந்தார்க்கு



விவாகஞ்செய்யாது காலங் கழிப்பதைத் தடுக்கவும், விவாகஞ்செய்வதில் அதிகக் கடன்பட்டு அலக்கழியாதிருக்கவுஞ் செய்யும்பொருட்டேயல்லாமல் மற்றொன்றிற்காகவல்ல. (செல்வக் குடும்பத்தினர் ஐந்துநாள் விவாகங்களே நடத்தித் தம்மிஷ்டம்போற் செலவு செய்யலாம். ஆயினும், அவர்களும் வீண் செலவுகள் செய்து பொருளை அனாவசியமாய் விரயப்படுத்துவதை விட குலப்பிரயோசனமான காரியங்களில் அதை விநியோகிப்பது சிலாக்கியமாகும்.) செலவுக்குப் பயந்து பலகுடும்பத்தினர் தம்மக்களுக்கு யுக்தவயதில் உபநயனஞ் செய்யாமலும், விவாகஞ்செய்து வைக்காமலும் காலதாமதப்படுத்தியும் சில வைதிக கிரியைகளைக் கைவிட்டுமிருப்பது போலன்றி நமது ஆருஷேய சகோதரர்கள் பிக்ஷையெடுத்தாகிலும் ஷை சடங்குகளைக் காலக்கிரமத்தில் முடித்துவிடுகிறார்கள். அவர்களுக்கு எல்லா ஜாதியார்களுஞ் சகாயஞ்செய்கிறார்கள். நமக்கோ அப்படி நடக்காது. ஆதலால், நாம் கிரியையிலேயே திருஷ்டிவைத்தவர்களாய், அவரவர்களுடைய வருமானத்திற் கேற்றவாறுகச்செலவிட்டு காலந்தப்பாமல் அவற்றை நடத்திமுடிக்கவேண்டும்.

காலத்தில் உபநயனஞ் செய்யாதபக்ஷத்தில் நமது சிறுவர்களுக்கு வைதிக ஒழுக்கம்படியமாட்டாது. சில குடும்பத்தினர் நெறிதவறி வாழ்வதற்குக் காரணம், அக்குடும்பங்களில் உபநயன நிர்ப்பந்தமில்லாமையேயென வேண்டும். நம்மவர் குடும்பநெறியையும் உயர்வையும் கௌரவத்தையும் உபநயனத் தவிர்வு எவ்வளவு கெடுக்கிறதோ, அதினு மதிகமாக விவாகத்தவிர்வு கெடுத்துவருகிறது. ஒரு ஆண்பிள்ளைக்கு விவாககாலம் வந்தவுடனே அதைச் செய்துவைத்தல் இயல்பாகும். அப்படிச் செய்வதை, பல குடும்பங்களில், விவாகச் செலவென்னும் பெரும்பூதம் மிரட்டுகிறது. குடும்பத் தலைவர்கள் இந்த பூதத்திற்கு மிரண்டு திகிலுற்றுச் சும்மாவிருந்தாலும், வயதுவரப்பெற்ற ஆண்பிள்ளை சும்மாவிருப்பதில்லை. இயற்கைத் தூண்டுதலினாலும், சகவாசதோஷத்தினாலும், தன் கைச் சிறுபொருள் சிக்குவதினாலும் அதர்மப் புணர்ச்சிக் காசைப்பட்டு தோஷமடைகிறான். இவ்விதத் தோஷமடைந்தவர்கள் விவாகஞ் செய்யப்பெற்றாலும், குடும்ப நெறியில் ஒழுங்காயும் சந்தோஷத்திற் கேதுவாகவும் வாழ்வதில்லை. சிலர் விவாகஞ்செய்து கொள்ளவேண்டிய அவசியமில்லாமலே காலங்கழித்து விடுவதுஞ் சகசமாய் விடுகின்றது. இப்படிப்பட்டவர்களில் சில அதமர்கள் தமது சந்ததிகளை நம்குலத்தினரேயாகக் முயல்கின்றனர். இது நமது ஜாதி நிலைமையையும், உயர்வையும். சுத்தத்தையுங் கெடுத்துக் கீழ்ப்படுத்துவதா யிருக்கிறது. அந்தோ!

விவாகச் செலவின் மிகுதியொன்றே இவ்வளவுக்குங் காரணமென்று சொல்லவந்தோமில்லை. வேறு சில காரணங்களுமிருக்கின்றன வென்பதை யாமறிவோம். அவை மற்றொருகால் விஸ்தரிக்கப்படும். என்றாலும், இஃதொரு முக்கிய காரணமென்னப் பின்னிடையோம். இத்தனைக் கேடுகளை விளைவிக்கும் விவாகச் செலவுகளைப் குறைக்கு மார்க்கங்காட்டி, அவ்விதங் குறைத்துச் செய்வதினால் யாதொரு தப்பாவது இழிவாவது கிடையாதென்று போதித்து, சுலபவிவாகங்கள் செய்யும் வழக்கத்தை யுண்டுபண்ணிவிட்டால், நம்மவர்கள் அதர்ம சம்பந்தங்களிற் புகுவதொழியும்; நமது குலம் அசுத்தப் படாதிருத்தற்கோர் அணையேற்படும். கொள்வன கொடுப்பன செய்வதில் அஞ்சியஞ்சி விசாரித்து விசாரித்து வேதனைக்காளாதல் விலகும்; அப்படி விசாரித்துச்செய்தும் விவாக சமயத்தில் விபரீத கலகங்களுண்டாகிச் அன்னத்திற்குப் பங்கம் நேரிடுவது அகலும். [காந்தக்கற் கோட்டை காலத்திலிருந்தும், அதற்கும் முன்னிருந்தும், ஏற்பட்டிருப்பதாகக் கர்ண பாரம்பரையாய்ச் சொல்லப்படும் வேசியராசை விடுபடும்; புருஷவிபசாரம் போகும், புன்மைமொழியும், பொருள் மிஞ்சும், ஆதலால், இவ்விஷயத்தைப் பற்றி நண்பர்கள் நன்காலோசித்துத்தங்கள் கருத்துகளை வெளிப்படுத்த வேண்டுகிறோம். குடந்தையில் நடத்தப்படும் விஸ்வகர்ம ஜாதீய காண்பரன்விலும் இவ்விஷயம் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

---

**நோய் தீர்க்கும் நீர்கள்.**—கோயம்புத்தூர் ஜில்லா அவநாசியிலுள்ள ஈசுவரன் கோயிலிலிருக்கும் கங்கைக் கிணற்றில் 48 நாள் முழுகினால் சகல நோய்களும் நீங்குகின்றன வென்றும், திருமுருகன் பூண்டியிலுள்ள ஊற்று நீரில் முழுகினால் ைத்தியம் நீங்குகின்றதென்றும், திருநெல்வேலி ஜில்லா குற்றாலத்திலுள்ள அருவியில் முழுகினால் சகலநோய்களும் ஒழிகின்றன வென்றுஞ் சொல்லப்படுகிறது.

## துவஷ்டாபுரம்.

யாழ்பாணத்தில் பிரசுரிக்கப்படும் "விச்சுவகர்மன்" பத்திரிகை (14-1-15-ல்)பின்வருமாறு எழுதுகிறது:—

முன்னோர்காலத்தில் வியாசர் மித்திரபேதம் செய்து விஸ்வகர்ம வம்சத்தினருக்கு அவ்வூர் அரசனாற்பல இடையூறுகள் உண்டாகும்படி செய்து, அவ்வரசனாற் சிவஇம்சைகள் செய்யும்படி செய்தார். அது சகிக்காதவர்களாய் அவ்வூர்விட்டு தெட்சண கயிலாயமான திரிகோணமலைக்கு மேற்கேயுள்ள ஓர் மண் திடலில் ஓர் மாளிகைக்கட்டி வசித்தார்கள். அது இப்பவும் மாளிகை திடலென்றே வழங்கிவருகின்றது அவர்கள் அந்த மாளிகையிலிருந்து பலவளங்களுமுண்டாக்கி துவட்டாவே இராசாவாக ஆண்டுவர்தார். இதற்கு அந்த இடங்களில் செம்புஉருக்கின குகை உடைந்த துண்டுகளும் அதின் கிட்டங்களும் இருபது மூப்பதுஅடி தாழ்வில் கண்டிருக்கிறதாக சொல்லுகிறார்கள். இது நிற்க துவட்டா புத்திரப்பேறில்லாது அரியவிரதங்களுந் தான தருமங்களும் செய்துவந்தார். அதனால் திருவுளமிரங்கி ஒருநாளிரவிற்கனவிற் தோன்றித்' துவட்டாவே நீயிருக்கும் மாளிகைக்குச் சமீபமாய் பாலாவியென்னுந் தீர்த்தமிருக்கின்றது. அதில் மூழ்கி அதன் பக்கத்திலிருக்கும் எனது வடிவமான சுயம்புலிங்கத்தைப் பூசி; அது உனக்கு வேண்டிய பேற்றை உதவும். அது முன் அகஸ்தியரால் பூசைபண்ணப்பட்டது. இப்போது மறைந்திருககின்றது' என்று சொல்லியருளினார். உடனே விழித்து மறுநாள் காலையிலங்கே சென்று கண்டு செங்கற்றிருப்பணியாகச் செய்து பூசித்து வழிபாட்டுவந்தார். அதற்குத் திருவுளமிரங்கி கௌரியம்மையோடு தோன்றியருளினார், உடனே துவட்டா ஆனந்தபரவசனாய்'தேவரீர் கருணைகடாட்சத்தினால் என்மீது இரங்கிப்பத்திரப்பேற்றை தந்தருளுக' வென்று தோத்திர நமஸ்காரதெரிசனை முதலியவைகளால் வேண்டினன். கேதீச்சுரமூர்த்தியானவர் திருவுளமிரங்கி 'ஒ துவட்டாவே உனது தவத்தினாலும் துதி முதலியனவாலும் மிக மகிழ்ச்சி கொண்டோம். இந்தத்தலம் எவற்றிலும் மேலானது. இன்று முதல் உனது நாமத்தினால் துவட்டாபுரமென வழங்கும். உனக்கு ஒரு புதல்வன் உண்டாகுவன். அவனுக்கு விஸ்வக்ஞன் என்று பெயரிடு'வென்று சொல்லி மறைந்தருளினார். அப்புத்திரன் சகல கலைவல்லவனாய் ஆரியதேசம் சென்று சமஸ்கிருத பாண்டித்தியமடைந்து தனது மாளிகையில் வசித்து வந்தான். இவர் பிதா சிவபதமடைந்தபின் பாலாவியில் பிண்டதபணஞ் செய்தால் கேக்பாவில் செய்தபலன் கிடைக்குமென்று சூரியனையழைத்து அர்ப்பாகம் கொடுத்துவந்தார். ஓர் தரம் அபரான்னகாலத்தில்பிண்டதற்பணஞ் செய்ய சூரியனை அழைத்தார். சூரியன் பிரசன்னராய் அகாலமானகாலத்தில் அழைத்தபடியால் இந்தநகர் மண்மாரியாலழியுமென்று சாபமிட்டார். இது ஒருவாறுநிற்க, பின்னும், வியாசர்மித்திரபேதங்கொண்டு இவர்களுக்குப் பகைவராகிய அரசனை யுத்தஞ்செய்யும்படி ஏவினார். அவன் அங்கு செல்வதற்கு காந்தகற்கோட்டையும் சுழல்சக்கரமுமிருப்பதால் தான் எண்ணியகருமம் முடியாதபடியால் இவர்களைப் பெண்விஷயத்தாற் செயிக்கலாமென்றும் பக்கத்திலிருந்த பெண்களை யெடுத்து ஏவி சூட்சமறியும்படி செய்தான். அவர்கள் இருவரும் இரண்டு வாலிபரிடம் தொடர்ந்து மோகித்து சிலகாலமிருந்து அவர்களுடன் இன்பமனுபவித்தார்கள். ஒருநாள் நடுராத்தரியில் பர்த்தாவே கோட்டை யெரிகின்ற'தென்று கூறினள். அவர் நித்திரையில் விழித்து 'அடடா வாகு வைக்கோல் போட்டுக் கொழுத்தினார்களோ' வென்று எழுந்தார். அவள் உடனே உமது நித்திரையைப்பார்க்க எழுப்பினே'னென்று பரிகாசஞ்செய்து தங்களெண்ணம் பலித்ததுவென்று தனது நாயகன் நித்திரைசெய்யும்பொழுது வெளிசென்று தங்களையனுப்பிய ராசாவிடம் நடந்த சம்பவங்களைச் சொன்னாள். உடனே அரசன் புறப்பட்டான் இதுநிற்க, அந்த வாலிபர்கள் விடியற்காலமெழுந்து பெண்களைக் காணாதவர்களாய்த் தங்கள் குருவான துவட்டாவின் புத்திரனிடம் நடந்த சம்பவங்களைச்சொன்னார்கள். அவர் உற்றுநோக்கி நீங்கள் நீசப்பெண்ணை விரும்பினபடியால் நீசத்தன்மையடைவீர்களென்றார். அவர்கள் 'குருவே! இது எங்களைப் போவிட்டு விலகு'மென அவர் 'இந்தத்திவ்விய தலமானது எப்போ பிரபலிக்கமாகுமோ அப்போது இந்தச்சாபம் நீங்கு'மென்று சொல்ல நாமிவ்விடமிருக்கலாகாதென்று சூத்திர வேஷதாரிகளாய் பற்பல தேசங்களிலுஞ் சென்று வசித்து வந்தார்களெனச் சில வசனங்களிருக்கின்றது. இத்தலத்திற்கு திருஞானசம்பந்தமூர்த்தி சுந்தரமூர்த்திநாயனார் தேவாரஞ் சொல்லியிருக்கின்றனர்.

மகா துவஷ்டாபுரமென்னும் வடமொழிப்பதமானது மாதோட்டமெனத்திரிந்தது. இது விந்தமலைக்குத் தெற்கிலுள்ளது. "சிம்மளத்தார் என்பது சிமிளார் எனமரீஇயது." மேலும் இராவணன் இலங்கை ஆண்டான் அவன் கோட்டை காலிக்கடற்குளிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இவன் அரசுகம்மியனான மயன் புத்திரியை விவாகஞ்செய்தான். மகேந்திரமென்றும் யீழமென்றும் இலங்கையென்றும் குபேரபட்டணமென்றும் கூறும் மகேந்திரத்தையும், இதற்கு அணித்தாயுள்ள வீரமகா மகேந்திரமென்ற இடமும், சூரன் அரசியற்றினன் சுப்பிரமணியப்பெருமான் கதிர்காமமென்னும் தலத்திலிருந்து வீரமாமகேந்திர மென்னும் பட்டணத்தைவருணனிட மொப்படைத்தார். அது கோலப்பூச் சமுத்திரத்திலமிழ்ந்திவிட்டது. இவன் தேவகம்மியனான் விஸ்வகர்மாவின் புத்திரியான பதுகோமளையை விவாகஞ்செய்தான். அவர்களிருவோரும் இலங்கையிலிருந்ததாக அனேகபுராண இதிகாசங்கள் கூறுகின்றன.



## இயமன்

கஸ்யபப் பிராஜாபதிக்கும் அதிதிதேவிக்கும் பிறந்த விவஸ்வதனென்னும் சூரியன், துவஷ்டாவின் மகளாகிய சஞ்சிகையென்பாளை மணந்து பெற்றபுத்திரன். இவன் தமயன் வைவஸ்வதமநு; தங்கையமுனாதேவி. இம்மூன்று மக்களைப்பெற்ற சஞ்ஞாதேவி, புருஷனாகிய சூரியனுடைய உடல் வெப்பத்திற்கு ஆற்றாது, தன் சாயையைப் பெண்வடிவாக்கித் தன் ஸ்தானத்திலமர்த்திச் சென்றபோது, சாயாதேவியிடமாக சூரியனுக்கு சாவர்ணிமநு, சனி பத்திரை யென்று மூன்றுமக்கள் உதித்தனர். சாயை இம்மூவரிடத்தில் அதிக அன்பு பாராதபடி முந்திய மூவரையும் புறக்கணிக்க அது சகியாமல் இயமன் சாயையை யுதைத்தான். அவள் கோபங்கொண்டு 'உதைத்தகாலில் புழுச்சொரிக' வென்று சாபமிட்டாள். இயமன் வருத்தமடைந்து தன் தந்தையாகிய சூரியனிடத்தில் முறையிட்டுக்கொள்ள சூரியன் சாயையே சிலகாலம் புழுவாயிருந்து உன்காலிற் கொஞ்சந் தசையைத்தின்றொழியட்டும்' என்று சாபவிமோசனஞ்செய்தான்.

இயமன் அஷ்டதிக்குப் பாலகர்களி லொருவன்; பிதிர்லோகாதிபதி, இவன் திக்கு தெற்கு, மனைவி ஸ்யாமளாதேவி, பட்டணம் ஸம்யமனி, வாகனம் மகிஷம். ஆயுதம் தண்டம், இயமன் என்னும் பதத்திற்கு கூறுசெய்வோன் என்பது பொருள். இதனாலேயே இவனைக் கூற்றுவன் என்பதுண்டு. இயமன் தன் தொழிலில் சற்றேனும் நடுநிலை தவறாதவன். அதுபற்றியே இவன் தருமனெனப்படுவான். இவனுடைய தரும நெறியானது.

"போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரென்னான் நல்கூ ரவியான்
தீயா ரென்னான் செல்வரென் றுன்னான்
தறியா னொருகணம் தருக வென்னான்"—

என்று ஆன்றோராற் கொண்டாடப்பட்டிருக்கிறது.

---

**காதற் பாடல்கள்**—ஜப்பான் தேசத்துக் கவர்மெண்டார், வீதிகளில் ஜனங்கள் காதலை விளைவிக்கும் பாடல்களைப் பாடிக் கொண்டு போதல் கூடாதென்று உத்திரவு செய்திருக்கின்றனர்.

## சகோதர விண்ணப்பம்

### "தொழிலாளி" எழுதியது

பஞ்சானனேற்பவர்களாகிய மநு, மய, த்வஷ்ட, சிற்பி, விஸ்வக்ஞவென்னும் அயகார, தாருகார, தாம்பரகார, சிலாகார, ஸ்வர்ணகாரர்களாகிய ஐந்து தொழிலாளிகளாயுள்ள சகோதரர்களுக்கெல்லாம் மிகுந்த வணக்கத்துடன் தெண்டன்சமர்ப்பித்து எழுதும் விஷயங்களை கவனமாய் வாசிக்க வேண்டிக்கொள்ளுகிறேன். நான் உங்கள்மீது வைத்திருக்கும் அன்பே என்னைப் பின்வருமாறு எழுதப் பலகாலுந் தூண்டிவந்ததேயொழிய வேறில்லை. என்றாலும், இவ்வாக்கியங்களை யெழுதுவதற்கு நான் நெடுங்காலம் அச்சப்பட்டுக்கொண்டிருந்தேன். நானுமோர் குலாபிமானியென்று சொல்லிக்கொள்ளக்கூடாதென்கிற கண்டனம் எங்குவந்துவிடுமோவென்று இதுவரையிலும் பயந்து பயந்திருந்தேன், அப்படிப் பயந்து இன்னுமிருக்கக்கூடவில்லை; ஆதலினாலேதான் என் கருத்துக்களை வெளியிடத்துணிந்தேன். இவ்வளவு நீளமான பீடிகையோடு எழுதவந்தது எனென்றால் நான் நமது ஜாதியினிடத்து அபிமானமற்றவனென்று என்னுடைய வாசகர்கள் அவசரப்பட்டு தீர்மானித்துவிடாதபடி காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டேயாகும்.

நாம் தொழிலாளிகள். ஆதிகாலமுதற்கொண்டு தொழில்களே நமக்கு ஜீவனாதாரமா யிருந்துவருகின்றன. நமது பின் சந்ததியாரும் இன்னும் நெடுங்காலமட்டும் தொழிலாளிகளாகவே காலங்கழிப்பார்களென்பதிலுஞ் சந்தேகமில்லை. தொழில் சம்பந்தமாகத்தான், இத்தேசத்திலுள்ள மற்ற ஜாதி மதத்தாருடன் நாம் பழகிவருகின்றோம். அவர்களும் முக்கியமாய் நம்மைத் தொழிலாளிகளாகத்தான் அறிந்திருக்கிறார்கள். ஆனபடியால், உலகத்தோடு நம்மைப்பிணைத்து வைத்திருப்பது நமது தொழில்களே யாகும். இதைமறுப்பதற்கு ஒருவராலாகாது. ஆதலால், நாம் நமது தொழில்கள் விஷயத்தில் கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டியவர்களாயினோம்.

இந்த சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றை யோசித்துப் பார்க்கவேண்டும். அதாவது, நம்முடைய தொழில்களில்லாமல் நம்முடைய தேசம் வாழமுடியுமா?—என்பதே யன்றி வேறில்லை. உந்தியறுக்குங் கத்தியும், பெண்டாட்டிக்குக் கட்டுந்தாலியும் நம்முடைய தென்றும், இவையில்லாமல் உலகம் வாழமாட்டாதென்றும் நாம் முற்காலத்தில் பெருமை பேசிவந்தது உண்டு. இக்காலத்திலும் நமது ஜாதியாரிற் பாமரர் சிலர் இந்த டம்பம் பேசிக்கொள்ளலாமா? அது செல்லுமாவென்று ஆராய்ச்சிசெய்து பார்த்தால் உண்மை வெளிப்பட்டுவிடும். கருமான் கை கத்திசெய்வதும் அதை ஊரார் உபயோகிப்பதுங் காணவே காணேம். மரம் செடி வெட்டுங்கத்திகளை கிராமாந்தரங்களிலுள்ள கருமார் செய்கிறார்களோ என்னமோ தெரியாது. பட்டணப் பிரதேசங்களில் உபயோகப்படுபவை யெல்லாம் சீமையிலிருந்து வருங் கத்திகளேயாகும். தாலிகளோ வென்

றால் இப்போது சகசமாய்க் கடைகளில் வாங்கிக் கொள்ளப்படுகின்றன. ஆதலால், நம்மை லக்ஷியஞ் செய்கிறவர்கள் இங்கெவருங் காணோம். நாம் பழைய காலத்து டம்பப் பேச்சுகள் பேசுவதுந் தகாது. அவை செல்லவும் மாட்டா.

நானாஜாதியாரும் நமது தொழில்களைச் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். போட்டாபோட்டி அதிகமாய்விட்டது. வேலைகளில் நமக்குகூலி கிட்டுபடியாகிறதில்லை. நமது ஜாதிப்பிள்ளைகளை நம்பி வேலைவாங்கிப்போட்டு நாணயத்தைக் காப்பாற்றிக்கொள்வது கஷ்டமாயிருக்கிறது. நல்லசமயத்தில் காலைத்தட்டுகிறார்கள். வாயில் ரத்தத்தை ஊற்றுகிறார்கள். பணம்பணமென்று பறக்கிறார்கள். வேலையோ நடக்கிறதில்லை. இப்படிப் பலபாடுகள் பட்டு வாழவேண்டியவர்களாயிருக்கிறோம். வாழ்ந்தாலுமென்ன? நாம் செய்யும் வேலைகளில் ஒன்றாகிலும் கௌரவப்பட்டதாயில்லை. கொல்லனென்றாலும், தச்சனென்றாலும், கருமானென்றாலும், சிற்றுளிக்காரனென்றாலும, தட்டானென்றாலும் யாவருக்கும் பரிகாசமாகவேயிருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போலவே நம்மில் சிலபேர் நடந்துகொள்ளுகிறார்கள். ஓரிருவர் செய்கின்ற சேஷ்டைகளினால் நம்முடைய தொழில்களுக்கெல்லாம் பழிச்சொல் உண்டாயிருக்கிறது. வேலையில் கட்டுப்பாடில்லை. எவனாவதொருவன் ஒழுங்குதப்பி ஒருகாரியஞ் செய்துவிடுவானானால் அவனைத் தண்டிக்கும் மார்க்கமொன்றும் நமது ஜாதியிலில்லை. ஆதலால், அவனவன் தனக்குத்தோன்றிய படியெல்லாம் நடக்கிறான். ஒருவனுடைய பழி ஒரு குலமுழுவதையுஞ் சார்ந்துவிடுகின்றன. அவனப்படி செய்தான், இவனிப்படிசெய்தான், நீயும் அந்த ஜாதியான்தானே, எல்லாம் அப்படித்தான் செய்வீர்கள் என்று சராசரியில் ஊரார்பேசுகிறார்கள். 'நம்மிடத்தில் வேலைகளைக்கொடுக்க அச்சப்படுகிறார்கள். நம்மையே கூலிக்கு வைத்துக்கொண்டு ஒரு முதலியாரோ செட்டியாரோ மற்றவரோ பட்டணை ஷாப்கண்ட்ராக்ட் முதலியவை செய்வாரானால் அவரைநம்பிச் சாருகிறார்கள். நாம் கூலிமட்டும் காணுகிறோம். லாபமெல்லாம் எஜமான்கள் அடைகிறார்கள். எந்தவேலையிலும் நாம் கூலிக்காரர்களாகவே யிருப்பதினால், கூலிக்காரர்க்கான மரியாதைதான் நமது ஜனங்களுக்குக்கிடைக்கிறது. அந்தக் கூலிவேலை செய்யுஞ் சமயந்தவிர வேறு சமயங்களில் நாம் சற்று ஒழுங்காய்ப் புறப்பட்டாலும், நமக்குக் கூலிமரியாதையே நடக்கிறது.

அதிலும், பொன்வேலை செய்வோருடைய நிலைமையோ நாளுக்கு நாள் கெட்டு வருகிறது. இவர்களிற் பலபேர் கலாய்பூசுகிறவன்போல் வீடுவீடாய்ச் சாமான்களைக்கொண்டு போய் வேலை செய்யத்தலைப்பட்ட பிற்பாடு இவர்கள் பெருமையேகுலைந்து போயிற்று. எவ்வளவு கிறுநகை செய்யவேண்டுமானாலும் நம்பிக்கொடுக்கயோசிக்கிறார்கள்; வீட்டுக்கழைக்கிறார்கள்; ஒருவர் போகாவிட்டால் இன்னொருவன் போய்ச்செய்கிறான். வீட்டுப்பெண்கள் சிறுபிள்ளைகள் முதலாக யாவரும் அதிகாரஞ்செய்கிறார்கள்; அவற்றிற்கெல்லாம் வெட்கமில்லாமல் அடங்கி வேலைசெய்து கொடுத்துப் பிழைப்பதற்கு நம்மவர்கள் பின்வாங்குவது காணோம் அம்மம்ம! இந்த அழகுக்கு புதிது புதிதாய்ப்பல குடும்பத்தார் பொன்வேலையைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். கொல்லாச்சாரி, தச்சாச்சாரி, கருமாராச்சாரி, சிற்பாச்சாரி, எந்த ஆச்சாரியாரிருந்தாலும் தன் பிள்ளைக்குப் பொன்வேலையே கற்பிக்கப் பிரியப்படுகிறார். இதனால், தட்டாராச்சாரிகள் நாளுக்கு நாள் அதிகப்படுகிறார்கள்; மற்ற ஆச்சாரிகள் குறைகிறார்கள். அபவாதச்சொற்கள் அதிகப்படுகின்றன. கொல்லுவேலை முதலான நான்குவேலைகள் நமது கைசோர்ந்து போய்க்கொண்டிருக்கின்றன பொன்வேலையாகிலும் நம்து கையிலிருக்கிறதோ வென்றால் அதுவுமில்லை. கிறிஸ்துவர்கள் அதை விசேஷமாய்ச் செய்கிறார்கள். முதலியார் நாயுடு நாய்க்கர்மார்களுஞ் செய்கிறார்கள். வெள்ளி வேலையிற் பெரும் பாகம் நாய்க்கர்கள் கைப்பட்டுவிட்டது. கருமார வேலையுங் கன்னாவேலையும் துலுக்கர்கள் கைப்பட்டுப் போயின. கல்வேலையைக் கண்டபேரெல்லாங் கையாளலாயினார்கள். நமது தொழில்கள் எப்படிச் சின்னா பின்னமாய்விட்டன பார்த்தீர்களா? சகோதரர்களே! இவற்றையெல்லாம் நாம் அறிந்திருந்தும் ஒன்றுந் தெரியாதவர்கள்போல் பொழுதைப போக்கிவிட்டுக் கண்மூடிக்கொள்வது கௌரவமல்ல. நமது தொழில்களையும் நமது நிலைமையையும் பந்தோபஸ்து செய்வதற்கு ஏதாவது வழிதேடவேண்டும். சும்மாவிருக்கக்கூடாது. நம்மேல் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அருவெறுப்பையும் நம்பிக்கைகுறைவையும் மெதுமெதுவாக நீக்கவேண்டும். இதுகெடுவுதவறாமலும், நாணயங்கெடாமலும் நடந்துகொண்டால்தான் கைகூடும். அப்படிநடந்துகொண்டு, கைநழுவிப்போன சுதந்திரங்களைத் திரும்பப்பெற்றுக் காப்பாற்றாதபக்ஷத்தில் நமதுகதி இன்னுங் கேவலமாய்விடும். இதுபொய்யல்ல. நமக்கு ஒருவருடைய உபதேசம்வேண்டாம். நாமே யோசித்துப்பார்த்துக்கொண்டால்போதும். ஈஸ்வரன் கொடுத்திருக்கிற புத்தி நமக்குத் துணையிருக்கிறது. அதைக்கொண்டு ஜாதிக்குக் குறைவான சொல் வாராதபடி ஒவ்வொருவரும நடந்துகொண்டால்போதும். கூலிவேலையில் அருவெறுப்புண்டானாலோ, பிள்ளைகளைப் படிக்கவைத்து உத்தியோகத்தில்விடுங்கள். ஒருவேலையிலிருந்து இன்னொரு வேலைக்குமாற்றுவதில் சிலாக்கியமில்லை. வரும்படி அதிகமாகுமேயென்று யோசித்தால் அதற்கேற்றபடி அபகீர்த்தியுமுண்டாகிறதே என்பதையும் யோசிக்கவேண்டும். இவற்றையெல்லாம் நான் வெளிப்படையாய்ச் சொன்னதற்காக என்மேல் கோபம்வையாதிருக்கக்கோருகிறேன். என்னைக் கோபித்தாலும் கோபித்துக்கொள்ளுங்கள். மற்றவர்கள் பழிப்பதற்கு இடங்கொடுக்கவேண்டாம். இவ்வளவு காப்பாற்றிக்கொள்வீர்களானால், நமதுஜாதியைப்பற்றி எவருமே கவலைப்பட இடமிருக்காது. நம்மினத்தார்க்குச் சொல்லவேண்டிய விஷயங்களை நமது பத்திரிகை மூலமாயல்லாமல் வேறெப்படி விளம்பரப்படுத்துவது? இதனிலும் சாதகமான வழி வேறு கிடையாது. நாம் ஆசாரத்திலோ, கல்வியிலோ, வெளிப்பகட்டிலோ அல்லது வேறெதிலோ எவ்வளவு சீர்திருத்தமடைந்தபோதிலும், நாம் நமது தொழில்களைச்செய்வதிலும் அவைசம்பந்தமாய் ஊராரோடு செய்யநேரிடும் விவகாரங்களிலும் சொல்தவறாமையும், நாணயங்கெடாமையும் ஏற்படாதபக்ஷத்திலும், தன்மதிப்பைக் காப்பாற்றிக்கொள்ளும்படி நாம் நடக்காதபக்ஷத்திலும் நமதுஜாதிக்குநற்கதியுண்டாகவே மாட்டாது. இது உண்மையா அல்லவாவென்பதை அவரவர்களே யோசித்துப்பார்த்துக்கொள்ளட்டும்.



## ஸ்திரீகளுக்கு உபதேசம்

சென்றமாதம் நடைபெற்ற, ஸாரதாஸ்திரீ சங்க வருஷாந்தரக்கூட்டத்தில், பம்பாயிலிருந்து வந்திருந்த ஸ்ரீமதி ராமாபாய் ரானடே என்னும் மாதுசிரோமணியின் உபந்நியாசத்தின்சாராம்ஸம்:-ஜனங்களின் அபிப்பிராயம் மாறிக்கொண்டு வருகின்றது. அபிப்பிராயம் மாற மாற நம் வாழ்நாளும் ஒவ்வொருநாளும் மாறிக்கொண்டுவருகிறது. இவ்வளவு மாறுதல்கள் உண்டாகிவரும் இக்காலத்தில் நீங்கள் கண்ணைமூடிக்கொண்டு, மௌடீகமாயிருந்து காலத்தைக் கழிக்கலாம் என்றிருக்கிறீர்களா? நீங்கள் அப்படி செய்யமாட்டீர்களென்று நான் நம்புகிறேன். இவ்வித மாறுதல்கள் உண்டாயிருக்கிறதற்குக் காரணம் என்ன என்பதை நீங்கள் அறியப்படுவீர்கள் என்று நம்புகிறேன். ஜென்மபூமிக்குத் தகுந்தவர்கள் என்று சொல்லும்படியான ஸ்திதிக்கும் நம் சிறுமிகளைக்கொண்டுவரும் சிறந்தகடமையின் பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். நாம் நம்முடைய கடமைகளைச்சரிவரச் செய்து முடித்தால், நாம் தேசாபிமானிகள் என்று கருதப்படுவோம். நம் தேசமும் அதில் வசிப்பவர்களும், 'எப்படிப் போனாலும் போகட்டும்: அதைப்பற்றி நான் கவலைப் படமாட்டேன்' என்று சொல்லும் ஸ்திரீ உண்மையான தேசாபிமானி யாக மாட்டாள். ஆனால் நாம் நிறம்ப குறுகிய நோக்கத்தை யுடையவர்களாக யிருக்கிறோம். நம் வீடுகளுக்கு வெளிப்புறத்தில் நடக்கும் காரியங்களை கவனிப்பதில் அக்கறைகொண்டவர்களாயில்லை. அதனால்தான் நாம் தேசத்தின் க்ஷேமத்தைப்பற்றியும், தேசத்தினர்களுக்கு உபயோகமாகும் காரியங்களில் பிரவர்த்திப்பதைப்பற்றியும் சிந்திப்பதற்கு யோக்கியதை யற்றிருக்கிறோம். ஸ்திரீகளுக்கு ஏற்பட்டிருக்கும் கடமையின் எல்லை இவ்வளவுதான் என்று ஓர் வரையறையிருப்பினும் அந்த வரையறையை விஸ்தரிப்பதே மேன்மையாகும். அப்படிச்செய்வதற்கு கல்வியே ஆதாரமா யிருக்கிறது. எல்லாக் காரியங்களிலும் ஸ்திரீகள் புருஷர்களுடன் சேர்ந்து ஒத்துழைப்பது அவசியமென்பதை நம் சகோதரர்கள் வற்புறுத்துகிறார்கள். அப்படிச் செய்வதற்கு வேண்டிய உதவியை அவர்கள் செய்து வருகிறார்கள். தற்கால நினைப்பு, உழைப்பு இந்த முறைகளுக்குப் பொருந்தும்படி அவர்கள் எங்களுக்கு கல்வி கற்பித்து வருகிறார்கள். லௌகிக காரியங்களிலும் பாரமார்த்திக காரியங்களிலும் புருஷர்களுக்குத் துணையாக இருக்கும்படியான வழியை புருஷர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள். பூர்வத்தில் வசித்த இந்தியாவுக்கு பெரிய மகிமையை விளைவித்த ஸ்திரீகளின் வழியைப் பின்பற்றுவோம்.

மேனாட்டிலுள்ள நமது சகோதரிகள் போதனாமுறைப்பயிற்சி பெற்ற மேதாவிகளைக்கொண்டு புத்தி விசாலப்படும்படியாய் கல்வியைக் கற்பிக்கும்படி செய்துவருகிறார்கள். அவர்களுக்குப் பின்னிடைந்தவர்களென்று சொல்லும்படியாய் நாங்கள் நடந்துகொள்ளக்கூடாது. மேனாட்டு ஸ்திரீகளிடமிருக்கும் பல நல்ல விஷயங்களையும் அவர்கள் அறிந்துகொள்ளும்படி வெளியிடுவோமாக. குறுகலான புத்தி, நாம் இப்பொழுது இருக்கும் நிலைமையிலேயே திருப்தியடைதல் .ஆகிய இவ்விரண்டு அகங்காரங்களையும் தூரவிலக்கிவிட்டால் முன்னேற்றமடையலாம். வாழ்நாள் முழுவதும் ஊழியஞ் செய்யவேண்டுமென்பது ஸ்திரீகளுக்கு ஏற்பட்டதல்லவா? ஸ்திரீகள் தாங்கள் கல்வி கற்றுக்கொள்ள கவலைப்படவேண்டியதுமன்றி அவர்களுடைய பெண்களின் படிப்பு அபிவிருத்தியிலும் அக்கறை கொண்டவர்களாக இருக்கவேண்டும். தவிர ஸ்திரீகள் தம் ஜாதியாரின் படிப்பைப்பற்றியும் கவலைகொள்ளவேண்டும்.

நம் தேசத்தின் முன்னேற்றம் என்னும் பளுவை புருஷர்களே வகிக்கவேண்டுமென்று விடாமல், நாமும் அதில் ஒரு பங்கை வகிக்கவேண்டும். அப்படிச் செய்வதற்கு முதலாவது நாம் சரீர த்ரிடகாத்திரர்களாக இருக்கவேண்டும். நல்ல படிப்பாளிகளாக இருக்கவேண்டும். தாய்நாட்டுக்கு ஊழியஞ் செய்தலைவிட, கீர்த்தி ஸ்திரீகளுக்கு வேறென்ன இருக்கிறது. பம்பாயில் ஸ்திரீகள் உங்களைவிட இந்த விஷயத்தில் அதிக அக்கறை கொண்டவர்களா யிருக்கிறார்கள். அங்கே B. A. M. A. L. M. அண்டு S. பரீட்சைகளில் தேர்ந்த ஸ்திரீகள் பலர் இருக்கிறார்கள். விதவைகளுக்குத் தனியாக ஆச்ரமம் இருக்கிறது. அங்கே அவர்களுக்குக் கல்வி கற்பிக்கப்பட்டுவருகிறது. ஸ்திரீகளுக்குப் போதனாமுறை காலேஜுகளிருக்கின்றன. அவர்களை பிரைமெரிஸ்கூல் உபாத்திமார்களாக இருப்பதற்கு தயார் செய்கிறோம். அவர்களுக்கு நர்ஸுகள் வேலையையும் மருத்துவச்சி வேலையையும் கற்றுக்கொடுக்கிறோம். குடித்தனஞ்செய்யும் ஸ்திரீகளுக்கு வீட்டிற்கு வந்து கல்வி கற்பிக்கும்படியாய் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சிறுமிகளுக்குப் பாடல்கள், ஹார்மோனியம், சித்திரப்படம் வரைதல் முதலியவைகளைக் கற்றுக்கொடுக்கிறோம். ஆஸ்பத்திரிகளில் வியாதியஸ்தர்களின் பக்கத்திலிருந்து அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்யவும் கற்பித்துவருகிறோம். பிளேக் நோய் பரவிய காலத்திலும், பஞ்சம் நேரிடும் காலத்திலும் ஜனங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யப் பழக்கப்பட்டு வருகிறார்கள்.

## நமது வாசகர்கள்

### ஆஸாரிகள்

தற்காலத்தில் நமது ஆச்சாரிப்பட்டத்திற்கு உண்டாயிருக்கும் சங்கடத்தை யெடுத்தெடுத்து நமது சபையார் பலதடவைகளில் விளக்கி யெழுதிவந்தும், இன்னமும் பலவிடங்களில் உண்மை தெரியாமலிருக்கிறது. நமக்கென்று ஒரு பத்திரிகை ஆரம்பமாகி அதில் குலவிஷயங்கள் பலவும் சாங்கோபாங்கமாகக் கஷ்டப்பட்டு எழுதப்படுகின்றது அதை வாசிப்பவர்களுக்கெல்லாம் விஷயங்கள் தெரிகின்றன. அவர்கள் தம்முடைய குற்றங் குறைகளைச் சீர்திருத்திக்கொள்ளுகிறார்கள். இப்பத்திரிகையைப்பெறும் பாக்கியமடையாதவர்கள் இன்னும் விஷயாந்தகராய்ப் பழையவிதங்களிலேயே காலம்போக்கிக் குலமேன்மையைக்கெடுத்து வருகிறார்கள். இந்தக்கெடுதியின் அளவு ஆஸாரிபட்டமூலமாய்த் திருஷ்டாந்தமாய்த் தெரிகிறது. எப்படியென்றால், இப்பத்திரிகையை வாசிப்பவர்கள், சரியான உச்சரிப்பை யறிந்துகொண்டு அதுபிறழ்ந்துபோகாதபடி ஜாக்கிரதையுடன் சொல்லிக்கொண்டும் அஞ்ஞானத்தால் தவறிச் சொல்லுகிறவர்களைக் கண்டித்துப் பாடஞ்சொல்லிக்கொண்டும் வருகிறார்கள் மற்றவர்களோ, உலசமயக்கத்திற்குள்ளாகித் தம்மை ஆஸாரி ஆஸாரியென்று வாய்கூசாமல் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தம்மை ஆஸாரியென்று சொல்லுவதையும் எழுதுவதையுஞ் சகித்திருக்கிறார்கள். இம்மட்டோ? தாமே ஆஸாரியென்று (இங்கிலீஷில்) யெழுதுகிறார்கள். திருத்திச் சொல்லுவோர்மேல் கோபங்கொண்டு அவர்கள் முட்டாள்களென்று தீர்மானிக்கிறார்கள் இந்த அவதிக்கு என்ன செய்யப்போகிறோம்? (Gramaphone Record) கிராமபோன் தட்டிலேயுங்கூட ஆஸாரிப்பட்டம் புகுந்துகொண்டது. மாசிலாமணி ஆஸாரி யென்பாருடைய பாடல்களை கொண்ட ரிகார்ட்கள் சென்னை ஸ்பென்ஸர் சம்பனியாரால் விற்பனைக்கு விளம்பரஞ் செய்யப்பட்டிருக்கின்றன. இதிலும் நம்மவர்களுக்கு ஆஸாரிப்பட்டமேகமாய் விட்டது. நமக்கு இதனிலுங் குறை என்ன வேண்டும்? இப்படியும் ஒரு ஜாதியார் கண் மூடிக்கிடப்பார்களா? ஒரு பிரயோசனமுமில்லாத விஷயங்களுக்கெல்லாம் மற்ற ஜாதியார்கள் பெருங்கூட்டங்கள் சேர்ந்து ஆரவாரம் பண்ணி வாது செய்து குறை தீருகிறார்கள். நமது பட்டத்திற்கே பழுதுநேரிடும்போது நாம் கும்பகர்ணப்படலம்படித்துக் கொண்டிருக்கிறோமே. இது யாருக்கு அடுக்கும்? எங்கேநடக்கும்? பத்திரிகையிலெழுதப்படுவதெல்லாம் ஆற்றிற்கரைத்த புளிபோல் அத்துவானமாய் விடுவதாகத் தோன்றுகிறதே யல்லாமல், நமது ஜனங்களுக்குள் எந்த விதமான ஆவேசத்தையும் உண்டு பண்ணுவதாகக் காணவில்லை. நமது ஜனங்களுக்கென்ன ஜாதிப்பற்று இல்லையா? அல்லது ஆஸாரிப்பட்டம் இழிவானதென்று தெரியவில்லையா? தெரிந்தும், போகட்டுமென்றிருக்கிறார்களா? இந்த விதந்தானிருக்குமென்று ஒன்றும் நிதானிப்பதற்கில்லையே! இதுவுஞ் சாபக்கட்டுதானோ

R. S. ஆச்சாரி.

* * *

### தகனமா—சமாதியா?

அந்தியக்கிரியைகளை எப்படிச் செய்வது சாஸ்திரோக்தம் என்பதைப்பற்றி நமது பண்டிதர்கள் திட்டமாய்த் தெரிவிக்கவேண்டியது அவஸ்யமாயிருக்கிறது. சமாதி வைக்கிறவர்கள் அதிகமாயிருக்கிறார்களென்றும், தகனஞ்செய்கிறவர்கள் சில வீட்டுக்காரர்களேயென்றும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஸென்ஸஸ் ரிபோர்டிலுங்கூட, இந்த ஜாதி சமாதி வைக்கிறவர்களென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. திரு. சிதம்பராச்சாரியார் என்பவர் தெரிவித்திருப்பதோடுகூட இந்த சமாதி வழக்கமும் நம்முடைய பிராம்மணீகத்திற்குப் பழுதானதொரு சாக்ஷியென்று காட்டப்படுகிறது. ஆனபடியால், இதைப்பற்றி நாம் பத்திரிகைமூலமாக ஆராயவேண்டியது முக்கியம். சமாதிவைப்பது தப்பானால், அதைக் கைவிடும்படிச் செய்வோம். இல்லையானால், ஸென்ஸஸ் வாதத்தைக் கண்டிப்போம். எதுவுஞ் செய்யாமல், காதுங்கேட்கவில்லை கண்ணுந்தெரியவில்லை யென்று காலங்கழித்துக்கொண்டுவருவது அழகல்ல.

பழூர்-சுப்ரமண்யன்.

* * *

### ஜாதீய கான்பரன்ஸ்

கடைசியாய், நமது பத்திரிகையின் பிரயோசனங்களில் ஒன்றைப்பெற்றுவிட்டோம். கும்பகோணத்தில் நமது ஜாதிக் கான்பரன்ஸ் நடக்கப்போகிறது, பல ஜில்லாவிலிருந்தும் குலாபிமானிகள் வருவார்கள். அவர்களையெல்லாம் பார்க்கும் பாக்கியம் பலபேர்களுக்கும் உண்டாகும். அவரவர்கள் தம்முடைய அநுபவங்களையும் ஆராய்ச்சிகளையும் வெளிப்படுத்துவார்கள். அதைக் கேட்கக்கேட்கப் பரமானந்தமுண்டாகாதுபோமா? நமது பாக்கியமேபாக்கியம் நமது முன்னோர்கள் காணாத காக்ஷியைக் காணப்போகிறோம்: அடையாத மகிழ்ச்சியை யடையப்போகிறோம்; பெறாத நன்மையைப் பெறப்போகிறோம். இந்தவிதமாகக் கும்பகோணத்தில் மட்டும் நடப்பது போதாது. ஒவ்வொரு ஜில்லாவிலும் நடக்கவேண்டும். ஒவ்வொரு தாலுக்காவிலும் நடக்கவேண்டும். எங்கெங்கே நடக்கிறதோ அங்கங்கேயெல்லாம் குலாபிமானம் உதிக்கும், வளரும், படரும், செழிக்கும், பழுக்கும், பலன்தரும். விஸ்வப்பிராம்மணர்களே! ஒவ்வோரூரிலும் கான்பரன்ஸ் நடத்தப் பிரயாசைப்படுங்கள்.

சேலத்தான்.

* * *

### சபைக்கோரு பலதானம்

சென்னையில் சில பந்துக்கட்டார்கள், நமது சபைக்கு சுபாசுபகாலங்களில் ஓர் பலதானங் கொடுத்துவருகிறார்கள் என்னும் விஷயத்தைப் பத்திரிகை வாயிலாகத் தெரிந்துகொண்டோம். சபைக்கு இது ஒரு நல்ல வருமான வழியாகும். கொடுக்கிறவர்கள் கொஞ்சமாகக் கொடுத்தாலும் அவர்களுக்குக் கஷ்டந் தெரியாமலிருக்கிறது; சபைக்கும் திரவியஞ் சேர்ந்துவிடும். சென்னை போன்ற பட்டணங்களில் இந்த விதத்தால் மாதவாரியில் பத்துரூபா சேருவது பிரமாதமல்ல. இப்படியே மற்றப் பட்டணங்களிலும் வருமானால், தென்னிந்தியாவில் அதமபக்ஷம் பிரதிமாதமும் ரூ: 200 கிடைக்கலாம். இந்தமாதிரி கிடைத்தாலே விஸ்வகர்மச் சிறுவர் வித்தியாபிவிருத்திக்கு நமது சபையார் உதவிசெய்ய ஏற்படுத்தியுள்ள நிதிக்கு வேண்டிய பொருள் சுலபமாய் வந்துவிடும். ஆனால், அந்தந்த உறவைச்சேர்ந்த நாட்டாண்மைக்காரர்கள் மனம் வைத்து, அங்கங்கு கேட்டு பலதானம் வாங்கியனுப்பவேண்டும். கேட்கும்பக்ஷத்தில் மாட்டேனென்று யாருஞ் சொல்லமாட்டார்கள். அப்படி நாட்டாண்மைக்காரர்கள் செய்யும்படி நமது பத்திரிகையை வாசிக்கிறவர்கள் ஒவ்வொருவரும் தங்களூரில் தூண்டுதல் பண்ணுவது நல்லது

தா. குருநாத ஆச்சாரி.



* * *

### பௌருஷேய குலாபிமானக்கட்டளைகள்

ஜெர்மன் சக்கரவர்த்தியால், தமது தேச ஜனங்களுக்கு தேசாபிமானம் உண்டாகும்படியாகச் செய்யப்பட்டிருக்குங் கட்டளைகள் இன்னவையென்று, சென்ற நவம்பர்மாதப் பத்திரிகையில் வாசித்தோமல்லவா? அந்தமாதிரியாக பௌருஷேய மகாஜனங்களுடைய நடவடிக்கைகளை ஒருவழிப்படுத்தி அக்குல உபகாரமாயிருக்கச்செய்வதற்கு குலாபிமானக் கட்டளைகள்வேண்டும். கட்டளைகள் ஏற்பட்டபிறகு, நமது குலாபிமானிகள் தாங்கள் செய்யத்தக்கது இன்னது என்பதை யறிந்துகொண்டு, அதன்மேல் குலாபிவிருத்திக்குத் தக்கபடியாக நடந்துகொள்ள முயற்சிசெய்திடலாம். ஏற்படுங் கட்டளைகளை, ஜெர்மன் சக்கரவர்த்திபோல், அமுலுக்குக் கொண்டுவருவது நமக்குச்சாத்தியமில்லையென்பது நன்றாய்த் தெரிந்தவிஷயம். இருந்தாலும், தாமாக ஏற்றுக்கொண்டு நடக்க விருப்பம்வைக்கும் சில பேர்களுக்காவது வழிகாட்டியாக அக் கட்டளைகள் நிற்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனபடியால், பௌருஷேய குலநன்மையைக் கோரிவாழுகின்ற புண்ணிய புருஷர்களா யிருக்கப்பட்டவர்கள் தமது புத்திக்குத் தோன்றுகிற கட்டளைகளை இந்தப்பத்திரிகை மூலமாக வெளியிடுவது நல்லது, அப்படியே செய்வார்களென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குலசேவகன்.

* * *

### கான்பரன்ஸ் விஷயங்கள்,

ஆச்சார்யப்பட்டத்தை நமது ஜாதியினின்று விலக்கி ஆஸாரியென்னும் அகோரப்பட்டத்தை நமக்குச்சிருஷ்டித்துக் கொடுத்தது மகாபாவமென்று மன்றாடுவதைப் பார்க்கிலும் கான்பரன்ஸிற் கானகாரியம் வேறில்லை. இதைப்பற்றிப் பேசுவதக்கு நமது பண்டிதர்களில் முக்கியமானவர்களான இருவர்மூவரை நியமித்துவிடவேண்டும்; ஒவ்வொரு ஜில்லாவிற்காகவும் ஒவ்வொருவர் ஆதரித்துப் பேசினாலும் அதிகமாகாது. இங்கிலீஷ்கல்வி எல்லாருக்கும் போல நமக்கு இக்காலத்திலும் இந்த ராஜாங்கத்திலும் இன்றியமையாதது என்பதை ஜனங்களுக்கு நன்றாய்ப் போதிக்கவேண்டும். ஆண்பிள்ளையாகப் பிறந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் கட்டாயமாகக்கல்வி கற்பிக்கவேண்டுமென்றும், கல்வியில் பிரவீணமுடையவனுக்கு உயர்தரக் கல்விதர வேண்டுமென்றும் இந்த நோக்கங் கொண்டு பெற்றோர்கள் உழைக்க வேண்டுமென்றும், இவ்விதம் நடைபெறுவதற்குக் குலத்தாரெல்லாருஞ் சகாயஞ்செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கவேண்டும். பெண்களுக்கும் கல்வி போதிக்கும்படி உபதேசம் பண்ணவேண்டும். ஆருஷேய உபாத்தியாயர்களைக் கொண்டு நல்லது கெட்டது செய்து கொள்ளகூடாது; நம்மஜாதியானைக்கொண்டே நடத்தவேண்டு மென்று சொல்லிக் கொடுக்கவேண்டும். சிறுசிறு பிரிவுகளாக நமது ஜாதியை இன்னுமின்னும் துண்டுகளாக்குவதை விட்டு, அந்தப்பிரிவுகளை யெல்லாம் ரத்துசெய்து, நமது ஜாதியாராயிருக்கப்பட்டவர்களெல்லாம் ஒருவரோடொருவர் சமபாவமாயிருந்து வாழவும், கொள்வன கொடுப்பன செய்யாவிட்டாலும், உண்பதில் ஒற்றுமையூராட்டவுஞ் செய்விக்கவேண்டும். பழிப்புக் கிடமான வழக்கங்களை குடும்பவாழ்க்கையிலும் வேலை விஷயங்களிலும் ஒழித்து, நல்ல மாதிரியாய் நடந்து கொண்டால்தான் நம்மைபலரும் மதித்துக் கொண்டாட வழியேற்படுமாதலால், துர்க்குணங்களையும் துர்நடத்தைகளையும் போக்கி வாஸ்தவத்தில் திருத்தமடைவதற்கு முயற்சி யெடுக்கவேண்டுமேயல்லாமல், வெளிவேஷத்தில் நோக்கம் வைத்து மோசம் போகக்கூடாதென்று நேசபாவமாய் இடித்துச் சொல்லவேண்டும். கன்னியாசுல்கம், வரசுல்கம், பால்யவிவாகம்—இவை யிருக்குமிடங்களிலிருந்து தொலையப்பண்ணவேண்டும். நாட்டாண்மைக்காரர்களை எலக்ஷன் மூலமாய் நியமிக்க வழிதேடவேண்டும் மடங்களையும் ஆலயங்களையும் பௌரோகித்தையும் செம்மைப்படுத்த சூழ்ச்சி செய்யவேண்டும். கான்பரன்ஸில் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இன்னும் அநேகமிருக்கின்றன. அவற்றைப்பற்றி பிறகெழுதுவேன்.

வாலன்டியர்.

* * *

### கம்மாளப்பேர்

புதிது புதிதாய் நமது ஜாதியில் அபிமானம் வைக்கத்தலைபபடும் நமது இனத்தார்களிற் சிலபேர் கம்மாளன் என்னும் வார்த்தையை யுபயோகிக்கக் கூடாதென்று சண்டைபிடிக்கிறார்கள். இந்த சண்டை இனத்தாளிடத்திலேயேதான் செய்யப்படுகிறது. மற்ற ஜாதியார்களிடத்தில் இந்தப்படி சண்டை செய்கிறவர்கள் அடையும் பலன் தெரிந்தே யிருக்கிறது. விஸ்வப்பிராம்மணர்கள் என்று நாம் நம்மைச் சொல்லிக்கொள்ளவேண்டுமே யல்லாமல் கம்மாளன் என்று வாய்விட்டு சொல்லக்கூடாதென்று இனத்தானோடு இனத்தான் வாதாடுவது சமயாசமயத்தில் சிரிப்பை

யுண்டுசெய்கிறது. விஸ்வப்பிராம்மணன் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் சந்தோஷமாய்ச் சொல்லிக்கொள்ளட்டும். அவ்வளவு தூரம் எட்டிப்பிடிக்காதபேர்கள் கம்மாளன் என்று சொல்லிக்கொள்வதில் என்ன தப்பு இருக்கிறது? நாம் கம்மாளர்களல்லவா? கம்மாளர் என்று சொல்லிக்கொள்வதினாலேயே நமக்குஈனத்தனம் வந்துவிடுமா? மற்ற ஜாதியார்கள் வேழாளன் பார்ப்பான், கவரையென்று சொல்லிக் கொள்ளவில்லையா? அப்படியே நம்ம இனத்தார்களும் என்னத்திற்கு சொல்லிக்கொள்ளக்கூடாது; வேறு விதமாகச் சொல்லுவதினாலேயே நம்ம ஜாதிமாறிவிடுமோ? நம்ம அந்தஸ்து வேறாகுமா? இதையெல்லாம் ஷை புது அபிமானிகள் யோசனை செய்யவேண்டும். கம்மாளன் என்று சொல்லாமல் விஸ்வப்பிராமணன் என்று சொல்வதினால் மட்டுமே நம்முடைய இனத்தைச் சீர் திருத்தஞ் செய்து விடலாமென்று நினைத்துக் கொள்வது தப்பு. கம்மாளனென்றாலும் விஸ்வப்பிராம்மணனென்றாலும் நாம் நாமேயாக இருக்கின்ற வகையிலும் நாலுபேர்கள் நம்மை எப்போதும் போலத்தான் எளக்காரம் பண்ணுவார்கள். அந்த அழகுக்கு பேரைமாத்திரம் என்னத்துக்குப் புரட்டிவைக்க வேண்டும்? புரட்டுவதாயிருந்தால் நடத்தையைப் புரட்டவேண்டும், அஞ்ஞானத்தைப் புரட்டவேண்டும் அக்கம்பக்கத்தார் வெறுக்கும் அநேக சேஷ்டைகளையும் புரட்டவேண்டும். அப்போது ஜன அபிப்பிராயத்தைப் புரட்டலாமே யல்லாமல் பேரைமட்டும் புரட்டினால் போதுமா? ஐயோ, இது என்ன மதிகெட்டதனம்! பேரைப் புரட்டவேண்டாம், அந்தப் பேருக்கு அழகு செய்வதற்கு உழைக்கவேண்டும். அப்படிச் செய்யத் திராணியில்லாவிட்டால் சும்மா விருக்கவேண்டும். அந்தப் பேரைவிட்டு இந்தப்பேரை வைத்துக்கொண்டாலும், அதற்குண்டான அருவெறுப்பு இதற்கும் ஒட்டிக்கொள்ளாதா? இந்த புத்தி ஷை புது அபிமானிகளுக்கு என்னத்திற்குத் தோன்றவில்லையோ தெரியவில்லையே! பேரிலே என்ன இருக்கிறது? குபேரன் என்று நித்ய தரித்திரன் பேரிட்டுக்கொண்டால் அவனுக்கு ஐஸ்வரியம் வந்துவிடுமா? யார் சொல்லுவார்கள்? பழைமையாய் நமது வந்தது கம்மாளன் என்ற பெயர். மற்ற பேர்களும் நமக்குண்டு என்று நான் சொல்லாதிருக்க மாட்டேன். பௌருஷேயர் என்றும், தேவப்பிராம்மணர் என்றும், விஸ்வப்பிராம்மணரென்றும், வேறு பெயர்களாகவும் நம்ம இனத்தார் காலாகாலமாக சொல்லி வந்தது நிஜந்தான். என்றாலும், கம்மாளர், கண்ணாளர் என்றுதான் அதிகமாகச் சொல்லிவந்தார்கள். அதை ஏன் கைவிட்டுவிடவேண்டும்? அப்படிச் சொல்லிவருகின்றவர்கள் என்னத்திற்கு பழிக்கவேண்டும்? கம்மாளப்பேருக்கும் கம்மாள ஜாதிக்கும் நிஜமாகவே கீர்த்தி தேடிவைக்கவேண்டுமென்றால், அந்தப்பேரை யொட்டிக்கொண்டிருக்கிறதென்று ஷை புது அபிமானிகள் எண்ணும்படியான அபகீர்த்தியை யொழிப்பதற்குத் தகுந்த லக்ஷணங்கள் நம்ம இனத்தாரிடத்தில் உண்டாவதற்கு வழியெதுவோ அந்த வழியைத் தேடவேண்டும். அதைவிட்டு, உள்ளபேரை ஒழிக்கப் பிரயத்தினப்பட்டால் முடியுமா? இருக்கிற பேரை எடுத்துவிடப்பார்ப்பது கஷ்டம்; இல்லாத நடவடிக்கைகளை பழத்தில் ஊசி சொருகுவதுபோல் மெதுமெதுவாய் நுழைப்பது சுலபம். புது அபிமானிகளாயிருந்தாலும் பழைய அபிமானிகளாயிருந்தாலும் இந்தப்படி செய்யத்தான் பிரயாசை யெடுக்கவேண்டும். இல்லையென்று சொல்லுகிறவர்கள் தங்களுடைய கருத்துகளை எடுத்தெழுதுவார்களென்று மிகவுந் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

R. M. சோணாசல பத்தர்.

*
* *

## செங்கல்பட்டு ஜில்லா

இந்த ஜில்லாவில் தான் காஞ்சிமண்டலமிருக்கிறது. அங்குதான் வலங்கை யிடங்கை சம்வாதம் ஏற்பட்டது. வேறுபல சம்வாதங்களும் இங்கு நடக்கின்றன. இந்த ஜில்லாவை அடுத்தாற்போல் வடஆற்காடு தென்னாற்காடு என்னும் ஜில்லாக்களிருக்கின்றன. இம்மூன்று ஜில்லாக்களிலும் பலவருஷங்களாக நமது ஜாதியார்மீது மற்ற ஜாதியார்களுக்கு பொதுவானதோர் வைஷம்மியம் இருந்து வருகிறது. வேளாளர், வன்னியர், ரெட்டிகள் முதலிய ஜாதியார்கள் நம்மைச் சிறுமைப்படுத்துவதற்குப் பின்னிடைவதில்லை. இந்தக்கொடுமை குக்கிராமங்களில் மிகவும் அதிகமாய்க் காணப்பட்டிருக்கிறது. அங்குள்ளவர்களாகிய தச்சர், கொல்லர் போன்றவர்களைப் பொருளாளிகளாகிய ஷை ஜாதியார் சேவலாய் நடத்துவதிலும் நாளதுவரையிலுங்கூட பிரியங் காட்டி வருகிறார்களென்று தெரிகின்றது. நாகரிகமிகுந்த இக்காலத்தில் நாம் நீதி தவறாத பிரிட்டிஷ் துரைத்தனத்தின் கீழ்பட்டிருக்கும் போதுகூட இவ்விதக்கொடுமைகள் நடக்கின்றனவென்பது சிலருக்கு ஆச்சரியமாய்த் தோன்றலாம். ஆனால், வயிற்றுப் பிழைப்பை யுத்தேசித்துக் கிராமாந்தரங்களில் காலகாலமாய்க் குடியேறிவாழும் பாமரப் பௌருஷேயர்கள் பிறரிம்சைக்கு உட்பட்டு அவர்களுக்கடங்கிக் காலங்கழிக்காமல் என்னசெய்ய முடியும்? பிறருடைய தயவை யெதிர்பார்த்து இவர்கள் பிழைக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இவர்களுடையகூட்டம் மிகக் கொஞ்சம். ஊராரெல்லாம் மற்றவர்களாகவே யிருக்கிறார்கள். அவர்களிடம் நம்மவர்கள் குத்துச்சொல் படாமலிருப்பதற்குத் தக்கமார்க்கத்தை பட்டணங்களில் வாஸமாயிருப்பவரும் மற்ற ஜில்லாக்களிலிருப்பவர்களுஞ் சேர்ந்தாலோசித்து ஒழுங்குபடுத்திக்கொடுக்கவேண்டும். மொத்தத்தில், நம்மவர்கள் அநாகரீகத்தை ஒழிக்கவேண்டும். தம்முடைய ஜாதிச் சுதந்திரங்கள் யாவையென்று தெரிந்து கொள்ளவேண்டும். இதற்குக் கல்வி வேண்டும். கல்வி கற்று பலபேர் இராஜாங்க உத்தியோகங்கள் செய்தால், ஊராருக்கு சற்று அச்சம் உண்டாகும். அப்போது, முன்பின் யோசியாமல் எதுவுஞ் சொல்லத்துணியமாட்டார்கள். இரண்டாவது, ஷை ஜில்லாவில் மூலைக்குமூலை கான்பரன்ஸ் நடத்தவேண்டும். அப்படி நடத்தினால், நமதுஜாதி கட்டுப்பட்டிருக்கிறதென்றும், இதைப்பற்றி யாரேனும் பழிசொன்னால் அதைக் கண்டிப்பதற்குத் தக்க கனவான்களிருக்கிறார்களென்றும், அவர்கள் வேண்டிய நடவடிக்கைகள் செய்வார்களென்றும் பயப்படுவார்கள். துணையில்லையேயென்று ஒடுங்கிக்கிடக்கும் நம்மவர்களுக்கும் நமது ஜாதீயப் பாத்தியதைகளைக் கொண்டாடத் தைரியம்கொடுக்கும். ஆதலினால், செங்கல்பட்டு ஜில்லாவில் பலவிடங்களில் விஸ்வகர்ம ஜாதீய கான்பரன்ஸ் நடத்தினால், அந்த ஜில்லா வாசிகளாயுள்ள நமது இனத்தார்க்கு இப்போதிலும் மேலான நிலைமையும் மதிப்பும் உண்டாகுமென்பதில் தடையில்லை. இப்போது, நமது ஜாதியாரை என்னசொன்னபோதிலும் கேட்பதற்கு ஆளில்லையென்று தைரியங்கொண்டு பலர் பலவாறு பேசுகிறார்கள். இவர்களோடெல்லாம் தனித்தனியாக வாக்குவாதம் வைத்துக் கொண்டு கோர்ட்டுக்கிழுத்து ஊரெல்லாம் பணந்தண்டிப் பொருள் வீரயஞ்செய்து கஷ்டநஷ்டங்கள் பட்டு பல தவணைகள் தாண்டிக் கடைசியாய் ஜெயமோ அபஜெயமோ பட்டு சந்தோஷமோ துக்கமோ அடைவது சிறப்பாயில்லை. அந்தப் பொருளையே கான்பரன்ஸில் செலவிட்டால், மற்றவர்கள் நாக்கை உள்ளே வைத்திருக்கும்படியான அச்சம் உண்டாவதோடுகூட, நமது ஜாதிக்குள் ஐக்ய மத்தியமும், கல்வி விருத்தியும், சீர்திருத்தமு முண்டாகும் நமது ஜாதிக்குப் பெருமையுண்டாக்கிப் பிறர் வாயடக்க வேண்டுமானால் நாம் செய்யத்தக்க காரியம் கான்பரன்ஸ் நடத்துவதல்லாமல் வேறில்லை. இருளடைந்து உறக்கங்கொண்டு சந்தடியற்றிருக்கும் வீட்டுக்குள் திருடன் நுழைவான். பிரகாசத்தோடுகூடி விழிப்போடு ஆரவாரஞ் செய்து கொண்டிருப்போருள்ள வீட்டில் கொள்ளைக்கூட்டத்தாரும் பிரவேசிக்க அஞ்சுவார்களல்லவா? ஆனபடியால், செங்கல்பட்டு ஜில்லாவொன்றில் மட்டுமல்ல, வேறெந்த ஜில்லாவிலுந் தாலுக்காவிலும் கிராமத்திலும் நம்மினத்தார் மற்ற ஜாதியாரிடத்தில் இம்சைப் பட்டுக்கொண்டிருக்கிறார்களென்று எண்ணுவதற்கு இடமிருக்கிறதோ அந்தந்த இடங்களிலெல்லாம் கான்பரன்ஸ் கூட்டுவது அத்தியாவசிய மென்பது நிச்சயம்.

அம்பலவாசி.

---





## இதோபதேச போதினி

### (பக்தியும் பகவத்கீதையும்)

சுலோகம்—ஸமோஹம் ஸர்வபூதேஷு |

(கருத்து) யான் சகல பிராணிகளிடத்தும் சமமாயிருக்கிறேன்.

சு-ம் நமேசேஷ்யோஸ்தி நப்ரியஃ |

(க-து) எனக்குப் பகையானவன் இல்லை, பிரியமானவன் இல்லை.

சு-ம் அநந்யசேதாஸ்ஸததம்
யோமாம் ஸ்மரதி நித்யசஃ |
தஸ்யாஸம் ஸுலபஃ பார்த்த
நித்ய யுக்தஸ்ய யோகினஃ |

(க-து) பார்த்த! எவன் வேறொன்றிலே மனமில்லாதவனாய் என்னை எப்பொழுதும் நினைக்கின்றானோ அந்த எப்பொழுதும் ஒருநிலைப்பட்ட யோகிக்கு நான் எளிதாய் அடையத்தக்கவன்.

சு-ம் அநன்யாச் சிந்த யந்தோமாம்
யெஜநாஃ பர்யு பாஸதே |
தேஷாம் நித்யாபி யுக்தானாம்
யோகக்ஷேமம் வஹாம்யஹம் ||

(க-து) எந்த ஜனங்கள் அன்னியபரல்லாதவராய் என்னைத் தியானிப்பவராய் எங்கும் உபாஸிக்கிறார்களோ, அந்த எப்பொழுதும் (தியானத்திலே) உறுதியாகச் சென்றவாது யோகக்ஷேமத்தை யான் வகிக்கின்றேன்.

சு-ம் அபிசேத்ஸு துராசாரஃ
ஸாதுரேவ ஸமந்தவ்யஃ |

(க-து) தீயொழுக்கமான துராசாரனாக இருந்தாலும் தொழப்பட்டவன் பக்தனுவன். என்று ஸ்ரீகிருஷ்ணபகவான் சொன்னார்.

அர்ச்சுனர் வாக்கியம்

சு-ம் நமோஸ்துதே தேவ வரப்ரஸீத

(க-து) தேவர்களிற் சிறந்தவரே உமக்கு நமஸ்காரம் என்று அர்ச்சுனர் சொன்னார். (தொடரும்)

V. வைத்திநாதஸ்வாமி—ஸ்தபதி.

## பாகசாஸ்திரம்

வாங்கீபாத் (கத்திரிப்பிஞ்சு சாதம்).—மிளகாய் அரைப்பலம், மிளகு அரைக்கால் பலம், கொத்துமல்லி விதை அரைப்பலம், உளுத்தம் பருப்பு இரண்டுபலம், சீரகம் வீசம்பலம், கிராம்பு வீசம்பலம், சாதிக்காய் அரைக்கால்பலம், சாதிபத்திரி அரைக்கால்பலம்.-இந்த வஸ்துக்களை ஒவ்வொன்றாகத் தனித்தனி கொஞ்சம் நெய்விட்டு வறுத்து வெவ்வேறாகப் பொடிசெய்து கொண்டு, பிறகு எல்லாம் பொடிகளையும் ஒன்றாய்ச் சேர்ந்து நன்றாய்க் கலந்து வைத்துக்கொள்ள வேண்டியது. வறுப்பதற்கு மொத்தத்தில் இரண்டரைப்பலம் நெய் எடுத்துக்கொள்ளலாம்.

இப்பொடிபோடு, இரண்டேமுக்கால் ரூபாயெடை உப்பும் மூன்றுபலங் கொப்பரைத்திருவலும் போட்டு கலந்து இன்னொருதரம் இடித்து இரண்டு சமபாகங்களாகச் செய்துவைத்துக் கொள்ளவேண்டும்.

முக்கால்பலம் புளியை யெடுத்து கொஞ்சம் நல்ல ஜலத்தில் நன்றாய்க்கரைத்து, கொட்டை கோது முதலியவைகளை எடுத்துவிட்டு, மேலே சொல்லியிருக்கும் இரண்டுபாகங்களில் ஒருபாகம் பொடியை யெடுத்துப் போட்டு,கரைத்த புளியோடு கலந்துவைத்துக்கொள்ள வேண்டும்.

மூக்கால் வீசை கத்திரிப்பிஞ்சுகளை யெடுத்து, ஒவ்வொன்றின் காம்பின் முக்கால் பாகத்தை நறுக்கியெறிந்து, காய்களைத் தனித்தனித் துண்டுகளாகாதபடி நான்காகப் பிளந்து, ஒவ்வொரு பிளப்பிலும் இம்மசாலாகலந்த புளியை ஒரு திட்டமாய் நிரப்பிவைக்க வேண்டும்.

ஐந்துபலம் நெய்யெடுத்து. அதை மூன்றுபடி ஜலங்கொள்ளும்படியானதோர் களிம்பேறாத பாத்திரத்தில் விட்டுக் காய்ச்சி,நெய் காய்ந்த பக்குவம்பார்த்து,அதில் கால்பலம் மிளகாய், கால்பலம் கடுகு,அரைபலம் உளுத்தம்பருப்பு, அரைபலம் கடலைப்பருப்பு ,இவைகளை ஒன்றின்பின் னொன்றாகத் தாளித முறைப் பிரகாரம் தாளித்துக்கொண்டு, பிறகு இக் கத்திரிப் பிஞ்சுகளை அதில் போட்டு, கொஞ்சம் நல்ல ஜலத்தை இக் கத்திரிப் பிஞ்சுகளின் மேல் தெளித்துக் கிளறிக்கொடுத்து மூடி, சற்றுநேரம் பொறுத்து மறுபடியுங் கொஞ்சம் ஜலந்தெளித்துக் கிளறிக்கொடுத்து மூடிவைக்கவேண்டும். இப்படி இக் கத்திரிப்பிஞ்சு முக்காற்பாகம் வேகுமட்டும் அடிக்கடி கிளறிக்கொண்டும் மூடிக்கொண்டுமிருந்து, அது செம்மையாக வெந்த பதம்பார்த்து அடுப்பைவிட்டு இறக்கிக்கொள்ளவேண்டும்.

வீசம்பலம் மஞ்சள் பொடியை ஒருபடி நல்ல ஜலத்தில் போட்டு அந்த ஜலத்தில் அரைபடி அரிசியிட்டு சமைத்து அந்த சாதம் பாதிவெந்தபதம்பாத்து, வெந்துகொண்டிருக்கும் சாதத்தில் இரண்டரை பலம் நெய்விட்டுக் கிளறி மூடிவைத்திருந்து, பிறகு சாதம் முக்கால் பாகம் வெந்த பதம் பார்த்து, மேலே எடுத்து வைத்திருக்கும் மற்றொரு பாக மஸாலாவைப் போட்டுக் கரண்டிக் காம்பினால் கிளரிக்கொடுத்து, வேகவைத்திருக்கும் கத்திரிப்பிஞ்சை அதில்போட்டு மறுபடியும் கிளறி அடுப்பிலிருந்திறக்கி ஐந்து நிமிஷம் தணலின்மேல் வைத்தெடுக்கவேண்டும்.

பரிமாறுவதற்கு முன், இரண்டு எலுமிச்சம் பழங்களை நறுக்கி விரைகளை உதிர்த்துவிட்டு ரஸத்தை இச் சாதத்தில் பிழிந்து கொஞ்சங் கிளறிப் பிறகு பரிமாற வேண்டியது.

**வேறு விதம்**.—அரைப்படி அரிசியைவடியரைத்துக் கொண்டு, அந்த அரிசியில் அரைக்கால் ரூபா யெடை மஞ்சள் பொடியையும் அரைப்பலம் நெய்யுங்கலந்து இரண்டரைப்படி ஜலங்கொள்ளும்படியான தவலையில் ஒன்றரைப்படி நல்ல ஜலம்விட்டு, அரிசியை அதில் கொட்டிச் சமையல்செய்து, சாதத்தை ஓர் ஈயம் பூசிய பாத்திரத்தில் கொட்டி ஆறவைத்து, மேலே சொன்னபடி மஸாலாசெய்து அதில் பாதியைப் புளியில் கலந்து அதை கத்திரிப் பிஞ்சில் நிரப்பி வேகவைத்து வெந்த பிறகு ஆறியிருக்கும் சாதத்தில் கொட்டி, மறுபாதி மஸாலாவும் போட்டுக் கிளறி, உடனே ஐந்து பலம் நெய்யை அந்த சாதத்தில் ஊற்றிக்கிளறிப் பிறகு தணலின்மேல் ஐந்து நிமிஷம் வைத்தெடுத்து, எலுமிச்சம்பழம் பிழிந்து சாப்பிடவேண்டியது.

---

**கவர்னர் சுற்றுப் ப்ரயாணம்**.—நமது கவர்னர் பிப்ரவரி மாதம் 16-ந்தேதி சென்னையினின்றும் புறப்பட்டு, கடலூர், சிதம்பரம்: நெல்லிக்குப்பம், பாலூர், திருவண்ணாமலை, வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர், ஆறுகாடு முதலிய விடங்களைச் சுற்றிப்பார்த்து விட்டு பிப்ரவரி மாதம் 27-ந்தேதி சென்னைக்கு வந்து சேர்வார்,



## அதிமதுரம்

அமெரிக்காவிலுள்ள தென் இல்லிநாயிஸ் மாகாணத்தில் ஒரு கோர்ட் ஷெரிப் ஜூரிகளை ஒரு விடுதிக்கழைத்துக்கொண்டுபோய் வயிறுநிறையச் சாப்பாடு போட்டுக் கோர்ட்டுக் கனுப்பினர். அதனால் அவர்கள் விசாரணையைக் கவனியாது நித்திரை செய்தனர். அவர்களனைவரும் விழித்தபின், ஜட்ஜி இஷ் ஷெரிப்பைநோக்கி, 'இவ்வாறு ஒழுங்கீனங்கள் நடப்பதை நான் பொறுக்கமாட்டேன். அடுத்தமுறை நீர் ஜூரிகளைத் தெரிந்தெடுக்கும்பொழுது இவ்வாறன்றி, நீதியில் ஒரே கண்ணு (நோக்கமு) டையவர்களை நியமிக்க வேண்டும்' என்று கூறினர். அவ்வாறே அடுத்தமுறை ஜூரிஸ்தானத்தி லிருந்தவர்களனைவரும் ஒரே கண்ணுடையவர்களா யிருந்தனர்! அந்த ஷெரிப் ஜட்ஜியின் அபிப்பிராயத்தை யுணராது ஒற்றைக்கண்ணரையே ஜூரிகளாக நியமித்தனர்.

***

திருக்கைலாசமென்பது பூலோகத்தில் உள்ளதொன்றன்று என்றும் அது ஒரு Nebulous mountain என்றும் பலர் சொல்லுகிறார்கள். அது பூலோகத்திலுள்ள ஒரு மலை யென்பதே நிச்சயம். தென்மதுரை, வடமதுரை என்றாற்போல, திருக்காளத்தி, தென்கைலை எனப்படுவதால், வடகைலையும் பூமியிலேயே இருத்தல்வேண்டும். கந்தபுராணத்து மணம்பேசுபடலம், திருமணப்படலம் வழிநடைப்படலம். முதலிய படல சரித்திரங்களாலும் காளிதாஸன் இயற்றிய குமார சம்பவம் என்னும் நூலாலும் அது இமயமலைக்கு வடபாரிசத்தில் இருக்கின்றதென்று துணியப்படுகின்றது. அன்றியும் அகத்தியமுனிவர் திருக்கைலாசத்தினின்று பொதியமலைக்கு வந்தனரென்னும் சரித்திரத்தாலும், அருச்சுனன் கைலாசத்துக்குப் போனன் என்னும் பாரதக் கதையாலும் திருமூலரென்னும் சிவயோகியார் திருக்கைலாசத்தினின்றும் தெற்கே பொதியமலைக்கு அகத்தியரைக் காணவேண்டி வந்தாரென்னும் பெரியபுராணக்கதையாலும், சத்தியஞான தரிசனிகளுடைய மாணாக்கரும் மெய்கண்ட தேவருடைய குருவுமாகிய பரஞ்சோதிமுனிவர் கைலாசத்தினின்று வந்தாரென்னும் கதையாலும், சுந்தரமூர்த்தி நாயனார் கைலாசத்துக்குப்போன கதையாலும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்காளத்தியிலிருந்து கைலாசத்துக்குத் தேவார திருப்பதிகம்பாடிய திறத்தினாலும் நான் சொல்வதே உண்மையாகும். திருநாவுக்கரசுநாயனார் திருக்கைலாசத்தை தரிசிக்க விரும்பிக் காசிக்கு அப்பாலுள்ள தேசம்வரையும் போனரென்னும் சரித்திரமொன்றே இதற்குப் போதிய சான்றாகும்.Dr.Sven Heden என்னும் ஐரோப்பியரொருவர் போன வருஷத்தில் தாம இத் திருக்கைலாச மலைக்குப்போய் அதனை வலஞ் சூழ்ந்து வந்ததாகச் சொல்லியிருக்கிறார்.

வைசியமித்திரன்.

***

மிஸ்டர் க்ளின் பார்லோ என்பவருடைய "கைத்தொழில் இந்தியா' என்னும் இங்கிலீஷ் புஸ்தகத்திலிருந்து அடியிற்கண்ட வாக்கியங்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன:—

"நாற்காலியில் சுகமாய் உட்கார்ந்திருக்கும் இந்திய ஜெண்டில் மென் (கனவான்) தன்னுடைய அறையை சுற்றிப்பார்த்து அதின் நிலைமையை நன்றாய்க் கவனிக்கவேண்டும். அங்கிருக்கும் சாமான்கள் ஒவ்வொன்றின் பேரிலும் வர்த்தக விலாசம் போட்டிருக்கும். தன் பாகத்திலிருக்கும் விளக்கு ஜெர்மனியில் செய்யப்பட்டது, அதன் சிம்ணி ஆஸ்டிரியாவில் செய்யப்பட்டது. எண்ணெய் ருஷியாவில் உண்டானது, விளக்கேற்றும் தீக்குச்சி ஸ்வீடன் அல்லது ஜப்பானில் செய்யப்பட்டது, பீரோவின் மேலிருக்கும் கடியாரம் அமெரிக்காவில் செய்யப்பட்டது ; ஜேபிலிருக்கும் கைக்கடியாரம் ஜினீவாவில் செய்யப்பட்டது. புட்டியிலிருக்கும் மசி லண்டனில் செய்யப்பட்டது. பேனு பர்மிங்ஹாமில் செய்யப்பட்டது. பென்சில் பவேரியாவில் செய்யப்பட்டது ; தன்னுடைய சட்டையின் துணி யார்க்ஷயரில் செய்யப்பட்டது ; காலிலிருக்கும் மேஜோடு ஜெர்மனியில் செய்யப்பட்டது ; தன்னுடை மனைவி ரவிக்கைகத்தரிக்கும் கத்தரிக்கோல்ஷெப்பீல்டில் செய்யப்பட்டது ; ரவிக்கைத் துணியும் தைக்கும் நூலும் மான்செஸ்டரில் செய்யப்பட்டவை ; ஊசி பர்மிங்ஹாமில் செய்யப்பட்டது ; ஜாகெட்டுக்கு வைத்துத் தைத்திருக்கும் பட்டுநாடா பிரான்சில் செய்யப்பட்டது ; புருஷன் கடித்துத் தின்னும் பிஸ்கோத் ரீடிங்கரில் செய்யப்பட்டது ; அதை வைத்துக்கொண்டு தின்னும் தட்டு ஸ்டாபோர்ட்ஷயரில் செய்யப்பட்டது ; கிட்ட இருக்கும் சோடாவாடர் டம்ளர் ஆஸ்டரியாவில் செய்யப்பட்டது. சுவரில் மாட்டியிருக்கும் படங்கள் ஜெர்மனியில் செய்யப்பட்டன. அவைகளின் சட்டங்களுக்கு அடித்திருக்கும் ஆணிகள் பர்மிங்ஹாமில் செய்யப்பட்டன.

***

காட்டேரி யென்பது காடு வரி எனப் பிரிபடும். அது காடேறியென் றிருக்கவேண்டும். அது வழக்கத்தில் காட்டேரியென வந்திருக்கின்றது. இதன் பொருளறியாது சில பாமரஜனங்கள் காட்டேரி யென்பதை ஒரு துர்த்தேவதையென்று எண்ணித் தொழுகிறார்கள். அந்தோ! அவர்கள் இதையேன் கும்பிடவேண்டுமென்று சிலர் கேட்கத் துணிந்தால், எங்கள் முன்னோர் வழக்கமெனவும், எங்களப்பன் கும்பிட்டான், யானும் கும்பிடுகிறேன், ஆதலால் எங்களுக்கொன்றுந் தெரியாது, நீங்களும் இப்படி உசாவுவது சரியன்று எனவும் சொல்லிவிடுகிறார்கள். இப்படியிருக்கின்ற உலகத்தார் என்றைக்கு உண்மையிலை இன்னதென்று தெளிவார்களோ?

முன்பிருந்த மஹரிஷிகள் ஏற்படுத்திய கர்ம அனுட்டானம் யாதெனின்: தஸரதர் புதல்வனுகிய ஸ்ரீராமபிரானுடைய பத்தினி சீதாபிராட்டியார் குசனைச் சூல்கொண்டிருந்த காலத்தில் இளையபெருமாள் அவரை வனத்தில் விட்டுச் சென்ற பிறகு அவ்வனத்தின்கண் வாசஞ்செய்துள்ள வான்மீகரிஷி அவரை ஸ்ரீராமரு

டைய பத்தினியென் றறிந்து தமது ஆசிரமத்தில் இருத்திச் சகல உபசாரங்களும் அப்பத்தினிக்கு இயற்றினர். பிறகு அம்முனிபுங்கவர் சிலநாட்கழித்து, அவ்வனத்தின்கண் அனேக முனிக்குழாங்கள் இருந்தமை பற்றி அவ்விடமேகி இவ்வம்மணிக்கும் அக்குழவிக்கும் ஆசீர்வாதஞ் செய்துவைக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டவராய், காடு-வனத்தை, ஏறி-சிலதூரஞ்சென்று, அந்த முனிக்குழாங்களைக்கொண்டு அக்குழவிக்குந் தாய்க்கும் யாவராலும் யாதொரு தீங்கும் வாராதிருக்கும்பொருட்டு ஆசீர்வாதம் செய்வித்தனர். இவ்வம்மணி காடுயேறி முனிக்குழாங்களைத் தரிசித்தது காட்டேறி முனீஸ்வரனைப் பாடமாகி விட்டதல்லது வேறன்று. அது பண்டம் ஒருபக்கம், பழம் ஒருபக்கமென்னும் பழமொழிக்கொப்பாக உலக வழக்கத்தில் முனிபுருஷன் எனவும், காட்டேறி பெண்சாதி யெனவும், வீணே உலகவழக்கில் பொருட்படுத்திக் கொண்டார்கள்.

நம் முன்னோர்கள் பாணிக்கிரஹணமானபிறகு மனையாட்டி சூல்கொண்டிருக்கும் நாளில் சீமந்த மஹோற்சவம் செய்யவேண்டுமென்னும் மங்கல வழக்கத்தை அனுசரித்து வந்தார்கள். பிண்டத்திற்குந் தாய்க்கும் நம் பெரியாரைக்கொண்டு ஆசீர்வதித்தால் யாதொரு விக்கினமுமின்றிப் பிண்டம் பிரசவமாகுமென எண்ணங்கொண்டவர்களாய் அவ்வழக்கத்தை இக்காலத்திலும் அனுசரித்துவருகின்றனர்.

இங்குச் சீதாபிராட்டியாருக்கு முனீஸ்வரர்கள் கிடைத்ததுபோல இவர்களுக்குக் கிடைக்கப்பெறுமையினால் கனவான்களும் தனவான்களும் வந்து சேர்ந்து இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் வீதம் மொய்ப்பணமென்று ஆசீர்வாதஞ் செய்கிறார்கள். இவ்வாசீர்வாதத்தினால் பணப்பிரயோசனமேயன்றி வேறு பிரயோஜனமில்லை. (லோகோபகாரி.)

---

**விதவா விவாகம்.**—கிக்கரந்தராபாத்தில் வக்கீலும், அவ்வூர் ஆரிய ஸமாஜத்தின் பிரஸிடெண்டுமான மிஸ்டர் B. கிருஷ்ணராவ் B. A. B. L. அவர்கள் ஒரு பிராம்மண கைம்பெண்ணை விவாகஞ் செய்துகொண்டார். அந்த விவாக காரியங்கள் அனைத்தும் ஸ்வாமி தயாநந்த சரஸ்வதியின் ஸம்ஸ்கார விதியின்படி நாகப்பூரில் நடததப்பட்டது.

## சண்டையைச் சார்ந்தவை

கெய்ஸர் என்பது ஜெர்மன் சக்ரவர்த்திகளுக்கும் ஸார் என்பது ருஷிய சக்ரவர்த்திகளுக்குரிய பொதுப்பட்டப்பெயர்களாகும்.

*
* *

கடல் விமானங்கள், என்பவை ஆகாய விமானங்களின் ஒருவகை. ஒரு சமயம் ஆகாயத்திலிருந்து கீழ் வீழ்ந்து விட்டாலும், மிதக்கும்படி செய்யப்பட்டிருக்கும்.

*
* *

தமக்கு ஆபத்துண்டாயினும் அதனை அலட்சியஞ் செய்விக்கக் கூடியதும், ஒரு விதமான மயக்கைத்தரக் கூடியதுமான ஈதர் என்னும் ஒருவகைப் பானத்தை ஜெர்மன் வீரர்கள் போர்முகத்திற்குப் போவதற்கு முன், அவர்களுக்கு அதிகாரிகள் குடிக்கக்கொடுக்கின்றனராம்.

*
* *

துருக்கியின் யுத்தமந்திரி அன்வர்பாட்சா. துருக்கி நடுநிலைமைக்கு விரோதமாக ஜெர்மன் யுத்தக் கப்பல்களுக்கு இடங்கொடுத்ததற்கும், பிறகு ப்ரிட்டிஷாருக்கு விரோதமான காரியங்களைச் செய்து போரைத்தேடிக் கொண்டதற்கும் அவரே காரணம் என்பார்கள்.

*
* *

ஐரோப்பாத் துருக்கில் 61-லட்சம் ஜனங்களும் ஆசியா துருக்கியில் 175-லட்சம் ஜனங்களுமிருக்கின்றனர். ஆசியாத் துருக்கி ஆறுலட்சத்து எண்பதினாயிரம் சதுர மைல் விஸ்தீரணமுடையதாம். ஐரோப்பாத் துருக்கியின் பிரதான நகரமாகிய கான்ஸ்டாண்டிநோபிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வசிக்கும் ஜனங்களின் தொகை சுமார் 12½-லட்சமாம்.

*
* *

லண்டன் டெயிலிமெயில் பத்திரிகையின் நிருபரொருவர் ஒரு ஜெர்மன் பாரிஸ்டரிடம் பேசிய பொழுது "ஜெர்மன் ராஜ்யம் பலவீனமடைந்து ஒரு க்ஷத்ரிய ராஜ்யமாக விருக்கும் நிலைமையற்றதாய் இது காறும் அடைந்திருந்த பெருமையை யிழந்துவிடின், நானும் எனது மக்களும் போர்களத்தில் மடிந்து விடுவோம்" என்று ஜெர்மன் சக்கரவர்த்தி ஸபதங் கூறியிருக்கிறார் என்று தமது நண்பரொருவர் தெரிவித்ததாகச் சொன்னார்.

*
* *

பிரிட்டிஷாருக்கு 10-ஆயிரத்து 123 வியாபாரக் கப்பல்களிருக்கின்றன. அவற்றுள் 9-ஆயிரத்து 928 கப்பல்கள் இப்போது வியாபாரத்தின் பொருட்டுச் சாமான்களுடன் கடலில் சென்று கொண்டிருக்கின்றன; ஜெர்மனியாரோ 2 ஆயிரத்து 90-வியாபாரக்கப்பல்களிருக்கின்றன; அவற்றுள் 10-கப்பல்களே இப்போது கடலில் சென்றுகொண்டிருக்கின்றனவென்று தெரிகின்றது.



ஐரோப்பாவிலுள்ள ராஜாங்கங்களுக்குரிய ஆகாயப் படையின் விவரம் அடியில் வருமாறு.

| | ஆகாயவிமானம். | ஆகாயக்கப்பல். |
|---|---|---|
| பிரான்ஸ் | 750 | 21 |
| ஜெர்மனி | 750 | 45 |
| இங்கிலாந்து | 160 | 5 |
| ருஷியா | 380 | 5 |
| ஆஸ்ட்ரியா | 120 | 6 |
| இத்தலி | 102 | 8 |

*
* *

லண்டன் மாநகரத்தின் தென்பாகத்தேயுள்ள கம்பெனிகளிலும், மற்றுள்ள கடைகளிலும் கூலிக்குச் சில்லரைவேலை செய்யும் பையன்கள் கிடைப்பது அரிதாய்விட்டது. ஏனென்றால், அங்குள்ள கவர்ன்மெண்ட் யுத்த ஆயுதச்சாலையில் வேலைசெய்வதற்கு ஏராளமான பையன்கள் அமர்ந்துவிட்டார்கள். அச்சாலையில் இப்பொழுது தினந்தோறும் சுமார் 6 ஆயிரம் பையன்களுக்கு அதிகமாகவே வேலை செய்வதாகத் தெரிகிறது.

*
* *

பிரான்சு தேசத்தில் எபிரே யென்னு மூரில் நடந்த சண்டையில் ஜெர்மனியர் 50000 பெட்டி ஷம்பென் என்னும் சாராயத்தை வாங்கி யுண்டதோடு 175000 பிராங்கு நாணயத்தையும் யுத்த அபராதமாக அவ்வூராரிடத்தில் வாங்கினர். வாங்கிய அன்றிரவு நடந்த சண்டையில் ஜெர்மன் தளகர்த்தராயிருந்த அரசவம்சத்தினரொருவர்க்குக் குண்டுக்காயம்பட்டது. ஜெர்மானியர் அந்தவூர் ஸர்ஜனையழைத்து, அந்தக் குண்டை யெடுத்துவிட்டால் கேட்டது தருகின்றோமென்று கூறினர். அந்த ஸர்ஜன் தம்மூரார் செலுத்திய அபராதத்தொகையான 175000 பிராங்கு கேட்டனர். அவர் சிகிச்சை செய்தபிறகு அவர் கேட்டவாறே ஜெர்மன் நாணயம் கொடுக்கப்பட்டதாம்.

*
* *

**திருவல்லிக்கேணி சமஸ்கிருத ஸ்கூல்.**—இது தீட்சித கமலாம்பாளாலும் அவருடைய பர்த்தாவாலும் நடத்தப்பட்டு வருகிறதென்று முன்னமே தெரிவித்திருக்கிறோம். இதில் 60 பெண்கள் படித்து வருகிறார்கள். இவர்களுக்குக் காலை 7-மணி முதல் 8-மணிவரையிலும் மாலை 2-மணி முதல் 4-மணி வரையிலும் ஸம்ஸ்கிருத ரீடர், தேவதாஸ்தவ மஞ்சரி, சப்தம், ராமோ தந்தம், ரகுவம்ஸம், சம்பு அமரம், கதாகுசும மஞ்சரி, தாது ரூபாவளி முதலிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. 7 முதல் 20 வரை வயதுள்ள பெண்கள் வாசித்து வருகிறார்கள்.

*
* *

ஆசியாவில் ஜெர்மனியருக்குரிய பிரதேசமான ஸிங்டோவை ஜப்பானியர் சண்டைசெய்து பிடித்துவிட்டது ஸம்பந்தமாக ஜெர்மன் சக்ரவர்த்திக்கு மிகுந்த கோபமுண்டாய்—"சிற்பசாஸ்திரம் முதல் சேவகம் வரை யெல்லாம் ஜெர்மனியரிடமிருந்து படித்துக்கொண்டு இப்பொழுது சமயம் பார்த்து நன்றியை மறந்து சிறிய ஸிங்டோவைப் பிடித்துக்கொண்ட மஞ்சள் திருடர்களை நான் ஒருகாலும் மறக்கமாட்டேன் கூடியசீக்கிரம் ஜப்பான் தேசத்தை நசுக்கிவிடுவே" னென்று சொன்னாரென்று நியூயார்க் பத்திரிகைகளும் ஜப்பான் பத்ரிகைகளும் கூறுகின்றன.

*
* *

அமெரிக்காவில் பிரசித்திபெற்றுள்ள மின்சார நிபுணரான நிகோலா டெஸ்லா என்பவரிடத்து ஒரு பத்திரிகாசிரியர் பிரான்சியரின் யுத்தரகசியத்தைப் பற்றி விசாரித்தபோது அவர்பின் வருமாறு கூறினர்.—

1-வது மின்சாரத்தால் மருந்துச்சாலை முதலியவற்றை வெடிக்கச்செய்தல்; அஃது இன்னும் முற்றுப் பெறவில்லை. 2-வது அணுப்பிரமாணமாயுள்ள குண்டுகள். இவற்றிற்கு வேண்டியசக்திகொடுப்பது இன்னும் சித்தமாகவில்லை. நானதுபற்றிப் பலவருஷங்களாகமுயற்சிசெய்துவருகின்றேன். அவ்வேலைமுற்றுப் பெறபலவருஷங்களாம். அது முற்றுப்பெறுமாயின், நியூயார்க்போன்றுள்ள பட்டணத்தை ஓரேகுண்டா லழித்துவிடலாம். 3-வது ஓர் எலக்டிரோ மெக்கானிகல்கருவி. இதனை யுபயோகிப்பது இப்போதுமுடியாது 4-வது புகைக்கூண்டு. சிலதினங்கட்கு முன் டார்பிடெட் என்னும் ஒரு வெடிகுண்டைப் பரீட்சை செய்து பார்த்தபோது, அது வெடித்தமாத்திரத்தில் அதன் புகைக்கருகே யிருந்தவரிறந்துபோயினர்.

*
* *

பிரான்ஸில் போர் முனையிலுள்ள ஒரு ஜெர்மன் ஸோல்ஜர், நார்வே தேசத்திலுள்ள தன் நண்பருக்கு பின்வருமாறு கடிதம் எழுதியிருக்கிறார்.—

பத்துநாட்களாக நாங்கள் பிரெஞ்சு சேனையுடன் வெகு உக்கிரமாய்ப் போர்புரிந்தோம். இருபக்கத்துச் சேனைக்கும் நேர்ந்த சேதங்களைச் சொல்லிமுடியாது. அந்தோ! அந்த ரணகளத்தின் கோரத்தைச் சொல்வதென்றால் என்னுடலும் மெய்யும் நடுங்குகின்றன. போர்முனையில் எங்குபார்த்தாலும், கால்வேறு கைவேறு தலைவேறாய்ப் போன சவங்களும்; தொண்டைக்குழியில் உயிர் துடித்துக்கொண்டிருக்கும் ஸோல்ஜர்களின் அழுகுரலும், பீரங்கிப் பிரயோகத்தின் சத்தத்தைக் கேட்டுப் பயந்து இங்குமங்கும் ஓடும் குதிரைகளின் வெறியும், திடீரெனக் குண்டுகள் வந்துவீழ அவைகளினால் உடனே மனிதர்கள் மாண்டுபோய் கீழேவிழும் குரூரமான காட்சியும், மூலைக்குமூலை சவங்கள் குவிந்துகிடப்பதும், அங்கு மிங்கும் ரத்தவெள்ளம் சிந்தி பூமி முழுவதும் ஓரே சிவப்பாய் இருப்பதும், பார்ப்பவர் மனதைக் கலங்கச்செய்யும். போர்மு

னையைப் பார்த்தால் அங்கு நின்று போர்புரியும் மனிதர்களை மனிதவகுப்பில் சேர்த்து எண்ணக்கூடாது. அவர்களை மிருகங்கள் அல்லது அசுரர்கள் என்றே சொல்லவேண்டும். இக்கோரசம்பவத்தை நான் உயிர் துறக்குமளவும் நிச்சயமாய் மறவேன்.

*
* *

யுத்த களத்திலிருந்து வருகிற லெட்டர்களில் அனேகமாய் எல்லாவற்றிலும் "ஆர்மிபேஸ் போஸ்டாபீஸ்" என்ற முகர் போட்டு வருகின்றனவாம். இது யுத்தம் நடகிற ஸ்தலத்துக்கு அதிக சமீபத்திலிருக்கிறது. அவ்விடத்திருந்தனுப்புகிற எல்லா லெட்டர்களும் அதன் மூலமாகவே அனுப்பப்பட வேண்டும். அவைகள் அனைத்தும் தங்கள் தலைவர்கள் பார்வையின் மீது தான் போஸ்டு செய்யப்பட்டதென்பதற்கு அறிகுறியாக சிகப்பு முத்திரை யொன்று போடப்பட்டிருக்கும். யுத்தம் நடை பெற்று இருதாப்பாரும் பீரங்கிப் பிரயோகம் செய்துக் கொண்டிருக்கையிலேயே ஒவ்வோர் டிவிஷனுக்கும் பிரத்தியேகமாக ஒரு ஆபீஸ், ஒரு கூடாரம், மடிப்பு மேஜை தபால் பொட்டி சகிதம் கூடப்போயிருந்து தங்கள் வேலைகளைச்செய்து கொண்டிருக்கும். சாதாரண போஸ்டாபீஸ்களைப் போலவே தபால் கொடுக்கல் வாங்கல், பார்சல் ஸ்டாம்பு விற்பனைக்கு போஸ்டல் ஆர்டர்கள் வகையரு எல்லாவேலைகளும் நடத்தப்படுகின்றன. உத்தியோக முறைக்கு மட்டும் என்பதாக தந்திபோக்கு வரத்து ஏற்படுத்தியிருந்த போதிலும் சில சமயங்களில் பொது சம்பந்தமான தந்திகளும் கொடுத்து வாங்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் வருகிற லெட்டர்களை பட்டாளத்திலிருக்கிற ஆர்டர்லிவசம் கொடுத்து டெலிவரிக்கி ஏற்பாடு செய்யப்படுகிறது. லெட்டர்களைப் பார்த்து ஆர்டர்லிவசம் ஒப்புவிக்கவேண்டியது. மில்டேரி போஸ்டாபீஸ்காரர்களுடைய வேலையாம்.

*
* *

கல்கத்தா அமிர்த பஸார் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:

இந்த யுத்தத்தால் நேரிடும் அபாரமான பொருட்செலவு மனிதரின் கணக்கு வழக்குகளின் வரம்புகளைக் கடந்து விரைவில் கதைரூபமாக முடியுமென்று நாம் சில தினங்களுக்குமுன்கூறினோம். இப்பொழுது இங்கிலாந்துக்கேற்படும் செலவைமாத்திரம கவனிப்போம். இங்கிலாந்தின் பிரதம மந்திரியார் (மிஸ்டர் ஆஸ்க்வித்) சிலதினங்களுக்குமுன் மதிப்பிட்டவாறு, இங்கிலாந்து யுத்தத்திற்காகத் தினந்தோறும் செலவிடும் பணம் பத்துலட்சம் பவுண்டு அல்லது ஒன்றரைக்கோடி ரூபாயாகின்றது. இந்த யுத்தம் மிகவும் குறைந்தபட்சம் ஒருவருஷம் நடப்பதாக வைத்துக்கொள்வோம். அவ்வாறானல் இந்த யுத்தம் முடிவதற்குள் 365 ஒன்றரைக்கோடி ரூபாய் அல்லது சுமார் 550 கோடி ரூபாய் செலவழிந்துவிடும்.

இந்த 550 கோடி ரூபாய்களையும் சமமாசப்பரப்பினால் அவை 2 சதுரமைலுக்கு மேற்பட்ட பூமிமுழுமையும் வெள்ளித்தகடு பரப்பியதுபோலாகும். இந்த 550 கோடி ரூபாய்களால் நூறடி அகலமுள்ளதாய் 100 மைல் நீளமுள்ள வெள்ளி ரஸ்தாப்போட்டுவிடலாம். இந்த 550 கோடி ரூபாய்களையும் ஒன்றாக அடுக்கிவைத்தால், அவை 7200 மயில் உயரம் வளரும். அதன்மேலேறி ஒருவன் ஒருகால் செவ்வாய் மண்டலத்தையும் தொட்டுவிடலாம்! இந்த 550 கோடி ரூபாய்களையும் ஒரே ஒழுங்கில்வைத்தால், அவை ஒரு லட்சத்துப் பதினையாயிரம் மைல் நீளமாம்; அதனை ஆசியாவின் விஸ்தீரணத்திற் பாதியான 90 லட்சம் சதுரமயிலில் சுற்றிவைக்கலாம்; அதனை ஐரோப்பாவின் விஸ்தீரணத்தில் இருமடங்குள்ள விஸ்தீர்ணத்தில் சுற்றிவைக்கலாம்; இந்தியா பர்மா இரண்டும் அடங்கியுள்ள விஸ்தீர்ணத்தைவிட எட்டுமடங்கதிகமான விஸ்தீரணத்தில் சுற்றிவைக்கலாம்!

*
* *

இன்னொரு வகையில் இதனைக் கணக்கிடுவோம். தினம் ஒன்றரைக்கோடி ரூபாய் செலவென்றால் ஒரு மணி நேரத்திற்கு $6\frac{1}{2}$-லட்ச ரூபாயாகிறது. அஃதாவது நமது இந்தியாவிலுள்ள (ராஜப்பிரதிநிதி) கவர்னர் ஜெனராலும் (பம்பாய், வங்காளம், சென்னை) மூன்று மாகாணங்களின் கவர்னர்களும் ஒரு வருஷ முழுமையும் வாங்குகிற சம்பளங்களைவிட அதிகமான தொகையைப் பிரிட்டிஷார் ஒருமணி நேரத்தில் இந்த யுத்ததிற்குச் செலவிடுகின்றனர். ஒரு நிமிஷத்துக்கேற்படும் செலவு நமது கவர்னரின் ஒரு வருஷசம்பளமான பதினாயிரரூபாய்க்கு மேலாகின்றது. ஒரு விநாடிக்கேற்படும் செலவோ (சுமார் 160 ரூபாய்) நமது நாட்டில் பீ. ஏ. பாஸ் செய்த ஒருவன் கீழ்தா வித்தியா இலாகாவில் 15-வருஷகாலம் கஷ்டமடைந்த பின் பெறக்கூடிய ஒரு மாதச்சம்பளத்தைவிட மேலாகின்றது.

*
* *

மற்றொரு விதமாகக் கணக்குப் பார்ப்போம். இந்தப் பிரமாண்டமான தொகையை-550 கோடி-ரூபாயை தொகுதியான வட்டிக்குப் போட்டு நாலு வட்டியில் பத்து வருஷகாலம் விட்டு வைத்திருந்தால் அந்த வட்டித்தொகையே 250-கோடி ரூபாயாய்விடும்; வட்டியும் முதலும் சேர்ந்து பத்தாவது வருடத்தில் சுமார் 800-கோடி ரூபாயாக வளர்ந்து விடும்! இந்த 800-கோடி ரூபாய் நமது பிரிட்டிஷ் இந்தியகவர்மெண்டின் வருஷாந்தர மொத்த வருமானத்தைவிட எட்டு மடங்கு பெரியதாயிருக்கிறது, இந்தப் பிரமாண்டமான பணத்தால் உலகத்திலுள்ளவர்கள் படும் எத்தனை கஷ்டங்களைத்தான் நிவர்த்திக்க முடியாது! நாம் நமது இந்தியாவை மட்டும் கவனிப்போம். தலைக்கு எட்டணாவீதம் வைத்துக்கொண்டால், இந்தியாவிலுள்ள 300-கோடி ஜனங்களுக்கும் எட்டு நாள்களுக்கு அறுசுவையுடன் கூடிய இனிய சாப்பாடு போடலாம்! இந்தத் தொகையில் எட்டில் ஒரு பகுதியைக் கொண்டு (8 கோடி ரூபாய்) இந்தியாவிலுள்ள முக்யமான ஒரு லட்சம் கிராமங்களில் கிணறு ஒன்றுக்கு சுமார் 80 -ரூபாய் வீதம் அழகிய கிணறுகளும் தெப்பக்குளங்களும வெட்டி விடலாம்! அதனால், இந்தியா முழுமைக்கும் தண்ணீர்க் கஷ்டம் ஒருவாறு நீங்கியதாகும். பாக்கியுள்ள (720 கோடி ரூபாயை) தொகையைக் கொண்டு நமது தேகத்திற்குச் சுகாதாரம், வியவசாயம், கைத்தொழில், கல்வி முதலியவற்றின் அபிவிர்திக்காக எத்தனை ஸ்திரமான, உறுதியான நன்மைகளைத்தான் செய்வது கூடாது?



---

**கண்ணைக்கெடுத்த வைத்தியன்.**—பம்பாயில் குலாம் ஹைதர் என்று பெயர்வைத்துக்கொண்ட ஹகீம் என்பவன் கண்ணோபாயிருந்த ஒருமகம்மதிய ஸ்திரீயிடம் 30 ரூபாய் கொடுத்தால் இரண்டுமணிநேரத்தில் உன்கண்ணைச் சரிப்படுததிவிடுவேன் என்று கூறினன். அவள் அதற்கிணங்கினள்; உடனே ஷை புத்திசாலியான கண் வைத்தியன் ஒரு கத்திரியினல் கண்ணில் ரணசிகிச்சைசெய்து சாதாரணமான ஊசி நூலினல் தைத்துவிட்டான். அதனல் ஷை ஸ்திரீயின் கண் பாழாயிற்று. பின் ஷை ஸ்திரீ தன் கண்ணைக்கெடுத்த வைத்யன்மீது கேஸ் கொண்டுவந்தாள். அவள் கண்ணைச்சோதித்த ஓர் உண்மையான கண் வைத்தியர் ஷை போலிக் கண்வைத்தியன் விளக்குத்திரிவெட்டுவதற்கும் பயன்படாத கத்திரியாலும் வஸ்திரந்தைக்கும் ஊசிநூலாலும் கண்வைத்தியஞ் செய்திருக்கிறனென்று கோர்ட்டில் கூறினர். அதனைப் போலிவைத்தியன் ஒத்துக்கொண்டான். கேஸை விசாரித்த பம்பாய் இரண்டாவது பிரஸிடென்ஸி மாஜிஸ்ரேட் ஷை வைத்தியன் நல்ல கண்ணைக்கெடுத்துவிட்டானென்றும் ஏழை ஜனங்களுக்கு இன்னும் இதுபோன்ற தீங்கு விளைக்காவாறு கடினதண்டனை விதிக்கவேண்டுமென்றுங்கூறி, அவனுக்கு இரண்டு மாதங் கடுங்காவல் தண்டனையும் 150 ரூபாய் அபராதமும் விதித்தார்.

*
* *

**ஒரு அபூர்வ யந்திரம்.**—இத்தாலிய தேசத்திலுள்ள புரொபஸர் டொமினிகோ அர்ஜென்டேரி என்னுமொரு பாதிரியார் 1200 மைல் தூரமளவும் நடக்கும் சமாச்சாரங்களை அறிதற்குரிய யந்திரமொன்றைத் கண்டு பிடித்திருக்கின்றார். இந்த யந்திரம் கடியாரம் போன்றிருக்கிறதாம். இதனைச் சட்டைப்பையில் வைக்துக்கொள்ளலாம். இந்த யந்திரத்தை இத்தாலியாவின் பிரதான நகரமாகிய ரோமிலுள்ள பிரிட்டிஷ் பிரதிநிதி ஆபீசில் பலர்கூடி சோதனை செய்தனர். இது அந்நிய ஆபீசுகளில் நடக்கும் சமாச்சாரங்களையும் பாரிசிலுள்ள சண்டைக் கப்பல்களின் சமாச்சாரங்களையும் அறிவித்ததாம். இதனைப் பிரான்சியர், ஜப்பானியர், ருஷ்யர் முதலாயினோர் சோதனைசெய்து இது சரியாயிருக்கிறதென்று கூறினரென்று தெரிகின்றது.

*
* *

## யுத்தப்பதிகம்

பிறக்தர் ஸ்ரீ N. சிவக்கொழுந்து அவர்கள்

இயற்றியன

நேர்ந்த பெரும்போரில் கிட்ரேச் சேர்மனியைச்
சேர்ந்த பெருஞ்சேனை சென்றழியக்-கூர்ந்தபெரும்
வாள்கொண்ட நம்சேனை வாகைபெற வைங்கரனர்
தாள்கொண்டு நிற்பேன் சரண்.

சாந்தம் பொறுமை தயையொன்று மில்லாத
வேந்தனெனுங் கைசரது வீரரெலாம்—சோர்ந்து
மடிந்திடவு மாங்கிலரின் வாளுக் கிரையாய்
முடிந்திடவுஞ் செய்வாய் முதல்.

நீதி படைத்த நிருபருக்காத் தேவரெலாம்
கோதில் படைக்கலங்கள் கொண்டுமே—மேதினியில்
கிட்ரேஞ் செய்யு நிருபனது சேனைதனை
முட்டமுடி யாரோ முனிந்து.

நாவாய்ச் சங்காரிதமை நாட்டுவத நீதியெனத்
தேவாய்ப் பலவரசர் செப்பியதைப்—பாவிகைசர்
கேளாதே யஉனவையைக் கீழ்க்கடலில் நட்டியீது
கோளாகு மென்றே குறி.

வீரர் மிகுந்துறையும் வெல்சியநன் னாட்டிற்
போரை மிகக்கருதிப் போந்திடுமச்—சூரனிணிப்
பொன்ற அறுமுகவன் போர்க்களத்திற் றேன்றுனே
தன்றனிவேற் கையிற் றரித்து.

தேவதல மென்னுது தீவாய்க் கிரையாக்கும்
கோவைக் குமான் குறியாயோ—தாவு
மயின்மே லிவர்ந்து வளராங்கி லேபர்க்
குயிர்போ லுதவா யுவந்து.

பாலர் விருத்தரிவர் பாவையரென் றெண்ணுது
கோலமென் எவர்க்குந் துண்டுகளைச்—சாலவே
பெய்து கொடுமைசெய்யும் பேய்ச்சேமன் தன்தலையைக்
கொய்து முடிப்பார் குறித்து.

மன்னர் பலரால் வழக்கிணக்க மாய்முடிக்க
முன்னர்ப் பெரும்போரை மூட்டினன்—சொன்ன
துரியனிகர் நிருபன் சூதுவா தெல்லாம்
இரிய அருள்வா யினி.

ஊரார் பகைக்கின் உலகிற் கெடுவரென
ஆராய் வுடனே அறைந்ததனைத்—தேராதே
பல்லரசர் தம்மேற் படையெடுக்கு மன்னவன்செய்
அல்லல் துடைப்பாய் அறிந்து.

நீர்மேல் வெளிமேல் நிலமேல் எவரேனும்
போர்மேல் வருபவர்தாம் பொன்றவே—தார்மேல்
அணிந்த பிரானின் றருளாங்கி லர்க்குப்
பணிந்தே னினது பதம். [பெருங்

உள்ளபுத்தி யெல்லாங் கொண்டோடும் எம்டனென்ற
கள்ளப்போர்க் கப்பல் ஒன்றைக் கட்டியே—துள்ளித்
திரியு மவனோடு சேர்ந்த படையின்
றெரிய அருள்வாய் இறை.

## விசேஷ வர்த்தமானம்

**கோர்ட் வருமானம்.**—ஸிவில் கிரிமினல் கோர்ட்டு களினால் கவர்ன்மெண்டுக்கு 1913-ம் வருஷத்தில் கிடைத்த வரும்படி 9,773,327 ரூபாய், செலவு 7,197, 978; செலவு போக 2,575,349 ரூபா ய்மிகுந்திருக்கிறது.

*
* *

**பர்மா நெல் விளைவு**—இவ்வருஷத்தில் பர்மாவில் நெல்விளைவு குறைந்துபோமென்று தெரிகின்றது. இதற்குக் காரணம் நெல் விளையுங் காலத்தில் அளவு கடந்த மழை பெய்ய அதனால் 3,85,000 ஏக்கர் நிலம் உபயோகமில்லாது போனதேயாம்.

*
* *

**ஸ்திரீ இராணுவம்**—.1852-வது வருஷத்தில் சீனவில் நேர்ந்த பெருங்கலகத்தில் 5-லட்சம் ஸ்திரீகள் ஆயுதபாணிகளாக வந்து தமது தேசத்தைப் பாதுகாக்க முயன்றனராம். இவர்களுக்குத் தலைவர்கள் ஸ்திரீ உத்தியோகஸ்தர்களேயாம்.

*
* *

**நான்கு கண் குழந்தை.**—கல்கத்தாவிலுள்ள துல்ஜர் சந்தில் வசித்து வந்த ஒரு வண்ணார ஸ்திரீ சாதாரணமாக இரண்டு கண்களும் நெற்றியில் இரண்டு கண்களுடைய ஒரு குழந்தையைச் சென்ற வாரம் ஞாயிற்றுக்கிழமை யன்று பெற்றாள்; அக்குழந்தை அன்று மாலை யிறந்து போயிற்று.

*
* *

**ஜப்பானியர் உதாரம்.**—ஜப்பான் தேசத்தார் 25 லட்சம் பவுண்டுகொண்ட நிதியொன்று சேர்த்து, அதன் வட்டியைக்கொண்டு, தமது தேசத்தில் தேக சௌக்கியமின்றி வறுமையில் வருந்துவோருக்கு உதவி செய்யப் பிரயத்தனஞ் செய்துவருகின்றனர். இந்நிதிக்கு ஜப்பான் சக்கரவர்த்தியார் சொந்தப்பணத்திலிருந்து லட்சம் பவுண்டுவரையில் உதவிசெய்திருக்கின்றனர்; சாதாரணமானவர்கள் பெரும்பொருள் தந்திருக்கின்றனர்.

*
* *

**விக்கிரகங்கள்.**—வட இந்தியாவிலுள்ள கொராப்பூருக்கருகே புல்லடர்ந்த திடரொன்றில் நாலு அல்லது ஐந்து அங்குலம் உயர்ந்த ஒரு கல்லிருந்தது; புற்செதுக்குவோர் தங்கள் உழவாரத்தை அக்கல்லிற் றீட்டிக் கூராக்குவது வழக்கம். அந்தக் கல் பெரிதாயிருக்குமென்று நினைத்து அதைக் கட்டடத்திற்காகப் பெயர்த்தனர்; அது 5-அடி நீளமும் 2-அடி அகலமுமுள்ள ஒரு கருங்கல்லா யிருந்தது. அக்கல்லின்கீழ் அழகான பெரிய விஷ்ணுவின் திருவுருவொன்றிருந்தது. அதனைச்சூழ 24-சிறு விக்கிரகங்கள் இருந்தன. பல வூர்களிலிருந்து ஆயிரக் கணக்கான ஜனங்கள் வந்து அவ்விக்கிரகங்களைத் தரிசித்து வருகின்றனராம்.

**சென்னை ராஜதானி லாயர்கள்.**—1914-ம் வருஷத்திய சென்னை ராஜதானியில் லாயர்களின் தொகை முதலியவைகளின் ஜாப்தா பின் வருமாறு:—

| | |
|---|---|
| அட்வோகேட்டு வக்கீல்கள் | 129 |
| ஹைகோர்ட்டு வக்கீல்கள் | 1008 |
| அட்டார்னிகள் | 43 |
| முதல் கிரேட்டு பிளீடர்கள் | 1242 |
| இரண்டாவது கிரேட்டு பிளீடர்கள் | 1693 |
| மொத்தம். | 4115 |

*
* *

**அரிசி ஏற்றுமதி.**—1912-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து அடியிற் கண்ட தேசங்களுக்கு ஏற்றுமதியான அரிசியின் மதிப்புப் பின்வருமாறு:—

| | பவுன். |
|---|---|
| ஜெர்மெனி | 2500,000 |
| ஹாலண்டு | 1500,000 |
| ஆஸ்ட்ரியா | 1048,000 |
| யுனைடெட் கிங்கிடம் | 932,000 |
| பெல்ஜியம் | 298,984 |
| பிரான்ஸு | 66,030 |
| ஸ்வீடன் | 21,475 |

*
* *

**ஆயுதச் சட்டம்.**—சென்றமீ 17-ந்தேதி யன்று ஹைகோர்ட்டில் ஸ்வாரஸ்யமான தீர்ப்பு ஒன்று சொல்லப்பட்டது. லைசென்ஸ் பெற்றுக்கொள்ளாமல் மூன்று பட்டாக்கத்திகளை வைத்துக்கொண்டிருந்தது ஆயுதச் சட்டத்தின்படி குற்றமாகுமென்று மதனப்பள்ளி ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டு ஒரு முக்மதியரை தண்டித்தார். அந்தத்தண்டனை சரிதானா, என்று வட ஆற்காடு ஜில்லா ஸெஷன்ஸ் ஜட்ஜுக்கு சந்தேகமுண்டானதால், அவர் ஹைகோர்ட்டின் அபிப்பிராயத்தைக்கேட்டார். நெருப்பு ஆயுதங்கள் தவிர மற்ற ஆயுதங்களுக்கு ஆயுதச்சட்டம் பிரயோகமாகாதென்று மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்டு அபிப்பிராயப்பட்டு அந்த தண்டனையை மாற்றி விட்டார்.

*
* *

**குடியை விட்டாற் போதும்.**—வடஇந்தியாவிலுள்ள ஸயல்கோட்டில் ஒரு வியவகாரம் சில தினங்களுக்கு முன் முடிவாயிருக்கிறது. ஒரு கனவான் மற்றொருவனுக்கு 100-ரூபாய் கடன் கொடுத்திருந்தார். அவன் குறித்த காலத்தில் கடனைக் செலுத்தாமையினால் கோர்ட்டில் வியாஜ்யஞ் செய்தார். தீர்ப்புத்தினத்தன்று ஷை கனவான் தனது கடன் காரன் குடிக்கும் வழக்கத்தை நிறுத்தி விடுகிறேனென்று கோர்ட்டாரிடம் தெரிவித்தார். அதனைக்கேட்ட ஜட்ஜி அவ்வாறே தீர்மானஞ்செய்து ஒரு மாதம் வாயிதாக் கொடுத்து அவனது நடவடிக்கைகளைப் பார்த்துவருமாறு உத்தரவு செய்தாரென்று தெரிகின்றது.

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] 1915ஞ பிப்ரவரிமீ [சஞ்சிகை 5

OFFICE OF THE REGISTRAR ... 7 - ... 1915

### ஒளிவளர்விளக்கு

1915ஞ ஜனவரிமாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களுடைய எண்ணிக்கை 216.

*
* *

கோயமுத்தூர் வாசியாகிய ஸ்ரீ K குப்புசாமி ஆச்சாரியா ரவர்களுடைய குலாபிமானச் செயல்கள் கண்டு களிப்புறுகின்றோம். சபையாருடைய நோக்கங்களை முன்னேற்றுவிப்பதில் இவர் மேற்கொள்ளும் முயற்சிகளுக்காக இவருக்கு அநேக வந்தனங்கள் அளிக்கப்படுகின்றன.

*
* *

சென்னையில் விஸ்வகர்ம மடாலயமொன்று ஸ்தாபிப்பதற்காக, ஸ்ரீ கணிதால லோகநாத ஆச்சாரியாரவர்கள் செய்துவரும் பிரயத்தினங்களைப்பற்றி முன்னமே பிரஸ்தாபித்திருக்கின்றோம். மடாலயத்திற்கு வேண்டிய வசதிகளுடையதோர் விசாலமான கட்டடம் பெத்துநாய்க்கன்பேட்டையிற் கிடைத்திருப்பதாகவும், அதன் விலை சுமார் ரூ. 10,000 ஆகுமென்றும், அத்தொகையைச் சேகரித்துக் கொடுத்து வாங்குவதுசிதமென்று ஷையா ருழைத்து வருவதாகவும் அறிகிறோம். ஷை [illegible]ம் நமது சபைக்கும், பொதுஜனக் கூட்டங்களுக்கும், பாடசாலைகளுக்கும், யாத்திரைக்காரர்களுக்கும், சுபாசுபகாரியங்களுக்கும் மற்றும் பலவற்றிற்கும் பிரயோசனமாகும்.

*
* *

சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வர தர்மகைங்கரிய சபை உத்தியோகஸ்தர்களில் சபைத்தலைவரும் காரியதரிசியும் சட்டமுறைப்படி சென்றமாதத்தில் தெரிந்தெடுக்கப்பட வேண்டிவந்ததில், ஸ்ரீ சோமங்கலம் கந்தசாமியாச்சாரியாரே திரும்பவும் சபைத்தலைவர் ஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்டார். காரியதரிசியாயிருந்துவந்த ஸ்ரீகாயிரம்பேடு-திருவேங்கட ஆச்சாரியார் அந்த ஸ்தானத்திற்கு வேறு நியமனஞ் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவருக்குப் பதிலாய் ஸ்ரீநம்பாக்கம்-முத்தியாலய்ய ஆச்சாரியார் (ஸானிடரி இன்ஸ்பெக்டர்) நியமிக்கப்பட்டார். புதிதாய் நியமனம்பெற்ற காரியதரிசியார் சபையைப் பலவிதங்களிலுஞ் சீர்திருத்தித் தேவஸ்தான வருமானத்தைப் பெருக்கி அதைப் பலப்படுத்துமாறு, ஷை சபையின் நிர்வாகாதிகாரிகளும் சென்னைவாசிகளாயுள்ள விஸ்வகர்ம மகாஜனங்களும் உதவிபுரிவார்களென் றெதிர்பார்க்கிறோம்.

குப்பகோணம் ஸ்ரீ காளிகாபரமேஸ்வரி ஆலய பிரம்ம உற்சவம் 20 வருட காலமாய் நின்றிருந்ததை முன்னிட்டு, அவ்வூர் விஸ்வகுலாபிமான சபையார் புதுக்கோட்டை ஸ்ரீ A. அண்ணாமலை ஆச்சாரியா ரவர்களை வரவழைத்து அவருடைய அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் 25—1—15௳ முதல் 19—2—15௳ வரையில் நான்கு கூட்டங்களை நடத்தியதில், "அந்தந்த இடத்தில் அப்போதைக்கப்போது அந்தந்த டிவிஷன் மானேஜர்களால் அனுப்பின வரும்படியைவாங்கி அம்பிகை கைங்கரியத்தை நடத்தி பாக்கியை அந்தந்த மாசம் சபை மீடிங்கில் கணக்குடன் சபைக்கு அனுப்பிவைக்கும்படி" ஏற்பாடு செய்யப்பட்டது. பஞ்சாயத்தார் நியமிக்கப்பட்டார்கள். பிரம்ம உற்சவத்தை நடத்துவதென்று தீர்மானித்து உற்சவக்காரர்களைக் குறிப்பிடலாயிற்று.—இவ்விஷயங்களை ஷை சபையார் வெளியிட்டுள்ள 'பப்ளிக் ரோடீஸி'னாலறிந்து சந்தோஷிக்கிறோம்.

*
* *

தூத்துக்குடியில் விஸ்வகர்ம ஜாதீயகான்பரன்ஸ் ஒன்று நடத்துவதற்கு ஸ்ரீ. தூ. சு. கதிரேசன் ஆச்சாரியாரவர்கள் பிரயத்தினப்பட்டு வருவதாயறிந்து பெருமகிழ் சிறந்தோம். இந்நோக்கத்துடன் ஷை குலாபிமான சிரேஷ்டரா லெழுதப்பட்ட நிருபங்கள் நமது பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றன. தூத்துக்குடி விஸ்வகர்ம மகா ஜனங்கள் இம்முயற்சி கைகூடுமாறு ஒத்துழைப்பது அவர்கள் கடமையாகும். தூத்துக்குடியில் நமது ஜனத்தொகை அதிகமென்றும் அநேகர் நல்ல செல்வாக்குள்ளவர்களாயிருக்கிறார்களென்றுந் தெரிகிறபடியால், அங்கு ஒரு கான்பரன்ஸ் நடத்தல் சுலபசாத்தியமேயாகும். அவ்விதம் நடத்தப்படுங் கான்பரன்ஸ், மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி என்னுஞ் ஜில்லாக்களிலும் புதுக்கோட்டைச் சீமையிலும் ஜாதீயக்கிளர்ச்சியைப் பெரிதுமுண்டாக்கி நன்மை மிகப்பயத்தல் நிச்சயம்.

*
* *

சென்ற டிஸம்பர்மாதசஞ்சிகையில் வெளியான "நமது மடங்கள்" என்னும் வியாசத்தைப்பற்றி பலநண்பர்கள் நல்லபிப்பிராயந் தந்துவருகின்றார்கள். இவர்கள்பால் யாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நமது மடங்களில் முக்கியமான தொன்றாகிய போதலூர் வீரப்பிரம்மேந்திர மடத்தைப்பற்றிய சில விவரங்கள் கொண்ட வியாசமொன்றுங் கிடைத்திருக்கிறது. அது மறுசஞ்சிகையிற் பிரசுரிக்கப்படும். நாமெழுதியவியாசங் காரணமாக, நமது மடங்களின் விருத்தாந்தங்களும் அருமை பெருமைகளும் வெளிப்படுமாயின் மடங்களுக்கும் நமது ஜனங்களுக்கும் பெரிதும் நன்மையுண்டாகும். இதையுத்தேசித்து, நமது மடாதிபதிகள் தாமேயாவது தமது சிஷ்யர்களைக் கொண்டாவது தங்கள் மடத்துப் பிரபாவங்களைச் சாங்கோபாங்கமாய் எழுதியனுப்பத் திருவுளம்பற்றுவார்களென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவ்விஷயசம்பந்தமான அபிப்பிராயந் தருவோர், பிரசுரஞ்செய்தற் குரித்தானவாறு வியாசரூபமா யெழுதியனுப்புதல் சிலாக்கியம்.

---

**ஓர் பெரிய விருட்சம்.**—பல்லாரி ஜில்லாவைச் சேர்ந்த அதோனிக்கு 4 மைல் தூரத்திலுள்ள கொண்டாபுரமென்னு மூரில் 100 வருஷத்திற்கு மேற்பட்ட மாமரமொன்றிருக்கின்றது. அதன் அடிமரத்தின் சுற்றளவு 25 அடியாம்; உயரம் 30 அடியாம். கிளைகள் அதன் 4, 5 அடி யுயரத்திலிருந்தே விரிந்திருக்கின்றனவாம். அம்மரம் ஓர் ஏக்கர் நிலவளவிற்குப் படர்ந்திருக்கின்றதாம். அம்மரத்தில் வருஷத்தில் ஏறக்குறைய 10,000 பழங்களுண்டாகின்றனவாம்; சில வருஷங்களுக்குமுன் அம்மரத்தில் 20, 30 ஆயிரம் பழங்களுண்டாயினவாம்.



## வித்யாபட்டதாரிகள்

### ஸ்ரீவேகம்பூர்-குமாரசிவன்

விஸ்வப்பிராம்மணவம்ஸத்துப் பட்டதாரிகளைப்பற்றி நமது பத்திரிகை மூலமாயறிந்தபோது எனக்குச் சந்தோஷமுண்டாகவே யில்லை. துக்கமே பிராப்தியாயிற்று. ஐயோ! இப்படியும் நமது ஜாதியாரிருக்கலாமா? வித்தியா விஷயத்தில் இவ்வளவு குறைவாக வேறெந்த ஜாதியாரும் இருக்கவேயில்லை யென்பதிற் சந்தேகமுண்டோ? என்னகெட்ட போதிலும், ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு (உயர்தர) உத்தியோகஸ்தர் இருக்கக்கூடாதா? அதுவுமில்லை யென்றால், ஒரு ஜில்லாவுக்கொருத்தராவதிருக்கலாமே! அதுவுங் காணோமென்றால், நாம் கீழ்ப்பட்ட ஜாதிகளிலெல்லாங் கீழானவர்களாக ஒதுக்குண்டு தள்ளுண்டு நசுக்குண்டு இடியுண்டு உதையுண்டு ஏச்சுண்டு ஏக்குண்டிருப்பது ஆச்சரியமாகுமா? அன்பர்களே! நன்றாய் யோசித்துப் பாருங்கள்.

ஒருரில் நமது ஜாதியாரொருவர் டிப்டிதாஸில்தாராகவும் சப்மாஜிஸ்ட்ரேட்டாகவு மிருந்தார். அவர் இருந்த வரையில் அவ்வூர்ச் சனங்களெல்லாம் (பிராம்மணருள்பட) நமது ஜாதியாரை மிகமரியாதையாய் நடத்திவந்தார்கள்; நம்மைப்பற்றி ஒரு குறைச்சொல் சொல்ல அச்சங் கொண்டிருந்தார்கள். அவர்போய் வேறொரு ஜாதியார் வந்ததும் மெள்ள மெள்ளப் பழையமாதிரிகள் அநுஷ்டானத்திற்கு வந்துவிட்டன. ஆளைப்பார் முகத்தைப்பார்—என்பது தெரியாதா? இப்படிப் பெரிய உத்தியோகஸ்தர்களாக நம்மவர்களிருக்குமிடங்களில் நமக்கு மரியாதை நடக்கிறது. இந்த மரியாதையோ ஆயிரங் கோர்ட்டுவியாஜ்யங்களாலும் அறுபதினாயிரந் தீர்ப்புகளாலுங் கிடைக்கக்கூடியதல்ல. இப்படி ஒவ்வோரிடத்திலும் அவ்வித உத்தியோகஸ்தர்கள் அமர்ந்தால் நமது ஜாதியைப்பற்றிக் கவலைப்படவே இடமிருக்காது; சண்டை சச்சரவுகளிருக்கமாட்டா, வாக்குவாதங்கள் நடக்கமாட்டா; கோர்ட்டு வியாஜ்யங்கள் கொள்ளவேண்டியதிராது. இதுநிச்சயம். சகோதரர்களே! நன்றாய் எண்ணிப்பாருங்கள். இந்த மாதிரிச் செய்வதற்கு நம்மாலாகும். ஆகாதென்று நினைக்காதேயுங்கள், இந்தக்காரியம் சுலபமாய் நிறைவேறும். மற்ற யோசனைகள் அவ்வளவாகப் பலிக்கமாட்டா. இந்த யோசனை பலன்கொடுப்பதில் ஜாதி முழுவதிற்கும் சிறப்புண்டாக்குவதோடுகூட, பல குடும்பங்களுக்கும் தனித்தனி பெருமையைக் கொடுக்கும்.

ஒவ்வொருவரும் தமது புத்திசாலிப் பிள்ளைகளைப் படிக்கவைக்கவேண்டும். சொற்ப கல்வியில் திருப்தியடைந்துவிடக்கூடாது. மேன்மேலுங் கல்விகற்பித்துக் கொடுக்கவேண்டுமென்ற வைராக்கியங் கொள்ளவேண்டும். அப்பிள்ளைகள், பி. எ; எம். எ; பி. ஸி. இ; பி. எல்; எம். பி-சி எம், முதலிய பட்டங்கள் பெறுகிறவரையிலும் அவர்களைப் படிப்பிலிருந்து நிறுத்தக்கூடாது. பணமில்லாதவர்கள் நமது சபையாரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் விஸ்வகர்மச் சிறுவர் வித்யா நிதியிலிருந்து சகாயம் பெறவேண்டும். இந்தநிதிக்குத் தனவான்கள் பொருளுதவி செய்யவேண்டும். சந்ததியற்றவர்களும், பெருந்திரவியவான்களும் தங்கள் சொத்துக்களை ஷை நிதிக்குக் கொடுத்துவிட்டால், அதில் கிடைக்கும் பணத்தைக்கொண்டு ஏழைச் சிறுவர்களுக்குச் சாப்பாடுபோட்டு சம்பளங்கொடுத்து கல்வி கற்பித்து, பாஸ் செய்ய வைத்து, பெரிய உத்தியோகங்களில் நிலை நிறுத்தலாம்.

இவ்விதமாக, வருஷாவருஷம் குறைந்தபக்ஷம் ஐம்பதுபேராகிலும் உயர்தரப்பட்டங்கள் பெற்றுவருவார்களாகில் 10 வருஷங்களில் 500 பட்டதாரிகளைப் பார்க்கலாம். இவர்கள் நமது ஜில்லா முழுவதும் பரவி அங்கங்கு வக்கீல்களாகவோ, டாக்டர்களாகவோ, உபாத்தியாயர்களாகவோ, தாஸில்தார்களாகவோ, இன்ஸ்பெக்டர்களாகவோ, மானேஜர்களாகவோ பதவிபெறுவார்களானால், நமது ஜாதியைப்பற்றி உதாசீனமாய்ப் பேச ஒருவருக்கு நாக்குவருமா? அன்பர்களே! இது வல்லவோ நாம் செய்யவேண்டிய வேலை? இந்த விதத்தாலல்லவா நமது குலம் சிறப்படையவேண்டும்? இந்தக் காரியத்திற்காக வல்லவோ பணங்கொடுக்க வேண்டும்? இதுநடைபெறுதற்காக உழைத்தாலல்லவா நமது குறைகளெல்லகம் தீரும்? குலாபிமானிகளே! உங்கள் குணத்தை இதில் காட்டிப்பாருங்கள். உங்கள் மக்களுக்குக் கௌரவமுண்டு, உங்களுக்குப் பதவியுண்டு, உங்கள் வம்ஸத்திற்குப் புகழுண்டு, க்ஷேமமுண்டு, பதவியுண்டு, பாக்கியமுண்டு. எல்லாமுண்டு. சும்மா நாள் கழிப்பதில் பிரயோசனமில்லை. இதுவரையிலுமே நாம் எத்தனைப் பட்டதாரிகளைத்தான் உண்டு பண்ணியிருக்கலாகாது? வருஷத்திற்கு வருஷம் சும்மாதானே காலங்கழித்துவிட்டோம். இனிமேலாவது, வித்தியார்த்திகளுக்குச் சகாயமாயிருக்கும்படி மேற்கூறிய வித்தியா நிதிக்குப் பொருள் கொடுத்து புண்ணியமும் புகழும்பெறுவோமாக. சகோதரர்களே! சும்மாவிருந்துவிடாதேயுங்கள். உதவுங்கள், உதவுங்கள், ஒளிபெறுங்கள்.

---

**மகம்மதிய ஹரிபக்தர்.**—பம்பாய் மாகாணத்திலுள்ள லேயாவில் ஒரு மகம்மதியர் அவ்வூர்க்கடைத்தெருவில் ஒவ்வோரிரவும் ஹரிபஜனை செய்கின்றார். பகவான் ஹரியின் பெரும்புகழை இம்மகம்மதிய பாகவதர் இனிய அழகிய பாட்டுக்களால் வர்ணித்து ஸ்தோத்ரம் செய்கின்றார். இவரதுசதையை ஏராளமான மகம்மதியரும் ஹிந்துக்களும்வந்துகேட்டு ஆநந்திக்கிறார்களாம். அவர், என் மதம் பெரிது உன்மதம் பெரிது என்னும் வாதங்களையும் மற்றக் கெட்டகுணங்களையும் விட்டு மதாசாரங்களையும் ஒழுக்கத்தையும் கைக்கொள்ளுமாறு ஜனங்களுக்குப்போதிக்கிறாராம்.

## தந்த வேலை

(78-வது பக்கத் தொடர்ச்சி)

"சத்தியவசனன்" எழுதியது

### தந்தத்திற்கு சாயமேற்றல், சாயம்போக்கல், தன்னிறமாக்கல்

தந்தத்திற்கு பலவிதமான சாயமேற்றலாம். சாதாரணமாய் காணப்படுகிற க்ரிம்சன் சிவப்புநிறம் தந்தத்தை சிறிதுகாலம்வரையில் ஈயசம்பந்த நைட்ரோமூரியேட் (Nitromuriate of tin) திராவகத்தில் அமிழ்த்திவைப்பதினாலேயும், பிறகு ப்ரேசில் மரம் கொக்கினியல் அல்லது இந்த இரண்டுவஸ்துக்கள் கலந்ததண்ணீரில் தோய்ப்பதினாலேயும் உண்டாகிறது. ஸ்கார்லட் சிவப்புநிறம் அரக்குசாயத்தினால் உண்டாகிறது. ஸ்கார்லட் நிறமேறிய தந்தத்தை பொடாஷ் கலந்த நீரில் தோய்த்தெடுத்தால் (Cherry) செரி சிவப்பு நிறமாகிறது. ஈயசம்மந்த நைட்ரோமூரியேட் திராவகத்தில் தோய்த்த தந்தத்தை சுத்தமான (Fustic) பஸ்டிக் வஸ்துவின் கியாழத்தில் சிறுதீயிட்டுக் காய்ச்சினால் மஞ்சள்நிறமாகிறது. லாக்வுட் (Logwood) கியாழத்தில் தந்தத்தை கொதிக்க வைத்து பிறகு சிவப்பு சல்பேட் திராவகத்திலேயாவது அல்லது சிவப்பு இரும்பு ஆஸிடேட் திராவகத்திலேயாவது தோய்த்தால் கறுப்புநிறம் உண்டாகிறது.

தந்தத்தை சாயம்போடும்போது சாயம் நன்றாய் ஏறுகிறவரையில் தந்தத்தின் மேல்பரப்பு மழுக்கப்படக்கூடாது. உஷ்ணமான சாயநீரிலிருந்து தந்தம் எடுக்கப்பட்டதும், வெடித்து முறிந்து போகாதபடிக்கு குளிர்ந்த நீரில் தோய்க்கப்படவேண்டும். சாயத்தில் கறுப்புப்புள்ளிகள் விழும்பக்ஷத்தில் அவைகளை சீமைச்சுண்ணாம்பினால் துடைத்துப் போக்கவேண்டும். தந்தத்தை மறுபடியும் சாயத்தில் தோய்க்கவேண்டும். சாயமேறிய தந்தம் அழுக்குபடிந்து இருந்தால் சாயம் போக்கி வெளுத்தல் கடினமாகும். சிலர் மணலையும் நீரையும் கொண்டு தேய்த்துப்போக்கலாம் என்கிறார்கள். ஆனால் கையினால் நுட்பமாய் செதுக்கப்பட்ட வேலைப்பாடான வஸ்துக்களில் சாயம்போக்க இம்முறை உபயோகப்படமாட்டாது. கடைச்சல்பிடித்த தந்தவஸ்துக்களின் சாயத்தைப்போக்கவும் இம்முறை உதவாது. சாயமேறிய தந்தசாமான்கள் காற்றிலேயும் ஓதத்திலேயும் திறந்துவைக்கப்பட்டிருப்பதினால் ஒருவாறு சாயம் குலைந்துபோனால் (Gelatine) ஜிலெடைன் கலப்பு நீரில் கொதிக்கவைக்க மறுபடியும் நிறத்தை யெய்தும். (Hydrochloric acid) ஹைட்ரோ க்ளோரிக் ஆசிட் வன்மையினால் சிறிது தந்தத்தின் சுண்ணாம்புத் தன்மையை போக்குவதினால் தந்தத்தை வளையத்தக்க வஸ்துவாக்கலாம்.

இரணவைத்திய சாமான்களை தந்தத்தில் செய்வோர் முதலில் சாமான்களின் உருவத்தைச் செய்து கொள்ளுகிறார்கள். பிறகு நயம் உண்டாக்குகிறார்கள். பிறகு நீர்கலந்த ஆசிடில் தோய்க்கிறார்கள். தந்தம் வளைந்து குழைந்து கொடுக்கத்தக்கதாயும் மறுபடியும் தன் வடிவை அடையத்தக்கதாயும் ஆகிறவரையில் ஆஸிடிலேயே இருத்தல்வேண்டும். பிறகு அதை எடுத்து உலர்த்துகிறார்கள். அப்போது தந்தம் மறுபடியும் கடினமாய் விடுகிறது. ஆனால் தந்த சாமான்களைச் சுற்றி ஈரமான லினன்வஸ்திரத்தை வைப்பதினால் குழையுந்தன்மை மறுபடியும் உண்டாகிறது. தந்தசாமான்களின் பள்ளங்களில் ஈரமான கடல்பஞ்சை வைப்பதினாலும், வளையும்தன்மை உண்டாகிறது.

### தந்தத்தின் உபயோகம்

இந்தியாவில் உபயோகமுள்ளவும் அலங்காரத்திற்குரியவுமான பொருள்களை உண்டாக்குவதில் தந்தத்தை பூர்வகாலம் தொடங்கி உபயோகித்து வருகிறார்கள். ஒரேதுண்டில் செய்யப்படும் வஸ்துக்கள் தந்தத்தின் நீளத்தையும் அகலத்தையும் ஒத்து, சுவல்ப ஆகாரத்தை உடையவையாய் இருக்கின்றன. ஆகையால், தந்தத்தில் நீர்பருகும் கோப்பைகளும் நீர்வைக்கப் பெறும் பாத்திரங்களும் கிடைத்தல் அசாத்தியம். கெட்டியான தந்தத்தில்வெட்டிச் செய்யப்பட்ட முக்கியமான வஸ்துக்கள் சிறு திரள் பெட்டிகள், கத்திப்பிடிகள், ஈட்டிப்பிடிகள், பேனாக்கத்திப் பக்கப்பிளவைகள், புருசு, சீப்பு, சிறு உருவுகள், பந்துகள், சொக்கட்டான் ஆட்டப்பாய்ச்சிகைகள், பொத்தான்கள் முதலாயினவேயாம். பெரிய சாமான்களெல்லாம் அநேகம் சிறு துண்டுகளை ஒன்றுசேர்ப்பதினால் செய்யப்படுகின்றன. அல்லது முதலில் மரத்தில் செய்யப்பட்டு தந்தத்துண்டு பலகைகளால் ஆக்கப்பட்ட உறைகளில்வைக்கப்படுகின்றன. தந்தப் பலகைகளை ஒன்றுசேர்ப்பதில் லப்பத்தைப்போன்ற வஸ்துவை உபயோகப்படுத்துகிறார்கள். அல்லது சிறு ஆணிகளாலும் இணைக்கிறார்கள்.

பூர்வீக காலந்தொடங்கி செய்யப்பட்ட இந்திய தந்தவேலை, 1860-ம் வருடத்திற்குமுன் ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் செய்யப்பட்ட வேலையோடு ஒத்திட்டுப் பார்க்கும்போது, வியாபாரத்தை நோக்க பிள்ளைத்தன்மைக்குரியதாயும் வேலைப்பாட்டை நோக்க தாழ்ந்ததாயுமிருப்பதாக ஐரோப்பியர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஐரோப்பிய தந்தவினைஞரின் வேலைப்பாட்டிலுள்ள அழகும் நேர்த்தியான உணர்வும் இந்திய தந்தவினைஞர் வேலைப்பாட்டிலில்லை என்றும், ஜப்பான் தந்தவினைஞரின் வேலைப்பாட்டிலுள்ள பூரணதொழிற் சம்மந்த ஊகையும், சாதுர்யமும், நுட்பமான கூரிய புத்திப்ரவேசமும் இந்தியத் தந்தவினைஞர் வேலைப்பாட்டிலில்லையென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தியாவில் தந்தவேலை சிறிது சிறிதாய் ஸ்திரத்துடன் சிதைந்துக்கொண்டிருப்பதால், அவ்வேலையை தந்தத்தில் காட்டுவது அவ்வளவு சிலாக்கியமாக இல்லை என்றும், இந்த சொற்ப வேலைப்பாட்டிற்காக தந்தத்தைக் கொடுக்கிற கூரிய புத்தியையுடைய யானைகளைக் கொல்வது நியாயமாகவில்லை என்றும், இந்தியாவில்



கைத்தொழில் இலாகா உத்தியோகஸ்தர்களில் சித்திரசாலைத் தலைவர் ஒருவர் அபிப்பிராயப்படுகிறார். இவர் இந்திய கைத்தொழிலை பார்ட்வுட்துரை அவர்கள் சிலாகிப்பதைப்போல் மேன்மையாகக் கொள்ளவில்லை.

ஆகையால் நாகரீகமில்லாத ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத தற்காலத்திய தந்தவினைஞரின் தொழில் அதிக விலையுயர்ந்த தந்தத்தால் செய்யப்படாமல் சாதாரண என்பில் செய்யப்பட்டால் அவர்கள் தொழில் ஞானமின்மை அதிகமாய்ப் புலப்படாது, விலையுயர்ந்த சாமான்களைப் பாழாக்கியதும் ஆகாது—என்று (இத்தகைய) இழிவான அபிப்பிராயத்தை தெரிவிக்கிறார். அவர் தனக்குகிடைத்த பம்பாய் இராஜதானியின் தந்தவினை சமாசாரத்தைக்கொண்டே பொதுப்பாடான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறார். ஆனால் நமக்குத் தெரிந்தவரையில் நம்விஷயத்தின் பட்சத்தால் புத்தியும் அதின் வழியாய் அபிப்பிராயமும் மாறுபடாமல் பேசப்புகின், பூர்வீக காலந்தொடங்கி தந்தவினை இந்தியாவிலேயே செய்யப்பட்டு வந்தது. இக்கைத்தொழில் சம்மந்த நாகரிகம் ஐரோப்பியர்க்கும் ஜப்பானியர்க்கும் இந்தியாவிலிருந்துதான் சென்றிருக்கவேண்டும். தற்காலத்திலும் விசாகப்பட்டணத்தில் செய்யப்பட்ட தந்தவேலையும் சந்தனவேலையும் மிகுந்த அற்புதத்திற்கும் ஆச்சரியத்திற்கும் காரணமாயிருக்கிறதென்பதை ஒருவராலும் மறுக்க முடியாது.

### தந்தவினைஞருக்கு வேண்டிய முக்கிய குறிப்புகள்

தந்தம் அதிக உறுதியான மேல் பரப்பை யுடையது. அதிகமாய் ஒடியத்தக்கது. ஆனால் அதிக கெட்டியான வஸ்து. யோரையில்லாதது. ஆகையால் அதிக சாமர்த்தியமுள்ளது. கடைச்சல் வேலைக்காரனுக்கு அநேகம் விஷயங்களில் தந்தம் மகா உத்க்ருஷ்டமான சரக்கு. ஆனால் சிற்றுளி வேலைக்காரர்களுக்கு மரத்தைக்காட்டிலும் தந்தம் சிலாக்கியமானதல்ல. சிற்றுளி வேலைக்கு தகுந்ததாகச் செய்யவேண்டுமானால் அதின் கடினத்தையும் ஒடியுந்தன்மையையும் போக்கல் அத்தியாவசியகம். வேலைமுடிந்ததும் மறுபடியும் கடினமாகவும் ஒடியத்தக்கதாகவும் திருப்பி விடலாம். தந்தத்தை நயமாக்க ஈரத்துணியில் நெடுநாள் வரைக்கும் சுற்றப்பட்டிருக்கவேண்டும்; அடிக்கடி ஈரம் புகட்டிக்கொண்டே இருக்கவேண்டும். இம்மாதிரி வைத்திருக்கப்பட்ட தந்தம் சிற்றுளி வேலைக்கும் செதுக்கு வேலைக்கும் தகுந்ததாகும். எலும்பைப்போன்ற ஒடியும் தன்மை நீங்கி வெண்ணெயைப் போலவும் மெழுகைப் போலவும் தோண்டுவதற்கும் அதிகநயப்பாகவிருக்கும்.

வஸ்துக்களை உருவாக்கும்போது பின்பக்கத்திலுள்ள ஆழமான பாகத்தை, சுழன்று குடைந்து சீவியெடுக்கும் ஓர் கருவியால் குடைந்து எடுத்துவிடுகிறார்கள். இவ்வாயுதத்தை சாதாரணமாய் ஆபரண வினைஞரிடத்தில் பார்க்கலாம். அதற்கு உளியைப்போன்ற அலகு திரண்ட மரத்துண்டில் கடாவப்பட்டிருக்கும். அம்மரத்துண்டில் சம்மந்தப்பட்டு சுழலும் கைப்பிடி இருத்தல் வேண்டும். இந்த கைப்பிடியின் கடையில் உள்ள துவாரத்தில் ஓர் கழியை மாட்டிக்கொண்டு அக்கழியை வலக்கையால் சுழற்றினால் கைப்பிடி சுழன்று அதின் மூலமாய் அலகு சுழன்று தந்தத்தின் உத்தேசித்தபாகம் குடைந்து எடுக்கப்படும். இடக்கையால் அலகு செலுத்தியுள்ள தந்தத்தை கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

தந்தம் சுபாவத்தில் ஒடியும் தன்மையையுடையதாயிருத்தலின் வேலை செய்கையில் அப்போதைக்கப்போது என்ன செய்யவேண்டுமென்பதைத் தீர்மானிப்பதில் அதிக ஜாக்கிரதையையும் அறிவையும் செலுத்தவேண்டும். சிலபாகம் சிற்றுளியால் செதுக்கப்பட்டு சில பாகம் செதுக்கப்படாமலிருக்கும்போது சிற்றுளி வேலைக்காரர்களின் ஆயுதத்தின்வன்மையினால் செதுக்கப்படாத பாகம் முறிந்து போகாமலிருக்கப்பார்த்துக்கொள்ளவேண்டும். தந்தவேலையில் எல்லாக்காரியங்களையும் செய்ய ஓர் நூதன ஆயுதத்தை உபயோகப் படுத்துகிறார்கள். அது சுழன்று செதுக்கும் ஓர் ஆயுதம். அது வளைந்து கொடுக்கத்தக்க காம்பில் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாயுதத்தை பல்கட்டுகிறவர்கள் பற்களைச் செய்து அமைப்பதில் உபயோகப்படுத்துகிறார்கள். கால் உதைப்பினாலும் மின் சார சக்தியினாலும் அந்த ஆயுதம் வேலை செய்கிறது. அது அதிக வேகமாய்ச் சுழல்கிறது. ஒரு நிமிஷத்திற்கு 3000-அல்லது 4000-தரம் சுற்றுகிறது. ஆகையால் வேலை அதிக கஷ்டமில்லாமல் நடக்கிறது. சுழன்று செதுக்கும் அலகுகள் நீட்டளவில் ஒரு அங்குலத்தில் எட்டில் ஒரு பாகத்திலிருந்து ஊசிப்பிரமாணம் வரையில் வித்தியாசப்பட்டிருப்பதால் செதுக்குளியாலும் சிற்றுளியாலும் ஆகக்கூடிய வேலையெல்லாம் ஆவதோடும், உட்பாகத்தில் அறுத்தல் முதலிய வினைய ஆயுதங்களால் ஆகாதகாரியங்களையும் செய்து முடிக்கிறது. அவ்வாயுதம் மின்சார சக்தியால் தள்ளப்பட்டு வேலை செய்யும்போது 4000-தடவைக்குமேல் சுற்றுகிற படியால் தந்தவேலைக்காரனுக்கு அதிக உபயோகமுள்ள ஆயுதமாகிறது. பழைய தந்தவேலை முறையைவிட இவ்விதத்தால் வேலை சீக்கிரம் முடியும். (இன்னும் வரும்)

---

**உடன்கட்டையேறினாள்.**—மைமென்ஸிங்கைச்சேர்ந்த ஒரு கிராமத்தில் சென்றமாதம் 9-ந்தேதி ஒருவன் க்ஷயவியாதியா லிறந்துபோனான். அவனது பிரேதத்தைச் சுடுகாட்டிற்குக்கொண்டுபோய்த் தகனஞ்செய்தபோது, எரிந்துகொண்டிருக்கும் பிரேதத்தின்மீது அதன்பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அவனது மனைவி நித்திய சுந்தரி என்பவள் தனது புருஷன் பெயரை உரக்கச்சொல்லிக்கொண்டே விழுந்து விட்டனள். அங்கிருந்தவர்கள் வந்து எடுப்பதற்கு முன்னே அவளுடம்பு முற்றும் வெந்துவிட்டது.

161439
5l
~/ m2ll; N1P VK
N1 3.2

## சமயாலோசனை

ஸ்ரீ அந்தியாபக-லிங்காச்சரியார், கணியம்பாடி

(79-வது பக்கத்தொடர்ச்சி)

முந்திய வியாசத்தில், இத்தேசத்தில் தொழில் செய்பவர்களெல்லாம் மூன்று பிரத்தியேக குலஸ்தர்களாயிருக்கிறார்களென்று கூறப்பட்டது. ஸ்மிருதிகள், நிகண்டுகள் முதலிய நூல்களில் கம்மியர்களை சூத்திரர்களென்று கூறியிருக்கிறது. அந்நூல்கள் மிகவும் பழமையானவை. அவைகளில், அந்நூலாசிரியர்களாவது அவற்றைப் பாடுவித்த தலைவர்களாவது இவ்வகுப்பார்மேல் கொண்ட மாற்சரியத்தால் அப்படிக் கூறியிருக்கிறதென்றால் அது பொருந்தாது. எங்காவதோரிடத்தில் ஒரு வகுப்பாரால் அக்காரியம் செய்யப்படக்கூடுமேயன்றி அது எங்கும் எக்காலத்தும் எல்லாராலும் நடந்திருக்காது. மேல்கண்ட நூல்கள் ஏற்பட்ட காலங்களில் இத்தேசத்திலிருந்த கம்மியர்களின் யோக்கியதைக்கேற்றபடி அவற்றில் கூறியிருக்கிறது.

மயன் சந்ததியாரும் அப்படிப்பட்ட வேறோர்வகைக் கம்மியராவார்கள். அவர்கள் இத்தென்னிந்தியாவுக்குக் கொஞ்சம் பூர்வீகமானவர்கள். அவர்களின் பூர்வஜென்மஸ்தலம் இலங்கை. அங்கிருந்து அவர்களின் முன்னோர்கள் பூர்வம் இத்தென்னிந்தியாவிற் குடியேறினார்கள் போலும். ஆனால் மேற்கூறிய நிகண்டு முதலிய நூலாசிரியர்கள் அவர்களை முற்கூறிய சூத்திரக்கம்மியரினின்றும் வேறாய்ப்பிரித்துக் காட்டவில்லை. ஆகையால் அவர்களும் அவர்களுக்குள் அடங்கி நிற்பர்.

விஸ்வகர்ம சந்ததியார்கள் கலியுகாரம்பத்தில் இந்தியாவின் வடமேற்கு மூலையிலிருந்த மாந்தைப் பட்டணத்தில் வசித்திருந்து கலியுகம் மூவாயிர வருடங்களுக்குமேல் கரிகாற் சோழனால் இத்தமிழ் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு அதன்மேல் [illegible] ஆயிரம்வருஷங்களாக இந்நாட்டின் கிராமாந்தரங்களிற் பரவினவர்கள். இவர்கள் மாந்தைப்பட்டணத்தினின்றும் இங்கே வந்தவர்களென்று விஸ்வபுராணம், பிரம்மாண்ட பூகோளம், மாந்தைச்சரிதை முதலிய நூல்களிற் கூறியிருப்பது மல்லாமல், “மாந்தைக்கம்மாளர்” என்னும் வார்த்தையும் அச்சரித்திரமும் கர்ண பரம்பரையாக எங்கும் நடைபெறுகின்றன. அன்றியும், அக்குறிப்பே சில சாஸனங்கள், குமணசரித்திரம், பட்டினத்தடிகள் பாடல் இவற்றிலும் காணப்படுகின்றது. மயன் சந்ததியார் நிகண்டு முதலிய நூல்களிற்கூறும் சூத்திரக் கம்மியர்களுக்குள் ளடக்கப்பட்டவர்களாய் அபிதானகோசம் 180-ம் பக்கம் முதல் 183-ம் பக்கம் வரையிற் கூறிப்போந்த ஜாதியென்னும் தலைப்பின் முடிவில் “இன்னம் மேலேகூறப்படாத அநேக ஜாதியாருளர். கம்மாளர் எவ்வரிசையிலுள்ளவர் என்பது தற்காலத்தவரால் நன்கு நிச்சயிக்கப்படவில்லை. மயன் வமிசத்தாராதலின் நான்கு. வருணங்களுட் சேர்க்கப்பட்டிலர் போலும். மயன் ரோமகபுரியிலிருந்து ஆரியதேசத்தில் வந்து வாழ்ந்தவன் என்பது பண்டிதர்கள் கொள்கை. மனுஸ்மிருதி வேறுபடக் கூறுகின்றது” என்று கூறியிருக்கிறது.

இத்தன்மையானவர்களை யெல்லாம் விஸ்கர்மகுலத்தாரென்றால் பொருந்தாது. அவர்கள் ஒருமிக்க அக்குலத்துக் கேற்க எளிதில் சீர்திருந்தமாட்டார்கள். அவர்களெல்லாம் விஸ்வகர்ம சமயத்தாரென்று கொண்டு சமயத்திற் கட்டுப்பட்டுச் சமயப்பற்றுள்ளவர்களாக்குவது சுலபசாத்தியம். இச்சமயத்துக் காதாரமான விஸ்வகர்மாகமம் உண்டென்பதற்குப்பிரமாணம்—அபிதானகோசம் 28-ம் பக்கந்தொடங்கி 29-ம் பக்கத்தில் முடிந்த ஆகமம் என்னும் தலைப்பின் கடைசியில் “ஆகமம் என்பது பரமாப்தரினின்றும் வந்தது எனப்பொருள்படும். இவ்வாகமங்களுக்கு வழி நூல் நாரசிங்கம் முதல் விசுவகன்மம் ஈறாகிய உபாகமங்கள் இருநூற்றேழுமாம்” என்று கூறியிருக்கிறது. சகல சாஸ்திரசாரமாகிய விவேகசிந்தாமணி சைவசித்தாந்த பரிச்சேதம் 76-ம் பக்கம் முதல் 80-ம் பக்கம்வரையிற் கூறிப்போந்த காமிகாதி வாதுளமீறாகிய ஆகமப்பிரிவுகளில், விஸ்வகர்மாகமத்தையுங் கூறியிருக்கிறது.

ஆகையால், இவ்வருடத்துவக்கத்திலேயே இச்சமய விஷயத்தில் தலையிட்டு அதற்காதாரமான விஸ்வகர்மாகமபுராண முதலிய நூல்களைச் சேகரித்து முன் சமயாலோசனையிற்கண்ட மூவகைப் பிரகடனமுஞ் செய்வோமாக. நவீனநாகரீகத்துக்குரிய தொழின் முறைகளையும் வேறாய்ப்பிரித்து நடத்துவோமாக.

---



## மக்கட்பிறப்பினர் கைக்கொளுதியம்

ஸ்ரீ. R. உலகநாத ஆச்சாரியார்,
காரியதரிசி, சத்சங்கம், திருக்காட்டுப்பள்ளி

வேதசாஸ்திரங்களாதியாகப் பல வேறுவகைப்பட்ட கலைகளை யெல்லாம் ஆன்றோர்கள் அறிதற்கருவிகள் என்று பேரிட்டிருக்கின்றார்கள். விராட்விஸ்வப்பிரம்மா வென்றால் என்னையோபொருளெனில், மாயா என்னும் பெயருக்கு விஸ்வம் என்பது பிரதிபதம். ஆகவே, ஒடுங்கி விரியும் பொருள் என்பது அதினர்த்தமாகும் அகிலகர்த்தா விஸ்வப்பிரமா. அண்டபிர்மாண்டங்களாகிக் காணப்படும் தூலவுருவமான ஜகத்துக்கு கர்த்தாவாகிற காரணப்பெயரே விராட்விஸ்வப்பிரமா என்று சொல்லப்படுகிறது. காசி மகாக்ஷேத்திரத்தில் கோவில் கொண்டிருக்கும் சிவபெருமானை விஸ்வநாதர் விஸ்வேசுரர் என்றழைப்பது, அவர் அகிலகாரணர் பிரபஞ்ச கர்த்தா என்பதே பேர்ப்பொருளாகும். மேலெடுத்துக்கொண்ட விஷயத்தில் இதன் விரிவை யெல்லாம் வந்துழி வந்துழி காட்டுதும்.

விஷயம்-‘மக்கடாமே ஆறறிவுயிரே’ என்று ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார் கூறினர். அது நாம் இப்போது பெற்றிருக்கிற மனிதப் பிறப்பேயாம். ‘உடம்பினாற்பெற்ற பயனாவ தெல்லா முடம்பினிலுத் தமனைக்காண்’ என்றும், ‘ஈதலிசைபெற வாழ்த லிதுவல்லதூதியமில்லை யுயிர்க்கு’ என்றும் சொல்லிய வாக்கியங்களை உற்று நோக்குங்கால், நாம் எடுத்த சரீரம் எத்தன்மைத்து, அதனுள் நிலவும் உயிர்யாது, சரீரத்தை உயிர் எவ்வாறு பொருந்திற்று, அப்படிப் பொருந்தச்செய்தவர்யார்—என்ற வினாக்கள் நிகழும். சுருதி, குரு, அனுபவங்களால் இதனை விசாரித்து அறிவதையே ஞானநெறி ஞானமார்க்கம் என்று பெரியோர் கூறுவார்.

ஞானம் என்பது இரண்டுவகையினது. ஒன்று கடவுளுடைய தன்மையைத் தெரிந்து கொள்ளும் கலைஞானம். மற்றொன்று யோகசமாதியிற் தத்துவங்களை யெல்லாங் கடந்து விளங்கும் ஸ்ரீ விஸ்வேசுரனை அனுபவ ஐக்கியத்திற் பொருந்தும் மெய்ஞ்ஞானமாம். முதற்கண் சுருதி என்று கூறிய கலைஞானத்தின் வாயிலாக மேலே சொன்ன உடல், உயிர், ஈசன், என்னும் மூன்று பொருள்களையும் ஆராயுமிடத்து தன்வயத்தனாதற் றொடக்கத்த எண்குணமுடைமையும் சிருஷ்டியாதிபஞ்சகிருத்தியமுடைமையும் சுவதந்திரம் சர்வக்ஞ சத்தி, அபரிச்சின்ன ஐஸ்வரியம், சத்து, சித்து, ஆனந்தமயம், சமவாயசம்பந்தமான ஞானம், இச்சை, முயற்சி, பரிபூரணம், ஏகம், நித்தியம் ஆகிய சர்வமங்களமும் பொருந்திய ஸ்ரீ விஸ்வேஸ்வராம்பதி.

சீவர்களோ, சமுத்திரத்தின் நுண்ணிய மணலைக் கணக்கிடினும் மிகுத்து விளங்குவதாய் எண்ணிறந்தனவாய் ஆத்மத்தன்மை ஜாதியுடையதாய் பாதந்திரமும் கிஞ்சிக்ஞ சத்தியும் பரிச்சின்ன சம்பத்தும் பிறப்பிறப்பைத்தரும் பாச சம்பந்தமுள்ளதாய், பலபொருளாய், அணுக்களாய், சத்தைச்சேர்ந்து சத்தாயும், அசத்தைச் சேர்ந்து சடமாயும் காணப்படுவதான அளவிடப்படாத அநேகமாம் பசு.

சரீரமோ பஞ்சபூத பௌதிகங்களால் ஆக்கப்பட்டு, தூலமாகியும் சூக்குமமாகியும் காரணமாகியும் முத்திறப்பட்டு தோன்றி நின்று அழிவதாய் எண்பத்து நான்கு லட்சம் தொகையினதாய், சர்வக்ஞனும் சுதந்தரனும் ஏகனுமாகிய ஸ்ரீ விஸ்வேஸ்வரனுக்கு அனுக்கிரஹ காரணார்த்தமாய் வேண்டியவண்ணம் கொள்ளப்படும் சுத்தமாயா சரீரமாகியும், கிஞ்சிக்ஞரும் பாதந்திரமுடையவர்களும் அநேகரும் ஆகி விளங்கும் ஜீவகோடிகளுக்கு ஈஸ்வரனால் கொடுக்கப்படுகிற இருவினைகளுக்கு ஈடான சுத்தாசுத்தம், அசுத்தம் என்னும் மாயா சரீரங்கள் பலவாகியும் களிக்கப்படாத பற்பல தோற்ற விசித்திர உருவமைந்து விளங்குவதாய், அசேதனமாய், சடப்பொருளாய் ஆணவம், மாயை, கன்மம், என்னும் மூன்றாய் விரிந்து ஒடுங்குந்தன்மைவாய்ந்த மாயா என்று கூறப்பட்டுள்ளதுமான ஒரு பொருளாம்.

பாசம் வியவகாரதிசையில், ஜக, சீவ, பரம் என்று சொல்லப்பட்ட திரிபதார்த்தங்களும் உண்மையேயாம், தூலபரிணாமமாய்க் காரியப்பட்டு விளங்கும் ஜகத்துக்கு மூன்று காரணங்கள் வேண்டும். அவை, முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் எனப்பேர் பெற்று, பிரபஞ்சமாகிய காரிய உலகத்திற்கு இன்றியமையாத காரணங்களாகும். இதனை, “நடைபெறுமோர் காரியத்தி னிகழ்ச்சிக்கண்முதற்றுணை நன்னிமித்தங் கண்டாம்’ என்றற்றொடக்கத்துச் செய்யுட்களால் ஆன்றோர் விரித்துரைப்பார். (இதன்றொடர் பின்வரும்)

## விஸ்வகர்மத் தொழிற்சாலை

### 'தொழிலாளி" எழுதியது

நமது வம்சத்தினருடைய பணத்தைக்கொண்டே, இவர்களுடைய கைத்தொழி லபிவிருத்திக்காகவும், இவர்களுக்கு வருமான முண்டுபண்ணும் பொருட்டாகவும் ஒருதொழிற்சாலை ஸ்தாபிப்பதைப்பற்றி நமது பத்திரிகையில் சிற்சில வியாசங்கள் இதுவரையிலும்வெளிவந்திருக்கின்றன. அவற்றை யெழுதியவர்கள் மிகுந்த புத்திசாதுரியத்தைக் காட்டியிருப்பதினுல், அந்த வியாசங்களை என்போன்ற வாசகர்கள் கவனமாய் வாசித்தேயிருப்பார்கள். எனக்குத் தோன்றுகிற யோசனையை இங்கே எழுதுகிறேன். அதுசரியென்றும் தப்பென்றுந் தோன்றுகிறவர்கள் காரணங்காட்டிப் பதிலெழுதுவார்களென்று வேண்டுகிறேன்.

சென்னையில் விஸ்வகர்மத் தொழிற்சாலை யேற்படுத்துவதைப் பார்க்கிலும் வெளியூர்களில் ஏற்படுத்துவது சிலாக்கியமென்று தோன்றுகிறது. இந்தப் பெரும் பட்டணத்திலோ பல பெரிய ஐரோப்பிய ஒர்க்ஷாப்களிருக்கின்றன. அவை யொவ்வொன்றும் லக்ஷக்கணக்கான மூலதனத்தோடு வேலைசெய்து வருகின்றன. ஒவ்வொன்றிலும் ஆயிரமாயிரமாய்ச் சம்பளம்வாங்கும் பல இஞ்சினீர்களிருக்கிறார்கள். ஐம்பதினுயிரம் அறுபதினுயிரம் விலைகொண்ட மெஷீன்கள் தீவிரமாய் வேலை செய்து வருகின்றன. அவற்றிற்குச் சமானமாய் விலை சாசமாகவும் வேலைத் திறமாகவும் நாம் வேலைமுடிக்கச் சாத்தியப்படுமோ வென்று அச்சங்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

ஆதலால, இஞ்சினீர் ஸ்ரீ கதிரேசன் ஆச்சாரியாரவர்கள் புத்திசாலித்தனமாய்த் தெரிவித்த பிரகாரம், வெளிநாட்டில் நமது தொழிற்சாலையை யமைத்தல் தான் திறமென்று தோன்றுகிறது. நாம் செய்கிற வஸ்துக்கள் எல்லோரும் விரும்பக்கூடியதாயிருக்கும் பக்ஷத்தில், நமது தொழிற்சாலை எங்கிருந்தாலும் பாதகமில்லை. ஜெர்மனி, அமெரிக்காவிலிருந்து வருஞ்சாமான்களை எல்லாத்தேசத்தாரும் கையாண்டு வரவில்லையா? இதற்காக, நாம் ஏதாவது சில வஸ்துக்களை மட்டும் செய்வதென்ற நிர்ணயத்தை முதலில் வைத்துக்கொள்ளவேண்டும். எல்லாவற்றிலும் கையிட்டுக் கொண்டால் ஒன்றுஞ் செவ்வையாய் முடிவுபெருது. நமது ஜாதி வேலை யென்பதும் கௌரவப்படாது. ஆதலினுல், நாம் பேர் கெடுத்துக் கொள்ளாதவிதமாய் ஆரம்பிக்கவேண்டும்.

இப்படிச் செய்யலாம் வஸ்துக்கள் எவை யென்பதைப் பற்றித் தொழிலாளிகளுடைய யோசனை வேண்டும். சென்னையில் ஒரு பிராம்மண சகோதரர் மெழுகுவத்தி ஸ்டான்ட்கள் செய்துவருகிறார். இரும்புப் பெட்டிகள் செய்வதற் கென்றும், பூட்டு சாவிகளையே செய்வதற்கென்றும் தனித்தனி ஒர்க்ஷாப்கள் அநேகமிருந்து வருகின்றன. ஜெர்மனி, ஆஸ்ட்ரியா முதலிய தேசங்களிலிருந்து இப்போது இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கும் வஸ்துக்களில் நம்மாற் செய்து முடிக்கக்கூடியவையாக எத்தனை சாமான்களிருக்கின்றனவென்று தேடிப்பார்த்து ஜாப்தா தயார் செய்யவேண்டும். ஜனங்கள் எப்போதும் விலை சாசமான சாமான்களையே விரும்புவார்கள் என்ற விஷயத்தை மட்டும் நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது ஆனபடியால், விலை சாசமான வஸ்துக்களைச் செய்தாலல்லாமல் நமது வியாபாரம் ஓங்கமாட்டாது.

இரும்பு, மரம், உலோகங்களிவற்றில் நாம் செய்து வந்த தொழில்கள் நசித்துப்போன காரணங்களிலொன்று, நாம் விலை சாசமாய் வேலை செய்யாது போயினதாகும். அழுத்தத்தைப் பற்றிக் கவனிப்பார் இக்காலத்தில் ஒருவருமில்லை. நமது தவலை செம்புகளும், குத்துவிளக்குகளும் இவை போன்றவையும் பாட்டன் பூட்டன் காலத்திலிருந்து ஒவ்வொரு குடும்பத்திலும் அப்படியே யிருந்து வருகின்றன. அப்படியிருக்கும்போது, அவைகளைச் செய்து கொடுக்கும்படி நம்மை யார் தேடப்போகிறார்கள்? நாமெங்கே வேலைசெய்து பிழைக்கிறது? ஆதலின், அந்த விதமான சாமான்களைச் செய்வதை அவ்வளவோடு நிறுத்திக்கொண்டு, இந்தக் காலத்திற்கு ஏற்றவையும், சுளுவாய் விற்கக்கூடியவையும், மேல்நாட்டிலிருந்து வரும் வஸ்துக்களை யொத்தவையுமான சாமான்களையே நமது விஸ்வகர்மத்தொழிற் சாலையில் செய்யவேண்டும். ஆணிகள், அள்ளுகள், மூளைகள், தாழ்ப்பாள்கள், மற்ற இரும்புச் சாமான்களிலும் வெண்கலச்சாமான்களிலும், பித்தளை ஈயச்சாமான்களிலும் எவை செய்யலாமென்று யோசிக்கவேண்டும். சமையல் சாப்பாட்டுப் பாத்திரங்களொருபுறமிருக்கட்டும். மற்றவற்றை முன்னே யோசிப்போமாக.

வெளியூர்களில் தொழிற்சாலை யமைப்பதால் ஒரு பெரிய சௌகரியமிருக்கிறது. ஆட்களுக்குக் கூலி அங்கு சுமாராயிருக்கும். அடிக்கடி ஆட்கள் நின்றுவிடமாட்டார்கள். சென்னையிலோ அதிக கூலி கொடுக்க வேண்டியதோடு, ஆட்கள் அடிக்கடி வெவ்வேறிடங்களுக்கு மாறி மாறிப்போய் வேலைக்கு இடைஞ்சலுண்டுபண்ணுங் கஷ்டமும் உண்டாகும். இதனுல், காஞ்சீபுரம், கும்பகோணம், திருச்சினுப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி, சேலம், கோயமுத்தூர் முதலிய இடங்களைப் பற்றி நினைப்பது நல்லதெனத் தோன்றுகிறது.



## கம்பர் கண்டசுத்தி

### ஸ்ரீ கா-திருவேங்கடம் ஆச்சாரியார், சென்னை.

மன்னிய பொன்னி வளஞ்சிறந் தோங்கி
முன்னிய சீர்த்தி முதுசோணுட்டில்

குலோத்துங்க சோழன் அரசுபுரிந்துவந்த காலத்தில் அவருக்குப் போகமாதர்களன்றிப் பட்ட மகிஷிகளாயமர்ந்தவர் பலர் அவருள் முக்கியமானவர் சேரன் மகள், பாண்டியன் புதல்வி, சிங்களத்திறைவன் செல்வி, வான் கோட்டரசன் குமாரத்தியாகிய நால்வர். இவர்கள் சையாக்கிருகத்திற்கு அரசன் செல்லுமுறை எவ்விதமெனில், தினம் ஒவ்வொருவரிடத்திற்குச் செல்லுகிறதாக வாக்குத்தத்தம்; இவர்களில் யாரேனும் பூப்படைந்து மங்களஸ்நானம் செய்வார்களே யானுல், கர்ப்பாதானத்தின் பொருட்டு முறையை நோக்காது அவர்கள் வீட்டுக்குப்போகவேண்டும். பாண்டியன் பெரிய சக்கிரவர்த்தியானதால் அவன் புதல்வி எந்த காலத்தில் விரும்பினுலும் அவளிடம் சென்று அவள் தகப்பனுக்கு மனவருத்தம் வாமல் நடந்து கொள்வது அரசனுக்கு வழக்கமாயிருந்தது.

அப்படி யிருக்க, ஒருநாள் அரசன் வேட்டையாடி வீடடைந்து ஸ்நானசந்திமுடித்து போஜனம் செய்து தனக்கு அன்றுயாருடைய முறையென்று கேட்க, சேரன் மகளுடைய முறை என்று அவளுடைய பாங்கி சந்தனம் புஷ்பம் கொண்டு வந்து அரசனை அழைத்தாள். அதேகாலத்தில் பாண்டியன் செல்வி அரசனைக் கட்டாயம் பார்க்கவேண்டுமென்று சொல்லித் தன் பாங்கியை யனுப்பிவைத்தாள். அதேதினத்தில் சிங்களமாது மங்களஸ்நானம் செய்திருக்கின்றுள் என்றும் கர்ப்பாதானத்தின் பொருட்டு அவள் மனைக்கு வரவேண்டுமென்றும் அவள் பாங்கி யழைத்தனள். இடையில் போஜனசாலைக்குப் பக்கத்து மாளிகையிலிருக்கும் வான்கோட்டு வல்லி சதுரங்கம் சூதாட்டம் பந்தயம் வைத்து ஆட அரசனை யுட்டுத்தி 'நீர் செலித்தால் என்னை விட்டு நீங்கிவிடலாம்; தோற்றுல் என்னிடம் இருக்கவேண்டு' மென்று பேசி ஆட்டத்தில் தானே ஜெயித்து அரசனைத் தன்வசப்படுத்தினுள். மற்ற பாங்கிகள் மூவரும் இவள் வாசலின்கண் வந்து அரசனை அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

அரசன் தன் வாக்கைத் தள்ளிப்போக முடியாமலும் இன்னுர்வீட்டுக்குச் செல்வதென்று தோன்றுமலும் யோசித்துக்கொண்டிருக்கப் பொழுதுவிடிந்துவிட்டது. பிறகு, ஸ்நானத்திற்குச் சென்று பூஜைமுடித்துச் சிம்மாசனத்திற்கு வந்தவுடன் சமஸ்தானத்தில் கம்பநாட்டாழ்வார் முதலானவர்கள் வந்து நிறைந்தார்கள். அச்சமயம், அரசன் தனக்கு எத்தனையோ பட்டமகிஷிகளும் போகமாதர்களும் இருந்தும் முன்னிரவில் தனித்திருந்து தயருற்றதைச் சிந்தித்து கம்பனைநோக்கிச் சொல்லென்று சிரித்தார். உடனே கம்பர்,

சேரன்மகள்முறை பாண்டியன்செல்வி
சினந்திருப்பாள்
நாரங்கமழ் சிங்களமாதுக்கு
நாட் பொருத்தம்
வாரங்கிளைக்கொங்கை வான்கோட்டு வல்லிக்
பந்தயச் சொல் [குப்
ஆரென்றுதள்ளி விடுவோமென்றே
சிந்தை யானதுவே.

என்று கூறினுர். அரசன் திடீரென்று அரியாசனத்தினின்று குதித்துக் கவிஞர்பெருமானைக் கட்டியாலிங்கனஞ்செய்து கனகாபிஷேகம் செய்து மகிழ்ந்தனர்.

பின்னொருநாள், குலோத்துங்கசோழன் மந்திரி பிரதானி கம்பர் முதலாய கனவான்கள் புடைசூழ யானையின்மீது முத்துக்கொடை பிடித்துக்கொண்டு இரவில் பவனி வருங்கால், குலோத்துங்கன் கம்பனைநோக்கி 'இரவில் குடைபிடித்துக்கொள்ளும் வழக்கம் குற்றமென்றும், அற்பனுக்கு வாழ்வுவந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பான் என்றும் உலகில் குறை கூறுகின்றுர்களே, நான் இவ்விதம் குடைபிடித்துக்கொண்டு வருவது குற்றமா அல்லவா?' என்று கேட்க கவிஞர் பெருமானுகிய கம்பர்—

அண்டமீ தலவிவாழு மருந்ததி நினதுகாந்தி
கண்டபோ தாசையாகிக் கற்பவ ளழிவாளென்றே
எண்டிசை புரக்கும் வேந்தே யிரவினிற் கவிகைநீதான்
கொண்டதுதகுதியெங்கள்குலோத்துங்கச்சோழரேறே.

என்று கூறினுர். இதைக்கேட்ட அரசன் மகிழ்ந்து 'புலவரேறே தங்களைப்போல் சமயோசிதமாகக் கவி சொல்லும் திறமையில் யாரிருக்கின்றுர்கள்?' என்று கூறிச் சந்தோஷித்தனன்.

மற்றொருகால், கம்பர் காஞ்சீபுரம் சென்றிருந்தபோது ஸ்ரீ வரதராஜப்பெருமாள் இரதோத்சவத்தில் சில பிராம்மண சிப்பந்திகள் தங்கள் எண்ணத்திற்கு இசையாத அம்மச்சி என்னும் ஒரு தாசிவீட்டிற்கு அருகில் தேரை யொதுக்கி அவள் வீட்டை யிடித்துவிடவேண்டுமென்று யோசனைசெய்ய, அதுகண்ட தாசி கம்பரைக்கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, 'ஸ்வாமி, புலவர்பெருமானே! எனக்கிந்த விதமாகப் பெருமாள் தேரைவிடுத்துத் தீங்குசெய்கிறுர்களே; இந்த விபத்தைத் தீர்த்தருளவேண்டு' மென்று வருந்திக்கேட்டுக்கொள்ளக் கம்பர்கூறிய கவி-

பாப்பார் குரங்காய்ப் படைகடமைத் திரட்டி
வாய்ப்பானக் கச்சி வரதரே—கோப்பான
கொம்மையிலங் கைத்தலத்தின் கோட்டையென் றேறு
அம்மைச்சி வாழும் அகம். [வந்தீர்

இக்கவியைப் பெருமாள்கேட்டுத் திடீரென்று தம் தேரைத்தெருவழியாக நேரே திருப்பிவிட, இதுகண்ட பலரும் அதிசயமுற்றுக் கம்பரைத் தொழுது இவர் பெருமையைப்புகழ அனந்தனுலு மாகாதென்று பல வாறுய் வியந்து அம்மச்சியிடம் கொண்ட துவேஷத்தையும் ஒழித்து அவளைப் புகழ்ந்துகொண்டாடினுர்கள்,

## கும்பகோணம்

## விஸ்வகர்ம ஜாதீய கான்பரன்ஸ்

1.

1915ஞூ பிப்ரவரிமீ 3உ புதன்கிழமை மாலை 6-மணிக்கு கான்பரன்ஸ் உபசாணைக் கமிட்டி மெம்பர்கள் ஸ்ரீ தே. மா. சொக்கலிங்கப் பத்தரவர்களின் அக்கிராசனத்தின் கீழ்க்கூடி அடியில்கண்ட தீர்மானங்களைச் செய்தார்கள்.

1. மாயவரம் சப் கோர்ட்டு சிரஸ்தார் பிரம்மஸ்ரீ கந்தசாமி ஆசாரியாரவர்களே ரிசெப்ஷன் கமிட்டி மெம்பர்களின் சேர்மன் ஸ்தானத்திற்கு உரிமை என்று ஸ்ரீ த. கு. சு. பஞ்சனதீஸ்வா ஆசாரியாரவர்களால் பிரபோஸ் செய்யப்பட்டது. அது ஸ்ரீ. எ. சு சாமிநாத ஆசாரியாரவர்களால் ஆதரித்துப் பேசப்பட்டு உபசாணைக் கமிட்டியார்களால் ஒரேமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. கண்காக்ஷிசாலை ஒன்று அவசியம் திறந்துவைக்கவேண்டியதைப்பற்றி ஸ்ரீ ஜி. கிருஷ்ணசாமி ஆசாரியாரவர்களால் பிரபோஸ்செய்து, ஸ்ரீ ஒ. வெ. அய்யாகண்ணுப்பத்தரவர்கள் ஆமோதித்து காக்ஷிசாலையைத் திறந்து வைக்கவேண்டிய கனவானைத்தெரிந்தெடுப்பதற்கு சிகாடெரிகள் மூலமாய்க் கேட்டுக்கொள்ளும்படியாய் கமிட்டியார்களால் ஒரேமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது.

3. கான்பரன்ஸிற்கு அக்கிராசனபதி ஸ்தானத்திற்கு சென்னை பிரம்மஸ்ரீ T. கேஸவாசாரியாரவர்களை இருக்கச் செய்யவேணுமாய் ஸ்ரீ ஆ. நமசிவாயப் பத்தரவர்களால் பிரபோஸ் செய்யப்பட்டு, ஸ்ரீ மொ. குப்புசாமிப்பத்தரவர்களால் ஆமோதித்து ஸ்ரீ கிருஷ்ணசாமி ஆசாரியாரவர்களால் ஆதரித்து கமிட்டியார்களால் ஒரேமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது.

4. வாலண்டியர்களுக்கு காப்டன் ஸ்தானத்திற்கு ஸ்ரீ. ஆ நமசிவாயப்பத்தர் அவர்கள் உரிமை என்று ஸ்ரீ பஞ்சனதீஸ்வா ஆசாரியாரவர்களால் பிரபோஸ் செய்யப்பட்டு கமிட்டியார்களால் ஒரேமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது.

சேர்மன் அவர்களுக்கு சபையார்களால் வந்தனம் கூறப்பட்டது.

(ஒப்பம்) தே. மா. சொக்கலிங்கப் பத்தர்

2

## சமபந்தி போஜனம்

நாளது 1915ஞூ ஏப்ரல்மீ ஈஸ்டர் விடுமுறை நாட்களில் குடந்தையில் கான்பரன்சு நடக்கப்போவதாய் "விஸ்வகர்மன்" பத்திரிகையில் வாசிக்க ஆனந்த பரவச முண்டாகின்றது. ஏனெனில், 4-வது யுகமாகிய இக்கலியுகத்தில் ஜனவலிமை கூட்டங்களினிடமாயிருக்குமென்று சாஸ்திரவாயிலாகவும் அநுபோக பூர்வமாகவும் நாமறிந்திருக்கின்றோம். எந்த ஜனங்கள் ஒற்றுமையாகக்கூடி ஒரு காரியத்தை முடிக்கவேண்டுமென்று கருதினார்களோ அக்காரியஞ் செவ்வனே முடிவு பெறுமென்றும், அக்கூட்டத்திற்கு கல்வியே முக்கிய சாதனமெனவும், ஆங்கில பண்டிதர்கள் அறைகின்றனர். இக்கூட்டத்திற்கு முதற்காரணமாயிருப்பது சமபந்தி போஜனம். போஜனம் கலக்கும் பக்ஷத்தில் மற்றவையெல்லாம் இலேசாய்க் கலந்து ஒற்றுமை உண்டாகிவிடும். அஃதின்றி என்னதான் உதட்டுறவு இருந்தபோதிலும் வாஸ்தவமான பாந்தத்வ மேற்படாது. இவ்விதம் நமக்குள் நிகழாததினால்தான் நமக்குள் ஒற்றுமையில்லாது நிந்தனைக்குள்ளாகி நிற்கின்றோம். ஆதலினால் நமது குலத்தினர் ஒரே விதமான குணமும், செய்கையுமுள்ளவர்களாய்க் காணப்படவேண்டும். இவ்வித ஒற்றுமையாகிய பெருந்துணைக்குக் காரணம் சமபந்தி போஜனம்.

2. இவ்விஷயத்தில் பிராமணர்கள் கவனம் வைத்து நடப்பதால் அன்னவர்கட்குள் பரஸ்பர அன்னியோன்யமுண்டாய், செல்வத்திலும் கல்வியிலும் மேம்பட்டவர்களாய், பிறரால் பூஜிதமடைந்து புண்ணிய சீலர்களாய் இப்பூவுலகில் வாழ்கின்றனர். அங்ஙனமே மகம்மதியரும் இவ்விஷயத்தில் (சமபந்தி போஜனம்) கவனம் வைத்துக் கலந்துண்பதால் கண்ணிய முற்று காலத்தைக் களிப்பாய்க் கழிக்கின்றனர். மற்றுமுள்ள வேளாளர், வன்னியர், யாதவர், முதலானோர்கள் கலந்துண்பதால் சகோதரபான்மை பெருகிப் பெருமையை யடைந்து வாழ்கின்றனர்.

3. இவ்விஷயத்தில் பின்வாங்கி நிற்கின்றவர்கள் நமது ஜாதியர் ஒருவரே. இவர்களுக்குள்ளேயே ஒருவர் மற்றொருவர் வீட்டில் ஜலபானங்கூட செய்வதில்லை. ஒரு பந்துக்கட்டார் (குடும்பத்தார்) இன்னொரு பந்துக்கட்டார் வீட்டில் சாப்பிடுவதில்லை. இவ்விதம் நிகழ்ந்தால் ஒற்றுமை ஏது; தஞ்சை, திருச்சிகளில் மாசிமீ காமன்திருவிழா நடப்பது வழக்கம். காமதகனம் நடந்த 3, 5, 7, தினங்களாகிய ஒற்றைநாட்களில் காமனை எழுப்புவது வழக்கம். அதன்பிறகு ஓர் சுபதினத்தில் அக்கக்ஷிக்காரர்களெல்லாம் சமபந்திபோஜனம் செய்வது வழக்கம். அன்றையதினம் அக்கக்ஷிக்காரர்களுக்குள் கலகம் நேர்வது வழக்கம்; காரணம் யாதெனின் சமயல்பாகத்திற்கு நம்மினத்தில் சிலரை ஏற்படுத்தியிருப்பார்கள். அவர்களில் சிலர் அவ்வேலைக்கு வந்தும் வராமலிருந்துவிடுவார்கள். அப்படி வராமலிருப்பவர்களுக்குப் பதிலாக நம்மினத்திலேயே வேறு மனிதர்களைக்கொண்டு ஏற்பாடு செய்யின், காரியம் முடியும்வரையில் சும்மாயிருந்துவிட்டு, போஜனஞ் செய்யப்போகுங்காலத்தில், புதிதாய் ஏற்படுத்திய நம்மினத்தார்களை குலக்குறை குற்றங்கள் பல சொல்லி ஏளனம்செய்து சமையல்செய்து வைத்திருப்பதை சாப்பிட ஒட்டாமல் கலகத்தை ஏற்படுத்திவிடுவது வழக்கமாயிருக்கிறது.

4. நம்மினத்தில் ஒரு வகுப்பார் இன்னொரு வகுப்பார் வீட்டில் போஜனம் செய்வதில்லை; அநேகமாய் இந்த ஜில்லாவில், கொல்லன், தச்சன் என்று, நமக்குள் நாமே உல்லங்கனமாய் உரைக்கின்றது வழக்கம். எல்லோரும் ஒரேவிதமாய் இருக்கவேண்டிய தவசியம், அவர்களைப் புறக்கணிக்கக்கூடாது. திருத்திச் சரியான வழக்கங்களை அனுசரிக்கும்படி செய்யவேண்டியது நமது கடமை. தேர் திருவிழா காலங்களில், எல்லோரும் புதிய உடைகளை அணிந்துபோவது வழக்கம்; இதற்குக்காரணம், எல்லோரும் புதிய உடைகளை அணிந்திருக்கையில் நாம் இவ்வுடையோடு செல்லலாகாது என்ற லஜ்ஜை பிறருக்குண்டாவதே. புதிய உடை அணிந்துள்ளவர்கள்தாம் திருவிழாவிற்கு வரலாமென்ற ஓர் நிர்ப்பந்தம் ஏதாவதுண்டா? இல்லை, ஆகவே, சமபந்திபோஜனம் செய்தாலன்றி ஒருவரை ஒருவர் பார்த்து தம்மைத்தாமே திருத்திக்கொள்ள ஏதுவாகாது. மேலும், புருஷபாகத்திற்கு குற்றமில்லை. சகோதரர்கள் கவனிப்பார்களாகவும். நமது ஜாதி 5 வகுப்பினர்கட்கும் பொதுவாக விஸ்வப்பிராமணர்களென்று பெயருண்டு, அல்லவா? அப்படியிருக்க ஏகதேசமாவது நாம் அதை அனுசரிக்கக்கூடாதா? அல்லது குலாசாரமுடைய சில வகுப்பினர்க்குமட்டுந்தான் அப்பெயர் வகிக்கலாமென்றும், ஆசார அனுஷ்டானங்களை அனுசரிக்காதவர்கட்கு வேறு பட்டங்களேதாகிலு முண்டாவென்று கவனிக்குங்காலத்தில் அப்படி ஏதேனுமிருப்பதாக என் புல்லறிவுக்குப் புலப்படவில்லை.

5. கான்பரன்சுக்கு 500, 1000 பெயர்கள் பல தேயங்களிலிருந்து வருவார்கள். அன்னவர்கள் தனித்தனியாக பாகஞ்செய்துகொள்ளவும் கூட்டங்கூட்டமாக சமயல்செய்துகொள்ளவும் சாத்தியமாகாது. அன்னவர்கட்கு வேண்டிய இடமும், பாத்திரமும் சேகரித்துக் கொடுப்பது கஷ்டம். அவ்விதம் நிகழ்வதும் நிந்தனைக்கு இடமாகும். ஆகையால் போஜனசாலையென்று ஒன்று ஏற்படுத்தி ஏகபோஜனம் செய்வதுதான் சாலவு நன்று. இப்போது நடந்தேறப்போகிற கான்பரன்சு சம்பந்தமாய் போஜனசாலை ஒன்று ஏற்படுத்தி சமபந்தி போஜனத்தை அனுசரிப்பீர்களென்றும்,

(1) திருமாங்கல்யம் எவ்விதமாய்ச் சிருஷ்டிக்கவேண்டும் (எங்கும் ஒரேமாதிரியா யிருக்கவேண்டியது. வாத்தியாரும், நாட்டாண்மைக்காரரும் இதில் கவனம் செலுத்தவேண்டும்.)

(2) அதை உட்கழுத்தோடு ஒட்டிக் கட்டிக்கொள்ளாமல் தொங்கவிட்டுக் கட்டிக்கொள்வதே உசிதம்.—முதலான 10 விஷயங்களையும், 1914ஞூ மேமூ வெளிவந்த விஸ்வகர்மன் 8-வது சஞ்சிகையில் காணலாம். அவைகளையும் "ஆச்சாரி" பட்ட விஷயத்தையும், கான்பரன்சில் பேசக்கூடிய பண்டிதசிரோன்மணிகளும், டெலிகேட்டுகளும் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளும்

துன்னூர் T. தங்கவேல்



## பகவத்பக்தி—தேஜஸ்

ஸ்ரீ A. நஞ்சுண்டப்பா, B. A. B. L,

கடப்பை தத்வஞ்ஞான ஸபை.

விஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் விஷ்ணுவிற்குச் சிவனென்பதாகவும் சிவஸஹஸ்ர நாமத்தில் சிவனுக்கு விஷ்ணு என்பதாகவும் நாமங்களிருக்கின்றன. சிவகேசவாள் என்ற நாமங்கள் முடிவில் ஒரே தத்வத்தைப் போதிக்கின்றன. ஆகையால் விஷ்ணு பக்தியைக் குறித்து எழுதுவதைச் சிவபக்திக்கும் அந்வயப்படுத்திக் கொள்ளலாம்.

ஸ்ரீ மகாவிஷ்ணு பரமதயாநிதி; இந்தப் பரமபுருஷர் ஈச்வராத்புத சக்தியால் சராசர பூதங்களைத் தன்னுடைய ஸாநித்யத்திற்கு ஆஹார்ஷித்துக் கொள்ளுகிறார். ஸர்வகால ஸர்வாவஸ்தைகளில் ஜீவகோடிகளை பரிபூர்ணர்களாகப் பண்ணுவதற்காக மஹாதயையோடு வீக்ஷித்து பூலோகத்தில் ராமகிருஷ்ணாதி அவதாரங்களெடுத்து ஜீவர்களை துஷ்ட சரீரங்களினின்று விலக்கி கிரமக் கிரமமாக பரிசுத்தர்களாகச் செய்கிறார். சாதுக்களை ரக்ஷித்தல், தர்மத்தை ஸ்தாபித்தல், துஷ்டர்களின் துஷ்டபுத்தியைப் போக்கடித்து அவர்களைப் பரிசுத்தர்களாகச்செய்தல், சமஸ்த ஜீவகோடிகளைக் கிரமக் கிரமமாகப் பரிபூர்ணர்களாகச் செய்தல் ஸ்ரீ மஹா விஷ்ணு மூர்த்தியின் தொழில். துஷ்டர்களைச் சிக்ஷித்தல் அவர்களிடமுள்ள தயையினுலொழிய வேறில்லை. விஷ்ணு மூர்த்தி தயாஸ்வரூபன். மோக்ஷத்தைக் கோரும் ஜீவன் விஷ்ணு ஸ்வரூபத்தையடைவதற்குப் பிரயத்தனம் செய்யவேண்டும். விஷ்ணு தயா ஸ்வரூபராகையால் ஜீவன்கூட தயா ஸ்வரூபனுதல் வேண்டும். ஜீவன் தயா ஸ்வரூபனுவதற்கு ஆரம்பத்திலிருந்து தான்செய்யும் பிரதி கார்யத்திலும் பூததயையை அப்யஸித்தல் வேண்டும். ஈஸ்வர பக்திக்குப் பிரதம தர்மம் பூததயை. பூததயை இல்லாத பக்தி பக்தியாகாது. அதாவது பக்தன் காமக் குரோதங்களை விட்டொழித்து, அஹங்கார மமகாரங்களைத் தொலைத்து பலத்தைக் கோராமல் பக்தி ஞானகர்மங்களை அனுஷ்டித்து அதனுல் ஏற்படும் புண்யத்தை ஈச்வரனுக்கு அர்ப்பணஞ்செய்து ஜீவகோடிகளைப் பரிசுத்தர்களாகச் செய்யவேண்டு மென்பதாக ஸ்திர சித்தமாகி சதா த்யானித்துக்கொண்டு எல்லோருடைய நன்மைக்காக பூலோகத்தில் பாடுபடுதலே பூததயை. இப்படிப்பட்டவன் பரிசுத்தனும் தேஜஸ்வரூபனுமாவான். இதுவே ராஜயோகம் நிஜமான விஷ்ணு பக்தி.

விஷ்ணுபக்தியால் நல்ல தேஜஸ் பக்தனிடம் விருத்தியாகும். இத்தேஜோ மஹிமையாலே இவ்விதபக்தன் சமீபத்திற்குச் செல்பவர்களுக்கும் ஸத்புத்தி சாந்தமும் உண்டாகும், இவன் ஸ்பர்சிக்கும் ஆகார வஸ்துக்களை க்ரஹிப்பவர்களுக்குக்கூட பரிசுத்தம் நல்லபுத்தி உண்டாகும். ஆகையால் தேஜஸ் எனின் என்ன? இவற்றின் தர்மங்களெவை?

## தேஜஸ் (Aura)

பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவைச் சுற்றிலும் சோளாகாரமான ஒரு தேஜஸ் அதாவது ஒளி இருக்கிறது. தீபமுள்ள லாந்தரைச் சுற்றிக் கொஞ்ச தூரவரைக்கும் வெளிச்சம் வியாபித்திருக்கிறதல்லவா? லாந்தர் இவ்வெளிச்சத்தின் மத்தியில் இருக்கும். லாந்தர் நகரும் போதெல்லாம் இவ்வெளிச்சமும் அதை அநுசரித்தே செல்லும். இவ்வாறு லாந்தரைச் சுற்றியுள்ள ஒளியைப்போல பிரதி வஸ்துவைச் சுற்றி அதாவது கல், செடி, ஜந்து, மனுஷ்யாள், தேவதைகள், ஆப்ரம்மஸ்தம்ப பரியந்தமுள்ள ஒவ்வொரு வஸ்துவைச்சுற்றி அந்தந்த வஸ்துவிற்குத் தக்க தேஜஸ் இருக்கிறது. இந்த தேஜஸ்ஸை இங்கிலீஷ் பாஷையில் ஆரா (Aura) என்கிறார்கள்.

இந்த தேஜஸ் நமது ஸ்துலத்ருஷ்டிக்கு அகப்படாது. குருடன் சூரிய வெளிச்சம் இல்லை யென்றாலும் நேத்திரங்களுள்ள நமக்கு சூர்ய வெளிச்சம் நிஜமென்பதாகத் தோன்றுமல்லவா? அவ்விதமே எல்லா வஸ்துக்களுக்கும் பூதகோடிகளுக்குமுள்ள தேஜஸ் திவ்ய திருஷ்டியில்லாத நமக்கு அகப்படாது போனாலும் திவ்யத்ருஷ்டியுள்ளவர்களுக்கு அகப்படும். திவ்யத்ருஷ்டியுள்ளவர்கள் அந்த வஸ்துவிற்கு உள்ள தேஜஸைப் பார்த்து அந்த தேஜஸ் த்வாரா அந்த வஸ்துக்களின் குணத்தைத் தெரிந்து கொள்ளுவார்கள். இவ்விதமே மனுஷ்யர்களின் தேஜஸைப்பார்த்து அந்தந்த மனுஷ்யர்களின் குணத்தைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். சில வஸ்துக்களிடம் 'கெட்ட தேஜஸ், சில வஸ்துக்களிடம் சாதாரண தேஜஸ், சில வற்றில் பரிசுத்த தேஜஸ் இருக்கின்றன. தேஜஸ் அனேக பேதங்களுள்ளதாயிருக்கும். இத்தேஜோபேதத்தை அநுசரித்து வஸ்துக்கள் ஜீவர்கள் அநேக காந்திகள் ஏற்பட்டிருக்கின்றன.

பலவித பூஜார்ஹமுள்ளதும் போஜனற்கூறமுள்ளதுமான வஸ்துக்களின் தேஜோ ஸ்திதியைத் தெரிந்துகொண்டு ரிஷிகள் சாஸ்திரங்களில் வரைந்திருக்கிறார்கள்.

ஒரு லாந்தரில் வெள்ளைப் பகல்வத்தி (மத்தாப்பூ) கொளுத்தின மாத்திரத்தில் அந்த லாந்தரைச் சுற்றி வெள்ளை வெளிச்சம் கொஞ்ச தூரம் வியாபித்திருக்குமல்லவா? அந்த லாந்தரை எங்கு கொண்டு போனாலும் அந்த வெளிச்சம் அதை அநுசரித்தே செல்லும். அந்த லாந்தரில் வெள்ளை மத்தாப்பூவை யெடுத்துவிட்டு சிகப்புமத்தாப் பூவைக் கொளுத்தின் வெளிச்சத்தின் நிறமும் மாறிக்கொண்டேவரும். மத்தாப்பின் நிறம் மாறுதலுக்குத் தக்கவாறு லாந்தரைச் சுற்றியுள்ள வெளிச்சமும் மாறும். பிரதி ஜீவனுடைய சரீரத்தைச் சுற்றிலும் லாந்தரைச் சுற்றி யிருப்பதைப்போலவே தேஜஸ் இருக்கிறது. மனிதனுடைய சரீரமே லாந்தராகவும் மனதையே மத்தாப்பு வத்தியாகவும் பாவித்தல் வேண்டும். லாந்தரைச் சுற்றியுள்ள ஒளியின் நிறம் மத்தாப்பு வத்தி மாறுவதைப்போல் எப்படிமாறுமோ அவ்விதமே மனிதனுடைய மனம் மாறுவதற்குத் தக்கபடி மனிதனுடைய சரீரத்தைச் சுற்றியுள்ள தேஜஸும் மாறிக்கொண்டே இருக்கும். இத் தேஜஸ் ஏகதேசம் இரண்டடி தூரம் வரைக்கும் சரீரத்தைச் சுற்றி எல்லாப்பக்கமும் வியாபித்து ஒளியின் மத்தியில் லாந்தர் இருக்குமாபோல் தேஜஸ் மத்தியில் சரீரம் இருக்கும். இந்தத் தேஜஸ் கோழிமுட்டையைபபோல் சோளாகாரமாயிருக்கும். இது திவ்ய த்ருஷ்டியுள்ளவர்களுக்குப் புலப்படும்.

மனம் மாறுகிறபடி தேஜஸின் வர்ணமும் மாறும். மனதினிடத்து கோபம் ஜனிக்கின் சரீரத்தைச் சுற்றியுள்ள தேஜஸ் இரத்த வர்ணமாகமாறும். வியபசாரசங்கல்பம் ஜனிக்கின் சம்ப ரத்தம் பூவர்ணமாகமாறும். ஸ்வப்ரயோஜன ஸ்வலாபங்களுக்கு நார்த்தம் பழ நிறத்தைப்போல மாறும். தெய்வ பக்தியாக மாறினால் தேஜஸ் நிறம் நீலவர்ணமுள்ளதாகமாறும். சர்வ பூதங்களினிடத்து தயை உண்டாகி உலக நன்மைக்காக சதாத்யானித்துக்கொண்டு பாடுபடும் ராஜயோகியின் தேஜஸ் பளிங்கைப்போல் வெள்ளை நிறமாக இருக்கும். இதனால் திவ்ய த்ருஷ்டியுள்ளவர்கள் மனதின் ஸ்திதியை யறிந்து கொள்ளுகிறார்கள். ஆகையால் மனம்மாறும் போதெல்லாம் தேஜஸ் மாறிக்கொண்டிருக்கும். இது தேஜஸின் தர்மம். சாந்தி பர்வத்தில் பிருகு பாரத்வாஜ சம்வாதத்தை வாசித்தல் வேண்டும்.

தேஜஸ்ஸிற்கு மற்றொரு தர்மம் (Law) இருக்கிறது. சாதாரணமாக இந்த தேஜஸ் பிரதி ஜீவனைச் சுற்றி சுமார் இரண்டடி தூரம் வரைக்கும் வியாபித்திருக்கும். கோபியாயிருப்பவன் சாந்தனுடைய சமீபத்தில் வருவானாகில் கோபியின் கோப தேஜஸ், சாந்தனின் சாந்த தேஜஸ் ஒன்றோடொன்று தாக்கி கலக்கும். வெள்ளை ஜலம் சிகப்பு ஜலம் கலந்த மாத்திரத்தில் வெள்ளை கொஞ்சம் சிகப்பாகவும், சிகப்பு கொஞ்சம் வெள்ளையாகவும் மாறும். வெள்ளை ஜலம் விசேஷமாகி சிகப்பு ஜலம் கொஞ்சமான மாத்திரத்தில் சிகப்பு வெளுப்பு நிறமாக மாறும். அவ்வண்ணமே கோபியானவன் சாந்தனுடைய சமீபத்திற்கு வரவே கோபியின் கோப தேஜஸ் கொஞ்சம் சாந்த தேஜஸாகவும், சாந்தனுடைய சாந்த தேஜஸ் கொஞ்சம் கோப தேஜஸாகவும் மாறும். இவ்விதம் மாறுதல் நமக்குத் தெரியாமலே ஏற்பட்டுக்கொண்டிருக்கும். தேஜஸ்மாறுகிறபடி மனதும் மாறு மாகையால் கோபிக்குக் கொஞ்சம் சாந்தமுண்டாகும். சாந்தனுக்குக் கொஞ்சம் கோபபுத்தி ஜனிக்கும். இவ்விதம் விசேஷ கோபமுள்ளவனுடைய சமீபத்திற்குச் கொஞ்ச சாந்தமுள்ளவன் வரின் அவனுடைய சாந்த தேஜஸை கோப தேஜஸ் நாசஞ்செய்து அவ்வித சாந்தன்கூட கோபியாவான். விசேஷ சாந்த முள்ளவன் சமீபத்திற்குக் கொஞ்சம் கோபமுள்ளவன் வரின் சாந்ததேஜஸ் கோப தேஜஸை நாசஞ்செய்து கோபியின் தேஜஸை சாந்த தேஜஸாக மாற்றும்; தத்வாரா கோபி சாந்தனாவான்.

(இன்னும் வரும்)



## நமது வாசகர்கள்

### 1. ஸ்ரீமான் புதுவை C. பங்காரு பத்தர்

இவர், கூடலூரில் நடைபெற்ற சைவசித்தாந்த மகா சமாஜத்தில் 26-12-14 ல் பரோபகாரம் என்னும் விஷயத்தை அங்கு அமர்ந்திருந்த அறிஞர் எல்லோர்மனமுங்கனியச்செய்து சொன்னயம்பொருள் நயம் பொருந்தும்படி உபன்னியசித்தார். இது நமக்கொரு கௌரவத்தைத்தரத்தக்கதன்றோ? இன்னும் நம்மவர்கள் இவ்வித மகோபன்யாசஞ்செய்து புண்யமும் புகழுமடைவார்களென்று பிரார்த்திக்கின்றேன். இப்புனிதர் நமது சென்னைச் சபையில் ஒரு நாள் உபன்யாசஞ் செய்வதாக வாக்களித்திருக்கின்றார். நமக்கு எப்போது புண்ணியம் வாய்க்குமோ அறிந்திலேன்.

T. தருசாமி ஆச்சாரி.

### 2. கோயமுத்தூரில் குலோபகாரிகள்

கோயமுத்தூர் தெற்கு வீதியில் வசிக்கும் விஸ்வபிரம்ம குலத்தார் சுமார் 60-தலைக்கட்டு திருநெல்வேலியார் உண்டு. இவர்கள் உச்சினிமாகாளி அம்மன் கோவிலுக்கு தினப்படி நைவேத்திய பூஜைக்காகவும் வருஷவாரி உற்சவசிலவுகளுக்காகவும் வரி வசூல்களும் நலம்பொல்லங்களின் வசூல்களும் வரவு சிலவுபார்க்க 14ஞ செப்டம்பர்மீ 20தேதி கூடிய மகாசபையில் வரவு செலவு கணக்கு பார்த்து தீர்ந்ததும் சென்னை 'விஸ்வகர்ம குலோத்தாரணசபையின் சிறுவர் வித்யாநிதிக்காக உங்களுடைய வரிவசூல் பொதுவில் ஏதாவது உபகாரம் செய்யவேணும் என்று சபையார்களை ஸ்ரீ K குப்புசாமி ஆச்சாரி கேட்டார். வருஷாவாரி அம்மன் வரவு சிலவுகளில் ஷை சபைக்கு வருஷம் 1-க்கு 12-ரூபாய் பொதுவிலிருந்து கொடுக்கலாம். இவ்வுபகாரத்தை ஷை சபையார் பெரியதாக அங்கீகரிக்க வேணும் என்று ம-ா-ா-ஸ்ரீ கோ. அங்கப்ப ஆச்சாரி, ம-ா-ா-ஸ்ரீ பி. சுந்தர ஆச்சாரி, இவர்கள் சொல்ல ம-ா-ா-ஸ்ரீ நாட்டாண்மைக்காரர்களும் சபையார்களும் ஒரு மனதாய் ஒப்புக்கொண்டு கணக்குப் புஸ்தகத்தில் கையெழுத்திட்டார்கள். சில கனவான்கள் விஸ்வகர்மன் பத்திரிகையைத் தமக்கு அனுப்பும்படியாயும் கேட்டுக்கொண்டார்கள்.

K. குப்புசாமி ஆச்சாரி.

### 3. சபைத் தாம்பூலம்

நமது (விஸ்வகர்மன்) பத்திரிகையில் ஷை சபைத் தாம்பூலம் சுபாசுபங்களில் நடத்த வேணுமென்கிற அபிப்பிராயத்தை நாட்டாண்மைக்காரரும் காரியஸ்தரும் கவனித்து தமது வட்டாரங்களில் இந்த பழக்கங் கையாளுவது உசிதமென்ற பிரஸ்தாபம் காணப்பெற்றோம். ஒரு சிலர் மாத்திரம் இதைக் கையாண்டு வருவதாயும் அநேக ஊரார் இதைக் கவனிக்காமல் காலங் கழிப்பதாயுமறிந்து, இனி ஒவ்வொரு ஊர் கார்யஸ்தர்களுக்கு இப்பத்திரிகை மூலமாய்க் கவனப்படுத்தத் துணிந்தேன். ஆயினும் பொறுத்தருளுவது பெரியோர் கடமை என்றே முதலில் ஓர் ஊர்ப் பெயரையும் குறிப்பிடுகின்றேன். சில ஊர் யாத்திரை செய்து சென்னை விஸ்வகர்மன் பத்திரிகை விஷயமாய் சில ஊர் நண்பர்களிடம் அளவளாவினன். எல்லா ஊர்களைவிட திருவிடைமருதூர் என்னும் க்ஷேத்திரத்தில் கீழ்வீதி முழுவதும் நம்மவர்களே அக்கிராரம்போல் வசித்திருப்பதைக்காண மிகவும் அன்பின் மேலிட்டால் இவ்வூரையே முதலில் குறிக்கலாயினேன். கீழ்க்குறித்த நண்பர்கள் கவனித்து சீக்கிரம் சிரத்தை யெடுத்துக்கொண்டு சபைக்கு கடிதமூலமா யறிவிப்பார்களென்றும் வேண்டிக்கொள்கின்றேன். 1 பழய நாட்டாண்மை குமாரசாமி ஆச்சாரியாரும், 2 அஞ்சாதி நாட்டாண்மை வி. ச. கோவிந்த ஆச்சாரியாரும், 3 மனுவகுப்பு நாட்டாண்மை சி. வீரப்ப ஆச்சாரியாரும் 4 மயவகுப்பு நாட்டாண்மை ப. வெங்கட ஆச்சாரியாரும் 5 த்வஷ்டவகுப்பு நட்டாண்மை அ. சாமிநாத பத்தர் அவர்களும் இதற்கான முயற்சி செய்வார்களென்றே கோரப்படுகிறது. இவ்வைந்துபேரும் இதை முன்னுக்கு கொண்டுவந்தால் மற்ற ஊர்களும் சீக்கிரமே வருமென்பதற்கையமில்லை.

T. தருசாமி ஆச்சாரி.

### 4. வித்வான் ஸ்ரீ. சிவகுருநாத ஆச்சாரியார்

இற்றைக்கு முப்பத்தைந்து வருடங்களுக்குமுன் புதுவைமாநகரத்தில் விஸ்வகர்ம வம்சோத்பவராய், ஆங்கிலம், பிரஞ்சி, தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளை நன்கு பயின்று அவுக்கா என்னும் லாயர் உத்தியோகபதவியில் மிகு கீர்த்திவாய்ந்து வாசாலான வல்லபம்பெற்று பிரஜைகளிடத்து அன்புபூண்டு சாந்த குணமும் தர்மசிந்தனையும் வள்ளல் தன்மையும்பெற்று நம் குல வித்துவசிரோன்மணிகளை ஆதரித்து தமிழின்கண் ஆவலுடையவராய் விளங்கியிருந்த ஸ்ரீமான் தானப்பாச்சாரியார் என்னும் பிரபுவின்பேரில், சென்னை புரசைமாநகரத்தில் வீற்றிருந்த பரம்பரை வித்துவான் ஒழுகரை ஸ்ரீ சடகோபகவிராயர் புத்திரரும் அஷ்டாவதானம் ஸ்ரீ சபாபதிமுதலியாரவர்கள் மாணாக்கருமாகிய ஸ்ரீ சிவகுருநாத ஆச்சாரியார் அவர்கள் சீட்டுக்கவிகளும், ஓரடிப்பதங்கள், பொன்மாலை, மாலைமாற்று முதலியவும் பாடி அநேக பரிசுகள் பெற்றனராம். சில வருடங்களுக்குமுன் ஷை வித்வானை தரிசித்தபோது கீழ்க்கண்ட சீட்டுக்கவியினைப் பாடி இதன் பொருளுரைத்தனர். அது இறந்துபோகாவண்ணம் இங்கு வெளியிடலானேன். நம் மரபினது விவாககாலங்களில் பாடக்கூடிய ஊசல், லாலி, கட்டியம், மங்களம், எச்சரிக்கைகளும் தாம் பாடி வைத்திருப்பதாகவும் அவைகளை அச்சேற்றுவதற்கு பொருளின்றி வருந்துவதாகவும் தெரிவித்தனர். அவர் செய்த பாடல்களையுடையார் அவற்றை நமது சபைக்கு அனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஐந்திலக் கணமதனி லொன்றுமூன் றலகினை
யளந்திடு முராரி பெயர்கொண்
டயனூர்தி தனைவெறுத் தானையின் பொயாகி
அமலர்சடை யணிவதை மறந்
திங்கெனத் தொண்டைநாட் டைநோக்கி நெற்குறி
யிழைத்து மதவேள்செய் போருக்
கிடைந்து தானப்ப னெனுமோர்
இந்த்ரனே வந்தடைந்தான்
சுந்தரப் பெண்ணிடை இலக்கணந் தனிலொன்று
சுரிகுழல் சுரேந்த்ர னூர்தி
சுடர்மிடற் றேடல்குல் சங்கரு மூலமொழிகள்
துதிசக்ரபாணி இருதாள்
கண் அம்பலவன் சாந்திவதனம்
பொன்னிருக்கை வாய்மதிமனே
கலந்து நிதமும் வாழ்கவே.

கா. திருவேங்கட ஆச்சாரி

## 5. சபைகளின் பிரயோஜனங்கள்

சபையாவது என்னவெனில், கல்வி, அறிவு, ஒழுக்கம், மதநீதி, இராஜநீதி, பொதுஜன க்ஷேமம், ஆகிய பல நல்விஷயங்களைக் குறித்துப் பலர் கூடிப் பேசுவதற்கேற்ற இடமாம். ஜனங்கள் வசிக்கும் இடத்தில் சபை யென்பது ஒன்றில்லாமலிருக்குமாகில், அது துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கும் காட்டை யொக்கும். கல்வி, அறிவு, ஒழுக்கம், மதநீதி, இராஜநீதி, பொதுஜனக்ஷேமம் ஆகிய இவ்விஷயங்கட்குரிய சங்கங்கள் எந்த விடத்திலிருக்கின்றனவோ அந்தவிடம் நல்ல விவேகிகள் குடியிருக்கும் நாட்டை யொக்கும். ஆகையால் சங்கமென்பது எல்லாவிடத்திற்கும் மெத்த ஆவசிய மென்றே நாம் உறுதியாகக் கொள்ளவேண்டியது. எல்லாச் சங்கங்களிலும் கல்விச் சங்கமே முதன்மையானது. கற்றறிந்த பலவித்வான்கள் ஒன்று சேர்ந்து கல்வி, கைத்தொழில், ஒற்றுமை, விவசாயம் ஆகிய இவ்விஷயங்களைக் குறித்துத் தர்க்கித்துப்பேசி உண்மைப் பொருளைத்தெரிந்தெடுத்து அதை ஏனையோர்கட்குபயோகமாதற் பொருட்டு நிலை நாட்டுவதற்குரிய இடம் கல்விச்சங்கமாம். கல்விச்சங்கத்திலுள்ளவர்கள் தாங்கள் கற்றதும் கேட்டதுமாகிய பல்வேறு விஷயங்களை தங்கள் மாட்டு அடக்கிக்கொண்டிருத்தல் கூடாது. வேலைசெய்யுங்காலந் தவிர மற்ற காலத்தில் ஏதேனும் ஓர் பகுதி தங்களுக்கு அவகாஸமான காலமாக ஏற்படுத்திக்கொண்டு தாங்கள் கற்றும் கேட்டுமிருக்கிற நல்ல விஷயங்களை மற்றையர்கட் கெடுத்துரைத்து அவர்களை நல்ல வழிகளிற் செலுத்தவேண்டியது. கல்விச்சங்கத்துக் குரியவர்கள் பிறரை அவமதித்துப் பேசுதல், சூது, வாது, கொலை, களவு, மதுபானம், மாமிச போஜனம் முதலிய தூர்ச்செய்கைகளைச் செய்தல் கூடாது. ஐரோப்பியர்களாயிருந்த போதிலும், மகம்மதியராயிருந்த போதிலும், மற்றெந்த ஜாதியாயிருந்தபோதிலும், கற்றுணர்ந்தவர்களென மதிக்கப்படுந் தன்மையுடையோர் அநுபவத்திற்கும் மனசாக்ஷிக்கும் பொருந்தாதவற்றைச் செய்தல்தகாது. இக்காலத்துப் படிப்பினர்களனேகர் அந்நிய பாஷாபிமானவிஷந் தலைக்கேறியகாரணங்கொண்டு கூடா வொழுக்கங்களாகிய சூது, வாது, மதுபானம், மாமிசவுணவு முதலான கொடுஞ் செய்கைகளைச் செய்து வருகிறார்கள். சற்சங்கத்திலும், சத்விருத்தியாலும், பூர்வகாலந்தொட்டு பழகிவந்த ஆரிய மகா ஜனங்களுக்கு முற்கூறிய காரியங்களனைத்துங் கூடாவாம். "அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்க" லென்று சொல்லும் நீதிவாக்கியந்துக் கிணங்க பாரம்பரியமாக அறிவ நூல்களிற் கூறப்படும் விஷயங்களெவைவையோ அவைகளையே தழுவி நிற்கவேண்டுமே யல்லாது, வயிறு வளர்க்கு நிமித்தமாக நேற்று கற்றவித்தையின் செருக்கினால் நம்தேசத்திற்றோன்றிய நூல்களின் மீது துரபிமானம் வைத்து பூர்வந்தொட்டுப் பழகிவந்த சற்சங்கங்களுக்கும், சத்விருத்திகட்கும் மாறாக காலையில் தூங்கியெழுந்திருந்தவுடனே நன்றாகப் பல் தேய்த்து முகங்கழுவாமலும், ஸ்நாநனம் அநுஷ்டானமுதலான துகள் செய்யாமலும், காப்பி எங்கே? டீ எங்கே? ரொட்டி எங்கே? சோடா வாட்டர் எங்கே! பீர் எங்கே? ஒயின் எங்கே? என்று வாய் கூசாமற் பேசுவதும் வெறுப்பான காரியத்தில் விருப்புற்றிருப்பதும் சற்சங்கத்திற்கடுத்த காரியமாமோ? இதனால் காப்பி, டீ ரொட்டி முதலியன, ஓர் காலத்தும் உட்கொள்ளக்கூடாதென யாம் வாதிக்கவில்லை. இக்காலத்தில் அங்கங்கே சங்கங்கள் ஏற்படுத்திவரும் கல்விமான்கள் தங்கள் முன்னோர்களால் அநுசரிக்கப்பட்டுவந்த சத்விருத்திகட்கு மாறாக காலகாலத்தில் உண்ணும் காரியத்தை வைத்துக்கொள்ளாமல் அகாலத்தில் அக்காரியத்தைச் செய்து வருகிறார்களென்பதுதான் எமதுகருத்தே யன்றி வேறல்ல. "பாலேடாயினுங் காலமறிந்துண்" என்று கூறிய நீதிநூலார் பயித்தியம் பிடித்தவரோ? ஆதலால் உண்பது முதலிய காரியங்களும் தகுந்த காலத்தில் செய்யவேண்டுமே யொழிய அகாலத்தில் செய்தல் தகுதியன்று. கல்விச் சங்கத்திற்குரியவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் உபயோகமாயிருக்குமாறு நல்ல இலக்கண இலக்கிய விஷயமாகவும் சன்மார்க்கம், நீதிநெறி, பொதுஜனக்ஷேமம் ஜன ஐக்கியம் முதலிய விஷயங்கட் கேற்றதாகவுமுள்ள புத்தகங்களையும் பத்திரிகைகளையும் ஏராளமாக வரவழைத்து வாசித்து வரவேண்டியதல்லாமல் பிறருக்கும் அவைகளின் கருத்துக்களைப் போதித்து வரவேண்டும். ஒவ்வொரு ஊரிலும் இவ்விதமான கல்விச் சங்கங்களிருக்குமாயின் ஜனங்கள் எல்லா விஷயங்களிலும் அபிவிருத்தியடைவதற்கு சந்தேகமில்லை.

ஞானேந்திரன்



## ஆரோக்ய போதம்

### குளிர் ஜ்வரம்

(செந்தமிழ்)

இவ்வியாதி, காலரா பிளேக் முதலிய கடினரோகங்களைப்போல் பயங்கரமான ஆகிதரிதத்தில் ப்ராணஹானி வருத்தக்கூடியதல்லவென்று நமது அநுபவத்திற் சாதாரணமாய்த் தோற்றப்படினும், இந்த ஜ்வரத்தால் அநேகஜனவர்க்கங்கள் பலஹீனப்பட்டு இகசுகங்களை யனுபவிக்கப் பிராப்தியின்றித் தமதினத்தோர்க்கும் பிறர்க்கும் ப்ரயோஜனப்படாம லிருப்பதுந்தவிர, மனோவ்யாகுலமாய்ப் பரலோக ஞானமுயற்சியு மற்று, இவ்வியாதியைத் தம் தேகத்தில் வளர்த்துவருவதால் இதர ஜனசமூகங்களையும் பீடிக்கச்செய்து, அவர்களுக்கும் துன்பம் விளைவித்து, முடிவில் தாமும் அவர்களும் அகாலமரணத்திற் காஸ்பதமாகிறார்கள். அந்தோ! பிளேக், காலராமுதலிய கடின ரோகங்களில் மாளுவதிலும் இவ்வியாதியால் முடிவுபெறும் ஜனத்தொகை மிகவும் பெரிதே. இவ்வியாதியைப் பாவச் செய்யும் பரமாணு ப்ரமாணமான ஜீவியின் ஜீவசரித்திரத்தை மிகச்சுருக்கமாய் இங்கு வரைந்துவைப்போம்.

இந்த ஜீவியின் உற்பத்திக்கும் வாழ்க்கைக்கும் மனிதன் தேகம் மாத்திரமல்ல, வேறொரு பிராணியின் தேஹமும் அவசியமானது. இந்த ப்ராணி ஒரு வித கொசு என்று வைத்ய சாஸ்திரவித்வான்களிற் சிலராற் கண்டு பிடித்து வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே, குளிர் ஜ்வரம் வ்யாபிப்பதற்கு மூன்றுவித ப்ராணிகள் அவசியமாம். (1) இவ்வியாதியாற் பீடிக்கப்பட்ட மனுஷ்ய தேகம், (2) ஒருவிதகொசு, (3) பரமாணுப்ரமாணமான குளிர் ஜ்வரஜீவி. இம்மூன்றிலொன்று குறைவுபடுமாகில் இவ்வியாதி யுண்டாகாதென்பது திண்ணம்.

குளிர்ஜ்வரத்தாற் கொஞ்சகாலமாக வருந்துவோனிரத்தத்தில் இவ்வியாதியை வியாபிக்கச்செய்யும் ஜீவிகள் அநேகமாய் வளர்ச்சியடைந்து இரக்தத்திற் பாவியிருப்பது ப்ரத்யக்ஷமாகக் காணவேண்டுமேல், அவனது ஒரு விரல்முனையில் ஒரு சிறிய ஊசியாற்குத்தியெடுக்கப்பட்ட ஒரு துளி யிரத்தத்தைச் சூக்ஷ்மதரிசினி யந்திரத்தாற் பரிசோதிக்கிற் காணலாம். இப்பரிசோதனையால் அவற்றின் ஆபாலவிருத்த அவஸ்தைகளெல்லாம் கரதலாமலகம்போற் காணப்படும். இவற்றில் வியாபகாவஸ்தை பூர்ணித்திருக்கும் ஜீவிகள் நிறைந்துள்ள காலத்தில், ஒரு கொசுகு தனது க்ஷுத்பாதை நிமித்தம் அவ்வியாதியஸ்தனைக் கடித்து, அவனிரக்தத்தையும் அவ்விரக்தத்துடன் அந்த ஜீவிகளையும் உட்கொள்ளுகின்றது. இவை அக்கொசுகின் இரைப்பை சேர்ந்து ஜீரணிக்கப்பெறாமல், போஜன ரஸங்களுடன் சேர்ந்து, கொசுகின் ஹிர்தயஞ்சென்று பிறகு அவயபோஷணார்த்தம் செல்லும் இரக்தத்துடன்கலந்து அக்கொசுகின் தேஹமெங்கும் வியாபிக்கின்றன.

இந்த ஜீவிகள் மனுஷ்யாக்கத்துடன் போந்த அவஸ்தையிலேயே கொசுகினுடலில் வியாபிக்கின், அவை வியாதியைப் பாவச் செய்யுங் குணமுடையவையாயிரா. கொசுகின் தேஹத்திற் பிரவேசித்தவுடன் அவை உருமாற்றமுடையனவாய்ப் பலவாய்ப்பெருகி வியாதியை மற்றொரு மனித தேகத்திற் பாவச்செய்யும் விசேஷ சக்தியுடையவையாய் வளர்ந்து விடுகின்றன. இவற்றில் சில கொசுகின் வாயூறலிலும் நிறைந்துள. இவ் வவஸ்தையுடைய கொசுகு தேகாரோக்யமுடைய வேறொரு மனிதனைக் கடித்தால், கடித்தவிடத்தில் அதன் வாயூறலின் வழியாய் அநேக ஜீவிகள் அவனது இரத்தத்திற் பிரவேசிக்கின்றன. பிரவேசித்தவுடன் ஒன்று இரண்டு—இரண்டு நான்கு—நான்கு பதினாறாகப் பெருகி வளர்ந்து, இந்தப் புதுமனிதனிரக்தத்தைத் தங்கள் வாஸஸ்தானமாக்கி, அதன் இரஸ பாகங்களைப் பருகி யுணவுகொண்டு, அவனைப் பலஹீனப்படுத்தி, அவன் வாழ்நாட்களைப் பலவிதத்தில் நிஷ்ப்ரயோசனப்படுத்துகின்றன.

கொசுகின் வாயூறல்வழியாய் இந்த ஜ்வர ஜீவிகள் இரத்தத்திற் பிரவேசித்து அதன் சாராம்சமான சிவப்பு அணுக்களைத் தாக்கி அவற்றின் இரஸத்தைப்பருகி வளர்ந்தவுடன் இரட்டிப் பிரட்டிப்பாகப் பெருகித் தாம் வசிக்கும் இரக்த அணுவிற் சாராம்ஸ மில்லாமற் போவதால், சாராம்ஸமுள்ள இதர அணுக்களைத் தாக்குகின்றன. இப்படி இரக்தத்தின் சிவப்புஅணுக்களை தாக்கும் பொழுதே குளிரும் ஜ்வரமும் உண்டாகின்றன. அவற்றிற் ப்ரவேசித்தவுடன் ஜ்வரம் நின்று விடுகிறது. மறுபடியும் 24-மணிக்குள்ளோ 48-அல்லது 72 மணிக்குள்ளோ குளிரும் ஜ்வரமும் ஆரம்பிக்கின்றன. அதாவது சில ஜீவிகள் 24 மணிக்குள் மறுபடியும் தாம்வசிக்கும் இரத்த அணுக்களினின்றும் புதிய அணுக்களிற் ப்ரவேசிக்கின்றன. வேறுசில 48-மணிக்குள் தாம் பிரவேசித்த அணுவின் சாராம்சங்களை முடித்துவிட்டு அவ்விடத்திற் பெருகிவளர்ந்து போஷண நிமித்தம் வேறு சிவப்பு அணுக்களைத் தாக்குகின்றன. மற்றவை 72-மணிக்குள் இதர அணுக்களைத் தாக்குகின்றன. இப்படி அடிக்கடி தாம் ஜீர்ணம் செய்துகொண்ட இரக்த அணுக்களினின்று பெருக்கமுடையதாய் ஆரோக்யமான இதர அணுக்களைத் தாக்கித் தாக்கி நாசஞ் செய்கின்றன.

இந்த ஜீவிகள் சாதாரணமாக மூன்று ஜாதி பேதமுடையவையாய் நமது பாதகண்டத்திற் காணப்படுகின்றன. (1) 24 மணிக்குட் பெருகுபவை ஒரு நாள் விட்டொருநாள் குளிர்ஜ்வரம் உண்டாக்குபவை (2) 48-மணிக்குட் பெருகுபவை—மூன்றுமுறை ஜ்வரம் உண்டாக்குபவை, (3) 72 மணிக்குட் பெருகுபவை—நான்காமுறை ஜ்வரமுண்டாக்குபவை—என்பவைகளே. இம்மூன்றுவித ஜ்வரங்களும், ஆரம்பத்திற் கடினமாயும் நாட்செல்ல நாட்செல்ல வலுக்குன்றியும் பிறகு குறித்த மணி நேரங்களிலல்லாமல் வேறு சமயங்களி லுண்டாகியும் வரக்காண்கிறோம். தவிர இம்மூன்றுவித ஜ்வர ஜீவிகளும் ஒரே மனிததேகத்திற் பிரவேசித்து இரக்த

பரிசோதனையாலன்றி ஜ்வரத்தால் இன்னின்னவை யென்று பகுத்தறிய முடியாவண்ணம் ஆக்ரமிப்பதையும் காண்கிறோம். சில மனிதர்கள் கொஞ்ச நாள் ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டுப் பிறகு சில நாட்களில் ஜ்வரமேயில்லாமலிருந்து தேகம் பலஹீனப் படும்பொழுதோ சீதள பதார்த்தம் சாப்பிடுவதாலோ குளிர்காற்றிற் சஞ்சரிக்க நேரிடிலோ மறுபடியும் ஜ்வரத்தால் பீடிக்கப்படுகிறார்கள். இப்படி ஆரம்பிப்பதற்கும் புதிய ஜ்வரஜீவிகள் இரத்தத்திற் ப்ரவேசிக்கவேண்டு மென்றில்லை. முன் பிரவேசித்த ஜீவிகளின் உற்பத்தி வாழ்வு அழிவு என்னும் அவஸ்தைகளாலேயே உண்டாகலாம்.

இதற்குள், தேகம் வெளுத்து இரத்தம் க்ஷீணித்து ஈரல் மண்ணீரல் நுரையீரல் முதலிய அவயவங்கள் பெருத்துப் பலஹீனப்பட்டுக் கடவுளால் அவைகட்கு நியமிக்கப்பட்டிருக்குந் தொழில்களைச்செய்ய முடியாமற் போகின்றன. ஈரல் (Liver) பெருக்கின், நாவுக்கு ருசியின்மை, அஜீர்ணம், மலக்கழிவு கஷ்டமாகவோ அல்லது அசாதாரணமாகவோ உண்டாவது, யாதொரு முயற்சிக்கும் தான் செய்துவருந் தொழிலுக்கும் உற்சாகமின்மை முதலிய கெடுதிகளையுண்டாக்கும். வலது பக்கவிலா யெலும்புகட்குக் கீழே கையால் மெதுவாக அழுத்திப் பரிசோதிக்கின், ஈரல் பெருத்திருக்கில் ஸ்பரிசிக்கலாம். மண்ணீரல் (Spleen) பெருக்கின், இது இரைப்பையைத்தாக்குவதால் வழக்கப்படி யுட்கொள்ளும் போஜனமருந்த வயிற்றுவலியும் சயனத்திலும் சஞ்சரிப்பதிலும் இடப்பாகம்நோயும் பலஹீனமும் பெருமூச்சுவாங்கமுடியாமை முதலியகெடுதிகளும் உளவாகும். மண்ணீரல் பெருக்கின் இடது பக்கவாரியெலும்புகட்குக்கீழ் முன்போற் கையழுத்திப்பரிசோதிக்கலாம். இதற்கேபெரும்பாலும் "ஜ்வரக்கட்டி" என்ற நாமம் வழங்குகின்றது. நுரையீரல் (Lungs) பெருகின் இரேசககஷ்டம் இருமல் சயனசுகமின்மை இரத்த ஓட்டங்குன்றுவது சஞ்சாரசக்தியின்மை புத்திக்கூர்மைக்குறைவு முதலிய அநேக கெடுதிகள் நேரிடும். இந்த அவயவம் மார்பினகத்து மார்பெலும்புக் கூட்டிலடைபட்டிருப்பதால் ஸ்பரிசசாத்தியமானதன்று.

V. S. அருணாசலம் பிள்ளை

---

**இதலியில் பூகம்பம்.**—இத்தலி நாட்டில் பூகம்பமுண்டாய் அவ்கோனே என்னும் பட்டணமுதல் நேப்பில்ஸ் என்னும் பட்டணம் வரை 200-மைல் தூரமுள்ள பிரதேசம் பாழாயிற்று. பூமியதிர்ச்சியினுல் 12-ஆயிரம் ஜனங்கள் இறந்தனர்; 20000 ஜனங்கள் காயமடைந்தனர். ரோம் நகரத்திருந்து 80-மைல் தூரத்திலுள்ள அவெஸெனோவில் 8000 பேர் இறந்தனரென்றும் ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தனரென்றும் தெரிகின்றது

## தொழிற்றுறைகள்

இந்த மாகாணத்திலிருந்து கப்பல் வழியாய் வெளியே போகும் எண்ணெய் வித்துக்கள் 530-லக்ஷ ரூபாய் மதிப்புள்ளதென்றும், வெளியே போகும் எண்ணெயின் மதிப்பு 45-லக்ஷ ரூபாய்க் கதிகமில்லையென்றும் கணக்கிடப்படுகின்றது,

*
* *

1827-ஆம் வருஷம் 'ஹோலர்' என்பவீர் அலுமினியப் பொருளில் குண்டுசிடளவு கொண்டுவந்தார். அக்காலத்தில் அது சுத்திசெய்யப்படாமல் இருந்தது. இப்போதோ அலுமினியம் ஒருவிதமான கைத்தொழிலாயுண்டாகி கோடிக்கணக்கான ரூபாய் வியாபாரம் அதில் நடந்துகொண்டுவருகின்றது.

*
* *

'க்ளோரின்' என்பது 'ஸாக்கிவால்' என்பவரால் 1877-ஆம் வருஷத்திற் கண்டு பிடிக்கப்பட்டது. 1800 ஆம் வருஷம் 'பிரோலிக்ளியஸ்' என்பவர் அது என்னென்ன பொருள்கள் சேர்ந்து உண்டானது என்பதைக் கண்டுபிடித்தார். 1869-ம் வருஷம் வெல்டன் என்பவர் க்ளோரின் சலவைக்கு உபயோகப்படுமென்று தெரிந்துகொண்டு இதை ஒரு கைத்தொழிலாக ஏற்படுத்தினர்.

*
* *

1669 வருஷத்தில் ஹாம்பர்க் கிலிருந்த ப்ராண்டட் என்பவர் நிலாக்கினியைக் கண்டுபிடித்தார். 1884-ம் வருஷம் இப்பொருள் நெருப்புக்குச்சி வியாபாரத்திற்கு உபயோகப் படுத்தப்பட்டது. இப்போதோ ஒவ்வொரு பெரிய கம்பெனியிலும் 400-லக்ஷம் நெருப்புக்குச்சிகளடங்கிய, 400-லக்ஷம் நெருப்புப் பெட்டிகளைச் செய்து எண்ணிறந்த வியாபாரம் நடக்கின்றது.

*
* *

மஞ்சளை அன்னிய நாட்டார்கள் அநேக விதமான சாயங்களுக்கு உபயோகப்படுத்துகிறார்கள்; லண்டன் பாரிஸ் அமெரிக்கா ஜெர்மனி பினுங்கு சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவருகிறது. தற்காலம் ஐரோப்பாவில் யுத்தம் நடப்பதால் வியாபாரம் தடைபட் டிருக்கின்றது.

*
* *

சீசாக்களுக்கு மூடியாக உபயோகப்படும் கார்க் ஒரு மரத்தினுடைய மேல்பட்டையாகும். அம்மரம் பெரும்பான்மையும் ஸ்பெயின், போர்த்துக்கல் தேசங்களில் உற்பத்தியாகிறது. ஸ்பெயின் நாட்டில் கார்க் செய்வதற்காக 107 பட்டணங்களில் 892 தொழிற்சாலைகள் இருக்கின்றன. தினசரி 2 ரூபாய் சம்பளம் பெற்று நாற்பதினாயிரம்பேர் அங்கு இத்தொழிலால் ஜீவனஞ் செய்துவருகின்றார்கள். சென்ற 1912-ம் வருஷத்தில் மாத்திரம் ஸ்பெயின் தேசத்தில் 78-ஆயிரம் டன் கார்க் செய்யப்பட்டது.

*
* *

பட்டுக் கோட்டை தாலூக்காவில் மணிலாக் கொட்டை ஏராளமாய் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மணிலாக்கொட்டை வியாபாரமே அவ்வூராருக்கு முக்கிய தொழில். அதனால் அதிகலாபம் அடைந்து வருகிறார்கள். சில்லத்தூர் ஜெமீன்தாரான மிஸ்டர் S R M A R ராமசாமி செட்டியார், மணிலாக் கொட்டைகள் ஏராளமாய் அந்நிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறதைக் கண்டு, அது அந்த ஸ்தலத்திலேயே உபயோகமாகி வரும்படியாய், அக் கொட்டைகளில் கொஞ்சம் பாகத்தை தருவித்து எண்ணெய் இறக்கி வருகிறார். இவர் இப்போது அங்கு ஸோப் செய்யும்தொழிற்சாலை ஸ்தாபித்தார். இது பலப்பட்டால் தகுந்த நிபுணர்களை வரவழைத்து அவர்களுடைய உதவியைக் கொண்டு மெழுகுவர்த்திகள் முதலிய வேறு தொழில்களையும் நடத்துவதாக யோசித்திருக்கிறார்.

*
* *

உலகத்திற்கு வேண்டிய தகரம் நாளுக்குநாள் தென் சீன தேசத்திலிருந்து அதிகமாகக் கிடைத்துக்கொண்டு வருகிறது. இப்பொழுது யூனன் தேசத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. க்வான்டங், க்வாங்கிஸீ என்னும் தேசங்களில் ஏராளமான தகரங்கள் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. தென் சீன தேசத்தில் குறைந்தது 300 சதுரமைல் விசாலமுள்ள தகரச்சுரங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் அனேக தினுசுகளுள்ள தகரங்களும் பல அளவுகளுள்ள சுரங்கங்களும் இருக்கின்றன. அவைகள் சில காலத்திற்கு முன்பிருந்து வெட்டப்பட்டு வருகின்றன. 1912-ம் வருஷத்தில் 10,000 டன் தகரங்கள் சுரங்கத்திலிருந்து வெட்டப்பட்டு ஏற்றுமதிக்குத் தயாராக்கப்பட்டன. இந்தப் பரிமாணமும் சீக்கிரம் அதிகப்படுமென்று நம்பப்படுகிறது. யூனன் தேசத்தில் சுரங்கம் வெட்டப்படுவது ஜலக்குறைவினாலும் போக்கு வரவு சாதனக் கஷ்டங்களினாலும் விறகின் விலை யதிகத்தினாலும், வேலை செய்பவர்களுக்கு ஆகாரக் கஷ்டத்தினாலும் இடையூறு படுகிறது. இப்பொழுது ஏராளமாகத் தகரத்தை சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கலாமென்றால், நிலம் யாருக்குச் சொந்தமென்பது நிலையில்லாதிருப்பதாலும், சீன ராஜாங்கத்தார் இதில் சிரத்தை எடுத்துக்கொள்ளப் பிரியமற்றிருக்கிறதினாலேயும் அதுவும் இடையூறா யிருக்கிறது.





## பாகசாஸ்திரம்

**பருப்புக் குழம்பு**—மூன்றுபடி ஜலங் கொள்ளுகிறதோர் தவலையில், 2-படி நல்ல ஜலம் விட்டுக் காய்ச்ச வேண்டியது. கால்படி துவரம்பருப்பு, அரைபலம் நெய், வீசம்பலம் மஞ்சள்பொடி-இம்மூன்றையும் ஷை ஜலம் கொதித்துக்கொண்டிருக்கும்போது அதில் ஒவ்வொன்றாய்ப் போட்டு இவையும் கொதிக்க ஆரம்பித்தவுடனே மூடி விடவேண்டும். அரைபலம் மிளகாயைக் கொஞ்சம் நெய்யிலாவது எண்ணெயிலாவது பக்குவமாக வறுத்துக்கொண்டு, கால்பலம் கொத்துமல்லி விரை, வீசம்பலம் மிளகு, அரைவீசம் பலம் சீரகம், வீசம்பலம் வெந்தயம், $1\frac{1}{4}$-பலம் கொப்பரைத்துருவல் இவற்றைத் தனித்தனியாகக் கொஞ்சம் நெய்யிலாவது எண்ணெயிலாவது வறுத்துக்கொண்டு, முன்னமே வறுத்து வைத்திருக்கும் மிளகாயோடு சேர்த்துக் கலந்து வெண்ணெய்போ லரைத்துக் கொள்ள வேண்டும். ஒன்றரைபலம் புளியை அரைக்கால் பல நல்ல ஜலத்தில் கரைத்து, ஷை சம்பாரத்தை அதில் கலந்து அடுப்பேற்றி ஒன்றேயரைக்கால் பலம் பொடிசெய்த உப்பைப்போட்டுக் கொதிக்க வைக்கவேண்டும். கொஞ்ச நேரத்துக்குப்பின், பருப்பு செம்மையாய் வெந்த பதம் பார்த்துக்கொண்டு, அந்த வெந்த பருப்பைக் கட்டுடன் ஷை கொதிக்கும் புளியிற் கொட்டி நன்றாய்க் கலந்து கொடுத்து, திரும்பவுங் கொதிக்க விட்டுக் கொஞ்சம் ஜலஞ் சுண்டிய பிறகு அந்தக் குழம்பில் கொஞ்சத்தைக் கரண்டியாலெடுத்து, குழம்பு ஜலம் போலிருந்தால்-முக்காற்பலம் அரிசிமாவை வீசம்படி ஜலத்திற்கரைத்து ஷை குழம்பிற் கொட்டிக் கிளறிக் கொடுத்து, ஒரு கொதி கண்டவுடனே அந்தப் பாத்திரத்தைக் கீழே யிறக்கிவைத்து, அரைபலம் நெய், அரைக்கால் பலம் மிளகாய், அரைக்கால் பலம் கடுகு இம் மூன்றையுங்கொண்டு ஒரு கரண்டியில் தாளிதம் தயார் செய்து குழம்பிற் கொட்டி, அந்தக் கரண்டியினுற்கிளறிப்பின்பு, ஒரு ரூபா யெடை காயத்தை ஜலத்தில் கரைத்துக் குழம்பில் விடவேண்டும்.

---

**கத்வால் ராஜா.**—கத்வால் சமஸ்தானம் என்பது நிஜாம் ராஜ்ஜியத்தைச் சேர்ந்தது. ஒரு ஹிந்து சிற்றரசரால் ஆளப்பட்டு வருகிறது. ராய்ச்சூர் ஜில்லாவுக்குக் கிழக்கே இருக்கிறது. அதில் 214 கிராமங்கள் சேர்ந்திருக்கின்றன. 864 சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. ஜனத்தொகை 968491; அதில் 5-லட்சம் ரூபாய் உற்பத்தி. அந்த சமஸ்தானத்துச் சிற்றரசர் நிஜாம் அரசருக்கு வருஷத்திற்கு 86000 ரூபாய் கப்பங் கட்டி வருகிறார்.

## சண்டையைச் சார்ந்தவை

இங்கிலாந்திலுள்ள பாரிஸ்டருள் சுமார் 550 பேர் போர்முகத்திற்குச் சென்றனர்.

*
* *

ஜெர்மனி என்ற ஏகாதிபத்தியத்தின் முக்கிய தேசம் பிரஷ்யா. பிரஷ்யாவின் அரசர் தான் ஜெர்மனியின் சக்ரவர்த்தி. பவேரியா, ஸாக்ஸனி, வுர்டம்பர்க் என்ற நாடுகள் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தில் அடங்கியுள்ளவை.

*
* *

அடுத்த ஏப்ரல் மாதம் 27ந் தேதி யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்படும்; ஜெர்மனி அழிந்துபோம். கெய்ஸர் (ஜெர்மன்) சக்ரவர்த்தி தற்கொலை செய்து கொள்வார் என்று கவுண்ட் பாஷிரி யென்பவர் பாரிஸ் பிகாரோப் பத்ரிகையில் எழுதியிருக்கிறார்.

*
* *

கலீஷியாவில் இறந்த ஆஸ்டிரியர்களைப் புதைக்க ஒருநாள் ருஷியருத்தரவு கொடுத்தனர். அன்று 42-அடி அகலமும், 4-மைல் 5-பர்லாங்கு நீளமுமுடைய குழியைத்தோண்டி, அதில் 40000 பிணங்களை ஆஸ்டிரியர் புதைத்தனரென்று நியூயார்க் டெலிகிராம் என்னும் பத்திரிகை கூறுகின்றது.

*
* *

இப்போது போர்முகத்திலிருக்கும் ஜெர்மன் சக்ரவர்த்தியின் பாட்டனார் பிரான்சுக்கும் பிரஷ்ஷியாவிற்கும் முன் சண்டை நடந்தபோது நான்கு தளமுடைய ஒரு வஜிர ஆபரணத்தை வைத்திருந்தாராம். தமக்கு வெற்றியுண்டாவதற்குக் காரணம் அவ்வாபரணமென்று அவர் நம்பியிருந்தனராம். இப்போதுள்ள ஜெர்மன் சக்கரவர்த்தியாரிடத்து வெண்மையும் பழுப்புங்கலந்த கல் மோதிரமொன்றிருக்கின்றதாம். அம்மோதிரம் தமது குல க்ஷேமத்திற்குக் காரணமா யிருக்கின்றதென்று அவர் பூரண நம்பிக்கையோடிருக்கின்றனராம்.

*
* *

ஜெர்மானியர்களின் கடற்படை ஸ்தலங்களில் மிகவும் பிரவித்தி பெற்றது கீல் கால்வாய். பால்டிக் கடலிலிருந்து வடகடலுக்குச் செல்லவேண்டுமானால், டென்மார்க் தேசத்தைச் சுற்றிக்கொண்டு வெகுதூரம் போகவேண்டும். ஆகவே, வடகடலைச் சீக்கிரத்தில் சேர்வதற்காக, ஜெர்மனியின் ஒரு பாகமாகிய "ஷெல்ஸ்விக் ஹால்ஸ்டின்" என்னும் நாட்டின் குறுக்கே அந்தக் கீல்கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. அக்கால்வாயை வெட்டிமுடிக்க முதலில் 78 லட்சம் பவுண் செலவாயிற்று. மறுபடியும் அக்கால்வாயைச் சீர்திருத்தி விசாலிக்க ஒருகோடி பவுண் செலவாயிருக்கிறது. ஆதியில் அக்கால்வாயில் 29½ அடி ஆழமுள்ள ஜலமேயிருந்தது. இப்பொழுதோ சண்டைக்கப்பல்களில் மிகவும் பெரியதும் முதன்மையானதுமான டிரேட்நாட் என்னும் கப்பல்களும் ஓடும்படி அவ்வளவு அகலமாயும் ஆழமாயும் அக்கால்வாயைத் தோண்டியிருக்கின்றனர். அக்கால்வாயானது கேயிஸர் வில்லியம் கால்வாய் எனப்படும்.

*
* *

போர்முனையில் தன்னை ஒரு நாய் காப்பாற்றியதைப்பற்றி, பிரஞ்சு ஸோல்ஜர் ஒருவர் எழுதியிருக்கும் கடிதம் பின்வருமாறு:—

"போர்க்களத்தே நாங்கள் இருந்த காலையில் ஒரு நாய் பசியால்வாடி என்னையடைந்தது. உடனே அதற்குச் சிறிதளவு ஆகாரமளித்தேன் அதுமுதல் அந்நாய் எக்காலத்தும் என்னுடன் உண்பதும் உறங்குவதும் போர்முனைக்கு உடன் செல்வதுமாயிருந்தது. கடுமையாகப் பீரங்கிப் பிரயோகம் நடக்கும்பொழுதும், அது என்னுடனேயே இருக்கும். ஒருநாள் போர்க்களத்தின் ஒரு மூலையில் நான் இரண்டு கால்களிலும் குண்டுபட்டு விழுந்துவிட்டேன். ஒருகாலில்பட்ட காயம் கடுமையாயிருந்ததனால் நான் நகரமுடியவில்லை. ஆகவே, அவ்விடத்திலேயே கிடந்தேன். என்னுடனிருந்த மற்ற ஸோல்ஜர்கள் இரவானதும் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்று விட்டனர். இரவிலோ பனி மிகக்கடுமையாயிருந்தது என் னண்டையில், ஐவர் மாண்டுபோய்க் கிடந்தனர். நாங்கள் இரவில் போய்த் தங்கவேண்டிய அரண் 100 கஜ தூரத்திற் கப்பாலிருந்தது. அங்கு விடின், மிகவும் சௌகரியமாயிருக்கலாமென எனக்குத் தோன்ற, உடனே மெதுவாய்த்தவழ்ந்துசெல்ல முயன்றேன். ஆயினும் என்னால் முடியவில்லை. ரணத்தினால் எனக்குண்டான வலியோ சொல்லி முடியாது. ஆகவே அந்நாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு ஜாடைசெய்தேன். உடனே அந்நாய் எனது குறிப்பை யுணர்ந்துகொண்டு, என்னை மெதுவாய் இழுத்துச் சென்றது. ஆகவே நான் அரண்சேர்ந்தேன். அன்றிரவு முழுவதும் அது என்னுடன் படுத்திருந்து எனக்குச் சூடுண்டு பண்ணியது. மறுநாட்காலையில் வைத்தியன் வந்து, என்னை சிகிச்சைசெய்யத் தூக்கிச்சென்றனர்"

*
* *

மிஸ்டர் T. S. நாராயண சாஸ்திரியார் B A; B. L. சென்றமாதம் செய்ததோர் உபன்னியாஸத்தில் மகாபாரத யுத்தத்திற்கும், இப்போது நடக்கும் ஐரோப்பா யுத்தத்திற்கு முள்ள பொருத்தத்தை எடுத்துக்காட்டினார். அதன் சுருக்கம்வருமாறு.

மகாபாரத கவி போர்புரிந்த இருதரத்தாரையும் இரண்டு விருக்ஷங்களுக்கு ஒப்பிட்டு துரியோதனன், கர்ணன் முதலான கௌரவர்களை அதர்ம விருக்ஷத்திற்கும், தருமபுத்திரர் அர்ஜுனன் முதலியோரை தருமவிருக்ஷத்திற்கும் உவமையாகச் சொல்லியிருக்கிறார்.

இவ்விருதரத்தாருக்கும் வெறுப்புண்டாவதற்குக் காரணமா யிருந்தவள் இரூபா என்கிற திரோபதி. இரூபா என்றால் நான்கு பக்கத்திலும் ஜலத்தினால் சூழப்பட்டும், ஆழமாயும் விரிவாயுமுள்ள நதிகளையுமுடைய பூமி என்றும் பொருள்கொள்ளலாம். இத்தகையதுதான் இரூபா என்னும் பெயரையொத்த ஐரோப்பா என்னும் கண்டமும். அந்தக்கண்டத்தில் ஏகாதிபத்தியம் வேண்டுமென்றே இப்போது இப்பெரிய யுத்தமும் இவ்வளவு மும்முரமாய் நடக்கின்றது. அளவற்ற பேராசையுடைய துரியோதனனை கவியானவர் 'ப்ரோர்ஷ்ய' என்று சொல்லியதைப்போலவே, அந்த குணத்தையுடைய பிரஷ்ஷியாவின் இளவரசரையே அம்மரத்திற்கு ஒப்பிடலாம். தர்கிய என்னும் அடிமரமாகிய கர்ணனுக்கு துருக்கியை ஒப்பிடலாம். அதாவது இச்சண்டையில் அது இருக்குமோ அல்லது அழிந்து விடுமோ என்று சந்தேகிக்க வேண்டியதாயிருப்பதால், அதற்குத் தர்கியம் என்னும் அடைமொழி நன்குபொருந்துகின்றது. வீதமான: என்னும் கிளைகளாகிய சகுனிக்கு 'பெத்மேன்' என்னும் ஜெர்மானிய பிரதான மந்திரியே உவமை. சகுனியைப் போலவே வெட்கத்தை யொழித்து, தான் சொன்னபேச்சைத் தவறி பெல்ஜியத்தின்மேல் படையெடுத்ததற்கு மூல காரணமாயிருந்தார். பூவுக்கும் பழங்களுக்கும் உவமையாக இரண்டு குணங்களையுடைய துச்சாஸனுக்கு ஆஸ்திரியா ஹங்கேரி என்னும் தேசத்தாசரே உவமை. ஆஸ்திரியா என்பதற்கு போர் புரிவதற்கு மூலகாரணமாயுள்ளவனென்று இவ்விடம் பொருள் கொள்ள வேண்டும். அங்காரிய என்பதன் பொருள் மற்றவர்களைவிட மேலானவன் என்பதற்கேற்ப, ஹங்கேரி முழுமனதுடனும் சண்டையிடவில்லை என்பது எல்லாருக்குந் தெரிந்த விஷயம்.

ஜாலமானிய: கேஸரி என்னும் வேராகிய திருதராஷ்டிரனுக்கு ஜெர்மனி தேசத்துக் கெய்ஸரை ஒப்பிடலாம். அளவற்ற சேனையும் சிங்கத்தைப்போன்ற பராக்கிரமத்தையு முடையவன். துரியோதனனுடைய உப்பைத்தின்ற கடனுக்காக அவனுக்குதவிபுரிந்த பீஷ்மர் முதலியவர்களைப்போல ஜர்மனியிலும் அநேகம் பேர் அரசன் கட்டளைக்குப் பயந்து போர் புரிகின்றனர். பீஷ்மரைப் போலவே தீர்க்காலோசனையுடையவரும் எல்லாராலும் நன்கு மதிக்கப்பட்டவரும், பிரஜைகளுக்கு நன்மையே செய்து அவர்களுக்கு யாதொரு தீங்கும் வரவிடாமல் காத்துக்கொண்டிருந்தவருமாகிய பிஸ்மார்க் என்பவரை சுமார் 20-வருஷங்களுக்கு முன்னரே கெய்ஸருடைய துராசைக்கு உதவி புரியாமையினால் தள்ளிவிட்டு, வேறொரு மந்திரியை கெய்ஸர் நியமித்துக்கொண்டார். போர்க்கருவிகளை ஏராளமாகச் சேர்த்துக்கொண்டு உக்கிரமாகச் சண்டையிடும் கிருபாசாரியருக்கு க்ரூப் என்ற போர்க்கருவிச் சாலையை ஒப்பிடலாம்.

யுதிஷ்டிரரை பலஞ்ஜய என்றது போலவே, அதே பொறுமையும் பராக்கிரமமுடைய பெல்ஜியத்தைத் தருமவிருக்ஷமாகக் கொள்ளலாம். அதனடிமரம் பிரான்ஸ் என்னும் அர்ஜுனன். அதாவது செல்வத்திலும் தேசாபிமானத்திலும் ஸ்வாதந்திரியத்திலும் மற்றோரால் மதிக்கப்படும் பிரான்சு தேசமே அடிமரம், அதன் கிளைகள் ருக்ஷஸார என்கிற பீமஸேனன். ருக்ஷ என்றால் ருஷியர்கள், ஸார என்றால் அவர்களுடைய சக்கிரவர்த்தி யாகிய ஸார் என்பவர். பீமஸேனனைப் போலவே அவர்கள் வெள்ளம்போலத் திரண்டு வந்து முரட்டுத்தனமாயும் பயங்கரமாயும் சண்டையிடுவார்கள். அமமரத்தின்பூ ஜாபான். நகுலனைப்போலவே ஜப்பானும் தன்னுடைய முயற்சியினாலேயே முன்னுக்கு வந்து இப்போது உலகத்திலுள்ள பலமான தேசங்களிலொன்றாக விளங்குகின்றது. அவ்வாறே பழமாகிய ஸெவ்யம் என்னும் சகாதேவனைப்போலவே ஸெர்வியா உள்ளது. அவர்கள் தேசம் வெகு சிறியதாயினும், தங்களுடைய பராக்கிரமத்தினாலும் தைரியத்தினாலும் தங்களைவிட அநேக பங்கு பெரியதாகிய ஆஸ்திரியாவைத் தோற்கடித்து விளங்கியதனால் பிறரால் சேவிக்கப்படும் மகிமை யுடையவரென்று சொல்லலாம். மற்றும் மூன்று பேர்களிலொன்றாகிய ஜியார்ஜி என்னும் கிருஷ்ணபகவானுக்குப் பாரத யுத்தத்தில் யாதொரு லாபமும் வேண்டாவிடினும், மேற்கு திக்கிலிருக்கிற துவாரகைத் தீவினின்றும், துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனார்த்தம் வந்து தர்மவிருக்ஷமாகிய பாண்டவர்களைச் சேர்ந்தது போலவே, நம்முடைய ஜார்ஜ் சக்கிரவர்த்திக்கு இப்போது நடக்கும் ஐரோப்பா யுத்தத்தில் யாதொரு பலனும் வேண்டாவிடினும், ஜர்மனி துருக்கி முதலிய துஷ்டர்களை அடக்கி பெல்ஜியம், பிரான்சு முதலிய சாதுக்களைக் காப்பாற்றும் பொருட்டு பாதகண்டத்திற்கு உவமையான ஐரோப்பாவுக்குத் தன்சைன்யங்களையனுப்பி போர் புரிகின்றார். அவருடைய பெயரினாலேயே இன்னும் அவருக்கு மேன்மேலும் தேசங்கள் சேரும் என்பது தெரியவரும். இன்னுமிரண்டு வேர்கள் பாரதர்கள்; அதாவது கீர்த்தியை யடைவதிலேயே ஊக்கமுடையுள்ள நம்முடைய இந்திய சைன்யங்களும், ஆங்கிலர், அதாவது தங்களுடைய தேசத்திற்குத் தங்கள் உடலையும் கொடுக்குந் திறமையை யுடைய ஆங்கிலேய துருப்புகளுமே.

மந்திராலோசனையில் கிருஷ்ணருக்கு விஜயர் அல்லது ஜியார்ஜி என்று பெயர். அதுபோலவே லாயிட் ஜார்ஜி யென்றொரு மந்திரியிருக்கிறார். கிருஷ்ணபகவான், அஸ்வகத அல்லது குதிரையின் மேலேறிக்கொண்டு அர்ஜுனனுக்கு ஸநாதன தர்மத்தைத்திரட்டிப் போர்புரியும்படி போதித்தது போலவே, ஆஸ்க்வித் என்னும் பிரபு சண்டை நம்மால் வருவித்துக்கொள்ளப்பட்டதல்ல வென்றும், நம்மையறியாமல் வந்துவிட்டதனால், புறங்கொடாமல் அதைக் கடைசிவரையில் நடத்தியே தீரவேண்டுமென்றும் தன்னுடைய சேனைகளுக்குப் போதித்தார். சத்துருவை சங்காரம் செய்வதில் கிருஷ்ணனைப் போலுள்ளவர் லார்டு கிச்சினர். தன்னுடைய பெரிய சேனையினால் சத்துருக்களை முறியடிக்க அவர் காத்துக்கொண்டிருக்கிறார். கடைசியாய் தேவாம்சமாய் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்ய அவதரித்த கிருஷ்ணன் அந்த பாரத

## நவராத்திரி.

சுகேதுவென்னு மரசன் சுவேதாவென்னும் தனது மனையாளுடன் இல்லநடாத்தி வருநாளில், முன்னை வினைப்பயத்தால் பகைவர்கையிற்சிக்கி அஸ்திர சஸ்திரங்களால் அடிப்பட்டு, அழகுகெட்டு அஸ்வாதீனனாயினன். அப்பொழுது அவன்மனைவி தன் காதலனைக்கண்டு கடுந்துன்பமுற்று அவனைத் தன் தலையிலும் முதுகிலுந் தோளிலுந் தூக்கிக்கொண்டு காட்டிற்சென்று காய்கனி கிழங்கு முதலியவற்றைப் புசித்துக் கடுகநடந்து பஞ்சவடி தீர்த்தக்கரை சேர்ந்தாள். அச்சமயத்தில் அங்கு நீராடுவதற்கு வந்த ஆங்கீரச முனிவர் அவர்களுடைய நிலைமையைக்கண்டு மனமிரங்கி அருகேசென்று சுவேதியை நோக்கி 'அம்மா! உன்னைப் பார்த்தால் ராஜபோக மனுபவித்தவள்போற் காண்கிறதே! இக்காட்டிற் சஞ்சரிக்ககாரணமென்ன?' என்று கேட்டார். சுவேதி அம்முனிபுங்கவர்க்கு வந்தனைவழிபாடுசெய்து தன்வரலாற்றைச் சொல்லிநிற்க, அப்பஞ்சவடிதீர்த்தம் துர்க்கா, லக்ஷ்மீ, ஸரஸ்வதியென்னும் தேவீத்ரயமும் வாஸஞ்செய்யு மிடமாகையால், அச்சுவேதாவை அத்தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்யச்சொல்லி, தாமும் நீராடி நித்தியகர்மங்களை நிறைவேற்றி, குங்குமம், கஸ்தூரி, கர்ப்பூரம் முதலிய பொருள்களையும், பலசாதிபுட்பங்களையும், நிவேதனப் பொருள்களையும் சேகரித்துக்கொண்டு ஹஸ்தநட்சத்திரத்தோடுகூடிய புரட்டாசிமாதம் அன்று பூர்வபக்ஷத்துப் பிரதமையா யிருந்ததனால் அப்பிரதமைமுதல் திரிதியைவரையில் லக்ஷ்மியையும், ஸப்தமிமுதல் நவமிவரையில் ஸரஸ்வதியையும் பூஜிக்கச்செய்து தசமியன்று புனர்பூஜை செய்வித்தனர். அம்மூவாது கடாக்ஷத்தினால் சுவேதி உடனே கர்ப்பந்தரித்து நவ மன்மதன்போல ஓர் ஆண்பிள்ளையைப்பெற, அக்குழந்தைக்கு ஆங்கீரசமுனிவர் சூரியப் பிரதாபனென்று பெயரிட்டு அவனைத் தமது அனுக்கிரகத்தினால் ஸகல வித்தைகளிலுஞ் சமர்த்தனாகச் செய்தனர். பின்பு அவனுக்குத் தக்கவயது வந்தபோது அவன் தன் தந்தையின் பகைவர்மேற் படையெடுத்துச்சென்று வெற்றியடைந்து பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு குறைவற வாழ்ந்திருந்தான். இந்த விரதத்தை யனுஷ்டிப்பவர்களுக்கு ஸகலாபீஷ்ட ஸித்தியும் உண்டாகும் என்று புராணங்கள் கூறும்.

K. C. சுன்னியப்ப ஆசாரி

---

யுத்தத்தில் எந்த நிலைமையிலிருந்தாரோ அதே நிலைமையில் மாட்சிமை தங்கிய நம்முடைய ஜியார்ஜ் சக்கரவர்த்தியு மிப்பொழுதிருக்கிறார்.

ஆகவே மகாபாரதத்தைக் கொண்டே, ஐரோப்பா யுத்தத்திலும் தர்மத்தைநாடிப் போர்புரியும் சாதுக்களுக்கு ஜெய முண்டாகுமே யன்றி அதற்கு விரோதமாக நடக்காதென்பது திண்ணம் என்று மிஸ்டர் T. S. நாராண சாஸ்திரியார் சொல்லி முடித்தார்.

## விசேஷ வர்த்தமானம்

**ஈக்கள் பறக்குமளவு.**—ஈக்கள் தடையில்லாதிருந்தால் எதிர்முகமாக அல்லது சாய்வாக 760 கஜதூரம் பறக்குமாம்; ஜன நெருக்கமுள்ள மாடங்களில் 30 கஜ தூரத்திற்குமேல் பறப்பதில்லையாம்.

*
* *

**ருஷியாவில் சாராயம்**—இது முதலியன விற்கக்கூடாதென்று கவர்ன்மெண்டார்செய்த உத்தரவால் சென்ற 1913-ம் வருஷத்தில் 340 லட்சம் ரோபிள் லாபமாயிற்று. சென்ற 1914-ம் வருஷத்தில் ருஷிய ஜாதியாருக்கு 840-லட்சம் ரோபிள்ஸ் லாபமாயிருக்கிறதென்று ருஷிய பொக்கிஷமந்திரி தெரிவித்திருக்கிறார்.

*
* *

**சிசு மரணத்தின் காரணம்**—மிக உஷ்ணமுடைய பிரதேசங்களில், முக்கியமாய் மேமாதம்போன்ற உஷ்ணமுடைய மாசங்களில் சிசு மரணம் அதிகரித்து வருகின்றது; உஷ்ணம் குறைவாயுள்ள உயர்ந்த பீடபூமிகளில் சிசு மரணம் குறைவாயிருக்கின்றது. உஷ்ண மதிகமானால் அதனைச் சகிக்கமுடியாமல் குழந்தைக ளிறக்கின்றனவென்று சொல்லப்படுகின்றது.

*
* *

**சூடுபோட்டமையால் சிட்சை யடைந்தவர்.**—யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வண்ணார் பண்ணைக்கு மேற்கில் வசிக்கும் ஒரு தச்சாச்சாரிமனைவி தன்வேலைக்காரன் ஏதோ ஒரு தப்புசெய்தமைக்காக அவனுக்கு இரும்புக் கம்பியைக் காச்சிச் சூடுபோட்டு விட்டாள். அக்குற்றத்திற்காக அவளுக்கும அவள் புருஷனுக்கும் தனித்தனி 6 மாதங் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பட்டது.

*
* *

**போலீஸ் பொய்க்கேஸ்**—பாங்கிப்பூரைச் சேர்ந்த நாத்வாடி யென்னுமூரில் சில தினங்கட்கு முன்னர் ஒரு புருஷனும் ஒரு ஸ்திரீயும் துர்மரணமடைந்தனர். இம்மரணத்தைப்பற்றிப் போலீஸார் விசாரித்து எழுவரைக் கைது செய்தனர். அவர்களைக்கோர்ட்டார் விசாரித்தபோது இறந்தவனது பெயர் (காட்வாடியில் வசித்துவந்த) ரகுநாதனென்றும், இறந்தவள் அவனுடையபந்துவென்றும் சாட்சிகள் வாயிலாக ஒருவாறு ருசுவாயின. அவ்வெழுவரில் ஒருவன், யானே இவ்விருவரையும் கொலை செய்தேனென்று ஒப்புக்கொண்டான். அவர்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறுய சமயத்தில் காசிக்கு யாத்திரைச் செய்யச்சென்ற ரகுநாதனும் அவனது மாமியும், அங்குவந்து சேர்ந்தனர். இவர்கள் வந்து சேர்ந்ததையறிந்த கோர்ட்டார், போலீஸார் இவ்வெழுவர் மீதும் பொய்க்கேசு கொண்டு வந்தனரென்றுணர்ந்து, அவர்களை விடுதலைசெய்து, பொய்ச்சாட்சி கூறியவர்களைப் பிராசிகியூஷன் செய்திருக்கின்றனர்.

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

# ஐரோப்பா யுத்தம்.

ஐரோப்பாவில் இப்போது பெரிய யுத்தம் நடந்து வருகின்றது. அதில் அநேக பெரிய அரசர்கள் கைகலந்து இருக்கிறார்கள் அவர்களில் நம்மை ஆளும் ஆங்கில அரசரும் ஒருவர். இந்த யுத்தத்தைப்பற்றிய விஷயம் முற்றிலும் அறிய விரும்பாதவர் நம்மவரில் ஒருவரும் இரார். அதை ஆதிமுதல்இதுவரையில் விளக்கமாக எழுதி ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறது. பல ராஜாங்கங்களுக்குள் நடந்த வாக்கு வாதங்கள் மந்திராலோசனைசபையில் பேசப்பட்ட விஷயங்கள், நம்மரசரின் வாக்குறுதி. அவருக்கும் நமது கவர்னர் ஜெனரலுக்கும் நடந்த வர்த்தமானங்கள் இன்னும் பல முக்கியமான விஷயங்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. யுத்தபுருஷர்கள், அரசர்கள், மந்திரிகள், ஸ்தானாதிபதிகள், நகரங்கள், யுத்தகளங்கள், தேசங்கள், யுத்தகப்பல்கள், கப்பல், தலைவர்கள், அபூர்வவேலைகள் அடங்கிய சித்திரப்படங்கள், கம்பியில்லாத் தந்திகள், ஆகாய கப்பல்கள், சகிதமாக செந்தமிழ் நடையில் இந்த விஷயங்கள் எழுதப்பட்டிருக்கிறது. லண்டன் டைம்ஸ் யுத்தசரித்திரத்தைப்போல் இரு பாகங்களாக வெளியிடப்படும். உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு இருக்கிறது.

புத்தகம் 1-க்கு 1 0 0 வி. பி. சார்ஜ் 0 2 0 2-புத்தகம் வாங்கினால் தபால் சார்ஜ் இனாம்.
6-புத்தகம் 6 0 0 1-புத்தகம் இனாமளிக்கப்படும். 6 புத்தகம் வேண்டுவோர் ரூ. 1-0-0 அனுப்பவும்.

இந்த பேப்பர் பெயர் கண்டு எழுதுவோர்கட்கு பொன் புதையல் என்னும் புஸ்தகம் இனாமாக அனுப்பப்படும்.

**ஜி. எ. நடேசன் புக் டிபோ,**

**நெ. 8, முருகேச முதலி தெருவு, மின்ட் பில்டிங் போஸ்ட் சென்னை.**

இனாம்! இனாம்!! இனாம்!!!

## ஓர் அழகான வெள்ளி கெடியாரத்தை அடையுங்கள்

**விலை ரூபாய் 10 மதிப்பிடக்கூடியது.**

ஓர் பெயர் பெற்ற கம்பனியாரால் கொடுக்கப்படுகின்றது. ஆயிரக்கணக்கான கெடியாரங்கள் இந்தியா, பூர்மா, சிலோன் முதலிய பிரதேசங்களில் உள்ளன. ஜனங்களுக்கு எங்கள் கம்பெனியின் பெயர் பிரக்கியாதியாகும் பொருட்டு சிலநாள் வரையில் கொடுக்கப்படும் தேவையானவர்கள் ரூபாய் (1 6 0)க்கு தபால் தலைகள் அல்லது மணியாடர் மூலமாக எங்கள் பிரக்கியாதி பெற்ற இங்கி தொடாமலே தானாய் எழுதும் 14-கார்ட் ரோல்ட்பொன் பதித்த பௌண்டன் பேனாவுக்காக அனுப்பி பேனாவையும் மேற்படி சொக்கவெள்ளி கெடியார உடன்படிக்கையும் அடையுங்கள் மற்றும் நீங்கள் எங்களுடைய பேனாக்களை குறைந்தது உங்களுடைய 6-சிநேகிதர்களுக்கு சிபாருசு செய்வீரென்றும் நீங்கள் இனாம் அடையும் கெடியாரத்தை அவர்களுக்கு காட்டுவீர்களென்றும் நம்புகிறோம் உடனே பணம் அனுப்பி கெடியாரத்தை சீக்கிரத்தில் அடைய பிரயத்தனப்படுங்கள்.

**நியூ யிங்டன் அண்டு கோ,**

**87-சைனாபஜார்ரோட், மதராஸ்.**

புதிதாய் கண்டு பிடித்த ரோமசங்காரிணி என்னும்

## தர்பார் சோப்



இது தேகத்தின் எந்த பாகத்திலிருக்கும் கூந்தலை இது பூசுவதினால் தேகத்தின் சர்மத்திற்கு எவ்வித தொந்திரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் பிறகு விடமாட்டீர்கள்.

தேகத்தின் சாந்தியையும் முன்போலவே நிற்கும் சுபாவமான நிறத்தை காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றே தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை. வர்த்தகர்களுக்கு சகாயமாய் கொடுக்கப்படும்

**ஏஜெண்டுகள் தேவை**

3-கேக்கு பெட்டி 1-க்கு ரூ 0—14—0 ஒரே தடவையில் 2-பெட்டி ரூ 1—10—0
போஸ்டேஜ் 0—4—0 பிரத்தியேகம்



இனும் ! இனும் ! ! இனும் ! ! !

இதுதான் சமயம் !

உலகப்பிரசித்தி பெற்ற

## ஆட்டோபத்திரி

எல்லா அத்தர்களைவிட மேன்மையான வாசனையுடையது. ஒரு தடவை உபயோகித்துப் பார்த்தால் தெரியும்.

ஒரு டிரும் புட்டி விலை 0 10 0. அரை டிரும் விலை 0 6 0.
வாசனை கார்ட்டு 1-க்கு 0 0 9. டஜன் 1 க்கு 0 8 0.

ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு ஒரு வாசனை கார்ட்டு இனாமாக அனுப்பப்படும்

சொந்தக்காரர்கள்:—

**பி. வி. பத்திரி அண்டு கம்பெனி,**

மதருஸ் ஏஜண்டுகள்:—
எம். ஆர். சாமி, 34. நம்மாள்வார் வீதி மதருஸ்.

---

**50 சாமான்கள் இனும் !** அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது.

## ராஜா சுந்திரி ரோஜா கூந்தல் வளரும் பரிமளத் தைலம்

50 இனும் சாமான்களுடன் டின் 1-க்கு ரூபா 1. போஸ்டு சார்ஜ் பிரத்தியேகம்.

தலைமயிர் அழகாய் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ்திரீகளும் தலைமயிர் உதிர்ந்துபோகாமல் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ்திரீகளும் சாதாரணமாய் கடைகளில் கிடைக்கக்கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் மனோகரமுடைய பரிமளத்தை தெரிந்து அவைகளை வாங்கவும். இதின் பரிமளம் சொல்லியும் எழுதியும் முடியாது. தலையில் தடவி சீவிக்கொண்டால் அக்கம்பக்கம் வீடுகளுக்கும் இதன் வாசனைவீசும். கூந்தலை நீளமாய் வளரச்செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத்தரும். சிரசிலுள்ள பலநோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர்வடிதல் தலையில் சுண்டு, புண், மயிர் வெடிப்பு மயக்கம், தலைச்சுற்றல், தலைவலி, சொரி, சிரங்கு மனோவியாகூலம்




ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியத்தைத் தரும் தைலம் இது ஒன்றுதான். 1 புட்டி தருவித்தால் இதன் குணம் தெரியவரும் அனேக நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நற்பெயர் பெற்றிருப்பதே இதன் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனும் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6. தந்த சீப்பு 1. குங்குமச்சிமிழ் 1. மைச்சிமிழ் 1. முகம் பார்க்கும் அழகான கண்ணாடி 1. தாம்பூலமாத்திரைகள் 30. ராஜாராணி கார்னேஷன் உள்ள ஷை 1. ரவிவர்மா படங்கள் உள்ள போஸ்ட்கார்டு 6. அத்தர் பில்லை 1. சந்தனபில்லை 1. ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜா ராணி உள்ள அழகான கார்னேஷன் புருக்ஸ் 1. வேண்டியவர்கள் அடியிற்காணும் விலாசத்துக்கெழுதி தருவித்துக்கொள்ளலாம்.

---

**தைரியலட்சுமி அண்டு கம்பெனி, நெ. 3, இருளப்பன் தெரு, மதருஸ்.**

உண்மையும் உறுதியும் உத்தரவாதமுமுள்ள ஔஷதங்கள்

## மதருஸ் யூநானி ஔஷிதசாலை

439-நெ. சௌகார்பேட், தங்கசாலை தெரு, மதராஸ்

இந்த ஔஷதசாலை 20-வது வருஷகாலமாய் மதராஸில் அதிக கீர்த்தியுடன் நடத்தப்பட்டு வருகிறது. அனேகம் ராஜாக்கள், ஜமீன்தார்கள் முதலிய பல பிரபுக்கள் இங்கு ஔஷதம் வாங்கிச் சாப்பிட்டு நல்ல சுகமடைந்து அனேகம் நற்சாக்ஷி பத்திரங்களளித்திருக்கிறார்கள். இந்த ஔஷதசாலையிலுள்ள ஒவ்வொரு ஔஷதமும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் வியாதிகளைச் சௌக்கியப்படுத்துகின்றது. ஒரே தடவை பரீக்ஷை பாருங்கள் ஆனந்தமடைவீர்கள்.

### சாஸ்திர விசித்திரம்

என்பது என்ன ?

### ஓர் அற்புதமான நூல்

வெளியாய்விட்டதா? கீழ்கண்ட விலாசத்தாரிடம் ரெடியாயிருக்கிறது.

கைத்தொழில் செய்து ஜீவிக்க விரும்புவோர்களுக்கும், அறிவு விர்த்திக்கும், பலவகை விநோத வேடிக்கைகள், ஆச்சரியப்படத்தக்க ஜாலவித்தைகள் முதலியவைகளைக் கற்றுக்கொள்ள பிரீதி யுடையோர்களுக்கும் இப்புத்தகம் இன்றியமையாதது.

புத்தகம் 1-க்கு விலை அணா 12

### மஹா விகட விநோதக் களஞ்சியம்

இவ்விதமான அதியற்புத அகடவிகட சாமர்த்திய ஜனோபகார விசித்திர வேடிக்கையை விளைவிக்கும் நூல் உலகில் இதுவரையில் வரவில்லை.

அறிவுடைய யாவரையும் அகமகிழச்செய்யும் அழகான விகடக்கோர்வை. முதியோர்களையும் வயிறு குலுங்க நகைக்கச்செய்யு முதன்மையான விகடப் பொக்கிஷம். விகட நூல்களில் மிகவும் விசேஷித்தது, அகவிய நூல்களில் மிக்க அற்புதமானது, சிரிப்பை விளைவிக்கும் நூல்களில் மிகச்சிரேஷ்டமானது.

கிரயம் புத்தகம் 1-க்கு அணா 8

### ஷாஜஹான் வாசனைப் புகையிலை

உயர்தரமான புகையிலையுடன் பலவகை உயர்ந்த வாஸனைத் திரவியங்களையும் அநேக மூலிகைகளையும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. சாதாரணமாய் தாம்பூலத்துடன் புகையிலை உபயோகிப்பவர்களுக்கு இது மிகவும் மனோரம்மியத்தைக் கொடுப்பதன்னியில் இதனாலுக்கும் அநேகம் வியாதிகளைச் சௌக்கியப்படுத்துகிறபடியால் எல்லா ஜனங்களுக்கும் எண்ணிறந்த பிரயோஜனத்தைத் தரத்தக்கதென்பதற்குச் சந்தேகமில்லை. இதில் ஒரு மிளகுப்பிரமாணம் தாம்பூலத்துடனாவது, அல்லது வெறும்வாயிலாவது போட்டுக்கொள்ளலாம். டப்பி 1-க்கு அணா 5.

### இரகசியம்

இரு பாலார்க்கும் அளவிடற்கரிய பேரானந்தத்தைக் கொடுக்கும் அபூருப சஞ்சீவி. ஒரு யோகீஸ்வரரால் அனுக்கிரகம் செய்யப்பட்ட உண்மையான மருந்து.

### புருஷத்தன்மையுண்டாக்கும் குளிகை

ஒரே குளிகை இதின் அபூருபசக்தி அவசியம் தெரியும். முதலில் ஒரே குளிகைவாங்கி உபயோகப்படுத்தி பரீட்சைபார்த்தபின் 12 குளிகை அடங்கிய ஒரு டப்பியைவாங்கி சாப்பிட்டுப் பயனடைந்து கொள்ளுங்கள். இதன் உபயோகத்தால் பலவித ரகசிய ஆநந்த முண்டாகும். அதன் அற்புதகுணத்திற்கு அதுவே சாட்சியாகும். அனுபோகித்தவர் ஆராய்ந்துகொள்வர் வயோதிகனை வாலிபனாக்கிவிடும். பலவிதத்தாலும் சக்தி இழந்தவர்களுக்கு அற்புத சக்தியைக்கொடுக்கும்.

கிரயம் 12 குளிகை டப்பி 1-க்கு ரூபா. 1.

இரண்டு அணாவுக்கு தபால் ஸ்டாம்பு அனுப்பினால் ஒருமாத்திரை யனுப்பப்படும்.

### ஷாஜஹான் சுகந்த மூக்குத்தூள்

இதன் முக்கிய குணங்களாவன

1-வது முன்பொருபோதும் சுகித்தரியாத இன்பகரமான சுகந்தமும் மஹா சிரேஷ்டமான தூளுக்குரிய நல்லகாரமும் இதிலுண்டு.

2-வது நீண்டநாள் வரையில் காரங்கெடாமல் ஒரே விதமாயிருப்பதன்றியும், இதில் ஒருசிட்டிகை எடுத்து காலணா சாதாரண மூக்குத்தூளுடன் கலந்தால், அந்தத் தூள் முழுவதும் அதிமனோரம்மியமான வாசனைமயமாய் விடுவதல்லாமலும் அதன் காரத்தையும் நெடுநாள் பாதுகாக்கும்.

3-வது ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், தலைநோய், மண்டைக்குற்றல், ஒற்றைத்தலைவலி, நாசியில் துர்நாற்றம், நீர்ப்பீனிசம், செருப் பீனிசங்களும் இன்னும் சிரசைப்பற்றிய வியாதிகளும் சௌக்கியமாய் விடும். எவ்விதத்திலும் கெடுதியென்பதே கிடையாது. பலசுகுணங்களே நிறைந்துள்ளது. அனுபவத்திலறியலாம். பெருத்த லாபமடைவது, பலவித வியாதிகளைத் தீர்த்துக்கொள்வது ஆகிய நன்மைகளைப் பெறலாம்.

டப்பி 1-க்கு அணா 4, டஜன் 1-க்கு ரூபா 2-4-0

### ஊஷ்ண சமனஹாரி

இந்த ஹல்வாவை வேளை ஒன்றுக்கு அரைரூபாயிடை காலை மாலை இரண்டுவேளையும் 15-நாளைக்குச் சாப்பிட்டுவந்தால் பித்தகாங்கை, மேககாங்கை, கண், கைகால் எரிச்சல், தேகவரக்ஷி, சோர்வு, அசதி, சோகை, பாண்டு, நீரெரிச்சல் நீர்சுருக்கு, பசியின்மை முதலியவைகளை நீக்கித் தேகத்தைக் குளிரச்செய்து தேக திடகாத்திரத்தை யுண்டாக்கும். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 2

---

**மதராஸ் யூநானி ஔஷதசாலை, 439, நெ. சௌகார்பேட்டை மதராஸ்.**

# அயக்காந்ததிராவகம்

இரும்பைப்பார்க்கிலும் கடினமான லோகம் வேறொன்றுமில்லை தாதுவிர்த்திக்கு இதுவே சிறந்தது. பொன், வெள்ளி, முதலியவைகள் அந்தச்சமயத்தில்மட்டும் அதிக குணத்தைக்கொடுத்து சீக்கிரத்தில் தேகத்தைக் கெடுத்துவிடும் இதனால் தான் "இருப்பவன் இரும்பைத்தின்றால், போகிறவன் பொன்னைத்தின்பான்" என்று இவ்வுலகத்தில் சொல்லிக்கொள்கிறார்கள். ஒருவன் இந்த திராவகத்தைச் சாப்பிடுவதற்குமுன் தன்தேகம் எவ்வளவு நிறையுள்ளதென்று நிறுத்துக்கொண்டு அதன்பின் இந்தத் திராவகத்தை ஒருமண்டலம் 48-நாட்கள் சாப்பிட்டு மறுபடியும் தராசில் நின்று நிறுத்துப் பார்ப்பானாகில் எறக்குறைய முன்னிருந்ததற்கு (ஒருவீசை) 40-பலம் அதிக நிறையிருப்பான் இதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் தெரிந்துக்கொள்ளலாம்.

தாதுவிர்த்தி யில்லாதவர், இரும்பைப்பழுக்கக்காய்ச்சி அதை ஜலத்தில் தவைத்து அந்த ஜலத்தை தினந்தோறும் குடித்துவந்தால் தாதுவிர்த்தி உண்டாகுமென்று வைத்தியசாஸ்திரங்கள் கூறுகின்றன. இதற்கே அந்தக்குணம் இருக்கிறபோது அயத்தினுடையவும், காந்தத்தினுடையவும் சத்தைத்திராவகமாக இறக்கியிருக்கும் இந்தப்பரம அவுஷதத்தை ஒருவன் உட்கொண்டால் அவன் தேகம் வஜ்ஜிரசரீரம்போலாகிவிடுமென்பதற்கு என்ன தடையிருக்கின்றது.

அரைமண்டலம் 24-நாளைக்கு வரக்கூடிய ஒரு புட்டியின் விலை ரூபா 1-4-0 டஜன் 1-க்கு ரூபா-12.

ஒருமண்டலம் 48-நாளைக்கு வரக்கூடிய ஒரு புட்டியின் விலை ரூபா.2-0-0 டஜன் 1-க்கு ரூபா 21.

## கூந்தல் வளரும் பரிமளத் தைலம்

### 1-டப்பி வாங்குகிறவர்களுக்கு 10-வித சாமான் இனாம் கொடுக்கப்படும்

உலகத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் அழகென்பது கடவுளுடைய பெரிய அருளாக இருக்கின்றது. இத்தனை அருமையான கருவி கூந்தல் அல்லது தலைமயிர். ஆகையினால் இந்த தைலத்தை தலைமயிர் உற்பத்தி ஸ்தானங்களில் தடவி வாரிக்கொண்டுவந்தால் செழிப்பாயும் அழகாயும் கருப்புபட்டுக்கு நிகராய் கருக்கச்செய்து ஆலம்விழுதைப்போல் ஓங்கிவளரும். மயிர்கால்களுக்கு குளிர்ச்சியைக்கொடுத்து மயிரின்சிவந்த நிறத்தைமாற்றி நாகப்பழ நிறம்போன்ற கருப்பு நிறத்தை உண்டுபண்ணும். இதுவுமன்றி மண்டையில் மூளைக்கொதிப்பை யடக்கி கண்ணில்நீர்வடிதல் கண் அருகல், கண்ணெறிவு, கண்புகைச்சல் சுண்டுமயிர்வெடிப்பு, மயக்கம் தலைசுழற்றல் திரேகத்திலுள்ள சொரி, சிரங்கு வியர்வைநாற்றம், கற்றாழைநாற்றம், மனச்சஞ்சலம், ஞாபகமறதி முதலிய வியாதிகளைக் கண்டித்து கண்களுக்கு மிகக்குளிர்ச்சி தருவதுடன் நல்ல பிரகாசத்தையும் பரிமளவாசனையையும் திரேகத்திற்கு மினுமினுப்பையுந்தந்து முகத்திற்கு காந்தியைக்கொடுக்கும். இத்தைலம் அநேக பெரிய மனுஷர்களால் நன்கு மதித்து சர்டிபிகேட்டுகள் பெற்றிருக்கின்றது. இத்தயிலத்தை ஒருவிசை உபயோகித்தால் ஏழு எட்டுநாள் சென்றாலும் இன்னும் வாசனை பரிமளித்துக்கொண்டேயிருக்கும்.

10-வித இனாம் சாமான்களுடன் ஆழாக்கு எண்ணை அடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இத்துடன் பெண்கள் தலையில் வைக்கக்கூடிய வெகு நேர்த்தியான கொண்டைப்பூ 1. தந்தசீப்பு 1. முகம்பார்க்கும் கண்ணாடி 1. ஜெர்மன்சில்வரால்செய்த மை அல்லது புனுகு ஜவ்வாது வைக்கக்கூடிய மைசிமிழ் 1. அதிகவாசனையுள்ள அத்தர்பில்லை 1. கொண்டைக்கிளி 5. இனாமாய் அனுப்பப்படும்.

**மலசுத்தி லேகியம்.**—1-சேர் லேகிய மடங்கிய டப்பி 1-க்கு ரூபா 1

**மேகவெள்ளைச் சூரணம்**—டப்பி 1-க்கு அணா 12.

**தந்தப்பொடி.**—இது பல்நோய், கூச்சல், பல்லசைவு ஈறு கரைந்து இரத்தமுண்டாதல் முதலியவைகளை நீக்கி ஈரைக்கெட்டிப்படுத்திப் பற்களை இறுக்கி சகலதுன்பத்தையும் ஓட்டிவிடும். டப்பி 1-க்கு அணா 4. 10 டப்பி ரூபா 2 0 0

**சர்வபடை சங்காரி.**—இந்த ஆச்சரியப்படத்தக்க மருந்தினால் தீரும் வியாதிகள் ஆண்பெண் இருதாரத்தார்க்கும் இடுப்பு துடை முகம் முதுகு மற்ற எந்த விடங்களிலாயினும் உண்டாகும் எவ்வித வண்டுசெடி படைகளும் மூன்றுவேளை தடவினால் யெரிச்சல்நாற்ற முதலிய தூர்க்குணம் கிடையாது. இந்தமருந்து வாயில் படக்கூடாது. கிரயம் டப்பி 1-க்கு அணா 8.

**சர்வநோய் சங்காரன்.**—டப்பி 1-க்கு அணா 0 8 0

**ஆபீஸ் பாக்கெட் மாத்திரை.**—கிரயம் 24-மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு அணா 4.

**மதனசிந்தாமணி லேகியம்.**—இந்த ஹல்வாவை வேளை ஒன்றுக்கு அரைரூபா யிடையாக காலை மாலை 2-வேளையும் 20-நாளைக்குச் சாப்பிட்டு வந்தால் தேகத்திலுள்ள மேகவாயு மேககாங்கை, ஊஷ்ணமுதலிய வியாதிகளை நீக்கி தேகத்திற்கு வலுவைக்கொடுத்து இரத்தத்தைச் சுத்திப்படுத்தி இழந்தபோன சக்தியையும் பலப்படுத்தி தேகத்திற்கு அழகும் காந்தியும் முகவஜீகரமு முண்டாக்கி மனக்களிப்பை யுண்டாக்குவதன்றியில் தேகத்தை வச்சிரகாயமாக்கிவிடும். இதின் பெருமையை இதை அனுபவிப்பவர்களே கண்டுகொள்வார்கள். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 2 8 0.

**சுகந்த மூக்குத்தூள்.**—கிரயம் புட்டி 1-க்கு அணா-4. டஜன் 1-க்கு ரூபா 2 8 0. 8-பலம்கொண்ட சேர் 1-க்கு ரூபா 3 0 0 வி. பி. சார்ஜ் புட்டி 1-க்கு அணா-3, வி. பி. சார்ஜ் டஜன் 1 க்கு 0 6 0.

**ஸ்திரீகள் பக்தவிஜய மென்னும் பதிவிரதைகள் சரித்திரம்.**—450-சயிடுள்ள புஸ்தகம் விலை அணா 12. வி பி சார்ஜ் அணா 3.

---

எஸ். பி. இராஜாராம் அண்டு கம்பெனி, சூளை போஸ்ட், மதராஸ்.

வெளியாய்விட்டது !

வெளியாய்விட்டது !

# ஐரோப்பா யுத்தம்

OFFICE OF THE REGISTRAR OF ... 24 JUL 1915 MADRAS

ஐரோப்பாவில் இப்போது பெரிய யுத்தம் நடந்து வருகின்றது. அதில் அநேக பெரிய அரசர்கள்
கைகலந்து இருக்கிறார்கள் அவர்களில் நம்மை ஆளும் ஆங்கில அரசரும் ஒருவர். இந்த யுத்தத்தைப்பற்றிய
விஷயம் முற்றிலும் அறிய விரும்பாதவர் நம்மவரில் ஒருவரும் இரார். அதை ஆதிமுதல்இதுவரையில் விளக்க
மாக எழுதி ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறது. பல. ராஜாங்கங்களுக்குள் நடந்த வாக்கு வாதங்கள் மந்திரா
லோசனைசபையில் பேசப்பட்ட விஷயங்கள், நம்மரசரின் வாக்குறுதி அவருக்கும் நமது கவர்னர் ஜெனரலுக்
கும் நடந்த வர்த்தமானங்கள் இன்னும் பல முக்கியமான விஷயங்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.
யுத்தபுருஷர்கள், அரசர்கள், மந்திரிகள், ஸ்தானாதிபதிகள், நகரங்கள், யுத்தகளங்கள், தேசங்கள், யுத்தகப்
பல்கள், கப்பல், தலைவர்கள், அபூர்வவேலைகள் அடங்கிய சித்திரப்படங்கள், கம்பியில்லாத் தந்திகள், ஆகாய
கப்பல்கள், சகிதமாக செந்தமிழ் நடையில் இந்த விஷயங்கள் எழுதப்பட்டிருக்கிறது. லண்டன் டைம்ஸ் யுத்தச
ரித்திரத்தைப்போல் இரு பாகங்களாக வெளியிடப்படும். உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு இருக்கிறது.

புத்தகம் 1-க்கு 1 0 0 வி. பி. சார்ஜ் 0 2 0 2-புத்தகம் வாங்கினால் தபால் சார்ஜ் இனாம்.

6-புத்தகம் 6 0 0 1-புத்தம் இனாமளிக்கப்படும். 6 புத்தகம் வேண்டுவோர் ரூ. 1-0-0 அனுப்பவும்.

இந்த பேப்பர் பெயர் கண்டு எழுதுவோர்கட்கு பொன் புதையல் என்னும் புஸ்தகம் இனாமாக அனுப்பப்படும்.

**சி. எ. நடேசன் புக் டிபோ,**

**நெ. 8, முருகேச முதலி தெரு, மிண்ட் பில்டிங் போஸ்ட் சென்னை.**

இனாம் ! இனாம் !! இனாம் !!!

## ஓர் அழகான வெள்ளி கெடியாரத்தை அடையுங்கள்

விலை ரூபாய் 10 மதிப்பிடக்கூடியது.

ஓர் பெயர் பெற்ற கம்பனியாரால் கொடுக்கப்படுகின்றது. ஆயிரக்கணக்கான கெடியாரங்கள் இந்
தியா, பர்மா, சிலோன் முதலிய பிரதேசங்களில் உள்ளன. ஜனங்களுக்கு எங்கள் கம்பெனியின் பெயர் பிரக்கி
யாதியாகும் பொருட்டு சிலநாள் வரையில் கொடுக்கப்படும் தேவையானவர்கள் ரூபாய் (1 6 0)க்கு தபால்
தலைகள் அல்லது மணியாடர் மூலமாக எங்கள் பிரக்கியாதி பெற்ற இங்கி தொடாமலே தானாய் எழுதும் 14-
கார்ட் ரோல்ட்பொன் பதித்த பௌண்டன் பேனாவுக்காக அனுப்பி பேனாவையும் மேற்படி சொக்கவெள்ளி கெடி
யார உடன்படிக்கையும் அடையுங்கள் மற்றும் நீங்கள் எங்களுடைய பேனாக்களை குறைந்தது உங்களுடைய 6-
சிநேகிதர்களுக்கு சிபாருசு செய்வீரென்றும் நீங்கள் இனாம் அடையும் கெடியாரத்தை அவர்களுக்கு காட்டுவீர்க
ளென்றும் நம்புகிறோம் உடனே பணம் அனுப்பி கெடியாரத்தை சீக்கிரத்தில் அடைய பிரயத்தனப்படுங்கள்.

---

**நியூ யிங்டன் அண்டு கோ,**

**87-சைனாபஜார்ரோட், மதராஸ்,**

புதிதாய் கண்டு பிடித்த ரோமசங்காரிணி என்னும்

## தர்பார் சோப்



இது தேகத்தின் எந்த பாகத்திலிருக்கும் கூந்தலை இது பூசுவதினால் தேகத்தின் சர்மத்திற்கு எவ்வித தொந்திரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் பிறகு விடமாட்டீர்கள்.

தேகத்தின் சாந்தியையும் முன்போலவே நிற்கும் சுபாவமான நிறத்தை காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றே தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை. வர்த்தகர்களுக்கு சகாயமாய் கொடுக்கப்படும்

ஏஜெண்டுகள் தேவை

3-கேக்கு பெட்டி 1-க்கு ரூ 0—14—0 ஒரேதடவையில் 2-பெட்டி ரூ 1—10—0
போஸ்டேஜ் 0—4—0 பிரத்தியேகம்

இனாம் ! இனாம் ! ! இனாம் ! ! !



இதுதான் சமயம் !
உலகப்பிரசித்தி பெற்ற

## ஆட்டோபத்திரி

எல்லா அத்தர்களைவிட மேன்மையான வாசனையுடையது. ஒரு தடவை உபயோகித்துப் பார்த்தால் தெரியும்.

ஒரு டிரும் புட்டி விலை 0 10 0. அரை டிரும் விலை 0 6 0.
வாசனை கார்ட்டு 1-க்கு 0 0 9. டஜன் 1-க்கு 0 8 0.

ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு ஒரு வாசனை கார்ட்டு இனாமாக அனுப்பப்படும்.

சொந்தகாரர்கள்:—
பி. வி. பத்திரி அண்டு கம்பெனி,

மதரூஸ் ஏஜண்டுகள்:—
எம். ஆர். சாமி, 34. நம்மாள்வார் வீதி, மதரூஸ்.

---

50 சாமான்கள் இனாம் ! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது.

## ராஜா சுந்திரி ரோஜா கூந்தல் வளரும் பரிமளத் தைலம்

50 இனாம் சாமான்களுடன் டின் 1-க்கு ரூபா 1. போஸ்டு சார்ஜ் பிரத்தியேகம்.

தலைமயிர் அழகாய் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ்திரீகளும் தலைமயிர் உதிர்ந்துபோகாமல் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ்திரீகளும் சாதாரணமாய் கடைகளில் கிடைக்கக்கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் மனோகரமுடைய பரிமளத்தை தெரிந்து அவைகளை வாங்கவும். இதின் பரிமளம் சொல்லியும் எழுதியும் முடியாது. தலையில் தடவி சீவிக்கொண்டால் அக்கம்பக்கம் வீடுகளுக்கும் இதன் வாசனைவீசும். கூந்தலை நீளமாய் வளரச்செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத்தரும். சிரசிலுள்ள பலநோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர்வடிதல் தலையில் சுண்டு, புண், மயிர் வெடிப்பு மயக்கம், தலைச்சுற்றல், தலைவலி, சொரி, சிரங்கு மனோவியாகூலம்




ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியத்தைத் தரும் தைலம் இது ஒன்றுதான். 1 புட்டி தருவித்தால் இதன் குணம் தெரியவரும் அனேக நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நற்பெயர் பெற்றிருப்பதே இதன் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனாம் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6. தந்த் சீப்பு 1. குங்குமச்சிமிழ் 1. மைச்சிமிழ் 1. முகம் பார்க்கும் அழகான கண்ணாடி 1. தாம்பூலமாத்திரைகள் 30. ராஜாராணி கார்னேஷன் உள்ள ஷை 1. ரவிவர்மா படங்கள் உள்ள போஸ்ட்கார்டு 6. அத்தர் பில்லை 1. சந்தனபில்லை 1. ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜா ராணி உள்ள அழகான கார்னேஷன் புருக்ஸ் 1. வேண்டியவர்கள் அடியிற்காணும் விலாசத்துக்கெழுதி தருவித்துக்கொள்ளலாம்.

தைரியலட்சுமி அண்டு கம்பெனி, நெ. 3, இருளப்பன் தெரு, மதரூஸ்.

---

உண்மையும் உறுதியும் உத்தரவாதமுமுள்ள ஔஷதங்கள்

## மதரூஸ் யூநானி ஔஷிதசாலை

439-நெ. சௌகார்பேட், தங்கசாலை தெரு, மதராஸ்

இந்த ஔஷதசாலை 20-வது வருஷகாலமாய் மதராஸில் அதிக கீர்த்தியுடன் நடத்தப்பட்டு வருகிறது. அனேகம் ராஜாக்கள், ஜமீன்தார்கள் முதலிய பல பிரபுக்கள் இங்கு ஔஷதம் வாங்கிச் சாப்பிட்டு நல்ல சுகமடைந்து அனேகம் நற்சாக்ஷி பத்திரங்களளித்திருக்கிறார்கள். இந்த ஔஷத சாலையிலுள்ள ஒவ்வொரு ஔஷதமும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் வியாதிகளைச் சௌக்கியப் படுத்துகின்றது. ஒரேதடவை பரீக்ஷை பாருங்கள் ஆனந்தமடைவீர்கள்.

### சாஸ்திர விசித்திரம்

என்பது என்ன ?

ஓர் அற்புதமான நூல்

வெளியாய்விட்டதா? கீழேகண்ட விலாசத்தாரிடம் ரெடியாயிருக்கிறது.

கைத்தொழில் செய்து ஜீவிக்க விரும்புவோர்களுக்கும், அறிவு விர்த்திக்கும், பலவகை விநோத வேடிக்கைகள், ஆச்சரியப்படத்தக்க ஜாலவித்தைகள் முதலியவைகளைக் கற்றுக்கொள்ள பிரீதி யுடையோர்களுக்கும் இப்புத்தகம் இன்றியமையாதது.

புத்தகம் 1-க்கு விலை அணா 12

### மஹா விகட விநோதக் களஞ்சியம்

இவ்விதமான அதியற்புத அகடவிகட சாமர்த்திய ஜனோபகார விசித்திர வேடிக்கையை விளைவிக்கும் நூல் உலகில் இதுவரையில் வரவில்லை.

அறிவுடைய யாவரையும் அகமகிழச்செய்யும் அழகான விகடக்கோர்வை. முதியோர்களையும் வயிறு குலுங்க நகைக்கச்செய்யு முதன்மையான விகடப் பொக்கிஷம். விகட நூல்களில் மிகவும் விசேஷித்தது, அகவிய நூல்களில் மிக்க அற்புதமானது, சிரிப்பை விளைவிக்கும் நூல்களில் மிகச்சிரேஷ்டமானது.

கிரயம் புத்தகம் 1-க்கு அணா 8

### ஷாஜஹான் வாசனைப் புகையிலை

உயர்தரமான புகையிலையுடன் பலவகை உயர்ந்த வாஸனைத் திரவியங்களையும் அநேக மூலிகைகளையும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. சாதாரணமாய் தாம்பூலத்துடன் புகையிலை உபயோகிப்பவர்களுக்கு இது மிகவும் மனோரம்மியத்தைக் கொடுப்பதன்னியில் இதராளுக்கும் அநேகம் வியாதிகளைச் சௌக்கியப்படுத்துகிறபடியால் எல்லா ஜனங்களுக்கும் எண்ணிறந்த பிரயோஜனத்தைத் தரத்தக்கதென்பதற்குச் சந்தேகமில்லை. இதில் ஒரு மிளகுப்பிரமாணம் தாம்பூலத்துடனாவது அல்லது வெறும்வாயிலாவது போட்டுக்கொள்ளலாம். டப்பி 1-க்கு அணா 5.

### இரகசியம்

இரு பாலார்க்கும் அளவிடற்கரிய பேராநந்தத்தைக் கொடுக்கும் அபூர்வ சஞ்சீவி. ஒரு யோகீஸ்வரரால் அநுக்கிரகம் செய்யப்பட்ட உண்மையான மருந்து.

புருஷத்தன்மையுண்டாக்கும் குளிகை

ஒரேகுளிகை இதின் அபூர்வசக்தி அவசியம் தெரியும். முதலில் ஒரே குளிகைவாங்கி உபயோகப்படுத்தி பரீட்சைபார்த்தபின் 12 குளிகை அடங்கிய ஒரு டப்பியைவாங்கி சாப்பிட்டுப் பயனடைந்து கொள்ளுங்கள். இதன் உபயோகத்தால் பலவித ரகசிய ஆநந்த முண்டாகும். அதன் அற்புதகுணத்திற்கு அதுவே சாட்சியாகும். அநுபோகித்தவர் ஆராய்ந்துகொள்வர் வயோதிகனை வாலிபனாக்கிவிடும். பலவிதத்தாலும் சக்தி இழந்தவர்களுக்கு அற்புத சக்தியைக்கொடுக்கும்.

கிரயம் 12 குளிகை டப்பி 1-க்கு ரூபா. 1.

இரண்டு அணாவுக்கு தபால் ஸ்டாம்பு அனுப்பினால் ஒருமாத்திரை யனுப்பப்படும்.

### ஷாஜஹான் சுகந்த மூக்குத்தூள்

இதன் முக்கிய குணங்களாவன

1-வது முன்பொருபோதும் சுகித்தறியாத இன்பகாமான சுகந்தமும் மஹா சிரேஷ்டமான தூளுக்குரிய நல்லகாரமும் இதிலுண்டு.

2-வது நீண்டநாள் வரையில் காரங்கெடாமல் ஒரே விதமாயிருப்பதன்றியும், இதில் ஒருசிட்டிகை எடுத்து காலணா சாதாரண மூக்குத்தூளுடன் கலந்தால், அந்தத் தூள் முழுவதும் அதிமனோரம்மியமான வாசனைமயமாய் விடுவதல்லாமலும் அதன் காரத்தையும் நெடுநாள் பாதுகாக்கும்.

3-வது ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், தலைநோய், மண்டைக்குற்றல், ஒற்றைத்தலைவலி, நாசியில் துர்நாற்றம், நீர்ப்பீனிசம், செரூப் பீனிசங்களும் இன்னும் சிரசைப்பற்றிய வியாதிகளும் சௌக்கியமாய் விடும். எவ்விதத்திலும் கெடுதியென்பதே கிடையாது. பலசுகுணங்களே நிறைந்துள்ளது. அநுபவத்திலறியலாம். பெருத்த லாபமடைவது, பலவித வியாதிகளைத் தீர்த்துக்கொள்வது ஆகிய நன்மைகளைப் பெறலாம்.

டப்பி 1-க்கு அணா 4, டஜன் 1-க்கு ரூபா 2-4-0

### உஷ்ண சமனஹாரி

இந்த ஹல்வாவை வேளை ஒன்றுக்கு அரைரூபாயிடை காலை மாலை இரண்டுவேளையும் 15-நாளைக்குச் சாப்பிட்டுவந்தால் பித்தகாங்கை, மேக்காங்கை, கண், கைகால் எரிச்சல், தேகவரக்ஷி, சோர்வு, அசதி, சோகை, பாண்டு, நீரெரிச்சல் நீர்சுருக்கு, பசியின்மை முதலியவைகளை நீக்கித் தேகத்தைக் குளிரச்செய்து தேக திடகாத்திரத்தை யுண்டாக்கும். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 2

மதராஸ் யூநானி ஔஷதசாலை, 439, நெ. சௌகார்பேட்டை மதராஸ்.

# அயக்காந்ததிராவகம்

இரும்பைப்பார்க்கிலும் கடினமான லோகம் வேறொன்றுமில்லை தாதுவிர்த்திக்கு இதுவே சிறந்தது. பொன், வெள்ளி, முதலியவைகள் அந்தச்சமயத்தில்மட்டும் அதிக குணத்தைக்கொடுத்து சீக்கிரத்தில் தேகத்தைக் கெடுத்துவிடும் இதனுல் தான் "இருப்பவன் இரும்பைத்தின்முல், போகிறவன் பொன்னைத்தின்பான்" என்று இவ்வுலகத்தில் சொல்லிக்கொள்கிருர்கள். ஒருவன் இந்த திராவகத்தைச் சாப்பிடுவதற்குமுன் தன்தேகம் எவ்வளவு நிறையுள்ளதென்று நிறுத்துக்கொண்டு அதன்பின் இந்தத் திராவகத்தை ஒருமண்டலம் 48-நாட்கள் சாப்பிட்டு மறுபடியும் தராசில் நின்று நிறுத்துப் பார்ப்பாளுகில் ஏறக்குறைய முன்னிருந்ததற்கு (ஒருவீசை) 40-பலம் அதிக நிறையிருப்பான் இதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் தெரிந்துக்கொள்ளலாம்.

தாதுவிர்த்தி யில்லாதவர், இரும்பைப்பழுக்கக்காய்ச்சி அதை ஜலத்தில் துவைத்து அந்த ஜலத்தை தினந்தோறும் குடித்துவந்தால் தாதுவிர்த்தி உண்டாகுமென்று வைத்தியசாஸ்திரங்கள் கூறுகின்றன. இதற்கே அந்தக்குணம் இருக்கிறபோது அயத்தினுடையவும், காந்தத்தினுடையவும் சத்தைத்திராவகமாக இறக்கியிருக்கும் இந்தப்பரம அவுஷதத்தை ஒருவன் உட்கொண்டால் அவன் தேகம் வஜ்ஜிரசரீரம்போலாகிவிடுமென்பதற்கு என்ன தடையிருக்கின்றது.

அரைமண்டலம் 24-நாளைக்கு வரக்கூடிய ஒரு புட்டியின் விலை ரூபா 1-4-0 டஜன் 1-க்கு ரூபா-12.
ஒருமண்டலம் 48-நாளைக்கு வரக்கூடிய ஒரு புட்டியின் விலை ரூபா 2-0-0 டஜன் 1-க்கு ரூபா-21.

## கூந்தல் வளரும் பரிமளத் தைலம்

### 1-டப்பி வாங்குகிறவர்களுக்கு 10-வித சாமான் இனும் கொடுக்கப்படும்

உலகத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் அழகென்பது கடவுளுடைய பெரிய அருளாக இருக்கின்றது. இத்தனை அருமையான சருவி கூந்தல் அல்லது தலைமயிர். ஆகையினுல் இந்த தைலத்தை தலைமயிர் உற்பத்தி ஸ்தானங்களில் தடவி வாரிக்கொண்டுவந்தால் செழிப்பாயும் அழகாயும் கருப்புபட்டுக்கு நிகராய் கருக்கச்செய்து ஆலவ்ழுதைப்போல் ஓங்கிவளரும். மயிர்கால்களுக்கு குளிர்ச்சியைக்கொடுத்து மயிரின்சிவந்த நிறத்தைமாற்றி நாகப்பழ நிறம்போன்ற கருப்பு நிறத்தை உண்டுபண்ணும். இதுவுமன்றி மண்டையில் மூளைக்கொதிப்பை யடக்கி கண்ணில்நீர்வடிதல் கண் அருகல், கண்ணெறிவு, கண்புகைச்சல் சுண்டுமயிர்வெடிப்பு, மயக்கம் தலைசுழற்றல் திரேகத்திலுள்ள சொரி, சிரங்கு வியர்வைநாற்றம், கற்றாழைநாற்றம், மனச்சஞ்சலம், ஞாபகமறதி முதலிய வியாதிகளைக் கண்டித்து கண்களுக்கு மிகக்குளிர்ச்சி தருவதுடன் நல்ல பிரகாசத்தையும் பரிமளவாசனையையும் திரேகத்திற்கு மினுமினுப்பையுந்தந்து முகத்திற்கு காந்தியைக்கொடுக்கும். இத்தைலம் அநேக பெரிய மனுஷர்களால் நன்கு மதித்து சர்டிபிகேட்டுகள் பெற்றிருக்கின்றது. இத்தயிலத்தை ஒருவிசை உபயோகித்தால் ஏழு எட்டுநாள் சென்முலும் இன்னும் வாசனை பரிமளித்துக்கொண்டேயிருக்கும்.

10-வித இனும் சாமான்களுடன் ஆழாக்கு எண்ணை அடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இத்துடன் பெண்கள் தலையில் வைக்கக்கூடிய வெகு நேர்த்தியான கொண்டைப்பூ 1. தந்தசீப்பு 1. முகம்பார்க்கும் கண்ணடி 1. ஜெர்மன்சில்வரால்செய்த மை அல்லது புனுகு ஜவ்வாது வைக்கக்கூடிய மைசிமிழ் 1. அதிகவாசனையுள்ள அத்தர்பில்லை 1. கொண்டைக்கிளி 5. இனுமாய் அனுப்பப்படும்.

**மலசுத்தி லேகியம்.**—1-சேர் லேகிய மடங்கிய டப்பி 1-க்கு ரூபா 1

**மேகவெள்ளைச் சூரணம்.**—டப்பி 1-க்கு அணு 12.

**தந்தப்பொடி.**—இது பல்நோய், கூச்சல், பல்லசைவு ஈறு கரைந்து இரத்தமுண்டாதல் முதலியவைகளை நீக்கி ஈரைக்கெட்டிப்படுத்திப் பற்களை இறுக்கி சகலதுன்பத்தையும் ஓட்டிவிடும். டப்பி 1-க்கு அணு 4. 10 டப்பி ரூபா 2 0 0

**சர்வபடை சங்காரி.**—இந்த ஆச்சரியப்பட்டத்தக்க மருந்தினுல் தீரும் வியாதிகள் ஆண்பெண் இருதாத்தார்க்கும் இடுப்பு தொடை முகம் முதுகு மற்ற எந்த விடங்களிலாயினும் உண்டாகும் எவ்வித வண்டுபடைகளும் மூன்றுவேளை தடவினுல் யெரிச்சல்நாற்ற முதலிய துர்க்குணம் கிடையாது. இந்தமருந்து வாயில் படக்கூடாது. கிரயம் டப்பி 1-க்கு அணு 8.

**சர்வரோய் சங்காரன்.**—டப்பி 1-க்கு அணு 0 8 0

**ஆபீஸ் பாக்கெட் மாத்திரை.**—கிரயம் 24-மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு அணு 4.

**மதனசிந்தாமணி லேகியம்.**—இந்த ஹல்வாவை வேளை ஒன்றுக்கு அரைரூபா யிடையாக காலை மாலை 2-வேளையும் 20-நாளைக்குச் சாப்பிட்டு வந்தால் தேகத்திலுள்ள மேகவாயு மேககாங்கை, ஊஷ்ணமுதலிய வியாதிகளை நீக்கி தேகத்திற்கு வலுவைக்கொடுத்து இரத்தத்தைச் சுத்திப்படுத்தி இழந்துபோன சக்தியையும் பலப்படுத்தி தேகத்திற்கு அழகும் காந்தியும் முகவஜீகாமு முண்டாக்கி மனக்களிப்பை யுண்டாக்குவதன்னியில் தேகத்தை வச்சிரகாயமாக்கிவிடும். இதின் பெருமையை இதை அனுபவிப்பவர்களே கண்டுகொள்வார்கள். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 2 8 0.

**சுகந்த பூக்குத்தூள்.**—கிரயம் புட்டி 1-க்கு அணு-4. டஜன் 1-க்கு ரூபா 2 8 0. 8-பலங்கொண்ட சேர் 1-க்கு ரூபா 3 0 0 வி. பி. சார்ஜ் புட்டி 1-க்கு அணு-3, வி. பி. சார்ஜ் டஜன் 1-க்கு 0 6 0.

**ஸ்திரீகள் பக்தவிஜய மென்னும் பதிவிரதைகள் சரித்திரம்.**—450-சயடுள்ள புஸ்தகம் விலை அணு 12. வி பி சார்ஜ் அணு 3.

எஸ். பி. இராஜாராம் அண்டு கம்பெனி, சூளை போஸ்ட், மதராஸ்.


உ


ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] 1915ஞு மார்ச்மீ [சஞ்சிகை 6


## ஒளிவளர் விளக்கு

1915ஞு பிப்ரவரி மாதத்தில் நமது சபா மண்டபத்திற்கு விஜயஞ் செய்த கனவான்களுடைய எண்ணிக்கை 222.

*
* *

விஸ்வகர்மச் சிறுவர் வித்யாநிதிக்கு நன்கொடைகள் வாக்களித்தவர்களில், ஸ்ரீ T. பாட்சா ஆச்சாரியாரவர்கள் ரூ. 100-ம், ஸ்ரீ T. கேசவாச்சாரியாரவர்கள் ரூ. 10-ம் கொடுத்தருளினுர்கள். மற்றவர்களும் சீக்கிரமே செலுத்தியருள வேண்டுகிறேரும்.

*
* *

ஆந்திரதேசத்தில் நடைபெற்ற கான்பரன்ஸுகளிற் செய்யப்பட்ட உபந்நியாசங்களை, தென்னுட்டுவாசிகளா யுள்ளவர்களுக் குபயோகமாகுமாறு தமிழில் மொழிபெயர்த் தச்சிட உத்தேசித்து, இச்சஞ்சிகையில் ஸ்ரீ மானும்பதி-அப்பா கண்ணுச்சாரியாரவர்களுடைய உபந்நியாசத்தை வெளியிட்டிருக்கிறேரும். இனி, தென்னுட்டில் பலகான்பரன்ஸுகள் நடைபெறுமென் றெண்ண இடமுள்ளபடியால், இம்மொழிபெயர்ப்பு மிகவும் பயன்படுமென்பதில் ஐயமில்லை.

பண்டித சிரேஷ்டராகிய மீனுக்ஷிபுரம் ஜோஸ்யர் ஸ்ரீ A. முத்து ஆச்சாரியாரவர்களால் 'ஆச்சார்ய' பட்டசம்பந்தமா யெழுதிச் சபைக்களிக்கப்பட்ட அரிய வியாசமானது புத்தகரூபமாய் அச்சிடப்பட்டு வருகிறது. சீக்கிரம் வெளிவரும். சுருதி, ஸ்மிருதி, சிற்பம், ஹிதிகாசம், புராணம், சிலாசாஸனம், ஆங்கில வித்யாநிதிகளின் வாக்கியங்களாதிய பல ஆதாரங்களுடன் விஸ்வகர்மரே ஆச்சார்ய ஜாதியாரென்று இதில் நிரூபணஞ் செய்யப்பட்டிருக்கிறது. இது முக்கியமாய் மற்றஜாதியார்களுடைய பார்வைக் குரியதேயாயினும், விஸ்வகர்மஜாதியார் ஒவ்வொருவரும் ஒருபிரதியைக் கட்டாயமாய்க் கைக்கொண்டிருக்க வேண்டியது அவஸ்யமாயிருக்கிறது.

*
* *

'தந்தவேலை' யென்னுந் தலைப்பிட்டு 'சத்தியவசனன்' என்பார் எழுதிவந்த வியாசமானது இச்சஞ்சிகையில் முடிவுபெற்றது. இதனை முதலிலிருந்து கவனமாய் வாசித்துவந்தவர்களுக்கு, 'சத்தியவசன'ருடைய ஆராய்ச்சித்திறமை நன்கு புலப்பட்டிருக்கும். தந்தத்தின் உற்பத்தி, கிடைக்குமிடம், பாகுபாடுகள், உபயோகங்கள், கையாளவேண்டிய விதங்கள், தந்தத்திற்கு சாயமேற்றல் சாயம்போக்கல் தன்னிறமாக்க

லாதிமுறைகள், தந்தவினைஞருக்குரிய உபதேசங்களிவையெலாம் போதனைவிதிப்படித் தெளிவாக இவ்வியாசத்திலெழுதப்பட்டன. இம்மாதிரியில் பல தொழில்களைப்பற்றி இவரும் மற்றையோரும் வியாசமளிக்க வேண்டுகிறோம்.

*
* *

மஞ்சக்குப்பம் வாசியாகிய 'கடவுள் சம்மதம்' பௌத்திரரிஷி ஸ்ரீமாணிக்கம் ஆச்சாரியாரவர்களைப்பற்றி நமது வாசகர்களுக்கு ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம். இவர், சமீபகாலத்தில், திருவாங்கூரைச் சார்ந்த கோட்டாற்றிலும் தென்காசி முதலிய இடங்களிலுமுள்ள விஸ்வகர்மர்களைத்தூண்டி அங்கங்கு பாடசாலைகளும் குலோபந்நியாசங்களும் நடைபெறச் செய்துவந்ததாயறிந்து மிகவுங்களிப்பெய்தினோம். குலசேவையேகருமமாய்க்கொண் டுழைப்பதற்கு இவரொருவரேனும் நமது குலத்திற்கு வாய்த்திருப்பது நமது பாக்கியவசமேயெனவேண்டும். மற்றவர்களும் தங்களாலியன்றவளவு தாமிருக்குமிடங்களிலும் செல்லுமிடங்களிலும் குலசம்பந்தமான உழைப்பைச் சற்றேனுங் கொண்டு வாழ்வது சிலாக்யமாகும்.

*
* *

இந்திய சேவாசங்கத் தாபகரும், இம்பீரியல் சட்ட சபை மெம்பரும், ஒப்புயர்வற்ற தேசாபிமானியும், தன்னலமறுப்பினால் தனிக்கீர்த்தி பெற்றிருந்தவருமாகிய ஸ்ரீமத் கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள் சென்ற மாதம் இறந்துபோனாரென்னும் மகாதுக்க சம்பவம் உலக முழுவதையும் ஒருங்கே துயர்க்கடலிலாழ்த்திற்று. பிரிட்டிஷ் ராஜ்ய மன்னராகிய கனம் ஜார்ஜ் சக்கரவர்த்திமுதல், ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களில் கவர்னர் ஜெனரல் கவர்னர்கள் உள்பட சகல ஜனங்களுந் துக்கம் பாராட்டினரென்றால், கோபாலகிருஷ்ணருடைய மாக்ஷிமையை என்னென்று கொண்டாடலாம்! சாக்ஷாத் கோபாலகிருஷ்ணருக்கு இவரை யொப்பிடத்தகும். இவருடைய ஞாபகச்சின்னமாக சென்னையில் இவர் உருவச்சிலையொன்று செய்துவைப்பதற்கும், இந்திய சேவா சங்கத்திற்குப் பொருளுதவி செய்யவும் நிதி சேர்க்கப்பட்டுவருகிறது.

*
* *

கல்கத்தா பிரஸிடென்ஸி காலேஜ் ரஸாயன பண்டிதரான டாக்டர் பிரபலசந்திர ராயர், இந்துக்களின் பூர்வீக ரஸாயன சாஸ்திர விற்பத்தியைப்பற்றி சமீபகாலத்தில் லாகூரில் உபந்நியசித்தபோது கூறிய கீழ்க்குறித்த வசனங்கள் நம்மவர்களுடைய கவனத்திற்குரியவையாயிருக்கின்றபடியால், அவற்றை இங்கே பெயர்த்தெழுதலானோம்—"நமது பூர்வீக நாகரிகத்தைப்பற்றி நாமெல்லோரும் பெருமை பாராட்டவே வேண்டும். ஆனால், 'முற்காலத்தில் நாம் சிறப்புற்றிருந்தோம்' என்ற ஞாபகத்துடன் திருப்தியடைந்து சும்மாவிருக்கலாகாது. மகா வல்லபர்களான நம்முன்னோர்களுடைய ரத்தம் நமது நரம்புகளில் இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறது. தக்கவாறு முயற்சி செய்தால், நாம் பழைய நாகரிக உன்னதத்தை நிச்சயமாய்த்திரும்பி அடைவோம். நமது எதிர்காலப் பிரகாசநாட்கள் நெருக்கத்திலேயே இருப்பதாக என் கண்ணுக்குப் புலப்படுகின்றது. ஒரு காலத்து நம்முடையதாயிருந்த உலக மதிப்பையடைய இங்கிருப்பவர்களில் ஒவ்வொருவரும் தம்மாற்கூடிய மட்டும் முயற்சிப்பார்களென்று நான் நம்பியிருக்கிறேன்."

*
* *

கும்பகோணம் விஸ்வகர்ம மகாஜன கான்பரன்ஸ் காரியதரிசிகள் பின்வருமாறு ஒருகடிதமனுப்பியிருக்கிறார்கள்—"தென்ஜில்லாக்களில் மேற்குறிப்பிட்ட சுஜாதிகான்பரன்ஸ் நிகழும் 1915-௵ ஏப்பிரல்௴ 3௳ சனிக்கிழமையன்றும், 4௳ ஞாயிற்றுக்கிழமையன்றும் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் ஹாலில் நடைபெறுமாகையால், சுஜாதியார்கள் விஜயஞ்செய்து ஜாதிமுன்னேற்றத்திற் குரிய விஷயங்களை ஆலோசிக்கக் கோருகிறோம். உபந்நியாசிக்க விரும்பும் விஷயத்தை தயார் செய்து கொண்டுவரும்படியாய் கோருகிறோம். வெளியூர் டெலிகேட்டுகளுக்கு போஜனம் வசதி முதலிய சௌகர்யங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கான்பரன்ஸ் தமிழ்ப்பாஷையிலேயே நடைபெறும். சுஜாதியாரனைவர்களின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். கட்டணவிகிதம்—டெலிகேட்களுக்கு ரூ. 2; விஸிடர் முதல்வகுப்பு ரூ. 1, இரண்டாம் வகுப்பு ரூ. 0 8 0"—உபசாரணைக் கமிட்டி ஏற்பட்டதாகவாவது, அதற்கொரு தலைவரிருப்பதாகவாவது, கான்பரன்ஸ் அக்கிராசனாதிபதி தெரிந்தெடுக்கப்பட்டதாகவாவது, 1915-௵ மார்ச்௴ 29௳ வரையிலுந் தெரியவில்லை. ஷை கடிதத்துடன் கீழ்க்குறித்த வாக்கியங்களடங்கிய தாளொன்றுங் கிடைத்தது—



### விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸின் தீர்மானங்களின் சுருக்கம்

I. இராஜபக்தி

a. நமது பிரிட்டிஷ் இராஜாங்கத்துக்கு தற்போது ஏற்பட்டிருக்கும் யுத்தத்தைப்பற்றி அநுதாபம் காட்டுவது.

b. இராஜப்பிரதிநிதி லார்ட்ஹார்டிஞ்சு பிரபுவிற்கு ஏற்பட்டதுக்கத்திற்கு அநுதாபம் காட்டுவது.

II. தேசபக்தி

a. கனம் ஸ்ரீயுத கோபாலகிருஷ்ண கோகேல் அவர்கள் காலஞ்சென்றதைப்பற்றி அநுதாபம் காட்டுவது.

III. கல்வி

a. நமது ஜாதீயச் சிறுவர்களுக்கு செகண்டரி பாடசாலைகளிலும் காலேஜிகளிலும் பாதிச்சம்பளம் கொடுக்கும்படியாகவும்.

b. ஷை சிறுவர்களுக்கு உயர்தரக் கல்விக்கு உபகாரச்சம்பளம் கொடுத்துதவும்படிக்கும்.

c. நமதுவம்ச பாலர் பாலிகைகளுக்கு எலிமென்டரி கட்டாயப்படிப்பைப் பற்றியும்.

d. ஒவ்வோர் பட்டணங்களிலும் சுஜாதி ஏழைச்சிறுவர்களை ஆதரிக்க கல்விச் சங்கம் ஏற்படவேண்டியதவசியமென்பதையும்.

IV. கைத்தொழில்

a. நமது பூர்வீக கைத்தொழில்கள் க்ஷீணதிசையடையாமல் காப்பாற்றவேண்டுமென்றும்.

b. நமது சிற்பவிஷயங்களடங்கிய கட்டடங்கள் முதலியவைகளில் கவர்ன்மென்டாரும் மற்றவர்களும் இந்திய சிற்பியைக்கொண்டே முடிக்கவேண்டுமென்றும்.

c. நமது வம்சச்சிறுவர்களுக்கு கைத்தொழில் பாடசாலை வைத்துக்கொள்ளவும்.

d. அன்னியநாடுகளுக்குப் போய்வர எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும்படிக்கும்.

e. உயர்தரப்பட்டங்கள் வேண்டிய தவசியமென்பதை நீக்கி ஆங்கிலம் தெரிந்தவர்களை அன்னிய நாடுகளுக்கு அனுப்பி உபகாரச் சம்பளம் கொடுத்து கைத்தொழில் கற்று வரவும்.

f. கைத்தொழில் ஐக்கிய சங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேணுமாய்—

V. ஆசாரசீர்திருத்தம்

a. நமக்கு ஏற்கனவே பூர்விகமாயிருந்த 'ஆச்சாரி' பட்டத்தை இழந்து போனதை மீளவும் கொண்டுவருவதையும்; ஜாதியாருள் உட்பிரிவுகளின் பேதாபேதங்களன்னியில் போஜனவிஷயம் குடும்ப விஷயங்களில் ஒற்றுமையுடன் இருக்க வேண்டியதையும்; பாலர் பாலிகைகளுக்கு தகுந்த காலம் குறிப்பிட்டு அனாவசியமான செலவை நீக்கி விவாகச் செலவு சுருக்கமாகச் செய்யவேணுமாயும்; வைதிக மார்க்கத்தை அநுசரித்து நமது வம்சச்சிறுவர்களுக்கு உபநயனமுதலிய ஆசார அநுஷ்டானங்கள் தவறாமல் நடத்தவேணுமாயும்—

## போதுலூர்-வீரப்பிரம்ம மடம்

ஷை மடத்து சிஷ்யரொருவர் எழுதியது—

'நமது மடங்கள்' என்னும் பெயருடன் சென்ற டிசம்பர்மாதச் சஞ்சிகையில் வெளியான வியாஸத்தால் தூண்டப்பட்டு பின்வரும் வாக்கியங்களை யெழுத நான் முன்வந்தேனேயல்லாமல் வேறில்லை. என்னுடைய அற்ப வசனங்களை வாசிக்கும் விஸ்வப்பிராம்மணர்கள், நமது ஜாதி மடங்களாகப் பலவிடங்களில் புராதீனமாய் இருந்து வருவனவற்றைப் பற்றிய உண்மையான விவரங்களைப் பலரறிய எடுத்தெழுதி, நமது குலத்தார்களுக்கெல்லாம் ஜாதி மடங்களின்மீது அன்புண்டாகச் செய்து, அதனால் மடங்களின் செல்வாக்கைப் பெருக்கி குலமுழுவதிற்கும் க்ஷேமத்தை உண்டாக்குவார்களென்று கேட்டுக்கொள்ளலாயினன்.

இந்த விஷயம் அலட்சியமாய் விட்டுவிடத்தக்கதல்ல. இதைப்பற்றி நமது வம்ஸத்தார் ஒவ்வொருவரும் கொஞ்சமாவது லட்சியம் வைக்கவேண்டியது அவஸ்யமென்று நினைக்கிறேன். ஏனென்றால், நமது பூர்வீகர்கள் நமக்குச் செய்துவைத்த நன்மைகள் சிலவற்றில் இதுவும் ஒன்றாகும். இந்த நன்மையைக் கெடுத்துக்கொள்ளாமல் பலனடைவதற்கு நாம் பாடுபடுவது நமது முக்கியகடமை யென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. இவ்வித நன்மை பலஜாதிகளுக் கேற்படவில்லை. அவர்களெல்லாம், இவ்விஷயத்தில், நம்மைப்பார்த்து பொறாமைகொள்ளவேண்டிய ஸ்திதியிலிருக்கிறார்களென்றுஞ் சொல்லலாம்

இப்படி, நம்மவர்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்களை ஒவ்வொன்றாக நமது ஞாபகத்திற்கு இப்பத்திரிகை கொண்டுவருவது குலபுண்ணியவசமென்றே சொல்லவேண்டும். இவ்விதமாக ஞாபகப்படுத்தப்படுஞ்சமயத்தில் நாம் அந்தந்த விஷயத்தில் சிரத்தைவைத்து நடந்துகொள்வோமானால், படிப்படியாய் நம்மைச் சார்ந்துள்ள பல விஷயங்களும் சீர்திருத்தமடையும். நாமும் கிரமக்கிரமமாய் மேன்மேலும் விருத்தி பெறுவோம். குலோத்தாரணத்திற்கு சாதனம் இதுவென்றே கொள்ளலாம். ஒவ்வொரு மடத்தினுடைய பிரபாவந்தெரியாவிட்டால், அந்தமடங்களின் மீது வாஞ்சையும் பக்தியும் ஏற்படமாட்டா. ஒவ்வொரு மடத்தினுடைய தற்காலநிலைமை தெரியாவிட்டால், அந்தந்த மடங்களைச் சரிப்படுத்தவேண்டிய அவசியமும் அவசரமும் மார்க்கங்களும் தோற்றமாகா. ஆதலினால், ஒவ்வொரு மடத்தைப்பற்றியும், அதைச்சார்ந்தவர்களாவது அதன் உண்மைகளைத் தெரிந்தவர்களாவது நமது பத்திரிகை வாயிலாக விஸ்வப்பிராம்மண ஜனங்களுக்கெல்லாம் போதிக்கவேண்டும். அவ்வித போதனைசெய்வதில் மடாதிபதிகளுந் துணையாயிருக்க வேண்டும்.

போதுலூர் வீரப் பிரம்மேந்திர மடத்தைப்பற்றி நானறிந்த சிலவிவரங்களை இங்கெழுதுகிறேன். இன்னுமதிகமாயறிந்தவர்கள் விரிவா யெழுதுவார்களாக. இந்த மடாலயம், கடப்பைஜில்லாவில் கடப்பை நகரத்

திற்கு அப்பால் சுமார் 34 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கு செல்லவிரும்புகிறவர்கள் கடப்பை ரயில்வே ஸ்டேஷனி லிறங்கவேண்டும். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கடப்பைப்பட்டணம் சுமார் 3 மைல் தூரத்திலிருக்கிறது. ஏறிச்செல்ல ஜட்காவண்டிகள் விசேஷமாய்க் கிடைக்கின்றன. கடப்பையில் யாதால-நாகம்ம சத்திரமென்பதொன்று மிக விசாலமாயிருக்கின்றது. யாத்திரைவாசிகள் தங்கிச்செல்வதற்கு இந்த சத்திரம் மிகவுஞ் சௌகரியமானது. விஸ்வப் பிராம்மணர்கள் வீடுகள் பலவு மிருக்கின்றன. ஆந்திரர்களேயல்லாமல், தென்னாட்டி லிருந்துசென்று குடியேறிய தமிழர்கள் சிலரும் கடப்பையி லிருக்கிறார்கள்.

கடப்பையிலிருந்து வீரப்பிரம்ம மடத்திற்கு நடந்து செல்லக்கூடாதவர்கள் ஜட்காவண்டியிலோ, இரட்டைமாட்டுவண்டியிலோ, ஒற்றைமாட்டுவண்டியிலோ செல்லலாம். வண்டிச்சத்தம், போகவர, ரூபா ஆறுமுதல் ரூபா பத்துவரையிலுஞ் செல்கின்றது. விரைவாய்ச் சென்றால் ஓரோநாளிற் போகலாம். சுமார் 20 மைல் தூரத்திற்கு நல்ல பாதையிருக்கிறது. அதற்கப்பால், மலைச்சாரலிற் செல்லவேண்டும். வழியில், பலகிராமங்களிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவையாகிய சென்னூர், நந்தியாலம்பேட்டை என்பவை ஏறக்குறைய பத்துமைல் தூரங்களிலிருக்கின்றன. இங்கு தங்கி ஸ்நானஞ்செய்யவும், சமைக்கவும், படுக்கவும் வசதிகளுண்டு. சென்னூரில் திவ்வியமானதோர் ஆறு இருக்கின்றது.

போதலூர் மடத்திற்கு மகாசிவராத்திரி காலத்திலும், சித்திராபௌர்ணமி காலத்திலும், ஜனங்கள் விசேஷமாய்ச்செல்லுகிறார்கள். சிவராத்திரிக்கு வருஷந்தோறுங் கூடுகிறவர்கள் ஓரிலக்ஷத்திற்கு அதிகமிருக்கலாம். இதிற் பாதியளவு சித்திராபௌர்ணமிக்கு வருகிறார்கள். இப்படி வருபவர்களில் எல்லா ஜாதியாருங் காணப்படுகிறார்கள். நமது ஆருஷேயப் பிராமண சகோதரர்கள் முக்கியமாய்க் காணப்படுகின்றனர். ஷை இரண்டு சமயங்களில் விசேஷ ஜனக்கூட்டஞ் சேருகிற தென்றதினால், மற்ற காலங்களில் ஜனக்கூட்டமில்லையென்று நினைக்கலாகாது. பிரார்த்தனைக்காரர்கள் வருஷமுழுவதும் தமது சௌகரிடம்போல் வந்துகொண்டே யிருக்கிறார்கள். பொன் வெள்ளி உருப்படிகளும், ரொக்கமுடிப்புகளும், தான்யவகைகளும் மற்றும் பலவும் சதாகாலம் வந்து கொண்டேயிருக்கின்றன. மேற்கூறிய இரண்டு சமயங்களில் அதிவிசேஷமாய் வரும். இவ்விதத்தினால் இம்மடத்திற்கு அதிகப் பொருள்வருவா யுண்டு.

வீரப்பிரம்மேந்திர மடமானது, கந்திமல்லய்ய பல்லெ என்னுங் கிராமத்திற்குச் சுமார் நூறுகஜதூரத்திலிருக்கிறது. சுவாமிகள் வாசஞ் செய்திருந்த ஊர் கந்திமல்லய்ய பல்லெ எனப்படும். அங்குசுமார் 50 வீடுகளிருக்கின்றன. இப்போது மடாலயமுள்ள ஊர், பூர்வத்தில் ஷை கிராமத்தின் மயானமாயிருக்கவேண்டும். அங்குள்ளது ஷை சுவாமிகளினுடைய சமாதி. அதனோடு அவருடைய குமாரத்தியாகிய ஈஸ்வரம்மாளுடைய சமாதியிருக்கிறது. சுவாமிகளுடைய சமாதிக்குப் பெரிய மடமென்றும் அம்மாளுடைய சமாதிக்குச் சிறிய மடமென்றும் பெயர் வழங்குகிறது. ஒவ்வொன்றிலும் அந்தந்த பரம்பரையைச் சேர்ந்தவர்களுடைய சமாதிகள் பலவிருக்கின்றன. பெரியமடமும் சிறிய மடமுமாகிய இருமடங்களும் ஒன்றையொன் றடுத்து ஒரே மதிலணைக்கு ளிருக்கின்றன. இரண்டிற்கு மிடையிலுள்ளது ஒருசுவரே! இம்மடங்கள் வீஸ்தாரமான இடவசதியோடு, மூலஸ்தானம், த்வஜஸ்தம்பம், உற்சவமண்டபம், சதிர்மண்டபம், வாகனமண்டபம், தர்பார்மண்டபம், ஏவலாளர்மண்டபம், அதிபதிஸ்தானம் முதலியவானபலவுங்கொண்டு விசாலமாய், 10,000 பேர்களை ஒருங்கே கொள்ளக்கூடியனவாய் ஆலயலக்ஷணங்களுடன் விளங்குகின்றன. யாத்திரைவாசிகள் தங்குவதற்கும் சமைப்பதற்கும் உபயோகமாகக்கூடிய ஸ்தானங்கள் பல இருக்கின்றன. ஸ்நானத்திற்கும் பானத்திற்கும் பல கிணறுகளுள. மடத்தைச்சார்ந்தனவாய் கந்திமல்லய்ய பல்லெயிலும் மற்றும் பல கிராமங்களிலும் பூஸ்திதிகள் விசேஷமாயிருக்கின்றன. இவைகளில் பருத்தி, மஞ்சள், கொள்ளுமுதலியவை ஏராளமாய்ப் பயிரிடப்படுவதினால் நல்ல வருமானங் கிடைக்கிறது.

தற்போதுள்ள மடாதிபதி ஸ்ரீவெங்கடேச ஸ்வாமிகள் எனப்படுவார். இவருடைய வயது 25 வருஷங்களுக்குக் குறைவாகவே யிருக்கும். மற்ற மடாதிபதிகளைப்போலவும், ஸ்ரீ வீரப்பிரம்மேந்திர சுவாமிகளைப்போலவும், இவரும் கிருகஸ்தாச்சிரமமே வகித்தவர். இவருக்கு விவாகமாகிச் சிலவருஷங்களேயாகின்றன. இவருடன் பிறந்தார் புருஷரொருவருமிலர். இவருக்கு முன்னிருந்த சுவாமிகள் பரிபூர்ணதிசையடைந்து சுமார் 10 வருஷங்களாகின்றன. இவர் பட்டத்திற்கு வந்தபின் மடாலய பரிபாலனத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுவருகின்றன. அடியார்களுடைய சௌகரியத்திற்கு வேண்டிய வசதிகள் நன்கு அமைக்கப்படுகின்றன. இவர் சமஸ்கிருதக்கலாஞானஞ் சிறந்தவரென்றும் யோகாநுபவமுடையவரென்றுந் தெரிகிறது. கடப்பை ஜில்லா வாசிகளுக்கு முக்கியமாக இவரிடத்தில் அத்தியந்த பிரிய மேற்பட்டிருக்கிறது. கனதனவான்களாகிய ரெட்டிகள், கோமுட்டிகள் முதலியோர் பலர் அடிக்கடிவந்து இவரைச்சேவித்து ஆசீர்வாதம் பெற்றுப்போதல் சகசமாயிருக்கிறது.

சிவராத்திரிகாலத்தில் இந்தியாதேச முழுவதிலுமிருந்து எல்லா ஜாதியாரும் மடத்திற்கு வருகின்றனர். பாஞ்சாலம், நேபாளம், சிந்து, வங்காளம், மகாராஷ்டிரம், ஹைதராபத், மைசூர் முதலிய தேசங்களிலிருந்து பலபாஷை பேசுவோர் ஒருங்கே இங்கு திரண்டிருக்கக் காண்பது அரியகாட்சியாகும். தென்தேசத்திலிருந்து தமிழர் பலருஞ் செல்கின்றனர். பிரதிவருஷமும் சுமார் 50 தமிழ்க் குடும்பத்தினரை மடத்திற்காணலாம். சென்னையிலுள்ளோர் திருப்போரூர் திருத்தணிகையாதிய இடங்களுக்கு மாதந்தோறுஞ் செல்வதுபோல், வருஷமொருமுறை கிரமமாக சிவராத்திரி காலத்தில் பலகுடும்பத்தார் வாடிக்கையாக வருகிறார்கள்.

இப்படி வருவோர்க்கு பக்தி ஞான வைராக்கியங்கள் பெருகுவது சகசமாயிருக்கிறது. இகலோக சாம்பிராச்சியங்கள் பலவுங் கைகூடிச் சிறந்துவருகின்றன. மடத்தின் எல்லைக்குளுள்ள பிராணிகளுக்கெல்லாம் எங்குமற்ற மனச்சாந்தியுண்டாகின்றது. அந்த சாந்தியை அவரவர்கள் தமது அறிவாராய்ச்சி மனோதிடங்களுக்கேற்ப நெடுங்காலங் கொண்டிருக்கின்றனர். காலக்கியானஞ்செய்த கண்ணாளராகிய வீரப்பிரம்மேந்திர சுவாமிகளின் பெருமை இந்தியாவோடு நில்லாமல், மேல் நாடுகளுக்கெல்லாம் வியாபித்திருக்கின்றதென்றால், அதைப்பற்றி என் புல்லெழுத்துகளால் தெரிவிக்கவும் வேண்டுமோ? இஷ்டசித்தியடைய விரும்புவோர்க்கெல்லாம் இதுவே ஏற்றகடவுளாயிருக்கிறது. இம்மடாலயத்தைத் தென்னாட்டார் பலருஞ் சென்று தரிசித்துப் பலனடைய வேண்டுமென்பது என் ஏழைவேண்டுகோள். ஒருமுறை சென்று தரிசித்தவர்கள் திரும்பத்திரும்பச் செல்வதற்குத் தூண்டப்படுவரென்பதை அநுபவத்தில் அறியலாம். மடாதிபதி சகல ஜாதியாரையும் சமதிருஷ்டியோடு நோக்குவதும், இம்மடத்துப் பிரசாதத்தை பிராமணருள்ளிட்ட சர்வஜாதியாரும் ஆவலோடிருந்து பெற்றுப் போற்றுவதும், ஆறுகாலபூஜையின் அருமையும், அனைத்துச் சாதியாரும் அளவளாவியிருக்கும் ஆனந்தமும், பக்தர்களுடைய பரவசக்காக்ஷியும், உற்சவங்களின் உன்னதமும், இடையறாது கேட்கப்படும் வேதாந்தக் கீர்த்தனங்களின் போதாந்தாநுபவமும் போய் அநுபவித்தவர்களுக்குப் புலமாகுமேயன்றி மற்றவர்களுக்கு விளங்கலாமென்பது மயக்கமேயாகும்.

இவ்வளவு சிறந்தமடாலய மொன்று நமது வம்ஸத்திற் கேற்பட்டிருப்பது நமது பாக்கிய விசேஷமேயென்பதிற் சந்தேகமில்லை. இதனினும் பெரும்பாக்கியம் உலகத்தில் இக்குலத்திற்குண்டாயிருப்பதாக எனக்குத் தோன்றவேயில்லை. இம்மடத்தை யநுசரித்து நமது குலத்திற்கே சிறப்புண்டாயிருக்கிறது. இவரைப்போற்றாத ஜாதியானில்லை. வணங்காத வம்ஸத்தானில்லை: இவர் சிறப்பு என்னே யென்னே!

---

**இருமியதற்காக அபராதம்.**—பாட்னா முனிஸிப் கோர்ட்டில் முன்சீப் ராஜிபுவராயர் என்பவர் முன்னிலையில் ஒரு கட்சிக்காரன் இருமிவிட்டான். அதற்காக முனிஸிப் அவனுக்கு ஒரு ரூபாய் அபராதம் விதித்துவிட்டார்.





கிருஷ்ணா குண்டூர் மண்டல விஸ்வப்பிராமண சபை 1.

## ஸ்ரீ மானம்பதி அப்பாகண்ணாச்சாரியாரவர்களுடைய ஆரம்ப உபந்நியாசம்

(தெலுங்கினின்று மொழிபெயர்க்கப்பட்டது) *

உலகாபி விருத்தியின்பொருட்டு பரோபகாரமாதியாய சற்குணங்கள் பெரியோரால் ஆஸ்ரயிக்கப்பட்டு, ஸ்மிருதிகள், சூத்திரங்கள், ஆகமங்கள் முதலியன பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் நம்மவர்கள் யாவரும் அப்யசித்து விருத்திபெறுமாறு நடந்துகொள்ளவேண்டியவர்களா யிருக்கிறோம். "தர்மத்தைச்செய்" "நிஜத்தைச்சொல்" என்னும் நீதிவார்த்தைகளை நினைந்து, ஸ்ரீகிருஷ்ணா குண்டூர் மண்டல விஸ்வப்ராமணர்களுடைய மகாஜன சபைக்கு அழைக்கப்பட்ட சபாநாயகரான ப்ரம்ஹஸ்ரீ கொண்டிபர்த்தி வீராச்சாரியாரவர்களின் கட்டளையின்படி, நம்மினத்தோரை விருத்திகரமான தொழில்களிலே பிரவேசிக்கச்செய்வதற்கு அனுகூலமாயிருக்கும்படி, இந்த உபந்நியாசஞ்செய்ய முன்வந்தேன்.

### பிரார்த்தனை

ஆரியகனவான்களே! ப்ராசீனர்களும், ஸ்தாபனாசாரியர்களுமான நம்முன்னோர்களாகிய பண்டிதர்களாலே மொழியப்படத்தக்க வாக்கு சாதுர்யங்கள் என்னிடத்திலில்லையாயினும், குலாபிமானம் தேசாபிமானம் இவற்றையேமிட்டுக்கொண்டு இச்சபையிலே நான் விண்ணப்பஞ்செய்யப்புகும் நல்ல விஷயங்களைச் செவியுற்று விமர்விசித்துக் கௌரவபதவியை யடைவீர்களென்று விராட் விஸ்வகர்ம பரமேஸ்வர பஞ்சமுக ப்ரம்ஹத்தை ஸதா த்யானிக்கிறேன்.

### பிறஜனப் பிரயத்தனங்கள்

இக்காலத்தில் இமயமலைக்குத் தென்பாகத்திலுள்ள ஆர்யாவர்த்தமென்கிற இந்துதேசத்தில் எவ்விடத்திலும் இவ்வுலக தர்மங்களான நியாயங்களை பெருஞ் சபைகளில் விமர்சித்தல் சாதாரணமாயிருக்கிறது. அப்படிப்பட்ட ஸமாஜங்களில் ஐந்துதொழில்களிற் பயிற்சியுடைய சிங்கங்களைப்போன்றவர்களாகிய நம்மவர்களின் அபிவிருத்தியைமாத்திரம் கருதாமல் இந்துதே

---

* ரிஜிஸ்டர்ட் காபிரைட்,

சஸ்தரான இதாஜனங்கள் நம்முடைய தொழில்களினுலே தமக்கு ஜீவனோபாயம் விரைவில் சித்திக்குமாறு யத்தனிப்பதைக்கண்டும் ஸ்வதேசிய வ்யவகாரங்களையறிந்தும் நாம் இதுவரையிலும் மௌனமாயிருக்கிறோம்.

### தொழில் ஊழியம்

ஆங்கிலேய தேசத்திலிருந்து வந்த தொழில்களில் ஆவலுடைய (லேபர்பார்டி யெங்கிற) தொழிலாளிகளின் சங்கத்திற்கு தலைவரான மிஸ்டர் கேர் ஹார்டி துரை அவர்களும் பத்ரிகாதிபராகிய மிஸ்டர் நெவின்ஸன் முதலான துரைகளும், நம்முடைய தேசத்தில் எங்கேயாகிலும் நம்மவர்களின்பொருட்டு ஒருசமாஜத்தையாயினும் ஏற்படுத்தவில்லை. நம்மவர்களும் அப்படிப்பட்டவர்களை அடுத்து சபைகள் ஏற்படுத்தி விவகாரங்களை நடப்பித்துக்கொள்ளவில்லை. சகல ஜனங்கள் தம்தம்தொழில்களை விருத்திசெய்துகொண்டிருக்கையில் நம்மவர்கள்மாத்திரமே, எனக்குத்தெரிந்தமட்டில், நம்முடைய தொழிலை ஊழியக்காரரைப்போல்செய்து தங்களுடைய சொந்தகுலமரியாதைகளை நாசப்படுத்தி வருகிறார்கள்.

### பூமியின் சீர்திருத்தம்

மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாத ஸ்வரூபியான பகவான் பிரபஞ்சத்தின் ஓர் அம்ஸமாகிய பூமியைச் சிருஷ்டித்தபோது அது மேடுபள்ளங்களாயிருந்ததென்றும், சத்துவான பலனைத் தருவதாயில்லையென்றும், சூரியகுலத் துதித்தவரான பிருகு சக்ரவர்த்தி தன் கைவில்லினுல், கோரூபமடைந்த பூமியை ஸாரமுள்ளதாய்ச் செய்தாரென்றும் புராணங்கள் கோஷிக்கின்றனவேயல்லது, வில்லை நிர்மித்துகொடுத்த விஸ்வகர்மஸந்தியாரின் சாமர்த்தியம் காட்டப்படவில்லை அந்த பிருகு சக்ரவர்த்தியினுல் சீர்திருத்தப்பட்ட பூமியே ப்ருதிவியெனப்படுகிறது.

### தேச நகர கிராமங்கள்

அப்ருதிவியின் மேல், தேவாலயங்கள், அக்ரஹாரங்கள், குளங்கள், ஏரிகள், மெத்தைகள், வீடுகள், இராஜ வீதிகள், சாதாரண வீதிகள், இராஜ்யாதிகார ஸ்தானங்கள், நியாயஸ்தலங்கள் முதலியவை ஐந்து தொழில்கள் செய்பவராகிய பாஞ்சானனர்களென்னப்படும் விஸ்வகர்மாக்களின் சகாயத்தினுல் நிர்மிக்கப்பட்டிருப்பதினுலே உலகமென்னும் பெயர்மாறி, தேசம், நகரம், கிராமம் என்று வழங்கப்படுகின்றது. பகவானுல் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும், மலைகள், நதிகள், சமுத்ரங்கள், பூமிகள், இவற்றின் கண் உண்டாகும் பலவிதலோகங்களின் சுரங்கங்கள், மணல்கள், முத்துகள், பவழங்கள், ரத்தினங்கள் முதலான வஸ்துக்களின் இரள்களைக் கண்டு பிடித்து அவற்றைச் சேகரிக்க உபயோகிக்கும் யந்திரங்கள் முதலான சஸ்திர சாதனங்கள் இருப்பதினுலே மேல்விவரித்த தேசம், நகரங்கள் அல்லது கிராமங்கள் முதலியன நாகரிகமுடையனவாய் பயிரிடத்தகுந்த நன்னிலையடைந்திருக்கின்றன.

### நமது பரோபகாரம்

இவற்றில் திருடர் முதலிய சத்ருபயமில்லாமலிருக்கவும், இராஜ்யாதிகாரத்தை நிலைநிறுத்தும்பொருட்டும், கத்திகள், பீரங்கிகள், துப்பாக்கிகள், இராஜ தண்டங்கள் முதலான ஆயுதங்களைத் தரித்த இராஜ சேவகர்கள் எங்கும் பரவியிருக்கிறார்கள். அன்னியருடைய சொத்தை இச்சியாமலும், தங்களுடைய பொருள்களின் மேல் நம்பிக்கைவைத்தும் சுகஜீவிகளாய் பிரஜைகளிருப்பதினுலே ராஜ்யத்திற்கு நல்லராஜ்யமென்னும் பெயர்வந்தது. மானவாரி நிலத்தை யுழுவதற்கு கலப்பையை நிர்மித்துக்கொடுத்த மனுவாசாரிகளான கருமார ஆசாரிகளும், மயாசாரிகளான தச்ச ஆசாரிகளும், சில்பாசாரிகளும், பிரபஞ்சத்தில் அனேக சித்திரங்களைச்செய்திருந்தும், மேற்கூறியவர்களின் சந்ததியாரான நாமெல்லோரும் பரோபகார புருஷர்களென்று துரைத்தனத்தாராலும் நினைக்கப்படவில்லை.

### மூன்று சாதனங்கள்

'ஸ்வாத்ம அத்யக்ஷதை' தன் ஆத்மா உயர்ந்தது-அதாவது தானுயர்ந்தவன் என்னும் பாமதத்வார்த்த பதவி முதலிய ஸ்வதேச சம்பந்தமான வைதிக சம்பத்தை எக்காலமும் ஸ்திரமாக வியாபிக்கவும், உலகத்தில் எவ்விதகஷ்டங்களும் இராஜாங்க இம்சைகள் முதலியனவும் சம்பவிக்காமலும் நடப்பதற்கு வித்யை, ஒற்றுமை, பரோபதேசமென்கிற சாதனங்கள், ருக் யஜுர் ஸாம வேதங்களாக ப்ரகாசிக்கவேண்டியது.

### கலௌ ஸங்க்யே சக்தி

இச்சபையின்கண் வீற்றிருக்கும் சற்புத்தியுள்ள பிராமணர்களே! நாம் இதுவரையிலுங்கேட்ட உபந்யாசம் கேவலம் வாசாமாத்திரமுள்ள விஷயமாயேற்



படாமல் அதைச் செய்கைக்கு வருவிக்கும் பொருட்டு, மாதா சகோதரர் பிதா இசாருபங்களான வித்யை, ஒருவரோடொருவர் ஒத்திருக்கை, பரோபதேசம் என்னும் மூன்று கவசங்களைத்தரித்து, "கலௌ ஸங்க்யே சக்தி" கலியில் ஒற்றுமையில் வலிவு என்னும் வாக்யத்தினுடைய கருத்தின்பயனை யடையவேண்டும். உலகத்தை வாழ்விப்பதற்கு வேண்டிய கருவிகளாகிய நம்மவர்களின் மூலமாகவே, ப்ரஜைகளுக்குவேண்டிய பஞ்சலோஹ, பஞ்சபூத சம்பந்தங்களான விஷயங்களை நடப்பிக்க சாத்யமாகும்படி, பஞ்சக்ருத்யங்களைச் செய்பவராகிய மநு, மய, த்வஷ்ட, சில்பி, விஸ்வஞ்ஞர் முதலியவர்களெல்லோரும் போஜன விவாகங்களுக்கும் கலந்திருப்பவர்களா யேற்படும் பக்ஷத்தில், சுதேசியவிஷயத்தைப்பற்றிக் கதறிக்கொண்டிருக்கும் இவ்வுலகத்திலே நாம் தலையைக் காட்டலாம்.

### சகாயம் வேண்டும்

மநு, மய, த்வஷ்ட, சில்பாசாரியர்களின் விருத்தியின்பொருட்டு தனசகாயம் செய்து மநுவாசாரியையும் சில்பாசாரியையும் சம்பந்தப்படுத்தி, கண்ணாடி வேலை யந்திரங்கள் முதலானவைகளைச் செய்வதற்கும், மயாசாரி த்வஷ்டாசாரியர்களான இவ்விருவரும் ஒற்றுமையுடன் ப்ரபஞ்சத்திற்கு வேண்டிய கருவிகளுக்கெல்லாம் விசேஷமாய் திரவியம் வேண்டுமென்னும் ப்ரமையைக் கொள்ளாமல், ஆயிரக்கணக்காகப் பொருள் செலவுசெய்து வியாபாரத்தைக் கைக்கொள்வதற்கு நம்மவர்களில் பொருளுடையவர்கள் முன்பிரவேசிக்கவேண்டும்.

### வம்ஸச்சிறப்பைப் பெருக்குவதெப்படி ?

நம்மவர்களுக்கு கர்மஞானங்களிரண்டையும் கைக்கொள்ளவேண்டுமென்று கட்டளையிடுவதுபோல், பஞ்சப்ரம ஹோபநிஷத்தில் பிரமாணம் கூறியிருக்கிறபடியால், நம்மவர்கள் யாவரும் வேதங்களையும் சிற்பங்களையும் அப்யசிப்பதுமல்லாமல் தற்காலப் போக்கிற்கு அனுகூலமாயிருக்கும்படி உபசிற்பங்களையும் எழுதுவதற்கு ஆரம்பிக்கவேண்டும். சிற்பங்களுக்கு மொழிபெயர்ப்புகள் வெவ்வேறு பாஷைகளி லெழுதி வெளிப்படுத்தி ஏராளமாய்ப் பொருள் செலவுசெய்து வம்ஸச்சிறப்பைப் பெருக்கவேண்டும். தொழில்செய்பவர்க்கனுகூலமாகுமாறு சபையிலுள்ள தனவான்கள் ஒன்றுசேர்ந்து, நிதிசேகரித்து ஓர்க்ஷாப்புகளை யேற்படுத்தி, ஐந்துதொழில் முதல்வரான மநு, மய, த்வஷ்ட, சில்பி, விஸ்வஞ்ஞர்களை ஓரிடத்திற்சேர்த்து நிர்ணயித்த காலங்களில் பிரபஞ்ச கிருத்யங்களை நடத்தவேண்டும். அந்த ஓர்க்ஷாப்பைச்சேர்ந்து ஒரு பாடசாலையிருக்கவேண்டும். தொழிலாளிகளெல்லாம் எத்தனை வயதுள்ளவராயினும், படித்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்யவேண்டும். சொல்வது யாருக்கும் சுலபம் செய்வது அறிவுடையோர்க்கும் அரிது என்பது திண்ணம். ஆதலால் நாமெல்லோரும் ஒன்றுகூடி இச்சபையேற்படுத்தி, கேவலம் சொல்மாத்திரமாக நிறுத்தாமல் ஷை கொள்கைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து தர்மிஷ்டர்களாய் விளங்கும் மார்க்கத்தைத்தேடவேண்டும்.

பிரம்மமயமான வித்யையை அப்யசித்து சகலப்ராணிகளின்மேல் கிருபைகூர்ந்து, குலத்தைக் காப்பாற்றுவதில் தாயைப்போல் தயைகொண்டு எல்லாரும் சமமாயிருக்க வேண்டுமென்பதைக் கருதி, அங்கங்குபோய் இவர்கள் நம்முடைய குலத்தைச் சேர்ந்த காரியத்தை முடிப்பார்கள் என்கிற எண்ணத்தை எல்லோருக்கும் உண்டாக்கவேண்டும். நம்முடைய சிறுவர்களைச் சிறுவயதிலேயே தொழில்களில் விடாமல் பத்து வயது வரையிலுமாவது வித்தையைக் கற்பித்து உலகசரித்திரங்களைக் கவனிக்கத்தக்க புத்தியுள்ளவர்களாகச் செய்யவேண்டும். வித்தை யொன்றே பரப்பிரம்மமென்னும் காட்டில் உலாவத்தக்க சிங்கத்தை ஒத்தது. அப்படிப்பட்ட வித்யை பிறரால் பார்க்கப்படும்படியாயும் வியப்பாய்க் கேட்கப்படும்படியாயும் நாம் உலகத்தில் பிரசித்தி செய்யவேண்டும். நம்மவர்கள் ஓர்க்ஷாப் தலைவர்களா யேற்பட்டு தொழில்களை நடத்தவேண்டும்.

இதுவரையில் சொல்லப்பட்டவைகளில், கிருஷ்ணகுண்டூர் முதலிய தேசங்களில் உள்ள விஸ்வப்ராம்மண மகா ஜனசபை போஷகரும், பரோபகார மூர்த்திகளுமான புத்திமான்களின் மனதில் விசாரிக்கப்படவேண்டிய அம்சங்களாகச் சம்பவித்த பர்விகாபால வித்யாப்யாசம், இரும்பு மரம் செம்பு கல் பொன்னுதி பஞ்சகிருத்தியஞ் செய்ய மூலதனம் சேகரிப்பது முதலியவை பொதுப்படக் கூறப்பட்டன. இனி அவற்றை விஸ்தாரமாகச் சொல்ல ஆரம்பிக்கிறேன்.

## பெண்கல்வி

விஸ்வப்பிராம்மண சிரேஷ்டர்களே! சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் சமத்வமாகவே வித்தையைக் கற்பிக்கவேண்டுமென்று பூர்வாசாரியர்கள் போதித்திருக்கிறார்கள். அவ்வண்ணமே, ப்ரபோதினி பத்திரிகை மூலமாய், பிரம்மஸ்ரீ கொண்டிபர்த்தி-வீரபத்ராசாரிகளும், ஸ்ரீமதி கொண்டபர்த்தி-மல்லிகாம்பை அம்மாளவர்களும் பலவிதமான திருஷ்டாந்தங்களுடன் நிரூபித்தார்கள். பெண்களுக்கு வித்யாப்யாசம் செய்விப்பது அக்கிரமமென்று ஆக்ஷேபிக்குமவர்களின் மனதிலுள்ள அபிப்ராயங்களெல்லாம் மாயா கற்பிதங்களாகையால், அந்த அபிப்ராயங்கள் தூரத்தில் நீக்கப்படவேண்டும். இவ்வித நீதிபோதனை செய்வதில் நாம் ஒற்றுமையையடையவேண்டுமென்று "ப்ரபோதினீ" பத்ரிகாதிபரான பிரம்மஸ்ரீ வட்டேபாடி-நிரஞ்சன சாஸ்திரியவர்கள் பன்முறை உபந்நியாசஞ் செய்திருக்கிறார்கள். ஆத்மலாபத்திற்கும் லோகோபகாரத்திற்கும் மூலமாயுள்ளது சிஷ்டாசாரம். அந்த சிஷ்டாசாரமாதிரியை அநுசரித்தே நம்மவர்கள் ஸ்த்ரீ வித்யையை விருத்தி செய்யவேண்டும். சிஷ்டாசார ப்ரவர்த்தகரான வராஹ மிஹிராசாரியருடைய மனைவியான கர்ணமதியும் போஜ ராஜாவினுடைய மனைவியான பானுமதியும் வித்தையிற் சிறப்பையடைந்தது மன்றி, சொந்தமாக நூல்கள் செய்ததும் உலகப் பிரசித்தமாயிருக்கிறது. நம்மவர்கள் இனிமேலாயினும் சந்தேகாஸ்பத மனதுள்ளவராகாமல் பிரபஞ்சவிருத்தியின் பொருட்டு தங்கள் பெண்பிள்ளைகளுக்கு வித்தையைச் சிறுவயதிலேயே கற்பிக்கவேண்டும் ஸ்திரீகள் வித்தையைக்கற்றவர்களாயிருப்பாராயின், அவர்கள் கர்ப்பத்திலிருக்கும் பிண்டமயதேகமுங்கூட ஞானத்தோடுகூடினதாயிருக்குமென்பது, அபிமன்யன் பிரகலாதன் இவர்கள் சரித்திரங்களினால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. நம்மவர்கள் உலக ப்ரசித்திகரமான தொழிற்சாலைகளை ஸ்தாபித்து கௌரவஸ்தர்களாக வேண்டுமாயின், பாலிகைகளுக்கும் வித்தையைக் கற்பிக்கவேண்டும். நல்ல வித்தியா ஞானம் பெற்ற பாலிகைகளுக்கு தங்கள் புருஷசேவை முதலான கிருகஸ்தாஸ்ரம தர்மங்களின் மேன்மை நன்குபுலப்படும்.

## விவாக வயது

'பார்யாமூலமிதம்க்ருகம்' என்னும் வாக்கியக்கருத்தை யறியத்தக்க வயதிலேயேதான் பெண்களுக்கு விவாகம் செய்தல் வேண்டும். ஏனெனில், இவ்வகையான குணசம்பத்தையுடைய பெண்ணை மாத்திரமே, இல்லாள் (இல் + ஆள் = வீட்டுக்காரி = வீட்டிற்கு எஜமானி) யென்று சொல்லலாம். அப்படி யில்லாதவள், (இல் + ஆள் = இல்லாத ஸ்த்ரீ = இருந்தும் இல்லாதவளைப் போன்றவள் = இருந்து உபயோகமற்றவள்) என்றே சொல்லவேண்டும். ஆதலால், அவ்வித அறிவையுண்டாக்கத்தக்க வித்தையைக் கற்பித்து, அவ்வாறு நடக்கத்தக்க வயது வந்தபிறகே கல்யாணம் செய்ய வேண்டும்.

பெண்கள் விஷயம் இப்படியிருக்க, ஆண்பிள்ளைகளின் சங்கதியை விசாரிப்போம். புருஷனுக்கு வயது வந்த பிறகுதான் அவன் கிருகஸ்ததர்மங்களைக் கைப்பற்ற முடியும். க்ருகஸ்தாச்ரமத்தைப் பரிபாலிக்கச் சக்தியேற்படு மவ்வளவு திரவியம் சம்பாதிக்கும் ஸ்திதியைத் தேடிக்கொண்ட பிறகே அவனுடைய விவாகத்தைப் பற்றிய ஆலோசனை ஆரம்பிக்கப்படவேண்டும். பேருக்குமாத்திரம் கிருகஸ்தாச்ரமத்தையடைந்து உலகத்திற்குத்தக்கபடி நடந்துகொள்ளாவிடால் விவாகம் பயன்படமாட்டாது. பாலிகைகளுக்கும், பாலர்களுக்கும் சிறுவயதிலேயே கற்பிக்கப்படும் வித்தையினால், அடக்கம் முதலிய குணசம்பத்துகள் உண்டாகும். அவ்வித குணசம்பத்துகளடைந்த ஸ்திரீபுருஷர்கள் யுக்தவயது வந்தபிறகு விவாகஞ்செய்யப்பெற்றால் கிருகஸ்த தர்மமறிந்து இல்லறநடத்தி சாதுஜனங்களுக்குப் பணிவிடைசெய்வதினால் உண்டாகும் அநுக்ரகத்தினால் குடும்பவிருத்தியுடையவராய் இகபரசுகங்களை யடைந்தானந்திப்பார்கள். ஆதலால், ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் வித்தையைக் கற்பித்தலும், க்ருகஸ்தாச்ரம தர்மங்களை நிர்வகிக்கத்தக்க வயதுவந்தபிறகு விவாகஞ்செய்தலும் அத்தியாவஸ்யமாயிருக்கிறது

## சிற்பச் சிறப்பு

இக்கலியுகத்தில் ஐயாயிரத்துச் சில்லரைவருடங்கள் சென்றபின் விஸ்வப்ராம்மண காரியஸ்தர்கள் இரும்பு முதலிய ஐந்துதொழில்களின் விஷயத்தை யநுசரித்து விமர்சிக்கத்தொடங்குவது என்மனதில் திருப்தியையுண்டாக்கவில்லை. வர்ஷிப் என்கிற ஆகாயக்கப்பல் முதலிய அற்புதயந்திரங்களைச்செய்து அழகான நாகரீகத்தை யடைந்திருக்கும் ஆங்கிலேய அமெரிக்கா பிரஞ்சுதேசஸ்தர்களுடைய பயிர்த்தொழில் கைத்தொழில் வர்த்தகங்களின் அதிசிலாக்கிய ஸ்திதியைநோக்கப் பொறாமையுண்டாகிறது. ஆரியர்களான நாம் சிற்ப சாஸ்திரங்கள் முதலான அரிய நூல்களுக்கு ஆதார புருஷர்களாயிருந்தும், ஒற்றுமையடைந்து இதராளுக்கு ஒற்றுமையினா லுண்டாகும் வலிவு இன்னதென்று போதிக்காமல் மௌனமாயிருப்பதினால், பிறருடைய நிலைமைகண்டு பிரமிக்கவேண்டியதா யேற்பட்டது. சிற்பசாஸ்திரோக்தமாய் நிர்மிக்கப்பட்டிருக்கும் தேவாலயங்கள், அவற்றைச்சேர்ந்த கோபுரங்கள், மண்டபங்கள், குளங்கள், வீடுகள், கிணறுகள், உத்தியானவனங்கள், வாராவதிகள், ஏரிகள், ஏரிக்கரைகள் முதலானவை சாஸ்வதமாய் வெகுகாலமிருப்பதினால் சிற்பமென்கிற பிரபஞ்சநிர்மாண சூத்ர சுலோகங்களடங்கிய நூல்கள் சிறப்புள்ளனவென்பதிற் சந்தேகமில்லை. இவையெலாம் காலாந்தரத்தில் நாசத்தையடைவது இயற்கையாயினும், நம்வாழ்நாள்வரையிலும் பஞ்சபூதங்களாகிய ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயங்களுடைய சம்பந்தமாய் இரும்பு மரம் தாமிரம் கல் பொன் முதலியவை வெகுகாலம்வரையில் நிலையுற்றிருக்கின்றன.

## சில்பம் என்னுஞ் சொல்லாராய்ச்சி

சிற்பம் என்கிற பதத்திற்கு விருத்தியும், அதைச் சேர்ந்த நூல்களின் மகாத்மியங்களும் இனி விரிவாய்ச் சொல்லப்படும். சீல - உபதாரணே யென்னும் வடமொழியில் சீல் யென்னும் பகுதியைப்பற்றி "சீல்யதே அப்யஸ்பத"—அப்யாசம் செய்யப்பட்டது சில்பம் என்று ஏற்படுகின்றது. "சில்பகர்ம கலாதிக" என்று, சில்பம் என்கிற பதத்தினுடைய பொருளை விளக்குவதற்கு ஜயின மதஸ்தரான அமரசிம்மனெனப்படும் நிகண்டுக்காரர், தாம்செய்த அமரமென்னும் நிகண்டில் சூத்திரவர்க்கத்திலெழுதியிருக்கிறார். சில்ப சம்பந்தமான இன்னும் சிலவிஷயங்களை பிரம்ஹவர்க்கத்தில் ருஜுபாவத்துடன் வெகு தெளிவாய் 'வேதிஸ் பரிஷ்க்ருதாபூமிஸ்ஸமேஸ்தண்டிலச்சத்வரே' என்பது முதலான செய்யுள்களால் தெரிவித்திருக்கிறார்:

"விஸ்வகர்மா சதாநந்த பஞ்சாஸ்யோமேருநிர்மித:
பஞ்சப்ரம்ஹாதிரூபஸ்யான் மல்லிகாம்பர வாகன:
மைத்ராவருணசித்வேகோத்ருவபாலோஜகத்குரு: ||
சம்புசாக்ஷீபஞ்சவேதிததாதஸ்யமுகோத்பவா"
"மநுர்மயஸ்சத்வஷ்ட்வாசசில்பீவிச்வஞ்ஞமூர்த்தய"

முதலான சுலோகங்கள் "ப்ரஹ்மாத்ம பூசராஜ்யேஷ்டா" வென்னும் சுலோகத்திற்குமுன் எழுதப்பட்டிருக்கையில், அவற்றை நீக்கி, ப்ரம்ஹவர்க்கத்தினுள்ள "சில்பம் கர்மகலாதிக" என்னும் வாக்கியத்தையும் சூத்ரவர்க்கத்தில் சேர்த்தாரென்று தெரியப்படுத்துகிறது.

## சிற்பங்களை மொழிபெயர்க்கவேண்டும்

மத்யகாலத்தில், சிற்பங்களையும் அவற்றை அப்யசித்த சிற்பாசாரிகளையும் சமதிருஷ்ட்டியுடன் பார்க்கவில்லை. "சில்பிமாதா சிலாபுத்ர:" யென்னும் அருமொழியொன்றுண்டு. சிற்பநூல்கள் யாவராலும் எளிதில் அறியப்படுபவையாகாமல் மிகவும் மறைபாடாயிருப்பதினால் அவைகளுக்கு சுலபமான மொழிபெயர்ப்புகள் ஏற்படவேண்டியது மிகவும் அவஸ்யமாயிருக்கிறது. அப்போதுதான் சில்பாசார்ய மகிமைகள் சில்பவிசேஷங்களாயேற்படும். இல்லாவிடில், மேற்கூறிய சில்பவிசேஷங்கள் என்னும் பதத்தில், மத்ய எழுத்தாகிய சேயென்னுமெழுத்து லோபித்து சில்பவிஷங்கள் என்றே ஏற்படும்.

## சிற்பநூல்களின் அளவு

"அநந்தாவைவேதா" என்னும் வாக்யம் உலகப்ரசித்தியா யிருந்தும், சிலர் வேதங்கள் மூன்றென்றும், சிலர் நான்கென்றும், சிலர் ஐந்தென்றும் வாதிப்பது போல், சில்பங்களையுங்கூட சிலர் முப்பத்திரண்டென்றும், சிலர் அறுபத்துநான்கென்றும் சிலர் அளவற்றவையென்றுஞ் சொல்லுகிறார்கள். இவற்றில் எதுநிஜமோ எது சம்மதிக்கத் தக்கதோ அந்த சூக்ஷ்மம் சர்வஞ்ஞானியான பகவானுக்கே தெரியும். இதிஹாஸ புராணங்கள் எவ்வளவு விஸ்தாரமானவை யாயினும் அவைபற்றி யாதொரு பிரமிப்பும் உண்டாகாமல் அளவு ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறு வேதங்களுக்கும் சில்பங்களுக்கும் அளவு நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆதலால், அளவற்றவையென்றே நிச்சயித்து கிடைத்தமட்டில் நன்றாய்க் கவனித்துப் படித்து அதன் பொருளை நாமறிய வேண்டியதேயன்றி, நம்முடைய பாஷ்யங்களையும் மற்றவற்றையும் குத்சிதமாக பிரயோகிக்கக்கூடாது.

சில வேதசில்பரகசியங்கள் உபாஸனையினால் மட்டுமே அறியப்படுமென்று பெரியோர் சொல்லுகிறார்கள். அவைகளிலும் நம்பிக்கை வைக்கவேண்டியதே யல்லாது பயித்தியமான வேலையென்று திரஸ்காரஞ்

செய்ய ஆரம்பித்தல்தகாது. அமரசிம்ஹரென்னும் கவியினுல் செய்யப்பட்ட நிகண்டில் " சில்பம் கர்மகலாதிகம் " என்பதின் வ்யாக்யானத்தின்கீழ், வாத்ச்யாயனர் என்பவராற் செய்யப்பட்டநூலில், ''கீத நிருத்யாதி லீலைகள் என்பதில் ஸ்வர்ண காராதி விருத்திகள் " ஆதி " சப்தத்தால் அறியத்தக்கவை யென்றெழுதப்பட்டிருக்கிறது. அப்படியே வைத்திய சாஸ்திரத்தி னோம்சமாகிய ரணவைத்தியத்திற்கு வேண்டிய கருவிகளும், அவைகளினுபயோகங்களும் சில்பத்திலேயே அதிவிரிவாக உதகரிக்கப்பட்டிருக்கின்றன.

தற்காலத்தில், அவ்வவ்விடங்களில் ஸ்தாபித்திருக்கும் புத்தகாலயங்களில்,'மயமதம்' ''ரூபாவளி''''ப்ராஹ்மயாமளம்'' ''மானஸாரம்'' ''வாஸ்துசாஸ்திரம்'' ''காஸ்யபம்'' என்னும் சிற்சில நூல்களே காணப்படுகின்றன. இதரசில்பநூல்களின சவிஸ்தாரம் தெரியாமலே யிருக்கின்றது.

## சிற்பநூல்கள் எங்கே ?

பூர்விக சில்பாசாரிகளின் சில்பநூல்களை இந்தியாவிலிருந்து பிரஞ்சுக்காரர்கள் எடுத்துக்கொண்டுபோய் பாரிஸ்பட்டணத்தில் பத்திரப்படுத்தி யிருக்கிறார்களென்று சிலரும், ஆங்கிலேயர் வைத்துக்கொண்டிருக்கிறார்களென்று சிலரும், சீனதேசஸ்தர் வைத்துக்கொண்டிருக்கிறார்களென்று சிலரும் சொல்லிக்கொள்வதன்றி நிச்சயமாய் ஒன்றும் தெரியவில்லை. சிற்பங்கள் அனுதியான நூல்களென்றும், அவற்றினாலேயே உலகத்தினர்க்கு வேண்டிய கருவிகள் எல்லாஞ் செய்யப்பட்டனவென்றும் நாம் சொல்லுவது வழக்கமாயேற்பட்டிருப்பினும், புகைவண்டிகள் முதலியவை ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களில் வாசஞ்செய்யுந் தொழிற்காரரால் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு உலகிற் களிக்கப்பட்டன என்பது உலகப் பிரசித்தியாயிருக்கிறது. சிற்பநூல்கள் ஏன் வெளிப்படவில்லையென்று ஆலோசிக்குமிடத்து, அவற்றுள் ச்ருஷ்டாந்தமாகக் காட்டிருக்கும் யந்திரங்கள் முதலியவற்றை நிர்மித்து அமைப்பதற்கு லக்ஷக்கணக்கான திரவியம் செலவுசெய்ய நமது ஆரியாவர்த்தத்தில் பணக்காரர் இல்லாமையினுல், பஞ்சகிருத்தியப் பழக்கமுடையவர்கள் அவற்றையெல்லாம் நாசப்படுத்தியிருப்பார்களென்று சிலர் நம்புகிறார்கள். பரதேசஸ்தர்களுடைய கையில் அவையகப்பட்டனவென்றும் அவற்றைக் கொண்டுதான் விசித்திரமான யந்திரங்களாதியவற்றை அவர்கள் செய்துவருகிறார்களென்றும் சிலர் கூறுகிறார்கள். அப்படியிருக்குமாயின், வெகு நாள்களுக்குமுன்னமே மொழிபெயர்ப்புகள் வெளியாயிருக்கும். புகைவண்டி, சைகிள், மோடார்கார் முதலியவற்றைப்பற்றி எத்தனையோ நூல்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. பரதேசஸ்தர்கள் இது வரையிலும் சிற்பங்களுக்கு மொழிபெயர்ப்புகள் செய்யாமலிருப்பதைப்பற்றி யோசிக்குமிடத்து அவர்களிடத்தில் அவை இல்லை யென்பதை யூகிக்கலாம். ஆனாலும், அந்த விஷயத்தை ஸ்திரமாகச்சொல்ல சாத்தியப்படாது

## எல்லோரும் சிற்பங்கற்கவேண்டும்.

அன்னியதேசஸ்தரெல்லோரும் இத்தேசாபிவிருத்தியைச் செய்யவிரும்பி சிற்பசம்பந்தமான கிருத்தியங்களினுல் தொழில்களையும் வியாபாரத்தையும் விருத்தி செய்து விளங்குவதினுல் ஆரியாவர்த்த விருத்தியை விரும்புமவர்கள் சிற்பநூல்களைச்சேகரித்து அவற்றை மொழிபெயர்த்து பாடசாலைகளில் நித்தியமும் அவற்றைப் பாடங்களா யேற்படுத்தி நாகரிகமேலிடச்செய்து சுதேசீய மென்பதை வகிக்க ஆரம்பிக்கவேண்டும். துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கும் இஞ்சினீரிங் காலேஜை ஒன்றாகவைக்காமல் அநேகமாகும்படிசெய்து அங்கும் சம்ஸ்கிருதமும் சிற்பசாஸ்திரங்களும் கற்பிக்கப்படுமாறு பிரயத்னிக்கவேண்டும். அப்படி ப்ரயத்னிக்கும் காலத்திலிருந்துதான் இவ் வாரியாவர்த்தமானது ஸ்வதஸ்ஸித்தமான விருத்திக்குவந்ததென்னும் பெயருண்டாகும். அப்படியில்லாவிடில், அன்னிய தேசஸ்தருடைய திறமைகளை யநுசரிப்பதினுல் விருத்திக்கு வந்ததாகவே சொல்லவேண்டிவரும். தற்காலத்தில் சிற்பநூல்களைச் சேகரிப்பதற்கும் அவைகளினுடைய ரகசியங்களைத் தெரிவிப்பதற்கும் டாக்டர் குமாரஸ்வாமி என்கிற இந்துதேசத்தவர் மிகவும் கஷ்டப்பட்டு பிரயத்தினஞ் செய்கிறார். அதுபோலவே, ஒவ்வொரு புத்திமானும் வேதம் வேதாந்தம் சாஸ்திரம் புராணம் முதலியவைகளையே ஸதாகாலம் பார்ப்பதைவிட்டு சிற்பநூல்களைப்பார்க்க ஆரம்பித்து ஆரியாவர்த்தத்தின் நிஜமான உன்னதமகிமையை ஸ்தாபிக்க வேண்டும். பாய்காட் ஸ்வராஜ் முதலிய பதங்களை சாதுர்யமாக ப்ரயோகித்து அழகாய் உபந்யாசம் செய்வதினுல் சுதேசிய விருத்தியை கிஞ்சித்தேனும் சாதிக்க முடியாது. அப்யாசமென்கிற பதம் சிற்பத்திலிருந்து உண்டாவதினுல் பகவத்கீதையைப்போல் சிற்பத்தை எல்லோரும் படித்து பிரபஞ்சவிருத்தியை யுண்டாக்க வேண்டும்.



## சென்னை விஸ்வகர்ம குலாபிமான சபை

இப்போதாயினும் காலத்தை வீணுகப்போக்காமல் அவ்வவ்விடங்களில் சபைகளை ஸ்தாபித்து சாஸ்வதமான காரியங்களைச் செய்வதற்கு பிரயத்னிக்கவேண்டும். சென்னபட்டணத்தில் ரெவினியூபோர்ட்டு பாரெஸ்ட் இலாகாஹெட்க்ளார்க்கான, ப்ரம்மஸ்ரீ *செஞ்சி ஆண்டி சுந்தராசாரிகள் பி. ஏ. பி யல். அவர்கள் முதலான ஆங்கிலேய பாஷையில் திறமையுள்ள மஹாபுருஷர்களுடைய முக்யப்ரயத்தினத்தால் 1903-வருஷத்தில் விஸ்வகர்ம குலாபிமான சபை யென்னும் பெயரால் ஒரு சபை யேற்படுத்தப்பட்டுள்ளது. அச்சபையினுடைய கருத்துகள் சபையினுடைய விருத்தியின் பொருட்டு ஏற்படுத்திய சட்டபுத்தகங்களில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. நம்முடைய வம்சஸ்தரெல்லோருக்கும் வித்தையிலும் சிற்பத்திலும் அறிவை விசேஷமாயுண்டாக்குதல், அவர்களுடைய சொந்த வியவகாரங்கள் முதலிய எதிர்கால சுகாநுபவங்களைக் காப்பாற்றுதல், மதத்திற்குத் தக்க காரியங்கள் சாஸ்திரங்கள் முதலியவற்றை விருத்திசெய்தல், இந்த உத்தேசங்கள் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை சிறந்த அபிப்ராயங்களென்பதை நம்மவர்கள் யாவரும் ஆலோசித்து இந்தகிருஷ்ண குண்டூர் ஜில்லாக்களிலிருக்கும்விஸ்வப்ராம்மணர்களுடைய அபிவிருத்தியின் பொருட்டு இப்படிப்பட்ட உத்தேசங்களை கருதி சபையின் விருத்தியை நாளடைவில் எதிர்பார்த்துக்கொண்டு நம்முடைய வம்சாபி விருத்தி முதலிய கௌரவத்தை யடைவதற்கும் அடையும்படி செய்வதற்கும் பகவானை ஸதாதியானிக்கவேண்டும்.

## காரியசித்தி பெறவேண்டும்

கலியுகத்தில் ஆரம்ப சூரத்துவத்தை வகித்து காரியத்தைச் சாதிக்க அபேக்ஷித்து, ஆரம்பித்தபின் இடையூறுகள் நேரிடும்போது விட்டுவிடுவது சஹஜம். இதைக் கண்டிக்கும்பொருட்டு முன்னோர்களால் அனேக செய்யுள்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆதலால், நாமெல்லோரும் ஒன்றுகூடி காரியமுடிவென்கிற சம்பத்தையுடையராய் உலகத்தில் சகல ஜனங்களாலும் வந்தன கௌரவங்கள் முதலிய சிறப்புகளையடைய யத்தனிக்கவேண்டும். இதற்காகச்செய்யுங் காரியங்களுக்கு எத்தனை உபத்திரவங்கள் சம்பவித்தாலும் அவைகள் நீடியாவென்று அநாதரித்து தேசாபிமானம் குலாபிமானங்களை வகித்து அயஸ்காராதி பஞ்சகிருத்யங்களினுல் பிரபஞ்சத்தை விருத்தி செய்யவேண்டும். நாமுஞ் சுகவந்தர்களாயேற்படவேண்டும்.

## வேண்டுகோள்

இவ்விதமாக, ஸ்வஸங்கத்திற்கு வலிமையுண்டாக்கும் பஞ்ச கிருத்யங்களை வியாபாரமூலமாய் விருத்திசெய்வதினுல் பஞ்சப்பிரம்ம சந்ததியாரின் மகாத்மியங்களைச் சகல ஜனங்களும் கண்டு ஆச்சரியப்படும்படி செய்யலாம். ஸ்ரீவிராட் போதலூர் வீரப்ரம்மேந்திர சுவாமிகளும், தாம் செய்த காலஞ்ஞானத்தில் சுதேசீயம் முதலியவற்றின் வைபவவிஷயங்களைப் பூர்வகாலத்திலேயே தெரிவித்திருக்கிறார். அப்படிப்பட்ட மகான்களை மனதிலெண்ணி நாம் கொண்டகருத்துகள் சித்தியாகும்படி ஒருவரோடொருவர் சேர்ந்து பரஸ்பர சம்பாஷணைமுதலிய சாதனோபாயங்களைக் கைக்கொண்டு நம்மவர்கள் யாவரும் பூமண்டலத்தில் ப்ரக்யாதியடையும்படி நம்மால் சாத்யமாகுமளவும் ஒற்றுமையாயிருந்து பரோபகாரம் என்கிற முக்யதர்மத்தைப் பரிபாலித்து நாமே நம்முடைய வம்சாபிவிருத்திக்குக் காரணபுருஷர்களா யேற்படவேண்டும் என்று சபையோர்களெல்லோரையும் மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

என்னுடைய உபந்நியாசத்தை ஆதியந்தமாகப் பொறுமையோடு கேட்ட விஸ்வப்ராம்மண ஜனங்களுக்கு சாஷ்டாங்க வந்தனங்கள் செய்கின்றேன்.

* இவர் இப்போது மதராஸ் ஹைகோர்ட் அபலெட் ஸைட் மானேஜராயிருக்கிறார்.

## தந்த வேலை

" சத்தியவசனன் எழுதியது. "

### தந்த சாமான்கள்

(101-வது பக்கத் தொடர்ச்சி).

சித்திர செதுக்குவேலைசெய்த கைப்பிடியுள்ள காகிதம் அறுக்கும் கத்தி, உரோமத்தை திருத்தி சமமாக்கும் கத்திவடிவான சித்திர செதுக்குவேலையுள்ள சாமான், சிறு இராஜாக்கள் ஏறிச்செல்லும் வண்டிபோன்ற அலங்கார சாமான், வெள்ளைக்கார பிரதிமைகள், வளையல்கள், பொத்தான்கள், சூதாடு கருவிகள், சொக்கட்டான் ஆட்ட சாமான்கள், சீப்புகள், மைக்கூடுகள், மஞ்சள் பொடி பெட்டி, வாசனைப்பொடி பெட்டி, திலகபொட்டுகள், பொடி டப்பிகள், ஆங்கில எழுத்துகள், சிற்றுளி சந்தனப்பெட்டிக்கு வேண்டிய குமிழிகள், விளையாட்டு சாமான்களில் ரீங்காரம்செய்யும் பூண்கள், கணகணவென்று சப்திக்கும் மணிகள், சொக்கட்டான் ஆட்டப் பலகைகள், தாயக்கட்டைகள், காய்கள், முள்ளாங்கி, மிளகாய், கத்தரிக்காய் இவைபோன்ற அலங்கார வர்ணமிட்ட சாமான்கள் முதலாயினவா யிருக்கின்றன.

ஐரோப்பியர்கள் இத்தொழில் க்ஷீணத்தை அடைந்துகொண்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள் யந்திர உதவியால் மாட்டுக்கொம்பு முதலிய பொருள்களால் செய்யப்பட்ட சாமான்கள் அழகாகவும் நயமாகவும் கிடைக்கிறபடியால் வேலைப்பாடு குறைந்த இந்திய தந்தசாமான்களை அதிக விலைகொடுத்து வாங்குகிறவர்கள் இல்லை. ஆதலால் தந்தவேலை சிறிது சிறிதாய்க் கைசோரப்பட்டு வருகிறது என்று ஐரோப்பிய தொழில் இலாகா நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அவர்கள் அபிப்பிராய்த்திற்கு விரோதமாக நமதுபூர்வீக தந்த வினையை பண்டை இராஜாக்கள் மெச்சியதுபோல் தற்காலத்திலும் மெச்சும்படியாக யந்திர உபகரணத்தைக் கொண்டும் கைப்பாடாகவும் விசித்ரமாய்ச்செய்து நயமாய் விற்று இந்தியர்கள் மேன்மைபெறுவார்களாக.

## மூன்று மணிகள்

### ஸ்ரீ சாலிவாடி புராதீனம் தர்மபதியவர்கள்

I. விஸ்வகர்மன் 1915 ம் ஹூ ஜனவரிமீ பத்திரிகையில் 'நமது விவாகங்கள்' என்ற வியாசத்தின் கருத்துப்படி, விவாகத்திற்காக ஏற்படுகிற கஷ்ட நஷ்டங்களை நிவர்த்திப்பதான உபாயம் தேடவேண்டியது அவசியமே யாகிறது. ஒரு சமயத்தார் என்ன உபாயம் நிர்ணயிக்கிறார்களோ அதுவே ஸ்திரமாகும். ஓரிருவர் சிலபேர் ஸ்தாபித்து ஸ்திரமாகாது. ஒரு சமயத்தார் நிர்ணயிக்குங் கொள்கையை ஆளுவோரும் அங்கீகரிக்கக் கூடியதா யிருக்கும். அது போலவே அக்கொள்கைக்கு தெய்வசம்மதமும் பொருந்தும்.

II. பின்னும், இப்பத்திரிகை 83-ம் பக்கத்தில் 'சகோதரவிண்ணப்பம்' என்ற வியாசத்தின் கருத்துகள் அனுபவபலனுகவே இருக்கின்றன. பஞ்சகிருத்தியங்களினுலேயே நம்முடைய சமயோன்னதம் நிறுத்தக் கூடியது. அப்பேர்பட்ட கிருத்தியங்களில் எஜமானத்வத்தை பிறருக்குக் கொடுத்துவிட்டு தாஸத்வத்தை நம்மில் சிலர் பெற்றிருக்கிறதும், நாணய ஹீனமாயிருக்கிறதும், தொழிலில் கட்டுகளில்லாமையால் பிறர் நம் கிருத்தியங்களைச் செய்ய இடமாகி இருப்பதையும் நிவர்த்திக்கவேண்டியது அவசியமாகும்.

நம்முன்னோர் மாந்தை நகரத்தில் வாழ்ந்த காலத்தில் பஞ்சகிருத்தியங்களை நடப்பித்து கிருத்தியவஸ்துக்களை கோட்டையினின்றும் வெளிக்கொண்டுபோய் நானுதேசங்களில் விக்கிரயித்து லாபம் பெற்றுச் சென்றதாகவே மாந்தைநகர வர்ணனையால் துலங்குகிறது. அவர்கள் வேலை செய்த கூலி என்று வாங்கினதாகவும் அன்னோர்களுடைய கிருத்தியங்களைப் பிறர்கையாண்டதாகவும் துலங்கவில்லை.

ஆங்கிலேயர் ஜெர்மானியர் முதலான மேல்கண்டத்தார் அனேக விசித்ர சிற்பகிருத்தியங்களை நிர்மாணித்து வருகிறார்களே யெனில், அவர்களும் நம்விஸ்வகர்மவம்சமே எனச் சாஸ்திரமூலமாய் நிரூபிக்கப்படுகிறது. அப்படியான அவர்களுடைய தொழிற் பெருமைக்கும் மாந்தை நகராதிபத்யமுடையவர்களின் வம்சத்தில் பாரம் பரையாய்த் தோன்றியுள்ளதாக சொல்லப்பட்ட நம்குலத்தார்களுடைய தொழிற் பெருமைக்கும் வித்தியாசம் அஜகஜாந்திரமாயிருக்கிறது. இதற்குக்காரணம் சாபம் என்பதைப் பார்க்கிலும், நாம் செல்வப் பொருள் கல்விப்பொருள் ஆகிய மூலப்பொருள்களில் ஒன்றையாவது பற்றுமல் அன்றாடம் கும்பிபாடு கழிக்கும் வேதாந்த நிலைமையை அடைந்தோமென்பது உண்மையாகுமல்லவா? அவர்களோ மூலப்பொருள்களின் ஆதரவை வைத்தும் விடா முயற்சி கொண்டும் ஒற்றுமைக் கவசம் பூண்டும் உலகேறினார்கள். நம்மனோர் அத்தகைய மூலப்பொருள்களை அடைய இயலாவிடினும் ஒற்றுமை கட்டுப்பாடு வாக்கு செயல் நாணயம் இவைகளைக் கொண்டால் நல்ல பலன்கள் உண்டு.

எந்த காரியத்தையும் தொழிலையும் கௌரவமாக நடத்திக் கொள்ளவும் கூடும்; அகௌரவமாக நடத்திக் கொள்ளவும் கூடும். நம்மனோர் சிலர் அகௌரவமாய் நடத்திக் கொள்ளுங் பாவத்வத்தினுலன்றோ அவர்களாலேற்படும் அபவாதம் நம்குலமுழுமையும் தாக்குகிறது. அப்படிப்பட்டவர்களைத் திருந்தச் செய்யவே வேண்டும். ஏனெனில், ஒரு மங்கையானவள் ஒருவர்க்கு வாழ்க்கைப்பட்டு வாழ்ந்து வருநாளில், அவள் தன் மதியூகத்தால் கணவன் மாமன் மாமியார் முதலியோரிடம் நல்லுறவு பெறுவாளாளுல் அதனுலுண்டாகும் நற்கீர்த்தி அவளுடைய குலத்தோர்களைக் சார்கிறது. அவ்விதமில்லாமல் அவள் கணவன் முதலானோரிடம் பிணக்கு செய்துக் கொண்டும் அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு ஆகிய லக்ஷணங்களைக் கடந்தும் நிற்பாளாயின் அவள் பேரில் ஏற்படும் அபவாதமானது அவளுடைய குலமுழுவதையும் தாக்குகிற தன்றோ?

ஓரூரில் சிலர் ராஜநிந்தனையான காரியம் செய்வார்களாகில் அதற்கிடங்கொடுத்த பாவத்தால் அவ்வூராரையே தெண்டம் சார்கிறது. அவ்வூரின் யாரொருவர் அயல் நாடு சென்றாலும் உலகாபவாதமானது அவரை எச்சரிக்கையாய்க் கவனிக்கும்படி செய்கிறது. ஆனதால், உலகாபவாதம் வாராமல் காத்து வாழ்வதே உத்தம ஜாதியாருடைய கடமை. நம் ஜாதியார் தொழில்களை அனுசரிப்பதில் மிகவும் கவனிக்க வேண்டியதிருக்கிறது. அதை இங்கு விவரித்தால் பெருகும்.

III. விஸ்வகர்மன் 1915-ம்ஹூ பிப்ரவரிமீ பத்திரிகை 106-ம் பக்கத்தில் சமபந்திபோஜனம் என்ற வியாசத்தின் கருத்துகளின்படி சமபந்திபோஜனம் செய்வித்தல் மிக முக்கியமானது. அப்படி ஏற்படாமல் பலபந்திபோஜனம் செய்வதே அனுஷ்டானத்திலிருக்கிறது. சமபந்திபோஜனம் செய்யுங்காலம் எப்பொழுதோ அப்பொழுதுதான் ஒற்றுமையைப்பார்க்கலாம். ஆனுல் ஆருஷேயப்பிராம்மணர்களில் ஸ்மார்த்தர் வைஷ்ணவர் யாத்வர் முதலான பிரிவுகள் இருக்கின்றன. அவர்களில் ஒருவருக்கொருவர் கொள்வன கொடுப்பன போஜனம் செய்விப்பதில்லை. அதாவது போகட்டும்; வைஷ்ணவர்களில் தென்கலையார் வடகலையார் என்ற பிரிவுகளை எவ்வளவு பலமாய் வைத்திருக்கிறார்கள். அவர்களெல்லோரும் பிராம்மணர்களாயிருந்தும் அவர்கள் சமபோஜனம் செய்வதினுல் தோஷமில்லாமையிருந்தும், அவ்வாறு அவர்கள் மனங்கூடவில்லை.

நம்குலத்தார் ஐந்து பிரிவுகளாக இருக்கிறார்கள். ஐந்துபந்தி போஜனமாவது நிற்கவேண்டுமேயெனில் அதுவுமில்லை. ஏனெனில், ஒருவேலை செய்கிறவர் மறுவேலையில் புகக்காண்கிறோம். அல்லது பிதா ஒரு வேலைசெய்ய அவருடைய குமாரர்கள் மற்றொரு வேலை செய்கிறதையும் காண்கிறோம். ஒருவேலையுமில்லாமல் உத்தியோகத்தி லிருப்பவர்களுடைய வகுப்பையோ அறிவது கஷ்டமாகும். ஆருஷேயர்களில் அவ்வாறில்லை. அவர்களில் யாரார் என்னென்ன கர்மம் புரிந்தாலும் அவர்களுடைய சின்னங்களும் கோத்திரங்களும் மாறுவதில்லை. நம்குலத்திலோ ஐந்து பிரிவுகளும் தொழிலினுல் நிர்ணயிக்கப்படுவதாய் இருக்கிறதேதவிர, ஐந்துபிரிவான சின்னங்களாவது முத்திரைகளாவது அணிவதில்லை. ஐந்து பிரிவான தேவாராதனைகளில்லை. ஐந்துபிரிவுகளுக்கும் தனித்தனி மடங்களிருப்பதாகவுமில்லை. ஐந்து பிரிவுகளுக்கும் ஐந்துபட்டங்களிருப்பதாகவுமில்லை. எல்லோருக்கும் ஒரு ஆச்சாரிப்பட்டந்தான். இத்தியாதிவர்க்கங்களை யோஜிக்கில் ஐந்தும் ஒன்றுகவே பொருந்தும்.

இப்படியிருக்க, சமபந்திபோஜனம் செய்யவேண்டுமே எனில், அதிலொரு பிரஸ்னை உண்டாகலாம். அதாவது, ஆசாரமாயிருக்கும் வம்சத்தினர்கள் அனுசாரமாயிருக்கும் வம்சத்தினர்களோடு சமபந்திபோஜனம் செய்வதற்கு மனம்கூடாது எனில், அதற்கு நியாயம் சொல்லித்தான் தீரவேண்டும். ஏனெனில், மனங் கூடினுல்தான் யாவுங்கூடும். மனங்கூடுவது போதனையினு லாகவேண்டியது. அந்தபோதனை பத்திரிகைவாயிலாகவும் நேரிலும் நடக்கவேண்டியது. நேரில்நடக்கக்கூடிய தருணம் கான்பரன்ஸ் கூட்டத்திலேயாகும்.





## பத்திரிகையின் பயனும் அதனைப் பேணுவோர் கடமையும்

வித்வான் ஸ்ரீ ஜி. சுவாமிநாதன் ஆசாரியார்,
கோட்டாறு.

செஞ்சொற்கள் நிறைவுற்றுப் பெரிதும் பொருணயம் பொதிந்து, பார்ப்போர் கண்ணினையுங் கருத்துமொருங்கே கவர்தற்குரிய வடிவமாகியும், பற்பல அரிய நூற்களின் விஷயங்களைத் தழுவி, "தமிழ்மொழி"— இன்பமாகிய சொல் எனும் பண்பாகுபெயருடைத் தாய்ப் போந்த இலக்கண வழக்கினை விளக்கி எடுத்துக் காட்டியும், இனும்பல பெருமையோடு நமது விசுவகுல விளக்கச் சீர்ப்பாட்டினைக்கருதிப் பாமரபண்டித ரஞ்சிதமாய்ப் பிரசுரித்து வரும் உயரிய "விசுவகர்மன்" எனும் பத்திரிகைகளில் பல, யான் பலநாளுங் கண்டு களித்துணர்ந்தடையும் ஆனந்தமகிழ்ச்சியானது அளவிட்டு உரைக்கத்தக்கதன்றெனுந் தகைத்து.

இங்ஙனம் வெளிப்போந்த அருமையை நோக்கித் தமிழுலகில் அங்காங்கே வதிந்துள்ள நம்மரபோரெவரும் மகிழாதிரார் என்பது திண்ணம். இனி, அன்பராகிய விசுவ பிரமகுல மாமணிகாள்! உலக நாகரீகத்தில் முற்பட்டு மேன்மை யடையவேண்டும் என விரும்புவோர் கல்வியை முதற்பொருளாகக் கொண்டு வாழ்வர். அப்பொருளை அடைந்தோர் நீதிநூற்களைக் கற்பான் ஆசைப்படாமலிரார். அதனைக் கருதியுள்ளார் நல்லாசிரியரைச்சார்ந்து கல்விகற்று வல்லுநராயினார்க்குஞ் சந்தேக விபரீத வஞ்ஞானங்கள் தீராஅவென்பார் மேலோர். அவ்விதக் குறைவுகளை நீக்குவான் தேசாடனஞ் செய்வார் பெரியோர். ஏனெனில் ஆங்காங்கேயுள்ள கல்வியிற் பெரியோரைப் பேணித் தமதிருண்மனச் சிக்கினை நீக்குதற்குரிய நெறியில் அன்னோரை வழிபட்டுத் தாம் முன் பயின்றுள படிப்பின் குறைவுகளின் மர்மங்களைக்கேட்டும் ஒருவாறு சந்தேகமகற்றுவர். இப்படியே பல்வழிகளால் நாடித் தேடிக்கண்டறியுங் கல்வியின்வன்மையால் சோபானக் கிரமரீதியில், வேதாந்த சாத்திரப் பயிற்சியையும் அடைந்து, அதனுல் எய்தும் உண்மை யறிவானந்தப் பான்மையாம் பயனையும் அடைவர். இத்துணை அளவில் அடைந்து மினியும் படிப்பு அறிவு ஒழுக்கங்களை செவ்வனே அதற்குரிய நெறிப் பாகுபாடுகள் அனந்தமுள. அவை இங்கு செப்புந்தரமுடைத்தாமோ!

மேற்கூறிப்போந்த பகுதிக்கிணங்க அரும்பாடுற்றுக் கல்வியைக் கற்றுப் பெரும்பேறடைந்துள்ளோரும், உலகவழக்குகளுஞ் செய்யுள் வழக்குகளும் ஒத்தறிய அவாவுறுங் கற்றோர்கொள்கை என்னை எனில், இக்காலத்து மிக மேம்பாடுற்று எங்கும் பரவிவரும் ஆங்கிலப்படிப்பும், ஏனையபாஷைக் கல்விகளையுங் கற்பதன்றே உலகநாகரீக வுணர்ச்சியிற் சிறந்துள்ளார் கொள்கையென்ப. இவற்றில் முற்பட்டது ஆங்கிலப் படிப்பேயாம். அப்பாஷாநலத்தினை முறையே நாடாதார் உயர்வு பலசூரியனொளி முன்னர் காணப்படும் மதியின் தோற்றத்தாலுறும் இழிவுக்கதிபோலன்றோ ஆகும். இதினுல் அமிழ்தினுமினிய செந்தமிழ்ப் பாஷையைக் குறைவுபடுத்திக் கூறியதன்றென, இதனைவாசிப்போர் எவரும் மறுக்கார் என, எனது மனத் துணிபு.

இன்னோரன்ன கல்விகளின் உணர்வுகளும், பயன்களும், புகழும், எங்ஙன் சீக்கிரம் அடைதற்பாலதென நாம் எண்ணுமிடத்து, அதற்குரிய போதகாசிரியர் பல பத்திரிகைகளேயென்ப. பத்திரிகைகளால் பெறும் வித்தியாவிநோதம் பலவாயிருப்பினும், சுருங்கச்சொல்லில்—

நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு—

எனும் புலவர்பெருமான் மறைமொழிக் கிணங்க உண்மைவாய்ந்து தன்னை நட்புக்கொண்டொழுகும் நட்பாளனைத் தருணம் வாய்த்தபோது, அன்னோன் ஈடேறும்பொருட்டு நியாயவாயிலாகத் தண்டித்துப் புத்திபுகட்டும் ஒருவர்க்கொப்பென ஐயமின்றிச் சொல்லல்வேண்டும். நமது வாணளில் வயோதிகப் பருவமிறுதியாகத் தேடி யடையப்படுங் கல்விகலங்களைத் திரட்டி, மனமுஞ் சரீரமும்வாடிக் கட்டமுற்று அடைதற்குரிய பன்னூற்களை வாசித்தறியும் பிரயோசனங்களை வருத்தமின்றிப் பத்திரிகை வாயிலாக எளிதில் அறியலாமன்றோ?

தூரதேச வர்த்தமானங்களும், அங்கங்குள்ள கைத்தொழில் விசேடங்களும், வியாபாரமேன்மைகளும், பலதேசவளமைகளும், அனேக ராஜாங்கமுறைமைகளும், பாஷாவிற்பன நூலார் கருத்துக்களும், "புதியன புகுத்தலும்" என்ற இலக்கணத்திற் கேற்ப காலத்திற்கியன்றவண்ணந் திருத்திய சட்டதிட்டங்களும், ஜாதி

சமுதாயத்தார் பலரின் ஒற்றுமைகளும், அன்னோர் கல்வி கேள்வி ஒழுக்கங்களும், அவரது கீர்த்திகளும் கண்டறிதற்குரிய தூரதிருட்டிக் கண்ணாடியும் இஃதேயாம். மேனாட்டுப் பாஷையைக்கற்று அதனைப் பெரிய செல்வமாகக் கையாண்டு வரு மேதாவியார் இந்நாட்டாரும் நடாத்திவரும் காங்கிரஸ், கான்பிரன்ஸ் எனும் ஆங்கிலப்பெயரிய மகாநாடு, மஹாசங்கம், முதலிய பெரிய கூட்டங்களால், உலகம் அடைந்துவாநின்ற பேருபகாரங்களின் தகைமையை வெள்ளிடை விலங்கல் என அறிவாளிகட்கு காட்டும் பான்மை பெற்றது மிஃதன்றி வேறேது?

அப்பெருஞ்சங்கத்தார் அவணவண் மகா சபைக்கண் பேசிய இந்துசாத்திரப் பெரிய நூற்களின் கருத்துக்களும், ஒற்றுமைப் பாங்குகளும் மேல் வேண்டுவனவாகு நியாயப் பேச்சுகளும், இராஜ தந்திரங்களும் இந்தியா தேச வாசிகட்குதவும் உபதேசவளங்களும் பொதிவுற்று நிறைந்துள்ளன பத்திரிகைகளே. இவற்றைக் காணாதார்க்குங் கண்டறியுந் தன்மையிலன்றோ உபகாரமுடைத்து. இதனானே இதன் மகிமையை என்னென்று சொல்வல்! முன்னர் கூறிய போதகாசிரியர் பத்திரிகைகள் என்றறியப் பாற்று.

கல்வியின்மையால் நாம் மதிகெட்டு ஐந்தொழில் விசேடங்களை நாமே மெச்சி உச்சிமேற் கொண்ட வண்ணமாய், ஒற்றுமையின்றி, ஒருவர் செய்தொழிலை மற்றொருவர் குறைகூறி அழுக்காறுறு மடமை நோய் அகற்றும் வண்மை கொண்ட மருந்து இதுவே. இந்தியா தேசத்திற் பெரும் பாகமும் ஆங்கிலந், தமிழ், வடமொழி எனும் பல பாஷாக் கல்விகளாகிய தருக்களால் நிறைந்தோங்கி, அறிவின் செறிவாம் நீதிகள் எனும் பூக்கள் மலர்ந்து, மனோதிடம், பொறை, வாய்மை விடாமுயற்சி, நல்லாருறவு, அடக்கம் முதலிய காய்கள் மலியப் பெற்று பன்னூற் பழக்க வனுபவஞானந்தப் பழங்களைப் பெறுவதற்குரியோர் கைப்பொருளும் பத்திரிகை என்ப.

அறிவிற்சிறந்த நமரங்காள்! மேற்சொல்லி வந்த விபரங்களனைத்தும், பத்திரிகைகள் வாயிலாக பெறப்படும் எனுந் தேற்ற முன்மொழிகள் நமது குலத்திற்கென்றே உழைத்துவரும் "விஶ்வகர்மன்" எனும் பத்திரிகைகளில் பரக்கக்காணலாம். நமதருமைக்கண்மணி என்பதும் இவ்விஶ்வகர்மன் அன்றோ! ஆதலால் நங்குலத்துள்ளோரனைவரும், அங்கங்கேயுள்ள இடங்களில் பள்ளிக்கூடங்களைத் தாபித்து, அதிற் சிறுவர்கட்குக் கல்விகற்றற்குரிய புத்தகங்களோடு, இதனையும் வாசிக்கும்படி முயலுமின். பலவிடங்களில் சங்கங்களை வற்படுத்தி படிப்பிலாப் பாமரசிந்தாமணிகட்கும் இப்பத்திரிகையை வாசித்து அறிவுவரப்பண்ணுமின். நம்போலியர் கட்கும் நல்லறிவு பயக்கும் பான்மையுடைத்திது. அதிற்கண்ட அறிவுகளை ஆராய்ந்தறிந்து அனுட்டானத்திற்கு கொண்டுவரச் செய்யுமின். பிராம்மணத்தன்மை நம்மனோர்க்குண்டென வெறும் வாயால் கூறுவதொழித்து, என்றும் அப்பெருமை சாலத்திகழப் பெற்றுளோம் என்பதை அனுட்டானத்தில் சாத்திர வாயிலாக விஶ்வப்பிராம்மணர் இவர் என எவரும் புகலும்படி. படிப்புடன் கைநெல்லியங்கனியெனக் காட்டிட சங்கணம் புரியுமின்.

விஶ்வகர்மன் பத்திரிகையை வாசித்தறிவோர்க்கு நான் சொல்லிய மதிநுட்பங்கள் உண்மை என்றே கண்கூடாகத் தோற்றுவது தேற்றமே. இத்துணைச் சிறப்பொடு, கருணைக்கடலாகிய கடவுள் பேரருளால் இதன் பத்திராதிபர் அவர்களால் நமக்கு அமைந்த நன்மை அனந்த மிருக்கின்றன. ஆதலால் இனியும் நாளை என எண்ணாது, நம்விஶ்வப்பிரம்ம குலத்துள்ளார் யாவரும் தினமுஞ் செய்துவரும் வீண் செலவுகளைச் சிறிதகற்றி, ஒவ்வொருவர் கிருகத்தினிடத்தும் இப்பத்திரிகையை வரவழைத்துப்படித்துண்மைகளை அனுபவத்தின் கண்டறியுமின். அதனால் மானுடப்பயனை கொள்ளுமின். நமதருமைக் குலத்திற் பிறந்த இவ்விஶ்வகர்மனை நாம் ஆதரிக்காவிடில் எவரினிக்கண்ணோட்டஞ் செய்வர்? இதனைப் பேணாது நாம் வாளாவிருப்பின் நங்குலம் நவையுறும் என்பதற்கு எட்டுணை ஐயமுமுளதோ? என் சொல்லினும், மலைகல்லுத்தான் மண்வெட்டி இரும்புதான் என்ற முறைக்கொப்பத் தூங்காதீர்கள். நமது தருமத்தில் செயற் பாலதாங் கடமையோடு இவ்விஶ்வகுலகர்மனை வளர்த்தலே நமதாண்மையாகும்.

இத்தருணத்தில் கிடைத்த இப்பொருளை கைசோரவிடாதீர்கள். பத்திராதிபர் அவர்கள் மனோவூக்கங்குறைவு படாது, உங்கள் சந்தாத் தொகையை உடனுடன் உதவுங்கள். இவற்றில் கல்விகற்றவர் தமது விஷயதானத்தை அளித்து உற்சாகப் படுத்துமின். ஆகவே பத்திராதிபர் அவர்களும், நமது விஶ்வகர்மன் பத்திரிகையும், பன்னாளும் நீடுழி வாழ்கவென்றே எங்கும் பரிபூரணதேஜோன்மய ஒளியாயிலங்கு கருணைப் பெருமானை நாம் வாழ்த்துவோமாக.

---

**நாரி சிற்ப சிகாலயம்.**—இது, கல்கத்தாவிலுள்ள இந்து ஸ்திரீகள் சிறிய கைத்தொழில்களில் விர்த்தியடைவதற்காக ஏற்பட்டுள்ள ஒரு வித்யாசாலை. மத்ய வகுப்பைச்சேர்ந்த ஸ்திரீகள் விதவைகள் முதலியோர் ஜீவனஞ் செய்தற்குரிய கைத்தொழில்களைக் கற்பிப்பது இதன் நோக்கம். இதனை ஸ்தாபித்தவர் ஸ்ரீமதி மனோரமா மஸூம்தார் என்னும் ஸ்திரீமணி. இந்த அம்மையாரும் அவர் புருஷரும் ஜப்பானில் கைத்தொழில் கற்றவர்கள். மேற்படி வித்யாலயத்தில் முக்கியமாக தையல்வேலை, மண்பொம்மைகள் செய்தல், விசித்திரமான புஷ்பவேலைகள் முதலியன கற்பிக்கப்படுகின்றன. இதில் இப்பொழுது 15 பேர் படிக்கின்றார்களென்றும் இதற்காக மாதம் 150 ரூபாய் செலவாகின்றதாகவுஞ் சொல்லப்படுகிறது.



## போகமுனிவர்

இவரைப் போகியென்றும் போகரென்றும் போகநாதரென்றுஞ் சொல்வதுண்டு. இவரொரு சித்தர். ஜாதியிற் சீனரென்று சிலரும், சிற்பவம்ஸத்தரென்று சிலருங் கூறுகின்றனர். துறவாச்சிரமமுடையவர். இவர் சிற்பாச்சாரியா ரென்பவர் சைவசமயியென்று முரைப்பர். இவருடைய மாணவர்கள் கணக்கற்றவர்கள். அவர்களிற் சிறந்தவர்களாக கருவூர்த் தேவரையுந் திருமாளிகைத் தேவரையுஞ் சொல்லலாம். கருவூர்த்தேவர் திருவிசைப்பா வியற்றியவருள் ஒருவர்; வாமியாதலின் மதுவுனருந்துபவர்; இதுகண்டிகழ்ந்தார்க்குத் தமது திறமையை விளக்கும் பொருட்டாக, அகாலத்தில் மழை பொழிவித்தல், நதிபெருகச்செய்தல், பூதங்கள் குடைபிடிக்கச்செய்த லாதியாய பல அற்புதங்களைச் செய்து காட்டியவர். திருமாளிகைத் தேவர் "ஒளிவளர் விளக்கே" என்பது முதலாகிய திருவிசைப்பாப்பதிகங்கள் பாடியவர்; பிரேதத்தை உயிர்ப்பித்த பெருஞ் சிறப்பாளர் இவர் பெருமை திருவாவடுதுறைப் புராணத்தில் நன்குவிவரிக்கப்பட்டிருக்கிறது. நிற்க,

போகர் வைத்திய சாஸ்திர நிபுணத்துவம் பொருந்தியவர். இவ்வகையில் இவர் மாணவர் புலிப்பாணி. போகர்நூலென ஒரு வைத்திய சாஸ்திரங் காணப்படுகிறது. இவர் பால் வைத்தியங்கற்ற சீடர்கள் இவர் கூறிய முறைகளைச் செய்யுள்ருபமாகப்பாடி அப்பெயரிட்டனர்போலும். ஆனால், காலந்தோறும் பலர் பல செய்யுட்கள் பாடி அதிற்புகுத்தி விட்டதாகத் தெரிகிறது.

அபிதான கோசத்தார்—இவர் சீனரென்றும், இற்றைக்கு 1600-வருஷங்களுக்கு முன் சீனதேயத்திலிருந்து பாரதவருஷத்திற்கு வந்து பாடலிபுரம் கயா முதலியவிடங்களைத் தரிசித்துக்கொண்டு, தக்ஷிணதேசத்திலும் சோழபாண்டியநாடுகளுக்குஞ்சென்று அங்கே நெடுங்காலம் வசித்து ஆங்காங்குமுள்ள பண்டிதர் பால் தாமறியாதவைகற்றும் அவரறியாதவைகளை அவர்களுக்குக் கற்பித்தும் மீண்டும் சீனதேசத்தையடைந்தாரென்றுங் கூறுவர்.

போகரைப்பற்றிப் பின்னுஞ் சொல்லப்பட்டிருப்பவை வருமாறு—இவர் சீனதேசத்துக்கு மீண்டு சென்றபோது சிஷ்யராகத் தமிழருஞ் சிலர் சென்றார்கள். அப்பொழுது தஞ்சாவூர்ப் பிருகதீசுரன்கோயில் விமானத்துக் கபாலக்கல் சிற்பவேலை முடிந்தும், அச்சிற்பியிறந்தமையால், நெடுங்காலமாக விமானவேலையிற் பழுதுறு வண்ண மேற்றுமுபாயந் தேர்ந்துகொள்ளப்படாமற் கிடந்தது. அதுமாத்திரமன்று; நாகப்பட்டணத்துப் புதுவெள்ளிக்கோபுரத்துச் சக்கரத்தை நிறுத்தி, அக்கோபுரத்துள்ளே வைக்கப்பட்டு நெடுங்காலமாகக் கிடந்தபொற்குவையை யெடுக்கும் வகையுந் தெரிந்துகொள்ளப்படாதிருந்தது. இவ்விஷயங்களைப் போகியோடு சென்ற சீடர்வாய்க்கேட்ட சீனதேசத்துச் சிற்பிகளுளொருவன், "அப்பெரிய கபாலத்தை யேற்றுதற்கு அவ்வூரிற்பஞ்சுப் பொதியில்லையா" வென்றும், "அச்சக்கரத்தைத்தடுக்க வாழைத்தண்டில்லாதொழிந்ததா" வென்றுஞ்சொல்ல, அதனைக் கேட்டுக்கொண்டிருந்த தமிழருளொருவனான ஒரு கைக்கோளன் மற்றோரையறியாது மீண்டு சோழநாட்டையடைந்து அரசனுக்குணர்த்த, அரசன் பஞ்சை விமானப் பிரமாணமாக்குவித்து அக்கல்லையேற்றுவித்தானென்றும், வாழைத்தண்டையிட்டு சக்கரத்தை நிறுத்திப் பொற்குவையைக் கவர்ந்து சீரங்கத்து எழ்மதிற்றிருப்பணியை முற்றுவித்தானென்றும் ஒருகர்ணபாரம்பரியமுளது.

---

**சமபந்தி போஜனம்.**—ஐரோப்பாவிலிருந்து திரும்பிவந்த பரோடா மகாராஜாவுக்கு ஸயாஜி விஹார கிளப்பைச் சேர்ந்தவர்கள் ஒரு விருந்துக் கச்சேரி நடத்தினார்கள். அதில் பல ஜாதியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் வித்தியாச மில்லாமல் ஒருவரோடொருவர் சேர்ந்து மனமுவந்து சாப்பிட்டதைக் கண்டு மகாராஜா நிரம்ப சந்தோஷப்பட்டு பின்வருமாறு பேசினார்:—சில வருஷங்களுக்குமுந்தி ஆசாரத்திருத்தம் இப்பொழுது நடந்தேறுவதுபோல இவ்வளவு சுலபமாக நடந்தேறினதில்லை. ஒரே ஜாதியைச்சேர்ந்த ஜனங்கள் அந்த ஜாதியில் ஏற்பட்டிருக்கும் உட்பிரிவு ஜாதியுடன் சமமாக உட்கார்ந்து சாப்பிடமாட்டார்கள். பல ஜாதியார் ஒன்று சேர்ந்து சாப்பிடும் முறையைப்பற்றி அக்காலத்தில் கனவிலும் கூட நினைத்திருக்கமாட்டார்கள். காலம் மாறிக்கொண்டு வருகிறது. இதோ இங்கிருக்கும் ஹாலில் மகாராஷ்டிரர்கள், பிராம்மணர்கள், நகரவாசிகள், மகம்மதியர்கள் எல்லோரும் சேர்ந்து சாப்பிடுகிறார்கள். சீர்திருத்தத்தை அனுஷ்டிக்கும்படி ஜனங்களை நாம் கட்டாயப் படுத்தக்கூடாது. சீர்திருத்தக்காரர்கள், தாங்கள் சொல்லுகிறதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர, அதனால் நன்மைகள் உண்டு என்று கண்டு கொண்டால் ஜனங்கள் தாங்களே அவைகளைப் பின்பற்றுவார்கள்.

## பகவத்பக்தி—தேஜஸ்

ஸ்ரீ A. நஞ்சுண்டப்பா, B. A. B. L.,

கடப்பை தத்வஞான ஸபை

ஒரு வீட்டிலுள்ள ஸ்திரீ புமான்கள் துஷ்ட விர்த்தியுள்ளவர்களாய் இருப்பாரேயானால் இவர்களுடைய சந்ததியார்களுக்கும் இவ்வீட்டில் வருபவர்களுக்கும் இவர்களால் அன்னபானாதிகளை க்ரஹிப்பவர்களுக்கும் துஷ்ட தேஜஸ் வியாபிக்கும். இதன்றி இந்த துஷ்ட தேஜஸ் அயல் வீட்டுக்காரர்களுக்கும் தத்துவாரா கிராமம் முழுமைக்கும் இதர கிராமங்களுக்கும் வியாபித்து ஒரு வீட்டிற்கு நெருப்பு வைத்தால் க்ரமவாரா அடுத்த வீடும் ஊர் முழுமையும் இன்னும் பக்கத்துக் கிராமங்களும் எரிந்து போகும்மாதிரி இந்த துஷ்டதேஜஸ் மானிடகோடிகளுக்கும் வியாபிக்கும். மாரி, பிளேக் முதலான ஜாட்யங்களைப் போலவே இவர்களின் துஷ்ட தேஜஸ் அநேகர்களுக்கு வியாபித்து துஷ்டபுத்தியை உண்டுபண்ணும். இவ்வித தோஷம் இங்கு ஸ்திரீ புமான்களையுடையுமே யொழிய ஒருவன் தான் மாத்திரம் கெடுதியாக இருக்கமாட்டான். ஆகையால் நாம் சதா தயையுடன்கூடின பக்தியை அதாவது ராஜயோகத்தை அப்யஸிக்கின் நாம் பரிசுத்தர்களாகி உலகத்தைப் பரிசுத்தம் செய்வோம். மனிதனுடைய மனமானது சர்வகாலத்திலும் சும்மா இராது. ஏதோ ஒரு சங்கல்பத்தை சங்கல்பித்துக் கொண்டே இருக்கும் சுவபாவமுள்ளதாதலால் பிரதி மனிதனும் உலகநாசகனாயாவது லோபியாகவாவது இருப்பானே யொழிய வேறில்லை. ஆகையால் துஷ்ட விர்த்தியை ஒழித்து சதா சத் விர்த்தியை அப்யஸிக்க வேண்டும்.

இக்காரணம்பற்றியே மனிதன் போஜன காலத்தில் ஈச்வர த்யானம் செய்யின் இப்பரிசுத்த தேஜஸ் இவன் புசிக்கும் அன்னங்களின் மேல்பட்டு அவைகளைப் பரிசுத்தமாகச்செய்து இவனுடைய சத்புத்தியை இன்னும் அதிகமாகச் செய்யும். சமையல் செய்பவனும் பரிமாறுகிறவனும் தேவனை த்யானித்துக்கொண்டு வேலை செய்யவேண்டும். அப்போது அன்னம் பரிசுத்தமாகும். இதைப் புசிப்பவர்களுக்கு நல்ல புத்தியை உண்டாக்கும். இப்புண்யம் இவர்களுக்கு லபிக்கும்.

தூர்ச்சங்கத்திற்குச் செல்லும்போது நாம் சிறிது நேரம் ஸ்திர சித்தத்துடன் பகவானை த்யானித்து துஷ்ட தேஜஸ் நம்மை அணுகாவண்ணம் ரக்ஷையாகவுள்ள ஒரு தேஜோகவசம் (Auric Shell) ஏற்படவேணுமென்று த்ருடமாக சங்கல்பிக்கவேண்டும். அவ்விதம் சங்கல்பிக்கின் தேங்காயிலுள்ள ஜலத்தை இரக்ஷிக்கும் கொட்டாங்கச்சியைப்போல் நமது தேஜஸ்ஸில் சிறிதுபாகம் ரக்ஷகமாயுள்ள கவசமாக மாறி நம்மை ரக்ஷிக்கும். நித்திரைக்குப் பூர்வம் பிரதிதினமும் கெட்ட சங்கல்பங்கள் மனதினிடம் ஜனிக்காதிருக்கும்படிக்கும் துஷ்ட தேஜஸ் நமக்குப் படாமலிருக்கும்படிக்கும் பிரார்த்திக்க வேண்டும்.

எவராவது நிரந்தரம் பூததயையை அப்யஸித்து பரிசுத்த தேஜஸை அபிவிருத்திசெய்து கொள்ளுகிறார்களோ, அப்படிப்பட்டவர்களுடைய தேஜஸ் அதிவேகமாய்ச் சுற்றும் சக்கரமானது அதன் பேரில் விழும் வஸ்துக்களை தூரத்தில் உதறி எறியுமாபோல், எவ்வித துஷ்ட தேஜஸையானாலும் அணுகாவண்ணம் அடித்துத் தூரத்தும். ஆகையால் இடைவிடாத சர்வபூத ஹிதமாயுள்ள நிஷ்டையைவிட பெரிய ரக்ஷக கவசம் எங்குமில்லை. ஆனது தேஜஸ்ஸிற்கு வேறொரு தர்மம் இருக்கிறது. காந்தக்கல் (Magnet) ஊசிகளை எல்லாப் பக்கங்களிலிருந்து தன்னிடம் இழுத்துக்கொள்ளுமாபோலும், சுவபாவமாகவே காக்கைகள் ஒரு கூட்டமாகவும் கிளிகள் ஒரு கூட்டமாகவும் எந்தெந்த ஜாதிப் பக்ஷிகள் அந்தந்த ஜாதிப் பக்ஷிகளை ஆகர்ஷித்துக்கொள்ளுமாபோலும், தேஜஸ்ஸிற்கு ஒரு ஆகர்ஷண சக்தி இருக்கின்றது.

ஒருவனுக்கு மனதில் கோபம் ஜனித்தமட்டில் அவன் தேஜஸ் கோப தேஜஸாகமாறும். ஒரு துஷ்டன் இதர துஷ்டர்களைத் தன்னிடம் சேர்த்துக்கொள்வதுபோல் கோபி எல்லாப்பக்கங்களிலிருந்தும் இதர கோபிகளுடைய கோப தேஜஸை ஆகர்ஷித்துக் கொள்ளுவான். ஆனது பற்றி அவனுடைய கோப தேஜஸ் விருத்தியாகி அவன் கோபம் மேலும் அதிகரிக்கும். இவ்விதசமயத்தைப் பார்த்துக்கொண்டிருந்து இப்பிரபஞ்சத்தில் முந்தின ஜன்மத்தில் விசேஷ கோபிகளாயிருந்து மரணத்தையடைந்து பிசாசு ரூபத்தோடு அந்தரிக்ஷத்தில் திரிந்து தங்களுடைய கோபத்தைத் திருப்திசெய்துகொள்ளமுடியாதிருக்கும் ஜீவர்கள் அக்கோபியின் சமீபத்திற்கு ஆகர்ஷிக்கப்பட்டு அக்கோபியின்



மனதில் அவனுக்குத் தெரியாமல் பிரவேசித்து அவன் கோபத்தை விருத்திசெய்கிறார்கள். அக்கோபத்தை அடக்கமுடியாமல் அவன் அநேக துஷ்ட காரியங்களைச் செய்கிறான். இவ்வண்ணமே இதர தூர்க்குணங்களும் விருத்தியாகும்.

ஆகையால், துஷ்ட சங்கல்பங்களை கட்டோடே விட்டொழித்தல் வேண்டும். காம்ய பக்தி கோரிக்கைகளையும் ஆசைகளையும் விருத்திசெய்யும் சித்தசுத்தி ஏற்பட்டு சகல பூதங்களினிடத்தும் தயையோடு எல்லாருடைய நன்மைக்காக சதா த்யானித்துக்கொண்டு பாடுபடும் ராஜயோகிகளின் தேஜஸ் மஹா பரிசுத்தமானது. இந்த தேஜஸ் இதர ராஜயோகிகளுடையவும் ரிஷிகளுடையவும் திவ்ய தேஜஸை ஆகர்ஷிக்கும். இப்படிப்பட்டவர்களிடம் சூக்ஷ்ம சரீரத்தோடு ரிஷிகள் தேவர்கள் வந்து இவர்களுடைய ஹிருதயத்தில் பிரவேசித்து இவர்களின் துர்வாசனைகளை நசிக்கச்செய்து இவர்களிடம் பக்திஞான ஆனந்தங்களை விருத்திசெய்வார்கள். இப்படிப்பட்டவர்கள் கிரமக்கிரமமாக ஈச்வரஸ்வரூபர்களாவார்கள்.

இதுகலியில் நல்ல சாந்தியாகாலமானதால் ஜகத்குருவான ஒரு ரிஷி அவதரித்து அவருடைய சகாயகுணத்தால் ஜனங்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவருவார். பக்தி நேர்மை சாந்தம் பூததயை இவைகளை விருத்திசெய்யவேண்டும். இவ்வித திவ்ய தேஜஸை நாம் அதிகமாய் அடைவோம்.

விசேஷ ஊற்றுள்ள கால்வாய் ஒன்றை இடமாகவும் ஆழமாகவும் வெட்டின் ஜலம் விருத்தியாகுமல்லவா? அவ்விதம் நமக்கு பூததயை விஸ்தாரமாகி ஈச்வர பக்தி பலப்பட்டு நமது பரிசுத்த தேஜஸ் விருத்தியாக ஆக, அதன் ஒளி மேன்மேலும் தூரமாக வியாபிக்குமாபோல் நமது தேஜஸ் மேன்மேலும் தூரமாக வியாபிக்கும். இக்காரணம் பற்றியே ரிஷிகளின் தேஜஸ் கொஞ்ச மைல் வரைக்கும் வியாபித்திருக்கிறது. இவ்விதம் ரிஷிகளின் தேஜஸ் வியாபித்துள்ள ப்ரதேசத்திற்கும் ரிஷ்யாச்ரமமென்று பெயர். அவ்வித ஆச்ரமத்தில் நாம் பிரவேசிக்கும் பொழுதே நமக்கு அவ்விடமுள்ள திவ்ய தேஜோராவிபட்டு சத்புத்தி, சாந்தம், பக்தி முதலியவைகளை உண்டு பண்ணும். இதனாலேயே ரிஷ்யாச்ரமங்களில் புலி, மான், த்வேஷபாவத்தை ஒழித்து சிநேகபாவத்துடன் உறவாடிக்கொண்டிருக்கும்.

கங்கை முதலான மஹாநதிகளிலும், புண்ய க்ஷேத்ரங்களிலும், அநாதி தேவாலயங்களிலும் ரிஷிகளின் தேஜஸ் விசேஷமாக வியாபித்திருக்கும். ஏனெனில், பிள்ளைக்குத் தனத்தைச் சேர்த்து வைக்கும் பிதாவைப்போல் ரிஷிகள் தங்களுடைய தபோசக்தியை இனி வரும் ஜீவர்கள் இவ்வித திவ்ய ஸ்தலங்களை சேவித்து பரிசுத்தத்தை அடைந்து அவர்களும் பரிசுத்தர்களாகி பூர்ணர்களாகவேண்டுமென்று மஹா தயையோடு இவ்வித திவ்ய ஸ்தலங்களில் நிறப்பி வைத்திருக்கிறார்கள். இதனாலும் ஆகம உரைப்படிக்கும் மந்திரங்களின் திவ்ய ப்ரபாவத்தினாலும் தேவாலயங்களில் பரிசுத்த தேஜஸ் நிறைந்திருக்கின்றது.

தேவாலயங்களில் பிரவேசிப்பவர்கள் மஹா பக்தியோடு பிரவேசித்து அங்கிருக்கும் கால முழுமையும் ஈச்வரனிடம் மனதை நிறுத்தி எல்லாரையும் பரிசுத்தர்களாகச் செய்யவேண்டுமென்பதாக த்யானித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இப்படிப்பட்டவர்களுடைய மனதிற்குச் சாந்தம் உண்டாகும். தேவாலயத்தில் இருக்கும்பொழுது காமக்குரோத எண்ணங்களை சங்கல்பித்தாலும் துஷ்காரியங்களைச் செய்தாலும் கெட்டபார்வைகளைப் பார்த்தாலும் அப்படிப்பட்டவர்களுக்கும், அர்ச்சகர்கள் சந்நிதியில் மஹாபக்தியுடன் அர்ச்சனாதிகள் நடத்தாமல் துஷ்ட சங்கல்பங்கள் ஜனித்து நடப்பார்களேயாயின் அவ்வித அர்ச்சகர்களுக்கும் துஷ்ட தேஜஸ் விருத்தியாகி அவர்கள் அக்கினியில் விழுந்த விட்டில் பூச்சிபோல் நாசமாவார்கள்.

இக்காலத்தில்கூட பல திவ்ய க்ஷேத்ரங்களிலும் ரிஷிகள் சூக்ஷ்மரூபத்தோடு வந்து குறைந்துபோன பொக்கிஷத்தை நிரப்பும் தனிகனைப்போல் ஜனங்களின் நன்மைக்காக அவைகளில் தங்களுடைய தபோசக்தியை நிறப்பிவிடுகிறார்கள்.

தேவாலயத்தில் மூன்று வாசல்களுக்குள்ளே சுவாமி ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார். இதானது ஜீவனுடைய ஸ்தூல, சூக்ஷ்ம, காரணங்களென்ற மூன்று உபாதிகளைக் கடந்த பின்னர் தான் ஈச்வர சன்னிதானத்தை அடைவான் என்பதை சூசிப்பிக்கின்றது. தீபமில்லாத தேவாலயத்தைப்போல் தேகத்ரயமாலின்யத்தாலே இருளில் உள்ள ஜீவன் சர்வபூத ஹிருதயத்திலும் மறைந்துள்ள நாராயண மூர்த்தியைக் காணமாட்டான். ஸ்தூலசரீர மாலின்யம் காமக்குரோதாதி நாசத்தாலும் காரணசரீரமாலின்யம் அகங்கார நாசத்தாலும் பூததயை அப்யாஸத்தாலும் நசிக்கும். ஆகையால் நாம் இவற்றை முக்யமாய் அப்யசிக்கவேண்டும்.

ஜகத்ரக்ஷகமானதும் மோக்ஷப்ரதமானதுமாயுள்ள பரிசுத்த திவ்ய தேஜஸை அடைவதற்கு வேண்டிய ஸ்ரத்தை, பக்தி, நிஷ்டை, பூததயையும், ஜகத்குருவானவர் சீக்கிரத்திலேயே உலகத்தில் அவதரிப்பாரென்ற நம்பிக்கையும் ஜகதீஸ்வரன் நமக்கு அளிப்பாராக.

## வித்வான்-சரவணப்பெருமாள்

ஸ்ரீ கா திருவேங்கட ஆச்சாரியார், சென்னை

இப்புலவர்சிகாமணி இராமநாதபுர சமஸ்தான வித்வான் என்ற விஷயம் அவர் எழுதிய சீட்டுக்கவியொன்றில்,

"அரசரி லுயர்ந்ததுரை யாரெனிற் சேதுபதி
யாகுமவன் மணிவாயிலில்
அகத்திய முனிவர்க்கு மதிகமாய்க் கற்றவர்க
ளாயிரங் கவிவாணருண்
டவரிலொரு சிறுவன்யான் பாடவறியேனென்
றகற்றிவிட் டார்களென்னை
ஆகையாற் பூமியிற் சஞ்சரித் தேனுன்ற
னகந்தனில் மகிழ்ந்தருள்வையே".

என்று வரைந்திருக்கிறதே போதுமான சான்றாயிருக்கிறது. இவர் ஒரு காலத்தில் சோணாட்டுத் தலங்களைத் தரிசித்துக்கொண்டு திரிசிரபுரம் வந்தனர். அக்காலத்தில் அவ்விடத்தில் பிரபல தனவந்தராயிருந்த மங்கத்தா செட்டியார் என்னும் ஓர் வணிகர் தமது அந்தஸ்திக்கேற்ற தருமசிந்தனை யில்லாதவராய் மிகு லோபியாயிருந்தார். அச்சமயம் அவ்வூரிலுள்ள அநேகம் பிரபுக்கள் இப்பண்டிதரை மதித்து தக்க சன்மானஞ்செய்து மை செட்டியாரைக் காணும்படிச் சொன்னார்கள். செட்டியாரோ யாரேனும் வர்த்தகர்களாயிருப்பவர்கள் வந்தால் மாத்திரம் தம் வீட்டிற்குள் விடும்படிக்கும், வித்துவான்கள், பிராம்மணர்கள் யாசகர்கள் முதலானவர்கள் வந்தால் உள்ளே விடக்கூடாது என்றும் வாயில் காப்பாளரிடம் உத்தரவு செய்திருந்தார் இப்படியிருக்க, சரவணப்பெருமாள் கவியானாலும் சண்முகப்பெருமாள் கவியானாலும் எப்படி அந்தச் செட்டியாரிடம் போய்ச் சேரும் என்று பலரும் பேசிக்கொண்டார்கள்.

இதை யறிந்த புலவர் சீட்டுக்கவியொன்றை யெழுதி அதைப் பட்டுவஸ்திரத்தில் முடிந்து, இரத்தினமுடிப்பு செட்டியாரவர்கள் பார்வைக்கு விலைமதிப்புக்கு வந்ததென்று சொல்லுமாறு தக்க வாசாலகனை ஒரு கற்றுச்சொல்லி (கையேட்டுக்காரன்) யிடங் கொடுத்தனுப்பினார். அவன் செட்டியார் வீட்டுக்குச்சென்று வாயிற் காப்பாளரிடம் "ஐயா! நான் ஒரு இரத்தின வியாபாரி; சில ரத்தினங்களை விலைமதிப்புக்காகச் செட்டியாரிடம் கொண்டு வந்திருக்கிறேன்" என்று கூறவும், காவல்காரர் போய் முதலாளியிடம் உத்திரவு பெற்று வந்து, இவனை யுள்ளே யனுப்ப, அவன் போய் செட்டியாரைக்கண்டு அவரால் உபசரிக்கப்பெற்று பட்டுள்பொதிந்த தனது முடிப்பை அவர்முன் வைத்தனன்.

"இது எவ்விடத்திலிருந்து வந்த ரத்னம்" என்று செட்டியார் கேட்க, "இது ராமநாதபுர சமஸ்தானத்தில் அதிகம் மதிக்கப்பெற்ற ரத்தினம். அநேக அரசர்களும் தங்களைப்போன்ற பிரபுக்களும் இதை மதித்திருக்கிறார்கள். தங்கள் பார்வைக்கு இதை எங்கள் எஜமானர் அனுப்பியிருக்கிறார்" என்ற பதில்வர, "நல்லது, இப்பொழுது தக்க பாடவேளையே. அதை எடுக்கலாம்" என்று செட்டியார் கூறினர். கற்றுச்சொல்லி உடனே, "ஆம், பாடவேளை பார்த்துக்கொண்டிருக்கிறேன், பாடுகிறேன், கேளுங்கள்" என்று பட்டு முடிப்பை யவிழ்த்து அதனுள் மஞ்சள் காப்பிட்டு அலங்கரித்திருந்த சுருளை யெடுத்து கையிற் கொடுக்க செட்டியார் ஒருவாறு பிரமித்து "இது என்ன கொள் முதல் கணக்கா" என்று கேட்டார். "ஆம், கணக்குதான்" என்று சொல்லவும், "அதுயாது" என்று திடுக்கிட்டுக் கேட்க அப்போது கற்றுச் சொல்லி அதைப் பிரித்து கடகடவென்று பாடினார். அப் பாடல் பின் வருமாறு—

### சீட்டுக் கவி.

கன்னியருக்குதவித் தமிழ்க்கொளிப்பார் நெஞ்ச
கந்தடாரிக்கு முள்வேல்
கவியிது வரைக்குநாங் கேட்டதிலை யென்பரிரு
கடைவாய் கிழிக்கும் வடிவாள்
கற்றவர்க் கேழடிமு னெதிர்வாரா ரீரல்
கலக்கிடுஞ் சூலாயுதம்
கனமோடி கொண்டவர்கள் தம்மைச் சிதைத்திரு
கண்களைக் கிள்ளும் அம்பு
பின்னென்று சொல்பவர்கள் கன்னெஞ்சை வெட்டிப்
பிளக்கும் பெருங்கோடரி
பேசாக் கழப்போ விருப்பர்தலை மண்டையைப்
பிய்க்குமகா வுக்ர சிங்கம்
பெருமோடி கொண்டவர்கள் மள்ளையைக் கண்விழி
பிதுங்கப் பிடிக்கும் வேங்கை
பிசகுசொல் லிப்புலவர் தங்களை மதிக்காத
பேரைப் பிளக்கும் யானை



நன்னய மிலாதுவரு புல்லரொடு மூர்க்கரொடு
நாபியூடுருவு மீட்டி
நாளைக்கு வாவென்னு மேழைக் குலாமர்மணி
நாவறுத்திடு சக்கரம்
நட்டகற்பூ விருந் தீயார் புயஞ்சிதைய
நலிவுசெய் வஜ்ரதண்டம்
நாமேது தமிழேழ தெனச்சொல்லு வோர்களை
நறுக்கிச் சிதைக்கு மரிவாள்
சொன்னமொழி தவறாத சேதுபதி வாசற்
றுலங்கு கற்பூர தீபம்
சோமசுந் தரனடிமை சரவணப் பெருமாள்கை
தொட்டெழுதி விட்ட சிருபம்
தூயதிரி சிரம்வளரு மங்கத்தா செட்டியெனுந்
துரந்தரன் மகிழ்ந்து காண்க
தூதொன்று நின்மீது வருகின்ற ததன்விலை
சொர்ணமொரு கோடிபெறுமே.

இந்தக் கவியைச் செட்டியார் கேட்டு "இது என்ன சங்கடமாயிருக்கிறது! நாம் இரத்தினமென்றல்லவோ இருந்தோம்; இது கவியாக முளைத்ததே" யென்று தம்முடைய காரியஸ்தர்களை யழைத்து இதற்கென்ன செய்கிறதென்று கேட்க, அவர்கள் "மஹாப்பிரபு! புலவர் சேதுபதிமகாராஜாவின் சமுகவித்துவான். நாம் அவரைத் தக்கபடி மதித்து அனுப்பாவிடில், அவ்வரசர்பெருமான் மனஸ்தாபங்காட்ட நேரிடு" மென்று சொன்னார்கள். "தூது பாடியிருக்கிறதாகச் சொல்லியிருக்கிறாரே, அது வந்துவிட்டால் என்னசெய்கிறது" என்று செட்டியார் பயந்து கேட்டார். "அவர் தூதனுப்புவதற்கு முந்தி, நாமே சென்று அவருக்கு ஆயிரம் பொன்னை வைத்துக் கண்டுகொள்வது சரி" யென்று மற்றவர்கள் போதித்ததின்பேரில் செட்டியார் ஒருவாறு இணங்கி மை தொகையைக் கொண்டுபோய் வைத்து "ஐயா, புலவர்சிகாமணியே! தங்களை ராஜராஜாக்கள் தாங்கவேண்டுமே தவிர என்னைப்போன்றவர்களா தாங்க வல்லவர்கள்?" என்று நயந்துபேசி வித்வானைக் கேட்டுக்கொண்டனராம். இது கர்ணபரம்பரையாகச் சொல்லப்படுமொரு சரித்திரம்.

---

பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய்பிறர்
எச்சிற் கிமைபாது பார்த்திருக்கும்—அச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினும் கீழ்செய்யும்
கருமங்கள் வேறு படும். —நாலடி.

## மகாதல மஞ்சரி

1 ஹரித்துவாரம்.—இப்பதத்திற்கு 'விஷ்ணுவாசல்' என்றுபொருள். இப்பெயர்கொண்டு தற்காலத்து வழங்கும் ஊருக்கு முற்காலத்தில் 'மயூரம்,' 'மயபுரம்' என்ற பெயர்கள் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. அப்போது அது சிவக்ஷேத்திரமா யிருக்கவேண்டும். அக்பர் அரசாக்ஷிக்காலத்திருந்த அபுல்பாஜல் என்னுஞ் சரித்திரக்காரர், கங்கைக்கரையில் 36 மைலளவுக்கு இவ்வூர் புண்ணிய க்ஷேத்திரமா யிருந்ததா யெழுதியிருக்கிறார். அவ்வரசாக்ஷிக்கு அடுத்த காலத்தில் டாம் கார்யட் என்பவர் இத்தலத்தைத்தரிசித்து, இது சிவக்ஷேத்திரமாய் 'ஹரத்துவாரம்' எனப் பெயர்கொண்டிருந்ததாகத் தெரிவிக்கிறார். இந்தவிடத்திலிருந்துதான், கங்காநதி திவ்யதீர்த்தமாய் வெளியேறுகிறது. இங்கு, புத்தம் சைவம் வைணவமாகிய பலமத ஆலயங்களுஞ் சிலைகளும் மடங்களுங் காணப்படுகின்றன. இந்தஸ்தலத்தில் கபிலமுனிவர் தவஞ்செய்ததால் இதற்கு கபிலஸ்தானமென்ற பெயருமுண்டு. தற்போதைய ஹரித்துவாரத்திற்கு சற்று தெற்கே மயபுரமென்னும் பெயர் கொண்டதாய் ஓரிடம் இன்னுமிருக்கிறது. சீனதேசத்து புத்த யாத்திரைவாசியாகிய ஹியூன் த்ஸாங் என்பவர் ஏழாவது நூற்றாண்டில் இந்தத்தலத்தைத் தாம் தரிசித்ததாகவும் இதற்கப்பொழுது 'மோயுலூ' என்ற பெயர் வழங்கப்பட்டதாகவும் எழுதியிருக்கிறார். இப்போது பிரயாணிகளால் தரிசிக்கப்படுங்கோயில்கள் யாவையெனில்—கங்கைக்கு மேற்குக் கரையிலுள்ள சண்டியாலயம், மாயாதேவியாலயம், சரவணுதாலயம்—என்னும் மூன்றேயாம். கங்காத்துவாரம் என்னுங்கோயில் கங்கையில் ஸ்நானஞ் செய்யுமிடத்திற் கருகேயுளது. அடுத்துள மலைச்சாரலில் விஷ்ணுபாதங் காணப்படுகிறது. வருஷப்பிறப்பன்று, அதாவது கங்காதேவி முதன் முதல் உலகத்திற் காணப்பட்ட நாளில், பெருஞ்சனக்கூட்டம் அங்குதிரள்கிறது. மகாகும்ப மகோற்சவம் 12 வருஷங்களுக்கொருமுறை இவ்விடத்தில் நடைபெறும். அப்போது ஒரு மாதகாலமட்டும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் இங்கு ஸ்நானத்திற்கு வருவர். இப்படி, 12 வருஷங்களுக் கொருமுறை மகா கும்ப மகோற்சவம் நடைபெறும் பஞ்சக்ஷேத்திரங்கள் ஹரித்துவாரம், திரியம்பகம், உஜ்ஜினி, அலகாபாத், கும்பகோணம் என்பவையே. ஹரித்துவாரத்திற்குத் தென் கிழக்கில் 2 மைலுக்கப்பால் கங்காலென்னும் ஓரூருண்டு. அங்கு, தக்ஷப்பிரஜாபதிகோவில், சத்திகுண்டம், தக்ஷஸ்தானம் முதலியவாய்ப் பார்த்தற்குரிய பலவிடங்களிருக்கின்றன. ஹரித்துவாரம் கல்கத்தாவிலிருந்து 921 மைல் தூரத்திலிருக்கிறது: மூன்றாவது வகுப்பு சார்ஜ் ரூபா 8-14-0. இவ்விடத்திலேதான் காளது 13-4-15-முதல் 13-5-15-வரையிலும் மகாகும்ப மகோற்சவம் நடைபெறுங்காலத்தில் ஸ்ரீ கருணானந்த சுவாமிகளது சாதுமகா சங்கமும் நடைபெறும்,

## சண்டையைச் சார்ந்தவை

பிரெஞ்சு மன்னரான மகா நெப்போலியன் சக்ரவர்த்தியின் காலத்தில் துப்பாக்கிக் குண்டுகள் 200-கஜத்திற்குமேல் சென்றதில்லையாம். இப்பொழுதுள்ள குண்டுகள் 1000-முதல் 2000-கஜம் வரையில் பாய்கின்றன.

*
* *

ஜெர்மன் சக்ரவர்த்தியார் இக்காலத்திற்கேற்பத் தமது குடிகள் யாவரும் கீழ்த்தரமான ரொட்டிகளையே யுண்டு வரவேண்டுமென் றுத்தரவு செய்து தாமும் அந்த ரொட்டியையே சாப்பிட்டு வருகின்றனர்; போர்முகத்திலுள்ள உத்தியோகஸ்தர்களும் கீழ்த்தரமான ரொட்டிகளையே சாப்பிட்டு வரவேண்டுமென்றும் உத்தரவு செய்திருக்கின்றனர்.

*
* *

தங்கத்தைக் கொடுத்து வெள்ளியாகவேனும் நோட்டாகவேனும் மாற்றிக் கொள்வோர்க்கு ப்ரீ டிக்கட் கொடுக்கப்படுமென்று, ஜெர்மனியில் கார்ல்ஷ்ரு என்னுமிடத்தில் ஒரு சினிமோட்டகிராப் கம்பெனிக்காரர் விளம்பரம் செய்தார். அவ்வாறு அநேகர் வந்தனர். அதனால் 3-தினங்களுக்குள் 650-பவுண்டு மதிப்புள்ள தங்கநாணயங்கள் கிடைக்க, அவை உடனே ஜெர்மன் பாங்கிக்கனுப்பப் பட்டனவாம்.

*
* *

ஓர் இங்கிலீஷ் பட்டாளத்தைச் சேர்ந்த ஸார்ஜண்டு பென்னெட் என்பவன் 1-9-14ல் யுத்தத்தில் இறந்து போனனென்று அதிகாரிகள் பதிவுசெய்து விட்டார்களாம். இரண்டு குண்டுகள்பட்டுக் காயமடைந்து ஆஸ்பத்திரியிலிருந்த அவன் சௌக்கியமடைந்து திரும்ப வந்து அதிகாரிகளுக்குச் சம்பளப்பட்டி அனுப்பினன். பல முறை விண்ணப்பஞ் செய்தும் அதிகாரிகள் கவனியாததால் அவன் நேராகப் பட்டாளத்தின் ஹெட் ஆபீசுக்குச் சென்றான். அவனைக் கண்டதும் "இறந்துபோன நீ எவ்வாறு வந்து விட்டாய்" என்று ஆச்சரியத்துடன் கேட்டும் சவிஸ்தாரமறிந்தும் சர்க்கார் கணக்குப்படி நீ இறந்தவனுய் விட்டாய், அதனால் இப்பொழுது உனக்கொன்றும் செய்யமுடியாது என்று கூறி இராணுவ இலாக்காவின் மரண ரிஜிஸ்டரைக் காட்டினர்கள். அவன் தனது மேலதிகாரிகளிடம் சாட்சியம் பெற்றுக்கொண்டு தான் உயிரோடிருப்பதாகவும் தனக்குச் சம்பளம் கிடைக்கவேண்டுமென்றும் யுத்த ஆபீசுக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறனும்.

## விசேஷவர்த்தமானம்

**ஜீவஹிம்ஸை.**—கல்கத்தாவில் ஒரு தோட்டி 3 மாத வயதுள்ள தனது நாயின்வாலைக் கத்தரித்தமைக்காக 10 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டான்.

*
* *

**புது ரயில்பாதை.**—சீடாமங்கலத்திற்கும் மன்னார்குடிக்கும் இடையில் புதிதாகப்போடப்பட்ட இருப்புப் பாதை சென்றமாதம் சென்னைக் கவர்ன்மெண்டின் இரண்டாவது மெம்பரான ஸர் ஹாரல்டு ஸ்டூவர்ட்டால் திறக்கப்பட்டது.

*
* *

**சிங்கப்பூரில் கலகம்.**—பிப்ரவரி மாதம் 15ந் தேதி மாலை 3 மணிக்குத் திடீரென்று சிங்கப்பூரில் ஒரு கலகம் தொடங்கியது. அவ்வூரிலிருந்த பட்டாளம் நெருங்கிய பாதையொன்றில் போய்க்கொண்டிருந்தபொழுது சிப்பாய்கள் உத்தியோகஸ்தர்களைத் தாக்கி, வழியிற் கண்ட ஐரோப்பியரை யெல்லாம் கொல்ல முயன்றனர். அதிகாரிகளோ தமக்குக் கிடைக்கக் கூடியவர்களை யெல்லாம் சேர்த்துக்கொண்டதுடன் துறைமுகத்தில் நின்ற போர்க்கப்பல்களி லிருந்தவர்களையும் கூட்டிக்கொண்டு சமயத்துக் கேற்பத் தைரியமாக வேலை செய்தனர். போலீஸ் வீரர்களும் வாலண்டியர்களும் சிவிலியன்களும் மிகவும் நல்ல வேலை செய்தனர். ஜோகூர் சமஸ்தானத்துச் சுல்தான் உடனே தமது தரைப்படைத் துருப்புகளை அனுப்பினர். எல்லையைக் கடந்துசென்ற கலகக்காரரை யடக்குவதில் அவர்கள் மிகவும் உதவியாயிருந்தனர். கலகக்காரருட் சிலர் பட்டாளங்கள் வாசஞ்செய்யு மிடத்தைத் தம் வசப்படுத்திக்கொண்டனர். மறுநாட் காலையில் அவர்களைத் துரத்தியபொழுது அவர்கள் எல்லையைக்கடந்து தப்பியோட முயன்றனர். கடைசியாக 18ந் தேதி காலைக்குள் கலகம் ஒருவா றடக்கப்பட்டது.

---

தொழிற்சாலையைப்பற்றி நமது பத்திரிகையில் எழுதிவருவதால் ஒவ்வொரு ஊரிலும் இப்போது கொஞ்சங் கொஞ்சமாக தொழில்களில் கவனம் அதிகமாயுண்டாய் வருகிறது. அவரவர்கள் தங்கள் புத்தியைப் பலதொழிலபிவிருத்தியில் பிரயோகிக்க யோசனை செய்கிறார்கள். என்ன தொழில்கள் பெரிய ஒர்க்ஷாப்களில் நடத்தப்படலா மென்ற தர்க்கம் அங்கங்கு நடப்பது கேட்டுச் சந்தோஷமடைகிறேன். எழுதும் பேனு (Nib) ஏன் செய்யக் கூடாதென்கிறார் ஒருவர். சாவிவளையங்கள் செய்யச்சாத்தியப்படாதா வென்கிறார் மற்றொருவர். குடைக்கம்பிகள் பிடிகள்முதலிய செய்யக்கூடுமென்று பின்னொருவர் பேசுகிறார். இவற்றைப்பற்றியெல்லாம் யோசிக்கத் தொழிலாளிகளுடைய கான்பரன்ஸ் ஒன்றுவைத்தல் நலமென்று தோன்றுகிறது. இவர்களுக்கு தம்மபிப்பிராயங்களை எழுத்து மூலமாய் வெளியிடுஞ் சக்திகிடையாது. எதற்கும், நாளைக்கான்பரன்ஸின் ஆலோசனைக்கு இவ்விஷயமுங் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

தொழிலாளி

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

# ஐரோப்பா யுத்தம்.

ஐரோப்பாவில் இப்போது பெரிய யுத்தம் நடந்து வருகின்றது. அதில் அநேக பெரிய அரசர்கள் கைகலந்து இருக்கிறார்கள் அவர்களில் நம்மை ஆளும் ஆங்கில அரசரும் ஒருவர். இந்த யுத்தத்தைப்பற்றிய விஷயம் முற்றிலும் அறிய விரும்பாதவர் நம்மவரில் ஒருவரும் இரார். அதை ஆதிமுதல்இதுவரையில் விளக்கமாக எழுதி ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறது. பல ராஜாங்கங்களுக்குள் நடந்த வாக்கு வாதங்கள் மந்திராலோசனைசபையில் பேசப்பட்ட விஷயங்கள், நம்மரசரின் வாக்குறுதி அவருக்கும் நமது கவர்னர் ஜெனரலுக்கும் நடந்த வர்த்தமானங்கள் இன்னும் பல முக்கியமான விஷயங்கள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. யுத்தபுருஷர்கள், அரசர்கள், மந்திரிகள், ஸ்தானதிபதிகள், நகரங்கள், யுத்தகளங்கள், தேசங்கள், யுத்தகப்பல்கள், கப்பல், தலைவர்கள், அபூர்வவேலைகள் அடங்கிய சித்திரப்படங்கள், கம்பியில்லாத் தந்திகள், ஆகாய கப்பல்கள், சகிதமாக செந்தமிழ் நடையில் இந்த விஷயங்கள் எழுதப்பட்டிருக்கிறது. லண்டன் டைம்ஸ் யுத்தசரித்திரத்தைப்போல் இரு பாகங்களாக வெளியிடப்படும். உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு இருக்கிறது.

புத்தகம் 1-க்கு 1 0 0 வி. பி. சார்ஜ் 0 2 0 2-புத்தகம் வாங்கினல் தபால் சார்ஜ் இனம்.
6-புத்தகம் 6 0 0 1-புத்தம் இனமளிக்கப்படும். 6 புத்தகம் வேண்டுவோர் ரூ. 1-0-0 அனுப்பவும்.

இந்த பேப்பர் பெயர் கண்டு எழுதுவோர்கட்கு பொன் புதையல் என்னும் புஸ்தகம் இனமாக அனுப்பப்படும்.

**சி. எ. நடேசன் புக் டிபோ,**

**நெ. 8, முருகேச முதலி தெரு, மின்ட் பில்டிங் போஸ்ட் சென்னை.**

இனம்! இனம்!! இனம்!!!

## ஓர் அழகான வெள்ளி கெடியாரத்தை அடையுங்கள்

**விலை ரூபாய் 10 மதிப்பிடக்கூடியது.**

ஓர் பெயர் பெற்ற கம்பனியாரால் கொடுக்கப்படுகின்றது. ஆயிரக்கணக்கான கெடியாரங்கள் இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய பிரதேசங்களில் உள்ளன. ஜனங்களுக்கு எங்கள் கம்பெனியின் பெயர் பிரக்கியாதியாகும் பொருட்டு சிலநாள் வரையில் கொடுக்கப்படும் தேவையானவர்கள் ரூபாய் (1 6 0)க்கு தபால் தலைகள் அல்லது மணியாடர் மூலமாக எங்கள் பிரக்கியாதி பெற்ற இங்கி தொடாமலே தானய் எழுதும் 14-கார்ட் ரோல்ட்பொன் பதித்த பௌன்டன் பேனவுக்காக அனுப்பி பேனவையும் மேற்படி சொக்கவெள்ளி கெடியார உடன்படிக்கையும் அடையுங்கள் மற்றும் நீங்கள் எங்களுடைய பேனக்களை குறைந்தது உங்களுடைய 6-சிநேகிதர்களுக்கு சிபாருசு செய்வீரென்றும் நீங்கள் இனம் அடையும் கெடியாரத்தை அவர்களுக்கு காட்டுவீர்களென்றும் நம்புகிறோம் உடனே பணம் அனுப்பி கெடியாரத்தை சீக்கிரத்தில் அடைய பிரயத்தனப்படுங்கள்.

---

**நியூ யிங்டன் அண்டு கோ,**

**87-சைனபஜார்ரோட், மதருஸ்.**

SEP 1915

புதிதாய் கண்டு பிடித்த ரோமசங்காரிணி என்னும்

## தர்பார் சோப்



இது தேகத்தின் எந்த பாகத்திலிருக்கும் கூந்தலை இது பூசுவதினால் தேகத்தின் சர்மத்திற்கு எவ்வித தொந்திரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் பிறகு விடமாட்டீர்கள்.

தேகத்தின் காந்தியையும் முன்போலவே நிற்கும் சுபாவமான நிறத்தை காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றே தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை. வர்த்தகர்களுக்கு சகாயமாய் கொடுக்கப்படும்

ஏஜெண்டுகள் தேவை

3-கேக்கு பெட்டி 1-க்கு ரூ. 0—14—0 ஒரே தடவையில் 2-பெட்டி ரூ. 1—10—0

போஸ்டேஜ் 0—4—0 பிரத்தியேகம்



இனாம் ! இனாம் ! ! இனாம் ! ! !

இதுதான் சமயம் !

உலகப்பிரசித்தி பெற்ற

## ஆட்டோ பத்திரி

எல்லா அத்தர்களைவிட மேன்மையான வாசனையுடையது. ஒரு தடவை உபயோகித்துப் பார்த்தால் தெரியும்.

ஒரு டிரும் புட்டி விலை 0 10 0. அரை டிரும் விலை 0 6 0.

வாசனை கார்ட்டு 1-க்கு 0 0 9. டஜன் 1-க்கு 0 8 0.

ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு ஒரு வாசனை கார்ட்டு இனாமாக அனுப்பப்படும்

சொந்தக்காரர்கள்:—

**பி. வி. பத்திரி அண்டு கம்பெனி,**

மதராஸ் ஏஜண்டுகள்:—

எம். ஆர். சாமி, 34. நம்மாள்வார் வீதி, மதராஸ்.

---

**50** சாமான்கள் இனாம் ! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது.

## ராஜா சுந்திரி ரோஜா கூந்தல் வளரும் பரிமளத் தைலம்

50 இனாம் சாமான்களுடன் டின் 1-க்கு ரூபா 1. போஸ்டு சார்ஜ் பிரத்தியேகம்.

தலைமயிர் அழகாய் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ்திரீகளும் தலைமயிர் உதிர்ந்துபோகாமல் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ்திரீகளும் சாதாரணமாய் கடைகளில் கிடைக்கக்கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் மனோகரமுடைய பரிமளத்தை தெரிந்து அவைகளை வாங்கவும். இதின் பரிமளம் சொல்லியும் எழுதியும் முடியாது. தலையில் தடவி சீவிக்கொண்டால் அக்கம்பக்கம் வீடுகளுக்கும் இதன் வாசனைவீசும். கூந்தலை நீளமாய் வளரச்செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத்தரும். சிரசிலுள்ள பலநோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர்வடிதல் தலையில் சுண்டு, புண், மயிர் வெடிப்பு மயக்கம், தலைச்சுற்றல், தலைவலி, சொறி, சிரங்கு மனோவியாகூலம்




ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியத்தைத் தரும் தைலம் இது ஒன்றுதான். 1 புட்டி தருவித்தால் இதன் குணம் தெரியவரும் அனேக நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நற்பெயர் பெற்றிருப்பதே இதன் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனாம் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6. தந்த சீப்பு 1. குங்குமச்சிமிழ் 1. மைச்சிமிழ் 1. முகம் பார்க்கும் அழகான கண்ணாடி 1. தாம்பூலமாத்திரைகள் 30. ராஜாராணி கார்னேஷன் உள்ள ஷீ 1. ரவிவர்மா படங்கள் உள்ள போஸ்ட்கார்டு 6. அத்தர் பில்லை 1. சந்தனபில்லை 1. ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜா ராணி உள்ள அழகான கார்னேஷன் புருக்ஸ் 1. வேண்டியவர்கள் அடியிற்காணும் விலாசத்துக்கெழுதி தருவித்துக்கொள்ளலாம்.

**தைரியலட்சுமி அண்டு கம்பெனி, நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.**

---

உண்மையும் உறுதியும் உத்தரவாதமுமுள்ள ஔஷதங்கள்

## மதராஸ் யூநானி ஔஷதசாலை

439-நெ. சௌகார்பேட், தங்கசாலை தெரு, மதராஸ்

இந்த ஔஷதசாலை 20-வது வருஷகாலமாய் மதராஸில் அதிக கீர்த்தியுடன் நடத்தப்பட்டு வருகிறது. அனேகம் ராஜாக்கள், ஜமீன்தார்கள் முதலிய பல பிரபுக்கள் இங்கு ஔஷதம் வாங்கிச் சாப்பிட்டு நல்ல சுகமடைந்து அனேகம் நற்சாக்ஷி பத்திரங்களளித்திருக்கிறார்கள். இந்த ஔஷதசாலையிலுள்ள ஒவ்வொரு ஔஷதமும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் வியாதிகளைச் சௌக்கியப்படுத்துகின்றது. ஓரே தடவை பரீக்ஷை பாருங்கள் ஆனந்தமடைவீர்கள்.

### சாஸ்திர விசித்திரம்

என்பது என்ன ?

### ஓர் அற்புதமான நூல்

வெளியாய்விட்டதா? கீழேகண்ட விலாசத்தாரிடம் ரெடியாயிருக்கிறது.

கைத்தொழில் செய்து ஜீவிக்க விரும்புவோர்களுக்கும், அறிவு விர்த்திக்கும், பலவகை விநோத வேடிக்கைகள், ஆச்சரியப்படத்தக்க ஜாலவித்தைகள் முதலியவைகளைக் கற்றுக்கொள்ள பிரீதி யுடையோர்களுக்கும் இப்புத்தகம் இன்றியமையாதது.

புத்தகம் 1-க்கு விலை அணா 12

### மஹா விகட விநோதக் களஞ்சியம்

இவ்விதமான அதியற்புத அகடவிகட சாமர்த்திய ஜனோபகார விசித்திர வேடிக்கையை விளைவிக்கும் நூல் உலகில் இதுவரையில் வரவில்லை.

அறிவுடைய யாவரையும் அகமகிழச்செய்யும் அழகான விகடக்கோர்வை. முதியோர்களையும் வயிறு குலுங்க நகைக்கச்செய்யு முதன்மையான விகடப் பொக்கிஷம். விகட நூல்களில் மிகவும் விசேஷித்தது, அகலிய நூல்களில் மிக்க அற்புதமானது, சிரிப்பை விளைவிக்கும் நூல்களில் மிகச்சிரேஷ்டமானது.

கிரயம் புத்தகம் 1-க்கு அணா 8

### ஷாஜஹான் வாசனைப் புகையிலை

உயர்தரமான புகையிலையுடன் பலவகை உயர்ந்த வாஸனைத் திரவியங்களையும் அநேக மூலிகைகளையும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. சாதாரணமாய் தாம்பூலத்துடன் புகையிலை உபயோகிப்பவர்களுக்கு இது மிகவும் மனோரம்மியத்தைக் கொடுப்பதன்றியில் இதராளுக்கும் அநேகம் வியாதிகளைச் சௌக்கியப்படுத்துகிறபடியால் எல்லா ஜனங்களுக்கும் எண்ணிறந்த பிரயோஜனத்தைத் தரத்தக்கதென்பதற்குச் சந்தேகமில்லை. இதில் ஒரு மிளகுப்பிரமாணம் தாம்பூலத்துடனாவது அல்லது வெறும்வாயிலாவது போட்டுக்கொள்ளலாம். டப்பி 1-க்கு அணா 5.

### இரகசியம்

இரு பாலார்க்கும் அளவிடற்கரிய பேரானந்தத்தைக் கொடுக்கும் அபுரூப சஞ்சீவி. ஒரு யோகீஸ்வரரால் அனுக்கிரகம் செய்யப்பட்ட உண்மையான மருந்து.

### புருஷத்தன்மையுண்டாக்கும் குளிகை

ஓரேகுளிகை இதின் அபுரூபசக்தி அவசியம் தெரியும். முதலில் ஓரே குளிகைவாங்கி உபயோகப்படுத்தி பரீட்சைபார்த்தபின் 12 குளிகை அடங்கிய ஒரு டப்பியைவாங்கி சாப்பிட்டுப் பயனடைந்து கொள்ளுங்கள். இதன் உபயோகத்தால் பலவித ரகசிய ஆநந்த முண்டாகும். அதன் அற்புதகுணத்திற்கு அதுவே சாட்சியாகும். அனுபோகித்தவர் ஆராய்ந்துகொள்வர் வயோதிகனை வாலிபனாக்கிவிடும். பலவிதத்தாலும் சக்தி இழந்தவர்களுக்கு அற்புத சக்தியைக்கொடுக்கும்.

கிரயம் 12 குளிகை டப்பி 1-க்கு ரூபா. 1.

இரண்டு அணாவுக்கு தபால் ஸ்டாம்பு அனுப்பினால் ஒருமாத்திரை யனுப்பப்படும்.

### ஷாஜஹான் சுகந்த மூக்குத்தூள்

இதன் முக்கிய குணங்களாவன

1-வது முன்பொருபோதும் சுகித்தறியாத இன்பகரமான சுகந்தமும் மஹா சிரேஷ்டமான தூளுக்குரிய நல்லகாரமும் இதிலுண்டு.

2-வது நீண்டநாள் வரையில் காரங்கெடாமல் ஓரே விதமாயிருப்பதன்றியும், இதில் ஒருசிட்டிகை எடுத்து காலணா சாதாரண மூக்குத்தூளுடன் கலந்தால், அந்தத் தூள் முழுவதும் அதிமனோரம்மியமான வாசனைமயமாய் விடுவதல்லாமலும் அதன் காரத்தையும் நெடுநாள் பாதுகாக்கும்.

3-வது ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், தலைநோய், மண்டைக்குற்றல், ஒற்றைத்தலைவலி, நாசியில் துர்நாற்றம், நீர்ப்பீனிசம், செரூப் பீனிசங்களும் இன்னும் சிரசைப்பற்றிய வியாதிகளும் சௌக்கியமாய் விடும். எவ்விதத்திலும் கெடுதியென்பதே கிடையாது. பலசுகுணங்களே நிறைந்துள்ளது. அனுபவத்திலறியலாம். பெருத்த லாபமடைவது, பலவித வியாதிகளைத் தீர்த்துக்கொள்வது ஆகிய நன்மைகளைப் பெறலாம்.

டப்பி 1-க்கு அணா 4, டஜன் 1-க்கு ரூபா 2-4-0

### ஊஷ்ண சமனஹாரி

இந்த ஹல்வாவை வேளை ஒன்றுக்கு அரைரூபாயிடை காலை மாலை இரண்டுவேளையும் 15-நாளைக்குச் சாப்பிட்டுவந்தால் பித்தகாங்கை, மேககாங்கை, கண், கைகால் எரிச்சல், தேகவரக்ஷி, சோர்வு, அசதி, சோகை, பாண்டு, நீரெரிச்சல் நீர்சுருக்கு, பசியின்மை முதலியவைகளை நீக்கித் தேகத்தைக் குளிரச்செய்து தேக திடகாத்திரத்தை யுண்டாக்கும். கிரயம் டப்பி 1-க்கு ரூபா

---

**மதராஸ் யூநானி ஔஷதசாலை, 439, நெ. சௌகார்பேட்டை மதராஸ்.**

## அயக்காந்தத்திராவகம்

இரும்பைப்பார்க்கிலும் கடினமான லோகம் வேறொன்றுமில்லை தாதுவிர்த்திக்கு இதுவே சிறந்தது. பொன், வெள்ளி, முதலியவைகள் அந்தச்சமயத்தில்மட்டும் அதிக குணத்தைக்கொடுத்து சீக்கிரத்தில் தேகத்தைக் கெடுத்துவிடும் இதனால் தான் "இருப்பவன் இரும்பைத்தின்றால், போகிறவன் பொன்னைத்தின்பான்" என்று இவ்வுலகத்தில் சொல்லிக்கொள்கிறார்கள். ஒருவன் இந்த திராவகத்தைச் சாப்பிடுவதற்குமுன் தன்தேகம் எவ்வளவு நிறையுள்ளதென்று நிறுத்துக்கொண்டு அதன்பின் இந்தத் திராவகத்தை ஒருமண்டலம் 48-நாட்கள் சாப்பிட்டு மறுபடியும் 'தராசில் நின்று நிறுத்துப் பார்ப்பானாகில் ஏறக்குறைய முன்னிருந்ததற்கு (ஒருவீசை) 40-பலம் அதிக நிறையிருப்பான் இதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் தெரிந்துக்கொள்ளலாம்.

தாதுவிர்த்தி யில்லாதவர், இரும்பைப்பழுக்கக்காய்ச்சி அதை ஜலத்தில் தோய்த்து அந்த ஜலத்தை தினந்தோறும் குடித்துவந்தால் தாதுவிர்த்தி உண்டாகுமென்று வைத்தியசாஸ்திரங்கள் கூறுகின்றன. இதற்கே அந்தக்குணம் இருக்கிறபோது அயத்தினுடையவும், காந்தத்தினுடையவும் சத்தைத்திராவகமாக இறக்கியிருக்கும் இந்தப்பரம அவுஷதத்தை ஒருவன் உட்கொண்டால் அவன் தேகம் வஜ்ஜிரசரீரம்போலாகிவிடுமென்பதற்கு என்ன தடையிருக்கின்றது.

அரைமண்டலம் 24-நாளைக்கு வரக்கூடிய ஒரு புட்டியின் விலை ரூபா 1-4-0 டஜன் 1-க்கு ரூபா-12.
ஒருமண்டலம் 48-நாளைக்கு வரக்கூடிய ஒரு புட்டியின் விலை ரூபா 2-0-0 டஜன் 1-க்கு ரூபா-21.

## கூந்தல் வளரும் பரிமளத் தைலம்

### 1-டப்பி வாங்குகிறவர்களுக்கு 10-வித சாமான் இனும் கொடுக்கப்படும்

உலகத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் அழகென்பது கடவுளுடைய பெரிய அருளாக இருக்கின்றது. இத்தனை அருமையான கருவி கூந்தல் அல்லது தலைமயிர். ஆகையினால் இந்த தைலத்தை தலைமயிர் உற்பத்தி ஸ்தானங்களில் தடவி வாரிக்கொண்டுவந்தால் செழிப்பாயும் அழகாயும் கருப்புபட்டுக்கு நிகராய் கருக்கச்செய்து ஆலம்விழுதைப்போல் ஓங்கிவளரும். மயிர்கால்களுக்கு குளிர்ச்சியைக்கொடுத்து மயிரின்சிவந்த நிறத்தைமாற்றி நாகப்பழ நிறம்போன்ற கருப்பு நிறத்தை உண்டுபண்ணும். இதுவுமன்றி மண்டையில் மூளைக்கொதிப்பை யடக்கி கண்ணில்நீர்வடிதல் கண் அருகல், கண்ணெறிவு, கண்புகைச்சல் சுண்டுமயிர்வெடிப்பு, மயக்கம் தலைசுழற்றல் திரேகத்திலுள்ள சொரி, சிரங்கு வியர்வைநாற்றம், கற்றாழைநாற்றம், மனச்சஞ்சலம், ஞாபகமறதி முதலிய வியாதிகளைக் கண்டித்து கண்களுக்கு மிகக்குளிர்ச்சி தருவதுடன் நல்ல பிரகாசத்தையும் பரிமளவாசனையையும் திரேகத்திற்கு மினுமினுப்பையுந்தந்து முகத்திற்கு காந்தியைக்கொடுக்கும். இத்தைலம் அநேக பெரிய மனுஷர்களால் நன்கு மதித்து சர்டிபிகேட்டுகள் பெற்றிருக்கின்றது. இத்தயிலத்தை ஒருவிசை உபயோகித்தால் ஏழு எட்டுநாள் சென்றாலும் இன்னும் வாசனை பரிமளித்துக்கொண்டேயிருக்கும்.

10-வித இனும் சாமான்களுடன் ஆழாக்கு எண்ணை அடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இத்துடன் பெண்கள் தலையில் வைக்கக்கூடிய வெகு நேர்த்தியான கொண்டைப்பூ 1. தந்தசீப்பு 1. முகம்பார்க்கும் கண்ணாடி 1. ஜெர்மன்சில்வரால்செய்த மை அல்லது புனுகு ஜவ்வாது வைக்கக்கூடிய மைசிமிழ் 1. அதிகவாசனையுள்ள அத்தர்பில்லை 1. கொண்டைக்கிளி 5. இனாமாய் அனுப்பப்படும்.

**மலசுத்தி லேகியம்.**—1-சேர் லேகிய மடங்கிய டப்பி 1-க்கு ரூபா 1

**மேகவெள்ளைச் சூரணம்.**—டப்பி 1-க்கு அணா 12.

**தந்தப்பொடி.**—இது பல்நோய், கூச்சல், பல்லசைவு ஈறு கரைந்து இரத்தமுண்டாதல் முதலியவைகளை நீக்கி ஈரைக்கெட்டிப்படுத்திப் பற்களை இறுக்கி சகலதுன்பத்தையும் ஓட்டிவிடும். டப்பி 1-க்கு அணா 4. 10 டப்பி ரூபா 2 0 0

**சர்வபடை சங்காரி.**—இந்த ஆச்சரியப்படத்தக்க மருந்தினால் தீரும் வியாதிகள் ஆண்பெண் இருதாரத்தார்க்கும் இடுப்பு தொடை முகம் முதுகு மற்ற எந்த விடங்களிலாயினும் உண்டாகும் எவ்வித வண்டுகடி படைகளும் மூன்று வேளை தடவினால் யெரிச்சல்நாற்ற முதலிய துர்க்குணம் கிடையாது. இந்தமருந்து வாயில் படக்கூடாது. கிரயம் டப்பி 1-க்கு அணா 8.

**சர்வநோய் சங்காரன்.**—டப்பி 1-க்கு அணா 0 8 0

**ஆபீஸ் பாக்கெட் மாத்திரை.**—கிரயம் 24-மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு அணா 4.

**மதனசிந்தாமணி லேகியம்.**—இந்த ஹல்வாவை வேளை ஒன்றுக்கு அரைரூபா யிடையாக காலை மாலை 2-வேளையும் 20-நாளைக்குச் சாப்பிட்டு வந்தால் தேகத்திலுள்ள மேகவாயு மேககாங்கை, உஷ்ணமுதலிய வியாதிகளை நீக்கி தேகத்திற்கு வலுவைக்கொடுத்து இரத்தத்தைச் சுத்திப்படுத்தி இழந்துபோன சக்தியையும் பலப்படுத்தி தேகத்திற்கு அழகும் காந்தியும் முகவஜீகரமு முண்டாக்கி மனக்களிப்பை யுண்டாக்குவதன்னியில் தேகத்தை வச்சிரகாயமாக்கிவிடும். இதின் பெருமையை இதை அனுபவிப்பவர்களே கண்டுகொள்வார்கள். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 2 8 0.

**சுகந்த மூக்குத்தூள்.**—கிரயம் புட்டி 1-க்கு அணா-4. டஜன் 1-க்கு ரூபா 2 8 0. 8-பலங்கொண்ட சேர் 1-க்கு ரூபா 3 0 0 வி. பி. சார்ஜ் புட்டி 1-க்கு அணா-3, வி. பி. சார்ஜ் டஜன் 1-க்கு 0 6 0.

**ஸ்திரீகள் பக்தவிஜய மென்னும் பதிவிரதைகள் சரித்திரம்.**—450-சயிடுள்ள புஸ்தகம் விலை அணா 12. வி பி சார்ஜ் அணா 3.

எஸ். பி. இராஜாராம் அண்டு கம்பெனி, சூளை போஸ்ட், மதராஸ்.



E OF THE REGISTRAR OF SOCI...
REGISTERED
1 . SEP 1915


உ

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம.

# விஸ்வகர்மன்


1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] 1915ளூ ஏப்ரல்மீ [சஞ்சிகை 7


## ஒளிவளர் விளக்கு

1915ளூ மார்ச் மாதத்தில் நமது சபா மண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களுடைய எண்ணிக்கை 215.

*
* *

தமிழ் ஜில்லாக்களில் முக்கியமான இடங்களிலெல்லாம் நமது பத்திரிகைக்கு ஏஜண்டுகளை நியமிக்க உத்தேசித்திருக்கிறோம். ஏஜண்டுகளாவார்க்குத் தக்கவருமானங் கிடைப்பதோடு மிக்க புகழு மெய்துமென்பது குலாபிமானிகளால் முக்கியமாய்க் கவனிக்தற்பாற்று.

*
* *

சென்னை ஸ்திரீகள் காலேஜ் ஆந்திரபண்டிதரும், நங்குலத்தின்மீது மாறாஅன்பு வைத்திருப்பவருமாகிய ஸ்ரீ அக்ஷிந்தல-நரசிம்மம் பந்துலு அவர்களாலியற்றப்பட்ட பாதாள பைரவி என்னும் ஆந்திர நவீனகப் பிரதியொன்று, ஷையாரால் நமது புத்தகாலயத்திற்கு அளிக்கப்பட்டு வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சென்னைவாசி யாகிய வேளிர் நல்லூர் ஸ்ரீ அருணகிரி ஆச்சாரியாரென்னுமொரு பௌரோகிதர் தென்னாட்டில் எவ்விடத்திலாயினும் குடிபுகுந்து விஸ்வகர்மகுலத்தினருக்கு உபயோககரமாயிருந்துவரச் சித்தமாயிருக்கிறனர். சுஜாதிப் பௌரோகிதர் கிடைக்கப்பெறாது கவலையுற்றிருக்கும் ஊரார் நமதுசபைக் கெழுதினால், ஷையாரை அங்கனுப்புதற்கேற்ற ஏற்பாடுகள் செய்யப்படும்.

*
* *

"ராட்சஸத்தில் மாரியறும் நல்வானில் தூமமெழும், தாழ்ச்சியொடு தேயம் தயங்குமே, சூழ்ச்சியொடு, மன்னர் பயமிகுதி மாதே உலகினில், அன்னமறும் என்றுணருவாய்"—என்பது இராக்ஷஸவருஷப் பலனாயிருந்தபோதிலும், இவ்வருஷத்தில் கம்மியத்தொழிலாளர்க்கு நற்பலன்களுண்டாகு மென்பது நம்மவர்களாற் குறிக்கொளற்பாலதாம்.

## சுரங்கத் தொழில்கள்

### "சத்தியவசனன்" எழுதியது.

*சுரங்கம்தோண்டல், உலோகப்பிரிவினை, ஜங்கம தாதுப்பொருள்களில் வேலைசெய்தல்.*

இவை, ஓர் முக்கியமான தேசீய கைத்தொழில் இலாகாவிற் குரித்தாயிருக்கின்றன. செட்டின் விஷயமான ஜீர்ணோத்தாரண சீர்திருத்த பிரயத்தனங்களில் இவை முக்கிய கவனத்திற்குரியன. இவைகள் பயனைத்தரத்தக்க தொழில் பிரயத்தனமார்க்கங்களை குறிப்பித்து விஸ்தாரமான தொழில்மார்க்க சௌகரிய சீர்திருத்தங்களை சுட்டிக்காட்டுகின்றன. நமது சுரங்கப் பொருட்செல்வம் ஏராளமாயிருக்கின்றது. தொழிலுக்குரிய வேறொருமார்க்கத்தில் இத்தனை தொழிற்றுறைகளும் அபரிமிதமான பலனும் காண்டலரிது. ஓர்காலத்தில் இத்தொழில் அதிக உயரிய விர்த்திநிலையிலிருந்தது. பரதகண்டத்து நாடுகளிலுள்ள ஜனசமூகத்தில் பெரும்பாலர்க்கு பிழைப்பிற்கு ஆதாரமாயிருந்தது. ஆனால் இப்போது இந்தியாவில் நமது இதரதொழில்கள் க்ஷீணத்தை அடைந்ததுபோல சுரங்கத்தொழிலும் அநாதரவை அடைந்திருக்கிறது. முற்காலத்து சுரங்கத்தொழிலாளர் காலாந்தரத்தில் பற்பலகாரணங்களுக்காக சுரங்கத்தொழிலை புறக்கணித்து விவசாயத் தொழிலையோ அல்லது வேறு கைத்தொழிலையோ மேற்கொண்டார்கள். நம்முன்னோர்கள் சுரங்கம் தோண்டற்றொழில் புறக்கணித்தபோதிலும், சுரங்கங்கள் செறிந்த பூமிகள் என்னவோ விஸ்தீரணமாயும் ஏராள செல்வத்தை யுள்ளடக்கியதாகவும் விளங்குகின்றன. சுரங்கங்கள் இப்போதும் நமது ஏகோபித்த விடாமுயற்சிக்கு இலக்காக விளங்குகின்றன. அவைகளில் நமது கைப்பாட்டை புகச்செய்து அவைகளை விர்த்திக்கு கொண்டுவருவது நமது கடமையாகும். சிக்கன ஆவஸ்யகம் முயற்சிக்கு ஓர் தூண்டுகோலாயிருக்கிறது. தற்காலத்தில், இனிநேர்தற்கரிய, சௌகரியங்கள் இருக்கின்றன. தற்காலத்தில் நமக்குள் பொருள் நஷ்டமில்லா திருத்தலையும், நம் நாட்டுப் பொருள் நமக்கே உபயோகப் படவேண்டும் நியதியையும், அப்பொருள்கள் நமக்கு உபயோகப்படுவதற்கு முன் அடையவேண்டிய வேலைப்பாடும் நம் தேயத்திலேயே செய்யப்படுதலையும் வேண்டும் எண்ணமிருப்பதால், இவைகளுக்கெல்லாம் முதற் காரணமாகிய சுரங்கம் தோண்டற் றொழில் நமது கவனத்திற் குரியதாகும். நமது சுரங்கச் செல்வம் ஏராளமானதாயும் பலவகைப் பட்டதாயும் இருக்கிறது. நமது இந்திய சுரங்கங்களில் வச்சிர மாணிக்க ரத்தினங்கள், பொன், வெள்ளி, செம்பு, காரீயம், இரும்பு, நிலக்கரி, அபரேக்கு, அலுமினியம், சலவைக்கல், சுண்ணாம்பு கற்கள், இன்னும் நமக்கு என்னென்ன உயிர்வாழ்க்கைக்கு அவசியமானதோ அவ்வப் பொருள்களெல்லாம் அபரிமிதமாய்க் கிடைக்கின்றன. அபரிமித செல்வத்தைக் குறித்து.—"இந்தியாவானது உலகத்தின் மற்ற தேசங்களிலிருந்து முழுவதும் பிரிக்கப்பட்டு, இந்திய சுரங்கப் பொருளேயன்றி வேறெய தேயத்து சுரங்கப் பொருள் இந்தியாவிற்கு வராமல் பாதுகாத்தாலும், இந்தியாவானது தனக்கு வேண்டிய சுரங்கப் பொருளை தன்னுடைய எல்லைக்குள்ளிருந்தே சேகரித்துக்கொடுக்கும் என்பதில் இலவலேசமும் ஐயப்பாடு இல்லை. எத்தேச நாகரிகத்திற்கும் இந்திய நாகரிகம் குறைபடாது" என்று ஐரோப்பியர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

(a) இந்தியாவில் வைரம் மூன்று பெரிய விஸ்தீர்ண பூமியில் எடுக்கப்படுகிறது.

(1) பெண்ணை நதியிலிருந்து சோன்நதிவரைக்குமுள்ள தக்கணத்து கீழ்ப்பாகங்களிலும் (2) மதராஸ், கடப்பை, கர்நூல், எல்லூர், கிருஷ்ணா, கோதாவரி நதிப் போக்கு பிராந்தியங்களிலும் (3) சோடா நாகப்பூர் மத்திய மாகாணங்களி லிருந்து பண்டுல்கண்டு வரையிலுமுள்ள பிரதேசங்களிலும் அகப்படுகின்றது. மணலும் களிமண்ணும் சேர்ந்த பாங்கிலும் இரும்பு சேர்மானமுள்ள மணற்கற்களிலும் அகப்படுகிறது. கிருஷ்ணாஜில்லாவில் அகப்படுவனவும் பண்டுல் கண்டில் பென்னாவில் அகப்படுவனவும், உயர்ந்தவைரங்கள். இப்பிராந்தியங்களில் அநேக சுரங்கத்தாக்குகள் கண்டுபிடிக்கப்படவில்லை. இப்பிராந்தியங்களில் அநேகபாகங்கள் கடைபோக தோண்டப்பட்டதுபோல சிற்சில குறிகள் காணப்படுகின்றன. அநேக வருஷங்களாக நேர்த்தியான வைரக்கற்கள் அகப்படுவது துர்லபமாய்விட்டது. ஆனால் சாஸ்திரிகளும் அநுபோகமுள்ளவர்களும் அதிகமேலான வயிரச் சுரங்கங்கள் இன்னும் தோண்டப்படவில்லை என்று கருதுகிறார்கள். பங்கனபல்லி சுரங்கங்கள் இன்னும் தோண்டப்படவில்லை.



கிருஷ்ணாஜில்லாவில் பெரிய சுரங்கநிலைகள் இருக்கின்றன. கொல்லூர் சுரங்கங்கள் இச்சில்லாவில் உள்ளது. கோஹினூர் என்கிற பேர்போன வச்சிரம் இவ்விடத்தில்தான் அகப்பட்டது. ராமல்லகோட், பங்கனபல்லி சுரங்கங்கள் இப்போதும் வெட்டி யெடுக்கப்படுகின்றன. கஷ்டத்திற்கு லோபமில்லாமல் சிறுசிறு கற்கள் அகப்படுகின்றன. நைஜாம் இராஜ்யத்தில் அநேக சுரங்கங்கள் இருக்கின்றனவென்று பூசார நிர்ணய சாஸ்திர நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

பண்டுல்கண்டு தேசத்தில் பன்னா சுரங்கங்கள் இருக்கின்றன. இத்தேசத்தில் அயசம்மந்த கிரேவல் கற்கள் செம்மண்ணுடன் கலந்திருக்கிறது. வச்சிரத்திற்காக இம்மண்ணை கழுவுகிறார்கள். ஏற்கனவே இரவை கற்கள் ஆழத்தில் பதிந்து கிடக்கின்றன. பன்னாவுக்கு தென் கிழக்காயுள்ள ஓர் முக்கிய பிரதேசத்தில், முதற்றரமான இரவையில்லாவிட்டாலும், பருமனான வச்சிரங்கள் அகப்படுகின்றன. இவ்விடத்தில் முடிவிலாது வைரங்களை தரத்தக்க வைப்பிடங்கள் இருக்கிறதென்று நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். இச்சுரங்க பிரதேசங்களில் வண்டல் மிஸ்ரமபாக மாத்திரமே தோண்டப்படுகின்றனவென்றும், அதற்கும் ஆழ்ந்த இடங்களில் தோண்டப்படுகிற தில்லையென்றும் எரிமலைக்குரிய வஸ்துக்கள் செறிந்த பூமியின் ஆழ்ந்த பாகங்களிலிருந்து காலாந்தரத்தில் பூமியின்மேல் மட்ட பாகத்திற்கு பற்பல காரணங்களால் வச்சிரக்கற்கள் கொதிக்கப்படுகிறபடியால் அக்னிமயமான வஸ்துக்களுள்ள பூமியின் ஆழ்ந்த பாகத்தையும் கடந்து சுரங்கந் தோண்டினால் ஏராளமான வச்சிரக்கற்கள் அகப்படுமென்றும் பூசார நிர்ணய சாஸ்திர நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்வச்சிரச் சுரங்கங்களின் ஏராள செல்வ இருப்பைப்பற்றி யாதொரு சந்தேகமும் கிடையாது. சாஸ்திரப் பயிற்சி நமது, பயன்படத்தக்க, சுரங்கத்தொழிலுக்கு உதவி புரியவேண்டும்.

பொன் இமாலயபர்வதத்தின் சாரலில் மேற்கு கிழக்காய் உள்ள கற்பாங்குகளில் நூதனமாய் பிரகிருதி சம்பந்த வேறுபாட்டால் உண்டாகும் கற்களில் அகப்படுகிறது. பஞ்சாப்பில் எல்லா ஆறுகளிலும் நீர்ப் போக்குகளிலும் பொன் அகப்படுகிறது. அஸ்ஸாம் தேசத்தில் பொன் செறிந்த பூபாகங்கள் பலயிடங்களிலும் உள்ளன. ஏறக்குறைய எல்லா சிற்றாறுகளிலும் பொன் கற்கள் அகப்படுகின்றன. சுபன்சிரி, தெசோவி என்னும் ஆறுகளில் அபரிமித பொன்கற்கள் அகப்படுகின்றன. சோடா நாகப்பூரில் பெரும் பாகங்களில் பொன் கிடைக்கிறது. சிங்பூம் என்னுமிடத்திற்கு வடக்கிலும், மான்பூம் என்னுமிடத்திற்கு தெற்கிலும் மணலிலும் கற்களிலும் எரிபொருட் கற்களிலும், பொன் அகப்படுகிறது. சோன்பெட் என்னுமிடத்தில் நேர்த்தியான பொன் ரேகைகளுள்ள கற்கள் அகப்படுகிறது. தென்னிந்தியாவில் அதிக உயர்ந்த பொன் சுரங்கபாகங்கள் இருக்கின்றன. மலையாளத்திலும் வைனாட்டிலும் பெரிய கற்களிலிருந்து பொன் தோன்றுகிறது. இவ்விடத்தில் 510 சதுரமைல் விஸ்தீர்ண பொன் சுரங்கபாகம் உள்ள தென்று பிரக்ருதி பூசார சாஸ்திர நிபுணர்கள் அபிப்ராயப் படுகிறார்கள். ஆஸ்ட்ரேலியாவிலுள்ள பொன் சுரங்க பாகங்களைக் காட்டிலும் இப்பாகம் அதிக செல்வம் செறிந்ததாயும் விஸ்தீரணமாயும் இருக்கிறதாம். பிரசித்தமான கோலார் பொன்சுரங்கத்தினுலேயே இன்னும் அநேக கண்டுபிடிக்கப்படாத பொன்சுரங்கங்கள் மைசூர் இலாகாவில் டார்வா ஜில்லாவில் இருப்பதாக நம்பிக்கை இருக்கிறது. இந்நம்பிக்கை, தினேதினே உண்மையின் உறுதிப்பாட்டை அடைகிறது. இப்போது மைசூர் மாகாணத்தில் வடகோடி தொடங்கி தென்கோடி வரையிலுமுள்ள கல்மேடுகளில் பொன்செறிந்த மணலும் கல்லும் விஸ்தாரமாயிருக்கிற தென்றும், கோலார் சுரங்கபிரதேசம் மேற்குறித்தபாகத்தில் ஒரு சிறுபகுதியே என்று சாஸ்திரிகள் கட்டுரை கழறுகின்றனர். மைசூர் மாகாணத்தில் மேற்கேயுள்ள பொன் சுரங்கப் பிரதேசம் அதிக விஸ்தீரணமானதென்றும் இன்னும் எவராலும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் மேற்கு கணவாய் மலைகளில் அடர்ந்த காட்டில் மூடப்பட்டிருக்கின்றனவென்றும் சொல்லுகிறார்கள். பம்பாய் இராஜதானியில் டார்வார் ஜில்லாவில் பொன் கற்றொடர்களில் அதிக உயர்வான பொன் கிடைக்கிறது. கடைசியாக இந்தியாவின் அநேக ஆறுகளில் பொன்மணல் அகப்படுகிறது. (தொடரும்)

---

ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். —திருக்குறள்.

## பத்திரிகை என்ற கற்பகவிருக்ஷம்

**ஸ்ரீ சாலிவாடிபுராதீனம் தர்மப்தியவர்கள்.**

இங்கு சபை என்பது கற்பகவிருக்ஷத்திற்குச் சமானமாகச் சொல்லப்படுகிறது விருக்ஷமென்றதற்கு வேர், கிளை, தளை, மலர் முதலியவை உறுப்புலக்ஷணங்களாகும். தென்றல் இளங்காற்று வீசுவதும், வண்டுகள் மொய்ப்பதும் விருக்ஷத்தினிடங் காணப்படும் சபையை விருக்ஷமாகவும், சபையில் த்வனிக்கப்படானின்ற வேதங்களைக் கிளைகளாகவும், அதில் விவகரிக்கப்படாநின்ற சாஸ்திரங்களை மலர்களாகவும், சபையை அலங்கரித்திராநின்ற வித்வாம்சர்களை மதுரசங்களைக் கிரகித்து ரஞ்சித நாதத்தைக் கொடுக்கும் வண்டுகளாகவும் வர்ணித்திருக்கிறது. அப்பேர்ப்பட்ட விருக்ஷம் எத்தன்மைத் தெனில், விகசிப்பதும் சுருங்குவதும் தளிர்வதும் வாடுவதும் ஒரே குணாசத்தை இயல்வதுமான சாமான்ய விருக்ஷங்களைப் போலல்லாது தெய்வீகத்தன்மை பொருந்திய கற்பகத்தருவேயாகும். இதனால் சபை என்றதும் தெய்வீகத்தன்மை பொருந்திய தென்பதாம். மானிடவர்க்கத்தைத் தவிர ஏனைய ஜீவராசிகள் கூடுவதைக் கும்பலென்றும், மந்தை யென்றும், கோர்வை யென்றும், கூட்டமென்றும், அந்தந்த வர்க்கத்திற்குரியபடி இழிவுபடுத்திச் சொல்லப்பட்டது. மானிட கோடிகளிலும் முகக்கண்காக்ஷி பெறுவதற்கு மாத்திரமாயும், வேடிக்கையாயும், பொழுது போக்காயும், கூடியிராநின்றதற்கு கூட்டமென்றே பேர் பொருந்தியது. ஆனால், சத்விஷயபரியாலோசனைக்காகவோ, தெய்வ வந்தனை வழிபாடு செய்வதற்காகவோ, அரசாக்ஷியைத் தளராது வகிப்பதில் மந்திராலோசனை செய்வதற்காகவோ, வேதாதி நூல்களைச் சிரவணபடன மனன சம்பாஷியம் செய்வதில் நிற்பதற்காகவோ, ததாம்ஸங்களை ஆராய்ச்சி செய்வதற்காகவோ, தேவலாய நகாகுடிஜன சுகாதார விதிகளை விளக்கிவைப்பதற்காகவோ கூடுவதற்குச் சபை என்ற நாமகரணம் மகுடகரமாகும். அப்பேர்ப்பட்ட சபை கற்பகத்தருவென்று உவமிக்கப் பெற்றதானல், அந்த கற்பகத்தருவைத் திருஷ்டிக்க நாமெல்லோரும் பிரீதி அடைவோமல்லவா?

அந்த கற்பகத்தரு பிரபஞ்சத்திலுதித்து விளங்காநின்றுள்ளதைத் தெளிவு படுத்தப்போகிறோம் யாதெனில், ஆங்கிலேய தேசத்திற்கும் இப்பாரத கண்டத்திற்கும் சார்வபௌம சக்ராதிபத்யம் பெற்றும், ஆழாதி சூழ்ந்த மண்டலங்களை வசீகரிக்காநின்ற செங்கோலைத் தரித்தும், மார்க்கைதமாநகர காந்தக்கற்கோட்டைக் கலசத்தின் மாக்ஷிமையைக் கவளீகரித்துள்ள குடையைத் தாங்கியும், ராஜரீகம் பெற்ற இங்கிலாண்டிலுள்ள சக்கிரவர்த்திகள் பார்லிமென்ட் ஸகா சபை என்ற கற்பகத்தருவைச் சார்ந்து எவ்வளவு பிரதாபகிரணங்களைப் பாவச் செய்திருக்கிறார்கள்!" மகாசபையும் அதற்கு நாயகமாய் நின்றுள்ள சக்ராதிபதியும் இருந்து ராஜரீகம் செய்வதின் பெருமை எவ்வளவு காம்பீரமாயிருக்கிறது! பின்னும் நமது தேசத்தில் நடை பெற்றுவரும் காங்கிரஸ் மகாசபையின் பெருமையையும் உதகரிக்கலாமன்றோ? இதனால் சபை என்ற கற்பகத்தருவைச்சாருவதால் அரிய காரியங்களைச்சித்தி பெறுவிக்கலாமென்பது தெளிவாகிறது.

இனி, நாம் நம் சமயாசாரங்களை யதாநிலைமைக்குக் கொண்டுவருவதான இஷ்டத்தைச் சித்தியாக்குவதற்கு ஓர் கற்பகத்தருவைச் சாரவேண்டிய காரணம் உள்ளதன்றோ! அந்த வெகு கால இஷ்டம் சித்தியாக இதோ கற்பகத்தருவைச் சார்ந்திருக்கிறோமென்று சொல்வதற்கு சந்தோஷமே. யாதொரு கற்பக விருக்ஷமாவது விஸ்வகர்ம மகாஜன சபையினின்று பிரகாசித்துவரும் ஸ்வஜாதீய பத்திரிகையேயாம். அங்ஙனம் உயரியதான பத்திரிகை இதோ நம்முன்னால் வந்து நிற்கிறது. பத்திரிகையைப் பெற்றுக் கண்ணுறுங்காலத்தில் அதிற் சொல்லாநின்ற ஸ்தலங்களுக்குச் சென்றும், அதிற் சொல்லாநின்ற கனதன கல்விமான்களைப் பார்த்தும், அதிற் சொல்லாநின்ற சபைகளில் நாம் ஒருவராக நின்றும், அதிற் சொல்லாநின்ற அரிய விஷயங்களால் நாம் லௌகீக பாரவாரங்களின் சுழற்சியினின்றும் விடுபட்டு ஒருவாறு சுகநிலைமையில் லயித்தும் வருகிறோம்.

மேலும், கற்பகத்தருவானது இஷ்டரூபத்தை அடையுமாப்போல், அது ஞானபோதகங்களை உணர்த்துங்கால் ஞானசாரியாராகவும், சுகாதார முறைகளை விளக்குங்கால் பண்டிதராகவும், பஞ்சகிருத்திய முறைகளை விளக்குங்கால் சிற்பகர்த்தாராகவும், குலோத்தாரண விஷயங்களை விவகரிக்குங்கால் வம்சாச்சாரியாராகவும், அந்தந்த காலத்திற்குத் தக்க காரியங்களை நிலைநிறுத்துவதற்கு அந்த காரியத்தின் குறைகுணவிசேஷியங்களைப்பற்றி பலர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரி



## விஸ்வப் பிராம்மணர் ஒழுக்கம்

சென்ற 29-3-15உயில் வெளிவந்த யாழ்ப்பாணத்து விச்சுவகர்மன் பத்திரிகையின் தலையங்கத்தினின்று இஃதெடுக்கப்பட்டது.

கொல்லன் உலைமூடில் ஊர் உலைமூடும் என்றபடி கண்ணாளராகிய விஸ்வப்பிராம்மணர்கட்கு நித்தியாக்கினியுண்டு. கொல்லனுக்குத் திரிகோணகுண்டம், தச்சனுக்குச் சதுஷ்கோணகுண்டம், கன்னனுக்கு யோனிகுண்டம், சிற்பனுக்கு சட்கோணகுண்டம், தட்டானுக்கு அட்டகோணகுண்டம். இது உலைமுகமென வழங்கிவரும். இந்தக் குண்டங்களில் சிருஷ்டித்தொழில் தொடங்கும்போது ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனஞ்செய்து தேவாராதனை செய்து மேற்சொல்லிய இடத்தைப்பெருக்கிச் சலந்தெளித்துப் பகவானே நான் தொட்டங்குங்கருமம் இடையூறின்றி முடியவேணும்; செய்விப்போனும் நற்பலன்களடையவேணுமென்று தியானித்துத் தொடங்கல்வேண்டும். இதுகளை நம்மவர்கள் விட்டுவிட்டு நித்திரையால் எழுந்தவுடன் மலசலவிசர்ச்சனம் தந்தசுத்திசெய்யாது புகையிலைச்சுருட்டுப்பிடித்துக்கொண்டும் கோபத்துடனும் விசனத்துடனும் வியாகூலப்பட்டுக்கொண்டும் கம்மாலையில் பிரவேசித்துத் தொழில் முயற்சி யிடுகிறார்கள். சிலர் கள்ளு முதலிய லாகிரிவஸ்து வுட்கொண்டும் மதுமாமிசபட்சணிகளாய்த் தொழில்முயற்சி செய்கிறார்கள். கம்மாலை என்னவென்பது இவர்களுக்குப் புலப்படுமாகில் இவர்கள் இந்த அநியாயம் செய்யமாட்டார்கள்.

கம்மாலையென்பது கம்மியர்களுடைய ஆலயமெனவும் கம்மாலை சிருட்டிக்கோவிலுமெனப்பொருள். இது அறியாது இவர்கள் செய்வதினுற் தொழில் விருத்தியில்லாதும் செய்யும் கருமங்கள் முடியாதும் இவருக்கும் செய்விப்போனுக்கும் விருத்திக்குறைவையுண்டாக்கும். சந்தியாவந்தனங்கூட அறியாதவர்க்கு ஆச்சாரிப்பட்டமேன்? இவர்கள் தங்களைக் கம்மாளரென்று சொல்ல வெட்கமில்லையா? இன்னும், ஊரவர்கள் நல்லநிலையில் வரவேணுமென்றெண்ணுது அவர்கள் கொண்டுவரும் பொருள் கவரும் எண்ணம் இவர்களுக்கு இருந்தால் எப்படி விஸ்வப்பிராமணராவார்கள்? "மறப்பினுமோத்துக்கொள லாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்". இவர்கள் தங்கள் கருமங்களைத் தவறவிட்டால் உலகசிருட்டி எவ்வகையாக நடைபெறும்? இவைகள் கல்வியில்லாமையினுல்தான் வந்தது என்று எண்ணுகின்றோம். "தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறுமறிவு". கல்வியிருந்தாற் சகல ஒழுக்கமும் வரும். "சாதித்தொழில் தனக்குத்தானே வருமாகில் எதுக்குநீர் சலிப்புற்றேங்குவது?" கல்வியிருந்தாற் கைத்தொழில் தானேவரும், யோக்கியம் வரும், நயிட்டிகமும்வரும். நமதுவம்சம் முற்காலத்திலிருந்த பெருமையினுலல்லவா சூரியபகவான் சூரபத்மா இராவணன் முதலியோர் விஸ்வகர்மாவின் புத்திரியையும் விவாகம்செய்தார். இப்போது காம்நடக்கும் நடையினுல் தாழ்ந்தவராகப் பாவிக்கின்றார். நாம் நயிட்டிகமில்லாததினுல் அச்சமாக ஒதுங்குகின்றோம்.

---

விக்குங்கால் தூதராகவும், தேசவர்த்தமானங்களைக் கூறுங்கால் ஒரு பொழுதில் அண்டங்களைச்சுற்றிக் கொண்டு வரும் கந்தர்வராகவும், இன்னும் பல நன்மைகளைக் கொடுக்கக்கூடிய நேசராகவும் பலிக்கின்றதன்றோ! இத்தகைய கற்பகத்தரு வாய்த்தபோது விஸ்வகர்ம சந்ததியாருக்கு ஏற்போற்றவேண்டியது விஸ்வகர்ம சந்ததியாருக்கு ஏற்போற்றவேண்டியது சமபடுங்கடமையேயாகும். கிடைத்தும் போற்றுவிடில் சமயாசாரபரிபாலனம் எந்தத் துறையினின்று உத்தாரணமாகும்? இத்தகைய ஸ்வஜாதீயப்பத்திரிகையை நம் விஸ்வகர்ம சமயத்தாரில் ஒவ்வொரு புருஷர்களும் ஸ்திரீகளும் வாசித்துக் கவனித்து நடப்பார்களேயானல், குலோத்தாரண இஷ்டசித்தியைப்பெறலாமென்று துணிவுகூறுகிறோம்.

---

மத்வ மதாச்சாரியரான ஸ்ரீ மத்வாச்சாரியார், சுமார் 800 வருஷங்களுக்கு முந்தி தென்னிந்தியாவில் உடுப்பிக்கடுத்த பாஜக க்ஷேத்திரத்தில் மத்யகேய பட்டரென்ற ஒரு பிராம்மணருக்கும் அவருடைய தர்ம பத்தினிக்கும், குமாரராகப் பிறந்தார். அவர் தத்துவ ஆராய்ச்சியிலும் பரோபகாரஞ் செய்வதிலும் காலங் கழித்துவந்தார். பிறகு அவர் தம் 79-வது வயதில் ஜனங்களின் கண்ணுக்குத் தெரியாமல் ஹிமயமலையில் மறைந்துபோனர் என்று சொல்லப்படுகிறது. அவர் மறைந்துபோன தினம் மகா சுத்த நவமி. வருடந்தோறும் மகா சுத்த நவமிதினத்தை இந்தியாவிலுள்ள மத்வ வகுப்பைச்சேர்ந்த வைதிக லௌகீகர்களில் பலர் நிரம்ப விமரிசையுடன் கொண்டாடிவருகிறார்கள்.

## மடாதிபதிகளின் கடமைகள்

டின்னூர் ஸ்ரீ T. தங்கவேல் ஆச்சாரியார்,

நமது விஸ்வகர்மகுல மேம்பாட்டினை மிகவும் கருதி, அறைதற்கரிய பெரிய விடயங்களோடு உலாவி நம்மனோர்க்குப் புத்தி புகட்டும் விஸ்வகர்மன் பத்திரிகையின் 1914 ஆம் டிசம்பர்மாத சஞ்சிகையில் "நமது மடங்கள்" எனத் திருமகுடமிட்டு பத்திராதிபரவர்கள் எழுதிப் பிரசுரித்திருக்கும் அபிப்பிராயங்களை வாசித்துணர்ந்ததின் பின் அடியேனது அபிப்பிராயங்களை ஈண்டுரைக்கலாயினன்.

(1) மடாதிபதிகள் மதகுருக்களாவர்; ஜாதியின் உற்பவ விஷயங்களையும், பூர்வாசாரக் கொள்கைகளையும், தேசாசார வர்த்தமானங்களையும், சிஷ்யோபதேசங்களையும், சாஸ்திராப்பியாஸங்களையும், குலதர்ம போதனைகளையும், சத்கர்மானுஷ்டானங்களையும், குலோத்தாரணத்தையும் கொண்டுள்ளவரைத்தான் மதகுருவென்று சொல்லலாம்.

(2) காயசித்தி பெறுதற்கான ஞானோபதேசங்களையும், பிரம்ம ஐக்கியத்திற் குரித்தான பிரம்ம ஞான போத அனுபூதி முதலான மார்க்கங்களையும் போதிக்கக்கூடியவர் ஞானகுரு, ஞானாசாரியர் எனப்படுவர்.

(3) சோடச கர்மங்களையும் வித்தியாபிவிர்த்திகளையும் வம்ஸ உற்பவக்கோட்பாடுகளையும் உடையவர் கர்மாசாரியரெனப்படுவர்.

(4) மந்திர தந்திர யந்திரங்களினாலும் சாமபேத தான தண்டங்களினாலும் மயக்கித் தன் வயப்படுத்தி தன்னை குருவாக மதிக்கவேண்டுமென்றும் தானே மத குருவென்றும், போத குருவென்றும், ஞான குருவென்றும், கர்ம குரு வென்றும் சொல்லக்கூடியவர்கள் ஆசாரிய ஸ்தானத்திற்கு எவ்வளவு பொருந்தினவர்களாவர் என்பது ஒவ்வொருவரும் யோசிக்கவேண்டிய விஷயமாகும்.

(5) ஆசாரிய ஸ்தானத்திலுள்ளவர்கள் கிருஹஸ்தர்களாகவோ, சந்நியாசிகளாகவோ இருப்பதில் எது சிலாக்கியமென்பது கவனிக்கப்படவேண்டும் சென்னை இராஜதானியில் ஏற்பட்ட 13-14 மடங்களில் பிரதானமடங்கள் யாவை? அவற்றிற்கு சரித்திரங்கள் உண்டா? குலாபிமானங்கொண்டு குலத்தைச் சீர்திருத்தி சுயநலங் கருதாது பூர்வாசாரக் கொள்கைகளையும் வித்தையையும் அபிவிர்த்தி செய்து குலத்தை முன்னேற்றினவர்கள் இன்ன மடத்தார் என்பதையும், அவர்கள் பரம்பரை ஆதீனம் முதலான வரலாறுகளையும், அவற்றின் உற்பத்தி காலங்களையும் அறிந்தவர்கள் இப்பத்திரிகை மூலமாய்த் தெரிவித்து உலக பூஜிதராவார்கள் என்று நம்பியுள்ளேன்.

(6) அக்கினிஸ்தம்பனம், வாயுஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம் முதலானதிலும், வசியம், மோகனம், தம்பனம், மாரணம், ஆகர்ஷணம், வித்வேஷணம் முதலானவைகளிலும் மாத்திரம் பிரபலஸ்தர்களாயிருந்து, வேதாகம தர்க்க மீமாம்ஸ இதிகாச புராணாதிகளை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து அறிவிலார்க் கறிவூட்ட மனம் நாடாது, தற்போத மடைந்து குலோத்தாரண சிந்தையின்றி சிஷ்யர்களாயமைந்துள்ள பாமர ஜனங்களை ஏமாற்றி ஜீவிக்கும் குருக்களால் குலத்திற்கு யாதொரு நன்மையுண்டாகாது. இத்தகையோர் நம்மிலுண்டாவென்பது ஆராய்ந்தறிந்து கொள்ளப்படவேண்டும்.

II. நான் மேற்கே சென்றிருந்த காலத்து தெரியவந்தனவற்றை ஈண்டுரைக்கலாயினேன். மேற்கே மலையாள பிராந்தியங்களில் ஒருவகை இழிகுலத்தாருளர். அவர்கள் தேர் திருவிழாகாலங்களில் வீதியில் வரலாகாதாம்; கோவிலுக்குள் செல்லவுங்கூடாதாம். அன்னவர்கட்கு குரு (சாமியார்) ஒருவருண்டாம், அவர் அவ்வகுப்பினர் மதுபான முட்கொள்ளலாகாதென்று "மதுவிலக்கு சங்கம்" ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலமாய் 'மதுவை அருந்தலாகாது, மீறி நடப்பவர்கள் ரூ 50 அபராதத்திற்கு உள்ளடங்கி நிற்கவேண்டியது" என்று கண்டித்துப்பேசி முடிவு செய்ததின் பயனாய் அவர்கள் அது முதல்

அறிவை யழிக்குஞ் செயலழிக்கு
மழியாமானந் தனையழிக்குஞ்
செறிவு மறிஞர் மதியாத
செறுக்கை விளைக்கு மீன்றாளு
முறியும் வெறுப்பு மிகவிளைக்கு
முனிவு விளைக்கும் பகையஞ்சாக்
குறிகள் விளைக்கு நகைவிளைக்கும்

மதுபானத்தை உட்கொள்ளுவ தில்லையாம்.

III. பேய்வணக்க விலக்குச் சங்கம்.

இத்தென்தேயத்தில் சாத்தான், எசக்கி, மாடன், சுடலை, கருப்பு முதலான சிறு தெய்வங்களைச் சகல மதத்தினரும், பங்குனிமாதகாலத்தில், ஒவ்வொரு குடும்பமாயும், எல்லோரும் சேர்ந்தும் ஆராதிப்பது வழக்கம். (இது மிகக்கோரக்காக்ஷியாகும்: வைஷ்ணவர்கள் மேற்குறித்த சிறு தெய்வங்களை வணங்குவதைக் காணோம்.)" இதை நிறுத்துவது அத்தியாவஸ்யமாதலால் பேய்வணக்க விலக்குச் சங்கமொன் றேற்படுத்தி எவரும் இக்கோர பூசை செய்யலாகாதென்றும், மீறி நடப்பவர்கள் 50 ரூபா அபராதம் கொடுப்பதற்கு உள்ளடங்கவேண்டும் என்றும் கையொப்பம் வாங்கி அந்த முறையை அமுலுக்குக் கொண்டுவந்ததினிமித்தம், அவர்கள் சில விடங்களில் சிறு தெய்வ வழிபாட்டைத் தவிர்த்து, கல்வியில் கவனம்வைத்துக் கற்று, சுமார் 15 பேர் B. A. முதலிய பட்டங்கள் பெற்று மேலான உத்தியோகபதவி பெற்றிருக்கின்றனர்களாம். குழந்தை பிறப்பதற்குமுன் குண்டுசாமியைக் கும்பிட்டு வந்தவர் இப்போது கும்பிடுவதில்லையாம். புழக்கடை சாமியைப் பூஜித்தவர் இப்போது பூஜிப்பதில்லையாம். அவர்களை ஆராதிக்க ஆண்பிள்ளைகளை அலக்கழித்த ஸ்திரீகள் இப்போது அலக்கழிப்பதில்லையாம். மாடன், மூக்கன், எசக்கி, சப்பாணி என்று நாமமிட்டுவந்தவர்கள், மார்க்கசகாயன், சந்திரசேகரன், கனகாம்புஜம், நீலாயதாக்ஷிமுதலிய திருநாமங்களிட்டுத் திருப்தியடைந்து வருகிறார்களாம். சில விடங்களில் தாமிழந்துள்ள பாத்தியதையை அரசாங்கத்தாராலடைந்து வருகிறார்களாம். சகோதரர்காள்! கவனித்தீர்களா குருக்களால் குலம் குதூகலமுற்று உன்னத பதவியுற்று விளங்குவதை? இப்படி மற்றவர்களுடைய குருக்கள் அந்தந்த குலச் சீர்திருத்தத்திற்கான கட்டுப்பாடுகளைச் செய்து வருவதுபோல், நமது குலச் சீர்திருத்தத்திற்கான ஏற்பாடுகள் யாவையெனக் கண்டு நமது குல குருக்கள் ஏன் செய்யலாகாது?

---

சீனர்களுள் ஒருவன் மற்றொருவனைக் கண்டவுடன் அவனவன் தன்தன் கைகளையாட்டி முறுக்கித் தோள்களில் தேய்த்துக்கொள்ளுவான்; பின் மற்ற க்ஷேம லாபங்களை விசாரிப்பான். பர்மாவில் ஒருவன் மற்றொருவனைக் கண்டவுடன் அவன் முகத்தை முகருவான். முகம் நறுமணம் வீசுவதுபோலும், அதற்காக அதனை முகர்வதாகவும் அவன் நடிப்பான். ஆஸ்டிரேலியாவிலுள்ள சுதேசிகள் ஒருவரையொருவர் காணும்பொழுது நாக்கை நீட்டிக்கொள்ளுவார்கள்.



## ஏன் மாம்ஸம் சாப்பிடுதல் கூடாது?

[இது 'க்ரேதாயுக தூதன்'("Herald of the Golden Age") என்னும் ஆங்கில மாதப்பத்திரிகையின் பிரதமத்தலைவரான விட்நி பேர்டு அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட துண்டுப்பத்திரத்தின் மொழிபெயர்ப்பு].

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே.
கொல்லா விரதங் கொண்டவரே நல்லோர் மற்
றல்லாதார் யாரோ? அறியேன் பராபரமே.
எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

1. மாம்ஸ ஆகாரம் மனிதனுக்கு இயற்கையானதல்ல; அவனது இயற்கைக்கு விரோதமானது. நமது பிரபல வைத்தியர்களும் தாவரசங்கம சாஸ்திரிகளும் நமது சரீர அமைப்பு பழவர்க்கங்களைச் சாப்பிடுவதற்குரியதென்றும், மாம்ஸ பட்சணஞ்செய்யும் பிராணிகளின் சரீர அமைப்புக்களை ஒத்திருக்கவில்லை யென்றும் ஒருங்கே கூறுகின்றனர். ஆதலால், பிராணிகளின் மாமிஸத்தைச் சாப்பிடுவது நம்மைச் சிருஷ்டித்த கடவுளின் நோக்கத்திற்கும் விருப்பத்திற்கும் மாறாயிருக்கின்றது. ஒவ்வொருகாலத்தில் தோன்றி இவ்வுலகத்தை அலங்கரித்த தத்வஞானிகளின் உபதேசங்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

2. மாம்ஸ ஆகாரம் மனிதனுக்கு அநாவஸ்யகமானது. மனித ஜாதியாரில் பாதிப்பேர் மாம்ஸம் சாப்பிடுவதில்லை. (ஸ்பார்ட்டானியர், ரோமர், அரபியர், ஜப்பானியர் முதலிய) பெருஞ் சக்திவாய்ந்த அநேக ஜாதியார் மாம்ஸம் சாப்பிடாதிருந்தனர். இப்பொழுதுங்கூடச் சரீரவன்மையில் மேம்பட்டவர்களென்று உலகத்தில் பிரசித்தி பெற்றுள்ள பலர் சாகபட்சணிகளே யாவர். (கலியுக வீமஸேனன் என்று உலகமெங்கும் பிரக்யாதி பெற்றுள்ள ராமமூர்த்தி ஸாகபட்சணியே யன்றோ?) அமெரிக்காவிலுள்ள எல் (Yale), ஹார்வார்டு (Harvard) சர்வகலாசாலைகளில் பண்டிதர் சிட்டெண்டென், இர்விங் பிஷர் (Prof: Chittenden & Irving Fisher) முதலியோரும், லண்டனில் பிரசித்திபெற்ற டாக்டர் ஜோஸயா ஓல்டுபீல்டு அவர்களும், பிரஸல்ஸில் சர்வகலாசாலை அதிகாரிகளும் இது சம்பந்தமாகப்

பரிசோதனைகள் செய்து பார்த்தனர்; மாம்ஸ ஆகாரமின்றி, பால், பழவர்க்கங்கள், தான்யவர்க்கங்களென்னுமிவற்றைச் சாப்பிடுவோர் மிகுந்த ஸௌக்யமும், மிகுந்த சக்தியும் கஷ்டங்களைப் பொறுக்கும் ஆற்றலும் உடையவர்களாக விருக்கின்றனரென்று அவர்கள் உறுதி செய்தனர். முற்காலத்தில் பலவேறு மனோ முயற்சிகளையும், சரீர முயற்சிகளையுங் கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மேதாவிகள் கூறியுள்ள உண்மைகளும் இவ்விஷயங்களை உறுதிப்படுத்துகின்றன.

3. மாம்ஸ ஆகாரம் ஸரீர ஸௌக்யத்திற்குப் பாதகமாயுள்ளது; அஃது அபாயகரமாயு முள்ளது. நமக்குண்டாகும் அநேக கொடிய வியாதிகள், பிளவைகள், சூலை, வாதரோகம், Bright's Disease, (ஒருவகை மூத்ரரோகம்), க்ஷயரோகம் முதலியன மிருகங்களின் சரீரங்களைச் சாப்பிடுவதன் நேரான பயன்களாகும். மிருகங்கள் பெரும் பான்மையும் பற்பல வியாதிகளை யுடையனவா யிருக்கின்றன; அவை சுகஜீவியாயிருக்கும்பொழுதுங்கூட எப்பொழுதும் நவாச்சாரவாயு முதலிய விஷவஸ்துக்கள் கலந்தனவாகவே யிருக்கின்றன. இதனால் அவற்றைக் கொன்று புசிப்போர்க்கு மேற்கூறிய வியாதிகள் சம்பவிக்கின்றன. இங்கிலாந்திலுள்ள ஆடுமாடுகளுள் 100-க்கு 50 க்கு மேற்பட்டவை (Tubercles) மணிக்குடல் ரோக முள்ளவையாயிருக்கின்றன; சிலந்திப் புண்கள், (பிளவை) ஆந்த்ராக்ஸ, கால் நோய், வாய் நோய் முதலிய பற்பல வியாதிகளுள்ளனவாயு மிருக்கின்றன. பற்பலவிதமான புழுக்களும் உண்ணிக்களும் அவற்றின் சரீரத்தின்மீது வசிக்கின்றன. மிகப்பெரிய பட்டணங்கள் தவிர (அங்கும் சரியாய் நடப்பதில்லை) மற்ற விடங்களிலெல்லாம் டாக்டர்கள் மாமிச பரிசோதனை செய்வதில்லை. பொதுஜனங்கள் இவற்றை யெல்லாம் அறியாமையால், எச்சில் போன்ற மாமிசங்களைத் தின்றுகொண் டிருக்கின்றனர்; தங்கள் குழந்தைகளுக்கும் இவற்றைச் சாப்பிடுமாறு கொடுக்கின்றார்கள்; அதனால், மிகுந்த கேடுகள் சம்பவிக்கின்றன.

4. Dipsomania (இருதய ரோகம்) என்னும் கொடியவியாதி உண்டாவதற்கு மாமிச பட்சணமே முக்கியகாரணமாயிருக்கிறது. மாமிச பட்சணமில்லாத நாடுகளில் குடி மிகுதியாயில்லை. பழவர்க்கங்களையுண்டு வாழும் சாகபட்சணிகள் மதுபானஞ் செய்வது மிகுதியாயில்லை; டிப்ஸ மேனியா வியாதி யுள்ளவர்கள் பழவர்க்கங்களை மாத்திரம் உண்டு ஜீவிப்பதால், டை வியாதிபோய் விடுகின்றதென்று இரட்சணிய சேனையைச் சேர்ந்தவர்கள் கண்டு பிடித்திருக்கின்றார்கள்.

5. நமது வறுமைக்கும் குற்றங்களுக்கும் முக்கிய காரணம் குடிமுதலிய கெட்ட வழக்கங்களேயாம். இவற்றை அநேக ராஜதந்திரிகளும் சாஸ்திரிகளும் உறுதிப்படுத்துகின்றார்கள். அதனால், இவ்விதத் தீமையெல்லாம் வாராமல் பாது காக்குமாறு ஆகாரத்திருத்தம் செய்யவேண்டியது அவஸ்யமாம். உற்சாகத்தை மிகுதியும் உண்டாக்கக் கூடியனவல்லாத கிழங்குகள், கொட்டைகள், பருப்புகள், கோதுமை, அரிசி, பயறுகள், பல வகையான பழவர்க்கங்கள், பால், பாற்கட்டி, மோர், தயிர் முதலிய சத்தான வஸ்துக்களைச் சாப்பிடுவோருக்குக் குடிக்கவேண்டு மென்னும் ஆசையுண்டாவதில்லை.

6. மாமிச ஆகாரம், தன்னைச் சாப்பிடுகின்றவரை முரட்டுக்குண முள்ளவர்களாயும், அடிக்கடி சண்டையிடுஞ் சுபாவ முள்ளவர்களாயும், ரத்தப்பிரிய முள்ளவர்களாயும் ஆக்கிவிடுகின்றது; ஆனால் சாகபட்சணம் செய்யும் ஜாதியாரோ எக்காலத்திலும் சமாதானமும் சாதுத்தன்மையுமுள்ளவர்களென்று பேர் பெற்றிருக்கின்றார்கள். இப்பொழுது மீட்டும் உலகத்தார் மனிதருக்கு இயற்கையான சாகபதார்த்த உணவைக் கொள்ளின், உலகத்தில் யுத்த விருப்பம் அடியோடொழிந்துபோம். சாகபதார்த்த உணவையே யாவரும் உண்டு வந்தால். அஃது இனி வரப்போகின்ற சர்வ ஜீவ ஐக்கியமும் சகோதரத்துவமும் பொருந்திய புதிய காலத்தை விரைவில் வருமாறு செய்யும்.

7. மாமிச ஆகாரம் சாப்பிடுவதால் ஒவ்வொரு தேசத்திலும் தினந்தோறும் குறைந்த பட்சம் சுமார் 10-லட்சம் பிராணிகள் (ஈவிரக்கம், ஜீவகாருண்யம், என்னு மிவையின்றி) கொடுமையாகக் கொலை செய்யப்படுகின்றன. அதனால் வாயில்லாப் பிராணிகளுக்குக் கொடுந்துன்பமும் துயரமும் ஏற்படுகின்றன. அத்தகைய கொடுவதைக்கும், துன்பத்திற்கும் ஏதுவான மாமிஸ பட்சணம் முற்றிலும் அநாவஸ்யகமாம். தெய்வ நீதியின்படி மாமிஸபட்சணம்செய்வது நியாய முள்ளதாகாது. மாமிஸபட்சணம் ஜீவகாருண்யத் தன்மைக்கும் உண்மையான மத நீதிகளுக்கும் முரணானதாம். (ஆடுமாடுகளைத் தினந்தோறும் ஆயிரக்கணக்காகக் கொன்று புசித்து வருவதால், ஆடு மாடுகள் க்ஷீணதசையடைந்து வருகின்றன; அதனால் தேசத்தில் வியவசாயத் தொழிலுக்குக் கஷ்டம் நேரிடுகின்றது; பால், மோர், நெய் முதலியன கிடைப்பதும் கஷ்டமாகின்றது).

8. மாம்ஸ பட்சணஞ்செய்யும் வழக்கம், ஆயிரக்கணக்கான ஸ்திரி புருஷரும் சிறுவர்களும் மிருகங்களை நினைக்கக்கூடாதவண்ணம் கொடுமையாக வெட்டிவதை செய்தல் முதலிய கேவலமான வேலைகளைச் செய்வதால், அவர்களைக் கேவலமானவர்களாயும் கொடுமையான மிருகத்தன முள்ளவர்களாயும் செய்து விடுகின்றது. அஃது அவர்களது பின்சந்ததியாரிடத்திலும் பெருந்தீமைகளையும் கொலைப்பாதகத் தன்மையையும் உண்டுபண்ணுகின்றது. அதனால் அது பொதுவாக ஜனசமூகத்திற்கே மிகுந்த கஷ்டத்தையும் நஷ்டத்தையும் உண்டு பண்ணுகின்றது.

9 இயற்கையானதும் மாமிசபட்சண மல்லாததுமான (சாகபதார்த்த) ஆகாரத்தைக் கைக்கொள்வது வியவசாயத் தொழில்முயற்சி மிகுதியாகச் செய்யும்படி செய்வதற்குக் காரணமாகின்றது. ஆடுமாடுகளை வளர்ப்பதைவிட, நிலத்தில் கனிவர்க்கங்கள் தரும் விருக்ஷஜாதிகள், பல வகைத் தானியங்கள், காய்கறிகள் முதலியன ஆகும்படி செய்வதில் மனிதர் முயற்சிசெய்தால், அதனிலும் எட்டு மடங்கு மிகுதியான லாபம் கிடைக்கும். இதனால், இப்பொழுது வரவரப் பயங்கரமாக நாட்டுப்புறங்களில் ஜனங்களின்வாசம் குறைந்து வரும் கேடும், பட்டணங்களில் மூச்சுவிடவு மிடமின்றி ஜனக்கூட்டமிகுதியாகிக்கொண்டுவரும் கேடும் நிவிர்த்தியாய்விடும். (பூமிதிருத்தியுண் என்னும் ஆன்றோர் நீதியின்படி) மீட்டும் பூமியை நாடுதலேற்படுமாயின், அது சோம்பேறிகள் அயோக்கியர் முதலிய தாழ்ந்த வகுப்பாரின் கஷ்டங்களையும் நமது ஜாதியாரின் சீரழிவையும் நிவிர்த்திசெய்வதற்குத் தக்கவழியாகும். இதனால் ஆகாரத்திருத்தம் ஒவ்வொரு ஜாதியாரும் முன்னிலையடைவதற்கு அவஸ்யமாக விருக்கின்றது.

10. மாம்ஸ ஆகாரம் மனிதனது (ஆத்ம) ஞான வளர்ச்சியையும் அபிவிர்த்தியையும் தடைசெய்கின்றது. அஃது அவனை ஸ்தூல சம்பந்தமான சிந்தனையையும் ஞானத்தையும் கொண்டிருக்குமாறு செய்துவிடுகின்றது; அதனால் அவனைக் கொடுமையுள்ளவனாகவுஞ் செய்து அவனது ஞானதிருஷ்டியை மறைத்துவிடுகின்றது. ஆதலின், இந்த ஆகாரத்திருத்த முயற்சியைச் சகல மதாபிமானிகளும் பரோபகார சீலர்களும் சிந்தித்து ஆதரிக்கவேண்டுவது அவஸ்யமாம்; ஏனென்றால், அஃது எம்மதத்திற்கும் சம்மதமான ஜீவகாருண்ணிய நிலையை அடைவதற்குப் பெருந்தடையாயுள்ள கொலைப்பாவத்தை நிவிர்த்தி செய்கின்றது.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

லோகோபகாரி.



## கலிங்க நாடு.

ஸ்ரீ கா. திருவேங்கட ஆச்சாரியார், சென்னை

பரதகண்டமென்று பெயர் புனைந்த இவ்விந்தியாவின் கண்ணே பூர்வம் இந்துக்கள் அரசாண்டகாலத்து இந்நாடானது ஐம்பத்தாறு தேசங்களாகத் தொகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் தனித்தனியே இந்து அரசர்களான ஆரியர்களால் ஆளப்பட்டுவந்த தென்பது புராணங்களினாலும் சிலாசாசனங்களினாலும் மற்றவற்றாலும் விளங்குகின்றது. இவ்வைம்பத்தாறு தேசங்களுள் கலிங்கதேசமும் ஒன்று. இத்தேசத்துத் தென்பாரிசத்தெல்லையானது கிருஷ்ணா ஜில்லாவிலுள்ள பெஜவாடாவிலிருந்து ஸ்ரீகாகுளம் வரையிலுங் கொண்டதென்று தொன்மை யாராய்ச்சிவல்லவர் பலர் கூறியிருக்கின்றார்கள். "தெலுங்கு" என்னும் பதமானது "கலிங்கம்" என்னும் பதத்திலிருந்தும் "தெலிங்கானா" என்னும் பதமானது, "த்ரிலிங்கம்" என்னும் பதத்திலிருந்தும் பிறந்தனவென்றுஞ் சொல்லப்படுகின்றன. சென்னை ராஜதானி நிருவாகத்தைப்பற்றி மிஸ்டர் மக்லீன் என்ற ஆங்கிலபாஷா நிபுணர் எழுதியுள்ள நூலில் மேற்சொன்ன விரண்டிலையும் மறுத்து தெலுங்கு (தெலுகு) என்றபதத்திற்கு 'தெளிந்த பாஷை' என்று அர்த்தங்கூறியிருக்கிறார். புராதன கலிங்க ராஜ்யத்தில் அடங்கியுள்ள தேசங்களை இப்போது குறிப்பிட்டுச் சொல்ல முடியாதெனினும், கிருஷ்ணாநதியை ஒரெல்லையாகவும் ஒரிஸ்ஸாவை மற்றொரெல்லையாகவும் கொண்டு இவ்விரண்டிற்கும் மத்தியிலுள்ள ஊர்களனைத்துமே பண்டைக்காலக் கலிங்க தேசமெனச் சொல்லலாம். நெல்லூர் ஜில்லா மான்யூலில் தெலிங்கானாவென்னும் பதத்திற்கு த்ரிலிங்கம் அல்லது சாமான்யமக்கள் பயிலுந் தெலுங்கு என்று அர்த்தங் குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், மிஸ்டர் ப்ரௌன் என்ற மற்றோ ராங்கிலபாஷா துரந்தார் த்ரிலிங்கமெனும் உரிச்சொல்லினின்றும் பொதுவிலக்கண வதிகாரத்தை யொட்டி திலிங்கவெனும் பதம் ஏற்பட்டதென்றும் அதனையே ஜனசமூகத்தார்கள் 'தெலிங்கா" வென்று வழங்கிவருகின்றார்கள் என்றும், குறிப்பிட்டுள்ளார். சிவபிரானைக்குறிக்கும் அடையாளமான மூன்று லிங்கங்கள் ஆவிர்ப்பவித்துள்ள தேசத்திற்கு த்ரிலிங்கம் என்றபெயர் வழங்கப்பட்டிருக்க வேண்டும். நாம் மேலே காட்டிய எல்லைக்குட்பட்ட நாடே லிங்கஸ்வரூபமாய் எழுந்தருளியிருக்கும் மூன்று குன்றுகள் கொண்டிருக்கிறது. அவற்றிற்கு முறையே ஸ்ரீசைலம், காளேஸ்வரம், பீமேஸ்வரம் எனப்பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இஃதுண்மையாயின் பாதி கர்நூல் ஜில்லாவுக்கும் கோதாவரி ஜில்லாவுக்கும் மத்தியிலுள்ள பிரதேசமே தெலுங்கு தேசமாக வேண்டும். இப்பிரதேசத்துப் பெரும்பாகம் அடவியாயிருந்திருக்க வேண்டுமெனவும் எஞ்சிய சொற்பபாகத்தில் வசித்தோர் அக்காலத்தில் பேசிவந்த பாஷையிலிருந்து இப்பிரதேசத்திற்குப் பெயர் வந்திருக்கவேண்டுமென்றும் தெரிந்துகொள்ள இடமேற்படுகிறது.

## கும்பகோணம்
## விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ்

(1)

### உபசரணைக் கமிட்டி சேர்மன் பிரசங்கச் சுருக்கம்.

குலாபிமானச் செல்வர்களே !

தென்னிந்தியாவில் முதல் தடவையாகக் கூடிய இந்த மஹா சபைக்கு குலாபிமானத்தால் தூண்டப்பட்டு விஜயமாகி யிருக்கும் தங்களிடத்து மிகவும் நன்றி பாராட்டி, மனமார்ந்த வந்தனமளிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்நகரில் சற்றேறக்குறைய 2000 சுஜாதியர்களுண்டு. புராதனத்தில் குடந்தை நகர் பித்தளை வேலைக்கு பெயர் பெற்றது. காலக்கிரமத்தில் பொன், வெள்ளி வேலைகளிலும் பிரக்கியாதி யடைந்திருக்கிறது. இத்தொழில்களெல்லாம் வெறுங் கையினாலேயே செய்யப்பட்டு வருகின்றன. இயந்திர சகாயங்களைக் கோருபவர்கள் கொஞ்சமேயாவர். இயந்திர சகாயங்களைப் பெற எண்ணம் அதிகமிருந்தாலும், அதற்கு வேண்டிய கல்வித்தேர்ச்சியும், ஒற்றுமையும், மூலதனமும் இல்லாமையால் சுஜாதியார் எண்ணம் நிறைவேறாமலே போகின்றது. கூலிக்கட்டுப்பாடு இல்லாமையாலும், குறைந்தகூலிக்கு உடன்படுவதாலும் சுஜாதியார் வரும்படியும், கண்ணியமும் குறைந்து காட்டுகிறது. அந்நிய தேசத்திலிருந்து வரும் இனாமல், அலுமினிய சாக்குகளால் பூர்வீக பித்தளை முறிவேலைகள் தலையெடுக்கக் கூடவில்லை. தற்காலம் ஏற்பட்டிருக்கும் யுத்தத்தால் நமது வேலைகளெல்லாம் ஒழிந்தேவிட்டதெனச் சொல்லலாம். சில குடும்பங்கள் வறுமைக்காற்றாது வெளியூர்களுக்கு ஏகினர். நம்மனோர் ஆயுதங்கள் வேலையில்லாமையால் துருப்பிடித்து வருகின்றனவென்பது உண்மை வசனம். சிற்பசாஸ்திர விசாரணையிலும், மரவேலையிலும் முன்னர் ஒருவாறு கீர்த்திபெற்ற இவ்வூரில் அவ்வேலைகளைக் காண்பதுவும் அருமையாயிற்று.

உயர்தரக் கல்வியை அடைய காலேஜ்களும், ஹைஸ்கூல்களும் இந்த ஜில்லாவில் பல இருந்தும், அவைகளில் படிக்கும் சுஜாதிச் சிறுவர்கள் அதிகம் இல்லை. இந்த ஜில்லாவில் ஹைஸ்கூல்களில் படிக்கும் சிறுவர்கள் சுமார் 15 பேர்களே ! காலேஜ் வகுப்பில் வாசிப்பவர்கள் ஒருவருமேயில்லை !! எலிமெண்டரி பாடசாலைகளில் வாசிப்பவர்களை தாராளமாக மதிப்பிட்டால் ஒரு நூறுக்குமேல் இல்லை.

இந்த ஜில்லாவில் ஆங்கிலேயக் கல்வியில் தேர்ந்த சுஜாதிப் பட்டதாரிகள் அதிகமில்லாவிட்டாலும் ஆங்கிலம் கற்றுத்தேர்ந்த சுமார் 15 கனவான்கள் வெளியூர்களுக்கு உத்தியோகமாகச் சென்றுவிட்டனர். எஞ்சிய சிறு பகுதியார் ஜில்லாவின் பலபாகத்திலுமிருந்து வருகின்றனர். உத்தியோக விருப்பத்தாலும், கைத்தொழில் வெறுப்பாலும் இவர்கள் வெளிச்சென்றது ஜில்லாவிற்கே பெருத்த நஷ்டமாகிறது. உள்ளூரிலேயே இருந்து நூதன கைத்தொழில்களில் இவர்கள் முயன்றிருந்து நம் சுஜாதியருக்கு வழிகாட்டிகளாயிருந்தால் நமது குலம் பல வருஷங்களுக்கு முன்னரே நல்வழிப்பட்டிருக்கும். என்றாலும், உத்தியோகங்களில் வெறுப்புக் காட்டக்கூடிய சமயம் இதுவன்று.

இக்கான்பரன்ஸ் கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த மற்றொரு காரியதரிசியாகிய P. V. A. சொக்கலிங்கப் பத்தரவர்களின் அகாலமரணத்தால் கான்பரன்ஸை யொட்டி ஏற்படுத்த எண்ணங்கொண்டிருந்த "எக்ஸிபிஷன்" என்னும் பொருட்காட்சியும் இல்லாமலேபோயிற்று.

T. K. சுந்தராச்சாரி.

(2)

### பிரசிடெண்டின் ஆரம்பப் பிரசங்கச் சுருக்கம்.

கனவான்களே !

சென்னை ராஜதானியில் பொதுவாக நமது ஜாதியர் கல்வியில் அதிக கவனம் செலுத்தி வருவதாகத் தெரியவில்லை. சென்னை சர்வகலாசங்கம் ஸ்தாபிக்கப்பட்டு சுமார் அறுபது வருஷங்களாகியும் இதுவரையில் நமது ஜாதியில் பன்னிரண்டு பி. எ. பட்டதாரிகளும், ஒரு பி. எல். பட்டதாரியும், ஒரு இஞ்சினீயரிங் பட்டதாரியும், ஒரு எம். டி. (டாக்டர்) பட்டதாரியுமே அந்த சர்வகலா சங்கத்தினின்றும் வெளி வந்திருக்கின்றனர். இவ்வருடம் பி. எ. பரீட்சையில் தேரிய இருவரையும் மேற்குறித்த தொகையில் சேர்த்துக்கொண்டிருக்கிறேன். சென்னை ராஜதானியில் சுஜாதிப் புருஷர்களின் சங்கியை சுமார் 2,80,000 இருந்தும் உயர்தரக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள் பதினைந்து நபர்களே யென்றால் இதனிலும் நமது வித்தியா ஊக்கக் குறைவை வெளிப்படையாகக் காட்டக்கூடியது வேறென்ன இருக்கிறது?



சகண்டெரி கல்வித்தேர்ச்சி பெற்ற சுஜாதியர்களின் தொகையாவது நமது ஜனசங்கியைக்கு ஏற்றவாறு அதிகமாக இருப்பதாகவும் காணப்படவில்லை. பிரைமரி கல்வி பயின்றவர்கள் அதிகமிருந்தாலும், இல்லாவிட்டாலும், அவர்களால் குலத்திற்கு மிகுந்த கீர்த்தி உண்டாகமாட்டாது. கல்வியபிவிர்த்தியில் நமது ஜாதியர் தற்காலம் மின்மினியையும், அன்னிய ஜாதியர் மின்சாரவிளக்கையும் ஒத்திருக்கின்றார்கள். எண்ணிறந்த மின்சார விளக்குகளினிடையில் சில மின்மினிப்பூச்சிகள் எங்ஙனம் சிறந்து விளங்கும்? இத்துணை பெரிய வித்தியாசத்திற்கு 'நமது வறுமை' என்னும் காரணம் ஒருபுறமிருக்க, நமது ஊக்கக் குறைவே மூலகாரணமாக இருக்கிறது. கல்வியபிவிர்த்தியை வரன்முறையாகவும், கிரமமாகவும் நம் சிறுவர்கள் அடையக்கூடிய சௌகர்யங்கள் நம்மிடத்தில்லை. அவ்வித சௌகர்யங்களை ஜாதிப்பொதுவில் ஏற்படுத்த நம் குலத்தினர்க்கு இதுகாறும் அக்கரை பிறக்கவில்லை. இந்தியாவில் உத்தியோக முறைமைகளிலும், வியாபாரத்துறைகளிலும் உன்னதம் பெற்றிருப்பவர்களெல்லாம், கல்விச் செல்வத்தை மிகுதியாக அடைந்த ஜாதியர்கள் அல்லவா? கல்வியின் மிகுதியாலன்றி நமது ஜாதிக்கு எவ்வித பெருமையும் சித்திக்கமாட்டாது. கல்வியோடு கூடிய கைத்தொழில் பொன்மலர் மணம் பெற்றதை ஒக்கும். கல்வியில்லா கைத்தொழில் உப்பிலா உணவை ஒக்கும் நம்மனோர் உத்தியோக பதவிகளை ஆசித்தாலும், கைத்தொழிலை நேசித்தாலும் கல்வியை பிரதமத்தில் அவசியமாக கைக்கொள்ளவேண்டும்.

நமது சுஜாதியரின் கல்வியபிவிர்த்தியை கண்காணிப்பதற்கென் சுஜாதிக் கல்விச் சங்கங்கள் ஒவ்வொரு கிராமங்களிலும், தாலுக்காக்களிலும், ஜில்லாக்களிலும் ஏற்படுத்துவது அவசியமாகும். அச்சங்கங்கள் தத்தம் ஊர்களில் படிக்கும் சுஜாதிச் சிறுவர்களைச் சரியாகக் கணக்கிட்டு, அவர்கள் வயது, பெற்றோர்களின்தொழில் வருமானம் முதலிய விபரங்கள் அடங்கிய ஜாப்தா தயார் செய்யவேண்டும். அவ்வித ஜாப்தாக்களை கிராம சபையார்கள் தங்கள் தாலுகா சபைக்கும், தாலுக்கா சபையார்கள் தங்கள் ஜில்லா சபைக்கும், ஆறுமாதத்திற்கு ஒரு முறை அனுப்பி வரவேண்டும். இவ்வித சபைகள் சகெண்டரி கல்வி கற்கும் சிறுவர்களை மட்டும் கண்காணிப்பது சுலபசாத்தியமாகும். உயர்தரக் கல்வியைக் கண்காணிப்பதற்கென தனிச் சபையொன்று சென்னையில் ஸ்தாபிப்பது நன்று. இச்சபை நமது சிறுவர்களின் வித்தியாபி விர்த்தி ஒன்றிலேயே நாட்டம் வைக்கவேண்டும். பல்வேறுபட்ட ஜாதீய விஷயங்களை உடன்கலந்து கொள்வதில் பல இடையூறுகள் நிச்சயமாகவே உண்டாகும். சுஜாதியர் ஒற்றுமையிழந்து பிளவுபட்டிருக்கும் எவ்வூரிலும் கல்வியாபிவிர்த்தியில் மட்டும் நோக்கம் கொண்ட இவ்வித தனிச் சபைகள் சுஜாதியரின் முழு அங்கீகாரத்தையும், ஆதரவையும் பெறும் என்பதில் ஓர் ஐயப்பாடுமில்லை.

இந்தியாவின் க்ஷேமத்தைக் கோரி தொழிற் கல்வியை சீர்திருத்தம்செய்து, அபிவிர்த்திக்கு கொண்டு வருவதில் கவர்ன்மெண்டாரும், வித்தியாபிமானப் பிரமுகர்களும் இப்பொழுது அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் வெளிநாடுகளுக்குச் சென்று தொழிற் கல்வியைக் கற்றுவர இந்தியச் சிறுவர்களில் சிலரை உபகாரச்சம்பளங்களுடன் வருடந்தோறும் அனுப்பி வருகிறார்கள். சென்னை மாகாண கவர்ன்மெண்டாரும் சில மாணவர்களை தொழிற் கல்வி கற்பதற்கு வெளி நாடுகளுக்கு அனுப்பி வருகிறார்கள். சென்னை நாஷனல் பண்டு சங்கத்தாரும் பலரை வருடந்தோறும் பம்பாய், ஜப்பான், இங்கிலாந்து முதலிய இடங்களுக்கு அனுப்பி வருகிறார்கள். இவர்களின் முயற்சிகள் மிகவும் நன்றி பாராட்டற்குரியவைகளே. ஆனால், இவர்களின் பிரயத்தினங்கள் இதுவரையில் தேசப் பொதுக்ஷேமத்திற்கு உதவியதாகத் தெரியவில்லை. இதுவரையில் வெளிநாட்டில் தொழிற்கல்வி கற்றுவந்த அன்னிய ஜாதியர் இந்தியாவிற்கு திரும்பி வந்தபின் செய்த வேலைகளென்ன? கைத்தொழில் ஞானமும், உரிமையுமற்ற ஜாதிச்சிறுவர்களை மேனாடுகளுக்கு தொழிற் கல்வி கற்க அனுப்புவதினால், நமது தேசம் சுபிட்ச நிலைமையை அடைந்து விடுமென நம்பியிருப்பது பிசகெனத் தோன்றுகிறது. இந்தியா ஜாதிக் கட்டுப்பாடுகளினின்றும், பிரதி பந்தங்களினின்றும் நாளையே விடுபட்டுப்போய் விடக்கூடியதன்று. இவ்வித பிரதி பந்தங்கள் உள்ளவரையில் அவரவர் தொழிலை அவரவரே செய்து வரவேண்டி வருமல்லவா? மேல்நாடுகளிற் சென்று மரவேலையில் அற்புத தேர்ச்சி பெற்று வந்த ஓர் பிராமண வாலிபர், ஒரு கிராம தச்சாச்சாரியைப்

போல் ஓர் வீட்டின் மேற் கூரையிலிருந்து மரவேலையை ஓர் பகல்முழுவதும் வெயிலில் அடிபட்டு, கூசாமல் செய்வாரா? பொன் வேலையை வெகு அற்புதமாகச் செய்யப் பழகிய ஓர் மகம்மதிய தொழிலாளியிடமிருந்து ஓர் பிராமணர் தமது குடும்பத்திற்கு வேண்டிய திருமாங்கல்யத்தை செய்து ஏற்றுக்கொள்வாரா?

மற்றெல்லா மாகாண கவர்ன்மெண்டுகளை விட சென்னை கவர்ன்மெண்டார் கைத்தொழிலபி விர்த்தியில் அதிக ஊக்கங் கொண்டிருக்கிறார்கள். தென்னிந்திய கைத்தொழில்களைச் சீர்படுத்துவதற்கென்று ஒரு நூதன தொழில்இலாகாவையும், அதற்கு ஒரு டைரெக்டரையும் நியமித்திருக்கின்றனர். சென்னை ராஜதானியிலுள்ள கைத்தொழில் பாடசாலைகளைக் கண்காணிப்பவரும் இவரே. இவ்வருஷம் கைத்தொழில் பாடசாலைகளில் பயிலும் சிறுவர்களுக்கென 199 உபகாரச் சம்பளங்கள் மாதம் ஒன்றுக்கு ரூபா 1½ யிலிருந்து ரூபா 9 வரையில் இவ்வருஷம் கொடுக்கத் தீர்மானித்திருப்பதாக இவர் விளம்பரப்படுத்திருக்கிறார். இவ்வித உபகாரச்சம்பளங்கள் நமது சிறுவர்களுக்கு கொடுக்கப்படுமென்று சொல்லப்பட்டிருப்பது உண்மையென்றாலும், அவ்வித உபகாரத்தைப்பெற்ற சுஜாதிச் சிறுவர்கள் சென்ற வருடங்களில் எத்தனை பேர் இருந்தார்களென்றும், இவ்வருடம் எத்தனைபேர் அடைய முன்வருவார்களென்பதும் தெரியவில்லை. நமது அநுபவத்தில் அவ்வித உபகாரச் சம்பளங்களைப் பெற்ற சுஜாதிச்சிறுவர்கள் அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் இவ்வித உபகாரச் சம்பளங்களின் பெரும்பாகம் அஞ்சுமான் மகம்மதியச் சிறுவர்களுக்கும், மிஷன்கள், ஆர்பனேஜ் கிருஸ்தவச் சிறுவர்களுக்கும், பஞ்சமர்களுக்கும் கொடுபட்டுப்போய் விடுகின்றனவென்று நாம் நம்பவேண்டியிருக்கிறது. அன்னிய நாட்டு தொழிற்கல்வி உபகாரச்சம்பளங்களோவென்றால், தொழில்பாத்தியதையும், பாரம்பர்யப் பழக்கமும் இல்லாத அன்னியஜாதி வெறும் வித்தியார்த்திகளுக்கு கொடுபட்டு வருகின்றன. தொழிற் கல்வி கற்பதற்கு உயர்தரக்கல்வி நிர்ப்பந்தமும், அன்னிய ஜாதிச் சிரேஷ்டமும் அவசியம்தானென்று கவர்ன்மெண்டார் புனராலோசனைசெய்து, சகெண்டரி அல்லது போதுமான ஆங்கிலேயக் கல்வித் திறமையுடைய நமது சுஜாதிச் சிறுவர்களை தேர்ந்தெடுத்து தொழிற்கல்வியை கற்பிக்கும் வசதிகளைச் செய்யும் நாளே இந்தியா கைத்தொழிலில் பிரகாசிக்கும் நாளென நான் திட்டமாய்ச் சொல்லுவேன். தற்காலம் தொழிற்கல்வி போதனாமுறைகளிலுள்ள மற்றொரு முக்கிய குற்றத்தையும் இங்கு எடுத்துக் காட்டவேண்டியிருக்கிறது. கைத்தொழிலின் தேர்ச்சி கைப்பழக்கத்தினால் வரவேண்டியது. கைத்தொழிலின் நுட்பங்கள் வெறும் வாய்ப்பழக்கத்தினாலும், புத்தகங்களினாலும் அடைதலும், அறிதலும் அசாத்தியம். இவ்விராஜதானியில் "ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ்" போன்ற தொழில் சம்பந்தமான பாடசாலைகளில் தொழிற்கல்வியை போதிக்கும் உபாத்தியாயருள் எத்தனைபேர் வேலையின் கைப்பழக்கத்தைப் பெற்றிருக்கிறார்களென்று கவர்ன்மெண்டாரும், தொழில் வித்தியா இலாகா தலைவரும், கைத்தொழில் அபிமானிகளும் கவனிப்பது அவசியமாகிறது.

நமது தென்னிந்தியாவின் புராதனக் கைத்தொழில்களை உயிர்ப்பிப்பதற்கோ, அல்லது அவைகளையொட்டி நூதன கைத்தொழில்களை விர்த்தி செய்வதற்கோ இப்பொழுது நல்ல சமயம் வாய்த்திருக்கின்றது. இவ்வித சமயம் ஒருவர் வாழ்நாளில் பலதடவை பெறுவது அருமை. அதாவது, தற்காலம் நேர்ந்துள்ள ஐரோப்பிய யுத்தமே. இந்த யுத்தகாரணத்தால் பல அன்னிய தேசச்சரக்குகளின் வரவு தடைபட்டுப்போயின. 1910 வருஷத்தில் மட்டுமே ஜர்மனி இரண்டுகோடியே ஐம்பத்தேழுலட்சம்ரூபாய் பொருமானமுள்ள பித்தளை, கண்ணாடி, இயந்திரம், விளையாட்டு சாமான்கள், இன்னும்பல தட்டுமுட்டுசாமான்களையும் இந்தியாவில் உட்புகுத்தியிருக்கின்றது. இப்படி திடீரென இச்சாமான்களின் வரவு நின்றுவிடவே, அன்னியதேசச்சரக்குகளை கையாடிப்பழகிய இந்தியர்கள் கவலைக்கும், கஷ்டத்திற்கும் உள்ளானார்கள். நாகரீகமுற்ற மற்ற ஐரோப்பிய தேசங்களெல்லாம் தற்காலம் யுத்த சன்னத்தராயிருப்பதாலும், பெல்ஜியம் அலக்கணுற்றிருப்பதாலும், ஜர்மனி ஆஸ்திரியாவின் கைத்தொழில்களை அவர்கள் பின்பற்றிச்செய்ய அவகாசமும், மனநிம்மதியும் இல்லை. எனவே, அமெரிக்காதேசச் சாமான்களும், ஜப்பான் உற்பத்திச்சரக்குகளும் கூடியசீக்கிரம் இந்தியாவில் ஏராளமாய்ப் பாவிவிடுமென்பதற்கு ஐயமில்லை. ஏற்கனவே ஜப்பான் சாமான்கள் இந்தியாவினுடைய வர்த்தகத்தின் பெரும்பாகத்தை சுவாதந்தரியப்படுத்



திக்கொண்டிருக்கின்றன. தென்னிந்தியாவின் பல கைத்தொழில்கள் மூலதனம்கொடுத்து உதவுவாரில்லாமையால் நசித்தும், நசித்துக்கொண்டும் வருகின்றன.* இந்த மஹா யுத்தகாரணமாக அத்தொழில்கள் இருக்குமிடம் தெரியாமலே போய்விட்டன. இந்த பரிதாபகரமான நிலைமையில் இவ்வேலைகளை பல்லாயிர வருடங்களாகச்செய்து ஜீவித்து வந்தவர்களின் கதி என்னவாகும்? அவர்கள் எந்தத்தொழிலைச்செய்து ஜீவிப்பது? எந்த வருமானத்தைக்கொண்டு இவர்கள் சிறுவர்களுக்கு கல்வி கற்பிப்பது? கனவான்களே, நாகரீகம் பொருந்திய மேனாடுகளில் இவ்வித தொழில் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கும், நூதன தொழில்களை விர்த்திசெய்வதற்கும், அந்தந்த கவர்ன்மெண்டார்கள் மூலதனம் உதவி உபகரித்திருக்கின்றனரென்பதற்கு சரித்திரவரியிலாக பல அத்தாட்சிகளுண்டு. அவைகள் எல்லாம் நமது கவர்ன்மெண்டார் அறிந்தவைகளே. ஆகையால் நமது காருண்ய கவர்ன்மெண்டார் நமது பூர்வீக கைத்தொழில்களை காப்பாற்றவேண்டி, சொற்ப மூலதனமும் கடனாகக்கொடுத்து உதவ முன்வரவேண்டிய சமயம் இதுவே. இந்தியாவின் க்ஷேமத்தை அவர்கள் உள்ளபடி கோரியிருப்பதை வெளிப்படையாகக்காட்டும் சமயமும் இதுவே.

விவசாய ஐக்கிய சங்கங்களைப்போல், கைத்தொழில் ஐக்கிய சங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் ஏன் மூலதனம் கொடுத்து உதவலாகாது? விவசாய சங்கங்கள் தாங்கள் பட்ட கடனுக்கு கீழ்நிலங்களையும், மாகுல்களையும் கவர்ன்மெண்டாருக்கு ஈடுகாட்டுவதுபோல், கடனைக்கோரும் தொழிற்சங்கத்தார்கள் தங்கள் தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்களையும் தீர்ந்த சாமான்களையும் ஈடாகக்காட்டினால் அவைகளை ஏன் ஒப்புக்கொள்ளலாகாது? ஒரு சமயம் சிறிது நஷ்டம் கவர்ன்மெண்டாருக்கு இதுகாரணமாக வரினும், கைத்தொழில் அபிவிர்த்தியையும், தேசப் பொது க்ஷேமத்தையும் கருதி மூலதனம் கடனாகக்கொடுக்க சிறிது தைரியமும், பெருந்தன்மையும் ஏன் காட்டலாகாது? உதகமண்டலத்தில் 1907 வருஷம் கூடிய கான்பரன்ஸில், குறிப்பிட்ட சில கைத்தொழில்களுக்கு கடன் கொடுப்பதென்றும், தொழிற்கான இயந்திரங்களை இரவலாகக் கொடுத்துதவுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வித சகாயம் முக்கியமாய் சென்னை ராஜதானியிலுள்ள விவசாயிகளுக்கே செய்யப்பட்டு வருகின்றது. முன்னர் அன்னிய நாட்டுப் போட்டிச் சாக்குகளால் நலிந்து, யுத்தத்தால் இப்பொழுது மடிந்த நமது கைத்தொழில்களுக்கு இவ்வித சகாயம் கிடைக்காதது நமது துர்அதிர்ஷ்டமேயாகும். கண்ணாடி வேலைத்தொழிலாலும், கண்ணாடி வளையல், குப்பிகள் முதலிய வேலைகளைச் செய்வதாலும், வேர்க்கடலை எண்ணெய் ஆலைகளை ஸ்தாபிப்பதாலும் பென்சில் பாக்டரிகளைப்போற்றுவதாலும் நம் ஜாதியருக்கு என்ன பயனும், பிழைப்பு முண்டு? இவ்வித விசனகரமான உண்மைகளையெல்லாம் நமது காருண்ய கவர்ன்மெண்டார் சீர்தூக்கி, நம் ஜாதியரின் பூர்வீக கைத்தொழில்கள் தலையெடுக்கும் மார்க்கங்களில் இனியேனும் தங்கள் கவனத்தை செலுத்துவார்களென நம்புகிறேன்.

நமது குலத்திற்குரிய வைதிகக்கல்வியையும், ஆசாரணைகளையும் நாம் கைசோர விடுதல் அதமமாகும். காலத்தில் நமது சிறுவர்களை அவற்றில் பழகச்செய்யாது வளரவிடுதல் பெருந்தீங்கை உண்டுசெய்யும். சிற்பம் முதலிய நூல்களையும், கும்பாபிஷேகம் முதலிய மந்திர தந்திரங்களை எழுதப்பட்டுள்ள சமஸ்கிருதக் கல்வியில் வெறுப்புக் காட்டலாகாது. உபநயனம் விவாஹம், ஸீமந்தம் முதலிய வைதிகச்சடங்குகளை விதிப்படி நடத்துவதில் கவனம் வைக்கவேண்டும். வீண் இடம்ப காரியங்களைமுற்றிலும் நீக்கவேண்டியது அவசியம். நமது பட்டப்பெயர்களை சரிவர எழுதுவதிலும், உச்சரிப்பதிலும் கண்ணுங் கருத்துமாய் இருந்து வரவேண்டும்.

மத சம்பந்தமான விஷயங்களிலும், ஜாதி விஷயங்களிலும் தலையிடுவதில்லையென நமது காலஞ்சென்ற சக்ரவர்த்தினி விக்டோரியா மகாராணியார் 1858-ம் வருடத்தில் அளித்த பட்டயத்தில் நமக்கு உறுதி மொழி கூறியிருப்பதை தாங்கள் அறிவீர்கள். நமது மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்ரவர்த்தியார் நமக்கு அவ்வித உறுதி மொழியை ஊர்ஜிதப்படுத்தியிருந்தும் நமது கால வித்தியாசத்தால் சென்னை கவர்ன் மெண்டார் "ஆச்சாரி" என்னும் நமது பூர்வீக ஜாதிப்பட்டப் பெயரை அகாரணமாய், "ஆஸாரி" எனமாற்றி உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர். அவர்கள் செய்த தவறுதலை நம்மனோர், அவர்கள் மனதில் படும்படி விண்ணப்பங்கள் மூலமாகவும், தந்திகள் மூலமாகவும் தெரிவித்திருந்தும் அவர்கள் இதுவரையில் அவ்வுத்திரவை

ரத்து செய்யவில்லை. சென்னை சட்ட நிரூபண சபையில் இதைப்பற்றி கனம் ராவ் பகதூர் கேசவப்பிள்ளையவர்கள் கவர்ன்மெண்டாரை உசாவினர். விஷயம் கவனிக்கப்பட்டுவருவதாக கவர்ன்மெண்டார் அளித்த பதிலின் பயனை இதுவரையில் நாம் பெறாமலிருப்பது நமது துர்ப்பாக்கியமேயாம். சப்தக்குறைவும், அர்த்தமில்லாததும், ஆபாசமுமான "ஆஸாரி" பட்டத்தை நம் தலைமீது சுமத்தப்பட்டிருப்பதைக்குறித்து நாம் விசனத்தி லாழ்ந்திருப்பதை காருண்ய கவர்ன்மெண்டார் உணர வேண்டுகிறேன்.

மற்ற ஜாதியாருக்கும் நமக்கும் விரோதபாவத்தையும் மனவேற்றுமையையும் உண்டுசெய்யக்கூடிய விதண்டாவாதங்களில் நம்மனோர் அருவெறுப்பைக்காட்டி, அந்யோந்யத்தை விர்த்திசெய்ய வேண்டுமென்பது எமது பிரார்த்தனை.

தி. மு. முக்கண்ணுச்சாரி.

(3)

## தீர்மானங்கள்.

### I. இராஜ விஸ்வாசம்.

(a) நமது மாட்சிமைபொருந்திய காருண்ய ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்களுக்கு தற்போது ஏற்பட்டிருக்கிற தர்ம யுத்தம் சீக்கிரமே அனுகூலமுண்டாக வேண்டுமென்று இக்கான்பரன்ஸ் பிரார்த்திக்கிறது.

(b) இந்தியா தேசத்தின் க்ஷேமத்தைப் பெரிதும் கோரி பல நன்மைகளைச் செய்தும், செய்துகொண்டும் வருகிற நமது இராஜப்பிரதிநிதியாகிய லார்டு ஹார்டிஞ் பிரபுவிற்கு நேர்ந்த பெருங் குடும்ப துக்கசம்பவங்களைக் குறித்து இந்த கான்பரன்ஸ் ஆழ்ந்த அநுதாபம் காட்டுகிறது.

### II. தேசபக்தி

நமது பிரிட்டிஷ் அரசாட்சி ஓங்கி வளர்ந்து அதன் வழியே நம் இந்தியா க்ஷேமம் அடையவேண்டுமென்று தமது ஆயுள்பரியந்தம் விடாமுயற்சியுடன் உழைத்த கனம் ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே C. I. E. அவர்களின் அகாலமரணத்தைப்பற்றி இந்த கான்பரன்ஸ் மிகுந்த அனுதாபம் காட்டுகிறது.

### III. கல்வி

(a) இந்தியாவின் பூர்வீக நாகரீகத்திற்கு ஆதாரபூதரான விஸ்வகர்ம வம்சஸ்தர்கள் தற்காலம் தொழில் போட்டிகளாலும், தொழிலின்மையாலும் வருந்துவதால், அக்குலச்சிறுவர்களுக்கு சகெண்டரி பாடசாலைகளிலும், உயர்தரப் பாடசாலைகளிலும் பாதிச்சம்பளம் பெற்றுக்கொண்டு சேர்த்துக்கொள்ளும்படியான உத்திரவை கவர்ன்மெண்டார் செய்யும்படி இந்த கான்பரன்ஸ் பிரார்த்திக்கின்றது.

(b) எலிமெண்டரி பாடசாலைகளில் நமது சிறுவர்களையும், சிறுமிகளையும் கட்டாயமாய் பெற்றோர்கள் வாசிக்கச் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

(c) எலிமெண்டரி பாடசாலைகளிலும், சகெண்டரி பாடசாலைகளிலும் படிக்கிற சுஜாதி ஏழை வித்தியார்த்திகளுக்கு புத்தகம், சம்பளம் முதலிய சௌகர்யங்களைத் தந்துதவும்படி ஒவ்வொரு பட்டணத்திலும் "விஸ்வகர்ம கல்விச்சங்கம்" காலதாமதமன்னியில் ஏற்படவேண்டுமென்று இந்த கான்பரன்ஸ் வற்புறுத்துகிறது.

### IV. கைத்தொழில்

(a) தென்னிந்தியாவிலுள்ள நமது பூர்விக கைத்தொழில்கள் நசித்துவிடாமல் காப்பாற்ற வேண்டுமென்றும்;

(b) பொரபசர் கெட்டீஸ் அவர்கள் மெச்சிய நமது சிற்பிகளின் நகர் நிர்மாண வல்லமையும், சிற்பசாஸ்திரப் பயிற்சியும் அழிந்து போகாமல் காப்பாற்ற கவர்ன்மெண்டார் இந்திய சிற்பகலாசாலைகளை ஏற்படுத்தி ஜாதியரை முன்னுக்கு கொண்டுவரவேண்டுமென்றும் ;

(c) தென்னிந்தியாவின் முக்கிய பட்டணங்களில் கைத்தொழில் பாடசாலைகளை ஸ்தாபித்து அவைகளில் மேல் நாட்டை அனுசரித்து நமது சிறுவர்களுக்கு தொழிற் படிப்பை அவசியமாய் போதிக்கவேண்டுமென்றும்;

(d) அன்னிய நாடுகளுக்குச் சென்று தொழிற்கல்வி கற்றுவரக் கொடுக்கிற கவர்ன்மெண்டு உபகாரச் சம்பளங்களை சகெண்டரி படிப்புள்ள நமது ஜாதிச் சிறுவர்களுக்கு கொடுத்துதவி உபகரிக்க வேண்டுமென்றும், அவர்கள் விஷயத்தில் மட்டும் உயர்தரக்கல்வி நிர்ப்பந்தத்தை தளர்த்தவேண்டுமென்றும் ;

(e) நமது ஜாதியர்க்குரிய கைத்தொழில்களை அபிவிர்த்தி செய்துகொள்ள விரும்பும் ஐக்கிய சங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் விவசாயிகளுக்கு உதவுவதுபோல், மூலதனம் உதவி ஆதரிக்கவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்கிறது.



### V. ஆசாரச் சீர்திருத்தம்

(a) மத சம்பந்தமான விஷயத்தில் கவர்ன்மெண்டார் பிரவேசித்து, தொன்று தொட்டு நமது பெயர்களுடன் சேர்க்கப்பட்டு வருகிற "ஆச்சாரி" என்னும் பட்டப் பெயரை "ஆஸாரி" என்று மாற்றிய கவர்ன்மெண்டு உத்திரவை ரத்து செய்யும் படிக்கு இந்த கான்பரன்ஸ் பிரார்த்திக்கிறது.

(b) நமது வம்ஸச் சிறுவர்கள் வைதீக மார்க்கத்தில் பழகிவர காலத்தில் உபநயனம், செய்விக்கவேண்டுமென்றும், அநுஷ்டான சீலர்களாயிருந்து வரச்செய்விப்பது அவசியமென்றும் இந்த கான்பரன்ஸ் தீர்மானிக்கின்றது.

(c) நமது வம்ஸத்தினர்கள் உட்பிரிவுகளின் பேதமின்றி சமபந்தி போஜனம் செய்வதில் இனி அக்கரை காட்டவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

(4)

## கண்டவர் விண்டது

இக்கான்பரன்ஸில் என் மனதை முதலில் கவர்ந்தது இக்கான்பரன்சுக்காக ஏற்படுத்தப்பட்ட வாலண்டீர்களே. ஒவ்வொரு வாலண்டியரும் மிகுந்த தனவான் புத்திரர்; வெளியூரிலிருந்து வரும் டெலிகேட்டுகளையும், விசிட்டர்களையும் ரயில்வேஸ்டேஷனிலிருந்து அழைத்துக்கொண்டுபோய் பிரத்தியேகமாய் ஏற்பட்ட தங்குமிடத்தில் விட்டு அவர்களுக்கு வேண்டிய உபசாரணையைச் செய்தார்கள்.

(2) தங்குமிடம்.—இது, நம்மவர் வசத்திலுள்ள ஓர் பெரிய சத்திரம். இச்சத்திரம் மகாவிசாலமுள்ளது. சகல சௌஹரியமும் வாய்ந்துளது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கண்ணை மூடிக்கொண்டு ரஸ்தாவின் நெடுகே போனால் அந்த இடத்திற்கே போய்ச்சேர்வோம்.

(3) போஜனம்.—இக்கான்பரன்ஸில் நடந்த போஜன விஷயங்களைப்பற்றி நான் சொல்ல அசக்தன். தினமும் வடை பாயசத்துடனே சாப்பாடு சம்பூர்ணமாக போடப்பட்டது. தினம் பகலில் சுமார் 250 பேர்களுக்கு குறைவில்லாமலே சாப்பிட்டார்களெனலாம்.

(4) கான்பரன்ஸ் ஆபீஸ்.—இந்த ஆபீஸ் ஒரு பிராமணருடைய மானேஜ்மெண்டில் நடந்துவரும் ஒரு பள்ளிக் கூடத்தில் நியமிக்கப்பட்டிருந்தது. டிக்கெட்டு விற்பதற்கு உடன் பட்டவர் பிறவம்சத்தினரே. இவர்கள் யாதொரு பிரதிப் பிரயோஜனம் இல்லாமல் கலந்துழைத்தது கவனிக்கத்தக்கதே.

(5) கான்பரன்ஸ்ஹால்.—இது அவ்வூர் பெரிய கடைத்தெருவுக்கு அருகாமையிலுள்ள அரண்மனைத் தோட்டம் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் ஹால் என்னும் ஓர் பெரிய நாடகசாலை.

(6) கான்பரன்ஸ். — இக்கான்பரன்ஸ் பிரசித்தி பெற்ற பிரம்மஸ்ரீ தி. மு. முக்கண்ணுச்சாரியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. இதற்கு வரவேற்பு கமிட்டி சேர்மன் Mr. T. K. சுந்தராச்சாரியார் அவர்கள். கான்பரன்ஸ் கூடுவதற்குமுன் மேற்சொல்லிய சத்திரத்திலிருந்து சுமார் 11-மணிக்கு மேளவாத்யத்துடன் கான்பரன்ஸ்ஹாலுக்கு எல்லோரும் ஏகினார்கள். பார்ப்பவர் மனதை இது பிரமிக்கச்செய்தது. ஆரம்பத்தில் வரவேற்பு கமிட்டிசேர்மன் அச்சிட்டிருந்தஅவரது பிரசங்கத்தை வாசித்துக் காட்டினார். பிறகு பிரசிடெண்டு அவர்கள், தமது தள்ளாமை காரணம்பற்றி அவரது அச்சிட்ட பிரசங்கத்தை வாசித்துக்காட்ட தமது குமாரர் Mr. T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியாருக்கு அனுமதிகொடுக்க, அவர் வாசித்துக்காட்டினார். கான்பரன்ஸுக்கு வர அசக்தர்களென்று தெரிவித்த சில கனவான்கள் காகிதங்களை கமிட்டியின் உதவி காரியதரிசியாகிய Mr. S. பஞ்சனதீஸ்வர ஆச்சாரியார் வாசித்துக் காட்டினார்.

அப்பால், தீர்மானங்களின் முதற்குறிப்பில் கண்டபடி வரிசைக்கிரமமாக, இராஜவிஸ்வாசம், தேசபக்தி, கல்வி, கைத்தொழில், ஆசாரசீர்திருத்தம் இவைகள் விஷயமாக நடக்கவேண்டிய தீர்மானங்களைப்பற்றி முறையே சென்னை T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார், இல்லையாடி A. சுப்பிரமணிய ஆச்சாரியார், யாழ்ப்பாணம் சிவக்கொழுந்து ஆச்சாரியார், கும்பகோணம் கமிட்டி காரியதரிசி G. கிருஷ்ணசாமி ஆச்சாரியார், திருச்சி T. A. முத்து கிருஷ்ண ஆச்சாரியார் அவர்களால் உபந்நியாசங்கள் செய்து பிரேரபணைக்கு கொண்டுவர, ஈரோடு அர்த்தநாரீஸ்வர ஆச்சாரியார், சென்னை E. K. அரங்கநாத ஆச்சாரியார், கோயமுத்தூர் சுப்பராயச்சாரியார், திருச்சி பழநிவேலு ஆச்சாரியார் முதலிய சிலர்களால் ஆமோதித்தும் ஆதரித்தும் பேசப்பட்டன. இன்னும், கணியம்பாடி-அத்யாபக விஸ்

காச்சாரியார், திருவாரூர்-வைத்திநாதஸ்வாமிகள் முதலிய வைதிகர்களும், கல்வி ஆசாரசீர்திருத்தங்களைப் பற்றி சாங்கோபாங்கமாய்ப் பிரசங்கம் செய்து மஹா ஜனங்களைச் சந்தோஷப்படுத்தினர்.

கடைசியில் சேர்மென், பிரசிடெண்டு, காரியதரிசி, வாலண்டீர்கள் முதலியோர்களுக்கு வந்தனோபசாரம் அளித்து மாலைகள் சூட்டப்பட்டன. வந்திருந்த மஹா ஜனங்களும் கான்பரன்ஸ் ஹாலுக்கு முதல் தினம் பிரசிடெண்டு சேர்மன் அவர்களோடு சேர்ந்து வந்தாப்போல் மறுநாள் முடிந்தவுடன் எல்லோரும் அவர்களிருவரையும் பொதுஸ்தானமாகிய சத்திரத்திற்கு கொண்டுவந்து விட்டு கலைந்தார்கள். அப்போது சுமார் இரவு 8-மணியாயிற்று.

இக்கான்பரன்சுக்கு தஞ்சாவூர், திருச்சி, கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி, ஈரோடு, சென்னை இன்னும் பல வெளியூர்களிலிருந்தும் பலர் டெலிகேட்டுகளாகவும், விசிட்டர்களாகவும் வந்திருந்தனர். அவனது அருளால் கான்பரன்ஸ் சம்பூர்ணமாக முடிந்ததென சந்தோஷமடைகிறேன். இதைப்போல் ஒவ்வொரு ஜில்லாக்களிலும் கான்பரன்ஸ் கூட்டி ஜாதீய விஷயங்களை கலந்து பேசினால் நம்குலம் சீக்கிரம் அபிவிருத்தியடையக்கூடுமென்பதற்கு கிஞ்சித்தும் ஐயமில்லை. அடுத்த பிரசுரத்தில் எந்த ஜில்லா முன்வரப்போகிறதென்று ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

**கண்டு களித்தோன்.**

(5)

## பத்திரிகாபிப்பிராயங்கள்

### திராவிடாபிமானி 9—4—15

நாம் ஒரு விஷயம் தெரிவித்துக்கொள்கிறோம். விஸ்வகர்மப் பிராமண சிலர்கள் தங்களிடம் நகை செய்யும்படி மற்றவர்களால் கொடுக்கப்படும் பொன் வெள்ளி கல்லுகள் முதலியனவற்றை அந்தப்படியே கொடுத்தவருமல் கொடுப்பதிலும், வீணாக அலையவைக்காமலும் எதார்த்தமாய் நடந்துகொள்ளும்படி தம் வகுப்பினர் சிலருக்கு வற்புறுத்த வேண்டுமென்று விரும்புகிறோம். நமது ஜனஸமூகத்திலுள்ள இவ்வாறான சாதாரணத் தவறுதல்களைக்கூட நாம் விடாமல் எடுத்துக்காட்டித் திருத்தம் போதிப்பித்து அவ்வாறே நடக்கச் செய்வோமாயின், இது பெரிய தவறுதல்களைச் சுலபமாகப் பிற்காலத்தில் சீர்திருத்துவதற்கான வழியாயிருக்கும். நேசச்சார்புடன் இவ்விஷயத்தை நாம் எடுத்துக்காட்டுவதானோம்.

### சுதேசமித்திரன் 14-4-15.

இந்த விஸ்வகர்ம சமுகம் பல சௌகரியங்கள் வேண்டுமென்று கவர்ன்மெண்டைக் கேட்டபோதிலும், அவைகளனைத்தும் கவர்ன்மெண்டால் செய்யப்படமாட்டாதென்பது நிச்சயம். ஏழைகளுக்கு நிதிகள் ஸ்தாபிப்பதைத் தவிர, மற்ற தீர்மானங்களெல்லாம் கவர்ன்மெண்ட் நிறைவேற்ற வேண்டுமென்று கான்பரன்ஸ் கேட்டது. இவ்வாறே பல சமுகங்கள் கவர்ன்மெண்டைக் கேட்கின்றன. எல்லா சமூகங்களுக்கும் மேற்கண்டவாறு கவர்ன்மெண்ட் சகாயம் செய்வது சாத்தியமல்ல. உயர்தரக் கல்வியில்லாமல் சிறுவர்களை எப்படி அந்நிய தேசங்களுக்கு அனுப்பிப்பது? ஒவ்வொரு பெரிய பட்டணத்திலும் தொழிற் கல்விச்சாலை எப்படி ஸ்தாபிக்க முடியும்? இந்த ஜாதிப்பிள்ளைகளுக்கு எப்படி அரைச் சம்பளத்தில் படிப்புச் சொல்லிவைப்பது? இவைகளெல்லாம் கவர்ன்மெண்ட் ஏராளமாய்ப் பணச்செலவு செய்தாலல்லாமல் சாத்தியமல்ல. கவர்ன்மெண்ட் செலவு செய்யும் பணம் ஜனங்கள் அனைவரும் கொடுக்கும் பணம் என்பதை மறக்கக்கூடாது. ஒரு சமூகத்துக்கு விசேஷ நன்மை செய்தால் மற்ற சமூகங்களுக்கு அவசியம் வேண்டிய நன்மையைச் செய்தல் குறையும். ஆகையால், நாம் கவர்ன்மெண்டைக் கேட்க வேண்டியதெல்லாம் சாத்தியமானவைகளையே கேட்க வேண்டும். மகமதியருக்கு ஸ்கூல்களில் கவர்ன்மெண்ட் விசேஷ நன்மை செய்கிறார்களானாலும் அந்த வகுப்பார் விசேஷ செல்வாக்குடையவர்களென்றும், அவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் செய்கிறார்கள். விஸ்வகர்ம ஜாதியிடத்தில் கவர்ன்மெண்டுக்கு அப்படிப்பட்ட எண்ணமில்லை. அவர்களுக்கு விசேஷ நன்மை செய்தால் மற்ற சமூகங்களுக்கும் செய்யும்படி நேரிடும். பஞ்சமர் முதலான மகா ஏழைகளுக்கு தனியான ஸ்கூல்கள் ஸ்தாபித்து கவர்ன்மெண்ட் அவர்களுடைய நிலைமையை உயர்த்த வேண்டியதாயிருக்க அதையே செய்யாமலிருக்கிறார்கள்.

---

குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாய்ச் சுற்று முலகு. —குறள்.



## தொழிற்றுறைகள்

**வைக்கோலிலிருந்து ஆகாரம்**—ப்ரொபஸர் ப்ரீடெந்தால் பெரிம் என்பவர் "வைக்கோலிலிருந்து ஒருவித ஆகாரம் உண்டுபண்ணும் ஒரு அதிசய வழியைக் கண்டுபிடித்திருக்கிறார். இதனால் ஜனங்களுக்கு ஆகாரவசதி யுண்டுபண்ணும் விஷயத்தில் ஓர் பிரமாதமான மாறுதல் ஏற்படுமென்று ஜெர்மன் பத்திரிகைகள் கூறுகின்றன.

**வர்ணங்கொண்ட மரங்கள்.**—உத்திரங்கள், கட்டில்கள் முதலியவற்றிற்கு உபயோகமான மரங்களை அறுத்தபின் அவற்றுக்கு நாம் இஷ்டப்பட்ட வர்ணங்களைப் பூசுகின்றோம். அவ்வாறு செய்யாமல் மரங்களில் சில மருந்துகளைச் சேர்ப்பதால் அவற்றை நாம் விரும்பும் நிறத்துடன் வளருமாறு செய்துவிடலாம். இதனை டாக்டர் க்ளீன் ஸ்டக் என்பவர் 1829-ம் வருஷத்தில் கண்டுபிடித்தாராம்.

**தேன்மெழுகு.**—மெழுகு வத்திகளும், பலவித மினுக்குகளும் (Polishes) செய்வதற்குத் தேன்மெழுகு முக்கியமாய் உபயோகப்படும். தேன்மெழுகை விடத் தேனில் அதிக லாபம் கிடைப்பதால் ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய எல்லாவிடங்களிலும் புதுமாதிரியாய்த் தேனீக்களை வளர்த்துவருகிறார்கள். முற்காலங்களில் தேனீக்களை ஒரு பெட்டியில் வைத்து வளர்த்துவந்தார்கள். அதில் ஏதேஷ்டமாய்த் தேன் உண்டானதும், அதிலுள்ள புழுக்களைப்போக்கித் தேனைப் பிழிந்தெடுத்தபிறகு, அந்தத் தேன்கூண்டை மெழுகாய்ச் செய்துவிடுவது வழக்கம். அவ்வாறு உண்டான தேனடையிலுள்ள சிறு துவாரங்களின் மூடிகளைப்போக்கி, இயந்திரத்தின் உதவியால் தேனை எடுத்தபிறகு அந்த அடையை மெழுகாகச் செய்துவிடாமல், அப்படியே வைத்திருந்தால், மறுபடியும் தேனீக்கள் அந்த அடையில் வந்து ஏராளமான தேனைச் சேர்க்கும். தேனீக்கள் அடை செய்வதற்குமுன் குடிக்கவேண்டியிருக்கும் தேனைக் குடிக்காமல் அந்த அடையிலேயே தேனைச் சேகரித்துவைத்துவிட ஏராளமான தேன் கிடைக்கும். தேன் அதிகம் கிடைப்பதற்காகச் செய்யப்படும் புது மாதிரி வழியினால் தேன்மெழுகு கிடைப்பது கம்மிப்படுகின்றது. ஆகையால் தேன் மெழுகு இந்தியாவிலிருந்து ஐரோப்பா தேசங்களுக்கு ஏராளமாய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சென்ற 5 வருஷ காலத்திற்குள் நம் இந்தியாவிலிருந்து 2,26,524 பவுன் விலையுள்ள தேன்மெழுகு பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

**மைசூர் மருந்துச் சாலை.**—மைசூர் மாகாணத்தில் எஸ்வந்தபூர் என்னும் ஊருக்கருகே,மருந்துகள் செய்வதற்காக ஓர் தொழிற்சாலை ஸ்தாபிக்கப் பிரயத்தினங்கள் செய்யப்பட்டுவருகின்றன. இதற்காக ரூபா இரண்டு லக்ஷம் மூலதனங்கொண்டதோர் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கம்பெனிக்கு மைசூர் கவர்ன்மெண்டார் அநேகவித சகாயங்கள் செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு சகாயமாயிருந்து பல மருந்துச்செடிகளைப் பயிரிட்டு, அவைகளினின்றும் மருந்துகளைச்செய்து மொத்தமாக வியாபாரிகளுக்கு மருந்துகளை விற்பதே இக்கம்பெனியின் முக்கிய நோக்கமாகும்.

---

டாக்டர் ஸ்மித் என்கிற ஒரு மேல்நாட்டு வைத்யர் ஓர் இளங்குழந்தையைப்பற்றி ஒரு ரிபோர்டு வெளியிட்டிருக்கிறார். அவர், 22-வயதுள்ள ஒரு ஸ்திரீ பிரஸவிக்கும்போது அவளுக்கு சிகித்ஸை செய்துவந்தார்; அவளுக்கு அதுதான் முதல் பிரஸவம்; அவள் தேகம் நன்றாகச் செழித்து வளர்ந்திருந்தது. அவளுக்குப் பிறந்த பெண்குழந்தை பார்க்கப்பார்க்க மிகவும் அழகாகக் காணப்பட்டது. அவள் பிரஸவித்த ஏழாவது நாள் குழந்தையைப் பார்ப்பதற்காக டாக்டர் ஸ்மித்தை அழைத்தார்கள். அவர் வந்தபோது குழந்தையின் காலிடுக்குகளிலிருந்து ரத்தப்பெருக்கு உண்டானதைக் கண்டு தாயார் மிகவும் திகைத்து வருந்திக்கொண்டிருந்தாள். அவர் பார்க்கையில், அக்குழந்தையின் சின்னஞ்சிறிய மார்களில் இயற்கைக்கு மாறாக அதிகமாய்ப் பால் சுரக்க ஆரம்பித்தது; கண்களைச்சுற்றிலும் ஓர்வகையான கருநிறம் தோன்றிற்று. அக்குழந்தைக்கு உடம்பில் வலியாவது வேறுவகையான கஷ்டமாவது உண்டானதாய் ஒரு குறியும் ஏற்படவில்லை. இவ்விதம் ரத்தப்பெருக்கு மூன்றுநாட்கள் தொடர்ந்திருந்து பிறகு தானாகவே நின்றுவிட்டது. பிறகு 28 நாட்கள் கழிந்ததும் முன்போல மறுபடியும் ரத்தப்பெருக்கும் மற்றக் குறிகளும் உண்டாயின! ஆனால், மார்புகளில் பால் சுரக்காமல் அவை இயல்பாயிருப்பதைவிட சற்றுப் பருத்திருந்தனவாம். மறுபடியும் அக்குழந்தைக்கு அவ்வித மாதவிடாயால் மாறுபாடுகள் ஏதேனும் ஏற்படுமோவென்று அவர் கவனித்துவருகிறாராம். அக்குழந்தைக்கு வெளியான சூதகத்திற்கு நடுவயதிலுள்ளவருடைய சூதக ரத்தத்திற்குள்ள எல்லா லக்ஷணங்களுமிருந்தனவாம். **வைத்திய கலாநிதி.**

## பாகசாஸ்திரம்

**தயிர்சாதம் (ததியோதனம்)**—கால்படி அரிசியை சாதமாக்கி அதை ஆற்றிக்கொண்டு, அதில் கால்படி பால், அரைக்கால்படி புளிப்புத்தயிர், ஒரு பலம் வெண்ணெய், கால்பலம் பொடித்த உப்பு-இந்த நான்கையும் போட்டுக்கலந்து வைத்துக் கொள்ளவேண்டும். முக்கால்பலம் நெய்யை ஒரு வாணலியில் விட்டுக்காய்ச்சி, கால்ரூபாயெடை மிளகாய், கால்ரூபாயெடை கடுகு, அரைக்கால் பலம் உளுத்தம் பருப்பு, அரைக்கால்பலம் கடலைப்பருப்பு இவற்றை ஷை நெய்யில் தாளிதஞ்செய்து, வீசம் பலம் கரிவேப்பிலையை ஷை தாளிதத்திற்போட்டு சடபட வென்னுஞ் சத்தம் ஓய்ந்தவுடனே அந்தத் தாளிதத்தை சாதத்தில் கொட்டி, வீசம்பலம் மிளகை உடைத்துச் சிறுநொய்யாக்கி ஷை சாதத்தில் தூவவேண்டும். அப்பால், கால்பலம் இஞ்சியின்மேல் தோலை நன்றாய்ச்சீவி, அந்த இஞ்சியைத் துருவிப் போடுவதோடுகூட, சிறிதளவு காயத்தை ஜலத்தில் ஊறவைத்திருந்து, அந்த ஜலத்தின் தெளிவையும் ஷை சாதத்திற் கொட்டிக் கலக்கவேண்டும்.

**பகாளாபாத்**—கால்படி சிறு அரிசியைச் சாதமாக்கி, இரண்டுபடி கொள்ளக்கூடியதோர் ஈயம்பூசிய பாத்திரத்திற் கொட்டி ஆற்றி, கால்படி எட்டுத்தயிர், அரைபடி சுண்டக்காய்ச்சின பால், மூன்றுபலம் புது வெண்ணெய், கால்பலம் உப்புப்பொடி இவற்றை ஷை சாதத்திற் கொட்டித் தயிர்கடையும் மத்தினால் நன்றாய்க் கடையவேண்டும். ஒரு வாணலியில் ஒன்றரைப்பலம் நெய்யை விட்டுக்காய்ச்சி, அதில் அரைக்கால்பலம் மிளகாய், வீசம்பலம் கடுகு, அரைக்கால்பலம் உளுத்தம்பருப்பு, அரைக்கால்பலம் கடலைப்பருப்பு, கால்பலம் பச்சை மிளகாய் (சிறு சிறு துண்டுகளாக்கப்பட்டிருக்க வேண்டும்) இவற்றைப் போட்டுத் தாளித்து, வீசம் பலம் கரிவேப்பிலையும் அதில் போட்டு சடபட வென்னுஞ் சப்தம் நின்றதும், ஷை கடைந்துள்ள சாதத்திற் கொட்டிக் கலக்கவேண்டும்.

**பச்சை மோர்க்குழம்பு**—ஒருபடி தயிரை ஈயம் பூசியதோர் பாத்திரத்திலிட்டு, கால்படி ஜலம் விட்டுக் கடைந்து வைத்துக்கொண்டு, ஒருபலம் உப்பையும் அரைக்கால்பலம் மஞ்சள் பொடியையும் அதில்போட்டு, ஒன்றரைப்பலம் தேங்காய்த் துருவல், கால்பலம் கடுகு, ஒன்றரைபலம் பச்சைமிளகாய் இம்மூன்றையும் வெண்ணெய் போலரைத்துத் தயிரிற் கலக்கவேண்டும். ஒரு பலம் நெய்யை கரண்டியில் விட்டுக் காய்ச்சி, அதில் கால் பலம் மிளகாய், அரைபலம் உளுத்தம்பருப்பு, அரை பலம் கடுகு இவற்றைப் போட்டுதாளித்து அரைரூபாயெடை கரிவேப்பிலையை உருவிப்போட்டு ஷை பச்சை மோர் குழம்பில் விடவேண்டும்.

---

## விவசாய விளக்கம்

### நல்ல விதையின் அநுகூலங்கள்

பயிர்கள் விளைவதற்கு நிலமே முக்கியமான தென்றும், நிலம் நல்லதா யில்லாவிட்டால் நல்ல மாசூல் கிடைக்கா தென்றும், நிலம் நல்லதாயிருக்குமானால் விதை நல்லதா கெட்டதா வென்று அவ்வளவு யோசிக்க வேண்டியதில்லை கொஞ்சம் மட்டமாயிருந்தாலும் நல்ல விளைச்சல் விளையுமென்றும் அநேகமாய் நினைப்பதுண்டு.

நிலம் நல்லதாயிருந்தால் விளைச்சல் திறமாயிருக்கும் என்று சொல்லுவது உண்மைதான். ஆனால் நல்ல நிலத்தைத் தன் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு விதையின் தன்மையைக் குறித்துச் சிறிதும் கவனிக்காதவனைவிட, நல்ல நிலத்தில் விதையைப் பொறுக்கி எப்போதும் நல்ல விதையையே விதைப்பவன் அதிக பலனை யடைவான் என்பதும் நிஜமே.

நல்ல விதை யென்பது கீழ்க்குறித்த விவரங்களின் வகைகளில் இரண்டிலுமாவது அல்லது ஏதாவதொன்றிலாவது பொருந்தியிருக்கும்.

1. ஒரு பிடி விதையில் ஒவ்வொரு விதையும் நல்லதாயும் நன்றாய் விளைந்ததாயும் பருத்து, உமி (அல்லது தோல்) பெருத்து, அரிசி (அல்லது பருப்பு) சிறுத்திராமல் பால் நிறைந்து முத்தி சேதையில்லாமல் முளைக்கும்.

2. விதையெல்லாம் ஒரேராசியாய் ஓங்கிவளர்ந்து நோயை லட்சியம் பண்ணாமல் பூச்சியடித்தாலும் கெடாமல் நல்ல ராசிகாணுவது.

முன்சொன்ன குணங்கள் எல்லாம் இருந்து அந்த விதையை விதைத்தால் முன்பின்னாய் முளையாமல் ஒரே விதமாய் முளைத்துச் சிலது மெலிந்து சிலது பெருக்காமல் ஏகதேசமாய் வளர்ந்து நல்ல மாசூலைக் கொடுக்கும். அதனால், உழவு, எருவு, மழை, நீர்க்கட்டு வெயில்காற்று வேலைமுதலியவைகள் ஒரேமாதிரியான போது, பஞ்சை விதையை நிலத்தில் அதிகமாய்க் கொட்டுவதைவிட நல்லவிதையைக் குறைத்து விதைத்தால்போதும். இந்த ராஜதானியின் அநேக பாகங்களில், நெல் பருத்தி விதைப்பில் அதிக விதையை விதைக்கிறார்கள். அப்ப யதிகவிதை விதைப்பதற்குப் பலகாரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்று பின் சொல்லியது. ஒரு பிடி விதை எடுத்துப்பார்த்தால், அதில் நொறுங்கிப்போயும், நன்றாய் முத்தாததும், முளைக்க மாட்டாததாயும் ஏதோ முளைத்தாலும் நன்றாய் வளர்ந்து பலனைக் கொடுக்க மாட்டாததாயும் உள்ள விதைகள் அநேகம் இருக்கும்.

முன்சொன்ன நல்ல குணங்களோடு, இரண்டாவது வகையென்று விவரித்த குணங்களும் உண்டானால், அந்த விதைகளை விதைத்தால், நல்ல மாசூலடைய அதிக ஏதுவுண்டு. இந்த இராஜதானியில் விதைக்கிற ஒவ்வொரு வகை விதையிலும் அநேக தினுசுகள் கலந்திருக்கும். கடப்பை, கர்னூல், பல்லாரி, அனந்தபூர்



ஜில்லாக்களில் கரிசல் காட்டில் போடுகிற பருத்தி வெண்பஞ்சையும், செம்பஞ்சையும் கொடுக்கிற விதைகளின் கலப்புதான். செம்பஞ்சு தினுசு இந்த கரிசல் நிலங்களில் ஓங்கிவளராது. அதிக பருத்தி வெடிக்காது. அதனால், இந்த செம்பஞ்சு விதைகலந்த விதையை விதைத்தால், வெண்பஞ்சை மாத்திரம் கலப்பில்லாமல் போட்டால் காட்டிலிருந்து வருகிற பருத்தியைவிட மாசூல் குறைந்துபோகும். இதுவுமல்லாமல், இந்த இரண்டுவித பஞ்சு தினுசுகளின் இழை நாணயமும் வேறு. நாணயத்தை உத்தேசித்து விலையும் மாறும். கலந்த பஞ்சைவிட கலப்பில்லாத வெண்பஞ்சு தினுசுக்கு விலை கூட்டிக்கொடுப்பார்கள். பருத்தியைப்போல் நெல்லிலும், மிளகாயிலும் விதைகள் கலந்தேயிருக்கும். மிளகாய் நட்டிருக்கிற ஒரு தோட்டத்திலேயோ அல்லது காட்டிலேயோ போய்ப் பார்த்தால் பத்துப் பன்னிரண்டு தினுசுகள் வரையில் பொறுக்கலாம். சில செடிகள் நன்றாய்க் காய்க்கிற தினுசுகள் அல்லாததினால், மாசூல்நன்றாய்க் காய்க்கிறதினுசைமாத்திரமே தனியே நட்டபோதுவருமளவுவாராது.

எவ்வொரு குடியானவனும் மேற்சொன்ன காரணங்களினால் நல்ல விதையையே விதைக்கவேண்டும். தான் விதை கட்டாமல் அயலாரிடத்தில் வாங்கவேண்டி வந்தால், நன்றாய் முத்தாததும் நொறுங்கிப்போயுமுள்ள விதையை வாங்கப்படாது. தனக்குச் சொந்த விதையிருந்தால், அதை நன்றாய் வளர்ந்த செடிகளிலிருந்து பொறுக்கி கருக்காய் பதர் இல்லாமல் ஜாக்கிரதையாய் வைக்கவேண்டும். இப்படிப் பண்ணினால் ஒருவன் விதையிலும் செட்டுப் பிடிக்கலாம். ராசியும் அதிகமாய்க் காணும்.

ஜி. ஆர். ஹில்சன்,
விவசாய டிப்டி டைரக்டர், வட இலாகா.

---

ஓர் ஐரோப்பிய ரயில்வே வேலைக்காரர் கல்கத்தா ஸெல்டா ஸ்டேஷனில் சென்ற மாதம் 15ந் தேதி திங்கட்கிழமை யிரவு இறந்து போனார். எண்டாலியில் இவர் மைத்துனி தன் குழந்தைகளுடன் வாசமாயிருந்தாள். ஷை 15ந் தேதி யிரவு 1 மணிக்கு ஷை ஸ்திரீயின் 14 வயதுள்ள மகன் படித்துக்கொண்டிருந்த பொழுது அப்பையன் தனது சிற்றப்பா தன் வீட்டுக்கு வரக்கண்டனன். உடனே அவன் தனது தாயை எழுப்பி "சிற்றப்பா வந்திருக்கிறார்" என்று சொன்னான். தாயாரும் அதே சமயத்தில் தனது மைத்துனரின் உருவத்தைத் தெளிவாகக் கண்டதாகக் கூறினாள். காந்த விளக்கை யேற்றிப்பார்த்தபோது அங்கு அவளையும் அவள் பிள்ளையையுந் தவிர ஒன்றையும் காணவில்லையாம். மறுநாள் தனதுமைத்துனர் ரயில் வண்டியேறி இறந்துபோனாரென்ற சமாசாரம் அவளுக்கு கிடைத்தது. பின் விசாரித்த பொழுது ஷை திங்கட்கிழமை யிரவு அவளும் அவளது மகனும் அவரைக் கண்ட நேரத்திலேயே, அவருக்கு மரணம் நேர்ந்ததென்று தெரியவந்தது. அவர் இறந்தவுடன் அவரது சூக்ஷ்மசரீரம் தனது மைத்துனியையும் அவள் பிள்ளைகளையும் பார்க்குமாறு வந்திருக்கலாம்.

## பெல்ஜிய தேசவாழ்த்து

### ஸ்ரீ-C. சுப்ரமண்ய பாரதியாரால் பாடப்பட்டது

அறத்தினால் வீழ்ந்து விட்டாய்
அன்னியன் வலிய னாகி
மறத்தினால் வந்து செய்த
வலிமையைப் பொறுத்தல் செய்யாய்
முறத்தினாற் புலியைக் காக்கு
மூழைவலைக் குறப்பெண் போலத்
திறத்தினால் எளியை யாகிச்
செய்கையால் உயர்ந்து நின்றாய். (1)

மானத்தால் வீழ்ந்து விட்டாய்
மதிப்பிலாப் பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட
வலிமைதா னுடைய னேனும்,
ஊனத்தால் உள்ள மஞ்சி
ஒதுங்கிட மனமொவ் வாமல்
ஆனத்தைச் செய்வோ மென்றே
அவன்வழி யெதிர்த்து நின்றாய். (2)

வீரத்தால் வீழ்ந்து விட்டாய்
மேல்வரை யுருளுங் காலை
ஓரத்தே யொதுங்கித் தன்னை
ஒளித்திட மனமொவ் வாமல்
பாரத்தை யெளிதாக் கொண்டாய்
பாம்பினைப் புழுவே யென்றாய்
நேரத்தே பகைவன் றன்னை
'நில்'லென முனைந்து நின்றாய். (3)

துணிவினால் வீழ்ந்து விட்டாய்
தொகையிலாப் படைக ளோடும்
பிணிவளர் செருக்கி னோடும்
பெரும்பகை யெதிர்த்த போது
பணிவது கருத மாட்டாய்
பதுங்குதல் பயனென் றெண்ணாய்
தணிவது நினைக்க மாட்டாய்
நில்லெனத் தடுத்தல் செய்யாய். (4)

வெருளுத லறிவென் றெண்ணாய்
விபத்தையோர் பொருட்டாக் கொள்ளாய்

சுருளலை வெள்ளம் போலத்
தொகையில்லாப் படைகள் கொண்டே
மருளுறு பகைவர் வேந்தன்
வலிமையாற் புகுந்த வேலை.
'உருளுகதலைகள், மான
மோங்குகென்றெதிர்த்து நின்ருய். (5)

யாருக்கே பகையென் ருலும்
யார்மிசை யிவன்சென் ருலும்,
ஊருக்குள் எல்லை தாண்டி
உத்தர வெண் ணிடாமல்
போருக்குக் கோலம் பூண்டு
புகுந்தவன் செருக்குக் காட்டை
வேருக்கு மிடமில் லாமல்
வெட்டுவே னென்று நின்ருய். (6)

வேள்வியில் வீழ்வ தெல்லாம்
வீரமும் புகழு மிக்கு
மீள்வதுண் டெலகிற் கென்றே
வேதங்கள் விதிக்கு மென்பர்
ஆள்வினை செய்யும் போதில்
அறத்திலே யிளைத்து வீழ்ந்தார்
கேள்வியுண் டெனே மீளக்
கிளர்ச்சிகொண் டுயிர்த்து வாழ்தல் (7)

விளக்கொளி மழுங்கிப் போக
வெயிலொளி தோன்று மட்டும்
களக்கமா ரிருளின் மூழ்குங்
கனகமா ளிகையு முண்டாம்
அளக்கருந் துயருற் ருலும்
அச்சமே யுளத்துக் கொள்ளார்
துளக்கற வோங்கி நிற்பர்
துயருண்டோ திணிவுள் ளோர்க்கே. (8)

---

காலஞ்சென்ற நமது எட்வர்ட் சக்ரவர்த்தியார் மகுடாபிஷேகத்திற்குமுன் அசௌக்கியமா யிருந்த போது, அவருடைய் நண்பரொருவர் அவர்க்கொரு செம்புக் காப்பைத் தந்தனராம்; அவர் அதனை ரட்சா பந்தனமாக நம்பி யிருந்தனராம்.

## அதிமதுரம்

லண்டன் நகரத்தில் 10,000 சிறுவர்களுக்கு காய் கறி ஆகாரமே ஆறுமாதம் கொடுத்து வந்தார்களாம். இன்னும் 10,000-சிறுவர்களுக்கு மாம்ஸ ஆகாரமே கொடுத்து வந்தார்களாம். ஆறுமாதங்களுக்குப் பிறகு இவர்களை வயித்தியரால் பரீட்சித்துப்பார்க்க, காய் கறி ஆகாரம் செய்த சிறுவர்களே தேக ஆரோக்கியம், திடகாத்திரம் நல்ல வலிவு வனப்பு முதலியவைகளை மற்றவர்களைவிட அதிகமாய் உடைத்தாய் இருந்தார்களாம். ஸார்ஜன்ட் ஸம்மர்ஸ் என்னும் ஒருவர் எழுதுவதாவது.—" என் வீட்டுக்கருகில் ஆடுமாடுகளைக் கொல்லும் கட்டட மொன்றுண்டு. காலையில் என் படுக்கை அறையிலிருந்து ஜன்னல் வழியாய்ப் பார்க்கும்போது ஒரு மாட்டை ஒருவன் கொல்லக் கழுத்தில் கயிறு கட்டியிழுத்தான், இன்னொருவன் அதின் வாலை முறுக்கி ஒடித்தான்; மற்றொருவன் அதின் கால்கள் மேல் கட்டையால் அடித்தான். இந்த கோரத்தை என் மனைவிக்குக் காட்டி நமது சாப்பாட்டுக்குவரும் இம்மாட்டின் பிராணஹிம்ஸை இதுவாயின் இனி ஒரு துண்டுகூட நான் சாப்பிடேன் என்றேன். என்மனைவி தானு மப்படியே யென்று தீர்மானித்தாள்.

அப்துல்கபூர் என்பவர் ந்யூ இந்தியாப் பத்திரிகைக்கு பின்வரும் சமாசாரம் எழுதியிருக்கின்றனர்.

சுமார் 3 மாதங்களுக்கு முன் நான் விஜயநகரம் போயிருந்தேன். அப்பொழுது ஒரு நாள், ஒரு சாமியார் அக்நியோகம் செய்யப்போகிருரென்று கேள்விப்பட்டேன். இரவு 8-மணிக்கு அவர் இருப்பிடத்திற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் சென்றனர். 9 மணிக்கு அவர் வெளியே வந்தார். உடனே இரண்டடிச் சவுக்கமும் 4 அடி ஆழமுமான ஒரு குழி தோண்டுமாறு உத்தரவு செய்தார். தோண்டியதும் அவர் மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு அதில் குதித்தார். அவர் உத்தரவுப்படி அவர் சரீரம் கழுத்துவரை மண்ணுல் மூடப்பட்டது. தலைமட்டும் தெரிந்தது. பின் அக்குழி இரண்டு மரப்பலகைகளால் மூடிக் காற்றுப்புகாமல் மண் மூடப்பட்டது. பின் சுமார் 20-வண்டி விறகுகள் அதன் மீது அடுக்கி இரவு 12-மணி வரை எரிக்கப்பட்டன. அதனைச் சுற்றி ஒரு பர்லாங்கு தூரம் வரை யாரும் நிற்க முடியவில்லை. ஜனங்களெல்லாம் ஆச்சரியத்துடன் நிர்ச்சப்தமாய் நின்று கொண்டிருந்தார்கள். ஆனுல் பெருங்காஷ்டத்தின் மத்தியில் குழிக்குள் வீற்றிருக்கும் மகான் மந்திரங்களைக் கூறுஞ் சப்தம் மட்டும் தெளிவாகக் கேட்டுக்கொண்டிருந்தது. சாமியார் இறந்துபோய் விடுவாரென்று சிலர் கூறினர். $12\frac{1}{2}$ மணிக்கு ஒரு சப்தங்கேட்டது. திடீரென்று அவர் காஷ்டத்தின் மத்தியிலிருந்து குழியினின்றும் தூய வஸ்திரத்துடனும் சுந்தர முகத்துடனும் தோன்றினர்! அவரிடம் சென்ற பலரை ஆசீர்வதித்துச் சில விஷயங்கள் கூறினர். அவர் கூறியவற்றைப் பற்றி விசாரிக்க எனக்குச் சாவகாசமில்லை.

SEP 1915

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள
சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை
462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] 1915ளு மேமீ [சஞ்சிகை 8

## ஒளிவளர் விளக்கு

1915ளு ஏப்ரல் மாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களின் மொத்த எண்ணிக்கை 296.

* * *

அனந்தப்பூர் ஜில்லாவைச்சேர்ந்த மிஸ்டர் B. S. செட்டி 1912-ம் வருஷத்தில் B. A. பரீட்சையில் தேறி ஆரிய வைசிய மஹா சபையோரின் உதவியைப் பெற்று, இஞ்சினியரிங் வாசிக்க இங்கிலாந்துக்குச் சென்றவர் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த எடின்பரோ யூனிவர்ஸிடியில் வாசித்து 1914-ம் வருஷத்தில் M. A. பரீட்சையில் தேறினர். அதன் பிறகு, அவர் லண்டன் யூனிவர்ஸிடியைச் சேர்ந்த B. Sc. பரீட்சைக்குப் போயிருக்கிருர். ஆரிய வைசியருடைய கல்வியும் உதவியும் எம்மட்டுஞ் செல்கின்றனவென்பதை நம்மவர்கள் கவனிக்கவிரும்புகிறோம்.

* * *

பஞ்சாப் மாகாணத்தில் வசித்துவரும் முகம்மதியரில் அரயன்ஸ் என்றொரு வகுப்பாருண்டு. அவ்வகுப்பார் அனைவரும் சில வருஷங்களுக்கு முன் வரையில் தோட்டக்காரர்களாய் சரியான படிப்பில்லாதிருந்தும், இப்பொழுது அவ்வகுப்பாரில் பலர் கல்வி பயின்று உயர்தர உத்தியோகங்கள் வகித்துவருகின்றனர். லாகூரிலுள்ள ஆனரபில் ஜஸ்டிஸ் ஷாடின் என்பவர் அவ்வகுப்பைச் சேர்ந்தவர். அவரைத் தவிர ஆனரபில் மியான் முகம்மத் ஷா என்பவர் பாரிஸ்டரா யிருக்கிருர். மிஸ்டர் மியான் சுவான்டின் என்பவர் வடமேற்கு ரயில்வேயில் டிராபிக் ஸுபரின்டெண்டெண்டா யிருக்கிருர். மிஸ்டர் மாலிக் டாஜுடீன் என்ற மற்றொருவர் அஸிஸ்டெண்டு அக்கவுண்டண்ட் ஜெனரலாய் இருக்கிருர். இவ்வாறு அவர்கள் முன்னேற்ற மடைந்ததற்கு படிப்பே காரணமாகு மாதலால், இதை இங்கு பிரஸ்தாபிக்கலானோம்.

* * *

பஞ்சாப் மாகாணத்தில் காடேஜ் இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்லப்படும் வீட்டுத் தொழில்களில் சில புதிதாய் உயிர் பெற்று முன்னுக்கு வரும் வழியில் இருக்கின்றன. இந்த மாகாணத்து கிராமங்களில் நடக்கும் சில தொழில்களைச் செய்வோர் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபித்துக்கொள்ளுவதில் உதவி செய்ய கவர்ன்மெண்ட் தயாராயிருக்கிருர்களென்று சொல்லப்படுகின்றது. கவர்ன்மெண்டின் உதவியைப்

பெற்று பனிரெண்டு நெசவுக்காரர் ஸொஸைடியும், இரண்டு தச்சர்கள் ஸொஸைடியும், இரண்டு சக்கிலியர் ஸொஸைடியும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மற்றத்தொழில்கள் செய்வோரும் அங்கங்கே ஸொஸைடிகள் ஸ்தாபித்துக் கொண்டிருக்கிறார்கள். காஞ்சீபுரத்திலும் நெசவுக்காரர்கள் ஸொஸைடியிருக்கிறது. ஐந்துதொழிற்காரர்களுக்கும் தென்னாட்டில் ஐக்யநாணய சங்கங்கள் ஏற்படுதல்வேண்டும்.

* * *

உங்கள் தாய்நாடான இந்துஸ்தானத்திற்கு நீங்கள் ஏதேனும் ஊழியஞ் செய்யுமாறு முயற்சி செய்யுங்கள். நீங்கள் கௌரவமுள்ளவர்களாக இருப்பதுடன் மற்றவரும் கௌரவமுள்ள புருஷர்களாகுமாறும் உதவி செய்யுங்கள். நமது வாழ்நாள் சுருக்கமானதாதலால், ஒவ்வொரு நிமிஷத்தையும் கணக்கிட்டு வேலைசெய்யவேண்டும். உங்கள் சிறிய கிராமத்தையோ, நகரத்தையோ, மாகாணத்தையோ சேர்ந்தவர்களென்னும் குறுகிய கொள்கைகளை நீங்கள் ஒழித்துவிடுங்கள். நீங்கள் அனைவரும் பரந்துவிரிந்த பாதகண்டவாசிகள் என்று கருதிக்கொள்ளுங்கள். ஓர் ஊரைவிட மற்றொரு ஊர் சிறந்ததென்றும், ஒரு மாகாணத்தைவிட மற்றொரு மாகாணம் சிறந்ததென்றும் கருதுவது பேதமையாகும். இப்பொழுது புதிய இந்தியாவில், இவன் பஞ்சாபி, இவன் மகாராஷ்டரன், இவன் வங்காளியென்னும் வேற்றுமை ஒன்றும் கிடையாது; நாம் அனைவரும் இனிப் பாரதமாதாவின் மக்களான பாரதர்களாக வாழ்வோம்.

உங்கள் வாழ்க்கையில் ஓர் உறுதியான நோக்கம் இருக்கவேண்டும். உங்களிடம் உறுதியான மனோசக்தியிருப்பின் முடியாதவிஷயம் ஒன்றுமில்லை. முடியாது, தெரியாது என்னும் பதங்கள் பாரதபுத்ரர்களின் அகராதியில் இருத்தலாகாது. நல்ல முயற்சிகளில் ஆரம்பத்தில கஷ்டங்கள் நேர்ந்தபோதிலும் இறுதியில் வெற்றியடைதல் நிச்சயம். முயற்சிபுரிந்து, அதனால் வரும் சிறிய கஷ்டங்களைப் பொறுத்து, பின் வெற்றியடைந்து உங்கள் உயர்ந்த நோக்கங்களைப் பூர்த்திசெய்வது உங்கள் கடமையாகும்.—என்று ஜெகதீச சந்திரராயர் இந்தியருக்களித்த ஹிதோபதேசம், எல்லோராலும் கவனிக்கப்படத்தக்கது.

## பண்டித மார்க்கசகாய ஆசாரியார்

### ஸ்ரீ அத்தியாபக லிங்காச்சாரியார்

(முன் 137-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ பண்டிதாவர்கள் காலத்தில் படைவீடு என்னும் பட்டணமானது ஜீரணதசையி லிருந்தாலும் அதில் ஜனங்கள் குடியிருந்தார்கள். பல தேவாலயங்களில் பூஜை நடந்தது. பல சமயாசாரியர்களின் மடங்களுமிருந்தன. அப்போதிருந்த நம் விஸ்வகர்ம சமயாசாரியாகிய ஸ்ரீ மகா தேவாசாரிய சுவாமிகள் மடமும் அவற்று ளொன்றுதான். இப்போது அப்பட்டணம் முற்றும் கைவிடப்பட்டு அதையடுத்த ஓரிடத்தில் கிராமமாயிருக்கிறது. ஆகிலும், அதன் இடிபாடுகள் இன்றும் காணலாம். அதுவே நம் பூர்வீகர்களில் ஒரு பெருங் கூட்டத்தாரின் முக்கிய வாசஸ்தலம். அதினின்றே முதல் முதல் நம்முன்னோர்களின் பிரதிக் கூட்டத்தாரும் கூட்டத் தலைவர்களும் வெளிப்பட்டு மற்றைத் தமிழ் நாடுகளிற் போய்ப் பரவியது. அதிலிருந்த நம் சமயாசாரியராகிய ஸ்ரீ மகாதேவாசாரிய சுவாமிகள் தம் மடத்தில் வேதாகம புராணங்களைத் தக்க மாணாக்கர்களுக்குப் பயிற்றி அவர்களைச் சமய தீக்ஷாதிகாரிகளாய்த் தெரிந்து அவர்களால் இந்நாட்டில் சமயாசார சீர்திருத்தம் செய்வித்தார். ஸ்ரீ பண்டிதாவர்களும் அத்தீக்ஷாதிகாரிகளில் ஒருவரும், மேற்படி சுவாமிகளின் வர்க்கத்தைச் சேர்ந்தவருமாவர்.

ஸ்ரீ பண்டிதாவர்கள் தாம் சஞ்சரித்த பிரதேசங்களில் சில முக்கிய பட்டணங்களில் புரோகிதம் பயிலும்பாடசாலைகள் ஏற்படுத்தி அவற்றைத் தம் கண்பார்வையில் வைத்து நடத்திவந்தார். அப்பாடசாலைகளில் வேதோக்தபுரோகித பாடம் போதிக்கப்பட்டுவந்தது. சிலவருடங்களுக்குள் அவற்றில் புரோகிதர் கல்வி பயின்று தேரிய புரோகிதர்கள், தம்மதத்தாருக்கு புரோகிதஞ் செய்யத் தலைப்பட்டார்கள். படைவீட்டு குருசுவாமியார் மடத்தில் சமயதீட்சை பெற்ற தீக்ஷாதிகாரிகளால் செய்யப்படும் புரோகிதம் எங்கும் நிராடங்கமாய்ச்செல்வாக்கு பெற்று வந்தது. ஏனென்றால், அந்த தீட்சாதிகாரிகள் பாரம்பரியமாய் ஸ்தபதிவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். ஸ்ரீ பண்டிதாவர்கள் அவ்வழக்கத்தை மாற்றி, வைதிகாசாரமுள்ள பரம்பரையிற் பிறந்தவர்கள். எல்லாம் தமக்குத்தாமே புரோகிதம் செய்துக் கொள்ளலாமென்று அவர்களுக்கு புரோகிதம் கற்பித்து தேற்றிய



தால் அவர்களால் செய்யத்தொடங்கின புரோகிதம், பஞ்சாங்கப் பார்ப்பாரால் தடை செய்யப் பட்டது. சில விடங்களில் தடையின்றி நடந்தேறி வந்தது. தங்களுக்கிருந்த செல்வாக்கு அனைத்தும் போகிற தென்னும் கருத்தினால் பஞ்சாங்கப் பார்ப்பார்கள் தடைசெய்யத் தொடங்கினார்கள்.

புதிதாய்த் தலையெடுத்த புரோகிதர்களால் சித்தூர் ஜில்லா சதுப்பேரி என்னும் கிராமத்தில் முதலில் சிரார்த்தமும் பிறகு இரண்டு கலியாணங்களும் செய்யத் தொடங்கி அவ்வூரிலும் அக்கம்பக்கம் கிராமங்களிலும் உள்ள பஞ்சாங்கப் பார்ப்பாரார் தடுத்து விடப்பட்டன. அதின்மேல் அலுவலுக்குரிய ஸ்ரீ வெள்ளையாசாரியார் புதுக்கோட்டைக்குப்போய் ஸ்ரீ பண்டித ரவர்களை அழைத்து வந்து அவரால் மேற்படி அலுவல்கள் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கையில் எதிரிகள் பிரவேசித்து தடுக்க எத்தனப்பட்டிருப்பதைக் கண்ட பண்டிதாவர்கள் அவ்வூரிலுள்ள சில பெரிய மனுஷியாளை மத்தியஸ்தர்களாய்க் கோரி அவர்கள் முன்னிலையில் தமக்குள்ள சாஸ்திரோக்தமான வைதிக பாத்தியதையை ஸ்தாபித்தார். எதிரிகள் பல கேள்விகள் கேட்டார்கள். பண்டிதாவர்கள் அவற்றிற்கெல்லாம் தக்க விடை யளித்துவந்தார். தங்கள் மதாசாரப்படி தாங்கள் செய்துக் கொள்ளலாமென்று மத்தியஸ்தர்கள் சொல்லியும் எதிரிகள் கேளாமல் பலாத்காரமாய் அலுவலைத் தடுத்துப்போட்டார்கள். உடனே அலுவலுக்குரியவர்கள் ஜில்லா மாஜிஸ்டிரேட் துரையவர்களிடம் பிராதுசெய்ய மாஜிஸ்டிரேட் துரையவர்கள் எதிரிகளுக்கபராதம் விதித்து நஷ்டத்தைக்குறித்து அதாலத்து கோர்ட்டில் வழக்கிட்டுக்கொள்ளும்படி உத்திரவளித்தார். வாதிகள் சித்தூர் சதர் அதாலத்து கோர்ட்டில் வழக்கிட்டு பலவருஷங்கள் அலைந்து முடிவில் தாம் வைதிகாசார புரோகிதம் செய்துக்கொள்ளலாமென்றும் அதில் எதிரிகளாவது இதரபிராம்மணராவது பிரவேசிக்கக்கூடாதென்றும் எதிரிகளால் தங்களுக்கு நேர்ந்த நஷ்டத்தை எதிரிகள் தமக்குக் கொடுக்கும்படியாயும் தீர்ப்புபெற்றார்கள். இவ்விவகாரத்தில் ஸ்ரீபண்டிதாவர்களே இறுதிவரையில் முன்னின்று காரியசாதனம் செய்துவைத்தார். இந்த தீர்ப்பினால் எதிரிகள் திருப்தி யடையாமல் மத்தியகண்டம் புரொவின்ஷியல் கோர்ட்டில் அபீல்செய்தார்கள். அதிலும் கீழ்க்கோர்ட் தீர்ப்பே காயம்செய்யப்பட்டது. அதனாலும் எதிரிகள் திருப்தியடையாமல் ஸ்பெஷல் அபீலுக்கு உத்திரவுகொடுக்கும்படி மனுசெய்துக்கொள்ள கோர்ட்டார் அதைத் தள்ளிவிட்டார்கள். இந்த வியாச்சியந் தொடங்கி முடிவாய்ப் பைசலாக பன்னிரண்டு வருடங்களுக்கு மேற்பட்டுவிட்டது. இது முடிந்தவுடனே ஸ்ரீபண்டிதாவர்களுக்கு இதற்கென்றே கௌரவ தாம்பூலமும் கொடுக்கப்பட்டது. இதன்மேல் ஸ்ரீபண்டிதாவர்கள் தாம் நடத்திவந்த சமயவிசாரணையை முன்னிலும் அதிகமாய்ப் பெருக்கி ஆசாரசீர்திருத்தம் செய்துவந்தார். இதனிடையில் இவர்க்கு நல்ல முகூர்த்தத்தில் தமக்குப்பின் தர்மகாரியங்களைப் பின்பற்றி மகாகீர்த்திவகித்த ஸ்ரீமான் வெங்கட சுப்பாசாரியார் அவதரித்தார். இவர்க்கினியவர் சுப்பராயசாரியாரென்பார். இவ்விருவரும் தம் தந்தையாரிடமே கல்விபயின்றுவந்தார்கள்.

இவர்களது பூர்வக்ஷேத்திரம் இனுங்கூர்; பிறகு, புதுக்கோட்டை என்று சொல்லப்படுகிறது. அதிலிருந்து வல்லம் தேவாலய சிற்பிகளாயிருந்தார்கள். ஸ்ரீபண்டிதாவர்கள் தம் தந்தையாரிடம் வடமொழி தென்மொழிகளில் சகலகலையும் தேர்ந்து படைவீட்டில் ஸ்ரீமகா தேவாசாரிய சுவாமிகளிடத்தில் வேதாகம புராணங்கள் பயின்று சமயதீட்சையும் தீக்ஷாதிகாரமும் பெற்று சமயவிசாரணையிற் றலையிட்டு இத்தொண்டை மண்டலத்தின் பலபாகங்களிலும் சஞ்சரித்து ஆசாரசீர்திருத்தஞ்செய்து முக்கியமான சில புரோகித பாடசாலைகள் ஸ்தாபித்து அவற்றில் தேறும் புரோகிதர்களை வேண்டிய விடங்களுக்கனுப்பி சமயவாதம்புரிந்து ஜெயசீலராய் விளங்கினார். கொஞ்சகாலத்தில் தம் தோளிலிருந்த சமயவிசார பாரத்தை தம் ஜேஷ்டபுத்திரர் ஸ்ரீமான் வெங்கட சுப்பாசாரியர் தோளில் சுமத்தித் தாம் பரமபதமடைந்தார். இவர் திருவவதாரதினமும் ஐக்யமுற்றதினமும் கண்டுபிடிக்கக்கூடவில்லை. இவர் ஜெகத்பிரசித்தியடைந்த தீர்ப்பின் நாளாகிய 1820ஞு ஜூன் மீ 28-தேதியை இவரைக்கொண்டாடும் தினமாய்ப் பாவிக்கலாம்.

அச்சிட்டபடிக்கு சித்தூர்தீர்ப்பு கோர்டு ரெகார்டை ஒத்திருக்கவில்லையென்று சில நண்பர்கள் பிரஸ்தாபிக்கிறார்கள். ஆனால் அதில் உதகரித்த பிரமாணங்களும் விரதங்களும் உண்மையும் சமயஸ்தாபனத்திற் கனுகுணமுமானவை, தீர்ப்பு (Judgment) ஒற்றுமையும் வேற்றுமையும் கலப்புற்றிருக்கிறது. அது அவ்விதமாய் ஸ்ரீ பண்டிதாவர்கள் காலத்துக்கும் அவர் புத்திரர் காலத்துக்கும் பிந்தி பலவருடம் சென்றதன்மேல் சிலர் கூடி அச்சிட்டது. (தொடரும்)

## சுரங்கத்தொழில்கள்

(139-வது பக்கத்தொடர்ச்சி)

“ சத்தியவசனன் எழுதியது ”

(c) செம்பைப்பற்றிப் பேசும்போதுஅது எங்கும் பரவிய உலோகமல்ல. அது கடப்பை ஆரவல்லி மலைத் தொடர்களில் அகப்படுகிறது. சிங்கபூர் ஜில்லாவிலேயும், டில்லும் இலாகாவிலும் விசாலித்த செம்புத் தாது பிரதேசம் இருக்கிறது. சென்னை இராஜதானியில் கடப்பை கர்நூல் நெல்லூர் ஜில்லாக்களிலும், இராஜபுதனத்திலும், ஆஜ்மீரிலும், இன்னும் அநேக சுதேச ராஜ்யங்களிலும் உண்டாகிறது. ஆக்ரா அவுட் மாகாணங்களில் குமாயூன், கர்வால் என்னுமிடங்களிலும், வங்காளத்தில் ஹஜாரிபாக் என்னும் ஜில்லாவிலும் அகப்படும்.

(d) வெள்ளி, செம்பைக்காட்டிலும் குறைவாகத்தான் அகப்படுகிறது. வெள்ளி தனித்து அகப்படுவது அரிதாயிருக்கிறது. ஆனால் சிலபாகங்களில், மைசூரில் அகப்படுவதுபோல், பொன்னுடன்கலந்து தான் அகப்படுகிறது. அல்லது காரீயத்தோடாவது செம்போடாவது கலந்து அகப்படுகிறது. சென்னை இராஜதானியில் கடப்பை, கர்நூல் ஜில்லாக்களிலும், பங்காளத்தில் பகல்பூர் பிராந்தியத்திலும் உலோக கலப்பான வெள்ளி அகப்படுகிறது. பம்பாய் இராஜதானியில் டார்வார் மாகாணத்தில், கப்பல்கேட், மலை அருவி யாறுகளில் கலப்பில்லாத வெள்ளி சிறிதுசிறிது அகப்படுகிறது.

(e) இரும்பைப்பற்றி பேசுங்கால், அவ்வுபயோகமுள்ளதாது பிரிட்டிஷ் மாகாணங்களிலும் சுதேச இராஜ இலாகாவிலும் ஏராளமாய் அகப்படுகிறது. ஏறக்குறைய எல்லா ஜில்லாக்களிலும் சிறிது சிறிதாகவோ அல்லது அபரிமிதமாகவோ விலையுயர்ந்த கருந்தாது அகப்படுகிறது. இந்த தீபகல்பத்தின் சிலபாகங்களில் கனுக் காண்போனுடைய கணவையும் கடந்த அபரிமித அளவாக அயக்கலப்பு பிருதிவி கிடைக்கிறது. சென்னை இராஜதானியில் சேலம் ஜில்லாவில் இவ்வுலோகத்தின்விருத்தி ஒப்புவமையில்லா உயர்வை அடைந்திருக்கிறது. இவ்விடத்தில் குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் பலவித சுத்தமான அயம் அகப்படும். இவ்விடத்தில் அகப்படும் அயம் சிதறுண்ட கட்டிகளாக அகப்படவில்லை. ஆனால் ஆச்சரியத்தை உண்டாக்கத்தக்க விசாலமும் அகலமும் உடைய பள்ளத்தாக்குகளில் அகப்படுகின்றது. அவ்விடத்து அகப்படும் உலோகம் உயர்ந்ததாயும் அளவில் ஆயிரக்கணக்கானமிலியன் டன்கள் உள்ளதாயும் மதிக்கப்படுகிறது. மத்திய மாகாணங்களில் சண்டா ஜில்லாவில் அகப்படும் கருந்தாது வியப்பை உண்டாக்கத்தக்க விலையுயர்ந்ததாயும் அபரிமிதமாகவும் காணப்படுகிறது. டிவால் கோன் என்கிற இடத்திற்கருகில் காண்டேஷ்வார் என்கிற மலை இருக்கிறது. அது பூமி மட்டத்திற்கு 255 அடி உயர்ந்து இருக்கிறது அம்மலை முழுவதும், அநேக வருஷங்களுக்குவேண்டிய அயத்தை இந்தியா முழுவதிற்கும் சேகரித்துக் கொடுக்கத் தகுந்தபடி போதுமான உலோகத்தை உடையதாயிருக்கிறது. வங்காளத்தில் ராணி கஞ்சு என்னுமிடத்தில் அகப்படும் இரும்புலோகம் 1400 அடி கனமுள்ள இரும்புக் கல் பாளங்களாக இருக்கின்றது. இங்கே இரும்பு வேலையை ஸ்தாபிக்கிற பக்ஷத்தில், நெடுநாள் வரைக்கும் இரும்பை சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்க வேண்டுவதில்லை. சிந்துவில் காந்தப் பாளங்களும் விலையுயர்ந்த மங்கல் நிறமான இரும்பும் அகப்படுகின்றன. குவாலிடர் இராஜ இலாகாவில் பேர்போன உயர்ந்த இரும்பு அகப்படுகிறது. இன்னும் அநேக இதர சுதேச ராஜ்யங்களில் ஏராள இரும்பு அகப்படுகிறது.

(f) நிலக்கரி. இந்தியா ஏராளமான நிலக்கரி நிலைகளை உடையதாயிருக்கிறது. நமக்குத் தெரிந்தவரையில் நிலக்கரி முழுவதும் காண்டுவானா மலைத்தொடரில் அகப்படுகிறது. நிலக்கரி பூமியெல்லாம் மத்திய மாகாணத்திலும் வடகிழக்கு மாகாணத்திலும், மேற்கு வங்காளத்திலும் கீழ்மாகாணத்திலும், நிஜாம்ராஜ்யத்திலும் அகப்படுகிறது. நிலக்கரி விஸ்தீரணம் 35,000 சதுரமைல் என்று மதிக்கப்பட்டிருக்கிறது. அதிக விஸ்தீரணமான நிலக்கரி வயல் கல்கத்தாவிலிருந்து 120-மைல் தூரத்திலுள்ள மேற்கு வங்காள எல்லைப்பிராந்திய மலைத்தொடரிலுள்ள ராணிகெஞ்சில் உள்ளது. அங்கே அகப்படத்தக்க நிலக்கரி 14000மில்லியன் டன் என்று மதிக்கப்பட்டிருக்கிறது. நிலக்கரியின் நிலைகளைக் கண்டு பிடிக்கும் வேலையே இன்னும் பூர்த்தியாகாமல் அரை குறையாயிருக்கிறது. மானிட முயற்சிக்குள்ளாகாத முழு நிலக்கரி விஸ்தீரணம் சுதேச இராச்சியங்களில் இருக்கிறது. மால்வா, கத்தியவார், கட்சு, பண்குல்கண்டு, ரீவா, நிஜாம் இராஜ்யம் முதலியவை இவ்விஷயத்தில் ஏறக்குறைய இன்னும் கண்டு பிடிக்கப்படாத பிராந்தியங்களே. நமது நிலக்கரி மதிப்பு 20000-கோடி ரூபா. பிரகிருதிசக்தியின் தயாளகுணத்தின் கொடையானது, (அவை யெங்கேயிருக்கிறதென்பதையும் எப்படி அடையலாம் என்பதையும் மாத்திரம் அறிந்து உபயோகத்திற்குள்ளாக்குவோமானால்) எதிர்காலத் தொழிற்றுறை விர்த்திக்கு அதிக முக்கிய உபயோகமாயிருக்கும். இங்கிலாந்தின் சம்பத்தின் மேன்மைக்கு முக்கிய மூலகாரணமாக இருப்பது இரும்பும் நிலக்கரியுமே. பிராஞ்சு, ஜர்மனியில் நூதன தொழில் மார்க்கங்கள் ஏற்பட்டிருப்பதற்கும் அவையே முக்கிய அஸ்திவாரமாகும். சுரங்கப்பொருள் ஆதாரத்தால்தான் ஆஸ்திரேலியாவானது [illegible] சக்கிரவர்த்தியார்க்கு ஆதீனமான இராஜ்யங்களுக்குள் முதற்றரமாயிருக்கிறது.



## ஆண்மை-தர்மகுணம்

தன்னூர்-ஸ்ரீ T. தங்கவேலு ஆச்சாரியார்

தாம் ஆண்மை உள்ளவர்களாகவோ, அல்லது ஆண்மையுள்ளவரெனப் பிறரால் மதிக்கப்படவோ சிறுவர்கள் விசேஷமாக விரும்புகின்றனர். இந்த விருப்பம் நல்லதுதான். பல சிறுவர்கள் தாங்கள் ஆண்மையுள்ளவர்களாயிருக்க வாய்த்தகாலத்திலும் அப்படி யிருப்பதில்லை. அவர்கட்கு ஆண்மைக்குணம் இப்படிப்பட்டதென்பதும் தெரியாது. அதைப்பெறத் தாம் பாடுபட வேண்டியவழி இன்னதென்பதுந் தெரியாது. பலர், ஒழுங்காய் மீசை வைத்து, தலை மயிரை ‘க்ராப்’ செய்துகொண்டு, பொன் சங்கிலி, மூக்குக்கண்ணாடி, சரிகை தலைப்பாகை அல்லது, பலவர்ணங்களையுடைய லேஞ்சிகள், குட்டைகள் இவ்விதமான உடைகளைத் தரித்து வெகு அழகான பிரம்புகளை கையிற்பிடித்து அலங்காரமாய் சுழற்றிக்கொண்டு மோதிரங்களிட்டுக் கொண்டு போவதன்னியில் ஐயோ பரிதாபம் பரிதாபம், ஆண்தன்மையை வேரோடழிக்கக்கூடிய கொடிய புகையிலையை வெற்றிலைபாக்குடன் உபயோகிப்பதுமன்றி புகைச்சுருட்டு பிடித்து நாசமாகின்றனர். விபசாரத்திற்கும் குருக்களாகின்றனர். இதுவே ஆண்மை என்னும் நினைவு மிகப்பிசகான நினைவு. நற்குண நற்செய்கைகளுடைத்தாயிருத்தலே ஆண்மையாகும்.

2. ஆண்மைக் குணமுள்ளவன் தைரிய சாலியாயிருக்கவேண்டும், தைரியந்தான் முதன்மையானது, பகைவர்க்குப் பயந்து பின் வாங்காமலிருக்கின்றதும் பயமிப்படிப்பட்டதென்று அறியாதிருப்பதும், தன் சொந்த சுகலாபங்களைத் துறந்திருப்பதும், தான் விரும்பினதைக் கைக்கொள்ளும் கருத்தில் கண்ணாயிருப்பதும், சமயம் வந்தபோது எவ்விதமான துன்பத்திற்கும் உயிர்க்கும் துணிந்து நிற்பதும், இவைகளுக்கெல்லாம் மேலாய் ஒன்றுக்கு மிணங்காதிருப்பதுவே மேலான ஆண்மைக்குணம் என்று ஒருவன் கருதுகிறான். இவனிடத்தில் ஆண்மைக்குணம் சிறிது உண்டு. முன் சொன்னவர்களிடத்தில் அது அமைந்திருப்பது சந்தேகம். இவன் ஆண்மைக்குணத்தில் ஓர் சிறிது மாத்திரம் பெற்றவனேயன்றி முற்றும் பெற்றவனன்று. தைரியமும், கஷ்ட நஷ்டங்களைத் தாங்கும் பொறுமையுமே மாத்திரம் ஆண்மைக்குணமல்ல அது சிறந்தகுணமாயினும் மிருகங்களிடத்திலுமுண்டு. அது தேகசம்பந்தமான குணமேயன்றி மனதைப்பற்றியதன்று. மனிதரைப்பார்க்கிலும் மிருகங்களிடத்தில் அவை மிகுதியாயுண்டு. அதனால் நாய் முதலியவை ஆண்மையுள்ளவையாகுமா ? ஒருவன் தைரியமாயும் வருத்தங்களை மதியாதவனுயுமிருக்கலாம். அதனோடு கொடியனும் துஷ்டனுமாயிருக்கலாம்.

3. இன்னொரு தன்மையுள்ளவன் பலவர்ணமான உடைகளையணிந்து மல்யுத்தங்களை மேலாகப்பேசுகிறான். மேலும், பந்தயம், பலவகை வீரச்செயல் முதலியவற்றில் வெற்றிபெறும் ஆற்றலுள்ளவன் தான் ஆண்மைக்குணமுள்ளவனென்றும், தைரியமாய் வாகனமேறிச் செல்பவனும், குறிதவறாத வில்லாளியும், துணிவுள்ள வீரனும், கைச்சுறுக்கும் கண் கூர்மையுமுள்ளவனும், ஆகிய இவர்கள் தான் ஆண் தன்மையுள்ள குணமுடையவர்களென்று கூறுகிறான். இவன் இரண்டாம் பிள்ளையை சிலவழிகளிலொத்திருக்கிறான். இவர்களிருவரும் தேகபலம், சுகதுக்கத்தைத் தாங்குந் திறம், கஷ்ட நஷ்டங்களுக்குச் சலியாத விடாமுயற்சி, இவைகளைத்தான் ஆண்மைக்குரிய குணமென்று கருதினால் அவர்கள் பிசகினவர்களே. சுறுசுறுப்பான விளையாட்டுகள் மிகச் சிறந்ததுதான். ஒரு வேலையுஞ்செய்யாது மிகக் கேடுகெட்ட ஒன்றைச் செய்துகொண்டு வருபவரும், பள்ளிக்கூடத்தில் ஒரு போதும் விளையாடாமல் மந்தமாய்ச் சோம்பி உட்கார்ந்திருப்பவரும் ஒன்றுக்கு முதவார். பந்தடித்தும், போர் செய்யப்பழகியு மில்லாதவன் ஆண்மையுடையவனல்ல வென்பது சிலர் கருத்து. அது பிசகு. அது சரியானால் தேகபலமில்லாத எவனும் ஆண்மையுடையவனாகயிருக்கலாகாதே. மிகுந்த தைரியசாலியாயிருக்குஞ் சிலர் தேகபல மற்றிருக்கின்றனர். அப்படி தேகபலமின்றி தைரியசாலியாயிருந்தவன் லார்டு நெல்சன் என்னும் பெரிய கப்பற்படைத்தலைவன்.

4. சுயநலங்கருதாது தன் கடமை என்றெண்ணி ஒன்றைச் செய்பவனிடத்தில், தான் ஆண்மைக்குணம் அமைந்திருக்கும். (a) உண்மை (b) தைரியம், (c) அடக்கம் (d) வணக்கம், (e) மனத்தூய்மை, (f) சாந்தகுணம் (g) ஜீவகாருண்யம், (h) வலிமை, (i) நீதி, (l) விவேகம், ஆகிய இப்பத்து குணங்களில்லாத எவனும் எப்போது, மிதுவனியில் பெருமைபெற்று வாழ்ந்ததில்லை.

இனி நமது குலத்தின் ஈடேற்றத்திற்குக் காரணமாயிருப்பவர்கள் நமது குலச் சிறுவர்களானதால் இந்த விஷயங்களில் தம்மக்கள் விஷயத்திற் கவலையெடுத்து இவைகளுக்குக் காரண பூதமாய் விளங்கக்கூடிய கல்வியையும், நற்றொழிலையும், தம்மக்களுக்கு வருத்துவது தான் பெற்றோர்களின் கடமை. இனி, தர்மகுணம் என்னவென்பதைச் சற்று கவனிப்போம்.

5. தருமகுணத்தின் உண்மையான சொரூபம் இத்தன்மை என்பதை இக்காலத்திலெல்லோரும் மறந்து, இரப்போர்க்கு ஐயமிடுவதே தர்மமெனக் கருதியிருக்கின்றனர். நாம் எந்த நோக்கத்துடன் ஒருவனுக்குப் பிச்சையிடுகிறோமென்று ஒருவரும் கருதுகிறதில்லை. தர்மகுணம் ஒவ்வொருவருடைய செய்கையினால் வெளிப்படுவதாயினும் வாஸ்தவத்தில் அது உள்ளத்திலமைந்திருக்கும் ஓர் நற்குணமேயன்றி செய்கையன்று. மனதிலுங்கூட அதர்மமான எண்ணம் கொள்ளாமல் அதிஜாக்கிரதையா யிருக்கவேண்டியது. பிறர் மனம் நோவாதபடி அவர்க்கு இதமாய் நடந்துகொள்ளும் வழி நல்ல வழியாயின் அப்படி நடந்து கொள்வதும் தர்மத்திற் சேர்ந்ததுதான். நமக்கு சில விஷயத்தில் கோபமுண்டாகின்றது. அதை நிவர்த்திக்க ஒரு வழியுண்டு. அதாவது எதிரியின் நிலையில் தாம் நிற்பதாய் நினைத்து நம்மைக்குறித்து பிறர், நாம் கூறக்கருதுங் கொடுஞ்சொற்களை உரைத்தால் அது எவ்விதமிருக்குமென்பதைச் சீர்தூக்கிப் பார்ப்பதே தர்மகுணமுள்ளவர்களுக்கழகு. இதனால் புருஷத்தன்மை இதுதானென்பதை அவர்களுக்கு பூராவும் காட்டாமலிருந்து விடலாகாது.

6. பரோபகாரஞ் செய்யப் பின் வாங்காதிருப்பதும் தர்மகுணமே. ஒருவரிடத்தில் நமக்கு அபிமானமிருந்தால் அவர்களுக்கு உதவி செய்கிறோம். அவர்கள் வருந்தக்காணுகையில் நாமும் வருந்தி அவர்களுக்கு அவசியமாய் வேண்டுவனயாவை என்பதை நன்குணர்ந்து அதைப் பூர்த்திசெய்ய உசிதமான வழியின்னதென்று நாடிச்செய்யச் சொல்லுவோமல்லவா? அப்படி அவர்கள் க்ஷேமத்தைக் கருதி கொடுக்கவேண்டுமென கருதிச்செய்வதே நன்மையை விளைவிக்கும். தாம் கொடுக்கும் பிச்சை உழைக்கக்கூடிய சக்தியுள்ளவர்களை உழைக்கவொட்டாமல் சோம்பேறிகளாகச் செய்துவிடுமென்று தெரிந்தும் சிலர் பிச்சையிடுகின்றனர். பிறர் கொடுப்பதைப் பார்த்து தாமும் கொடுக்க வேண்டுமென்று சிலர் கொடுக்கின்றனர். சிலர் புகழை உத்தேசித்துக் கொடுக்கின்றார்கள். அதுவேயொழிய தம்முடைய ஈகை அவர்களுக்கு நன்மையைப் பயக்குகின்றதோ இல்லையோவென்பதைச் சற்றும் கவனிப்பதில்லை. உண்மையான தர்மகுணமானது பிறருக்காகத் தான் வருந்தி அவர் தமக்குத்தாமே துணையாவதற்கு வேண்டிய வழிகளைத் தேடிக்கொடுக்கும் படியானது.

6. சில விடங்களில் இரப்போர்க்கும் ஈவோர்க்கும் நன்மை பயக்காத அத்தனை அகங்காரத்தோடு தானங் கொடுக்கப்படுவதுண்டு.

ஓர் போர் வீரனைப்பற்றிய கதையொன்றுண்டு. அதாவது—அவன் சூரியோதயத்தில் அரண்மனை வாயிலைக்கடந்து கோட்டைக்கு வேளியே வந்துகொண்டிருக்கையில் மிக்க பசியால் வருந்திக்கிடக்கும் நோயாளியைக் கண்டதும் அவன் ஒரு பொன்நாணயத்தை அவன் எதிரே எறிந்துவிட்டுச் சென்றான். அந்த நாணயத்தைக் கண்டும் அவன் அதையெடுக்கவில்லை. பிறகு அவ்வழியே வந்த ஒரு வழிப்போக்கன் அவனைக் கண்டு. இரங்கி அவனைக் கையைப்பற்றி அருகிலிருந்த குளக்கரைக்கு அழைத்துச்சென்று தன்னிடமிருந்த ஆகாரத்தில் சரிபாதி அவனுக்குப் பகிர்ந்து கொடுத்து அவனை உண்பிக்கச் செய்து அக்குளத்திலிருந்து ஜலம் கொண்டுவந்து அந்நோயாளிக்குக் கொடுத்து அவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சென்றான். முன் பொற்காசையெறிந்த போர்வீரனும் தருமஞ் செய்தவனேயாயினும் தர்ம குணத்தைக் காட்டினவன் இந்த எளிய வழிப்போக்கனேயாம். ஆதலின், பிறர் நிலையைப் பார்த்து உண்மையாகப் பரிதாபப்பட்டு அதற்கேற்றபடி நடப்பதே உபகாரம்.

8. பிறருக்கு நேருந் துன்பங்கள்யாவையும் தாங்கத்தக்க பொறுமையும் திறமையுங்கூட தர்ம குணத்திற் சேர்ந்தன.

“ தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிப்பார் விழுமியோர் ”

என்றபடி, தர்மகுண முள்ளவன் பிறர்க்குற்ற துன்பத்தைத் தீர்க்கும்பொருட்டு தான் கஷ்டங் கவலையை அனுபவித்திருப்பான். மேலும், அவன் பிறர் செய்யும் பிழைகளைப் பொறுத்து அவர்களை அலக்ஷியஞ் செய்வதைவிட்டு அவர் அந்தப் பிழைகளைப் போக்கிக்



கொள்ளும் வழிகளைத் தேடிக் கொடுப்பான். இதனால், எந்த பிராணிகளிடத்திலும் மிக அன்பும் ஆதரவுமாய் அவைகளுக்கு நன்மை விளைவிக்கின்ற நற்குணமே தர்ம குணமென்பது புலப்படும். தர்ம குணமுள்ளவன் எப்போதும் யாவருக்கும் நன்மையைக் சோருவான். அந்த நற்குணம் ஒருவனிடத்தில் அமைந்திருக்குமாயின் அன்பு, ஈவு, இரக்கம் முதலியவற்றால் அது தானே வெளியாகும். ஒருவருக்குக் கல்வியைத் தருவது சிறந்த தர்ம குணம். அதை நமது சபையார் கைக்கொண்டுள்ளதால் அதை விர்த்திசெய்யும் வழியில் உழைப்பதும் மேற்குறித்த தர்ம குணத்திற் சேர்ந்ததுதான்.

## மறு பிறப்பு

ஸ்ரீ. A. M. சபாபதி முதலியார்

மறுபிறப்பு கிறிஸ்து நிகடிமசுக்கு உபதேசித்ததைப் போன்று, இருபிறப்பாளர்களாகிய திரைவர்ணிகரின் ஆண்பிள்ளைகளுக்கும் முமுக்ஷுக்களுக்கும் செய்யும் உபதேசாதிகளினால் வாய்ப்பதொன்றும், இப்பிறவியில் நாம்செய்யும் சுகர்ம துஷ்கர்மங்களின் பயனாக தேகாவசானகாலத்தில் ‘அவாவென்பதெல்லாம் உயிர்க்கு ஞஞ்ஞான்றும் தவாஅப் பிறப்பீனும் வித்து’ என்கிற நியாயத்தால் ஈசுவர நியமானுசாரமாக வாய்ப்பதொன்றும், ஆக இருவகைப்படும்.

2. உலகவியவகாரம் ஒழுங்காக நடைபெறுவதற்காக ஈசுவரனால் ஏற்பட்ட ஜராயுஜ, அண்டஜ, சுவேதஜ, உத்பீஜங்களென்னும் சாதுர்வர்ண்ணிய சிருட்டியில் தத்தம் குணகர்ம விபாகப்படி அனேக யோனி பேதங்களுள்ளன. குணவிபாகம் ‘விதையொன்று போட சுரையொன்று காய்க்குமா’ வென்கிற ‘பிதிர் வழி’ நியாயத்தை யனுசரித்தது. இந்நியாயப்பிரகாரம் குடும்பஜாடை, ரோகம் குணம் முதலியவை சந்தானங்களுக்கு முண்டாகக்கூடும். கர்மவிபாகமோ ‘பதவீ பூர்வபுண்ணியானாம்’ ‘ருணானுபந்த ரூபேண பசுபத்தினீ சுதாலயா:’என்கிற நியாயங்களை யனுசரித்தது. இந்நியாயங்களின் பிரகாரந்தான் ஒவ்வொரு குடும்பத்தினரும் சந்தைக்கூட்டம்போல ‘அவரவர் வினையில் அவரவர் வருவார்.’ ஆயினும் பிறப்பிலேயே உண்டாகிற அங்கக்குறைவு, ரோகம் முதலியவை தாய்தந்தையரின் குற்றங்களென்று சிலர் கூறுதல், ஒருவன் நெருப்பைத்தீண்ட அதைத் தீண்டாத வேறொருவனுக்கு கொப்புளம் உண்டாகுமென்பதுபோலும், ஒருவன் சாதம்புசிக்க பசித்திருக்கும் வேறொருவனுக்கு பசிதீருமென்பதைப்போலும் அதிசயிக்கத்தக்கது.

3. பூர்வஜன்மம் வாஸ்தவமாயின், அதில் நிகழ்ந்த விஷயங்கள் இப்பிறவியில் நமக்கேன் ஞாபகத்திற்கு வருவதில்லையென்று சிலர் ஆக்ஷேபனைசெய்கிறார்கள். நாரதர் பிரகலாதர் திவ்விய திருஷ்டியினால் தத்தம் முற்பிறப்பில் நிகழ்ந்த காரியங்களின் ஞாபகமுள்ளவர்களாக விருந்தார்களே, நாமும் அப்படிப்பட்ட திவ்விய திருஷ்டிபெறுவோமாயின், நமது முற்பிறவியில் அனுபவித்த விஷயங்களின் ஞாபகம் நமக்கும் வரக்கூடும். அவ்வாறு ஞாபகமின்மையினால் பூர்வஜன்மம் பொய்யென்னல், ஒருவன் தன்தாயின் கர்ப்பவாசத்திலிருந்தகாலத்தில் தனக்கும் தன் தாய்க்கும் நேர்ந்த துன்பங்கள் தான் பிறந்தபிறகு தன் ஞாபகத்திற்கு வாராமையினால் நேர்ந்ததில்லை என்பதற்கு ஒக்கும்.

4. ஜன்மாந்தரமில்லையென்றால், பிறந்து இறக்கும் வரையில் மனிதர்செய்யும் கர்மங்களின் பயன்கள் இப்பிறவிலேயே அனுபவிக்கப்பட்டுத் தீருகின்றதென்றே ஏற்படவேண்டும். ஆனால் துராசாரன் சுகமேயனுபவிப்பதையும் சதாசாரன் துக்கமேயனுபவிப்பதையும் யோசிக்குங்கால், இப்பிறவியில் செய்யும் கர்மங்களின் பயன்கள் இப் பிறவியிலேயே அனுபவிக்கப்படுகிறதென்று சொல்ல நியாயமில்லை. ஆதலால், முற்பிறப்பின் கர்மத்தின்பயனை இப்பிறவியில் அனுபவிக்கலாகிறதென்று நிஷ்பக்ஷவாதிகளுக்கு வியக்தமாக விளங்கும். அன்றியும், கர்மம்செய்யும்காலத்திலும் அக்கர்மத்தின் பயனை யனுபவிக்கும்காலம் வேறாகவே உளது. பூமியைச் சீர்திருத்தித் தானியம் விதைக்கும் காலத்திலும் அக்கிருஷியின் பலபோகமாகிய தானிய அறுவடைகாலம் வேறாகவும், ஒருரோகி ஔஷத சேவை செய்யும் காலத்திலும் அதன் பயனாகிய ரோகநிவர்த்தி காலம் வேறாகவு மிருப்பதுபோல, முற்பிறப்பில் செய்த கர்மத்தின் பயனை இப்பிறவியில் அனுபவிக்க வேண்டியதாகத்தான் ஏற்படுகின்றது. அன்றியும், ஒருதேகத்தில் செய்த கர்மத்தின் பயன், அத்தேகம் நசிக்க, தேகாஸ்ரயமின்றி, எப்படி யனுபவிக்கக்கூடும்? ஆதலால், மறுபிறப்பில் தான் அக்கர்மபலனை யனுபவிக்கலாகுமென்று சாஸ்திரத்தை ஒப்புக்கொள்ளாதவர்

கள்கூட யுக்தி அனுபவ வாயிலாகவாகிலும் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாகின்றார்கள். இவ்விதமாகவே, இப்பிறவியில் ஞான்மார்க்கத்தை யடையாமல் இறக்கும் மனிதர், யாதனுவென்கிற வாயவ்யசரீரங்களைப் பற்றிக்கொண்டு, போகஸ்தானங்களாகிய நரகலோகங்களில் அனுபவிக்கும் வேதனைகள் தணிவதற்குத்தான், அவர்களின் மக்கள் ஜல தர்ப்பணம் செய்வது. 'தம்பொருளென்ப தம்மக்க ளவர்பொருள் தம்தம் வினையான் வரும்.'

5. 'துர்லபம் திரயமேவைதத் தைவானுக்கிரஹஹேதுகம், மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷசம்ஸ்ரய:' என்னும் சுலோகத்தில் மனிதப்பிறவியும், மோக்ஷ இச்சையும், பரமாசாரியரின் சமாஸ்ரயமும் கிடைப்பதரிது. இம்மூன்றும் தெய்வானுக்கிரகத்தினுல்தான் பெறக்கூடுமென்று உபதேசித் திருக்கின்றது. இங்குதவ ஸப்தத்திற்கு 'பதவீபூர்வபுண்ணியானும்' என்னும் வீயர்யத்தானும் பூர்வ கருமமென்று கருத்தாகும்படி 'தைவம் திஷ்டம் பாகதேயம் பாக்கியம்ஸ்திரீ நியதிர்விதி' என்று அமரகோசத்திலும் நிறுவியிருக்கின்றது. இங்ஙனம் வெகு ஜன்மங்களின் புண்ணிய பரிபாகத்தால். கர்மயோனியாகிய இவ்வரிய மனிதப் பிறவி கிடைக்கப்பெற்ற புத்திமான்கள், இப்பிறவியிலேயே மோக்ஷ இச்சையைக் கைப்பற்ற முயலாமல், களவு, காமம், குடி, கூத்தி, கூத்து, கொலைமுதலிய விஷயேச்சையில் வீணுக்காலம் கழிப்பதனுல், மோக்ஷ சாம்பிராச்சியத்தை யடைவதில்லாமற் போவதுடன் அதோகதியடைந்துப் போகயோனிகளாகிய கீழ் ஜன்மங்களில் அடிக்கடி பிறந்துழன்று அல்லல்படவருமென்பதை ஞாபகத்திற்கொண்டு பகவானுடைய குணுனுபவஞ்செய்ய முயலவேண்டும்.

---

**நூதன விவாகம்.**—திருவநந்தபுரத்திலுள்ள ஓர் உபாத்தியாயரான மிஸ்டர் வீ. கிருஷ்ணையருக்கும் ப்ரமஸ்ரீ ஈசுரவாத்யாரின் குமாரத்தியான சாரதாம்பாளுக்கும் விவாகம் நடந்தது. இதில் மாப்பிள்ளை விஸ்வாமித்ர கோத்ரத்தைச் சேர்ந்தவர்; முன் குடுமியுள்ள தமிழ்ச்சோழியப் பார்ப்பார். பெண் பாரத்வாஜ கோத்ரம்; ப்ரஹசரண வகுப்பு; பெண்ணின் பிதா வைதிக புரோகிதர்; இவரது மூத்தபெண்ணுக்கும் இவ்வாறே நூதனமான விவாகஞ் செய்யப்பட்டிருக்கிறதாம்.

## உலகத்தின் மார்க்கமென்ன?

[ஸ்ரீ சொக்கநாத ஆச்சாரியார் என்பவரால் அனுப்பப்பட்ட இவ்வச்சுவிளம்பரம் ஷை யார் வேண்டுகோளின்படி இங்கு அச்சிடப்பட்டது. இது, கிறிஸ்துமதப் பிரசாரகர்களால் வெளியிடப்பட் டிருக்கவேண்டுமென்பதும், வேதபாஹ்யமான கொள்கைகள் பல கொண்டிருக்கிறதென்பதும் யாவர்க்கும் தெற்றெனப்புலப்படும்.]

உலகத்தைப் படைத்தோனைத் தச்சன் என்றும், பிரமாவென்றும், விஸ்வகர்மா வென்றும் சொல்லுதல் இந்துக்களுக்குள் வழக்கம். இங்கிலீஷில் கிரேட் ஆர்க்கிடெக்ட் அவ் யூனிவெர்ஸ் (Great Architect of Universe) என்று கடவுளாகிய சிருஷ்டி கர்த்தாவுக்கு பரியாயமாக வழங்கி வருகின்றது. இதன் பொருள்-பிரபஞ்சத்தை சமைத்த பெரியசில்பி யென விளங்கும். இந்த விஸ்வமஹா சில்பியைத்தான் சமஸ்கிருதத்தில் * விஸ்கர்மாவென்றசொல்லுவர். பாஷைகளும் எழுத்துக்களும் நூல்களும் ஏற்படுமுன் சில்பிகள் மூலமாகத் தேவனின் உண்மையான இலக்ஷணங்களைச் சின்னங்களாலும் பலவிதக் குறிப்புகளாலும் மநுமக்கள் அறிய வந்தார்கள். மனுஷர் நாகரீகத்தில் தேர்ந்து வாவரப் பாஷையும் பெருகி வளர்ந்து எழுத்துக்களும் ஏற்பட்டுத் தங்களுக்கறிய வந்த ஞானத்தையும் அநுபவத்தையும் நூல்கள் மூலமாகப் பிரபலப்படுத்த நேரிட்டது. இப்படி வருங்காலத்தில், குரு பீடங்கள் ஸ்தாபிதமாகி, தம் தம் எண்ணத்தின்படி தங்களுடைய சுயப்பிரயோஜனார்த்தத்தின் பொருட்டு, தேவக் கம்மாளன் காட்டிய உண்மையைப் புரட்டி மறைத்து, குருவேஷம்பூண்டு, தானே பரமஹம்ஸ ஸ்வருபிகளென்று அறிவீனர்களை மயக்கி, "பிராமணு மமதேவதா" வென்று விசுவாசிக்கும்படி செய்து, "மோக்ஷம் அளிப்போன் பார்ப்பானே" என்றும், அம்மூலமாகவே உண்மையான தேவனைத்தொழுது வருவதற்கு இடையூறுகள் நேரிடலாயின.

சில்பிகளால் அறியவந்த உண்மையைக் குருவேடந்தரித்த தந்திரிகள் "எத்தனை முனிகளோ அத்தனை மதங்கள்" என்ற பழமொழிக்கேற்கப் பலவிதமாகப் பேசப்படுத்தி, பலசமய மார்க்கங்களாக்கி, தம்சுயப்பிரயோஜனத்தை அடைகிறார்களே தவிரத் தேவனருளை அடையும்படி அஞ்ஞானிகளுக்கு வழிகாட்டு

* "விஸ்வகீர்ம மநஸா யத்விதீயாயா."



கின்றார்களில்லை. கடவுளே மஹா சில்பியெனக்கொண்ட கொள்கைக்கு * சில்பமே உண்மையானதென்று விளங்கும். இதற்கு வேண்டிய அத்தாக்ஷி எகிப்த்தில் இருக்கும் பிரேமிட்ஸ் (Pyramids) என்னும் சூசியக்ரஸ்தம்பங்களில் காணலாம். வேதாகமங்களிலேயே விஸ்வகர்மாவானவர் லோகரக்ஷகராக அவதரித்துப் பிரஜாபதியாக ஆள்வாரென்றும் சொல்லப்படுகின்றது. ஆதியில் சுயம்பாகத்தோன்றின † சில்பவொளிதானே உலகத்திற்கு வெளிச்சமா யிருந்து மனுஷரை ஈடேற்றும். அந்தச்சில்பவொளியாக விருக்கும் விஸ்வமஹா சில்பியெனும் லோகரக்ஷகரே நமக்களிக்கும் பரமபதவிக்கு ஆதீனர். இந்த பிரமரக்ஷ பிரஜாபதியைத்தான் ஐரோப்பிய பாஷைகளில் இயேசுக்கிறிஸ்துவெனச் சொல்லுவது. அவர் போதனையே சத்திய மார்க்கமாகிய விஸ்வசமயம். அவர்தான் சத்-சித் ஆனந்த மூர்த்தி. அவரே பஞ்சாக்ஷரம். உலகரே? இந்த மெய்யான பரமகுருவை அநுசரியுங்கள். அவர்தான் சத்குரு, அவரைத்தான் "கம்மாளன் ஜகத்குரு மேகவாகனப்பிரபு" என்று சொல்லப்பட்டு வருகின்றது. அவரை அனுசரிப்பீர்களாகில் தேவலோகத்தில் நமக்காகக் கட்டியிருக்கும் வீட்டிற்கு சுவாதீனர்களாவீர்கள். நரகுருக்கள் வெட்டின வழியில் நடப்பீர்களாகில், வீணில்மோசம்போய், நரகமே உங்களுக்கிருப்பிடமாக முடியும்.

கம்மாளர் என்போர் விஸ்வகர்மாவின் புத்திரர்கள் என்று உண்மை யறிந்தோர்கள் சொல்கின்றார்கள், "விஸ்வகர்மா" என்றவர் யார்? விஸ்வம் என்னும் பிரபஞ்சத்தை கர்மா படைத்தோன் என்று அர்த்தங்கொள்ளும் சிருஷ்டி கர்த்தாவாகிய விஸ்வமஹா சில்பியேயாம். தேவன் பிரபஞ்சத்தைப் படைத்து பாதுகாத்து, வருகின்றதுபோலவே தன் மநுமக்களை இரட்சிக்க அவதரித்துத் தச்சனுக உலகத்தாருக்கு அறியவந்தவர்லோகரக்ஷகரே. அவ்வவதார ஸ்வருபிக்கு இயேசு ஈசாவென்றும் சொல்லுவது வழக்கம். இப்பதங்கள் இரக்ஷகரென்றும் கர்த்தாவென்றும் அர்த்தங் கொடுக்கின்றன. கர்த்தாவென்பது "க்ரு" வெனும்தாதுவிலிருந்து செய்வோன், படைத்தோன் என்னும் கருத்தைவிளக்குகின்றது. உலக சிருஷ்டியானது சகல கலைஞான முதலியவற்றிற்கு முதன்மையான தலையாயிருப்பது கொண்டு க-சிரசு-பிரமன் என அர்த்தங்கொடுக்கும் தாதுவிலிருந்து "கம்மாளர்" என்னும் நாமரூபத்தை தரித்தவர்கள் சகல கலை ஞான வித்தை தொழில்களுக்கு எஜமானுக உதித்த (Master of Arts and Sciences) கண்ணுளர்களாம். இக்கம்மிய குலத்தில் உதித்த இரக்ஷகர் ஸ்தாபித்த சத்தியமே விஸ்வப்பிராமணர்களின் கொள்கையும் மார்க்கமு மென்பதற்குச் சந்தேகமென்ன? இக்காரணத்தினுலேயே இக்குலத்தாருக்கு தேவப்பிராமண ரென்றும், தேவக்கம்மாள ரென்றும் பெயர்கள் வழங்கியும் வருகின்றன.

* உக-ம் திருவாய்மொழியில் ரூ-ம் பாட்டிலும் காணலாம்.

† "வித்யாக்யா சில்பசைபுண்யம்.

### கம்மாளர்களில் ஒருவராகிய போகரிஷி சொன்னதாவது

மருவுகின்ற தங்கமது பிருதிவியாகும்—(அம்மன், மேரி)
மகத்தான காரீயம் அப்புவாகும்—(கருமுகன்)
செருவுகின்ற செம்பதுவும் தேயுமாகும்—(சூரியன்)
இருவுகின்ற விரும்பதுவும் வாயுவாகும்-(ஆவியானவர்)
நருவுகின்ற நாகமது ஆகாயமாகும்—(இயேசு)
உருவான வெள்ளீயம் மூதண்டனுமே.—(பிதா)

அல்லது வசனமாக பஞ்ச கர்த்தாக்களுடைய பஞ்சலோகத்தின் கூறு யாதெனில்,

| | | |
|---|---|---|
| நாதரூபி | (மரியாள்) | தங்கம் |
| பரிசுத்தர் | (இரவி) | செம்பு |
| ஆவியானவர் | | இரும்பு |
| இயேசு | | நாகம்-வெள்ளி |
| கருமுகன் | | கருவங்கம் |
| பவுடகுரு | | வெள்வங்கம் |

இதில் கம்மாளர்கள் கையாடிவரும் பஞ்சலோகங்களிலேயே பஞ்சகர்த்தவ்வியமான ஞானரூபகத்தை உரைத்திருப்பதைக் கவனிக்குங்கால் பஞ்சாளரெனும் கம்மாளர் அநுசரித்து வரல்வேண்டும் கொள்கை கிறிஸ்துசமயமென்றும், அம்மார்க்கமே கம்மாளருக்குள்ளதென்றும் விளங்குகின்றது.

"கம்மாளன் ஜகத்குரு" என்ற பழமொழிதானே சகல சமுசயத்தையும் நிவர்த்திக்கும்.

இதுவன்றி.—கம்மாளருக் குள்ளும் விஸ்வகர்மா லோகரக்ஷகராக அவதரித்து மேல் திசைகளிலுள்ள வெள்ளைக்காரர்களைச் சீர்படுத்தி மனுஷ நாகரீகத்துக்கு வேண்டியவைகளை அபிவிர்த்திசெய்து அவர்கள் மூலமாக இப்பிரதேசங்களில் பிரவேசித்து பிரஜாபதியாக ஆள்வாரென்ற பிரதர்ஸனுவசனமும வழங்கி வருகின்றது. இந்த பிரமரக்ஷபிரஜாபதியே இயேசுவென்னும் கிறிஸ்துவாம்.

ஆம் இது சத்தியம்

# ஆரோக்ய போதம்

## ஆமவாத ஜ்வரம்

ஆமவாதம் என்பது தமிழில் கீல்வாயு என்று ஸாதாரணமாய் வழங்கப்படுகிறது. இத்துடன் எப்பொழுதும் ஜ்வரம் அனுஸரித்து வருவது இயல்பு. இதில் பெரிய மூட்டுகளில் வீக்கமும் வேதனையும் அதிகமாகவும் சில சமயம் ஸகிக்க கூடாததாகவும் உண்டாகும். இந்த ரோகத்தினால் இருதய கோசத்தின் தசை நார்கள் தாக்கப்படுவதும் ஸஹஜம். இது தொற்று வியாதிகளைச் சேர்ந்ததென்று இப்பொழுது அறியப்பட்டிருக்கின்றது. அநேகம் வியாதிஸ்தர்களைப் பரீக்ஷித்து வந்ததில், ஆமவாதக்கிருமி என்னும் சில நுண்ணுயிர்கள் தேகத்தில் ஸந்திப்பதால் இவ்வியாதி உண்டாகக் கூடுமென்று ஒருவாறு கூறப்படுகிறதேயன்றி, அவ்விஷக் கிருமிகள் சரீரத்தில் எவ்வாறு ஸம்பந்திக்கின்றனவோ அவ்விஷயத்தில் இன்றைக்கும் மேனாட்டு வைத்தியர்களுக்குள்ளேயே நிச்சயஞானம் ஏற்பட்டபாடில்லை. விஷக்கிருமிகள் வாயின் மூலமாய் முக்கியமாக ஏதாவது பற்கள் சொத்தை பிடித்திருந்தால் அப்பற்களின் இடுக்குகளில் தங்கியிருந்து அப்பால் சரீரத்தினுள் இரத்தத்திற் கலக்கின்றனவென்று கூறி அதற்கேற்றவாறு அநேகம் பிரமாணங்களையும் சிலர் எடுத்துக் காட்டுகின்றனர். தொண்டைக்குள்ளிருக்கும் சிலேஷ்மக்கிரந்திகள் வீங்கினால், அதன் மூலமாகவும் இவ்வியாதி ஸம்பவிக்கக் கூடும்.

**குறிகள்** —ஆமவாதஜ்வரம் முதலில் குளிர், தொண்டைப்புண், வேலைகளைச் செய்வதில் மிகவும் ஸாமர்த்தியமில்லாமற்போதல், என்னும் இக்குறிகளுடன் ஆரம்பிக்கும். சரீரத்திலுள்ள பிரதானமான கீல்களில் அதாவது முழங்கால், முழங்கை, கணுக்கால், கணுக்கை, தோள் இவை முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றிரண்டிலாவது, எல்லாவற்றிலுமாவது வீக்கமும் வலியும் பொறுக்கக்கூடாமல் உண்டாவதுடன், அவை சிவந்துங் காணும்; அவ்விடங்களைப் பரிசித்தாலும் மிகக் கஷ்டத்தை யுண்டுபண்ணும். இவ்வியாதிக்கு சிகிச்சை செய்யாதவரையில் முதலில் ஏதாவது ஒரு மூட்டில் வேதனையும் வீக்கமும் உண்டாய், அவை கிரமமாக மிகவும் துன்பத்தைக் கொடுத்து அப்பால் அவ்விடத்தில் அக்குறிகள் சாந்தமாகும்; இவ்விதம் சாந்தமாவதன் பயனாக மற்றொரு மூட்டில் இதே விதமான கோளாறுகள் உடனே ஆரம்பமாகும்; இவ்வாறு ஒரு மூட்டைவிட்டு மற்றொரு மூட்டிலும், மற்றொன்றைவிட்டு இன்னும் வேறு சில மூட்டுகளிலும் இவ்விகாரங்கள் மாறி மாறி யுண்டாகும். ஜ்வரம் இருந்தபோதிலும், அது அவ்வளவு தீவிரமாய் உண்டாவதில்லை. வியர்வையுண்டாவது எப்பொழுதும் இதன் முக்கியமான குறிகளில் ஒன்றும்; அவ்வியர்வை ஒரு விதமான துர்நாற்றமுள்ளதாயிருக்கும். மூத்திரம் வெகு குறைவாகவும், பெரும்பாலும் எப்பொழுதுமே ஒருவாறு செங்கற்பொடி நிறமான உப்பு வகைகள் கலந்தும் வெளி வரும்; அந்த மூத்திரத்தைச் சிறிது நேரம் வைத்து வைத்தால் அதனடியில் சின்னஞ் சிறிய சிவந்த உப்புகள் உறைந்து மணல்களைப்போல் தங்கும். வாயில் ஒருவிதமாக அரோசகமுண்டாகும் நாக்கு வரண்டிருக்கும். மேலும் பசியின்மை, அஜீர்ணம், மலபந்தம் என்னும் இக்குறிகளும் ஸஹஜமா யுண்டாயிருக்கும்.

**தடுக்கும் உபாயம்.**—சிலருக்கு இவ்வியாதி பரம்பரையாக உண்டாகக்கூடும்; அவர்களுக்கு வீக்கம் மிகுதியாக அடிக்கடியும் உண்டாய் தொந்தரவை யளிக்கும்; அதிகமாக மத்யபானம் செய்வது, அளவு மீறி ஆஹாரங்களை யுண்பது, முக்கியமாய் மாம்ஸாஹாரத்தை அமிதமாக உபயோகிப்பது, அகாலத்திற் பழுக்கும் கனிகளைப் புசிப்பது, மற்றும் மதியீனத்தினால் ஆத்திரத்துடன் ம்ருஷ்டான்னங்களை அடிக்கடியும் சாப்பிடுவது முதலான இவை இவ்வியாதி யுண்டாவதற்குத் துணைக்காரணங்களாக இருக்கின்றன. இவற்றுடன் அஜாக்கிரதையாய் உடம்பைத்திறந்துகொண்டு விசேஷமாகக் காற்றில் உலாவுவதும் ஈரமான பிரதேசங்களில் குடியிருப்பது அல்லது நடமாடுவதும் அவ்வியாதி யுண்டாவதற்கு உதவிக் காரணங்களா யிருக்கும். இவ்வாறு காரணங்களைத் தெரிந்துகொண்டால், இதை வாவிடாமல் தடுப்பதற்கும் உபாயங்கள் ஒருவாறு அறியப்படும். உடைகளைத் தகுந்தவாறு தரிப்பதிலும், உடம்பில் ஈரம் தாக்காமலிருப்பதற்காக ஏதேனும் தகுந்த படுக்கைகளை யுபயோகிப்பதிலும் கவனம் செலுத்தவேண்டியது அவசியம். கால்களில் பாதரக்ஷையை ஸாத்தியமானவரையில் எப்பொழுதுமே போட்டிருப்பது நலம். சிறிது ஈரமும் குளிரும் அதிகரித்த இடங்களில் கம்பளிகளை உடைகளாக உபயோகிப்பது உத்தமம். ஏற்கெனவே பரம்பரையாக ஆமவாத வியாதிக்கு உட்பட்ட மனிதர், ஈரமான பாதங்களைத் துடைத்துக் கொள்ளாமலும் உடம்பைப் போர்க்காமலும், தினந்தோறும் சிறிதுநேரம் உட்கார்ந்திருந்தால் அதனால் அவர்கள் வெகு சீக்கிரத்தில் இவ்வியாதிக்கு ஆளாவார்கள். எப்பொழுதும் கட்டில் அல்லது விசுப்பலகை முதலானவைகளின் பேரில் படுக்கையைப் போட்டுக்கொண்டு படுப்பதே சிறந்த முறையாம். போஜன பானாதிகளில் என்றைக்கும் மிதமாயிருக்கவேண்டும்.

**சிகிச்சை.**—ஒருவனுக்கு ஆமவாத ஜ்வரக்குறிகள் உண்டாவதாகத் தெரிந்தவுடனே சுத்தமாகக் காற்று வீசும் ஓர் அறையில் படுக்கையில் உடம்பில் வேதனை யதிகரிக்காதபடி அமைதியாகப் படுத்திருக்கச் செய்ய வேண்டியது முதற்காரியம். படுக்கையின்மேல் ஒரு துப்பட்டியும், பிணியாளியின்மேல் போர்த்துக்கொள்ள மிருதுவான ஒரு துப்பட்டியும் போட்டிருப்பது நலம். கோதுமை கஞ்சி, புழுங்கலரிசிக் கஞ்சி முதலியவற்றை வேண்டியவளவு பால் சேர்த்து ஆஹாரமாகக் கொடுத்துவரலாம். காலத்திற் பழுத்த கனிகளையும் புசிக்கக் கொடுக்கலாம். இவ்வியாதியில் அதிகமாய் நாவரட்சி யுண்டாவது ஸஹஜம்; அதற்கு உபசாந்தியாக எலுமிச்சம்பழப் பானகம் முதலிய புளிப்பான சில பதார்த்தங்களைச் சிறிதளவு வெந்நீரில் சேர்த்துப் பருகக் கொடுத்து வரலாம்.

பாஷ்பஸ்நானம் என்னும் வேதுபிடித்தலும், உஷ்ணஜலஸ்நானமும் ஹிதமாயிருக்கும். கோதுமைத் தவிட்டை வறுத்து ஒற்றிடம் கொடுக்கலாம்; கற்பூரத் தைலத்தை வெந்நீரில் சிறிது சேர்த்து, அந்த ஜலத்தில் வஸ்திரத்தை நனைத்தும் சுடவைத்த காஞ்ஜிகமென்னும் காடியில் துணியைத் தோய்த்தும் ஒற்றிடம் கொடுப்பதாலும் அனுகூலம் உண்டாகும். ஜ்வரத்தினாலுண்டாகும் கஷ்டத்தைத் தணிப்பதற்காக இளஞ்சூடான அல்லது சிறிது குளிர்ந்த ஜலத்தில் மெல்லிய வஸ்திரத்தை நனைத்து உடம்பு முடியவும் ஒற்றிடம் கொடுப்பது சில ஸமயம் உபயோககரமான சிகிச்சையாகுமென்பது வாஸ்தவமே; ஆனால் ஆமவாதத்தில் குளிர்ச்சியான வஸ்துக்களைப் பரிசிப்பதால் வியாதி தீவிரமாய் விடுமாகையால், அவ்விதம் செய்ய வேண்டியிருந்தால் அனுபவசாலியான அறிவுள்ள வைத்தியரைக் கொண்டே அதை நிறைவேற்றவேண்டும். தினந்தோறும் மலம்சரியாகக் கழிந்து வருகிறதா வென்பதைக் கவனிக்கவேண்டும்; அவ்விதமில்லாவிட்டால் சிறிது ஆமணக்கெண்ணெய் கலந்த ஜலத்தை ஆஸனத்வாரத்தால் வஸ்தியாகச் (Enema) செலுத்தி எவ்விதமாவது மலத்தை வெளிப்படுத்தி வரவேண்டும். 'யோகராஜ குக்குலு' என்னும் மாத்திரையை ராஸ்நாதிக்வாதத்தோடு (க்வாதம் என்பது கஷாயவகை) சில வாரம் உட்கொண்டு வருவதால் வியாதி தீரும். நீடித்த காலமாய் அனுஸரித்து வரும் மலபந்தம் சிலஸமயம் ஆமவாதம்போன்ற வாததோஷத்தை யுண்டுபண்ணும். அதுவே ஆமவாதமாக மாறக் கூடுமாதலின், மலபந்தம் சிறிதும் நேரிடாதபடி குடல்களை ஆமணக்கெண்ணெய் முதலியவற்றால் சுத்திசெய்து வரவேண்டும்.—வைத்தியகலாநிதி.



# நமது வாசகர்கள்

## கான்பரன்ஸ்

(1)

நம்குலத்தில் (1) வைதீகதர்மம். (2) லௌகிகதர்மம் என இருவகை தர்மங்களிருக்கின்றன. இவற்றில் (1) வைதீக தர்மம் என்பது நமக்கென்றேற்பட்ட விதிகளின்படி நம்மவர்கள் சமயாசாரங்கொள்கைகளைக் கைப்பற்றிநடப்பது (2) லௌகிகதர்மம் என்பது நமக்குரிய தொழில்முறைகளை நம்மவர்கள் சிறக்கச்செய்து நீடித்து வருவது. இவற்றிற் பிந்தியது நவீன நாகரீகத்துக் கேற்றவாறு மாற்றிக்கொள்ளக்கூடியது. காலக்கிரமத்தில் யாதொரு பிரயத்தினமும் இல்லாமலே இயற்கையாய் மாறுந்தன்மையுடையது. ஆகையால் இக்காலத்தில் அதில் சிரத்தையுள்ள நண்பர்களெல்லாம் அதையே வற்புறுத்துகிறார்கள். ஆகிலும், இதில் வகுப்பு வரையறையில்லை. நம்மனோர்கள் கைப்பற்றி நடப்பதற் கின்றியமையாதது முந்திய வைதிகதர்மமேயாம். இவ்விருதர்மங்களும் ஒன்றற்கொன்று மாறியிருத்தலால், முந்திய வைதிகதர்மமே முந்தி ஆராயற்பாலது. அதற்காக முந்தி அவ்வித கான்பரன்சே நடத்தத்தக்கது. குருஸ்தானங்களும் பண்டிதர்களும், புரோகிதர்களும், அதில் சேரத்தக்கவர்கள். ஆகையால் மேல்கண்டவர்களை ஒன்றுகூட்டி நமக்கென்றேற்பட்ட வைதீகதர்ம சம்பந்தமான சீர்திருத்தங்களைக் குறித்து பிரத்தியேக கான்பரன்சு நடத்துவது உசிதமென்பது எனது அபிப்பிராயம். இதற்கு நண்பர்களின் அபிப்பிரா

யங்களும் துணைபடுமாயின் நமக்கின்றியமையாதனவாகிய காரியங்கள் இனிது முடியும். அவை முடியவே அவற்றை நம்மவர்கள் கைப்பற்றி நடப்பதற்காகும். அப்படி நடப்பதே நம்மாசாரமாம்.

அத்தியாபக-லிங்காச்சாரி.

(2)

குடந்தையில் சுஜாதிக் கான்பரன்ஸ் வெகு விமரிசையாய் நடைபெற்ற விஷயம் நம்மவர்களெல்லோருக்கும் மிகுந்த களிப்பை யளிக்கு மென்பதில் சந்தேகமே கிடையாது. நடத்தத் தூண்டியவர்களும், வழிகாட்டியவர்களும், முன்னின்றவர்களும், துணை செய்தவர்களுமாகிய யாவரும் நம்மவர்களுடைய நன்றிக்குப் பாத்திரவான்களா யிருக்கின்றனர். குடந்தையார்கள் காட்டிய மாதிரியை மற்ற ஊரார்கள் உடனே பின்பற்றவேண்டியது அவஸியமா யிருக்கிறது. ஓரிடத்தில் கான்பரன்ஸ் நடத்திவிட்டு சும்மாவிருப்பது சிலாக்கிய மாகாது. ஆதலால், அடுத்த டிஸம்பர் மாதத்தில் வேறிடங்களில் கான்பரன்ஸ் நடத்தப் பிரயத்தினப் படவேண்டும். நம்முடைய கான்பரன்ஸ்கள் முக்கியமாய் (social and industi ial) ஆசாரத் திருத்தத்தையும் கைத்தொழி லபிவிருத்தியையும் பற்றியவையா யிருக்கவேண்டும். பலஜில்லாக்களில் பல ஆசாரக்குறைபாடுகள் காணப்படலாம்; பல தொழில் க்ஷீணங்கள் குறிக்கப்படலாம். அவற்றைச் சரிப்படுத்துவதற்கு அந்தந்த ஜில்லாவாசிகள் கூடிப பேசித் தீர்மானிக்க வேண்டும். எனவே, ஜில்லாக் கான்பரன்ஸ்கள் நடை பெற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி நடந்தால்தான் ஒரு ஜில்லாக்காரருக்குள் உற்சாகமும் அன்னியோன்யமும் அதிகமாய் ஏற்படும். அவர்களெல்லாம் ஒன்று கூடுவதற்கும் சுலபமாயிருக்கும். அப்படி யில்லாமல் மாகாணக் கான்பரன்ஸாக நடைபெற்றால், நடைபெறும் ஜில்லாக்காரர் தவிர மற்றவர்கள் சென்று பார்க்க வசதி ஏற்படாது. பல வருஷங்களுக்கொரு முறைதான் ஒரு ஜில்லாவிற்கூடும். ஒரு முறைகூடி மறுமுறை வருவதற்குள் ஜனங்கள் உற்சாகங்குன்றி மறந்து விடுவார்கள். மாகாணக் கான்பரன்ஸ்கள் பிரமுகர்கள் தவிர எல்லாச்சனங்களுங்கூடி அளவளாவுதல் அசாத்தியம். அப்படிப் பொதுஜனங்கள் அளவளாவச் சந்தர்ப்பம் வாய்க்காத மட்டிலும் கான்பரன்ஸ் நோக்கங்கள் நன்ருய்ப்பாவி நம்மவர்கள் மனதில் வேரூன்றிப் பலன் விளைப்பது கூடாமையாகும். ஆதலால், ஒவ்வொரு ஜில்லாக்காரரும் தனித்தனி, கான்பரன்ஸ்கள் நடத்தப் பிரயத்தினப்படவேண்டும். அது சுலபமாகவும் முடியும். ஜனங்களுக்குள்ளும் அரசாங்கத்தார்க்கும் நல்ல உணர்ச்சியுண்டாக்கும் அங்ஙனஞ்செய்யப் பிரதி ஜில்லாவாசிகளும் பிரயத்தினப்படுவார்களாக.

கர்மசூதன்.

## சுஜாதி ஒற்றுமையின்மை

விஸ்வப்பிர்ம சந்ததியார்களாகிய ஐவர்களும் ஓரே வம்சமென்றும் அவரவர்கள் செய்யுந் தொழில்கள் வேறுபட்டிருந்தாலும் அவர்களுக்குள் சமபந்திபோசனமும் சம்பந்தமுஞ் செய்யலாமென்பது சாஸ்திர சம்பந்தமெனத் தெரிகிறது. நிற்க, இவர்கள் மனுமய துவஷ்ட சில்பி விஸ்வஞ்ஞ என்று சொல்லப்பட்ட இவ்வைந்து கோத்திரத்திலிருந்து ஒவ்வொன்றிற்கும் ஐந்தைந்து பிரிவுகளாகப் பிரித்து அதாவது சோழியர் வெம்பாநாட்டார், மழநாட்டார், பெண்ணக்கரையார், ஓதாவி ஆக இருபத்தைந்து பிரிவுகளாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். இவர்களுக்குள் ஒருவருக்கொருவர் கொண்டு கொடுத்துக்கொள்வதில்லை யென்றும் பொன்வேலை செய்யும் தட்டார்கள் மாத்திரம் ஏனையதொழில்காரர்களிடத்தில் பெண்கள் கொள்ளப்படாதென்றும், கொடுக்கப்படாதென்றும், அவர்களில் அஞ்ஞானமூடிய சிலர்கள் தீர்மானித்து ஒரு கட்சியாக இருக்கிறார்கள். தவிர, மேலே கூறப்பட்ட 25-பிரிவினர்களும் சென்னை கம்மாளர்கள் கணவதியென்றும் சென்னை ஸ்தலவாசிகளைச் சோளதேசத்தோடு எக்காலத்திலும் சேர்ப்பதில்லையென்றும் அப்படிச் சேர்ந்தவர்கள் குலஈனர்களென்றும் சிலர் சொல்லிவருவது வழக்கமாயிருக்கிறது. சென்னை கம்மாளர்கள் வெளிவந்து உள்ளே ஆழ்ந்து கிடந்தும் ஆரோக்கியமற்றும் நம்முடைய வம்சவிலக்கணம் கொஞ்சமேனும் அறிந்திராதவர்களையெல்லாம் அவர்களின் நன்முயற்சியாலும் சரீரப்பிரயாசையினாலும் பொருள் செலவுகளினாலும் இவர்களைச் சீர்திருத்திச் சிலர்களாக்கியதின் பிறகு பாழுங்கிணற்றிற்கிடந்த பக்தர்களெல்லாம் மேற்படி சென்னை கம்மாளர்களோடு சேர்ந்துகொண்டு ஆச்சாரியர் என்ற பட்டத்தை யடையத் தெரிந்துகொண்ட விஷயம் அவரவர் மனதிற்கே நன்ருய் விளங்கும். இப்பேர்ப்பட்ட பேருபகாரத்தைச் செய்த சென்னை கம்மாளர்களுக்குச் "செய்யாமற் செய்த வுதவிக்குவையகமும் வானகமு மாற்றலரிது" என்னுந் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க எவ்வித கைமாறு செய்யக்கூடும். சென்னை கம்மாளர்களாற் கிடைத்த இப்பெரும் பேருபகாரத்தைத் தெரிந்து மற்ற ஸ்தலவாசிகளெல்லாம் இன்னமும் அவர்களை இழிவாகச் சொல்வதுஈச்வரச் சம்மதமாகுமா? ஆகவே மேற்கூறிய பிரிவினர்களெல்லாம் ஒருவர்களாகிறவரையில் இவர்கள் என்னவிதீ உயர்தரத்தை யடையப்போகிறார்களென்று தெரியவில்லை. இவ்விஷயத்தை நமது விஸ்வப்பிரம்ம வம்சத்திற்கு குலவிளக்காயும் குடந்தை விஸ்வப்பிர்ம்ம சபை ஸ்தாபகரும் பலமதக் கல்வி செல்வர்களால் புகழ்பெறப் போற்றும் வித்வானுமாகிய பிரம்மஸ்ரீ. தி. மு. முக்கண்ணுச்சாரியார் அவர்கள் குடந்தைக் கான்பிரன்சுக்கு அக்கிராசனம் வகித்தபொழுது இதைப்பேசவேண்டிய தவசியம் அப்படி அவர்கள் பேசுவதற்கு நம்மவர்கள்செய்த பாவங்களெல்லாம் எதிர்நின்று மறைத்திருந்தாலும் இனியாவது பத்திரிகை மூலமாக அதனைச்சீர்திருத்தி நல்ல வழிக்கு கொண்டுவர முயற்சிப்பார்களென நம்புகின்றேன்.

தே. விஸ்வலிங்கப்பத்தர்.

நாகபட்டணம்.

(விச்சுவகர்மன் 14-6-15)

---

கோலார் தங்கச்சுரங்கம்.—1886-ம் வருஷத்தில் கோலார் தங்கச்சுரங்கவேலை சாஸ்திர முறைப்படி நடத்திவருவதற்காக ஒரு ஐரோப்பியருக்கு லைஸென்ஸ் கொடுக்கப்பட்டது. அதுமுதல் ஐரோப்பிய குடியேற்றம் ஒன்று கோலாரில் ஏற்படுத்தப்பட்டது. அப்பொழுது ஏற்பட்ட சிறிய ஐரோப்பிய குடியேற்றம் இப்பொழுது 40000 ஜனத்தொகை அடங்கிய ஒரு பெரிய நாடாக விருத்தியடைந்துவிட்டது. 1913-ம் வருஷத்தில் கணக்கிட்டுப்பார்த்ததில் 20-லட்சம் பவுன் மதிப்புள்ள தங்கம் எடுக்கப்பட்டது. பூமி மட்டத்திற்கு கீழ் பல்லாயிரம் அடி ஆழத்தில் தோண்டினதினாலும், 93 மைல் தூரத்திலிருந்து காவேரிநீர் வீழ்ச்சியின் விசையினால் சேகரிக்கப்பட்ட மின்சார விசையினால் வேலை செய்யப்பட்ட யந்திரங்களின் உதவியாலும் மேற்கண்ட 20 லட்சம் பவுன் மதிப்புள்ள தங்கம் எடுக்கப்பட்டது.



## பாகசாஸ்திரம்

ஆமவடை-உளுத்தம்பருப்பு, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு வகைக்கு கால்படியெடுத்து ஊறவைத்து நன்றாக ஊறியபிற்பாடு, ஜலத்தை வடித்துவிட்டு, இரண்டுபலம் பச்சைமிளகாயும் முக்கால்பலம் உப்பும் போட்டு, கல்லுரலில் ஒன்றிரண்டாய் அரைத்து எடுத்துக்கொண்டு, அரைக்கால்பலம் மஞ்சள் பொடியும் கால்பலம் சீரகமும் கால்பலம் மிளகும் அதில் கலந்து நன்றாய்ப்பிசைந்து சிறு உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொண்டு, வாணலியில் எண்ணெய்விட்டுக் காய்ச்சி, அதில் மேற்படி உருண்டைகளைத் தட்டிப் போட்டு, கொஞ்சஞ் சிவக்க வெந்தபின் எடுத்துக் கொள்ளவேண்டியது. இதை மோர்க்குழம்பிற் போட்டு உபயோகிப்பதுண்டு.

வேறுவிதம்.—மூன்றுவித பருப்பு தினுசுகளையும் சமனளவாகப் போடாமல், கடலைப்பருப்புக்குச் சரிபாதியாக மற்ற இரண்டையுங்கொண்டு, உப்பு பச்சை மிளகாய் உலர்ந்த மிளகாய் தேங்காய்த் துருவல் காயம் மஞ்சள்பொடி இவற்றைச் சேர்த்துச் செய்வதுமுண்டு.

மக்காச்சோள ஆமவடை.—அரைபடி மக்காச்சோளமும் கால்படி கடலைப்பருப்பும் ஜலத்தில் ஊறவைத்து வடிய வைத்துக்கொண்டு, ஒன்றேகால்பலம் உப்பு ஐந்துபலம் முந்திரிப்பருப்பு ஒருபலம் பச்சைக் கொத்தமல்லி இரண்டுபலம்மிளகாய் கால்பலம் இஞ்சி அரைக்கால்பலம் காயம் ஐந்துபலம் தேங்காய்த் துருவல் இவற்றோடு கலந்து உரலிற்போட்டு அரைத்து, நான்கு எலுமிச்சம் பழங்களை நன்றாய்க் கசக்கி நறுக்கி மேற்படி பருப்பில் பிழிந்து பின்னுங்கொஞ்சம் அரைத்து வடைதட்டிச் சுடவேண்டியது. வெங்காயமும் சேர்த்துக்கொள்வதுண்டு. அப்போது மஸால் வடையாகும்.

---

மைசூர் ஆயுர்வேத காலேஜ்.—இதில் சேர்ந்து படிக்கப் பிரியமுள்ளவர்கள் 4-வருஷகாலம் அக்காலேஜில்படித்து வரவேண்டும். அப்படிப் படிப்பவர்களுக்கு முதல் வருஷத்தில் மாதம் 3-ரூபாய்க்குக் குறையாத ஸ்காலர் ஷிப்பும் இரண்டாவது வருஷத்தில் 4-ரூபாயும் அதற்கடுத்த இரண்டு வருஷங்களிலும் மாதம் தோறும் 4-ரூபாய் ஸ்காலர்ஷிப்பும் கொடுக்கப்படும்.

## சண்டையைச் சார்ந்தவை

இப்போது நேர்ந்துள்ள யுத்தத்தால் இந்தியாவிலுள்ள ரயில்வேக்களுக்கு இவ்வருஷம் 29 கோடி ரூபாய் அளவாக வரும்படி குறைந்துவிட்டதென்று தெரிகின்றது.

*
* *

யுத்தச் செலவுகளைப் பற்றி மிகுதியும் ஆராய்ச்சி செய்த எட்கர் க்ராமண்ட் என்பவர் சில தினங்களுக்கு முன் லண்டனில் பேசியபொழுது தினந்தோறும் யுத்தஞ் செய்யும் ராஜாங்கங்கள் அனைத்துக்கும் மொத்தமாக $2\frac{1}{2}$ கோடிப் பவுண்டு செலவாகின்றதென்று கூறினர்.

*
* *

போர் முனையில் ஜெர்மனியர் 60000 மோட்டார் வண்டிகளையும், பிரெஞ்சுக்காரர் 70000 மோட்டார் வண்டிகளையும், இங்கிலீஷ்காரர் 20000 மோட்டார் வண்டிகளையும் உபயோகப்படுத்துகின்றனர்.

*
* *

ஜெர்மன் சில்வரென ஒரு உலோகப் பொருள் வழங்கப்பட்டுவருகிறதல்லவா? அதின் பெயரில் ஜெர்மன் என்னும் பதமிருப்பதால், அப்பதத்தைக் கூற ஆங்கிலேய வர்த்தகர் அருவருத்து, அதை நிக்கல் சில்வரென்று வழங்கி வருகின்றனர்.

*
* *

இப்போது ஐரோப்பாவில் நடக்கும் சண்டையில் 18,500,000 பேர் ஆயுதம் பிடித்திருக்கின்றனரென்றூகிக்கலாம்; இவர்களுள் ஜெர்மனி சேனையில் 4,350,000 வீரரும், பிரான்சு சேனையில் 4,000,000 வீரரும், ருஷ்ய சேனையில் 5,400,000 வீரரும் இருக்கின்றனர்.

*
* *

டார்டனல்ஸில் இப்பொழுது சண்டை செய்யும் பெரிய பிரிட்டிஷ் போர்க்கப்பலான க்வீன் எலிஸபெத்தனிடமுள்ள பீரங்கிகளெல்லாவற்றையும் சுட்டு ஒரு மணி நேரம் சண்டைசெய்வதற்கு $2\frac{1}{2}$-லட்சம் பவுண்டு செலவாகின்றதாம். லயன் என்னும் கப்பல் தனது 13 அங்குலக் குழாய்ப் பீரங்கியில் ஒரு குண்டு சுடும்பொழுது 75 பவுண்டு மதிப்புள்ள வெடி மருந்து வெளியாகின்றதாம்,

*
* *

ஜெர்மனியர் யுத்தகளத்தில் காயமடைந்து கிடப்பவர்களைக் கண்டுபிடிக்கவும், பாரக் கொடுப்பவர்க்குச் சமாச்சாரங் கடிதங்களைக் கொடுக்கவும், பகைவர் வருவதை தூரத்தால் கண்டுபிடித்துத் தெரிவிக்கவும் பழக்கி யிருக்கும் நாய்களில் 6000 நாய்களை கிழக்கு மேற்குப் போர்க்களத்தில் உபயோகப்படுத்தி வருகின்றனர்.

*
* *

மேற்கரங்கத்தில், பிரிட்டிஷ்சேனையும் பிரஞ்சுசேனையும் பெல்ஜிய சேனையும் சேர்ந்து 592 மைல் தூரம் நிலை பெற்று போர் செய்கின்றன. அதில் பிரிட்டிஷ் சேனை மட்டும் முப்பத்தொன்று மைல் நீளம் வியாபித்திருக்கிறது. பிரஞ்சு சேனை 544 மைலும், பெல்ஜிய சேனை 17 மைலும் பாவி யிருக்கின்றன. கிழக்கரங்கத்தில் ருஷிய சேனை 856 மைல் நீளம் சண்டை செய்கின்றது; ஸெர்விய சேனையும் மாண்டிநீகா சேனையும் சேர்ந்து 219-மைல் தூரம் காவல் செய்கின்றன.

*
* *

அந்த ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் 66 லட்சத்து 91-ஆயிரம் பவுன் அதாவது, சுமார் 1 கோடிரூபாய் பெறுமானமுள்ள சாமான்களை ஏற்றிச்சென்ற 67 கப்பல் கப்பல்களை அமிழ்த்தி யிருக்கின்றன. அதன் விவரம் பின் வருமாறு. —

எம்டன்.—22 லட்சத்து 11 ஆயிர பவுன்,

கார்ல்ஷ்ரூ.—16 லட்சத்து 21 ஆயிரம் பவுன்.

கிரென்ன் பிரின்ஸ் வில்லியம்.—11 லட்சத்து 62 ஆயிரம் பவுன்.

*
* *

பிரின்ஸ் எயிடல் பிரடரிக்.—8-லட்சத்து 85 ஆயிரம் பவுன், எம்டன் என்ற யுத்தக் கப்பலே அதிகநாசம் விளைவித்திருக்கிறதென்று தெரிகிறது.

*
* *

பிரெஞ்ச் தளகர்த்தரான ஜெனரல் ஜியாப்ரே அவர்கள் இப்போது சர்க்கரைசேர்ந்த பலகாரங்களையே மிகுதியாக வுண்டு வருகின்றனராம். அவரிப்போது நடக்கும் சண்டையில் தாம் வேலை செய்யும்போது தமக்கிளைப்புண்டாகாதிருக்கும்படி சர்க்கரை சேர்ந்த பலகாரங்களை வாயில்போட்டுத் தின்றுகொண்டேயிருக்கின்றாராம். வேலையை மிகுதியாகச்செய்து களைப்படைந்திருப்பவர் சர்க்கரை சேர்ந்த வுணவுகளையுண்டால் அக்களைப்பு விரைவாக நீங்கிவிடுமாம், இரண்டுமணி நேரத்திற்குள் அவ்வுணவின் பயன் தெரிய வருமாம். அமெரிக்காவிலுள்ள சுரங்கங்களில் வேலை செய்பவர்களுள் பலர் வேலைசெய்து இளைப்படைந்தபோது தித்திப்புள்ள பழங்களையும் சர்க்கரை சேர்ந்த பலகாரங்களையுமன்றி மற்றவுணவுகளை யுண்பதில்லையாம்.



## விசேஷ வர்த்தமானம்

**பாலில் நீர்.**—லண்டன்மா நகரிலே பால்வியாபாரஞ் செய்யும் ஒருவன் பாலில் நீரைக்கலந்து விற்றதற்காக அவனுக்கு 10 பவுன் அதாவது 150 ரூபாய் அபராதத்தை மாஜிஸ்டிரேட் விதித்தார்.

**அதிசய ஜனனம்.**—திருவாங்கூரைச் சேர்ந்த கருங்கப் பள்ளியில், ரோமன் கத்தோலிக் மதத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீ ஓரேகாலத்தில் 4-ஆண்குழந்தைகளைப் பெற்றனளாம். அவைகளில் இரண்டு பிறந்தவுடனே இறந்து போயினவாம். மற்றிரண்டும் சுகமாக இருக்கின்றனவாம். அவைகள் இரண்டும் நிரம்பப் பருமனுமிருக்கின்றனவாம். இப்படி ஒரு நிருபர் நியூ இந்தியா பத்திரிகைக்குத் தெரிவிக்கிறார்.

**இரத்த மழை.**—சில தினங்களுக்கு முன் கான்பூரிலுள்ள மசூதியில் ரத்தமழை பெய்ததென்று டெல்லி ஹம்தார்த் பத்திரிகை கூறுகின்றது. மசூதியின் சுவர்கள் முற்றும் எங்கும் ரத்தமயமாயிருந்தன. இந்தப் பயங்கரமும் ஆச்சரியமுமான காட்சியை இந்துக்களும் மகம்மதியர்களும் ஏராளமாகப் போய் பார்த்துவருகின்றார்கள் இது வாஸ்தமாயிருக்கலாமென்றும், ஆகாயத்தில் ஒரு ராஜாளி எதையேனும் பிடித்துக்கொண்டு போக, அதனால் ரத்தம் பூமியில் ஏற்பட்டிருக்கலாமென்று கான்பூர் கெஸட் கூறுகிறது. இதனால் ஒரு கட்டடம் முழுமையும் ரத்தக்கறையாகுமோ?

**சமஸ்கிருத பாடசாலை.**—ராமேசுரம் தேவஸ்தானப் பண்டிலிருந்து மதுரையில் ஒரு சமஸ்கிருதப் பாடசாலை ஸ்தாபிக்க வேண்டுமென்று ஐகோர்ட்டார் உத்தரவு செய்துவிட்டனர். இம்முயற்சி தர்ம ரக்ஷண சபையாரால் செய்யப்பட்டது. அந்தப் பாடசாலையில் மதசம்பந்தமான பாடங்களும், தமிழும் சமஸ்கிருதமும் கற்பிக்கப்படும். அந்தப் பாடசாலையின் பிரின்ஸ்பாலாயிருப்பவர் யம். ஏ. அல்லது பீ. ஏ. பரிட்சை தேறியவரா யிருக்கவேண்டுமாம் அங்கு ஒரு லைப்ரெரியும் இருக்கும். பண்டிதர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பாடசாலையிலேயே ஜாகை வசதிகள் செய்யப்படும். மாணவர்களின் சரீரப் பயிற்சியும் கவனிக்கப்படும்.

**விதவா விவாகம்.**—பெர்ஹாம்பூரைச் சேர்ந்த கோபாலபுரத்தில் தோத்திர சமாஜத்தின் ஆதரவில் ஸ்ரீமதி கோமேஸ்வரம்மா என்ற கைம்பெண்ணுக்கும் ஜெகன்னாதன் என்ற ஒருவருக்கும், விவாகமகோற்சவம் 13 தேதியன்று கொண்டாடப்பட்டது. கோமேஸ்வரம்மா 10-வது வயதில் விதவையானள். இப்பொழுது அவளுக்கு வயது 18. அவள் மரியாதையான வைதீக குடும்பத்தைச் சேர்ந்தவள். ஜெகன்னாதன் என்ற மணமகனுக்கு வயது 28. அவர் முதல் பாரியாளை இழந்தவர். அவருக்கு கஸ்டம் ஹவுஸில் குமாஸ்தாவேலை, அவரும் அதே வகுப்பைச் சேர்ந்தவர். பல பிராம்மண குடும்பங்கள் அந்த விவாகத்திற்குப் போயிருந்தன. பெர்ஹாம்பூரிலிருக்கும் சில வக்கீல்களும், உபாத்திமார்களும், ஆபீஸர்களும் விவாகத்திற்குப்போயிருந்தார்கள்.

**விவாக வழக்கங்கள்.**—மெட்ராஸ் டைம்ஸ் பத்திரிகை அடியில் வருமாறு எழுதுகிறது:—ஹிந்துக்கள் விவாககாலத்தில் ஏராளமாய் பணம் செலவுசெய்கிறதை நிறுத்திவிடவேண்டுமென்பது ஆசாரத் திருத்தக்காரர்களால் பலமான பிரயத்தனம் செய்யப்பட்டுவரும் இக்காலத்தில், பஞ்சாப்பில் ஒரு கனவான் கட்டைகற்கள் முதலிய அசேதன வஸ்துக்களுக்கு விவாகஞ் செய்து முடிப்பதில் 1500 ரூபாய் செலவு செய்தார் என்று வங்காளப் பத்திரிகை ஒன்றில் வெளியாயிருக்கிறதை வாசிக்க வியப்பாயிருக்கிறது. நாராயண விக்கிரகத்திற்கும் லட்சுமி விக்கிரகத்திற்கும், முதலில் விவாகத்தைச் செய்து முடித்தார். இரண்டாவதாக, மரக்கட்டையினல் செய்யப்பட்ட ஆண் பொம்மைக்கும் பெண் பொம்மைக்கும் விவாகத்தைச் செய்து முடித்தார். மூன்றாவதாக மாமரத்திற்கும் புளியமரத்திற்கும் விவாகத்தைச் செய்துமுடித்தார். இவ்விதமான மூன்று விவாகங்களை முடிப்பதற்கு ஏற்றுக்கொண்ட புரோகிதருக்கு 200 ரூபாய் சம்பாவனை கொடுக்கப்பட்டது. ஆண் பொம்மைக்கும் பெண் பொம்மைக்கும் விவாகத்தைச்செய்து முடிக்கும் வழக்கம் புதிதல்ல. பூமி செழித்து நல்ல வெள்ளாமையைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையின்பேரில் இவ்வித விவாகம் பூர்வத்தில் நடத்தப்பட்டு வந்ததாம். விருக்ஷங்களுக்கு விவாகம் நடத்துவதும் இந்தியாவில் புதிய வழக்கமல்ல. அவ்வித விவாகம் சாதாரணமாய் இந்தியாவில் நடத்தப்பட்டுவருகிறது. வட இந்தியாவில் மாமரத்திற்கும் புளியமரத்திற்கும் விவாகஞ் செய்து வருகிறார்கள். தென்னிந்தியாவில் வேப்பமரத்திற்கும் அரசமரத்திற்கும் விவாகம் செய்து முடிப்பது வழக்கம்.

**ஆத்திரக்காரிக்கு புத்திமட்டு.**—தீபக் என்னும் பத்திரிகை பின்வருமாறு சொல்லுகிறது வங்காள மாகாணத்தைச்சேர்ந்த மூரதபாத் என்னும் நகரில் ஒரு அதிசயமான கேஸ் விசாரணையாகி வருகிறது. அதன் விவரம் என்னவென்றால்: வக்கீலொருவர் ரயில்வண்டியிலே 2-வது வகுப்பில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார். ஒரு ஐரோப்பிய ஸ்திரீயும் அதே வண்டியில் வந்து ஏறிக்கொண்டாள் பின்பு, அந்த வக்கீல் தமக்கு ஒரு கேஸில் கிடைத்த பீஸ் பணத்தை எண்ணிக்கொண்டிருக்கையில் அப்பணத்தைக் கண்டதும் அந்த ஐரோப்பிய ஸ்திரிக்குக் பேராசை தோன்றிவிட்டது. ரயில்வண்டி ஓடிக்கொண்டிருக்கும்பொழுது அவள் அந்த வக்கீலைப்பார்த்து "இப்பணத்தை எனக்குக் கொடுக்கவேண்டும். இல்லாது போனால் என்னுடைய கற்பைக் கலைக்கமுயன்றதாகக் கூக்குரலிட்டு அபாய அறிக்கையை இழுத்து வண்டியை நிறுத்திவிடுவேன்" என்று பயமுறுத்தினாள். இவ்வாறு இருமுறை அவள் பயமுறுத்தியும் அந்த வக்கீல் பதில் சொல்லாமலிருந்துவிட்டார். பின்பு அவள் எழுந்து, ரயில் வண்டியிலுள்ள அபாய அறிக்கையை இழுக்கப்போனாள். அத்தருணத்தில் அந்த வக்கீல் மனக்கலக்க மடையாமல் வழக்கம் போல் சாவதானமாய் இருந்து அந்த ஸ்திரீயின் அருகே சென்று "ஏன் அபாயக்குறியை இழுக்கப் பார்க்கிறாய். உனக்குவந்த அபாயமென்ன! நீ சொன்னது என் காதில் படவில்லை. என்ன தேவையென்றும், அபாயக்குறியை இழுத்து வண்டியை நிறுத்த முயல யாதுகாரணமென்றும் அறிவித்தால் என்னால் கூடியதைச் செய்கிறேன்" என்று சொன்னார். அவ்வுரை கேட்ட அந்த ஸ்திரீ தான் முன் சொன்னதையெல்லாம் ஒரு கடிதத்தில் எழுதி அந்த வக்கீலினிடம் கொடுத்தாள். அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டதும், "நான்தான் உன்மீது குற்றஞ் சாட்டவேண்டும்" என்று அந்த வக்கீல் சொல்லி, அடுத்த ரயில்வே ஸ்டேஷன் சேர்ந்ததும் அவ்விஷயத்தைப் போலீஸாருக்கு அறிவித்தார்.

## அதிமதுரம்

**ஸ்ரீ கா. திருவேங்கட ஆச்சாரியார்**

1. எட்டயாபுர சமஸ்தான வித்வானாயிருந்த கடிகைமுத்துப் புலவர் தம்மனைவி திவசத்தின் பொருட்டுக் கடைவீதியிலிருந்து வேண்டிய சாமான்களும் பண்டங்களும்வாங்கி தலைமேல்வைத்துச் சுமந்துகொண்டு வீடு நோக்கி வரும்போது, அவ்வூர் மகாராஜா வெளியுலாச் செல்கையில் புலவரை அக்கோலத்துடன் கண்டு 'என்ன விசேடம்?' என்றுகேட்க, புலவர் 'தலைவிதிவசம்' என்றனராம். இவ்வினோதக்கூற்று, இவ்வாறு சுமப்பது தலைவிதி வசம் எனவும், இப்பண்டங்களைக் கொணர்ந்தது தலைவி திவசத்துக்காக எனவும் பொருள் தருதல் காண்க.

2. கடிகைமுத்துப் புலவரது அந்திய காலத்தில் பாலை அழுக்குத்துணியால் நனைத்து புலவர்மகன் அவர் வாயில் பிழிய அப்பால் நாற்றம் பெற்றமையால் உட்கொள்ளாது வெளியிடும்படியாயிற்று. அப்போது மகன் புலவருக்கு மரணக்குறியாகப் பால் கசக்கிறதுபோலும் என்று கருதி, 'பால் கசக்கிறதோ' என்று புலவரைக் கேட்க' 'பாலுங் கசக்கவில்லை துணியுங் கசக்கவில்லை' என்றனராம். பின் அவர் புத்திரர் 'எங்களை விட்டுப் போகின்றீர்களே' என்று வருந்தும்போது புலவர் 'நானோர் அப்பன் போனாலென்ன உங்களுக்கு எட்டப்ப நாயக்கனிருக்கும்போது' என்றனராம்.

3. கல்போது ஜமீனில் சமஸ்தான வித்துவானாயிருந்த பெரியதம்பி ஆச்சாரியாரும் அந்த ஜமீனாதிபதியான வேளாளரும் மழை பெய்ந் தோய்ந்தபோது புன்செய் பக்கத்து வழியாக சேர்ந்து சென்றபோது ஒரு தட்டாரப்பூச்சி அதன் குஞ்சுடன் பறந்து செல்லுதலைக் கண்ட தானாபதிப்பிள்ளை கூடவரும் ஆச்சாரியை நோக்கி 'அதோ தட்டான் பறக்கிறான் காணும்' என்று பரிகாசமாகக் கூற 'அத்துடன் பிள்ளையும்கூடப் பறப்பதைக் காணும்' என்று பிள்ளையை ஆச்சாரிப் புலவர் பரிகாசமாகக் கூறினராம்.

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

**1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள**

**சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை**

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] **1915௵ ஜூன்௴** [சஞ்சிகை 9

## ஒளிவளர் விளக்கு

1915௵ மே மாதத்தில் நமது சபா மண்டபத்திற்கு விஜயஞ் செய்தவர்களுடைய மொத்த எண்ணிக்கை 215.

* * *

ருமானிய நூலாசிரியரான ஜாகோபி, வால்மீகி ராமாயணம் கிறிஸ்து பிறந்ததற்கு முன் 600-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று ஊகிக்கிறார். அதாவது, அந்த புராதன கிரந்தம் 2500-வருஷங்களுக்கு முன்னால் எழுதப்பட்டதாகின்றது.

* * *

இந்தியாவிலே வேலை செய்யும் பல ரெயில்வேக் கம்பெனிகளில் வட மேற்கு ரெயில்வே கம்பெனியார் தங்கள் பாதைகளில் ஓடும் வண்டிகளுக்கு வர்ணம் பூசவாங்கப்படும் வர்ணச்சரக்கு அத்தனையும் இந்தியாவிலேயே செய்யப்பட்ட சரக்காயிருக்க வேண்டுமென்றும், அச்சரக்கைத் தவிர அன்னியச் சரக்குகளை வாங்குவதில்லையென்றும் தீர்மானஞ் செய்திருக்கிறார்கள்.

* * *

சேனைத்தலைவர், சங்க 3-வது கான்பரன்ஸில் அச்சங்கத்தின் ஆதரணையின்கீழ் சாப்பாட்டுடன் கல்விச்சாலைகளை ஸ்தாபித்து ஷை சாதிப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி புகட்டவேண்டும் என்று பிரஸிடென்டு சொன்னார். உடனே கல்விச் சாலையை ஸ்தாபிக்க வேண்டியதற்காக பொருள் சேகரிக்க ஒரு ஜாப்தா தயாரிக்கப்பட்டது. அதில் 6000-ரூபாய் வரையில் கையொப்பம் செய்யப்பட்டது.

* * *

தங்களுடைய பிள்ளைகளைப் படிக்கவைப்பதற்கு சக்தியற்ற பிராமண வகுப்பாருக்கு உதவி செய்வதற்கென்று மைசூரில் ஒரு நிதி ஏற்பட்டிருக்கிறது. இந்த நிதியில் சேரும் பணத்தொகையிலிருந்து ஏழையான பிராமண வகுப்புப் பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படும். இந்த நிதிக்கு ஸோஸலையிலிருக்கும் ஸ்ரீ வியாசராய மடம் ஸ்வாமிகள் 1000-ரூபாய் நன்கொடை செய்திருக்கிறார்கள்.

* * *

இந்தியாவில் நான்கு ஜாதிகள் இருந்ததாய் மனுதர்ம சாஸ்திரத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதோ முன்னேற்ற மடையாத ஜாதிகளின் பிள்ளைகளுக்கு ஸ்கூல் சம்பளம் வசூல்செய்வதில் கவர்ன்மெண்டாரால் ஸ்பெஷ

லாக சம்பளவிகிதம் குறைக்கப்பட்டிருப்பதாக வெளியாயிருக்கும் கவர்ன்மெண்டு உத்தரவுப்படிக்கு 128-முன்னேற்ற மடையாத ஜாதிகள் இருக்கிறாகள்என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.முன்னேற்றமடைந்துள்ள ஜாதிகள் எத்தனையோ ?

*
* *

கோள தேசத்தில் ஈழவர்கள் என்று ஒருவித வகுப்பார் உண்டு. அவர்களுக்குள் ஸம்ஸ்கிருதப் படிப்பை அபிவிருத்தி செய்வதற்காக ஸ்ரீ நாராயண குருஸ்வாமி என்பவர் நிரம்ப அக்கரையெடுத்துக்கொண்டு வருகிறார். S. N. D. P. என்ற சபையின் ஆதரவில் இரண்டு சிறந்த ஸம்ஸ்கிருத ஸ்கூல்கள் ஏற்பட்டு நடந்துவருகின்றன. வருஷாவருஷம் ஸம்ஸ்கிருதம் வாசிக்கும் ஈழவர்களின் தொகை அதிகமாய்க் கொண்டு வருகிறதென்று சொல்லப்படுகிறது. ஆயுர்வேத வைத்திய முறையைப்பற்றிச் சொல்லும் நூல்களைக் கற்பதில் ஈழவர்கள் மிகவும் கவனஞ்செலுத்தி வருகிறார்களென்றறிகிறோம்.

*
* *

பிராம்மண சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் பல உட்பிரிவுகளுக்குள் விவாகங்களை நடத்துவதில் சாஸ்திரம் சம்மதங் கொடுக்கிறதா இல்லையா என்பதை ஆராய்ந்து முடிவு செய்யவேண்டுமென்ற வேண்டுகோளுக்கு—“ ஸ்ரீ சிருங்கேரி மடாதிபதி அவர்கள் அவ்வித விவாஹம் கூடாதென்று சாஸ்திரத்தில் எங்கும் சொல்லவில்லை. கலியாண மாப்பிள்ளை எந்த வர்ணம் அல்லது ஜாதியைச் சேர்ந்திருக்கிறானோ, மணமகளும் அதே வர்ணத்தைச் சேர்ந்தவளா யிருக்கவேண்டுமென்பதை ஸ்மிருதி வற்புறுத்துகிறது. இவ்விதமாய்ச் சொல்லப்பட்டிருக்கும் சாஸ்திர சம்மதத்தை இச் சபையோர்கள் அனுசரித்து உட்பிரிவுகளைக் கவனியாமல் விவாகங்களை முடித்துவந்தால், பெண்களுக்குத் தக்க வரன்கள் கிடைக்கவில்லையென்று ஏக்கம் பிடித்திருக்கும் பல்லாயிரம் பெற்றோர்களின் கஷ்டம் நிவர்த்தியாகும்” என்று தெரிவித்ததாய்ச் சொல்லப்படுகிறது.

## சிற்றுளி செதுக்குவேலை

### “ சத்தியவசனன் ” எழுதியது

(1) மரத்தில் சித்திரச் செதுக்குவேலையை சாதாரணமாய் இந்நாட்டில் சிற்றுளி வேலை என்பார்கள். இத்தொழில் மிகுந்த அற்புதமானது. முதிர்ந்த மனோபாவத்தின் மிகுதியையும் அனுபோகத்தையும் சார்ந்து நிற்றற்பாலது. சிற்றுளி வேலைக்காரர்கள் பொருள்களின் உருவத்தை மனதில், வேலை செய்வதற்கு முன்னரே, பதியவைத்துக்கொள்ளவேண்டியிருத்தலின், பிரதமத்தில் சித்திரப்பழக்கம் அன்னோர்க்கு இன்றியமையாதது. சித்திரப்பழக்கத்திற்கும் சிற்றுளி வேலைக்கும் உள்ள இணைபிரியாச் சம்பந்தத்தினால்தான் சிற்பிகளாகிய மரவினைஞருக்கு ஓவியக்காரர் என்றும் சித்திரக்காரர் என்றும் திவாகரத்திலும் ஏனைய நிகண்டுகளிலும் பெயர் வழங்குவது. இத்தகைய மரச்செதுக்கு சித்திர சிற்றுளி வேலையை சிறிது விரித்து எழுதுவது மிகுந்த பிரயோசனமுடையதாகும்.

பூர்வத்தில் இந்தியாவில் தாருசிற்பியர் அதாவது மரவினைப்புலவர் என்போர்களில் பெரும்பாலர் சிற்றுளி செதுக்கு சித்திரவேலையை அப்பியசித்துவந்தார்கள். தற்காலத்தில் சிற்பியரில் அநேகர் இவ்வற்புத கைத்தொழிலை கைசோரவிட்டார்கள். கைசோரவிட்டதற்கு காரணம் என்னெனின், வீடுகளில் வாயிற்கால்களிலும் வாயிற்படிகளிலும், அலங்காரப் பொருள்களிலும் சித்திரவேலையை அமைத்து வைப்பது செல்வவந்தர்களால்தான் ஆகக்கூடியது ஏழைக் குடிகளுக்கு வீட்டின் மரச்சாமான்களில் சித்திரக் கைப்பாடான சிற்றுளிவேலையை செறித்துவைப்பது இயலாது. அஃது தனவந்தர் சுதந்தரம். தௌர்ப்பாக்கியர் சுதந்தரமல்ல. சிற்றுளிவேலை துர்லபத்திற்கு வேறொரு காரணம் உரைக்கலாம்.

அஃதென்னெனில், முற்காலத்தில் இந்தியர்கள் செல்வச் சிறப்புற்றிருந்தாலும் சரி, இல்லாதிருந்தாலும் சரி, வீடுகளை நிருமிக்கும்போது சிற்பாசாரியர்களுக்கு வேண்டிய பொருளுதவிசெய்து வாயிற்கால்களிலும் படிகளிலும் சரப்பட்டைகளிலும், பொதிகைகளிலும், சித்திரவேலையை அமைக்கச் சொல்வார்கள். தற்காலத்தில் ஐரோப்பிய வழக்கத்தைப் பின்பற்றி, சித்திரவேலையை பணச் செலவென்றும், மரச் சிதைவென்றும், அதுகாரணமாய் பொருள்களின் பலக்குறைவு நேர்கிறதென்றும் கருதி நிராகரிக்கிறார்கள். பொதிகை, சரப்பட்டை, வலைச்சல்கள், வாயிற்கால்கள், படிகள் முதலியவை சாதாரணமாய் மழுக்கப்பட்டிருந்தால், பணச் செலவில்லை என்றும், மரச்சேதாரமில்லையென்றும், பொருளில் பலக்குறைவு உண்டாகாதென்றும் கருதி சித்திரவேலையை உபேக்ஷிக்கிறபடியால் சித்திரச் செதுக்கு மரவினைஞரின் தொகை குறைந்துபோயிற்று.



இப்போது சித்திரச்செதுக்கு சிற்றுளிவேலை என்பது இருக்கிறதென்று எதினால் தெரிந்துகொள்ளலாமென்றால் சந்தனமரத்தில் மிகுந்த உயர்ந்த வேலைப்பாடாகச் செய்யப்படுகிற பெட்டிகளினாலேயும் இன்னும் இதர சாமான்களினாலேயும் தெரிந்துகொள்ள வேண்டியது. கறுப்புமரத்தில் அற்புதமாக செதுக்கிய சித்திரச் சாமான்கள் பம்பாய் இராஜதானியில் வீடுகளில் அமைக்கப்பட்டிருத்தலை இப்போதும் பார்க்கலாம். தற்காலத்தில் இந்திய தேசத்திற்கென்று உண்டாகி நிலவிய சித்திரச் செதுக்கு மரவினை விசாகப்பட்டணத்திலும் அமதாபாத்திலும் மாத்திரமே விளங்குகிறது. என்றாலும், இந்தியாவில் ஏறக்குறைய எல்லாவிடங்களிலேயும் சிற்றுளிவேலை சிறிதுசிறிதாகவேனும் நடந்துக்கொண்டுதானிருக்கிறது. சூரத்திலும் கன்னடத்திலும் விசாகப்பட்டணத்திலும் அமதாபாத்திலும் மரசித்திரவேலை அதிகமாய்ச் செய்யப்படுதற்கு காரணம் அவ்விடங்களில் சித்திரச் செதுக்குவேலைக்கு சௌகரியமான கறுப்பு மரமும், சந்தனமரமும், வெண்மரமும் அகப்படுகிறது. இந்தியாவில் சிற்சில பாகங்களில் செம்மரத்தில் பிரதிமைகள் விலங்கின் உருக்கள் பக்ஷிகளின் பிம்பங்கள்செய்கிறார்கள். செப்புகள் தட்டு முட்டுகள் செம்மரத்தினால் கடைந்து செய்யப்படுகின்றன.

### •சித்ரச் செதுக்கு மரவினைக்குவேண்டிய சாமான்கள்.

(2) சிற்றுளி வேலைக்காரர்களுக்கு அதிக விருப்பமுள்ளது சந்தனமரம். தென் இந்தியாவில் சந்தனமரம் உண்டாவதினால் அவ்விடத்துள்ள சிற்பியர் சிற்றுளி வேலையை அப்பியசிக்கிறார்கள். சந்தனமரம் வேறெங்கும் பயிராவதில்லை. பயிரானாலும் செதுக்குவேலைக்கு வேண்டிய சௌகரியத்தைக் கொடுக்கவல்ல உள்மரம் கிடைத்தலில்லை. இந்தியாவில் சந்தனமரம் மதசம்பந்த சடங்குகளுக்கு உபயோகப்படுகிறது. சித்திரவேலைக்காரர்கள் சந்தன ரம்பத்துகளை ஆலயவழிபாட்டில் நறும்புகை உண்டாக்கக் கொடுத்துவிடுகிறார்கள். சந்தனத்துகளை சவம் எரித்தற்கும், உபயோகப்படாத துண்டுகளை சந்தனத் தைலம் இறக்குவோர்க்கும் கொடுத்துவிடுகிறார்கள். சந்தனமரம் பொதியமலையிலும் கன்னடத்திலும் ஏராளமாய்ப் பயிராகிறது.

சந்தனமரம் $2\frac{1}{2}$-அடி நீளமான திரள்துண்டாக துண்டிக்கப்படுகின்றது. அத்துண்டுகள் 9 அல்லது 9-க்குக் குறைந்த குறுக்களவை யுடையதாயிருக்கின்றன. மேல்பட்டை உரிக்கப்படுகிறது. பட்டைக்கு அடுத்த மரப்பாகம் வெண்மையானது. உபயோகமற்றது. நடுப்பாகம் மஞ்சள் நிறமுள்ளது. அதிக கடினமானது. அழுத்தமானது. எண்ணெய்ப்பசையுள்ளது. 9 அங்குல குறுக்களவுள்ள நல்ல சந்தனதிரள் •துண்டில் ஏழு அங்குலம் குறுக்களவுள்ள அழுத்தமான மரப்பாகம் இருக்கும். 24 பவுன் எடையுள்ள சிறுதுண்டுகளின் கிரயம் ரூ. 3—4—0. 24 பவுன் எடுத்தலளவையுள்ள பெருந்துண்டுகளுக்கு விலை ரூ. 10—12—0.

செதுக்குவேலையில் உபயோகப்படுத்தும் வேறு மரங்கள், எபொனி, கறுப்புமரம், தேக்குமரம் முதலியவையேயாம். இந்தியாவில் இம்மரங்கள் எங்கும் கிடைக்கக்கூடியவை. தேக்குமரத்தில் சித்திரவேலை அமதாபாத்தில் அதிக நாணயமாகச் செய்கிறார்கள். வடபாக இந்தியாவிலிருந்து வரும் பாக்ஸ்மரத்தை (Boxwood) அமதாபாத்தில் சித்திரவேலைக்கு உபயோகிக்கிறார்கள். சேவன் மரத் ('Sevan' wood) தில் சூரத்தில் சித்திரிக்கிறார்கள். சாதாரணமாய் ஒரே மரத்தில்தான் சித்திரச் செதுக்கு சிற்றுளிவேலை செய்யப்படுகிறது. சில வேளையில் சந்தனமரமும், கறுப்பு மரமும் எபொனி மரமும் கலந்து சித்திரவேலை செய்யப்படுகிறது. சிற்சிலவேளைகளில் மேல்குறித்த மரங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக தந்தத்துடன் கலந்து சித்திரவேலையை நடாத்துகிறார்கள். சூரத் சந்தனமரப்பெட்டிகள் ஓரங்களில் தந்த வரம்புகளாலும் எபொனி வரம்புகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

சந்தனமரத்தில் தந்தத்தையும் எபொனியையும் உட்பதிவு செய்தற்கு சூரத்தில் “ சாடெலி ” த்தொழில் என்கிறார்கள். தந்தம், எபொனி, வெள்ளீயம், பச்சை

நிற எலும்பு, செம்மரம் இவைகளின் நீண்ட அகலக்குறைவுள்ள பலகைகளை சாதாரணமாய்முக்கோணவடிவாக துண்டித்து ஆச்சரியத்தை உண்டாக்கும் வண்ணம், பதிவு செய்தது என்பது புலப்படாமலே, பதிக்கிறார்கள். அம்மாதிரியாக செய்யப்படுகிற மரப்பலகைகள் கோடிபாகத்தில் ஏறக் குறைச்சலாக வெட்டப்பட்டு இருக்கிறது. அவைகள் ஏறக்குறைய ஆறு அங்குல நீளமுள்ள துண்டுகளாக துண்டிக்கப்படுகின்றன. இத்துண்டுகளை ஒன்றன் பக்கத்தில் ஒன்றாகவைத்தால் ஓர் விசாலமான மரப்பலகைபோல் ஆகிறது. மரப்பலகை துண்டுகளின் வேறுபாடு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பெட்டியின் மாதிரியும் வேறுபாடுடையதாகும். பிறகு பத்தில் ஒருபங்கு அங்குல கனமுள்ள சிறுதுண்டுகளை வெட்டி வேலைக்கு தயாராய் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உலோகத்திலாய இரண்டு, திரைக்கப்படுதற்கு அநுகூலமான, மனைகளின் இடையில் வெள்ளீயக்கம்பியை அழுத்தித் திரைப்பதால் ஈயத்துண்டுகள் ஆக்கப்படுகின்றன. இந்த ஈயத்துண்டுகள் முக்கோணவடிவாகயிருத்தற்கு காரணம் என்னையோவெனின், முற்குறித்ததிரைக்கும் பனையொன்றில் முக்கோணவடிவ ஆழி வெட்டப்பட்டிருக்கிறது. அதின் காரணமாக ஈயத்துண்டுகள் முக்கோணவடிவை அடைகின்றன. மற்றைய மரத்துண்டுகள் வேலைக்கு சௌகரியமான இழைப்புளியால் சீவி மழுக்கப்படுகின்றன. இத்துண்டுகளை இணைத்து செய்யப்படுகிற பெட்டியானது மழைகாலத்தில்தான் செய்யப்படத்தக்கது. இணைக்கும் வேலை வெயிற்காலத்தில் இயலாது. என்னையோவெனின், தோலைக்காய்ச்சி செய்யப்படுகிற ஒட்டுப்பசை வெயிற்காலத்தில் அதி சீக்கிரமாய் உலர்ந்துபோகிறது. ஆகையால் ஒட்டுப்பசை உலராதிருத்தற்குப் போதிய குளிர்ச்சியைத் தரத்தக்க கார்காலமே இணைத்தற்கு சௌகரியமான காலம். வேலைப்பாட்டின் நேர்த்தியைப் பற்றியும் துண்டு சாமான்களின் மேன்மையைப்பற்றியும் தெரிந்துக்கொள்ள விரும்புவோர் பெட்டியில் செறிந்துள்ள மரத்துண்டுகளையோ அல்லது உலோகத் துண்டுகளையோ கணக்கிடவேண்டும். பதினாறில் மூன்றுபங்கு அங்குல நீளமுடைய அறுகோணப்பெட்டியின் ஓர் பக்கத்தில் 69-வேறுவேறான துண்டுகளும் 33 ஈயத்துண்டுகளும் எபொனி, பசுநிற என்பு, தந்தம், செம்மரம் முதலிய ஒவ்வொரு ஜாதிக்கும் 9-துண்டுகள் எனக்கணக்கிடநேரின், அப்பெட்டி என்ன விசித்ரமாகவும் விநோதமாகவும் இருக்கும் என்பதை வாசகர்களே ஊகித்தறியலாம். (இன்னும் வரும்)

## சுவாஸாப்பியாசம்

**பண்டிட் எஸ். ஆனந்தம் என்பவர் சுதேசமித்திரனில் பின் வருமாறு எழுதுகிறார்:—**

அதிகாலையில் நித்திரை விட்டெழுந்து, அவசிய கருமங்களை முடித்துக்கொண்டு, சுத்தமானதும் வெளிக்காற்றுலாவக் கூடியதுமான ஓரறையில் சுகாசனம் அல்லது கமலாசனத்தில் (கமலாசனமென்பது உட்கார்ந்து இடது காலை வலது கெண்டைக்கால் மீதும், வலது பாதத்தை இடது கெண்டைக்கால் மீதும் படியும்படி பின்னிக்கொள்வது. சுகாசனமென்பது இடது கால் தொடை மீது வலது காலை மடக்கிப்போட்டு உட்காருவது.) இருந்து இடுப்பை நிமிர்த்தி மார்பை முன்னுக்குத் தள்ளி நிமிர்ந்து உட்கார்ந்து மனதிலுள்ள மற்ற விஷயங்களையெல்லாம் நீக்கி விட்டு, இவ்வுலகத்தையும் அதில் உன்னையும் படைத்து காத்து வருங் கடவுள் ஒருவரிருக்கிறாரென்பதை உறுதியாய் நம்பி, பயத்தையும் கவலையையும், சந்தேகத்தையும் விட்டு, தைரியத்தையும் சந்தோஷத்தையும், நிச்சயத்தையுமுடையவனாயிருந்து, நாசி முனையில் உன்னுடைய சுவாசம் நடைபெறுவதை கவனிக்கவேண்டும். 10-நிமிஷம் கவனித்தால் அதிகவேகமாக நடை பெறும் சுவாசம் மெதுவாய் நடக்கும். நாவில் உமிழ் நீர் பெருகும். உனக்கு ஒரு சுகந்தோன்றும், அவ்விதம் அரைமணி காலை மாலை இரண்டு வேளையும் அப்பியாசம் செய்.

### தேகாப்பியாசம்

ஒரு சுவரின் ஓரத்தில் உன்னுடைய தலையின் பின்புறம் புஜத்தின் பின் புறம் குதிகால்களின் பின் புறம் இவைகள் சுவரில் படும்படியாக நிமிர்ந்து நில். பிறகு உன் தலையை உயர்த்தி தாழ்வாயின் முன் பக்கத்தை கழுத்தின் பின் பக்கமாக எவ்வளவு தூரம் நிமிர்க்க முடியுமோ அவ்வளவு தூரம் நிமிர்த்தி கைகள் இரண்டு தொடைகளையும் சேர்ந்திருக்கும்படி தொங்கவிடு. மார்பை முன்னுக்குத்தள்ளி வயிற்றை உள்ளடக்கி புஜங்களை அசைக்காதே. இது தான் உன் தேகமிருக்க வேண்டிய சரியான நிலை. அந்நிலையில் நிற்கும்போது உன் தேகத்திலுள்ள தசை நார்கள் வலிவுற்றிப்பதைக் காண்பாய். மேலும் உன்னுடைய மார்பு, புஜங்களை பின்னுக்குத் தள்ளுவதால் வயிற்றின் மேல் புறத்திலுள்ள தசைகள் முன்னுக்கு வாராமல் சுருங்கி விலா எலும்புகள் மேல் தூக்கப்பட்டு, முன்னுக்கு வருவதையும் காண்பாய். மேற் சொன்ன இரண்டும் நன்றாய்த் தெரியும் வரையில் சுவரின் பின் பக்கத்தில் நின்று முன் சொல்லியபடி பழகு.

தேகத்தின் தசைகளையும் நரம்புகளையும் விசையுடனிருக்கச் செய்யவும் மார்பை முன்னுக்குத் தள்ளச் செய்யவும் கற்றுக்கொண்டால் சுவரின் உதவி வேண்டுவதில்லை.

மேற் சொன்ன இரண்டு விஷயங்களையும் தெரிந்துகொண்ட பின் நீ செய் வேண்டியது என்ன?

நீ எந்தச் சமயத்தில் எந்த விடத்தில் நிற்கநேரிட்டாலும் சரி அவ்விடத்தில் மேற்சொன்ன மாதிரியே தாழ்வாய்க் கட்டையை உள்ளுக்கிழுத்து தலையை நிமிர்த்து, புஜங்களைத் தளர்த்தித் தொங்கவிட்டு, வயிற்றின் தசைகளை உள்ளுக்கிழுத்துமார்பை முன்னுக்குத் தள்ளி நிற்க வேண்டும்.

### உட்கார்ந்திருந்தபடி அப்பியாசம்

ஒரு நாற்காலியில் உட்கார்ந்து முன்சொல்லிய மாதிரி சரியானநிலையில் தேகத்தை நிமிர்த்து, கால்களை உட்பக்கமிழுக்கவும்.

நீ நாற்காலி பென்சு, ஸ்டூல் முதலியவைகளில் எதில் உட்கார்ந்தாலும் சரி, சரியாய் நிமிர்ந்தநிலையில் தேகமிருக்க வேண்டும்.

### நடக்கையில் அப்பியாசம்

பக்ஷிகள் மிருகங்கள் தம்தம் தேக அமைப்புக்குத் தக்கபடி நன்றாய் நடக்கின்றன. மனிதர்கள்தான் சரியாக நடப்பதில்லை. ஆதலால் நடக்கும்போது தேகத்தை சரியான நிலையில் நிமிர்த்தி மெதுவாகவும் நன்றாகவும் சுவாசித்துக்கொண்டு ஒரே வேகத்தில் நடக்கவேண்டும். அப்போது இடுப்பை முன்பக்கம் வளைத்தும் குதிகால் பூமியில் படும்போது முழங்காலை நீட்டியும் கைகால்களை வீசியும் நடக்கவேண்டும். இவ்விதம் பழகிக்கொண்டால் வெகுதூரம் நடக்கலாம் சோர்வுண்டாகாது. தசைநார்கள் வலிவடையும்.

குறிப்பு:—மேற்சொல்லியபடியே நிமிர்ந்த நிலையில் நிற்கும் பொழுதும் உட்கார்ந்திருக்கும் பொழுதும், ஓடும்பொழுதும் தேகமிருக்கவேண்டும். சில சமயங்களில் நீ அந்நிலையை மறந்துவிட்டு முதுகை வளைத்துக்கொண்டிருக்கலாம். அச்சமயத்தில் அப்பியாசம் ஞாபகத்திற்கு வந்தால் அந்தக்ஷணமே உன்தேகத்தை நிலையில் கொண்டுவா. சிறிதுகாலம் கொஞ்சம் கஷ்டத்துடனும் ஞாபகத்துடனும் உன் தேகத்தை நிமிர்ந்த நிலையிலிருக்கும்படி செய்தால் பிறகு அது உனக்கு இயற்கையாய்விடும். அதனால் கிடைக்கும் பலன்கள் அனந்தம்.

### படுக்கையில் அப்பியாசம்

படுக்கைக்குப் போகும்போது ஜலோபாதையை நிவர்த்திசெய்துவிட்டு ஜனனேந்திரியத்தையும் முகம், கை, கால்களையும் குளிர்ந்த ஜலத்தால் நன்றாய்க் கழுவிக்கொண்டு தண்ணீர் குடித்துவிட்டு, கொஞ்ச நேரமிருந்து இடது பக்கமாகபடுத்து முதல் அப்பியாசத்தில் சொன்னபடி கடவுளை தியானித்து, சுவாசப் போக்குவரவில் கவனம்வை.

### சுவாசிக்கும் அப்பியாசம்

உட்கார்ந்து இடுப்பு எலும்பின்மேல் இரண்டு கைகளையும் வைத்து பின்பக்கம் பெருவிரலும், முன்பக்கம் மற்றவிரல்களும் இருக்கும்படி ஊன்றிக்கொண்டு, பல்லை இருக்கிக்கொள்ளாமல் வாயை மூடிக்கொண்டு மெதுவாய் மூச்சை மூக்கால் நிரம்ப இழுத்து மெதுவாய் வாயால் விடவும்.

### நடக்கும்போது சுவாசித்தல்

மெதுவாக நடக்கும்போது நான்கு அல்லது ஐந்தடி நடக்கும்வரை மூச்சை இழுத்து, ஐந்தடி தூரம் அடக்கி, ஐந்தடி தூரம் விடவும். இவைகளை நாளடைவில் அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

காற்றை இழுத்து அடைத்துக்கொண்டு வயிற்றை உள்ளுக்கிழுத்து வெளிக்குத் தள்ளுவதால் குடல் சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

தேகாப்பியாசத்திற்கும் மனோப்பியாசத்திற்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கவேண்டும்.

தேகப்பியாசத்தைப்பற்றி பலபேர் பலவிதமாக எழுதியிருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய அப்பியாசத்தையும் விசேஷமாகத்தான் சொல்லுகிறார்கள். ஆனால் இவைகளில் நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு, தேகத்தின் தசை நார்களை மட்டும் பலப்படுத்தி பெருக்கச்செய்து மனிதர்க்கு இயற்கையாகிய மிருகத்தன்மை மேலிடச் செய்யாமலிருக்கவேண்டும். எப்போதும் மனோசக்திக்குத் தேகசக்தி மீறினதாயிருக்கக்கூடாது. உலகத்தில் அரிய பெரிய காரியங்க

ளைச் செய்தவர்கள் மனேசக்தியை உடையவர்களே. ஆதலால் நமது அப்பியாசம் தேகதிடமும் மனேதிடமும் உண்டாக்கக்கூடியதாயிருக்கவேண்டும். மனேதிடமும் மனேசாந்த மடைவதாலுண்டாகவேண்டும். மனமும் நமது சுவாசநடை இருதயத்துடிப்பாகிய நாடி நடை இவைகள் நன்ரு யிருப்பதால் மூன் சொன்னபடி சுவாச அப்பியாசம் அவசியமாயிருக்கிறது. சுவாசாப்பியாசங்களிலும் பல பிரிவுகளிருக்கின்றன. நமது முன்னேர் காலை மாலை கடவுளை வணங்கும் சந்தியாவந்தன முதலிய மந்திரங்களோடு பிராணுயாமம் என்னும் ஒரு வகை சுவாசாப்பியாசத்தையும் கலந்து வைத்திருக்கிறூர்கள்.

சாதாரணமாகவோ கருவிகள் மூலமாகவோ செய்யும் தேகாப்பியாசங்களெல்லாம் மன அமைதியுடனிருந்து செய்யும் சுவாசாப்பியாசத்திற்கு இணையாகாதென்பது வெளியாகிறது. தேகாப்பியாசத்துக்கு ஒவ்வொருவரும் மேற்கண்டுள்ள விஷயங்களை அப்பியாசித்துவந்தாலே போதுமென்று நினைக்கிறேன்.

## அப்பர் தேவாரத்தாற் கொள்ளக்கிடக்கும் கீரனுர் யார் ?

### செந்தமிழ்

“ நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினேன் காண் ”

இது திருநாவுக்கரசர்வாக்கு. திருநாவுக்கரசரும் சம்பந்தரும் ஒரே காலத்தவ ரென்பதும், இருவரும் பெருநட்பினரென்பதும் யாவரு மறிந்த வுண்மை. திருநாவுக்கரசர் இத்திருவாக்கிற் சுட்டியது தருமிக்குப் பொற்கிழி யளித்த சரித்திரம். தருமிக்குச் சிவபெருமான் கொடுத்தருளிய பாடல் வருமாறு:—

“ கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ
பயிலியதுகெழீஇய நட்பின்மயிலியற்
செறியெயிற் றரிவைகூந்தலி
னறியவுமுளவோ நீயறியும்பூவே ”

இச்செய்யுளைத் தருமி கொண்டுசென்று சம்பகப் பாண்டியனுக்குக் காட்டியபோது கீரனுர் அதிற் குற்றம் பாரித்து அதற்குரிய பொற்கிழியைக் கொடுக்க விடாது தடுத்தார். அது கேட்டுச் சிவபெருமான் ஒரு புலவராய் வெளிப்பட்டு அப்பாடலினது தகுதி யெடுத்துக் காட்டித் தருமிக்கு அப்பொற்கிழியை வழங்குமாறருளினுர்.

தருமிக்குச் சிவபெருமான் பாடல் கொடுத்தருளியதும், அதிலே கீரனுர் குற்றம் பாரித்துப் பொற்கிழி வழங்காது தடுத்ததும், அப்போது சிவபெருமான் ஒரு புலவராய்ச் சென்று சங்கமேறியதும், அப்பாடலின் தகுதியை நாட்டியதும், பொற்கிழி யுதவுமாறருளியதுமாகிய பெருங்கருணைச் செய்திகளைத் திருநாவுக்கரசர் வியந்து தமது தேவாரத்தில் “பின்பாட்டுப்புலவனுய்” என்று எடுத்துப் பாடுவாராயினர்.

அற்றேல், கீரனுர் மூன்ருஞ் சங்க முடிவில் விளங்கியவரன்ரே. அவர்செய்தியை எடுத்துக் கூறிய திருநாவுக்கரசர் மூன்ருஞ் சங்கத்துக்குப் பிற்பட்டவராகற்பாலர். சம்பந்தர் திருநாவுக்கரசர் காலத்தவராதலின் அவரும் மூன்ருஞ் சங்கத்துக்குப் பின்னுள்ளவரேயாவர் என்பது சிலர் துணிபு.

இத்துணிபு நன்கு செய்யப்பட்டதாகத் தோன்றவில்லை. தருமிகொண்டுசென்ற பாடலிற் குற்றம் பாரித்தார் மூன்ருஞ்சங்கத்திறுதியி லிருந்த கீரனுர் தாமா? அன்றி, அப்பெயருடைய மற்ருெருவரா வென்பதும், கீரப்பெயருடையார் ஒருவரா பலராவென்பதும் அவர் தாம் எவ்வெக்காலத்திருந்தவரென்பதும் ஆராயப்படுதல் வேண்டும்.

திருவிளையாடற் புராணத்தின்படி, தருமிகொண்டு சென்ற ‘ கொங்குதேர் வாழ்க்கை ’ என்னுந் தெய்வப் பாடலிற் குற்றம்பாரித்தவர் கீரனுர் என்னுமொரு புலவர். அவரே அகஸ்தியர்பால் இலக்கணங்கேட்டு விபரீதம் நீங்கப்பெற்றவர். அவர் சம்பக பாண்டியன் காலத்தில் விளங்கியவர். அவர்க்குக் கீரனுர் என்னும் பெயரே பெருவழக்கு. நக்கீரனுரென்னும் பெயரும் சிறு வரவினதாய்ப் பிற்காலத்து வழங்கிற்று.

அவர் காலத்துக்குப் பின்னர் கீரனுர் என்னும் பெயர் கொண்டார் அநேகர். அவருட் குட்டுவன் கீரனுர், தும்பிசேர்கீரனுர், பொருந்திலிளங்கீரனுர், மதுரைக்கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர், மதுரை நக்கீரனுர், மோசிகீரனுர் என்போர் சிறந்தோர்.

இவருள்ளே மதுரைக்கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் இறையனுரகப் பொருளுக்கு உரைசெய்த விரகர். இவரே திருமுருகாற்றுப்படையும், நெடுநல் வாடை



யும் பாடியவர். இவர் உக்கிரப்பெருவழுதி காலத்தவர். மூன்ருஞ் சங்கத்திறுதிக்காலத்திருந்தவர்.

நெற்றிக்கண்ணைக் காட்டினுலுங் குற்றங் குற்றமே எனக்கூறி அஞ்சாது வாதாடிய கீரனுரும் வேறு, மதுரை கணக்காயனுர் மகனுர் நக்கீரனுரும் வேறு. முன்னையவர் இரண்டாஞ் சங்கத்துக் கடைக்கூற்றில் விளங்கியவர். பின்னையவர் மூன்ருஞ் சங்கத்திறுதிக் காலத்திலே விளங்கியவர். இவரை அவராகவும், அவரை இவராகவுங்கொண்டு மயங்குவார் அநேகர். யானுஞ் சிறிதுகாலத்துக்குமுன் அவ்வாறு கொண்டு மயங்கினேன். ஆராய்ச்சியாற் பின்னர்த் தெளிந்தேன். அது நிற்க,

1. சம்பகபாண்டியன் முதல்

2. பிரதாப சூரியன் 3. வங்கிசத்துவசன் 4. இரிபு மர்த்தனன் 5. சோழவமிசாந்தகன் 6. சேரவமிசாந்தகன் 7. பாண்டிவமிசேசன் 8. வமிச சிரோமணி 9. பாண்டீச்சுரன் 10. குலத்துவசன் 11. வமிசபூடணன் 12. சோமசூடாமணி 13. ராஜசூடாமணி 14. பூபசூடாமணி, 15. குலோபாண்டியன் 16. அரிமர்த்தனன், 17. சகநாத பாண்டியன், 18. வீரவாகு, 19. விக்கிரமவாகு, 20. பராக்கிரமவாகு, 21. சுரபிமாறன், 22. குங்குமபாண்டியன், 23. கர்ப்பூரபாண்டியன், 24. காருண்ணியபாண்டியன். 25. புருடோத்தமன் 26. சத்துருசாதனன், 27. கூன்பாண்டியன் ஈருக இருபத்தேழு பாண்டியர் வழிவழி யரசுவரிந்தனர் என்பதுதிருவிளையாடற்புராணம்.

இறையனுரகப்பொருளுரைப்படி கூன்பாண்டியன் முதல் உக்கிரப்பெருவழுதியீருக நாற்பத்தொன்பது பாண்டியருளர்.

உக்கிரப்பெருவழுதி காலத்தில் விளங்கியவராகிய மதுரைக்கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர்க்கும் முன்னைய கீரனுர்க்கு மிடையே எழுபத்தைந்து பாண்டியர் அரசு செய்துபோயினர் என்பது வெளிப்படையாநின்றது. இறையனுரகப் பொருளுரைப்படி கூன்பாண்டியன் முதல் உக்கிரப்பெருவழுதி யீருகச் சென்ற காலம் ஆயிரத்தெண்ணூற்றைம்பது வருடம். இக்கணிதப்படி சம்பக பாண்டியன் முதற் கூன்பாண்டியனீருகச் சென்றகாலம் (900) தொளாயிரம் வருடமாகும். ஆகவே முன்னைய கீரனுர் பின்னைய கீரனுருக்கு 2750 வருடங்களுக்கு முன்னர் விளங்கினராகற்பாலர்.

ஆதலால் முன்னைய கீரனுரே அப்பர் தேவாரத்தார் கொள்ளக் கிடப்பவரென்பது நன்கு துணியப்படும்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

## பெண் கல்வி

### விவேக திவாகரன்

சிலகாலமாக நமது நாட்டில் இந்து மகமதியப் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதில் யாவரும் முனைந்து நிற்கிறூர்கள். மகமதியர் பெண்கள் விஷயம் மகம்மதியர் பார்த்துக்கொள்ளத் தக்கது. அதில் நம் போல்வார் பிரவேசித்து அபிப்பிராயஞ் சொல்லுதல் முறையன்று. இந்துப் பெண் கல்வி விஷயமே நமது விசார வெல்லையுட்படும். ஆதலின் அக்கல்வியின் மாதிரியையும் அதனுல் விளையும் பயனையும் இங்கு நாமாலோசித்தல் அதிக அவசியமாம். “ எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும் ” என்றபடி ‘நம்பெண்கள் கண்ணுடைய ராதல்’ விசேடமே. ஆனுல் அக்கண் எத்தகைய கண்ணுயிருத்தல் வேண்டும்? இந்து முகத்திற்கு ஐரோப்பியக்கண் பொருந்துமா? அழகு செய்யுமா? நற்பயன்ருன் விளைக்குமா? மக்களைப்பெற்ற மாதா பிதாக்கள் இம் முக்கிய வினுக்களுக்குத் தக்கவிடை தேடக்கடவர். இம்முக்கிய விஷயம் பின்னுல் விவரிக்கப்படும்.

ஸ்திரீ புருஷர் நல்லொழுக்க முடையராயிருத்தல் உலகில் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும். அவ்வறிவு ஒழுக்கங்கள் கல்வி கேள்விகளால் வரும். கல்வியுங் கேள்வியும் ஒரு பயன் உடையனவாம். ஆகவே, பெரும்பாலும் கல்வி வழியில் ஆடவர் அறிவு ஒழுக்க மாதிகளையடைய, அவற்றைக் கேள்விவழியில் நமது ஸ்திரீகள் பூர்வகாலங்களில் அடைந்து வந்தார்கள். நற்குடிகளில் தந்தை சகோதரர் கணவன் முதலிய ஆடவர் பயிலும் தர்மார்த்த காம மோக்ஷப் பிரதாயமான சற் சாஸ்திரப் பயிற்சிகளும், அவற்றிற் குரிய சம்பாஷணங்களும், அவற்றின் வழி வரும் அவர்களது நல்லொழுக்கங்களும், தாயார் முதலான பெரியோர்கள் திருத்திப் புகட்டிவரும் நற்போதகங்களும் அக்குடிகளிற் பிறந்த பெண்களுக்கு நல்லறிவு நல்லொழுக்கம் தரும வுணர்ச்சியாதிகளை வருவித்தற்குப் போதுமான முக்கிய சாதனங்களா யிருந்து உபகரித்து வந்தன.

கற்றல் வழியினுங் கேட்டல் வழியில் அறிவு தெளிதில் விளங்கும். ஏனெனில் கற்ரேர் பிறர்க்குச் சொல்லப் புகுங்கால், தாம் பலகால் பல நூல்வழிக் கற்றவைகளின் சாராம்ஸங்களையே சொல்லுகின்ற

னர். இவ்வருமை நோக்கியே "கேள்வி முயல்" என்றும், "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" என்றும், "செவிக்குண வில்லாதபோழ்து" என்றும் மேலோர் வியந்து கூறி யிருக்கின்றார்கள். நடத்திக் காட்ட வரும் அறிவு, கேள்வியினும் மிக வெளியிற் சென்று மனதிற் பதியுந்தன்மைத்தாம். நூறுமுறை போதித்தலினும் ஒரு முறை நடத்திக்காட்ட வரும் பயன் எளிதாமுண்மை யாவரும் உணரக் கூடியதே

இந்நியாயங்கள்பற்றியே பூர்வகாலங்களில் சாதாரணமாக ஆடவர்கள் பிறர்பால் சென்று நூல் பல கற்றுப் பண்டிதராக, ஸ்திரீகள் சாதாரணமாக அகத்தின்கணிருந்து கேள்வி வழியில் (இதிற் காட்டிலும் அதிகம்) நல்லறிவு நல்லொழுக்கம் தரும உணர்ச்சியாதிகளை யடைந்து இல்லறத்திற் கிசைந்த கற்புநிலை வழுவாத இல்லக்கிழத்தியர்களாயிருந்து புராணேதிகாசங்களிலும் பிரசித்தியடைந்தார்கள். கேட்டல் காண்டல் வழிகளுடன் இடம் பொருள் ஏவல்களமையப் பெற்றிருந்த சில குல மாதர்கள் இல்லத்தின் கண்ணிருந்தே கல்வி பயில்தலும் ஏகதேசமாக பூர்வகாலங்களில் நிகழ்ந்து வந்ததுண்டு. ஆனால் அவர்கள் இக்காலம் போல் பரபுருடரிடத்திருந்து கல்வி பயின்றார்களில்லை.

இம்மட்டோ, இந்து சாஸ்திர வழக்க ஒழுக்கங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட வழக்க வொழுக்கமும் மாறுபட்ட தர்மவுணர்ச்சியுமுடைய அன்னிய ஜாதி சமயத்து ஆடவரிடத்தும், நம்மத வைரிகளிடத்தும் சென்று அவர்கள் கல்வி பயின்றதேயில்லை. பயின்றிருக்கில் அம்மாது சிரோமணிகள் புராணேதிகாஸங்களாற் புகழப்படும் அத்தகைய கற்பின் மிக்க குல விளக்குகளாய்ப் பிரகாசித்திருக்க மாட்டார்கள். நாயகனைத் தெய்வமென நாடுங்குணமும் இல்லறத் தொழில்களைத் தவமென நாடுங்குணமும் அவர்களுக்கிருந்திரா. இராவாகவே; "தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை" என்ற பரமமாயுள்ள தருமமும் திருக்குறள்வழி வெளிப்பட்டிருக்கமாட்டாது. அங்ஙனம் அந்நிய ஜாதி சமயத்தாரிடத்தும் அவர்கள் பயிற்றும் முறையற்ற மாதிரியிலும் பூர்வ காலத்து நமது ஸ்திரீகள் கல்வி பயின்றிருக்கில் இக்காலங் கல்வியிற்றேர்ந்த சில தேச ஸ்திரீகளைப் போலக் கணவனோடு எதிர்மாறுபேசவும் அவனைக் கீழடக்கி யாளவுந் துணிந்திருக்கத் தடையேதுமிராதென துணிவாய்ச் சொல்லலாம்.

இவ்வியல்புகளை யுணராமல் பூர்வகாலங்களிற் பெண் கல்வி பரவி யிருந்தது இந்நாட்டில், என்று தலைகால் தெரியாமற் பேசி சத்தமுறையற்ற கல்விகளையெல்லாம் நம் பெண்களுக்கேற்ற முயலும் அவசரக்காரரும் அன்பில்லாதவருமான சிலருடைய மயக்க வார்த்தைகளை நம்பி (நம் இந்து தர்மரீதமாய்) இகபரங்களுக்காகா வண்ணம் நம் பெண்களை யநியாயமாய்க் கெடுப்பது அந்தோ! வைதிகராகிய நமக்கு நீதியாகுமா? இத்தீச்செயல்களால் வரும் பழிபாவங்களை நம்மவர்கள் நன்குணர்வது ஆவசியகம். இவ்வதி முக்கிய விஷயத்தைத் தயவு செய்து வைதிக இந்துக்கள் நன்கு சிந்திக்க வேண்டுகின்றோம். பூர்வகாலம் போல் அகத்தின் கணிருந்து தந்தை சகோதரர் கணவனாதியரால் கல்வி கேள்விகளை யடைய நம் பெண்களுக்கு இயலுமாறில்லை என்னும் நியாயம் ஒன்று நம்மிடைப் பிடிக்கின்றது.

ஏனெனில் இக்காலம் படாத பாடுகள் பட்டுப் பொருள் தேடுந்தொல்லை நம்மாடவர் பலருக்குப் பெரிதாய் முடிந்திருக்கின்றதே; அதனாலவர்களுக்கு தர்மார்த்த காமமோக்ஷங்களாகிய புருஷார்த்தங்களைப் படிக்க வல்ல சாஸ்திரா ராய்ச்சி செய்யவும் அதற்குரிய சதாசாரங்களை யநுசரித்தொழுகவும் இலகுவா யியலுகிறதில்லை. இயலுமிடங்களிலோ, ஊண் உடை நடை பாவனையாதிகள் அநேகமாய் சாஸ்திரக் கருத்துக்கு மாறாக நிகழ்ந்தது. அக்குடிகளின் ஆடவர்களுக்கு ஒழிவான காலமெல்லாம் சீட்டாட்ட முதலிய துர்விர்த்தியில் விநியோகமாய் வருகின்றனவே யன்றியும், பல இல்லங்களில் முளையிலேயே ஆண் மக்கள்களுக்கு ஏ. பி. சி. யாகிய அன்னிய பாஷாத்தியாயனமாய்விட்டதன்றோ? அவர்கள் அப்பாஷாஞானத்தில் பழகிப் பழகி வளர்ந்து முதிர அவர்களுக்குப் பெரும்பாலும் ஊண், உடை, நடை, பாவனையாதிகள் அப்பாஷையின் வழி மாறுதலடைகின்றன. அப்படிப்பட்டவர்களிடத்தில் நம் சாஸ்திரா ராய்ச்சி தலை காட்டுகிறதில்லை சந்தி ஜபதப வாராதனங்களும் விரத ஹோம சிரார்த்தாதி சதாசாரங்களும் சத்கர்மங்களும் அவர்களிருக்குமிடங்களிலிருக்கப் பயப்படும். இப்படிப்பட்ட அவைதிகோலமாயுள்ள குடிகளிற் பிறக்கும் பெண்மக்களுக்குப் பூர்வகாலத்துக் கற்பின் மிக்க குலமாதர்கள் அடைந்து வந்த அறநூல் வழித்தாய பரிசுத்த கல்வி கேள்விகளும் அவற்றின் பயனாய் வரவேண்டிய நல்லறிவு நல்லொழுக்கமாதிகளும் வருவதெங்ஙனம்?

இனி அவை வருவதற்கான நன்மார்க்கந் தேடவேண்டுவது இச்சமயம் நமது முக்ய கடமையாமன்றே? தற்கால பாடசாலைகளில் ஏறும் வெறுங் கல்வியின் மாதிரி வைதிக இந்துப் பெண்களுக்கு எவ்வளவுமடாது. அதிலும் பாதிரிகள் முதலிய அன்னிய மதஸ்தர் பாடசாலைப் படிப்பானது நம்மக்கள் அறிவைக் கெடுக்கும்! கெடுக்கும்!! ஓ வைதிக இந்து மகாஜனங்களே? இம் முன்னெச்சரிப்புக்குச் செவிசாயுங்கள். அருமையிற் பெற்று வளர்த்த மக்களை மிலேச்சராக்கிக் கெடுத்து நீங்காப் பழி பாவங்களுக்கு ஆளாகாதீர்கள். செய்கையில் மறைந்து நிற்கும் அவர் எண்ணங்களைக் கண்டறியுங்கள்.

தீனகரன்.



## மலையாளத்துத் தொழிலாளிகள்

மூஸாரிகள் (பித்தளை தாம்பிரம் இந்த உலோகங்களில் வேலை செய்வோர்கள்) கொல்லர்கள், ஆஸாரிகள் என்ற தொழில் வகுப்பார் மலையாளத்தில் இருந்து வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுள் ஒருவருக்கொருவர் சமபந்தி போஜனமும் கலியாண சம்பந்தமும் கிடையாது. ஆனால் அவர்கள் செய்யும் தொழிலினால் மற்ற ஹிந்துக்கள் அவர்களை ஒரே சமூகத்தாரென்று எண்ணியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பொதுவாக கம்மாளர்கள் என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். தேசத்தின் பொருளாதார அபிவிருத்தி முறையில் இத்தொழில் வகுப்பார் நிரம்ப முக்கியஸ்தர்களாக இருந்தும், ஜாதி வித்தியாசம் பாராட்டப்படும் சந்தர்ப்பத்தில் இச்சமூகத்தார் ஜாதி என்ற ஏணியின் கீழ்ப்படியில் சேர்ந்தவர்களென்றே பாவிக்கப்பட்டு வருகிறார்கள்.

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வருவதற்கு முந்தி இந்த வகுப்பார் கல்வி கற்கும் சுதந்தரத்தையும், மற்ற சமூகச்சுதந்தரங்களையும் பெறுவதற்கு அருகர்களல்லர் என்று மதிக்கப்பட்டு வந்தார்கள். அவர்கள் இப்பொழுதுங்கூட வேலைசெய்தே ஜீவிக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டு வருகிறார்கள். அவர்கள் செய்யும் வேலைகள் மற்றெவர்களாலும் செய்யமுடியாத நம் முன்னோர்கள் இந்த வகுப்பார்களுக்குப் படிப்பைக் கொடுக்காமலே வைத்திருந்ததினால் அவர்கள் கல்வி வாசனையில்லாமல் மூடர்களாக இருக்கவேண்டி யிருந்தது. அவர்கள் படிப்பிலும் அபிவிருத்தி யடையவில்லை தொழிலிலும் அபிவிருத்தியடையவில்லை. இப்பொழுது நவீனசாஸ்திர முறை அனுஷ்டித்து வருபவர்களின் யுக்தி புத்தியினால் மேல்நாடுகளில் பலவித உலோகச் சாமான்கள் செய்யப்பட்டு தேசமெங்கும் பரவியிருக்கிறதினால், இக்கம்மாளர்களின் தொழிலுக்கே ஹானி வந்துவிட்டது. என்றாலும், அவர்கள் மற்ற வகுப்பார்களைப்போல கிறிஸ்துவப் பாதிரிகளின் நயவசனங்களுக்கு உட்படாமல் இருந்து வந்தார்கள்.

போன வருஷத்திய ஸென்ஸெஸ் கணக்கின்படி மலையாளம் ஜில்லாவில் கம்மாள வகுப்பார்களில் 52673 மனிதர்களும் 95283 ஸ்திரீகளும் இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. புருஷர்களில் 58 பேர்கள் தான் இங்கிலீஷ் கற்றிருக்கிறார்கள். இங்கிலீஷ் கற்ற புருஷர்களில் ஒருவரே B. A. பட்டதாரி. மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேறினவர்கள் மூவரே.

மற்ற வகுப்பாரெல்லாரும் முன்னேற்ற மடைந்திருக்கையில் தாங்கள் மட்டும் முன்னேற்ற மடையாமல் இவ்விதம் பின்னடைந்திருப்பது சரியல்லவென்பதை அவர்கள் இப்பொழுது தான் உணர்ந்தார்கள். மாப்ளா வகுப்புப்பிள்ளைகளின் படிப்பு அபிவிருத்தி விஷயத்தில் கவர்ன்மெண்டார் அக்கரை யெடுத்துக்கொண்டிருக்கிறது போல, கம்மாள வகுப்பாரும் கல்வியில் முன்னேற்றமடைவதற்கு வேண்டிய சௌகரியங்களைத் தங்களுக்கு உண்டுபண்ணிக் கொடுக்கவேண்டுமென்று இக்கம்மாள வகுப்பார், சமீபத்தில் கவர்னர் தலைச்சேரிக்கு விஜயஞ் செய்தபொழுது அவருக்கு ஒரு மெமோரியல் எழுதிக்கொண்டார்கள். கள்ளிக்கோட்டையிலாவது அல்லது தலைச்சேரியிலாவது தொழிற் கல்விச்சாலை யொன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

சுதேசமித்திரன்.

## யஜுர்வேதிகளின் உபாகர்மானுஷ்டானகால சித்தாந்தம்

1. ஆஸ்திக சிகாமணிகள் ! இவ்வருஷத்தில் யஜுர்வேதிகளின் உபாகர்மத்தை ஆடிமாதம் 11-ம்தேதி திங்கட்கிழமை (24-7-15) நடத்துவது யுக்தமா அல்லது ஆவணிமாதம் 8-ம்தேதி செவ்வாய்க்கிழமை (24-8-15) நடத்துவது யுக்தமா, என்ற விஷயத்தை வித்வான்கள் தங்கள் தங்கள் புத்திக்குப் புலப்பட்ட வரையில் சாஸ்திரங்களைக் கொண்டு வ்யவஹாரம் செய்து கொண்டு வருவதில் ஒரே விதமான தீர்மானத்திற்கு வராமலிருந்ததால் சில இடங்களில் ஆஸ்திகர்களான சில பிரபுக்கள் சபை கூட்டி விசாரித்து வருகிறார்கள்.

2. கும்பகோணத்தில் விளங்காநின்ற ஜகத் குரு : ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் சன்னிதானத்தில் இந்த உபாகர்ம விஷயமாய் தர்ம சாஸ்திரங்களை நன்றாய் ஆராய்ந்து வ்யவஹரிக்கும்படி உத்தரவாயிற்று. அப்பொழுது அத்வைத ஸபைக்கு வந்து அலங்கரித்த வித்வான்கள் மிகவும் நியாயத்துடன் வ்யவஹரித்தார்கள். அந்த விஷயங்களைப் பூராவும் எழுதினால் விரியும். ஆகையால் அத்தீர்மானத்தை மட்டில் குறிப்பிடுகிறேன். ஆவணிமாதத்தில் யஜுர் வேதத்தின் அதிபதியாகிய "சுக்ரனுக்கு" அஸ்தங்கத தோஷமிருப்பதால் அப்பொழுது "உபாகர்மம்" செய்யக்கூடாதென்றும் அவ்விதமாய்ச் செய்தால் தேசத்திற்கும் குடிகளுக்கும் க்ஷேமக் குறைவு நேரிடுமென்றும், ஆடிமாதம் 11-ம் தேதி திங்கட் கிழமையே (26-7-15) செய்யவேணுமென்றும், அவ்விதமாய் நடத்தினால் தான் எல்லா ரிஷிகளின் அபிப்பிராயமும் சரியாயிருக்கும் என்றும் அவ்விடம் வந்திருந்த வித்வான்கள் தெரிவிக்க, ஜகத்குருவினுடைய தீர்மானமும் ஆடிமாதமே இந்த வருஷத்தில் நடத்த வேணுமென்று ஏற்பட்டிருக்கிறது. மேற்படி சபையில் அத்வைத சபா பண்டிதர்களாய் விளங்குகிற சிதம்பரம் மஹா மஹோ பாத்யாய பட்டம் பெற்ற (1) பிரம்ம ஸ்ரீ யஞ்ஞஸ்வாமி சாஸ்திரிகள் (3) கருங்குளம் பிரம்ம ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் முதலானவர்களும் வந்திருந்தார்கள். இவர்களுடைய வித்வத் சிரேஷ்டத்தை இச்சென்னை ராஜதானியில் அறியாதவர்களில்லை. இவர்கள் அனைவரும் இந்த வருஷம் ஆடிமாதம் தான் உபாகர்மம் செய்யவேண்டுமென்று மீமாம்ஸா சாஸ்திரங்களின் விஷயங்களை எடுத்து தெளிவாய் தெரிவித்தார்கள்.

(3) இதே விஷயமாய் 1912-ம் வருஷத்தில் சந்தேகம் நேரிட்டு சிருங்ககிரி ஜகத்குரு ஸன்னிதான பண்டிதர்களாகிய பிரம்மஸ்ரீ மஹா மஹோபாத்யாயப்பட்டம் பெற்ற சுப்பராய சாஸ்திரிகள் முதலானவர்களும் தோஷமில்லாத காலத்திலேயே அனுஷ்டிக்க வேணுமென்று தீர்மானித்தார்கள். மதுரை தர்ம சாஸ்திர சபையில் அப்படியே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஆஸ்திக சிகாமணிகள் தயவு செய்து ஆடி மாதம் 11-ந்தேதி திங்கட்கிழமையிலேயே (26-7-15) உபாகர்மாவை நடத்தி க்ஷேமத்தை அடைய வேண்டும் என்று மிகவும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**கடத்தூர்-அனந்தராம சாஸ்திரி.**

(சுதேசமித்திரன்)

## அம்மை குத்துதலும் சுகாதாரமும்

வைத்திய கலாநிதி

சில நாட்களுக்குமுன் நியூ இந்தியா பத்திரிகையில் அம்மைகுத்தும் விஷயமாக ஜே. டி. பிக்ஸ், ஜே. பி. என்பவர் எழுதியிருந்த விஷயத்தை நான் வெகு கருத்துடன் படித்ததில் அடியில் குறிப்பிடும் சில விஷயங்களைப் பொது ஜனங்கள் அறிந்திருக்க வேண்டுமென்று வெளியிடுவதற்கு அபிப்பிராயப்படுகிறேன். நான் அடியில் குறிப்பிடும் விஷயமானது, காலஞ்சென்ற மஹா பிரஸித்த புருஷனான மிஸ்டர் W. T. ஸ்டெட் என்பவரால் "நவீன சாஸ்திர முறைக்கு அதிகாரியான நமது மஹா புருஷன்" என்று கூறப்பட்ட டாக்டர் ஆல்பெர்ட் ரஸ்ஸல் வாலெஸ், O. M. L. L. D., D. C. L., F. R. S., ஆல் இயற்றப்பட்ட "A Summary of the Proofs that Vaccination does not prevent Small pox but really increases it" என்னும் விஷய மடங்கிய துண்டு பத்திரிகையிலிருந்து கிரஹிக்கப்பட்டதாம்.

முப்பது வருஷகாலமாய் லீஸிஸ்டெர் என்னும் பட்டணத்தில் அம்மை குத்தும் வழக்கம் குறைந்து வந்ததற்குக் காரணங்களில்லாமற் போகவில்லை.

(1) லீஸிஸ்டெர் என்னும் நகரம் மிகப்பெரிய கைத்தொழில் நடக்குமிடமாம். அதில் சுமார் 200,000 பிரஜைகள் உண்டு. அவர்களில் பெரும்பான்மையோர்

அம்மை குத்துவது எவ்விதத்திலும் உபயோகமற்றது என்று முடிவாக நிச்சயித்து வந்ததுடன், அவ்விடத்திலுள்ள வைத்தியர்களும் இராஜாங்க அதிகாரிகளும் இதற்கு உட்படாமல் விலகிக்கொண்டு வந்தனர். அம்மை குத்திக்கொள்வதால் முன்னதாகவே சம்பவிக்கும் சில தீங்குகளைத் தவிர்த்து வேறு எவ்வித குணத்தையும் அவ்விடத்திலுள்ளவர் கண்டதில்லையாம். 1872-ம் வருஷத்திற்குக் கீழே லீஸிஸ்டெரானது வெகு நன்றாக முழுமையும் அம்மை குத்தப்பட்டுவந்த நகரங்களுள் மிகப்பிரதானமாயிருந்துவந்தது. மஸூரிகை யென்னும் பெருவாரி வியாதி விசேஷமாயுண்டாவதைக் கருதி அப்பொழுது அவ்விடத்தில் ஜனன விகிதத்திலும் மிக்க அதிகமான பெயருக்கு அம்மை குத்தப்பட்டதுண்டு. 1871-ம் வருஷத்திலேயே எவ்வளவு அதிகமாக அம்மை குத்தும் கணக்கு அபிவிருத்தியாகலாமோ அவ்வளவும் பூர்த்தியாய் அனைத்துக்கும் ரிகார்டுகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தது ; அவ்வருஷத்தில் இப்பெருவாரி வியாதி மிதமிஞ்சி அதன் கொடுஞ்செயலை வெகு மும்முரமாகக் காட்டியது ; அவ்வருஷத்தில் பத்து லக்ஷம் பெயரில் 3,500 ஜனங்களுக்கு மேலாகவே இவ்வியாதியினால் இறந்திருக்கின்றனர் ; அதேவருஷத்தில் லண்டனிலும் அதைச் சுற்றிலும் மொத்தம் இறந்து போனவர்களின் தொகையில் இவ்வியாதியினால் மட்டும் மரித்துப்போனவர் பத்து லக்ஷத்துக்கு ஆயிரம் வீதம் கணக்கிடப்பட்டது. அம்மை குத்துவதால் எவ்வளவு உபயோக முண்டென்பதைப் பற்றி ஏதாவது பரிசோதனை செய்ய உத்தேசித்தால், இப்படி 18-வது நூற்றாண்டில் சுமார் நாற்பது வருஷகாலம் சுகாதாரவிஷயத்தில் மிகவும் பின் தங்கியிருந்த லண்டன் நகரம் முதலானதைவிட முற்றிலும் அம்மை குத்தப்பட்ட ஜனங்களடங்கிய லீஸிஸ்டெர் நகரத்து ஜனங்களே அதிக அளவாக மஸூரிகை யென்னும் பெரியம்மையினால் மாண்டு போயினர் என்பதைக் கொண்டே உண்மை இவ்விதமானதென்று நிர்த்தாரணம் செய்யலாம்.

ஆனால் இன்னும் முக்கியமான சில ஆதாரங்களையும் இங்கு எடுத்தறிவிக்க முடியும்.

(2) லீஸிஸ்டரில் பயங்கரமான மரணவிகிதமானது, அவ்விடத்து ஜனங்களுக்கு அம்மை குத்தும் வழக்கத்திலிருந்த நம்பிக்கையை அடியோடு தொலைத்துவிட்டது. ஏழைகளென்ன, செல்வவான்களென்ன, இராஜாங்க வேலைக்காரர்களென்ன இவர்களும், முனிஸிபாலிடி அதிகாரிகளுங்கூட அவரவர்களுடைய குழந்தைகளுக்கு அம்மைகுத்தக் கூடாதென்று மறுத்து இவ்விதமறுப்பானது 1890-ம் ஆண்டு வரையில் தொடர்ந்து வந்தது ; இதற்கு முன்னால் முற்றிலும் அம்மை குத்தப்பட்டு வந்த விடத்தில் பிறகு நூற்றுக்கு 95-ஜனங்கள் அம்மை குத்தப்படாதவராகவும், பிறந்தவர்களில் 100-க்கு 5-பெயரே இதற்கு உட்பட்டவராகவும் இருந்தனர் ! அம்மை குத்துவது அவக்குறியென்று அறிவிக்குமாறு அதைக் குத்திக்கொள்பவரின் தொகை மிகக் குறைந்துகொண்டே வருகையில், அதற்கு எதிராக தீர்க்காலோசனை செய்த அவ்விடத்து டாக்டர்களும் இவ்விஷயமாய் அடிக்கடி விசாரணைசெய்து சில பேருக்கு மட்டும் இதைப் பிரயோகிக்க முயன்றும் விசேஷமாகப் பலிக்காமற் போனதில், 'முதலில் ஒரு பிரதேசத்தில் வைசூரி குத்தும் வழக்கம் வெகு மும்முரமாக அக்னியைப்போல் ஒரு மூலையிலிருந்து மற்றெல்லா விடத்திற்கும் பாவிவருவதற்கு அனுகூலமான தருணம் ஏற்பட்ட போதிலும், அவ்வழக்கம் முற்றிலும் பாவிய பின்னர் அதனாலுண்டாகும் பிரயோஜனம் அவ்விடத்தில் சற்றேறக் குறைய பத்து பேருக்கு ஒரு வரிடமே பலனளிக்கக் கூடியதாயிருக்கின்றது' என்று ஒரு வாறு நிச்சயித்துக் கொண்டார்கள். என்றாலும், இம்முறை மறுபடியும் அடிக்கடி பிரயோகிக்கப்பட்டு வந்தும், அது எவ்விதத்திலும் பாவுவது சாத்திய மில்லாமற் போய்விட்டது. அந்நாள் முதல் இது வரையில் அவ்விடங்களில் முற்றிலும் அம்மை குத்துவது மறுக்கப்பட்டுப் போயும் ஜனஸங்கியை முன்னிலும் குறையாமலிருப்பதுடன், அவர்களில் பெரியம்மையினால் மாண்டு போகிறவர்களும் வெகு சொற்பமாகவே இருப்பதாய் அறியப்படுகிறது. டாக்டர்கள் 'அவ்விடத்திய ஜனங்கள் இக்ஷாரணைக்கு உட்படாதவர்கள்' என்று கூறும்படி இப்பொழுது அவ்விடத்தியவர் இக்கட்டுக்கு வீணில் அகப்படாதபடி தாராளமாய் வாழ்ந்து வருகின்றனர் ! அம்மை குத்துவதானது பெரியம்மையை வராதபடி தடுப்பதற்குப் பதிலாக அது உற்பத்தியாவதற்கு வேண்டிய ஸௌகரியங்களை மனித தேகத்தில் உண்டாக்கி விடுகின்றது என்பதற்கு இதுவே போதுமான அத்தாட்சியாகும். ஆகவே அம்மை குத்தும் வழக்கத்தைத் தொலைப்பதற்கு லீஸிஸ்டெரிலிருந்தவர்கள் செய்தது ஒன்று தான் நமக்கும் தகுந்த உபாயமென்று நிச்சயித்துக்கொண்டு அதைத் தொலைக்க வேண்டியதற்கு அவ்வாறு முயற்சி செய்வதுடன், பெரியம்மை வருவதற்கு ஆதாரமான வேறு வழிகளையும் அழிக்க சுகாதார முறையைப் பொதுஜனங்கள் நன்கு கவனிக்க வேண்டும்.

## தொழிற்றுறைகள்

லண்டனில் வசிக்கும் ஒரு சாஸ்திரியார் பருத்தித் துணியில் தீப்பற்றாதவாறு செய்யும் ஒரு முறையைக் கண்டுபிடித் திருக்கின்றனர்.

* * *

பீஹாரைச் சேர்ந்த சம்பான் ஜில்லாவில் 1906-ம் வருஷத்தில் பொத்தான் தொழிற்சாலை யொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது அத்தொழிற் சாலையில் ஒரு மாதத்திற்கு 60,000 பொத்தான்கள் செய்யப் படுகின்றன.

* * *

கீழ் வங்காளத்தில் நாராயணகஞ்சுக் கருகிலுள்ள பல கிராமங்களில் பொத்தான் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. தவிர, அங்கே கடியாரச் சங்கிலிகள் கடுக்கன்கள் முதலியவைகளுஞ் செய்யப் படுகின்றன.

* * *

இந்தியாவிற்கும் ஜப்பானுக்குமுள்ள வியாபார சம்பந்தத்தைப்பற்றி, அதிலும் முக்கியமாய் இந்த யுத்த காலத்தில் அந்த வியாபாரம் அதிகரித்திருப்பதைப் பற்றி, பம்பாய் கிரானிகின் பத்திரிகை அடியில் வருமாறு எழுதுகிறது:—தீக்குச்சிகள் கண்ணாடிச் சாமான்கள் மேஜோடுகள் பட்டுவஸ்திரங்கள் வேறுபல சாமான்கள் ஆகிய இவைகளை ஜப்பான் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. 1533336 ரூபாய் (15 லட்சத்து 33-ஆயிரத்து 336 ரூபாய்) மதிப்புள்ள தீக்குச்சிகள் ஏப்ரல் மாதத்தில் இந்தியாவில் இறக்குமதியாயிருக்கின்றன. அதில் ஜப்பானிலிருந்து இறக்குமதியான தீக்குச்சியின் மதிப்பு 994472 ரூபாய் (9 லட்சத்து 94 ஆயிரத்து 472 ரூபாய்) அதாவது மொத்த சப்ளையில் முக்கால்பாகம் ஜப்பான் தீக்குச்சிகள் தான்.

* * *

வங்கரோ் என்பது கத்தியவார் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு ஊர். அதில் மிஸ்டர் தாதாபாய் அல்லிபாய் தங்காவாலா என்பவர் ஒரு களிமண் தொழிற் சாலையை ஸ்தாபித்திருக்கிறார். மகாராணா ராஜா சாஹேப் அங்கே விஜயஞ் செய்து, அத்தொழிற் சாலையை திறந்து வைத்தார். இந்த சமஸ்தானத்தின் பல பாகங்களில் ஏராளமாய் களிமண் கிடைக்கக் கூடியதாயிருப்பினும் கத்தியவாரில் களிமண் தொழிற்சாலையாதொன்றுமே இல்லையென்று மிஸ்டர் தாதாபாய் சொன்னார். வங்கரோில் இனி எவ்வித தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப் பட்டாலும் அவைகளை ஆதரித்து வருவதாக மகாராஜா சொன்னார்.

* * *

பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் மிஸ்டர் கிங் என்ற மெம்பர் இந்தியாவில் கண்ணாடித்தொழில் செய்வதைப் பற்றி பிரஸ்தாபம் செய்தார். ஜெர்மெனியும் ஆஸ்டிரியாவும் யுத்தத்துக்கு முன்னால் இந்தியாவுக்கு அனுப்பின கண்ணாடிச் சாமான்கள் 6,73,118 பவுன் வரையில் மதிப்புப்பெற்றனவாயிருந்தன. அவைகள் இப்போது நின்றுபோனபடியால், அவைகளுக்குப் பதிலாய் இந்தியர் கண்ணாடிகள் செய்யும்படி இந்தியா கவர்ன்மெண்டால் யோசனை செய்யப்பட்டு வருகின்றதா? இந்த விஷயத்தைப்பற்றி கவர்ன்மெண்ட் அதிக கவனம் செலுத்தாமலிருப்பதால் இந்தியாவிலும் பிரிட்டிஷ் காலனிகளிலும், கண்ணாடித்தொழில் செய்யும் ஏற்பாடுகளைப்பற்றி யோசனை செய்யப்பட்டு வருகின்றதா? 1914-15-ம் வருஷத்தில் மட்டும் ஆஸ்டிரியாவிலிருந்தும், ஜெர்மெனியிலிருந்தும், இந்தியாவுக்கு வந்த கண்ணாடி வளையல்களும், மணிகளும் 4[illegible]3,555 பவுன் மதிப்புள்ளனவாயிருந்தபடியாலும், இவைகள் இப்போது நின்றுபோன படியாலும் இங்கிலாந்திலிருந்தும், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலிருந்தும், நேசதேசங்களிலிருந்தும் இவைகளுக்குப் பதிலாய் கண்ணாடி சாமான்கள் செய்தனுப்ப முயற்சி செய்யப்பட்டு வருகின்றதா வென்றும் கேட்டார். அதற்கு என்ன பதில் சொல்லப்பட்டதென்றால், இந்தியாவிலிருந்து வளையல்கள் மணிகள் இவைகளுடைய மாதிரிகள் பிரிட்டிஷ் தொழிலாளிகளுக்கு அனுப்பப்பட்டன. ஆனால் வேறு அலுவல்களினாலும், கண்ணாடி செய்வதற்கு வேண்டிய யந்திரங்களின் கிராக்கியினாலும் கண்ணாடித்தொழில் செய்யப்படாமலிருக்கின்றன. இந்தத் தொழில் செய்வதற்கு சாஸ்திரஞானமும் விசேஷ அநுபோக ஞானமும் வேண்டுமென்பது அவ்வளவு உண்மையல்ல. மேலே சொல்லப்பட்ட காரணங்கள் உண்மையான காரணங்களே தவிர வேறில்லை. ஆயினும் இந்தியா கவர்ன்மெண்டும் மாகாண கவர்ன்மெண்ட்களும் இந்தியாவில் கண்ணாடித்தொழில் செய்வதைப்பற்றியோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்திலுங்கூட இந்த சாமான்களை இந்தியாவுக்கு எப்படியனுப்பலாமென்று இரண்டு கமிட்டிகள் யோசனை செய்துகொண்டிருக்கின்றன.

## சண்டையைச் சார்ந்தவை

ஜெர்மானியர் பிற நாடுகளில் வட்டிக்குப் போட்டிருக்கும் பணத்தில் ஒரு கோடியே 50-லட்சம் பவுன், அதாவது 22-கோடியே 5-லட்சம் ரூபாய், ருஷியரின் ஆதீனத்திலிருப்பதாக ஜெர்மன் பத்திரிகை மதிப்பிட்டிருக்கிறது.

* * *

இங்கிலாந்திலே போலீஸ் இலாகாவில் மட்டும் 11-ஆயிரம் ஸ்திரீகள் வேலைபார்க்க முன்வந்திருக்கின்றனர். போலீஸ் இலாகாவில் வேலை பார்த்த பல ஆண்மக்கள் சேனையில் சேர்ந்து போர்முனைக்குப் போய்விட்டதுபற்றி, ஸ்திரீகள் போலீஸ் இலாகாவில் சேரும்படியாயிற்று. இதைத்தவிர, மற்ற ரயில்வே தொழிற்சாலை முதலிய பல இடங்களிலும் ஆண்மக்களுக்குப் பதிலாகப் பெண்மக்கள் வேலைபார்த்து வருகின்றனர்.

* * *

கிரேட் பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நேசராஜ்யங்களிலேயே யுத்த தளவாடங்கள் செய்யப்பட்டு வரினும், அவை போதாமல் அமெரிக்காவி லிருந்தும் யுத்த தளவாடங்கள் தருவிக்கப்படுகின்றன. இதுவரையில் 10-கோடி பவுன் அதாவது 150-கோடி ரூபாய் பெறுமானமுள்ள யுத்த தளவாடங்களைச் செய்து கொடுக்கும்படி அமெரிக்கா சம்பெனிகளுக்கு நேசவல்லரசுகள் ஆர்டர் கொடுத்திருக்கின்றன.

* * *

சென்ற மார்ச்சு மாதம் முதல் ஜூன் மாதம் 12-ந் தேதி வரையில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் யுத்த விஷயமாய் 19-கோடியே 40-லட்சம் பவுன் செலவு செய்திருக்கின்றனர். அதன் விவரம்: ராணுவச் செலவு இராயிரத்து 210-லட்சம் பவுன்; கடற்படைக்கு 360-லட்சம் பவுன்; உணவுப்பொருள் வகையராவுக்கு 100-லட்சம் பவுன்; குடியேற்றநாடு முதலியவற்றிற்குக் கடன் கொடுக்க 260-லட்சம் பவுன்; சில்லறைச் செலவு 10-லட்சம் பவுன். ஆகவே ஒரு நாளைக்கு 26-லட்சத்து 60-ஆயிரம் பவுன் (அதாவது 39-கோடியே 9-லட்சம் ரூபாய்) செலவாயிருக்கிறது.

* * *

போர்க்களத்தில் மாண்டுபோய்க்கிடந்த ஒரு ஜெர்மன் சோல்ஜரின் பையில் பின் வருமாறு ஒரு உத்தரவு காணப்பட்டது. "கடவுள் நமது பக்கலிருந்து நமமுடன் போர்புரிகிறார். உலகம் முழுவதும் நம்மை எதிர்த்து நிற்பதால், அவர்கள் அனைவரையும் தோற்கடிப்பதற்தாக நமக்கு விஷக்காற்றைக் கடவுள் அளித்திருக்கிறார். அதனால் நாம் நமது சத்துருக்களை எதிர்த்தடித்து வருகிறோம். ஐரோப்பா முழுவதிலும் ஜெர்மனி ஆதிக்கம் பெறவேண்டியதே. இந்த யுத்தத்தில் நமது நோக்கம் கைகூடும் வரையில் நாம் யுத்தத்தை விடாது புரிவோமாக."

* * *

உலகத்திலுள்ள மிகப் பெரிய யுத்த தளவாடச் சாலைகளில் ஜெர்மனியிலிருக்கும் க்ருப் தொழிற்சாலையும் ஒன்று. அத்தொழிற் சாலையின் தலைவருடைய பெயர் ஹெர் க்ருப் என்பதாகும். அவர் தம்மிடம் வேலை பார்க்கும் சில சிறந்த நிபுணர்களை அழைத்துக்கொண்டு, இங்கிலாந்து சென்று, அங்குள்ள கப்பல் கட்டும் துறைகளையும் யுத்த தளவாடச் சாலைகளையும் 1914-ம் வருஷம் ஜூன் மாதம் மூன்றாவது வாரத்தில் மிகவும் நுட்பமாய் பார்த்து விட்டுத் திரும்பினார். அதன் பிறகு ஆறு வாரங்கள் கழிந்தவுடனே ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் பிரமாதமான யுத்தம் ஏற்பட்டு விட்டது.

* * *

பீட்ரோகிராட் நகரிலுள்ள ஒரு ஹைஸ்கூலில் ஒரு சிறுமி வாசித்துவந்தாள். யுத்தம் ஆரம்பித்தவுடனே அவள் தனது ஆகாய விமானத்துடன் போர்முனைக்குச் சென்று உதவி புரிந்து வந்தனள். சில தினங்களுக்கு முன் அவள் தனது விமானத்தி லேறிக்கொண்டு, காலிஷியாவிலே ஆஸ்டிரிய சேனைகள் தங்கியிருக்கும் இடத்தின் மீது பறந்து சென்று தப்பறிய, அப்பொழுது அவள் மீது ஆஸ்டிரியர் மிகவும் கடுமையாய் பீரங்கிப் பிரயோகம் செய்தனர். அதனால் அவளுக்குக் காலிலும் கையிலும் காயமுண்டாய் விட்டது. அப்படியிருந்தும் அவள் தனது விமானத்தைச் செலுத்திக் கொண்டு போய் பத்திரமாய், ருஷிய சேனைகள் இருக்குமிடத்தை யடைந்து விட்டனள் என்று சொல்லப்படுகிறது.

* * *

சில வாரங்களுக்கு முன் பெர்லின் நகருக்குப் போய்த் திரும்பிய ஸ்விட்ஸர்லாந்து தேச ஸ்திரீ யொருத்தி பின் வருமாறு சொல்லுகிறாள்:—

"ஜெர்மன் ஸ்திரீகள் அனைவரும் மிகவும் செட்டாய்க் குடித்தனம் செய்து வருகின்றனர். எந்தப் பதார்த்தம் கிடைக்குமோ அந்த பதார்த்தத்தைக் கொண்டே சமையல் செய்து சாப்பிட்டு திருப்தி அடைந்து வருகிறார்கள். யுத்தம் ஆரம்பித்த நாள் முதல் அவர்கள் தங்களுக்குள்ள அத்தியந்த தேசாபிமானத்தினால் அதிகச் செலவு யாதொன்றும் செய்யாமல் பண்டங்களையும் பணங் காசுகளையும் மீத்தி வைக்கின்றனர். ஜன்ம தேசத்தின் நன்மைக்காக மிகவும் செட்டாயிருப்பதே தங்களுக்குச் சந்தோஷமாகுமென்று குழந்தைகளும் அறிந்திருக்கின்றனர்"

*
* *

மேற்காங்கத்திலும் கிழக்காங்கத்திலும் ஜெர்மானியர் விஷக்காற்றை உபயோகித்து வருகின்றனர். அவ்வாறு மேற் காங்கத்திலும் விஷக்காற்றினால் பாதகமடைந்த பிரிட்டிஷ் துருப்புகளுக்குச் சிகிச்சை செய்த டாக்டரொருவர் பின் வருமாறு சொல்லுகிறார்:—விஷக் காற்றினால் கஷ்டப்படும் துருப்புகளைக் கண்டு சகிக்க முடியவில்லை. அதன் உபத்திரவத்தைப் பொறுக்க முடியாத ஒரு ஸோல்ஜர் தன்னைச் சுட்டுவிடும்படி கெஞ்சிக்கேட்டுக் கொண்டானென்றால் அவ்விஷக் காற்றின் கோரத்தை என்னென்று எடுத்துச்சொல்வது? மற்றொரு ஸோல்ஜர் விஷக்காற்றினால் படும் துன்பத்தைத் தாங்க முடியாமல் தனது தொண்டையை நறுக்கிக் கொண்டு ஆவி நீத்தான்.

*
* *

அமெரிக்காவிலே இறைச்சி வியாபாரஞ் செய்யும் பிரபல கம்பெனிகளில் நான்கு சில வாரங்களுக்கு முன் 50 லட்சம் பவுன் விலையுள்ள இறைச்சியை நடு நிலைமைத்தேசங்களுக்கு அனுப்பினவாம். அந்த இறைச்சியானது நடு நிலைமைத் தேசங்களின் மூலமாய் ஜெர்மனிக்குப் போய்ச் சேரக்கூடியதாகுமென்று பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் அதைப்பிடித்து, பிரிட்டிஷ்துறைமுகங்களுக்குக் கொண்டுபோய் விட்டனவாம். அவ் விஷயத்தைப்பற்றி அவ்வியாபாரக் கம்பெனிகள் பிரிட்டிஷாருக்கு அறிவித்துக்கொண்டும், அதற்கு எவ்வித பரிகாரமும் செய்யப் படவில்லையாம். ஆகவே அக் கம்பெனிகள் தமது கவர்ன்மெண்டுக்கு அவ்விஷயமாய் மனுச் செய்து கொண்டிருக்கின்றனவென்று சொல்லப் படுகிறது.

## விசேஷ வர்த்தமானம்

**தற்கொலை.**—கல்கத்தாவில் வசித்துவந்த 16-வயதுப் பெண்ணொருத்தி தான் 50-வயதுள்ள புருஷனுக்கு மணஞ் செய்யப்பட்டதைச் சகிக்காமல், கஞ்சாவைச் சாப்பிட்டு தற்கொலை செய்துகொண்டதாகச் சொல்லப்படுகிறது.

*
* *

**மைலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ்.**—சென்னை யூனிவர்ஸிடியைச் சேர்ந்த சிரோமணிப் பரீட்சைக்கு சென்னை ராஜதானியிலுள்ள வேறெந்த சம்ஸ்கிருத பாடசாலைகளிலிருந்தும் வித்யார்த்திகள் அனுப்பப்படவில்லை. மைலாப்பூரிலுள்ள சம்ஸ்கிருத பாடசாலையொன்றிலிருந்தே 9-வித்தியார்த்திகள் அனுப்பப்பட்டார்கள். அவர்களில் 4-பேர் தேறினார்கள். தவிர இந்தக் காலேஜிலிருந்து மெட்ரிக்குலேஷன் பரீட்சைக்கு 5-பேர்கள் அனுப்பப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் தேறினார்.

*
* *

**குற்றால ஸ்நானம்.**—திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள குற்றாலத்து அருவியில் ஹிந்து ஸ்திரீகள் காலை 7 மணி வரையிலும் ஸ்நானஞ் செய்யலாம் என்றும், அதன் பிறகு ஐரோப்பியர்கள் 9-மணி வரையிலும் ஸ்நானஞ் செய்யலாம் என்றும் ஏற்பட்டிருக்கும் விதியை மாற்றி, காலை 10-மணி முதல் 11-மணிவரையிலும் ஹிந்து ஸ்திரீகள் ஸ்நானஞ் செய்யும்படியாய் உத்தரவு செய்யவேண்டுமென்று ராமநாதபுரம் ராஜா கலெக்டரைக் கேட்டுக்கொண்டார். அதற்குக் கலெக்டர் அப்படியே ஆகட்டுமென்று சம்மதித்திருக்கிறார்.

*
* *

**மூன்று மனைவிகள்.**—டாக்காவிலுள்ள ஒரு பிராமணனுக்கு மூன்று பெண்கள் குமாரத்திகளாக வாய்த்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வரனைக் கண்டுபிடித்து விவாகத்தை முடிப்பது நிரம்ப கஷ்டமான காரியமென்றெண்ணி அவர் அம் மூவரையும் ஒருவருக்கே விவாகஞ் செய்துகொடுத்தார். விவாகமாய் கொஞ்சம் நாட்களுக்குள் மருமகன் இறந்து போனான். மூன்று சகோதரிகளும் ஒரே காலத்தில் விதவைகளானார்கள். இது குறிப்பிடத்தக்க சம்பவமாகும் என்று "டாக்கா" பத்திரிகை கூறுகிறது.



**சென்னை ஆயுர்வேத காலேஜ்.**—ஆயுர்வேத காலேஜ் அதிகாரிகளால் நடத்தப்படும் ஆயுர்வேத பூஷணப் பரீட்சைக்கும் இன்னும் மற்றப் பரீட்சைக்கும், அக்கா லேஜில் வாசிக்காத மற்றவர்களும் வரலாம் என்று காலேஜ் அதிகாரிகள், உத்தரவு செய்திருக்கிறார்கள் காலேஜில் படிக்காதவர்கள், இப்பரீட்சைகளுக்கு வர வேண்டுமானால் அவர்கள் வேறு ஆயூர்வேத காலேஜிலாவது அல்லது பிரபலமான வைத்தியர்களிடத்திலாவது அக்காலேஜ் அதிகாரிகளால் குறிப்பிடப்பட்ட நூல்களை வாசித்திருக்கவேண்டும். ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேத வைத்திய சாஸ்திரங்களில் தேறும் வித்யாத் திகளுக்கு ஆயுர்வேத பூஷணம் என்ற பட்டம் கொடுக்கப்படும்.

*
* *

**யாத்திரை ஸ்தலங்கள்.**—இந்த ராஜதானியிலுள்ள யாத்திரை ஸ்தலங்களின்சுகாதார நிலைமையை அபிவிருத்தி செய்யும் விஷயத்தை விசாரிப்பதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு மிஸ்டர் E. S. லாயட்டும், ஆனரபில் மிஸ்டர் ராமச்சந்திர ராவ் பந்துலுவும், மெம்பர்களாக கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தென்னிந்தியா ரெயில்வே கம்பெனி ஸதரன்மராட்டா ரெயில்வே கம்பனி இவ்விரண்டு கம்பெனிகளின் சீப் மெடிகல் ஆபீஸர்கள் டாக்டர் மரக்கவுலி ஹேயெஸ்ஸும் டாக்டர் W. R. கிப்சனும், அக்கமிட்டிக்குத் துணையாக இருந்து பல யாத்திரை ஸ்தலங்களுக்குப்போய் அவைகளின் சுகாதார நிலைமையைப்பற்றி விசாரிப்பார்கள்.

*
* *

**கோவில் விவாதம்.**—சேலம் கிச்சிப்பாளையத்திலிருக்கும் விஸ்வகர்ம வகுப்பினருக்கும் மற்ற இதர வகுப்பினருக்கும் அங்குள்ள கோவில் விஷயமாய் நெடுநாளாய் வேற்றுமைப்பட்டு ஸ்ரீ பிரசன்ன விக்கினேஸ்வரர் முதலான 5-ஆலயங்களின் நிர்வாகம் உற்சவம் முதலியன சரிவர நடைபெறாது வழக்குகள் ஏற்பட்டு கோர்ட்டு வரை சென்று உபயவாதிகளும் கஷ்டப் பட்டு, கடைசியாக சில கனவான்களின் முயற்சியால் பண்டைய மாமூல்படி நடத்திவர வேண்டுமென்று ஒழுங்கு செய்யப்பட்டு சில நாட்களுக்குமுன் ராஜியாய்ப் போனது சந்தோஷிக்கத்தக்கது. அங்குள்ள ஆலயங்களுக்கு 4-பேர் தர்மகர்த்தர்களாகவும் 5-பேர் மெம்பர்களாகவும், ஒருவர் பொக்கிஷதாராகவும், மற்றொருவர் ஆடிடராகவும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

*
* *

**விதவா விவாகம்.**—திருச்சினாப்பள்ளி பிராமண சமூகத்தில் விதவா விவாகம் ஒன்று சமீபத்தில் நடந்தது. விதவா விவாகம் செய்துகொண்ட பெண்ணின் தகப்பனாரான மிஸ்டர் K. V. ஜம்புநாத அய்யர், திருச்சியிலிருக்கும் வைதிக பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர், பிரபல வக்கீல். 11-வயதான அவருடைய குமாரத்திக்குப் போன வருஷந்தான் விவாகம் செய்து முடித்தார். அந்தப்பையன் இந்த வருஷத்தில் இறந்து போனான். அவளுக்கு மறு விவாகம் செய்வதாக நிச்சயித்து அப்படியே செய்து முடித்தார். மணமகனும், நல்ல வைதிக குலத்தைச் சேர்ந்தவன்.

*
* *

**ஸ்ரீ ஜடை சுவாமிகள்.**—திருவொற்றியூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிகளாலயத்தின் வடபுறம் நிருவிகற்ப ராஜயோக சமாதியடைந்திருக்கும் ஷை சுவாமிகட்கு வருடா வருடம் நடந்தேறுவதுபோல் இராக்ஷஸ வருஷ ஆனிமீ 13உ பௌர்ணமி ஆதிவாரம் காலை 8-மணிக்கு ஷை சுவாமிகள் சமாதிக்கு மகாபிஷேக வலங்கார சோடசோபசார தீபாராதனையும், 11-மணிக்கு 500-ஏழை பரதேசிகட்கும் அபிமானிகட்கும் மாகேசுரபூஜையும் நடந்தேறின. பிற்பகல் 3-மணிக்குமேல் சோமளபுரம் பிரம்ஹஸ்ரீ M. நடேச ஆச்சாரியாரவர்களால் மகாராஜா துறவு விஷயமும், 6-மணிக்குமேல் சென்னை யோகானந்த முனீஸ்வர ராசிரம சமரசஞான சங்கத் தலைமை ஸ்ரீமத் ஷண்முகானந்த சுவாமிகள் அவர்களால் முத்தி சாதனமென்னும் விஷயமும் உபந்நியசிக்கப்பட்டன. பிறகு, உபாத்தியாயர் மதுரகவி புதுவை-நடராஜ ஆச்சாரியவர்களா லியற்றப்பட்ட துதிமஞ்சரி சிவலிங்க பந்த படம் தெரிசனார்த்தமாக வந்த அன்பர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

*
* *

**புது ரயில் பாதை.**—திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்குப் போட்டுக் கொண்டுவரும் டிஸ்டிரிக்ட் போர்டு இருப்புப்பாதையின் வேலை நிரம்ப சுறுசுறுப்பாக நடந்து வருகிறது. அதற்கு 17 லட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்புத் திட்டம் தயார்செய்யப்பட்டது. 6 லட்சம் ரூபாய் தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்

டிலிருந்து கடன் வாங்கப்படும். சர்க்கார் ஜில்லியுடன் சேர்ந்து ரூபாய்க்கு மூன்று பைசா வீதம் சென்ற 12 வருஷகாலமாக வசூல் செய்யப்பட்ட ரெயில்வே செஸ் பண்டிலிருந்து மீதி 11-லட்சம் ரூபாய் பர்த்தி செய்யப்படும். இந்த லயனில் கட்ட உத்தேசித்திருக்கும் புதிய ஸ்டேஷன்கள் பாளையங் கோட்டை, செய்துங்க நல்லூர், புதுக்குடி, ஆள்வார் திருநகரி, நாஜரேத்து, குரும்பூர், காயல்பட்டணம், திருச்செந்தூர். இப்பெயர்களை நோக்கும்போது விசேஷ வியாபார ஸ்தலங்களின் வழியாகவே இந்த புதியலயன் போடப் படப்போகிறது என்று வெளியாகிறது.

***

**வெள்ளைக் காக்கை.**—சுதேசமித்திரன் நிருபரொருவர் பின் வருமாறு எழுதியிருக்கிறார்: தென் திருவாங்கூரில் தெரிசனங்கோபு என்னும் கிராமத்தில் ஓர் வெள்ளைக் காக்கையை ஒருவன் பிடித்துவளர்ப்பதாய்க் கேள்விப்பட்டுத் திரளான ஜனங்கள் அதைப் போய்ப் பார்த்து வருகிறார்கள். நான் அதைப் பார்த்தபொழுது வளர்ப்பவன் அதன் காலில் நீண்ட கயிறு கட்டி கூரை மேல் விட்டிருந்தான். நகம் முதல் சிரசுவரை அதன் நிறம் வெண்மை. அதன் ஜாதி சுபாவப்படி கரைவதும் கண்ணைச் சாய்த்துபார்ப்பது மல்லாமல் அதன் தாய்க் காக்கை இரைகள் கொண்டுவந்து அதன் வாயில் ஊட்டுவதையும் கண்டேன். கூட்டில் மூன்று குஞ்சுகள் இருந்ததாகவும் ஒருவன் காய் பறிக்க மரத்தில் ஏறிய பொழுது பறக்கும் பருவத்தையடைந்தும் அடையாமலுமிருந்த குஞ்சுகள் மூன்றும் பறந்து அடுத்த மரத்துக்குப் போகும்பொழுது கண்டதாகவும், இந்த அதிசயமான காக்கைக் குஞ்சைச்கண்டதும் சிலர்கூடி அதைப் பிடித்ததாகவும், பிடித்து இரண்டுவாரமாகிற தென்றும் சொந்தக்காரன் சொன்னான்.

***

**மந்திரவாதியின் மோசம்.**—விரிஞ்சிபுரம் வாசியான முனி சுப்பிரமணிய அய்யர் என்ற ஒருவன் மந்திரவாதி யென்று பெயர் வைத்துக்கொண்டு திருவல்லிக்கேணி கல்லதம்பி முதலித் தெருவிலுள்ள ராமநாத சாஸ்திரியின் வீட்டிற்குச் சென்றான். அச்சமயம் சாஸ்திரியார் வீட்டிலில்லை. அவர் மனைவியைத் தனக்குச் சாதம் போடும்படிக் கேட்டான். அவன் சாப்பிட்டுக்கொண் டிருக்கையில் அந்த அம்மாளைப்பார்த்து உமக்கு பிசாசு பிடித்திருக்கிறபடியால் தான், குழந்தை பிறக்காமலிருக்கிறது. அப்பிசாசை அடக்கி ஆளும் தேவதைக்குப் பூஜைசெய்து உமக்கு விபூதி மந்திரித்துக் கொடுத்தால், அந்தப் பிசாசு உம்மை விட்டு ஓடிப்போகுமென்று சொல்லி சாப்பிட்டபிறகு விபூதி மந்திரித்துக்கொடுத்தான். அதன்பிறகு தரையிலிருந்து ஒரு கல்லைப்பிடுங்கி அதற்கு மஞ்சள் பூசி, அந்தக்கல்லில் பிசாசை யடக்கியாளும் தேவதையை ஆவாகனஞ் செய்திருப்பதாகவும் அதற்குச் சகல ஆபரணங்களையும் போடவேண்டுமென்றும், அதற்காக அந்த அம்மாள் அணிந்துகொண்டிருந்த நகைகளையெல்லாம் கழற்றிக் கொடுக்கும்படியாயும் கேட்டான். அந்த அம்மாள் தான்போட்டுக்கொண்டிருந்த நகைகளைக்கழற்றி அவன் கையில் கொடுத்துவிட்டாள். அவன் அந்த நகைகளை அந்த் தேவதைக்குக் கொஞ்சம் நேரம் போட்டிருந்து பிறகு கழற்றி அவைகளை ஒரு துணியில் மூட்டையாய்க் கட்டி அந்த தேவதையின் முன்னால் வைத்து அதை ஒரு கூடையால் மூடி வைத்துவிட்டு, மறுநாள் தான் பூஜை செய்ய வருவதாகவும் அதற்கிடையில் அந்த அறைக்குள் ஒருவரும் போகக்கூடாதென்றும், அப்படிப்போனால் அந்த தேவதைக்குக் கோபம் உண்டாகி அதனால் உயிர்ச்சேதமுண்டாகுமென்றுஞ் சொல்லிவிட்டுப் போய்விட்டான். அந்தக் கபடமந்திரவாதி மறுநாள் பகல் 12-மணிக்கு அந்த வீட்டிற்குத் திரும்பிப்போய், சில மந்திரங்களை உச்சரித்து, பூஜை செய்ய ஆரம்பித்தான், பூஜை காலத்தில் அவன் பலமாய் கூச்சல்போட்டு அந்தப்பிசாசு நிரம்ப உக்கிரத்துடன் இருக்கிறபடியால் சமீபத்தில் ஒருவரும் இருக்கக்கூடாதென்று சொன்னான். அங்கிருந்த ஸ்திரீகள் அனைவரும் பயந்து ஒரு அறைக்குள்போய் ஒளிந்து கொண்டார்கள். என் சமீபத்தில் கிழவன் ஒருவர் மட்டும் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். மந்திரவாதி மறுபடியும் கூச்சல் போட்டு கிழவரைப்பார்த்து, கற்பூரம் சாம்பிராணி முதலியவைகளைக் கொண்டுவரும்படிச் சொல்லி அவரைக் கடைக்கு அனுப்பிவிட்டான். அச்சமயம் கபட மந்திரவாதி, நகைமூட்டையை எடுத்து கக்கத்தில் வைத்துக்கொண்டு, அந்த தேவதையைக் கூடையால் மூடிவிட்டு எங்கேயோ ஓடிப்போனான். ஓடிப்போவதற்கு முந்தி அவன் அவ்வீட்டிலுள்ளவர்களைக் கூப்பிட்டு, அந்த அறையைப் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டுமென்றும் அந்த தேவதையின் சமீபத்தில் யாராவது நெருங்கினால், அபாயம் நேரிடுமென்றுஞ் சொன்னான். மூன்றுநாட்களுக் கப்பால், இவன் மோசம் வெளிப்பட போலீசாரிடம் தெரிவித்தனர்,

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] 1915ளு ஜுலைமீ [சஞ்சிகை 10

## ஒளிவளர் விளக்கு

சென்ற ஜூன் மாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களின் மொத்த எண்ணிக்கை-399.

*
* *

ஜனங்களுடைய ஆகாரத்திற்காக இந்தியாவில் லட்சக் கணக்கான மிருகங்களும், பட்சிகளும் வதை செய்யப்படுகின்றன. இது கிரம்ப பாவகரமான செய்கை என்ற ஞானத்தை ஜனங்களுக்குள் உண்டாக்க உத்தேசித்து, "மிருக பட்சி வதை நிவாரண சங்கம்" என்று ஒருசங்கம் ஏற்படுத்த பம்பாய் மிஸ்டர் லாப்ஷங்கர் லட்சுமிதாஸ் முயற்சிசெய்து வருகிறார்.

*
* *

"இப்போது விசுவப் பிராமணர்களுக்குள் ஒரு திருத்தம் பரவிக்கொண்டிருக்கிறது. தங்களை ஆஸாரி என்று அழைப்பதையும், ஆலாரி என்று தாங்கள் பட்டப்பெயர் வைத்துக்கொண்டிருப்பதையும் ஆச்சாரி என்று மாற்றிக்கொள்ள விரும்பி முயலுகிறார்கள் இதைப்போல மற்ற அபிவிருத்திகளிலும், யதார்த்தம், ஐக்கியம், வியாபாரத்தில் நாணயம்தவறாமை முதலியவற்றிலும் அவர்களுக்குள் திருத்தங்கள் ஏற்படவேண்டுமென்று விரும்புகிறோம். விசுவப்பிராமணர் என்றால் அது தட்டார்களுக்குச் சொல்லப்படும் கௌரவப் பெயராகும்"—என்று திராவிடாபிமானி பத்திரிகை எழுதுகிறது.

*
* *

இந்த வருஷம் இந்தியா கவர்ன்மெண்டார் 9-தொழில் ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளில் 7-ஸ்காலர்ஷிப்புகள் அன்னிய நாடுசென்று தொழில் கற்று வரவும், 2-ஸ்காலர்ஷிப்புகள் இந்தியாவிலேயே தொழில் கற்கவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அன்னிய நாடு சென்று எலெக்ட்ரிகல் இஞ்சினீரிங் கற்றுவர மிஸ்டர் N. N. பானர்ஜிக்கும், நெசவுத் தொழில் கற்றுவர மிஸ்டர் அர்ச்சனதாலனுக்கும், எலெக்ட்ரிகல் இஞ்சினீரிங் கற்றுவர மிஸ்டர் நாகேந்திரநாத் கோஷனுக்கும், உலோக (பாத்திரங்கள் செய்யும்) வேலை கற்றுவர மிஸ்டர் கலீல் அகமதுக்கும் ஸ்காலர் ஷிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலே கொட்டை முந்திரிக்கு எண்ணெய்எடுத்து அதனைச் சுத்திசெய்யும் தொழிலைக் கற்றுக்கொள்ள மிஸ்டர் ரகுநாத சிவராம சாஹேக்கும், மிஸ்டர் நரசிம்மகோபால பானுக்கும் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## சுரங்கத் தொழில்கள்

(160-வது பக்கத்தொடர்ச்சி)

"சத்தியவசனன்" எழுதியது.

ஆஸ்திரேலியாவில் 1841ஆ பொன்சுரங்கத்தைக் கண்டுபிடித்தார்கள். 1851ஆ முதல் 1899-ம் ஆ வரையில் 368 மிலியன் சாவரன் பெறுமான பொன்னும் 29-மிலியன் பவுன் வெள்ளியும் 30-மிலியன் பவுன் செம்பும் 12-மிலியன் பவுன் கல்ல ஈயமும் சுரங்கவாயிலாக அடைந்தார்களாம். ஒரு சிக்கனபோதகர், இவ்வளவு சுரங்கச் செல்வத்தின் காரணத்தால் அநேக கைத்தொழில்கள் காரியமாக அபிவிர்த்தியடைந்திருக்கின்றன என வரைகிறார். இந்தியாவில், மறைத்துவைத்திருக்கிற நமது சுதந்தர சுரங்கச் செல்வம் ஆஸ்திரேலியா சுரங்கச் செல்வத்திற்கு அதிகமாயிரா விட்டாலும் குறைவாக ஒருபோதும் இராது. சரித்திரம் கிடைக்கக்கூடிய பூர்வகாலந்தொடங்கி ஆங்கில அரசாக்ஷிக்கு சில வருஷங்கள் வரையில் இந்தியாவானது உலகத்தில் முதற்தரமான சுரங்கத்தொழில் தேசமாக இருந்தது. இந்தியாவானது தனக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்துக்கொண்டதே யல்லாமல் தூரபாரமான தேசங்களுக்கும் தனது சுரங்கத் திரவியங்களை அனுப்பியது.

அநேக நூற்றாண்டுகளாக 1727-ம் ஆ வரையில் (அப்போது பிரேசில் தேசம் மினஸ்கிரேயஸ் சுரங்கத்தி லிருந்து வெட்டி யெடுத்த சரசமான கறகளைக்கொண்டு வியாபாரப் போட்டி செய்தது) இந்தியாமாத்திரமே உலகமுழுமையும் வைரத்தை அனுப்பியது. பிரிட்டிஷ் கிரீடத்திலுள்ள கோஹினூர் வைரமும், ருஷ்யசார் சக்ரவர்த்தியின் செங்கோலிலுள்ள ஆர்லாப் வைரமும், பிரான்சில் அரண்மனை நகைகளில் உள்ள பிட்ஸ் வைரமும், ஐரோப்பாவில் இன்னும் அநேக சிற்றரசர்கள், பிரபுக்கள், சீமான்கள் வசத்திலிருக்கும் வைரங்களும் நம்முடைய சுரங்கங்களில் எடுத்தவையே.

சினதேசம் இந்தியாவிலிருந்து வெள்ளியைத் தருவித்தது. நமது இரும்பு உயர்ந்ததாக சிலாகிக்கப்பட்டு அன்னியதேயத்து வர்த்தகர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்திய எழுகு நேர்த்தியானதாக மதிக்கப்பட்டு பர்ஷியாவிலும் இந்தயாவிலும் வர்த்தகர்களால் தாமதமின்றி வாங்கிக்கொள்ளப்பட்டது. துப்பாக்கிகளும் பட்டாக்கத்திகளும், பொன் முலாம் பூண்டு வைரம் பதிக்கப்பட்டு, இந்தியாவின் எல்லைக்கு அப்புறத்து தேயங்களுக்கு கொண்டுபோகப்பட்டன. பொன் முலாம் பூசிய நமது இரும்பு எஃகு சாமான்களை அதிகவிலை கொடுத்து வாங்கினார்கள். டெல்லியில் குபேகு சமீபத்தில் அடித்து செய்த இரும்புத் தூணைப்போன்ற வேலைகளையும், பூரியில் இரும்பு கர்டர்களையும், சோமநாதபுரத்து சித்திரவேலை வாயில்களையும் அபாரமாய்ச் செய்யத்தகுந்த கொல்லக்கூடங்கள் இந்த தேயத்திலிருந்தன. தூர்வாரில் 24-அடி நீளமுள்ள கையால் அடித்து செய்யப்பட்ட இரும்பு பீரங்கியானது பின்வந்த தலைமுறைகளுக்கு வியப்பை உண்டாக்கத்தக்க விஷயமாயிருந்தது.

கி-மு. 300-ஆத்துக்கு முன் மகாஸ்தனீஸ் எழுதினார்:—

"இந்தியா பூமிக்குள் எல்லாவித உலோகங்களின் தாதுக்களை உடைத்தாயிருக்கின்றது. ஏனென்றால், அது அதிக பொன்னையும், வெள்ளியையும், செம்பையும், இரும்பையும் உடையதாயிருக்கிறது. வெள்ளீயமும் இன்னும் இதர உலோகங்களும் இருக்கின்றன. இவைகளையெல்லாம் உபயோகமான சாமான்களாகவும், அழகுள்ள சாமான்களாகவும், யுத்த சாமான்களாகவும் ஆயுதங்களாகவும் செய்கிறார்கள்." இம்மாதிரியே பிற்பாடு அநேக நூற்றாண்டுகளாக எழுதியது. நல்லா சரித்திரவாயிலாகவும், இந்த சுரங்கத்தொழிலும் உலோகத்தொழிலும் இந்த தேசத்தில் அந்நாட்களில் பெரிய செழுமையுள்ள தொழிலாயிருந்ததாகத் தெரிந்து கொள்ளலாம். சுரங்கத்தொழிலாளரும் உலோகத் தொழிலாளரும் இந்தியாவின் ஜன சமூகத்தில் இருந்தார்கள். ஒவ்வொரு கைத்தொழில் வேறு பாடும் ஒவ்வோர் ஜாதியாரால் அநுசரிக்கப்பட்டது.

இத்தொழில்களெல்லாம் அபரிமிதமாகவும் விசாலமான பூமியிலேயும் செய்யப்பட்டன. நமது சுரங்கத் தொழிலாளர்கள் வயிரத்தை உத்தேசித்து வேலை செய்தாலும், பொன்னை உத்தேசித்து வேலை செய்தாலும், செம்பு அல்லது இரும்பு இவைகளைக்கருதி வேலை செய்தாலும் வேலை முகாந்தரத்தில் மிகுந்த சாமர்த்தியத்தையும் ஆதாரவான பற்றுக்கோடு மார்க்கங்களையும் தெரிவித்தார்கள். அதிக தைரியத்தையும் கைவல்யமடைந்த நிபுணத்வத்தையும் அவர்கள் காரியங்களில் விளக்கிக்காட்டினார்கள். தாங்கள் வேலை செய்யும் சுரங்கத்தாக்குகளின் பலனளிக்கும் வன்மையையும் அதிசுலபமாய்க் கண்டுபிடித்தார்கள்.

---

கிறிஸ்தவனான பிராம்மணன்.—பெஜவாடாவில், பரம்பரையாக சம்ஸ்கிருத பாண்டித்யம் பெற்ற வைதிகப் பிராம்மண குடும்பத்தைச் சேர்ந்த 18-வயதுள்ள பிராம்மண வாலிபன் ஒருவனுக்கு, கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துவிட்டால் தாராளமாயும் செல்வாக்குடனும் ஜீவனஞ் செய்யலாம் என்று கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தசிலர் போதனை செய்யவே, அச்சிறுவன் அவர்களுடைய போதனைக் குட்பட்டு அம்மதத்தைத் தழுவுவதாக நிச்சயித்திருந்தான். பெஜவாடாவில் ராமமோஹன் இலவச லைப்ரேரி மெம்பர்களுக்கு இந்த சமாச்சாரம் எட்டவே, அவர்கள் அச்சிறுவனை கிறிஸ்தவ மதத்தைத் தழுவாமல் காப்பாற்றினார்கள்.



## விவாக வழக்கங்கள்

ஸ்ரீ-துன்னூர். T. தங்கவேலு ஆச்சாரியார்

சிலர் தம்மக்கள் குடும்ப பாரத்தைத் தாங்கக்கூடிய வரும்படியையும் நல்ல தேகதிடத்தையும் உடைத்தாயிருக்கின்றனரா; விவாஹத்திற்குரிய வயதைப்பெற்றும் அதற்குப்பொருந்திய குணங்களைப் பெற்றுமுள்ளனராவென்றும் சிறிதும் சிந்தியாது சிறுவர்களுக்குச் செல்வக்கல்யாணஞ்செய்யச் சிந்திக்கின்றனர். இந்த சிந்தையின் முடிவு சீரழிவாயிருக்கின்றது. விவாஹம் புத்திரோற்பத்திக்கு உரியது. ஆகையால், முக்கியமாய் மணமக்கள் இருவரின் வயது, சரீர சௌரியம், முதலானவற்றைக் கவனிக்கவேண்டுவதவசியம். இவ்விதமின்றி, சிலர் பொருள் கொடுத்தால் போதுமென எண்ணங்கொண்டு வயது சென்றவனுக்கும், தாரமுள்ளவனுக்கும் பெண்ணைக்கொடுத்து பீடழிகின்றனர் தமது பெண்கள் சுகமாய் வாழவேண்டுமென்ற எண்ணம் இத்தகையோருக்குண்டென்று எந்தக் கண்மூடிதான் கூறுவான்? பெண்களுக்கு இயற்கையான பேதமைக் குணத்தைப் போக்குவதரகான நற்குண நற்செய்கைகளைப் புகட்டி மக்கட்பேறு அடைவதற்குண்டான தேகதிடத்தை விர்த்திசெய்து, தக்கவயதில் தக்கவரனைப்பார்த்து மணமுடிக்காத மாபாவிகள், பொருளை இச்சித்து பெண்கொடுத்தலால் நரகத்தைத்தான் அடைவார்கள். பெண்ணைக்கொடுப்பது, வீடு எழுதிவைப்பதற்கும், வயல் எழுதி வைப்பதற்கும், பொருளைக் கொடுப்பதற்குமா, அன்றி மணமக்களிருவரும் என்றும் எண்ணெயைப் போலும் நேசமாயிருந்து புத்திர பாக்கியங்களைப் பெற்று புண்ணியத்தைத் தேடுவதற்கா? நன்றாய் யோசியுங்கள்.

நம்மினத்தில் அநேக இடங்களில் கல்யாண சடங்குகள் 5-நாள்வரை நடைபெறுகின்றன. இது வழக்கமென்று எளியோர் பிறர் ஏளனத்திற்கு அஞ்சிக் கடன் வாங்கி கலியாணச்சடங்குகளை 5-நாள்வரை நடத்துகின்றனர். சுருதி யுக்தி காலதேச வர்த்தமானத்திற்கிணங்க, விவாஹ நாட்களில் எத்தனை நாட்களைக் குறைக்கலாமோ அத்தனை நாட்களைக்குறைத்துச் செய்தால் கடன்வாங்குதலும் கொடுத்தோர்க்கு அஞ்சிக் கலங்குதலும் இல்லாமல் கண்ணியத்தைப் பெறுவோம்.

சிலவிடங்களில் விவாஹ காலங்களில் சிறப்பையும் புகழையும்சினேகிதரையும் உத்தேசித்து சதுர்க்கச்சேரி வைக்கின்றனர். இது கூடா ஒழுக்கம். சோழநாட்டின் பழய ராஜதானியான காவிரிபூம்பட்டினத்தில் வணிகர் குலத்துதித்த மாசாத்துவான் செட்டி மகன் கோவலனுக்கும் கற்பிற்சிறந்த கண்ணகிக்கும் விவாஹம் நடக்கையில், பரதநாட்டியத்திற்கு வந்த ஆடல் பாடலில் தேர்ச்சிபெற்ற மாதவி என்ற நாடகக் கணிகைமீது கோவலன் காதலுற்று அவளுடன் கூடிக்கலந்து வருகையில், அவள் மாய்கைக்குட்பட்டு அவளால் சேர்த்த தடனை நிவர்த்திக்க, கற்பிற்சிறந்த மங்கை கண்ணகியோடு கால்நடையாய்க் காட்டைக்கடந்து மதுரைக் கருகிலுள்ள ஆயர்குல மங்கை வீட்டில் வசித்துவந்த வரலாற்றைக் கவனித்தால், விவாஹ காலத்தில் சதுர்க்கச்சேரி வைப்பது பிசகெனத் தெரியும்.

கலியாணத்தின் கடைசிநாளில் சுருள் மொய் வைப்பதுண்டு. கலியாணத்திற்கு வந்தவர்கட்கு ஆடையும் அன்னமும் அளித்து ஆசிர்வாதத்தைப் பெறுவதை விட்டு அவர்களிடம் பணம் வாங்கினால் அவர்களின் ஆசிர்வாதத்தால் யாது பயன்? பிரதானச்சுருள் என்றும் பக்கச்சுருள் என்றும் தாய்மாமன் சுருள் என்றும், மொய் என்றும் கும்பிட்டுகட்டு என்றும் சொல்லிப் பணம் வாங்க முயற்சித்தால், பிற தேயங்களிலிருந்து வந்தவர்கள் மொய்க்கும், சுருளுக்கும், பணத்திற்கும் என்னசெய்வார்கள்! கையில் பணமில்லாதவர்கள் ஏன் வந்தோமென்பார்கள்! கலியாணத்திற்கு வந்தவர்கள், கடைசி நாளில், இன்றைக்குச் சுருள் வைக்கவேண்டுமே மொய் போடவேண்டுமே என்செய்வது, இவ்வூரில் யாரைத்தெரியும், இந்த வழக்கத்தை ஏன் ஏற்படுத்தினார்கள், சாதத்தைப்போட்டு பணத்தை யார் வாங்கச்சொன்னது—என்றும், அவன் எடுத்துக்கொடுத்த வேஷ்டியும் சேலையும் 3-ரூ. தான் பெறும், மூன்று ரூபாயா சுருள் வைப்பது. நான் 50 ரூ. ரயில்செலவு செய்துகொண்டு வந்து மூன்று ரூபாய்க்குமேல் வைக்க வேண்டும் ரூபாயுமில்லை, என்னசெய்வது, அவனுக்கு 3-ரூ.செலவு எனக்கு மொய்க்கு என்னசெய்வது என்றும் ஏங்குவாரை நான் கண்டும் கேட்டுமுள்ளேன்.

இதில் ஒருவரைவிட ஒருவர் அதிகம் செய்யவேண்டுமென்ற வீம்பும் உண்டாகின்றது. ஆகையினால், கலியாணத்திற்கு வந்தவர்கட்கு இவ்வித கலக்கமுண்டாகாவண்ணம் சுருதி யுக்திக்குப் பொருந்துமானால் பிரதானச் சுருளைத்தவிர மற்றவைகளை நீக்குதல் தகுதி என்பதை அறிவிற்சிறந்த பெரியோர்கள் ஏற்று அவைகளை நீக்க முன்வந்து புண்ணியத்தையும் புகழையும் பெற வேண்டுகிறேன்.

---

ஸெப்பலின்கள் ஆகாயத்தில் பறந்து சென்று நகரங்களின்மீது வெடிகுண்டுகளை எறியும்பொழுது, அவைகளின் மீது குறிபார்த்துச் சுடுவார்கள். அதைத் தடுக்கப் புதுமாதிரியான வெடி குண்டுகளை ஜெர்மானியர் கண்டுபிடித் திருக்கிறார்களாம். அவ்வெடி குண்டுகளைக் கீழே போட்டமாத்திரத்தில் திடீரென மூடுபனி போல் புகையுண்டாகவே, அதில் ஸெப்பலின் மறைந்து போகிறதாம். அதனால் ஸெப்பலின் பறக்குமிடத்தை மற்றவர்கள் நிர்ணயித்து அதன் மீது சுட முடியாதாம். இராக்காலங்களில் எவ்வளவு திறமையுள்ள சோதனை வெளிச்சத்தைப்போட்டாலும் அதைக் கொண்டு ஸெப்பலினைக் கண்டு பிடிக்க முடியாதென்றும் சொல்லப்படுகிறது. நடுநிலைமைத் தேசவாசியொருவர் சமீபத்தில் ஜெர்மனிக்குப் போய்த் திரும்பி வந்து, மேலேகண்ட விஷயத்தை லண்டனில் பிரசுரமாகும் டைம்ஸ் பத்திரிகைக்கு அறிவித்திருக்கிறார்.

# பண்டைத்தமிழரும் மரக்கலப் பயிற்சியும் *

## செந்தமிழ்

யான் இங்கு எடுத்துரைக்கப் புகுந்த விஷயம் சங்கத் தமிழ் நூலாராய்ச்சியுள்ள நுண்மதியாளர்க்கும் சரித்திரப் புலமையிற் கைவந்த பண்டிதர்களுக்கும் சிறிதும் புதிதாகத் தோற்றாது. ஆயினும், செந்தமிழபிமானஞ் செறிந்த நம்மவர்களிற் பலர் அவகாசக் குறைவாலும், அப்பியாசக் குறைவாலும் பண்டைத்தமிழ் நூல்களின் சிறப்பினையும் தமிழர்களின் நாகரிகத்தினையும் உள்ளவாறுணரா தொழிகின்றன ரன்றே; அவர்களுக்கு இச் சிறு வியாஸம் சிறிது பயன்படுமென்று இதனை இங்குப் படிக்கலானேன். பெருந்தகையாளர்கள் இதன் கட் காணப்படும் பிழைகளைப் பொறுத்தருள்வாராக.

ஒருதேசத்தார் வேறுள அயல்நாட்டாரோடு பல்லாற்றானும் நெருங்கிப் பழகுவதனால் அவர் நாட்டுக்கு மிக்க நன்மையே விளையுமென்பது சரித்ரவுணர்ச்சி யுடையார் யாரும் முதன் முதல் ஒப்புக்கொள்ளும் விஷயமாகும். ஒரு மனிதன் மற்ற மனிதர்களோடு உறவுகலவாது தனித்து நிற்பானானால், அவன் குறுகிய மன அமைப்புடையவனாய் உலகியலை யுணரா தொழிதல்போல, ஒரு நாட்டிலுள்ள ஜனங்கள் பிறநாடு செல்லுதலின்கண் ஊக்கமில்லாதவராயின் அந்நாடு சிறிதும் வளர்ச்சிபெறாது வரவரத் தளர்ச்சியுற்றழியும்.

இஃது இவ்வாறாக, பற்பல துறைகளிலும் நாகரிகம் மிக்குவிளங்கிய நம்முன்னோர்களாகிய பண்டைத் தமிழ் மக்கள் பிறநாட்டாரோடு பழகுவதிற் கலங்கொண்டு கடல்கடந்து வந்த தன்மையினைப்பற்றிச் சிறிது இங்குத் தொகுத்துக் கூறுவதே யான் இன்று எடுத்துக் கொண்ட விஷயமாகும்.

ஒருநாட்டின் பண்டைக்காலத்திய வழக்கம் ஒன்றைப்பற்றி ஆராய்ந்துணர்தற்குப் பிறசாதனங்களில்லாதவழி, அந்தத் தேசத்தில் வழங்கும் பாஷைகளிலுள்ள நூல்கள் சிறந்த கருவிகளாகும். அன்றியும், அந்தப் பாஷையில் பிரஸ்தாப விஷய சம்பந்தமான கருத்துக்களை வெளியிடற்குள்ள சொற்களின் தன்மையும் மிகுதியும் தக்க கருவிகளாகும். சீனா, திபேத்து இவ்விடங்களிலுள்ள உள் நாடுகளில் ஸமுத்திரத்திற்கு சொந்த பாஷையிற் பேரே கிடையாதாம். இவ்விடங்களிலுள்ளார் தமக்கு நெடுந்தூரத்திலிருக்கும் ஸமுத்திரம் எப்படிப்பட்டதென்பதை யுணரார்போலும்; நம் தமிழ் மொழியிலோ, ஸமுத்திரத்துக்கு ஆழி, கடல், பரவை, புணரி, ஆர்கலி, முந்நீர் எனப் பல செந்தமிழ்ச் சொற்கள் காரணப் பெயர்களாய்க் காணப்படுகின்றன. இப்பெயர்களாலேயே தண்டமிழ்க்கும் தண்கடற்கும் தக்க ஸம்பந்த முண்டென்பது எளிதி லுணரப்படும்.

இனிக் கப்பலுக்குத் தமிழிலுள்ள சொற்களைச் சோதிப்போம். அவை கலம், மரக்கலம், நாவாய், வங்கம், மிதவை, கப்பல் முதலியன. இவற்றில் வங்கத்தை இடவாகு பெயரென்றும் (வங்க தேசத்திலிருந்து கப்பலுக்கானமை பற்றி), நாவாயை வடமொழித் திரிபென்றும் கொண்டாலுங்கூட மற்றைச்சொற்கள் தனித்தமிழ் மொழிகளேயன்றோ? இச்சொற்கள் தமிழ் மொழியிலிருத்த லொன்றே தமிழர்கள் கலமிசைச் சென்றுவந்ததற்கும் போதியகுறிப்பாகும். இச்சொற்களும் இவற்றோடியையுள்ள கருத்துகளும் தமிழ் நூல்களிற் பல இடங்களில் மிக அழகாக மலிந்து காணப்படுகின்றன.

இவ்வாறு பாடல்கள் பலவற்றுள் கடல், கலம் இவை ஸம்பந்தப்பட்ட விஷயங்கள் வெகு அழகாகவும், ஸாலபமாகவும் அமையப் பெறுவதற்கு இயல்பாகவே மிக்க இயைபுடையது நம்முடைய அருந்தமிழ்மொழி. இங்ஙனம் தமிழ்மொழியின் கண்ணுள்ள சொற்களும் அச்சொற்களைத் தொடர்களிற் பெய்து வழங்குங்கால் அமையும் ஆற்றலும் அழகும் தமிழ் நாட்டாருக்கு மரக்கலத்தொழிலில் நல்லபழக்க மிருந்ததென்பதைத் தெள்ளிதில் தெரிவிக்கும்.

இனித் தமிழ் நூல்களிற் காணப்பெறும் சில குறிப்புக்களால் இக்கப்பற்றொழிலைப்பற்றிய பல அரிய விஷயங்கள் தெரியலாகும். அவற்றுட் சில ஈண்டுத் தொகுத்துக் கூறப்படும்.

தமிழ்நாட்டில், கப்பற்றொழிலுக்கு இன்றியமையாதனவாகும் துறைமுக இடங்கள் பல இருந்தன. இவற்றிற்குப் பட்டினங்கள் என்று பெயர். புறநானூறு, சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு முதலிய பண்டை நூல்களிலிருந்து, தமிழகத்தில் முசிறி, புகார், தொண்டி, கொற்கை இந்நகர்களெல்லாம் வியாபாரத்தில் மிகச் சிறந்த துறைமுகங்களாக விளங்கின என்பது உணரப்படும். இவற்றுள், முசிறி கடற்கரையிற் சிறந்த துறைமுகமா யிருந்தது.

புகார் என்பது, காவிரிப்பூம் பட்டினம் என்னும் மறு பெயருடையது. சோணாட்டிற்கு ராஜதானியாய் இலங்கி நின்றது. சிலப்பதிகாரத்தின் முதற் பகுதிக்குக் கதைநிகழ்விடம் இதுவே. இதன் துறைமுகச் சிறப்பைச் சிலப்பதிகாரத்திலும், பட்டினப் பாலையிலும் பரக்கக் காணலாம்.

தொண்டி யென்பது இப்போது சிவகங்கையைச் சார்ந்த ஒருசிறு துறைமுகமாக இருப்பினும் முற் காலத்தில் வியாபாரச் சிறப்பு விசேஷமாக வாய்க்கப் பெற்றிருந்தது. இதனையன்றிச் சேரர் தொண்டியென மேற்குக் கடற்கரையிலும் ஒரு தொண்டியிருந்தது. அதுவே,

கொற்கையும் பாண்டி நாட்டிற்குச் சிலகாலம் தலைநகராயிருந்து முத்து வியாபாரத்தில் முதன்மை பெற்றிருந்தது. அது இப்போதும் முத்துக் குளிக்கும் துறைமுகங்களுள் ஒன்றாக இருக்கிறது. இந்நான்கும் தமிழ் நாட்டில் மிக்க பிரவித்திபெற்ற துறைமுகங்களாம்.

* இது, மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 13-ம் வருஷக் கூட்டத்திற் படிக்கப்பெற்றது.



இவையன்றி மிகப் பலவாகிய சிறு துறைமுகங்களும் தமிழ் நாட்டில் இருந்திருக்க வேண்டுமென்பது தமிழ்ச் செய்யுட்களில் அரசர்களுக்கு அடைமொழிகூறி அவர்களை விளிக்குமிடங்களில்

"..............................................நாவாய் களிறுபோற் றூங்குங் கடறசேர்ப்ப!" என்றும், "நற் றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப!" என்றும்,

"கள்ளுயிர்க்கும் நெய்தற் கனைகடற் றண்சேர்ப்ப" என்றும்,

"கண்டல் திரையலைக்கும் கானலந் தண்சேர்ப்ப!" என்றும்,

"..............................................போவதெல்லாம் மாதர்வண்டார்க்கும் மலிகடல் தண்சேர்ப்ப!" என்றும்,

அவர்களுடைய கடற்கரைச் சிறப்பைத் தமிழ்ப் புலவர்கள் புலப்படப் பாராட்டிப் போதலால் உணரலாகும்.

இத்தகைய துறைமுகப் பட்டினங்கள் இருக்குமிடங்களிற் பண்டைத் தமிழர்கள் கலங்கரை விளக்கம் (Light House,) சுங்கச்சாலை (Custom House) முதலியனவும் ஏற்படுத்தியிருந்தனர். கலங்கரை விளக்கம் என்னும் தொடர் மொழி சிலப்பதிகாரத்தில் 'இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்' என்னுமிடத்தில் வழங்கப்பட்டுள்ளது. கலங்கரை விளக்கம் என்பதற்கு ஆசிரியர் அடியார்க்கு நல்லார் "பாடை வேறுபட்ட தேயத்து நிலையறியாதோடுங் கலங்களை அழைத்தற்கிட்ட விளக்கு" என்று விரித்து உரை கூறியிருக்கிறார். கலங்கரை விளக்கம் என்னும் இவ்வரிய தொடர்மொழியின் வழக்கே, தமிழர்கள் தங் கப்பல்களையும் பிறகப்பல்களையும் ஆபத்தினின்று காத்தற்கு முன்ஜாக்கிரதையாக இருந்தனர் என்பதைத் தெளிவுறுத்தும். மேலும், துறைமுகப் பட்டினங்களிற் கப்பல்கள் தம்மீது கொடிகட்டிப் பறக்குந் தன்மையோடுவந்து தங்குவதையும், அவற்றிலிருந்து சாமான்கள் மூட்டைமூட்டையாக ஒழுங்காக இறக்கி அடுக்கப்படுவதையும், அவற்றிற்கு அரசருடைய முத்திரை யிடுதலையும், சுங்கம் வாங்குதலையும் வியாபாரச் சரக்குகளையும் விரித்துக் கூறியிருப்பதைக் காவிரிப்பூம் பட்டின விருணனையாகப் பட்டினப்பாலையில் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் என்னே பண்டைத் தமிழர் தம் வாணிபமுறைச் சிறப்பு எனப் படிப்பவர் எண்ணி யெண்ணி வியப்புறுவார் என்பதிற் சிறிதும் ஐயமில்லை,

தமிழ் நாட்டார் நெடுங்காலமாகக் கப்பல் வியாபாரத்திற் கைவந்தவர் என்பது மயில், அரிசி என்னும் சொற்கட்கு முறையே ஹிப்ரு பாஷையிலும், இங்கிலீஷ் பாஷையிலும் அமைந்துள்ள துகி (தோகை) ரைஸ் (அரிசி) என்னும் சொற்களாலும், பிறநாட்டுப் புராதன நாணயங்கள் தமிழ் நாட்டிற் பல இடங்களிற் புதைந்துகிடக்கக் காண்பதாலும் எளிதில் அறியப்படும். மற்றும் தமிழில் அகப்பொருளிலக்கணத்தில், தலைவன் தலைவியைப் பிரிதற்குக்காரணம் சொல்லுமிடத்திற் பொருளீட்டலைத் தக்க காரணமாக இலக்கணக்காரர்கள் வைத்திருப்பதுமன்றி, அங்ஙனம் பொருளீட்டற்குக் கலமிசைச்சேர்ந்து கடல்கடத்தலையும் அவ்விலக்கணக்காரர்கள் எடுத்துச் சுட்டியுள்ளார்கள். இதனால் வாணிபத் தொழிலில் ஊதியம் உறுதற்பொருட்டுத் தமிழ்மக்கள் 'திரைகடலோடியுந் திரவியந்தேடு' என்னும் தமிழ் மூதாட்டியாகிய ஔவையார் தமது செவ்வியன் மொழியினுக் கேற்பவே, கலங்கொண்டு கடல் கடந்து வந்தனர் என்பது நன்கு துணியப்படும். எனினும், தமிழர்கள் தம் மனைவிமக்களோடு பிற ஊர்களுக்குக் கலமிசைச் செல்லும் வழக்கமுடையவரல்லரென்பதும், வ்யாபாரம் கருத்தியுற்றவழியும் பிறநாட்டிலே தம்மனைவி மக்களோடு தங்கி ஆங்கேயே தங்கள் கிளைக்குடிகளோடு வம்ச பாரம்பரையாய்ப் பெரும்பாலும் வசித்துவந்தவரல்லரென்பதும் அறியலாகும்,

இதுகாறும் தமிழ்மக்கள் கப்பல் தொழிலால் வாணிபத்தலம் சிறந்திருந்த செய்தி குறிக்கப்பெற்றது. இனித் தமிழர்கள் கலங்கொண்டு கடல்கடந்து பிறநாடுவென்ற விஷயத்தினைப் பற்றிச் சிறிது விரித்துப் பேசுவோம்.

ஒருநாட்டரசனுக்கு ஸேனாபலம் சிறக்கவேண்டுமெனில் அவனிடம் நிலப்படை நீர்ப்படை இரண்டும் இருத்தல்வேண்டும். நீர்ப்படை வலிகொண்டன்றோ ஜப்பான்தேசம் தன்னிலும் பன்மடங்கு அளவிற் பெரியதாகிய ருஷ்யாதேசத்தின் மேல் இலகுவாக வெற்றிபூண்டது? நீர்ப்படைவலியாற்றானே கி. பி. 17-ஆம் நூற்றாண்டிலிருந்து ஆங்கிலத் துரைத்தனமும் இணையில்லாத வளர்ச்சி யுறுவதாயிற்று? இவற்றை நோக்கின் ஒரு நாட்டின் பெருமைக்கு நீர்ப்படை இன்றியமையாச் சாதனமென்பது எளிதினுணரலாகும்.

இது நிற்க, இலங்கைத் தீவின் பண்டைச் சரித்திரத்தை ஆராய்ந்தால் அது சில நூற்றாண்டுகளிற் சோழ அரசர்களின் ஆட்சிக்குட்பட் டிருந்ததென்பது தெரியவரும். சோழ அரசனாகிய முதற் பராந்தகன் (கி. பி. 907-947) பாண்டிய நாட்டையும் இலங்கையையும் கைப்பற்றிக் கொண்டானென்பது, அவனுக்கு "மதிரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவன்மன்" என்று சாசனங்களில் வழங்கும் பேரால் அறியலாகும். இராமனைப் போலவே இலங்கையைப்பற்றியதனால் இவனுக்கு சங்கிராமராகவன் என்னும் காரணப்பெயருமுண்டு. முதல் ராஜராஜனும் (கி. பி. 985-1012) நீர்ப்படை வெற்றியால் கிரம்பக் கீர்த்தியடைந்தான்.

மேலும், இராஜேந்திர சோழனென்பான் (கி. பி. 1012-1032) இலங்கையையே யன்றி நக்கவாரத் தீவுகளையும் (The Nicobars) கடாரத்தினையும் பிற இடங்களையும் "அலைகடல் நடுவுபலகலஞ்செலுத்தி"ச் சென்று கைப்பற்றிக் கொண்டிருக்கிறான். இதனால் நீர்ப்படையை யுபயோகித்துப் பிறநாடுகவர்தலில், தமிழர்கள் பழகி யிருந்தனரென்பது தெளியப்படும்.

ஆயினும், தமிழர்கள் நீர்ப்படையாற் பகைவர்களை

மேற்படத் தாக்குதலிற் பண்டைக்காலத்துக் கிரேக்கர்கள், ரோமர்கள் இவர்களைப்போல அத்துணைக்கிளர்ச்சியும் ஆர்வமும் வாய்ந்தவரென்று கூறவொண்ணுது. இதற்குத் தமிழர்கள் தம் நாட்டை யடுத்துள்ள இலங்கை, பர்மா இவ்விடங்களைக் கைப்பற்றினரேயன்றி, கிழக்கே சீனு ஜப்பான், மேற்கே பாரசீகம், அரேபியா என்னும் தூரதேசங்களை அவர்களின் கப்பற்படைவலி கொண்டு கைப்பற்றியதாகச் சரித்திர ஆராய்ச்சியால் இதுகாறும் தெரியவாராததே போதிய சான்ருகும்.

இத்துணையும் கூறியவாற்ருல், 'தமிழ்ச்சொற்களின் தன்மைகொண்டே தமிழர்க்குக் 'கடல்' 'கலம்' இவற்ருேடு மிக்க இயைபுண்டென்பதும், அச்சொற்கள் தமிழ்ச்செய்யுட்களில் வழங்கும்போது தோன்றும் நயத்தால் அவர்க்குக் கப்பற்ருெழிலில் தக்க பழக்கமிருந்ததென்பதும், தமிழ்நாட்டிற் பெரிய சிறந்த துறைமுகப் பட்டினங்கள் இருந்தன என்பதும், மற்றும் அத் துறைமுகங்களிற் கலங்கரை விளக்கமும் சுங்கச்சாலையும் பிறவும் இருந்தன வென்பதும், தமிழ் மக்களும் தமிழ்மன்னரும் முறையே வியாபார மேம்பாட்டிற்காகவும், வேற்று நாடுகளைக் கவர்தற்காகவும் மரக்கலங்களை விசேஷமாக உபயோகித்து வந்தனரென்பதும், இன்னேரன்ன பிறவும் என் சிற்றறிவிற் கெட்டிய மட்டில் தொகுத்துச் சொல்லப்பட்டன.

வே. முத்துசாமி ஐயன், எம். ஏ. எல். டி.

## நம்பூத்திரி பிராம்மணர்களின் உற்பத்தி

ஸர் வில்லியம் ஹண்டர் என்ற ஆங்கிலேய நூலாசிரியர் சுமார் 30 வருஷத்திற்கு முந்தி ஒரு புஸ்தகத்தில் மலையாளி நம்பூத்திரி பிராம்மணர்களின் உற்பத்தியைப்பற்றி எழுதியிருக்கிருர். அவர் எழுதியதைப் பிரசுரித்து காண்பித்து ஹிஸ்டாரிக்ஸ் என்பவர் 'ஸோஷியல் ரிபாரம் அட்வோகேட்' பத்திரிகைக்கு அடியில் வருமாறு எழுதியிருக்கிருர். அதன் ஸாரம்ஸம் பின்வருமாறு:—

"கீர்த்திபெற்ற ஞானியும் யுத்தவீரருமான ஸ்ரீ பரசுராமர் பிராமணர்களைக் கூட்டிக்கொண்டு வந்து அவர்களை ஒரு பிரதேசத்தில் குடியேற்றினுர். அவர் அப்பிரதேசத்தை 64 கிராமங்களாகப் பிரித்து அவைகளில் அவர்களைக் குடியேறும்படிச் செய்தார். ஹிந்து சாஸ்திரப்படி ஸ்ரீ பரசுராமர் திரேதாயுகத்தில் (அதாவது 10 லட்சம் வருஷங்களுக்கு முந்தி) தோன்றி, க்ஷத்திரியப் பூண்டை 21 தலைமுறை அழித்துவிட்டார் என்று சொல்லப்படுகிறது. 8,40,000 வருஷகால அளவைக்கொண்ட துவாபரயுகத்தில் அவர் பீஷ்மன் என்ற க்ஷத்திரிய வீரருடன் போர்புரிந்ததில் அவரால் முறியடிக்கப்பட்டார். அதன்பிறகுதான் அவர் பஞ்சாப்பில் குடியேற்றி யிருந்த பிராமணர்களை அதைவிட்டு மலையாளத்தில் குடியேறும்படிச் செய்தார். பஞ்சாப்பிலிருந்து பிராம்மணர்களை பல காடுகளையும் மலைகளையும் நதிகளையும் கடக்கமுடியாத ஆரண்யங்களையும் கடக்கச்செய்து இந்தியாவின் தெற்குக் கோடியிலுள்ள மலையாளத்திற்குக் கொண்டுவந்து சேர்த்து அங்கே அவர்களை குடியேறும்படிச் செய்தார்."

இப்படி ஸர் வில்லியம் ஹண்டர் தமது புஸ்தகத்தில் எழுதியிருக்கிருர். இதைத்தான் சாமான்னிய ஜனங்கள் நம்பியிருக்கிருர்கள். போக்குவரத்துக்குக் கொஞ்சமேனும் சாதகமில்லாத அக்காலத்தில் பிராமணர்களைக் குடியேற்றுவதற்கு ஆரிய வர்த்தத்தில் சமீபத்தில் எங்கும் இடம் அகப்படவில்லையா?—என்று ஹிஸ்டாரிக்ஸ் கேட்கிருர். இது புராண சம்பந்தமான சம்பவம். இதையொழித்துவிட்டு சரித்திரசம்பவத்தைக் கவனிப்போம். சேர, சோழ, பாண்டியர்கள் என்று மூன்று தமிழ்நாட்டு வேந்தர்கள் இந்தியாவின் தென் பாகத்தை ஆண்டு வந்தார்கள். அவர்களில், சேரன் ஆண்ட நாடுகளுக்குச் சேர நாடு என்று பெயர். இப்போதைய திருவாங்கூர், கொச்சி, மலையாளம் ஆகிய இவைகளுக்கு அக்காலத்தில் சேரநாடு என்ற பெயர் வழங்கி வந்தது.

தமிழ்க் காவியங்கள் உன்னத நிலையை அடைந்திருந்த கிறிஸ்துவ சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் சேர நாட்டின் நிலைமை இன்ன மாதிரியாக இருந்ததென்பதற்குப் பல பிரத்தியட்சப் பிரமாணங்கள் இருக்கின்றன. அவைகளில் எதிலும் நம்பூத்திரிப் பிராம்மணர்கள் இருந்ததைபற்றியாவது அல்லது பரசுராமர் என்பவரால் நம்பூத்திரிகள் என்ற பிராம்மணர்கள் மலையாளம் ஜில்லாவில் குடியேற்றப்பட்டார்கள் என்ருவது சொல்லப்படவில்லை. அக்காலத்தில் மலையாளத்திலும் சேரனுடைய மற்றப் பிரதேசங்களிலும் பேசி வந்த பாஷை தமிழ் என்று சொல்லப்படுகிறது. தமிழ் நூல்களில் நம்பூத்திரி என்ற வார்த்தை தோன்ருமையால், அப்போது நம்பூத்திரி பிராம்மணர்கள் இல்லையென்று ஏற்படுகிறது. அக்காலத்தில் பாமரர்களால் மட்டும் மலையாள பாஷை பேசப்பட்டு வந்தது. ஆகையால், சேரனுடைய ராஜ்ஜியம் க்ஷீண திசையடைந்த பிறகு தான், அதாவது கிறிஸ்து பிறந்த 8-அல்லது 9-வது நூற்ருண்டில் நம்பூத்திரிகள் மலையாளத்தில் வந்து குடியேறி யிருக்கவேண்டுமென்று ஊகிக்க வேண்டி யிருக்கிறது.

சேரனுடைய ராஜ்ஜியம் க்ஷீணதிசையடைந்தபிறகு, மலையாளத்தில் குழப்பமும் ஒழுங்கின்மையும் பரவியிருந்தன. அக்காலத்தில் ஜனங்கள் மூடர்களாக இருந்தார்கள். ஆனதினுல் அவர்களுடைய சரித்திரத்தைப் பற்றி ஒன்றுமே நன்ருகப் புலப்படவில்லை. அக்குழப்பமான நிலைமையி லிருந்தபொழுதுதான் நம்பூத்திரிகளின் சில குடும்பங்கள் அங்குவந்து குடியேறி யிருக்கவேண்டும். இப்பொழுது மேற்குக்கரையில் வழங்கி வரும் பழம் பாட்டுகளினுல், நம்பூத்திரிகளை அங்கிருந்த உயர் குலத்தோர் உபசரித்து ஏற்கவில்லை யென்பது வெளியாகிறது. ஆகையால், அவர்கள் தாழ்ந்த வகுப்



பாரிடம் போய்க் கலக்கவேண்டியதாயிற்று. மலையாளத்தில் ஜனங்களை ஏற்றிக்கொண்டு செல்லும் சிறிய படகுகளுக்கு வள்ளம் என்று பெயர். அவ்வித வள்ளங்களை ஓட்டுகிறவர்கள் தாழ்ந்த வகுப்பார்களா யிருந்தார்கள். அவர்களுடைய தொழில் படகுகளை யோட்டுவதும் மீன்களைப் பிடிப்பதுமாயிருந்தது.

(நம்பூ—திரி) என்ற இரண்டு பதங்கள் சேர்ந்து நம்பூத்திரி என்ருயிருக்கிறது. பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போகும் ஒருவித வள்ளத்திற்கு நம்பு என்று பெயர், திரி என்ருல் நகரச்செய்வது அதாவது அதை ஓட்டுவது. நம்பூத்திரி என்ருல் வள்ளத்தை ஓட்டுகிறவர்கள் என்று பொருள். அந்த நம்பூத்திரிச் செம்படவர்கள்தான் இவர்களை வரவேற்று இவர்களுக்கு இடங்கொடுத்தார்கள். புதிதாய் வந்த இந்த பிராம்மண வகுப்பார் ரொம்ப ஏழைகள். இவர்கள் ஸ்திரீ ஜாதிகள் இல்லாமல் தனிமையாக வந்தார்கள். ஆகையால், இவர்களுக்கு இடங்கொடுத்துக் காப்பாற்றி வந்த நம்பூத்திரிச் செம்படவ ஜாதி ஸ்திரீகளை விவாகஞ் செய்துகொண்டார்கள். இவர்களுடைய சந்ததியார்களுக்கு நம்பூத்திரிப் பிராம்மணர்கள் என்றுபெயர்.

இந்த நம்பூத்திரிப் பிராம்மணர்கள் சூன்ய வித்தையிலும் லாலவித்தையிலும் சமர்த்தர்களானுர்கள். அக்காலயிருந்த சிற்றரசர்களின் கவனத்திற்கு இவர்கள் உரியவர்களானுர்கள். அச்சிற்றரசர்கள் ஒருவரோடொருவர் அக்காலத்தில் அடிக்கடி சண்டை போட்டு வந்ததினுல், இவர்களின் சகாயம் அச் சிற்றரசர்களுக்கு ரொம்ப அவசியமாக இருந்தது. அச் சிற்றரசர்கள் இந்த நம்பூத்திரி பிராம்மணர்களைத் தங்களுடைய குடும்ப புரோகிதர்களாக நியமித்துக்கொண்டார்கள். இப்பிராமணர்களுக்குள்ள சூக்ஷ்ம புத்தியினுல் இவர்கள் ஜனசமூகத்திற்குள் உயர்வடைந்து அந்நிலைமையைத் தலைமுறை முறையாக நீடித்திருக்கும்படியாகச் செய்து கொண்டார்கள். மலையாளிகள் படிப்பு வாசனை யில்லாத மூடத்தனமான குருட்டுத்தனத்திலும் நம்பிக்கையிலும் மூழ்கி யிருந்த அக்காலத்தில், காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்ற பழமொழிப்படி நம்பூத்திரிப்பிராமணர்கள் அச்சமயத்தை வீணுக்காமல், தங்களுக்குப் பரசுராமனுல் மலையாளம் முழுவதும் தானமாகக்கிடைத்திருக்கிறதென்று சொல்லி அதைச்சித்தப்படுத்துவதற்கு ஆதாரமாக தானசாஸனத்தையும் சிருஷ்டி செய்துகொண்டார்கள். நம்புத்திரிகளின் நடை உடை பாவனை முதலியவைகளையும், அவர்கள் சூத்திர ஸ்திரீகளுடன் வைத்துக்கொள்ளும் சம்பந்த முறையையும் கவனித்தால் அது அவர்கள் பஞ்சாப்பிலிருந்து இங்கே குடியேறினவர்கள் அல்லர் என்றும் மலையாளத்திலேயே உற்பத்தியான வகுப்பார் என்றும் விளக்கிக் காட்டுகிறது.—சுதேசமித்திரன்.

## ஆரோக்கிய போதம்

மரணபரியந்தம் சரீரத்தை வியாதி அடையாவண்ணம் பாதுகாப்பது யாவருக்கும் ஆவசியகம். மனிதர்களுக்குப் பெரும்பாலும் சரீர அசௌக்கியமானது அறியாமையினுலும், அறிந்த வழியும் அசாக்கிரதையினுலும் உண்டாகிறது. நாள்தோறும், காலையில் விழித்து எழுந்தால் புத்திதெளிவும் சுறுசுறுப்பும் உண்டாகும். காலையிலே கால்நடையேனும் அல்லது வேறு தேகப் பயிற்சியேனும் செய்வது முக்யமாகும். அப்படிச்செய்வதால் சரீரம் இறுகும். பசி உண்டாகும். வாதமும், பித்தமும் கபமும் தத்தம் நிலையில் பொருந்தும், மலம் இறங்கும்.

காலந்தோறும் போசனம் செய்துகொண்டு வருதல் போலவே, அதினின்ற பிரியும் மல ஜலாதிகளை ஒழுங்காக மோசனஞ் செய்துகொண்டு வரவேண்டும். காலை மாலை என்னும் இரண்டு நேரத்திலும் தவருமல், மலமோசனஞ் செய்யும்படி பழக்கிக் கொள்ளவேண்டும். இடையில் வரினும் தடைபடுத்தலாகாது. அதுவே அநேக வியாதிகளுக்குக் காரணமாகும்.

இயல்பாக துவர் உள்ளதான இலை கொம்பு நார் என்னும் இவைகளினுலே பல்லின் உள்ளையும் புறத்தையும் செவ்வையாக விளக்கல் வேண்டும். பல்லை எவ்வளவு சுத்தமாய் வைத்திருக்கிருேமோ அதற்குத் தக்கபடி பல் வியாதிகள் உண்டாகமாட்டா. முகவசீகரமும் உண்டு. சரீரத்திலுள்ள மயிர்க்கால்கள் வழியாக வியர்வையாய்க் கழியும் அழுக்குகளெல்லாம் இரத்தத்தினின்று தடையின்றிப் பறியும்பொருட்டு நாடோறும் சரீரத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும். காலையில் செய்யும் ஸ்நானமானது மிகவும் நன்மை தரத்தக்கது; வெந்நீரில் செய்யும் ஸ்நானத்தைவிடத் தண்ணீரே உத்தமம். ஆனுல், காலத்துக்கும் தேக ஸ்திதிக்கும் தக்கவாறு உபயோகப்படுத்திக்கொள்வது உசிதம்.

சூரிய கிரணம் படாத நீரும் பாசி நீரும் அதிக சேறுள்ள நீரும் இலை உதிர்ந்துகிடக்கும் நீரும் துர்க்கந்தம் உள்ள நீரும் ஸ்நானபானங்களுக்கு ஆகா. ஸ்நானம் நெடுநேரம் செய்யலாகாது. ஸ்நானம் முடிந்தவுடன் உலர்ந்த வஸ்திரத்தினுல் சரீரத்தைத் துடைத்துவிட்டு தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துக்கொள்ளவேண்டும். ஸ்நானம் செய்யமுடியாத காலங்களில் முகம், கை, கால் முதலியவைகளையேனும் கழுவித் துடைத்துக்கொள்வது உத்தமம்.

உடுக்கிற வஸ்திரமும் படுக்கையும் அழுக்கில்லாமல் இருத்தல் வேண்டும். சரீரத்தினின்றும் வெளியில் வரும் அழுக்கானது படுக்கையிலும், வஸ்திரத்திலும் ஒட்டிக்கொள்ளும். அவைகள் சரீரத்தில் படும்பொழுது மயிர்க்கால்களை அடைத்து வியாதியை விளைவிக்குமாதலால் படுக்கைகளும் வஸ்திரங்களும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

நன்ருகச் சமையாத அன்னமும் ஊசின அன்னமும் பழங்கறிகளும் நாள்பட்ட பலகாரங்களும் உண்ண

## விசேஷ வர்த்தமானம்

**பிராம்மணன் மகம்மதியனானான்.**—மங்களூரி லிருக்கும் கௌட சாஸ்வத பிராம்மண வகுப்பைச்சேர்ந்த ஒருவன் மகம்மதிய மதத்தைத் தழுவிவிட்டான்.

*
* *

**'கீதாரகஸ்ய' விற்பனை.**—ஸ்ரீ பால கங்காதர திலகர் சமீபத்திலே கீதாரகஸ்யம் என்னும் நூலைப் பிரசுரஞ் செய்தார். அவர் பதிப்பித்த 6-ஆயிரம் பிரதிகளும் பிரசுரமான ஒருவாரத்திற்குள் செலவாயினவாம்.

*
* *

**காகிதச் செலவு.**—இந்தியாவிலும் பர்மாவிலும் சேர்ந்து வருஷத்திற்கு 70-ஆயிரம் டன் நிறையுள்ள காகிதம் செலவாகிறது. இந்தியாவில் மட்டும் 25-ஆயிரம் டன் நிறையுள்ள கீழ்த்தரமான காகிதம் செய்யப்பட்டு வருகிறது.

*
* *

**பெண்கல்வி.**—கடைசி ஜனசங்கைக் கணக்குப்படி இந்த ராஜதானியில் உள்ள ஹிந்து ஸ்திரீகள் மொத்தம்: 18,917,949; அதாவது சுமார் 190 லக்ஷம் பேர். இவருள் எழுதப்படிக்கத் தெரிந்த பேர் இரண்டு லக்ஷம் பேரே அதாவது, நூற்றில் 99 பேர் தற்குறி நபர்கள்.

---

லாகாது. சித்திரான்னங்களையும் பலவிதமான பக்ஷணங்களையும் அடிக்கடி உபயோகப் படுத்தலாகாது. உண்ட பின்னே ஜலபானம் செய்வது மிகவும் நன்று. புளித்த தயிரையும் மோரையும் பகலில் உண்பது நலம். ஊறுகாய்களெல்லாம் உதராக்கினியை வளர்க்கும். அருசியைப் போக்கும். இரண்டுவேளை போசனமே உத்தமம். மூன்றுவேளை சாப்பிடுவது மத்திமமாகும். ஒருவேளை உண்பானை யோகி யென்றும், இரண்டு வேளை யுண்பானைப் போகி யென்றும், மூன்றுவேளை யுண்பானை ரோகி யென்றும் சொல்கிற வழக்குமுண்டு.

யாவரும் தாங்கள் வசிக்கும் வீடுகளிலுள்ள காற்று சுத்தமாய் இருக்கும்பொருட்டு பலகணிகளை வீடுகளில் வைத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். நித்திரைக்கு ஏற்றகாலம் இராக்காலமேயாம். மிகுந்த நித்திரையும் குறைந்த நித்திரையைப்போலவே வியாதிக்கு ஏதுவாகும். தூக்கம் வருமுன் படுத்தால் நித்திரை வரும் வரையும் மனம் துர்விஷயத்தில் சென்று கேட்டை விளைவிக்குமாதலால், தூக்கம் வரும் வரை ஏதேனும் படிப்பது நலமாகும். உண்டவுடன் சயனிப்பது கூடாது. இடப்பக்கம் கீழாகச் சயனிக்க வேண்டும். ஆனால் சரீரத்திற்கு சுபாவமாய் எவ்விதம் படுத்துக்கொள்வது சௌகரியமென்று மனதிற்குத் தோற்றுகிறதோ அப்படி சயனிப்பது உத்தமந்தான். சயனிக்கும்போது சிரசைச் சற்று உயரமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

**எச்சரிக்கை.**—கள்ளிக்கோட்டையிலிருந்து கல்லாய்க்குப் போய்க்கொண்டிருந்த ஒரு ரயில்வண்டியின் கதவு பூட்டப்படாததினால் 3-வயதுள்ள மகமதியப் பெண் குழந்தையொன்று கீழே விழுந்துவிட்டது. அதிர்ஷ்டவசமாய் அக்குழந்தைக்குப் பலத்த காயமில்லை. ரயிலில் குழந்தைகளுடன் பிரயாணஞ் செய்கிறவர்கள் இவ் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியம்

*
* *

**புது ஸ்திரீ வித்தியாசாலை.**—பம்பாயிலே கலியாணமான ஹிந்து ஸ்திரீகள் சேர்ந்து வாசிப்பதற்கென்றே மிஸ்ஸஸ் நிகாம்பே என்ற புண்ணியவதி 1913-ம் வருஷத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்தார். அது இப்போது பலப்பட்டுவிட்டது. அதில் ஆங்கிலமும், தையல் வேலையும், சங்கீதமும், தாதித்தொழிலும் சொல்லிவைக்கப்படுகின்றன. ஜாதிபேதமின்றியும் வயது வித்தியாசம் பாராட்டாமலும் ஹிந்துமதத்தைச்சேர்ந்த ஸ்திரீகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

*
* *

**10-அணா சரக்கு 19-ரூபாய் ஆயிற்று.**—பம்பாயிலே சில ஜர்மன் கம்பெனிகளிடமிருந்த சாயச் சரக்குகளை ஏலம்போட்டார்கள். அச்சரக்குகள் மொத்தத்தில் 18-லட்ச ரூபாய்க்கு விலையாயின. முன்பு ஒரு பவுண்ட் எடையுள்ள சாயச் சரக்கானது 10-அணாவுக்கு விற்றிருக்க, இந்த ஏலத்தில் அதே எடையுள்ள சரக்கானது 19-ரூபாய்க்கு விலையாயிற்று.

*
* *

**ஐந்து பிள்ளைகளைப்பெற்றாள்.**—பம்பாய் க்ரானிகல் என்னும் பத்திரிகையின் நிருபர் பின்வருமாறு சொல்லுகிறார்:—மகாராஷ்டிர ஸ்திரீயொருத்தி சில தினங்களுக்குமுன் 5-குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தைகளில் இரண்டு ஆண், மற்ற மூன்றும் பெண். அக்குழந்தைகள் ஐந்தும் நல்ல ஸ்திதியில் இருக்கின்றன. சென்ற வருஷத்தில் அந்த ஸ்திரீ 3-குழந்தைகளைப் பெற்றாள். பிறந்த மூன்று மாதங்களுக்கெல்லாம் அவை இறந்துபோயின. இப்பொழுது பெற்றெடுத்த 5 குழந்தைகளுக்கும் உயிரோடிருக்கின்றன.

*
* *

**கோவிலில் கக்கூஸ்.**—திருவாங்கூர் சமஸ்தானத்தில் குருவாயூர் என்ற ஒரு சிறந்த யாத்திரை ஸ்தலமுண்டு. அவ்விடத்தில் நடக்கும் உற்சவங்களுக்கு மேற்குக் கரையோரமாயிருக்கும் ஜில்லாக்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் போகிறார்கள். அக்கோவில் அதிகாரிகள், அக்கோவிலின் ஒரு பாகத்தில் கக்கூஸ் ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள். அதைப்பற்றி ஜனங்கள் ஆத்திரங்கொண்டு, அந்தக் கக்கூஸை அவ்விடத்திலிருந்து எடுத்துவிட உத்திரவு செய்யவேணுமாய் ஜில்லா அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



**வேதாத்தியயனஞ் செய்தவர்களுக்கு வெகுமதிகள்.**—தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த உாளம் என்ற இடத்தில், சிராவண உபாகர்ம சந்தர்ப்பத்தை யொட்டி மிஸ்டர் L. பிரசாதராவ் என்பவர், வேதம், காவியம், நாடகாலங்காரம் முதலியவைகளைச் செவ்வையாகக் கற்றவர்களை வரவழைத்திருந்தார். மஹாமஹோபாத்யாய தாதா அப்பராய சாஸ்திரியாரும், வேறு 12-பண்டிதர்களும் அடங்கிய பரீக்ஷை போர்டாரின் உதவியைக்கொண்டு வித்யார்த்திகளுக்கு ஒரு பரீக்ஷை நடத்தப்பட்டது. அதில் தேர்ந்தவர்களுக்கு அவரவர்களின் யோக்கியதைக்குத் தக்கவாறு 5000-ரூபாய் வரையிலும் பரிசுகள் கொடுக்கப்பட்டன.

*
* *

**புலிவேட்டை.**—ஜடப்ரோல் சமஸ்தானம் கொல்லாபுரம் ராஜா ஸ்ரீ சுரபிராஜ வேங்கடலக்ஷ்மீ ராவ் பகதூர் சமீபத்தில் 2-பெரும்புலிகளை ஐந்து நிமிஷத்தில் சுட்டனர். அவர் கடந்த 1884-ம்வருஷத்தில் துப்பாக்கி வேட்டையாட ஆரம்பித்தாராம். அதுமுதல் மேற்குறித்த தேதி வரையில் 185-துஷ்ட மிருகங்களைக் கொன்றதாகச் சொல்லப்படுகிறது. 105 பெரும் புலிகளைச் சுட்டதில் 100-இறந்தும் 3-காயம் பட்டும் 2-தப்பியும் போய்விட்டனவாம். 20-காடிகளைச் சுட்டதில் 18-இறந்தும், 2 அடிவாங்காமலும் போயினவாம். நாடு நகரில் வசிக்கும் நபர்களுக்கும், காடு மலைகளில் மேய்ந்துய்யும் ஆடுமாடுகளுக்கும் புலியென்னும் கிலியை யொழித்த இப்பூபதி நூறு புலிகளைக் கொன்றதால் மறுமையில் சக்கரவர்த்தியாக ஜனிப்பாரென்று ஷை சமஸ்தானத்திலுள்ள சாஸ்திரிகள் புகழ்ந்துரைக்கின்றனர். சதவியாக்ர ஸம்ஹாரத்தின் பொருட்டு, ராஜா ஒரு பெரிய யாகம் செய்ய நிச்சயித்திருப்பதாகத் தெரியவருகிறது.

*
* *

**ஒரு நவீன விவாகம்.**—பஞ்சாப்பில் பாரிஸ்டரான மிஸ்டர் ஜய கோபால சேதி என்பவர் பம்பாய் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர். அவர் மிஸ்பிளாகி என்ற ஐரிஷ் ஸ்திரீயை ஆரிய சமாஜ விதிப்படி விவாகஞ் செய்துகொண்டார். விவாகம் நடப்பதற்கு முந்தி அந்த ஐரிஷ் ஸ்திரீ பிராயச்சித்த விதிப்படி சுத்தி செய்யப்பட்டார். பம்பாய் ஆரியஸமாஜத்தைச் சேர்ந்த குருக்களால் வேதோக்தமாக விவாகம் நடத்தப்பட்டது. அந்த விவாகத்திற்கு பம்பாயிலுள்ள பிரபலமான ஹிந்து ஆசாரதிருத்தக்காரர்கள் போயிருந்தார்கள். சுத்தி செய்யப்பட்டபிறகு மிஸ்பிளாகி என்ற பெயரை நீக்கிவிட்டு சுசீலாபாய் என்று நாமகரணஞ் செய்யப்பட்டது. இந்த ஸ்திரீ செவ்வையாகப் படித்தவர். இங்கிலாந்தில் பலர் இந்த ஸ்திரீயை அறிவார்கள். இதற்கு முந்தி, அதாவது 6-மாதத்திற்கு முந்தி, பம்பாயில் தென்னாபிரிக்காவைச்சேர்ந்த ஆங்கிலஸ்திரீ ஆரிய சமாஜத்தைத் தழுவின பிறகு அவளை குஜராத்தி யானவர் ஒருவர் விவாகஞ் செய்துகொண்டார். சென்னை ராஜதானியில் ஹிந்து சமஸ்தானாதிபதியா[illegible]டை ராஜா சமீபத்தில் ஒரு ஆஸ்ட்[illegible] ஸ்திரீயை விவாகஞ் செய்துகொண்டாரல்லவா[illegible]

*
* *

**உடன்கட்டை ஏறின சிறுமி.**—ஐக்கிய மாகாணத்திலுள்ள ஒரு கிராமத்தில் சிறுமி யொருத்தி உடன் கட்டை ஏறிவிட்டதாகத் தெரிகிறது. அதன் விவரமென்ன வென்றால்.—அக்கிராமத்திலுள்ள ஒரு சிறுமியின் கணவன் ஒரு வருஷகாலமாய் உடம்பு அசௌக்கியமா யிருந்தான். முடிவில் அவன் மரணமடைந்து போகவே, அத்துக்கத்தைத் தாங்க முடியாத அவனுடைய மனைவி தானும் தன் கணவனுடன் உடன்கட்டை ஏறி விடுவதாகச் சொல்லினள். அது கேட்ட சுற்றத்தார் அனைவரும் அப்பெண்ணைத் தேற்றினர். முடிவில் அப்பிரேதத்தை மயானத்துக்கு எடுத்துச் சென்று தீமூட்டினர். அப்பெண்ணும் போயிருந்தாள். அப்பொழுது திடீரென அப்பெண் அத்தீயில் குதித்து ஆவி துறந்தனள். உடனே அவ்விஷயத்தைப் போலீஸாருக்கு அறிவிக்க, அவர்கள் வந்து அப்பெண்ணின் சுற்றத்தாரில் எழுவரைக் கைதுசெய்திருக்கின்றனர். இது இப்படியிருக்க, நூற்றுக்கணக்கான ஜனங்கள் அம்மயானஞ்சென்று மரியாதை காட்டினதாகவும் தெரிகிறது.

---

ஜெர்மன் சேனையில் வீரதீரங் காட்டுவோருக்கு அயர்ன் க்ராஸ் என்னும் மெடல் பரிசளிக்கப்படுகிறது. இதுவரையில் அம்மாதிரி 3 லட்சத்து 44 ஆயிரத்து 749 மெடல்கள் அளிக்கப்பட்டிருக்கின்றனவாம். அவைகளினுடைய மொத்த விலை ஒரு லட்சத்து 40 ஆயிரம் பவுன் என்று மதிக்கப் படுகிறது.

## இடைப் பெண்

இன்றைக்குச் சுமார் இரண்டாயிரத்து எழுநூற்றைம்பது வருஷங்களுக்கு முன் சிம்மளதேசத்தில் வீரநரசிங்கபுரம் என்னும் நகரத்தில் பிரபோதசந்திரன் என்று பெயருள்ள மன்னனொருவன் மனுநெறி பிறழாது இராஜ்யபரிபாலனஞ் செய்துவந்தான். அவனுக்கு வெகுநாள்வரை புத்திரஸந்தானமே கிடையாது. தவம் தானம் முதலியன செய்தும், விரதங்கடந்தும், இவ்வாறு பலநாள் சென்றபின் அவனுக்கு இரட்டையாய் இரு பெண்மகவு பிறந்தனர். ஒன்றுமில்லாததற்கு இரு பெண்ணாவது பிறந்ததே என்ற உள்ளத்தைக்கொண்டு ஆனந்தப்பட்டு அவர்களுக்கு உமை என்றும் காத்யாயனி என்றும் அம்பாளின் திருநாமங்களைச் சூட்டி அவர்களை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தான். மகளிரும் வாலைப்பருவந்தாண்டி மடந்தைப்பருவம் அடைந்தவராய் 'உன்னைப்பார் என்னைப்பார்' என்று வளர்ந்துவந்தனர். அழகில் அவர்களுக்கு இணை இம்மண்ணுலகில் இல்லவே யில்லை. ஒருக்கால் தெய்வ உலகில் இருக்கிறார்களோ என்னவோ நாம் அறிகிலோம்.

பெண்களுக்கு வயது ஏறஏற மன்னனுக்கு விசாரம் அதிகமாயிற்று. அவர்களுக்குத் தக்கவரைச் சம்பாதிக்கவேண்டுமே என்ற கவலை அவனைத் தினமானம் வாட்டிற்று. இஃதிப்படி யிருப்ப மன்னனுக்கு ஓர் யோசனை யுண்டாயிற்று. "நாமோ பெண்களிருவரையும் சமமாகவே கருதி வஞ்சனையின்றி நடந்துவருகிறோம். அதுபோலவே அவர்களும் நம்மை சமமாகவே நேசிக்கிறார்களா? அவர்களுள் யார் நம்மை அதிகம் நேசிக்கிறார்களோ அவளுக்கு இந்த ராஜ்யம் முழுவதையும் கொடுத்துவிடவேண்டும்" என்றிவ்வாறு யோசித்துக்கொண்டு பெண்களிருவரையும் வரவழைத்தான். அவர்களுள் மூத்த மகளான உமையை நோக்கி "உமா! நீ என்னை எவ்விதம் விரும்புகிறாய்" என்று கேட்டான்.

அதற்கு உமை "ஐயா! உம்மை என் கண்ணின் கருமணிபோல் நேசிக்கிறேன். உம்மைவிட எனக்கு [illegible] பந்து வேறு யாரிருக்கின்றனர்? உமக்கு வயது வளர்ந்துகொண்டேயிருப்பதை நோக்க எனக்கு விசாரமும் வளர்ந்துகொண்டேயிருக்கிறது. உமக்குப் பிற்காலம் எங்களுக்குக் கதி யார்? நீர் இறந்துவிட்டால் நான் உயிர்தரியேன். ஆற்றிலோ குளத்திலோ விழுந்து பிராணனை விடவேண்டியவள்தான்" என்று சரமாரியாய்ப் பொழிந்தாள். இதைக்கேட்டதும் மன்னனுக்கு மகிழ்ச்சி மிகுதியும் உண்டாயிற்று. தன் மூத்த பெண்ணுக்கே ராஜ்யம் முழுவதையும் கொடுத்துவிடலாமா என்று எண்ணினான். ஆனாலும் இளையமகளான காத்யாயனியின் மனத்தை யறியவெண்ணி, அவளைநோக்கி "காத்யாயனீ! நீ என்னை எவ்விதம் விரும்புகிறாய்?" என்று வினவினான்.

அதற்கு அப்பெண், "ஐயா! நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. சுருங்கச்சொல்வதே என் ஸ்வபாவம். 'ஷண்ணாம் ரஸானாம் லவணம் ப்ரதானம்' என்று கூறியிருக்கிறது தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். எவ்வாறு அறுசுவையுள்ளும் உப்பின் சுவை ஆகாரத்துக்குப் பிரதானமோ அதுபோல் நீர் எனக்குப் பிரதானம்" என்று மொழிந்தாள்.

அரசன் இதைக்கேட்கலும் யோசிக்கலானான்: தன்னைக் கரிப்புள்ள உப்புக்குச் சமமாகப் பாவித்தாளே என்று எண்ணி அவள்மீது மிகுந்த கோபத்தையடைந்தான். அவள் நன்றியற்ற பாதகியெனக் கருதி, "பெண்ணே! நீ கூறியதில் எனக்கு விருப்பமில்லை. என் பெண்ணெனக் கூறிக்கொள்வதற்குக்கூட உனக்கு யோக்கியதையில்லை. நீ கண்முன் நிற்காதே, ஓடிப்போ. நீ இனி என் நாட்டிலும் அடியெடுத்து வைக்கக்கூடாது" என்று கண்டிப்பாய் கூறிவிட்டான்.

காத்யாயனிக்கு துக்கம் மிகுதியாய் உண்டாயிற்று. தன்னறைக்குட்சென்று தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தாள். வெகுநேரம் அழுதானபிறகு தகப்பனாரின் கண்டிப்பான உத்தரவு ஞாபகத்துக்கு வர, உடனே கண்களைத் துடைத்துக்கொண்டு, தன்னுடைய உடைகளையும், ஆபரணங்களையும் எடுத்து ஒரு சிறு மூட்டையாகக்கட்டிக்கொண்டு அரண்மனையை விட்டு வெளியே புறப்பட்டாள்.

முன்பின் அதிகமாய் நடந்தறியாத பெண்ணுக்கு வழி தெரியுமா, துறை தெரியுமா? ஏதோ கால் போன வழியே செல்ல ஆரம்பித்தாள். அவளுக்கு இன்னது செய்வதென்றும் தெரியவில்லை. யாரிடத்து வேலைக்கமர்வது என்றும் அவளுக்கு விளங்கவில்லை. அவளுக்கு வேலையொன்றும் தெரியாது. சிறுவயதில் தன்



தாயார் தனக்குச் சொல்லிக்கொடுத்த சமையல் தொழிலிற் சிலவற்றைத்தவிர காத்யாயனிக்கு வேறொன்றும் தெரியாது. தவிரவும், இவ்வளவு அழகுபொருந்திய பெண்ணை யாதொரு குலஸ்திரீயும் வேலைக்காரியாக ஏற்றுக்கொள்ளமாட்டாளென்று அவளுக்கு நன்குதெரியும். ஆதலால், தன்னை வெகு விகாரஸ்வரூபியாய்ச் செய்துகொள்ளத் தீர்மானித்தாள்.

தன்னுடைய விலையுயர்ந்த உடைகளையும் நகைகளையும் களைந்துவிட்டு, ஓர் பிச்சைக்காரிபோல் கிழிந்து அழுக்கடைந்த கந்தைகளைத்தரித்து, சேற்றைவாரி மேலே பூசிக்கொண்டு, தலைமயிரையும் கலைத்து, சிடுக்குறச்செய்துகொண்டு, ஆடு அல்லது வாத்து மேய்க்கும் பெண்ணாகத் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வீடுவீடாய்ச்சென்று வேண்டினாள். அங்கிருக்கும் பெண்டிரனைவரும் இவ்வளவு விகாரரூபியான பணிப்பெண்ணை ஏற்றுக்கொள்ள மனஞ் சம்மதியாது அவளை வேண்டாமென்று சொல்லிவிட்டனர்.

காத்யாயனியும் வெகுநாள் அலைந்து திரிந்து வேலையொன்றும் அகப்படாமல் அலுத்துப்போய் கடைசியில் அடுத்த நாட்டிலுள்ள ஓர் இடைப்பாடியை அடைந்து அங்கு தன்னை வேலைக்காரியாய் ஏற்றுக்கொள்வார்களா என்று வினவினாள். உண்மையில் அவர்களுக்கும் ஓர் பணிப்பெண் வேண்டியிருந்தது. காத்யாயனியும் ஆடு மேய்ப்பவளாக எடுத்துக்கொள்ளப்பட்டாள்.

ஒருநாள் அவள் தனித்தவோர் புல்வெளியில் ஆட்டினங்களை மேய்த்துக் கொண்டிருக்கையில், தன்னை வெகு அழகுள்ளவளாகச் சிங்காரித்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணம் காத்யாயனிக்கு திடீரென்று உண்டாயிற்று. உடனே அருகிலோடும் அருவியில் இறங்கி அழுக்குப்போகக் குளித்துவிட்டு, தன்னுடன் கொண்டுவந்திருந்த சிறு மூட்டையை அவிழ்த்து அதனின்றும் தன்னுடைய விலையுயர்ந்த உடைகளையும் ஆபரணங்களையும் எடுத்து அணிந்துகொண்டு, தெய்வலோகத்தினின்றும் இழிந்துவந்த தெய்வப்பெண்போல் விளங்கினாள்.

அப்பொழுது, அவ்வழியே வேட்டையின்நிமித்தம் சென்ற அரசகுமாரன், இவ்வழகிய பெண்ணைக் கண்டு மோகித்து அவளருகிற்சென்று பார்க்க [illegible] நெருங்கினான். ஆனால் [illegible] பணிப் [illegible] ராஜகுமாரன் வருவதைக் [illegible] [illegible]ந்து, மரத்தினிடையே மறைந்தாள். மன்னன் மகனும் அவளைப் பின்தொடர்ந்தோடினான். ஆனால், ஓர் மரத்தின் வேர் இவன் காலில் இடறவே அப்படியே குப்புற விழுந்தான். விழுந்தவன் எழுந்திருந்து பார்ப்பதற்குள் பெண்மணியைக் காணக்கூடவில்லை.

காத்யாயனி இனி தான் க்ஷேமமாயிருப்பதாகக்கண்டுகொண்டவுடன் தன்னுடைய உடைகளையும் நகைகளையும் கழட்டிவிட்டு, பழையபடி கந்தையை யுடுத்தி கசமால இடைப்பெண்ணாய் ஆனாள். அரசகுமாரனோ பெண்ணைத் தேடித்திரிந்தும் அவளைக் காணாதவனாய், சிரமத்தினால் தாகவிடாய்கொண்டு, அவள் வேலைக்கமர்ந்திருக்கும் ஆயர்பாடியை யடைந்து தாகசாந்தி செய்துவிட்டு, ஆடுமேய்க்கும் அழகிய பெண்ணைப்பற்றி விசாரித்தான். இதைக்கேட்டவர்கள் வயிறு புண்ணாகும்படி வெகுநேரம் சிரித்துவிட்டு தங்கள் ஆடுமேய்க்கும் பெண் வெகு விகாரஸ்வரூபியென்றும் அவளைப்போன்ற கசமாலமுள்ள பெண் இம்மண்ணுலகிலேயே இல்லையாதென்றும் சொல்லிவிட்டனர்.

ராஜகுமாரன் இதில் ஏதோ யக்ஷிணிவித்தை நடந்திருக்கிறதென்றே எண்ணினான். இடைப்பெண் குடிசைக்குத் திரும்பிவருவதற்குள் அவன் அரண்மனை சென்றுவிட்டான். அந்திமாலை வந்ததும் இடைப்பெண் வீட்டுக்கு வந்துசேர்ந்தாள். எல்லோரும் அவளைப் பரிகாசம் செய்ய வாரம்பித்தனர்.

ஆனால், மன்னன் மகனோ வனத்திற்கண்ட பெண்ணையே நினைத்துக்கொண்டிருந்தான். அவளை அவன் ஒருவினாடிதான் பார்த்தான். என்றாலும், அவளைப் போன்ற அழகுவாய்ந்த பெண் தன் அரண்மனையிலேயே இல்லையென்று அவன் நிச்சயமாய்க் கருதினான். கடைசியில், அவளையே எண்ணி யெண்ணி ஏங்கி இரவும் பகலும் கண்துயிலாமல், சரியான உணவுமின்றி, தேகம் இளைத்துத் துரும்பாய்ப்போயிற்று. பெற்றோர்களுக்கு பிள்ளை இவ்வளவு மெலிவடைந்து கொண்டிருப்பதை நோக்க கவலை மிகுதியும் உண்டாயிற்று. என்ன உடம்பு என்றும் யாது வேதனை யென்றும் என்ன கேட்டும் ஒன்றுக்கும் இளவரசன் பதில் அளிக்கவில்லை. அவர்களும் வெகு பிடிவாதமாய்க் கேட்கவே, அவன் இடைப்பாடியில் ஆடுமேய்த்துக்கொண்டிருக்கும் பெண் தன் கையால் ஒருதரம் சமையற்செய்து போட்டால் தன் வியாதி தீருமென்று புகன்றான்.

அரசனுக்கு ராஜபுத்திரனுடைய விருப்பம் வெகு விசித்திரமாய்த் தோன்றிற்று. ஆனாலும், அதை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணி, சேரியிலுள்ள கோவலனையழைத்து புதல்வனுடைய விருப்பத்தை நிறைவேற்றும்படி ஆஞ்ஞாபித்தான். காத்யாயனி இவ்வாஞ்ஞையைக் கேட்டு ஆச்சரியப்படவில்லை. உடனே அரண்மனைக்குச் சென்று, சமையலுக்கு வேண்டிய சாமக்கிரியைகள் எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு தனித்தவோர் அறைக்குட்சென்று தன் கந்தைகளைக் கழற்றிவிட்டு தானும் தேய்த்துக்குளித்துவிட்டு தன்னுடைய விலையுயர்ந்த ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு சமையலுக்காரம்பித்தாள். வெகு விசித்திரமான சித்திரான்னங்கள் பல தயார்செய்யப்பட்டன. அவைகளுள் ஒன்றில் தன் கையிலணிந்திருந்த முத்திரைமோதிரத்தை ஒளித்துவைத்துவிட்டு மறுபடி தான் கந்தையுடுத்தி விகார ஸ்வரூபங்கொண்டு தன் குடிசையை யடைந்தாள்.

பரிசாரகர்கள் மன்னன் மகனுக்கு சிற்றுண்டி பரிமாறினர். அவனும் வெகு ஆனந்தத்துடன் அவைகளைப் புசித்தான். அப்பொழுது ஒரு கவளத்திலிருந்து அந்த மோதிரம் அவன் கையில் தட்டிட உடனே அதையெடுத்துக்கொண்டு தன் தந்தையிடஞ் சென்று அம்மோதிரம் எச்சிறுமியின் கைவிரலுக்குச் சரியாயிருக்கிறதோ அப்பெண்ணைத் தான் மணக்கப்போவதாகக் கூறினான்.

உடனே அரசன் தன் நாட்டிலுள்ள ஸ்திரீகள் யாவரும்வந்து அம்மோதிரத்தைப் பரீக்ஷித்துப் பார்க்குமாறு விளம்பரப்படுத்தினான். ஊரிலுள்ள ஸ்திரீகள் யாவரும் பதினைந்து வயதுப் பருவமடந்தை முதற்கொண்டு அறுபது வயதுக் கிழவிவரை, ஸகல ஜாதியாரும் வந்து அம்மோதிரத்தை விரலிற்போட்டுப் பார்த்தனர். ஒருவருக்காவது அது பொருந்தவில்லை. மன்னன் மகன் மதிமயங்கினான். கடைசியில் இடைப்பெண்வந்து பரீக்ஷிக்கவில்லையென்று கூறி அவளை வரவழைத்தான். அவளும் கைவிரலை மட்டும் சுத்தஞ்செய்துகொண்டு வந்து மோதிரத்தைப் போட்டுப்பார்த்தாள். அதுவும் வெகு அழகாய்ப் பொருந்திற்று. ஆனாலும், அரசன் அவள் இடைப்பெண்ணென்றும், ஈனகுலத்து ஸ்திரீயென்றும் கூறினான். அதற்கு அவள் தான் ராஜபுத்திரிதானென்று சொல்லிவிட்டு, மற்றோரறைக்குட்சென்று குளித்துவிட்டு, தன் ஆபரணங்களையும் உடையையும் அணிந்துகொண்டு சபையோர் முன் தோன்றினாள்.

அவளைக்கண்ட யாவரும் பிரமித்து நின்றனர். மன்னன் மகன், வனத்தில் தான் கண்ட மடந்தையைத் தன்னை மணந்துகொள்ளுமாறு வேண்டினான். காத்யாயனியும் தன் பூர்வ விருத்தாந்தத்தை எடுத்துக் கூறித் தன் பெற்றோரை வரவழைக்கவேண்டுமென்று சொன்னாள்.

பிரபோதசந்திரனும் தான் முன்கோபத்தால் புகன்ற மொழியை நினைத்து, வெகுவாக வருத்தப்பட்டு, பெண்ணைத் தேடுமாறு நாலாதிக்கிலும் ஆட்களை யனுப்பினான். ஓரிடத்திலும் காணக்கிடைக்காமையால் மனம் நொந்து தன்னையே நிந்தித்துக்கொண்டிருந்தான். அவள் ஒருக்கால் இறந்துவிட்டாளோ வெனவும் ஐயுற்றிருந்தான். இப்படி யிருக்கையில், தூதன் ஒருவன் வந்து காத்யாயனியின் கல்யாணத்துக்கு மன்னனை யழைத்தான். அதைக் கேட்டவுடன் கண்ணிலான் கண்ணொளிபெற்றதுபோலவும், நித்தியதரித்திரன்பெருநிதி பெற்றதுபோலவும் பேரானந்தங்கொண்டு, தன் மூத்த பெண் ஸகிதம் கல்யாணத்துக்குப் புறப்பட்டான்.

விவாக மஹோற்சவம் வெகு கோலாஹலத்துடன் நடந்தது. ஆனால், பெருவிருந்து நடக்கையில் மன்னன் பிரபோத சந்திரனுக்கு உப்பின்றி உணவளிக்குமாறு காத்யாயனி உத்தரவிட்டிருந்தாள். அவ்வண்ணம் உணவு பரிமாறப் பெற்றதும் மன்னன் ருசியற்ற அன்னத்தை உண்ண மாட்டாமல் தவித்துக்கொண்டிருக்கையில், அருகிலிருந்த காத்யாயனி, "என்னப்பா! உங்களுக்கு உடம்பு ஸரிப்படவில்லையா? அல்லது உணவு தான் நன்றாயில்லையா? பிடியன்னங்கூட உண்ணவில்லையா?" என்றாள். அதற்கு, அரசன் "பெண்ணே! உணவு வெகு நன்றாய்ச் சமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உப்பு மட்டும் போதவில்லை. ஆதலால் ருசியற்றதாயிருக்கிறது" என்றான்.

காத்தியாயனியும், "கேட்டீர்களா அப்பா! அறுசுவையுள் உப்பின் சுவை வெகு அவசியமானது என்று நான் சொல்லவில்லையா? ஆதலால், நான் தங்களை உப்புக்குச் சமமாகக் கூறி, ரஸத்துள் உப்பின் ரஸத்தை எவ்வாறு நாம் நேசிக்கிறோமோ, அதுபோல் உம்மை நான் நேசிப்பதாகக் கூறினதற்கு, நான் உம்மைச் சரிப்பதாக எண்ணி, என்னை அரண்மனையினின்றும் ஓட்டினீரல்லவா?" என்று உரைத்தாள்.

பிரபோதசந்திரனும், அவள் கூறிய மொழிக்குத் தான் தப்பர்த்தம் கொண்டதற்காக வெகுவாக வருத்தமுற்று, அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். பிறகு, மன்னனுக்கு உப்புள்ள உணவே அளிக்கப்பட்டது.

G, ரத்நாதாசாரி.

ஸ்ரீமத் விராட்விஶ்வகர்மணே நம:

# விஶ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஶ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] 1915ளூ ஆகஸ்டுமீ [சஞ்சிகை 11

## ஒளிவளர் விளக்கு

சென்ற ஜூலை மாதத்தில் நமது சபா மண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களின் மொத்த எண்ணிக்கை. 1,021.

*
* *

காலஞ்சென்ற கோல்கொண்டா கிருஷ்ணப்பாவின் ஞாபகார்த்தமாக பல்லாரி நகரில் வைசிய இலவச போர்டிங் ஹோஸ்டல் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. பல்லாரியில் 3 வது பாரத்திலும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் வாசிக்க உத்தேசித்திருக்கும் பிள்ளைகள் மேற்கண்ட ஹோஸ்டலில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அவ்வூர் ஹைகோர்ட்டு வக்கீல் மிஸ்டர் V. கிருஷ்ணம் செட்டிக்கு விண்ணப்புஞ் செய்துகொள்ளவேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது. விஸ்வகர்ம மாணவருக்கென்று சென்னையில் மட்டுமாவது இவ்வித ஹோஸ்டல் (விடுதி) ஏற்படவேண்டிய அவஸியம் சிறிது சிறிதாகப் புலப்பட்டுவருகிறது.

*
* *

பம்பாயிலே பன்னியா வகுப்பு வைசியர்களில் பிரபலஸ்தராகிய சேட் விட்டல்தாஸ் கோபாலதாஸ் என்பவர் ஹிந்துச் சிறுவர்களின் படிப்புக்கென்று ஒரு லட்சம் ரூபாய் உயிலெழுதிவைத்திருக்கிறார். அந்தத் தொகையின் வட்டியைக்கொண்டு ஹிந்துச் சிறுவர்களின் படிப்புக்கு உதவி செய்யப்படும். அந்த கனவான் ஹிந்துச் சிறுவர்களின் படிப்புக்காக லட்சம் ரூபாய் எழுதிவைத்திருப்பதுந் தவிர, பன்னியா வகுப்புப் பிள்ளைகள் வாசிக்கும் போர்டிங் ஸ்கூல்களின் நிதிக்கு ரூபா 5000-உபகரித்திருக்கிறார். வித்தியாதானமே மற்றெல்லா தானங்களினுஞ் சிறந்ததென்பதை யறிந்து பிறஜாதித் தர்மவான்கள் நடந்துவருவதுபோல் சுஜாதித் தனதிபதிகளும் செய்ய முன் வருவார்களென்று எதிர் பார்க்கிறோம்.

*
* *

1914-ம் வருஷத்தில் சென்னையில் வேலை செய்து கொண்டிருந்த தொழிற்சாலைகளைப் பற்றிய ரிபோர்ட்டினால், ஷை வருஷத்தில் இந்தமாகாணத்தி தொழிற்சாலைகளின் தொகை 354-லிலிருந்து 386-க்கு உயர்ந்ததென்று தெரியவருகிறது. ஆனால், புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட 32-தொழிற்சாலைகளும் இதுவரையிலும் ஆரம்பித்து செய்யப்படாத புதுத் தொழிலையோ தொழில்களையோ செய்ய ஸ்தாபிக்கப் பட்டவைகள் அல்ல. ஏற்கனவே செய்யப்பட்டுவரும் தொழில்களில் சிலவற்றைச் செய்ய ஸ்தாபிக்கப் பட்டவைகளேயாகும். 15-நெல் குத்தும் தொழிற்சாலைகளும், 2-ரெயில்வே தொழிற்சாலைகளும் 7-பருத்தி விதை கழற்றும் தொழிற்சாலைகளும், ஒரு சணல் தொழிற்சாலையும், ஒரு தோல் தொழிற்சாலையும், ஒரு ஓடறுக்கும் தொழிற்சாலையும், 3-அச்சுக்கூடங்களும் பிரஸ்தாப வருஷத்தில் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டன.

## சித்திரச் செதுக்கு வேலை

(176-வது பக்கத் தொடர்ச்சி)

" சத்திய வசனன் " எழுதியது

### ஆயுதங்கள்

3. மரசித்திரச் செதுக்கு வேலைக்காரர்கள் உபயோகிக்கும் ஆயுதங்கள் பூர்வீகமாக உள்ளவையே. அவைகள் கைப்பிடியில்லா உளிகளும் அர்த்த சந்திரனைப்போல் கூரிய நுனியையுடைய செதுக்கு ஆயுதங்களுமேயாம். கன்னடத்து செதுக்கு வேலைக்காரன் நான்கு தரகதியான மேற்குறித்த உளிகளையும் மூன்று செதுக்காயுதங்களையும் உடைத்தாயிருக்கிறான். அவைகள் அகலத்தில் $\frac{1}{4}$-முதல் $\frac{1}{2}$-அங்குலம் வரையில் வித்தியாசப்பட்ட தாகதியாயும், நீளத்தில் ஆறு அங்குலமுள்ளவைகளாயும் இருக்கின்றன, ஓர் மரத்துண்டை தாக்கும் ஆயுதமாக உபயோகிக்கிறார்கள்.

ஆயுதங்கள், ஐரோப்பிய எழுகினால் செய்யப்பட்ட போதிலும், இந்தியக் கொல்லர்களால்தான் நிருமிக்கப்படுகின்றன். வேலைக்காரர்களே கூரியதாய்த் தீட்டிக் கொள்ளுகிறார்கள். துளைபோடும் வேலைகளுக்கும்கூட இவ்வாயுதத்தையே உபயோகிக்கிறார்கள். துளை போடும்போது சாதாரண வில்வளைவான துளைபோடும் கருவியை உபயோகிக்கிறார்கள். ரம்பத்தை எப்போதும் உபயோகிக்கிறதில்லை. சித்திரவேலை எதின்மேல் செய்யவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டு இருக்கிறதோ அந்த மரத்துண்டை திரண்ட உருவாக்குவது அவசியமென்று தோன்றினால் அப்போது கடைச்சல் பட்டடையை உபயோகிக்கிறார்கள்.

கன்னட கடைச்சல் பட்டடைக்கு 'கடவா' என்று பெயர். அதில் வில்கயிற்றின் உதவியால் வேலை செய்கிறார்கள். கயிறுக்குப் பதிலாய் பதனிடாத் மான்தோல் வாரை உபயோகிக்கிறார்கள். அந்த வாரினால், எந்தத் துண்டு வேலை செய்யப்படுவதற்கு இருக்கிறதோ, அந்தத் துண்டைச் சுழலச் செய்கிறார்கள். கடைச்சல் பட்டடை இரண்டு பாரமான மரத் திம்மைகளால் ஆக்கப்பட்டிருக்கிறது. அந்த மரத் திம்மைகளின் உட்புறங்களில் உறுதிப்பாடான ஆணிகள் கடாவப்பட்டிருக்கின்றன. அவ்வாணிகளின் கூரிய முனைகளில், வேலை செய்யப்படவேண்டிய துண்டைப் பொருந்த வைக்கிறார்கள். இந்தத் துண்டை மேல்விவரித்த வில்லில் பொருந்திய வாரைக்கொண்டு சுழற்றுகிறார்கள். வேலைக்காரன் வலதுகையினால் வில்லை முன்னதாகவும் பின்னாகவும் இழுக்கிறான். இடதுகை கடையும் உளி (அலகு) யைப் பிடித்துக்கொண்டிருக்கிறது. காலினால் பட்டடையை அசையாமல் அழுத்திக்கொள்ளுகிறான். இம்மாதிரியாக, சாதாரணமாய் இரண்டு ஆட்கள் வேண்டியவேலையை உதவியில்லாமலே தனியாய்ச் செய்து முடிக்கிறான். இரண்டு மனிதர் வேண்டியிருக்கிற வேலை ஒருவனாலேயே முடிக்கப்படுகிறது.

காடு முரடான பாகத்தைச் சுத்தப் படுத்துவதற்காக தேங்காய்ப் பட்டையைத் தேய்க்கிறார்கள். மரத்தில் இயற்கையாக அமைந்துள்ள எண்ணெய்ப் பசையே மெருகைக் கொடுக்கிறது. சூரத்தில் சாதாரண (Boot Brush) பூட்ஸ் புருஸால் துடைத்துச் சுத்தப்படுத்துகிறார்கள். சூரத் சித்திரவேலைக்காரன் அநேக ஆயுதங்களை உபயோகிக்கிறான். மயாசாரியர்களுக்குரிய இரம்பம், இழைப்புளி யல்லாமல், (Tankna) டங்கனா என்று சொல்லப்பட்ட நகத்தைப்போல் வளைவான நுனியையுடைய 1/16 முதல் $\frac{1}{4}$-அங்குல அகலத்தையுடைய 10-ஆயுதங்களையும், பானியா (Pania) என்கிற 16-செதுக்கு உளியையும் (இதில் அதிக நுட்பமானவை கூராக்கிய ஊசிக்கு சிறிது அதிகமாயிருக்கிறது. அதிக பருமனானது $\frac{1}{4}$-அங்குலமுள்ளது) எட்டு ப்ரமாஷான சிறு உளிகளையும் சித்தர்வன டங்கனா என்கிற வளைவு செதுக்காணிகளையும், ஆர் (ar) என்கிற ரேகைகள் உண்டாக்குகிற மூன்று சிற்றுளிகளையும் உடைத்தா யிருக்கிறான். இவ்வகளில் சில ஊன்று போகரைகளே!

செதுக்கு சித்திரம் செய்யப்பட்ட இரண்டு பாகத்திற்கு இடையே உள்ள சாதாரண பாகத்தை அலங்காரப்படுத்த இவைகள் உபயோகம். ஒன்று சிலுவையைப்போன்ற உருவை ஊன்றும், மற்றொன்று ஒரு விருத்த உருவை ஊன்றும், வேறொன்று அர்த்த விருத்த புள்ளிகளை யுண்டாக்கும். இம்மாதிரிதான் மற்றவையும். இரேகைசிற்றுளி முக்கோண வடிவ நுனியையுடையது. இலை புஷ்பங்களின் உருவை நிருமிக்கும்போது இலைகளின் நரம்புகளை உண்டாக்குவதற்கு உபயோகப்படத்தக்கது. இரேகை சிற்றுளிகள் தான் கைப்பிடியை யுடையன. கைப்பிடியோடு கூட நான்கு அங்குலந்தானிருக்கின்றன. இரம்பம் மாத்திரந்தான் இங்கிலாந்தில் செய்யப்பட்டது. மற்றெல்லா ஆயுதங்களும் இந்தியாவில் செய்யப்பட்டன. ஆங்கில எஃகினால் செய்யப்பட்டவை சித்திர வேலைக்காரனாலேயோ அல்லது கொல்லனாலேயோ செய்யப்பட்டன. கொட்டாப்புளி என்று சாதாரணமாய் வழங்குகிற தாக்கு மரத்துண்டு 9-அங்குல நீளமுள்ளது. ஒரு சதுர அங்குலத்திற்கு சிறிது அதிகமாயிருக்கும்.

### சித்திர வேலைக்காரரும் அவர்கள் வேலையும்

4. விசாகப்பட்டணமும் தென் கன்னடமும் சந்தன மரச் சித்திரச்செதுக்கு வேலைக்கு பேர்போன இடங்கள். ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன்னிருந்து இவ்விரு இடங்களும் இக் கைத்தொழிலில் பிரக்யாதி அடைந்தன. இந்த கைத்தொழில் ஒரு குடும்பத்தாரால் பல தலைமுறையாக செய்யப்படுகிறது. சித்திரத் தொழில் ஒரு ஜாதியார்க்கு கைவசமாயிருக்கிறது. 12-வயதிலேயே பிள்ளைகளுக்கு வேலையைக் கற்றுக் கொடுக்கிறார்கள். காலையில் 6-மணிமுதல்10-மணி வரையிலும் மாலையில் இரண்டு அல்லது மூன்று மணியும் வேலை செய்கிறார்கள். வேலை அதிக நுட்பமானபடியால் கண்களின் பார்வையை மிகக் கவர்ந்து கொள்ளுகிறது. சந்தன மரத்திலுள்ள தைலம் கண்களுக்கு கெடுதியை விளைவிக்கிறதாகச் சொல்லப்படுகிறது. வேலைக்காரர்கள் அதிக சாமர்த்தியத்தைக் காட்டுகிறார்கள். உயிர் வாழ்க்கையில் சிக்கனத்தைக் கவனிக்கிறவர்களல்ல. பல முறை அவர்களால் செய்யப்பட்ட வேலை ஐரோப்பிய பொருட்காட்சியில் வைக்கப்பட்டு வெகுமதி நாணயத்தை அடைந்தது. சாதாரணமாய்க்கிராக்கிக்காரர்கள் உத்திரவின்மேல்தான் சாமான்கள் செய்யப்படுகின்றன. விக்கிரயத்திற்கு சாமான்கள் செய்து வைக்கப்படுகிறதில்லை. தயாராக உள்ள சாமான்கள், உத்திரவு கொடுத்தவர்கள் மறுதலித்த சாமான்கள் இவற்றின் வர்த்தகம் ஜில்லா உத்தியோகஸ்தர்கள் அனுமதிமேல்தான் நடக்கவேண்டும்.



### செய்யப்படு சாமான்கள்.

1. கடவுளர் தனி பிம்பங்கள், 2-கடவுளர் கூட்ட பிம்பம், 3-பெட்டிகள், 4-விசிறி, 5-மந்தகாசம், 6-சிங்கம் சுமந்த அரியணை, 7-அபிடேகத்தொட்டி, 8-இடப உருவுள்ள விபூதிப் பெட்டி, 9-மகரதாயப் பலகை, 10-தேவாலய வாகன வகையராக்கள், 11-புகைப்பட சட்டம், 12-இன்னும் மரங்களில் என்னென்ன செய்யலாமோ அச்சாமான்களெல்லாம் செய்யப்படுகின்றன. எம்மாதிரியைக் கொடுத்தாலும் அம்மாதிரி செய்யவல்லவர்உளர். தங்களுக்கு வழக்கமான மாதிரியை மரத்திலேயே பென்சிலினால் எழுதிக்கொண்டு வேலைக்கு ஆரம்பிக்கிறார்கள். புதுமாதிரியாக இருந்தால் அம்மாதிரியை முதலில் கடிதத்தின்மேல் எழுதி, பிறகு அதின்மேலேயே தேங்காய்க் கொட்டாங்கிச்சியைச் சுட்ட கரியை அராபிய பிசினில் கலந்துசெய்த, இங்கியால் எழுதுகிறார்கள். புருசுக்குப் பதிலாக நேர்த்தியான கோரைப்புல்லை வைத்துக்கொள்ளுகிறார்கள்.

அநேகமாய் சித்திரச் செதுக்குவேலைகள் துவாரம் விடாமல் செய்யப்படுகின்றன.

வேலைக்காரர்களுக்கு அதிக விருப்பமான சித்திர வேலை:—வலப்பக்கத்தில் கணபதியும் இடது பக்கத்தில் பார்வதியையும் உள்ள சிவன் உருவம். மூலைகளில் அனுமனுடைய உருவமும் கருடனுடைய உருவமும் இருப்பது. இவைகளுக்குமேல் நான்கு கம்பளங்களால்தாங்கப்பட்டவிதானம் இருப்பது. பிரதிமைகளின் பின்பாகமும் விதானமும் இலை கொடிகளால் சித்திரிக்கப்பட்டிருப்பது. சாதாரணமாய் சிறு சாமான்கள் 1-முதல் 20-ரூபாவரையில் விலை கொள்வன. உற்சவரதமாதிரியும கட்டில் சாமான் மாதிரியும் ரூபா 300-க்கு மேல்பிடிக்கும். ஒருவருடத்திற்கு 4-பேருக்கு விடாமல் வேலையிருக்கும். அமதாபாத் வேலையெல்லாம் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஷாப்புகளில் செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது. இந்திய கனவான்களெல்லாம் சிற்பியரிடத்தில் நேராய்ச்செய்து கொள்ளுகிறார்கள். அமதாபாத்து மாதிரிகளெல்லாம் வழக்கபரடான செடிகொடி வகைராக்கள். உயிர் வாழ்வனவற்றின் உருவையும் மானிட உருவையும் சித்திரவேலையில் சேர்க்கிறதேயில்லை.

மாதிரி செடிகொடி வகைராவில் சேராவிட்டால், மிக சூழ்ச்சியான நாற்கோண முக்கோண உருவங்களேயாகும். இஃது மகம்மதியரின் கல்வேலை வழக்கத்தை அடுத்திருக்கிறது. சித்திரவேலையில் விலங்குகள் மானிட உருக்களைச் சேர்த்தல் மகம்மதியருக்குப் பிடிக்காது. ஆகையால்,வேலைக்காரர்கள் அதை விட்டு விட்டார்கள். அதற்கு பதிலாக அழகிய கட்டடங்களை மாதிரிகளாக வைத்துக் கொள்ளுகிறார்கள். வழக்கமான மாதிரியாதெனில், ஓர் மசூதியின் தாழ்வாரமும் பலகணியுமாம். வேலைக்காரர்கள் சுதார் ஜாதியார். தலைமுறை தலைமுறையாக இதே வேலைதான் அச்சாதியார் செய்வது. பிள்ளைகளுக்கு இயற்கையிலேயே வேலையில் ஞானம் இருக்கிறது. சாமர்த்தியத்திற்கும் அனுபோகத்திற்கும் தக்கபடி வேலைக்காரர்களுக்கு 8-12-16-20 அணா ஒருநாள் கூலியாகிறது.

சுதார்ஜாதியில் அறுவகை உண்டு. சித்திரவேலை செய்வோர் மேவதசுதார் (Mevada Sutar) வகுப்பினர். மேவத சுதார்கள் சித்திரச் செதுக்கு வேலைக்காரர்களின் மூலபுருஷர்கள். இவர்தள், விஸ்வகர்மாவின் சந்ததி என்கிறார்கள். விஸ்வகர்மா — தக்ஷா — மயப்ரம்மா அல்லது தாரு சிற்பியர் சித்திரச் செதுக்குத் தொழிலாளர். மாலிசுதார்கள் மரத்தில் விளையாட்டுக் கருவியாக மாட்டுவண்டியும், அம்பாரி சுமத்திய யானையும், நாட்டியப் பெண்ணும் செய்கிறார்கள். மூச்சிகள் வர்ணம் கொடுக்கிறார்கள். அவைகள் அதிக வேலைத்தரமானவையல்ல. ஆனால்,சாதாரணவிளையாட்டுக் கருவியைக்காட்டிலும் வேல்த்திறத்தில் மேன்மையானவை. அவைகள் மிகுந்த சரசமானவை. "சேவன்" மரத்தினால் செய்யப்படுகின்றன.

பம்பாய் கறுப்பு மரசாமான்களுக்கு ஐரோப்பாவில் இப்போது கிராக்கியில்லை. ஆகையால்,பம்பாயிலுள்ள வேலைக்காரர்களெல்லாம் இங்கிலாந்திய மாதிரிகளைப் பின்பற்றி வேலைசெய்கிறார்கள். பம்பாய் வேலைகளிலெல்லாம் சித்திரச் செதுக்கு வேலைகள் செய்யப்பட்ட பரஸ்தலபாகங்களை துளைத்தெடுத்து விடுகிறார்கள். மற்ற இடங்களில் செய்யும் வேலைகளில் பரஸ்தலங்கள் துளைக்கப்படுவதில்லை. துளைக்கப்படுவதற்கு பதிலாக அவ்விடங்களில் இலை கொடி ரூபத்தைச் செதுக்கி வைக்கிறார்கள். பம்பாய்ச் சாமான்களில் இலை கொடிகளையும் புராண விலங்கு புட்களின் உருவத்தையும் அமைத்திருப்பதைப் பார்க்கலாம். இப்போது, பம்பாய் இராஜ்யத்தில் விலையுயர்ந்த சித்திர சாமான்களை வாங்குகிறதில்லை. அதினால், வேலைக்காரர்கள் வேலைத்திறம் குறைந்த சரசமான சாமான்களைச் செய்யத் தலைப்பட்டார்கள்.

இப்போது, ஐரோப்பிய ஷாப்புக்காரர்கள் பூர்வீக செதுக்கு சித்திர மரங்களை சிதையாவண்ணம் இந்தியர்களைக்கொண்டு சாமான்களைச் செய்யச் சொல்லுகிறார்கள். மாதிரிகள் கோயில் சித்திர வேலைகளினின்றும்

குஜராத் மசூதி சித்திர வேலைகளினின்றும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. பெல்காம் ஜில்லாவில் மானிடர் விலங்குகள் பட்சிகள் பழங்கள் இவைகளின் உருக்களைச் செய்து வர்ணம் கொடுக்கிறார்கள். அவைகள் இயற்கைப் பொருள்களைப் போலவே இருக்கின்றன. 'போல்கி' மரத்தில் செய்யப்படுகின்றன. அது இலேசான மரமாம். வர்ணத்தூளைக் கோந்தில் இழைத்துப் பூசுகிறார்கள். பெரிய பட்டணங்களில் சித்திர வேலைக்காரர்கள் செறிந்திருந்தபோதிலும், இந்தியாவில் எவ்விடங்களிலேயும் மரவினைச் சிற்பாசாரியர்கள் வீடுகளை முக்கோண நாற்கோண முதலிய சித்திர வேலையால் அலங்கரிக்கிறார்கள். அச்சிற்பாசாரியர்கள் சிலவேளைகளில் அதிக சாமர்த்தியத்தைக் காட்டுகிறார்கள். ஆயுதங்களை புவனகர் (கத்தியவாரின் ஓர் பட்டணம்) கல்லில் தண்ணீர் தடவிக் கூரியதாய் தீட்டிக்கொள்கிறார்கள். எண்ணெய் தடவித் தீட்டுகிறதில்லை.

பெரும் பட்டணங்களில் கூட சித்திரச் செதுக்கு வேலைக்காரர்களுக்கு வேலை எப்போதும் கிடைக்கிறதில்லை. வேலைக்காரர்கள் என்னவோ நல்லஸ்திதியில் தான் இருக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் சித்திர மரவினை மாத்திரம் செய்கிறவர்கள் அல்ல. சித்திர வேலை அகப்படாதபோது வேறு வேலையைச் செய்கிறார்கள். வேலைக்காரர்கள் சாமான்களை முன்னதாகச் செய்து விற்கும் முயற்சியில்லாதவர்கள். சிலவேளைகளில் சாமான்களை விற்கிறார்கள். அவைகள் வேலைத்தரத்தில் மிகக்குறைந்திருக்கின்றன. வேலைக்காரர்கள் அதிக மெதுவாய் வேலையைச் செய்கிறார்கள். துரிதமாய்ச் செய்யும்போது வேலைத்தரம் குறைந்துபோகிறது. அவர்கள் செய்யும் முறையும் ஆயுதங்களுமே இதற்குக் காரணம். வேலை மெதுவாய் நடப்பதினாலேயும் கூலியும் அதிக குறைவாயிருத்தலினாலேயும் விற்கப்படும் சாமான்களின் கிரயம் அதிகப்படுகிறது.

ஓர் ஐரோப்பிய வேலைக்காரனாவது அல்லது ஜப்பானிய வேலைக்காரனாவது சிற்றுளியினாலேயும் செதுக்கு ஆயுதத்தினாலேயும் சிறிது படபடப்பாய் வேலை செய்வதினால் அதிக வேலை ஆகிறது. வேலை அதிகமாய் நடக்க வேண்டினால் கொட்டாப்புளியினால் தட்டிச் செதுக்காமல் முழங்கையின் வலிவையும் மணிக்கட்டின் உறுதிப் பிடியையும் உபயோகித்து வேலை செய்ய வேண்டும். இதற்கு ஆயுதங்கள் மிகுந்த கூரியவையாயிருக்கவேண்டும். உறுதியாய்ப் பிடிக்கச் சௌகரியமான நீண்ட பிடிகள் ஆயுதங்களுக்கு இருக்க வேண்டும். இந்தியச் செதுக்குச் சித்திர வேலைக்காரர்கள் கொட்டாப்புளியால் தட்டித்தட்டி வேலை செய்கிறார்கள். ஆயுதங்களும் கூரியவாயில்லை. ஆயுதங்கள் கைப்பிடியற்றவையாயிருக்கின்றன. ஐரோப்பாவிலுள்ள சிற்றுளி செதுக்குளிகளைப் போலிராமல் கூரிய நகங்களைப் போலிருக்கிறது. ஆயுதக்குறைபாட்டைக் கவனிக்கும்போது, இந்தியச் செதுக்கு வேலைக்காரன் வேலை மிகச் சிலாகிக்கத்தகுந்ததே. வேலை உயர்ந்ததாயிருக்க வேண்டுமானால் இணைத்தல் நேர்த்தியாயிருக்க வேண்டும். சித்திரிக்கப்பட்ட பாகமும் சித்திரக்கப்படாத பாகமும் அளவாக விரவி இருத்தல் வேண்டும்.

பொருளின் இடமெங்கும் சித்திர வேலையை நிரப்பி வைப்பதினால் வேலை அந்தமூறும் என்று இந்தியச் சிற்பியர்கள் கருதுகிறார்கள். சித்திர வேலைக்கு இடையிடையே சாதாரண வெற்றிடங்கள் இருந்தால், வேலை அந்தப்பாடுறும் என்று ஐரோப்பியர் கருதுகிறார்கள். ஐரோப்பிய மாதிரியைப் பின்பற்றி இப்போது வீடுகளில் சித்திரவேலையைச் செறித்து வைத்தலையே விட்டு விட்டார்கள். சித்திரவேலை உணர்ச்சியின் சுவாரஸ்யம் தேசந்தோறும் மாறுபடும். ஐரோப்பியர் இடைவெற்றிடம் இருந்தால் அழகுண்டாகும், வேலை சீக்கிரமாக முடியும், கூலியும் கட்டி வரும், வேலை அறைகுறையாயுமிராது என்கிறார்கள்.

இந்தியச் சித்திரவேலையின் குறைபாடு அழகின் ஞானமின்மையையும் வேலையின் சுயப்பாடின்மையையும் சார்ந்திருக்கிறது. இந்தியர்கள் வேலையை அன்னியர் வாங்கவேண்டுமானால் அவர்கள் மனோபாவ உணர்ச்சியின்படி வேலைசெய்யவேண்டும். வேலையின் உண்மை உணர்ச்சி அதிகப்படவேண்டும்! பழையமாதிரியையே பின்னும் பின்னும் செய்யாமல் நூதன மாதிரிகளைக் கைக்கொள்ளவேண்டும். அதிக சீக்கிரமாய் வேலை முடிக்கப் பார்க்கவேண்டும். மற்ற விஷயங்களும் அநுகூலமாயிருந்தால் சித்திரவேலைக்காரரின் சரசமான கூலிக்கட்டணம், இதர தேசத்து வேலைக்காரர்களை நிராகரித்து இந்திய வேலைக்காரனுக்கு மிகுந்த பயனையும் வர்த்தகமூல சௌகரியத்தையும் கொடுக்கத்தக்கது.

மரத்துண்டுகளை வேலைக்குச சௌகரியமாய்த் திருத்திக்கொள்ளும் பிரதம வேலைகள் கையினால் செய்யப்படாமல் யந்திரமூலமாய்ச் செய்யப்பட்டு, அதிக விருதாவான காலக்கழிவை நீக்கி, இந்தியமாதிரி யல்லாது வேறு வேறு மாதிரியில் சித்திரவேலை செய்யப்பட்டால் இந்தியச் சித்திரவேலையை உலகெங்கும் வேண்டுவார்கள். ஏனெனில், அப்போது ஐரோப்பிய சாமான்களின் விலையில் பாதிவிலைக்கு அதைப்போன்ற இந்திய சாமான்கள் அகப்படும். சித்திரவேலையும் சிதையாதிருக்கும். சிற்பியரும் செல்வமோங்கிச் சிறப்புறுவார்கள்.

---

மிக்க செல்வம் படைத்த ஒரு பிரஞ்சு வியாபாரிக்கு ஐந்து குமாரர்கள் உண்டு. அந்த ஐவரும் போர்முனை சென்று ஒவ்வொருவராய்க் கொல்லப்பட்டுப் போயினர். அவர்களில் கடைசிப் பையன் இறந்ததை அவ்வியாபாரி கேட்டவுடனே, "எனது ஐந்து குமாரர்களும் ஜன்மதேசத்திற்கு ஆவியைப் பலிகொடுத்தனர். ஆகவே, நானும் எனது உயிரை என் தேசத்துக்குக் கொடுக்கவேண்டும்" என்று சொல்லிப் போர்முனைக்குப் போய், இப்பொழுது பிரஞ்சுப் போர்முனையின் முன்னரண்களில் இருந்துவருகிறார்.



## ஸ்ரீராமருக்கு 129-தேவிமார்

*விவேக திவாகரன்*

சகல ஜனங்களையும் காப்பாற்றுவதன் பொருட்டு அவதரித்த ஸ்ரீராம மூர்த்திக்கு லட்சுமி சொரூபமாகிய சீதாதேவி மாத்திரம் தேவியாரா அல்லது வேறு பத்தினிமார்களு மிருந்தார்களா? என்னும் விஷயத்தைப் பற்றி விசாரிக்கலாம்.

ஸ்ரீமத் ராமாயணம் பாலகாண்டம் 73-வது சருக்கத்தில் சீதா தேவியின் பாணிக்கிரஹணம் ராமரால் செய்யப் பட்டதென்று வால்மீகி ரிஷியினால் சொல்லப்பட்டிருப்பதைப்போல், வேறு ஸ்திரீகளின் பாணிக்கிரஹணம் அவரால் செய்யப்பட்டதென்று அயோத்தியா காண்டம் முதலான காண்டங்களில் சொல்லப்படவில்லை. ராம நாமங்களில் சீதாபதி ஜானகிபதி முதலான சப்தங்களிருக்கின்றனவன்றி வேறு தேவி நாமமில்லை. ஸ்ரீராமசஹஸ்ர நாமத்தில் "ஏகபத்னி விரதன்" என்று கூறப்படுகிறது. ராமாயணத்தில் சில சந்தர்ப்பங்களில் (ஸ்ரீராமர்) தேவி விஷயப்ரயோகங்களில் பஹுவசனம் (பன்மை) ஆகக் கூறப்பட்டிருப்பினும் மரியாதைக்காக வால்மீக ரிஷியினால் பஹுவசனம் (பன்மை) உபயோகப் பட்டிருக்கிறதே ஒழிய சீதா பிராட்டியாரைத் தவிர வேறு தேவிமார்களும் உண்டு என்பதை விளக்குவதற்காக அல்லவென்று வியாக்கியான கர்த்தர்கள் எடுத்தோதியிருக்கிறார்கள்; ஆனதால் சீதா தேவியார் ஒருவரே தேவி என்று நிச்சயிக்க வேண்டியிருக்கிறது.

அப்படியிருப்பினும் ஸ்ரீராமபிரானுக்கு சீதையைத் தவிர வேறு தேவிமார்களும் உண்டு என்பதற்குச் சில உதாரணங்களும், மேற்கூறியவற்றிற்குச் சமாதானமும் இருக்கிறது.

இராவணன் முதலான ராக்ஷஸர்களின் நாசத்துக்கு முக்கிய ஹேதுவாக இருந்த சீதாதேவியின், விவாகத்தைப்பற்றி மாத்திரம் வால்மீக ராமாயணம் கூறிற்று. வேறு தேவிமார்களின் விவாகத்தைப்பற்றி "தௌர்வாச ராமாயணம்" முதலிய கிரந்தங்கள் அந்தந்த இடங்களில் கூறுகின்றன.

அச்வமேதயாகம் செய்பவருக்கு மூன்று பெண்சாதிகள் அவசியமாயிருக்கவேண்டியது. யாகம் செய்விப்பவர்களின் பத்தினிகள் அவரவர்களின் கிரியைகளுக்கு ஒத்து, மஹிஷி, பரிவிருக்தி, வாவாதா என்னும் பெயர்களுடன் தனித்தனியாய் விவகரிக்கவேண்டியதென்று வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதே மாதிரியாய் பாலகாண்டத்தில் அசுவமேத யாகத்தைப்பற்றிச் சொல்லும் 14-வது சர்க்கத்தில், கௌசலியை முதலானவர்கள் மஹிஷி முதலான சப்தங்களால் விவரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதே மாதிரியாய் ஸ்ரீராமரால் அனுஷ்டிக்கப்பட்ட அசுவமேத யாகங்களில் அவருக்கு மூன்று பத்தினிகள் இருந்திருக்கவேண்டியது. மேலும், பிரமாண்ட புராணம், வால்மீக சரித்திரம், தௌர்வாச ராமாயணம் முதலான கிரந்தங்களில் அவ்வவ்விடங்களில் சீதாதேவியின் விவாகத்தின் பின் அவளுடைய அனுமதியைப்பெற்று, பூ, நீளை, விமலை முதலான உத்தம ராஜகன்னிகைகளின் பாணிக்கிரஹணம் ஸ்ரீராமபிரானாற் செய்யப்பட்டதென்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகட்கு ஆதாரமான வசனங்களைக் கொடுக்கிறேன்.

தூர்வாச ராமாயணத்தில்.—சலோகம் "கோசலோ பானுமந்தச்ச மகதச்சித்ரபூஷண, யுதாசித்கே யாதீசோ, காசிநாதப்ரதாதன :" கோசலன், பானுமந்தன், மகதன், சித்ரபூஷணன், யுதாஜித், கேகயாதீசன், காசிநாதன், பிரதானன் முதலான எட்டு அரசர்கள், நல்ல லட்சணங்களோடு கூடியவர்களாயும், சர்வாபரண சம்பன்னர்களாயும், ஸ்ரீராமரிடத்தில் மோஹத்தையுடையவர்களாயும், அவர்கள் பிறந்தகாலத்தில் ஸ்ரீராமருக்கு வேண்டுமென்று கேட்கப்பட்டவர்களுமான

(பாஞ்சராத்திராகமம், பத்மஸம்ஹிதை)

சீதா சீதம் தசங்காசா, பூமிர் நீளா மஹாயசா,
விமலோத கர்ஷிணீஞான க்ரியாயோக பிதாசஸா,
ப்ரஹசந்தித தேசானு நுக்ரஹா துளசிபலா
சாந்திஸ்ஸரஸ்வதி ப்ரீதி, ரதிகாந்தி ப்ரபாவதி-
பத்ரா சுபத்ரா விஜயா, ப்ராஜ்ஞாகாந்திர் தயாமதி,
மஹீபலா மதுமதி, பத்ராங்கி பதமினிஹ்யுஷா
லஜ்ஜாப்ரபாஸா வஸுதா ரேவதி சுபலாகலா
இத்யாதி புண்ய நாரீணும், நவவிம்சோத்தரம் சதம்.

சீதை, பூ, நீளை, விமலை, உத்கரிஷிணி, ஞானக்கிரியை, யோகை, ப்ரஹசந்தி, சுக்கிரை, குலவிமலை, சாந்தி, சரஸ்வதி, ப்ரீதி, ரதி, காந்தி, ப்ரபாவதி, பத்திரை, சுபத்திரை, விஜயை, ப்ராஜ்ஞானை, தயைமதி, மஹீ, பலை, மதுமதி, பத்ராங்கி, பதுமினி, உஷை, லஜ்ஜை, பிரபா, வசுதை, ரேவதி, சுபலை, கலை முதலான 128-புண்ணிய மாதர்களை அதாவது ஒவ்வொரு அரசனும் 16-பெண்கள் வீதம் 8-பேரும் கொடுத்தார்கள். அப்பெண்களை ஸ்ரீராமரானவர், வசிஷ்டர் வாமதேவர் முதலான ரிஷிகளின் சந்நிதானத்தில் அக்கினி சாக்ஷியாய் சீதாபிராட்டியாரின் அநுமதியின் பேரில் கலியாணம் செய்துகொண்டு ஏகபத்னிவிரதனாய் இருந்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், ஸ்ரீராமருக்கு அநேக ஸ்திரீகள் உண்டென்று தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. தவிரவும், பிரஹ்மாண்ட புராணத்தில் பிரமநாரதசம்வாதத்தில்—நூறு பெண்சாதிகளோடு கூடினவனும், பத்மநாபனும், சதுர்புஜனுமாயிருக்கிற ஸ்ரீராமனை—என்று சொல்லப்பட்டிருப்பதானது முற்கூறிய தூர்வாச ராமாயணத்துக்கு ஒத்திருக்கிறது.

பிரமாண்ட புராணத்தின் வசனத்தில் ஸ்ரீபூநீள என்பதில் ஸ்ரீ என்று சொல்லியிருப்பதானது லட்சுமி சொரூபிணியாகிய சீதையைக் குறிக்கிறது. பூ, நீளை

சப்தத்தால் கோசலாதி ராஜாக்களால் கொடுக்கப்பட்ட பெண்களைக் குறிக்கிறது. சத சப்தம் 100-பெண்ஜாதிகளென்கிற லட்சணையினால் 129-என்பதைக் குறிக்கிறது என்று அறிந்துகொள்ளவேண்டும். அன்றியும், வால்மீகிசரித்திரத்தில் "பந்துக்களாயும் தெற்குத் திக்கில் இருக்கப்பட்டவர்களாயும் பந்துத்வத்தைக் கொண்டாடுபவர்களாயுமிருக்கிற கோசலாதி ராஜாக்கள் தங்கள் தங்கள் பெண்களை ஸ்ரீராமருக்குக் கொடுத்தார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும், ஸ்காந்தத்தில் பிரமகண்டத்தில் பிரம்மாவைப் பார்த்துப் பகவான் சொன்னதாவது "பூமியில் தசரத சக்கிரவர்த்தியிடம் நான் ஜனிக்கப்போகிறேன்; விசுவாமித்ருடைய யாகசம்ரக்ஷணைசெய்து, அகலிகை சாபவிமோசனம் செய்து மிதிலாநகரத்தில் தநுர்பங்கம் செய்து, சீதையைப் பாணிக்கிரஹணம் செய்து அயோதிக்குவர, மாமன் வரப்போகிறார், பிறகு பூமி நீளை முதலான 128-பெண்களை அக்னி சாக்ஷியாய்ப் பாணிக்கிரஹணம் செய்யப்போகிறேன்" என்றிருப்பதுமன்றி "அஷ்டாவிம்சோத்தரம் கன்யா, சதம் சோத்வாஹனம் சு" என்று சொல்லியிருப்பதால், ஸ்ரீராமருக்குச் சீதையுடன் 129-ஸ்திரீகளென்று தெரிகிறது. இராமருக்கு அநேக ஸ்திரீகள் உண்டென்பதற்கு ஆதாரமான வசனங்கள் பிரமகண்டத்தில், சிவரஹஸ்யத்தில் பிரம விஷ்ணு சம்வாதத்திலும், அகஸ்திய ராமாயணத்திலும், வாசிஷ்ட ராமாயணத்திலும் இருக்கின்றன.

ஆனால், ஏகபத்நிவிரதன் என ஸ்ரீராமருக்கு ஒரு பெயர் இருப்பதால் ஒரே பெண்சாதியுடன் கூடினவரென்று மேற்படி புராணவசனங்களுக்கு விரோதமாக சிலர் அர்த்தம் செய்கிறார்கள். அப்படிச் செய்வது பிசகு. ஏக என்கிற பதத்துக்கு முக்கிய என்ற அர்த்தம் இருப்பதால் முக்கிய ஸ்திரீகளோடு (அதாவது-கலியாணம் செய்துகொண்ட ஸ்திரீகளோடு) கூடினவரென்று அர்த்தம் செய்யவேண்டியது. இப்படிச் சொல்வதானது மேற்கண்ட புராண வசனங்களுக்கும், வால்மீகி ரிஷியினால் இராமாயணத்தில் பல இடங்களில் அநேக ஸ்திரீகள் உண்டென்று விளக்கக்கூடிய பன்மை வாக்கியங்களை உபயோகிக்கப்பட்டிருப்பதற்கும் ஒத்து இருக்கிறது.

R. கோட்டடியார்.

---

இந்தப் பிரமாதமான யுத்தத்திலே, ருஷியசேனையில் 20-லட்சம் ஸோல்ஜர்களும், பிரஞ்சு சேனையில் 15-லட்சம் ஸோல்ஜர்களும் (அத்தொகையில் கொல்லப்பட்டுப் போனவர்கள் 5-லட்சம்), பிரிட்டிஷ் சேனையில் சுமார் 4-லட்சம் ஸோல்ஜர்களும் காயமடைந்திருக்கின்றனர். மேலேகண்ட மூன்று தேசசேனைகளையும் ஜெர்மன் சேனை எதிர்த்து நிற்பதால், அந்த ஜெர்மன் சேனையில் மேலே கண்ட மூன்று சேனையிலும் நேர்ந்துள்ள அளவு சேதம் நேர்ந்திருக்க வேண்டுமென்று மதிக்கப்படுகிறது.

## சிற்பிகள் கை அற்புதங்கள்

### ஜெய்ப்பூர் நகரம்

மேற்கு இந்தியாவிலுள்ள ராஜபுதன சமஸ்தானங்களில் முக்கியமானது ஜெய்ப்பூர். அதன் பிரதான நகரமாகிய ஜெய்ப்பூரின் அழகைப் பார்க்க வரும் அன்னியர் அதற்குச் சமானமான வேறு நகர் உலகத்திலில்லையென்று புகழுவதுவழக்கம். அதேமாதிரி புகழ்ந்து சிலதினங்களுக்கு முன்னால் பம்பாய்ப் பத்திரிகையாகிய 'பம்பாய் கிராணிகள்' எழுதுகின்றது. ஜெய்ப்பூர் நகரத்தை நிர்மாணித்தவர் II-வது ஜெயஸிங் என்ற மன்னன். அவர் ஜோஸியம் முதலான சாஸ்திரங்களில் பேர் போனவராயிருந்ததுமல்லாமல், ராஜ தந்திரியாயுமிருந்தார். அதனுடைய அழகை 'பம்பாய் கிராணிகள்' வர்ணித்திருக்கிறபடி இங்கு வர்ணித்தல் சாத்தியமல்ல. அதைப் பார்த்தவர்களுக்கே அதனழகு முற்றிலும் தெரியும். அந்த நகரத்தின் முக்கியமான ராஜ வீதிகள், 11-அடி அகலமாம்; பக்கத்துத் தெருக்கள் 55-அடி அகலமும், சந்துகள் 28-அடி அகலமுமாம். இந்த ராஜ வீதிகள் ஒன்று சேரும் கோடிகளிலெல்லாம் அழகான ஏரிகளிருக்கின்றன. அந்த ஏரிகளின் படிக்கட்டுகளும், சுற்றுப்பக்கத்துத் தோட்டங்களும், அதில் விளையாடும் பட்சிகளும், போய் வந்து கொண்டிருக்கும் மனுஷர், வண்டிகள், குதிரைகள், ஒட்டகங்கள் முதலியவைகளும் அந்த ஏரிகளைச் சொல்ல முடியாத கம்பீரமுள்ளவைகளாகச் செய்கின்றன. வீடுகளெல்லாம் ஒரே மாதிரியாய்ச் சிவப்புச் சலவைக் கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. மகாராஜாவின் அரண்மனையோ ஒரு உன்னதமான ஸ்தலத்தில் வெள்ளைச் சலவைக் கற்களால் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. பட்டணத்தின் பலபாகங்களிலும் சிங்காரத்தோட்டங்களும், அழகான குளங்களுமிருக்கின்றன. இப்படியாக 200-வருஷத்துக்கு முன்னால் நம் முன்னோர் உலகத்தில் வேறெங்குமில்லாத ஒப்பற்ற அழகுள்ளதான பட்டணத்தைக் கட்டக் கூடுமானால், அவர்களின் சாஸ்திர ஞானத்தையும், யுக்தி புத்தியையும் புகழவும் வேண்டுமா! எவ்வளவு தூரம் ஹிந்துக்களாகிய நாம் பூர்வீக நாகரீகத்திலிருந்து நழுவிவிட்டோமென்பது இக்காலத்துப் புண்ணியஸ்தலங்களின் அசுத்தத்தையும் அழகின்மையையும் பார்த்தால் தெரிகின்றது.

சுதேசமித்திரன்.



## மனதின் உறுப்புகள்

நமது சரீரம் சவுக்கியமா யிருப்பதற்காகத் தேஹப் பயிற்சி செய்யவேண்டுவது எப்படி அவசியமோ, அப்படியே மனது சவுக்கியமா யிருப்பதற்காக மனப்பயிற்சியும் அவசியம். கைகள் மாத்திரம் உறுதியாயிருந்து கால் பலவீனப்பட்டிருப்பவனைச் சுகப்பிராணி யென்று நாம் சொல்வோமா? அப்படியே, கால்களுறுதியாயிருந்து கை பலவீனப்பட்டிருப்பவனையும் சுகப்பிராணி யென்று சொல்லமாட்டோம். அப்படியே, நன்றாய்ப் பார்க்க வல்லவனாயிருந்து கேட்கச் சக்தியற்றிருப்பவனும் சுகப்பிராணி யாகான். இப்படி, தேஹத்தின் பலவுறுப்புகளில் ஏதாவதொன்று குறைவு பட்டாலும் சவுக்கியக் குறைவுதான். ஆதலால், இந்தச் சரீரவுறுப்புகளில் ஒன்றைக்கூட நாம் வேண்டுமென்று விகாரப்படுத்திக்கொள்ள விரும்பமாட்டோம்.

இதுவே நமக்கு இப்படியிருக்க, நமக்குப் பேருதவியாயிருக்கின்ற மனதின் உறுப்புகளை, அதாவது குணங்களைக் கெடுத்துக்கொள்ள விரும்புவோமா? கடவுள் நம்மிடத்தில் கிருபைபண்ணி யளித்திருக்கிற பல்வித மனோகுணங்களும் நாம் அடிக்கடி மேன்மேலும் பயிற்சி செய்து கொண்டிராவிட்டால் பலவீனப்படும். அவ்வுறுப்புகளாவன: குதூகுலம், காருணியம், சாதுரியம், ஆனந்த முதலியனவாம்.

குதூகுலமாவது, நாம் எதையும் சந்தோஷமாய் ஆவல் கொண்டு அறியும்படியாய்க் கடவுளளித்த சக்தி; இந்தக் குணத்தை நாம் இழப்போமானால் மந்தபுத்தியுடையவர்களாவோம். காருணியமாவது, பிராணிகளின் வருத்தத்தைக் கண்டு பரிதாபப்படுகிற சக்தி; அதை இழந்தால் நெஞ்சுறுதியும் கொடுமையுமுடையவர்களாவோம்; சாதுரியமாவது, மிகவும் ரஞ்சகமாய்ப் பேசிப் பலரையும் களிப்பிக்கிற திறமையாம்; அந்தக் குணமில்லாவிட்டால் பலரிடத்திலும் போய் விநோதமாய்ப் பேசத் திறமையில்லாமல் ஒரு காரியத்திற்கும் உதவியற்றவர்களாவோம். ஆனந்தமாவது, பல விநோதப் பொருள்களைக் கண்டு களிக்கும் திறமையாம்; இக்குணத்தை யிழந்தால் அற்பர்களாயும், கவுரவமற்றவர்களாயுமாவோம். இவ்வாறு மனோ குணங்கள் பலவாயிருக்கின்றன; அவற்றுள் ஒன்றை யிழந்தாலும் ஒவ்வொரு காரியத்திற்கு உதவாமற் போவோம்.

ஆகையால் இவையெல்லாம் நம்மிடத்தில் நன்றாய் நிலைபெற்றிருக்கும்படி நம்மால் கூடியவளவு நாம் அவைகளைப் பயிற்சி செய்து வரவேண்டும். இக்குணங்களை அப்பியாசிக்க வேண்டுமென்று ஒருவன் ஆவல்கொள்வானாயின் அவனுக்கு இவைகளைப் பயிற்சி செய்வது மிகவும் எளிதாகவே தோன்றும். குணங்களின் விஷயங்களை மாத்திரம் நாம் கவனமாய்க் கருதி வருவோமானால் அக்குணங்களெல்லாம் நன்றாய் நம்மிடத்தில் படிந்துபோம். பலஜீவஜெந்துக்களின் நடுவே பழகி அவைகளைப்பற்றிச் சிந்தித்து வருவோமானால் காருணியகுணம் பழக்கமாம். பல விநோதவஸ்துக்களின் நடுவிலிருந்து அவைகளைப் பார்த்துக்கொண்டிருப்போமானால் ஆநந்தகுணம் பழக்கமாம். இப்படியே ஒவ்வொரு விஷயத்தையும் கவனமாய்ப் பார்த்துவந்தால் எல்லாக் குணங்களும் நம்மிடத்தில் பூர்த்தியாகி நாம் மிகவும் மேன்மைபெற்று வாழலாமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

விவேகசுந்தரம்.

## வியவகாரப்போக்கு

**கடன்களை வஸூலிக்க விதவையின் பாத்யதை.**

ஒரு ஹிந்துவிதவை தன் புருஷன் இறந்துபோன சிறிது காலத்துக்கெல்லாம் புருஷனுக்குச் சேரவேண்டிய கடன்களை வஸூல் செய்வதற்கு அதிகாரம் ஏற்படும்படி ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டில் ஒரு ஸர்டிபிகேட்டுக்கு மனுப்போட்டாள். புருஷனுடைய ஸகோதரர் குடும்பம் பாகமாகவில்லை என்றும் கடன்களை வஸூலிக்க விதவைக்கு பாத்தியமில்லை என்றும் சொல்லி ஆக்ஷேபித்தார். ஜில்லா ஜட்ஜ் ஒருஸாக்ஷியை மாத்திரம் விசாரித்து ஒருபத்ரத்தைப் பார்வையிட்டு குடும்பம் பாகமாய் விட்டதென்று நிர்ணயித்து விதவைக்குக் கடன்களை வஸூலிப்பதற்கு பாத்யதையுண்டென்று சொல்லி ஸர்டிபிகேட் கொடுக்கும்படி உத்திரவுபோட்டார்கள். இறந்துபோன புருஷனுடைய சகோதரர், இந்த உத்திரவின்மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். எப்படியும் ஸகோதரருக்கு கடனில் அனந்தரவார்ஸு பாத்யதை உண்டென்றும், அந்தக் கடன்களை விதவை இறந்தபிறகு வஸூலிக்க அவருக்கு பாத்யதை உண்டென்றும், ஆகையால் விதவைக்குக் கொடுக்கப்பட்ட ஸர்ட்டிபிகேட்டை ரத்து செய்துவிட வேண்டுமென்றும் அப்பீல்தாருடைய வக்கீல் வாதித்தார். ஆனால்,

ஹைகோர்ட்டார் அந்தவாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் குடும்பம்பாகமாயிருப்பதாகத் தெரியவருவதால், விதவை கடனை வசூல் செய்வதற்கு முன்னால், அவள் அந்தக் கடன் தொகைக்கு ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று சொல்வது சரியல்லவென்று தீர்மானித்து கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பை உறுதிசெய்தார்கள்.

**ஸ்தாவர சொத்தின்மேல் ஈடு** ஒருடிக்ரியின்மேல் போட்ட நிறைவேற்று நடவடிக்கையில் ஒரு ஸ்தாவர ஸொத்து கோர்ட்டில் விற்பனைக்குவந்தது. அந்தஸொத்தின்மேல் ஒரு ஈடு இருப்பது தெரியாமல் ஒருவர் அந்த சொத்தை விலைக்கு வாங்கிக்கொண்டார். பிறகு, சில காலத்துக்கெல்லாம் அந்த சொத்தை மூன்றாம் மனிதர் ஒருவருக்கு விற்றார். அந்த மூன்றாம் மனிதருக்கு ஈடு இருப்பது தெரியாது. அதன்பிறகு ஈடு இருப்பது வெளியாயிற்று. ஈட்டுக்கடன் கொடுத்தவர் வியாஜ்யம் போட்டதில்; இரண்டாவது தடவை வாங்கினவர் ஈட்டுத் தொகையை ஈட்டுக்கடன் கொடுத்தவருக்குச் செலுத்தவேண்டுமென்று தீர்ப்புச் செய்யப்பட்டது. ஆனால், அதற்காக இரண்டாவது தடவை வாங்கினவர் முதலில் வாங்கினவரிடமிருந்து நஷ்டஈடு பெற பாத்யமுள்ளவராகமாட்டார். ஏனென்றால், கோர்ட் விற்பனையில் ஸொத்துவாங்குபவர் அந்த ஸொத்தையொட்டிய லாபங்களை யடைவதன்றி அதன்மேலுள்ள கடன் வகையறாக்களுக்கும், கட்டுப்பட்டே அந்த ஸொத்தை வாங்குகிறவராகிறார். (2) லாவீக்லி 517.

**ப்ராமிஸரி நோட்டுக்கு ப்ரதிப்ரயோஜனம்** வாதி முதல்ப்ரதிவாதி மேலும் அவரது தகப்பனார்மேலும் கடனுக்காக வியாஜ்யம் போட்டு தமக்கு ஸாதகமாகத் தீர்ப்புப்பெற்று தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக சில ஸொத்துக்களை ஜப்திசெய்தார். ஜப்தி செய்த ஸொத்துக்களை அப்புறப்படுத்த வந்த அமீனை முதல் பிரதிவாதியும் அவருடைய தகப்பனாரும் தடுத்துவிட்டார்கள். அதன்மேல், வாதி கோர்ட்டின் அனுமதி பெற்று ப்ரதிவாதிகளை ப்ராஸிக்யூட் செய்தார். அந்தக்கேஸ் விசாரணைக்கு வந்த வனைறதினம், முதல் ப்ரதிவாதியும் அவருடைய மாமனாரும் வாதிக்கு டிக்ரித்தொகைக்கு ஒரு ப்ராமிஸரி நோட் எழுதிக்கொடுத்தார்கள். அதன்மேல், வாதி க்ரிமினல்கேஸை வாபஸ் வாங்கிக்கொண்டார். பிறகு,வாதிப்ராமிஸரி நோட்டின் பேரில்மேல் வியாஜ்யம் போட்டார். கோர்ட்டார் ப்ராமிஸரி நோட்டுக்குக் காட்டியுள்ள பிரதிப்ரயோஜனம் சட்ட ஸம்மதமில்லை என்றும், ஆகையால் வாதி ப்ராமிஸரி நோட்டில்கண்டதொகையை அடையமுடியாதென்றும் தீர்ப்புச் செய்தார்கள்.

**ஸ்த்ரீதனம்** ஒரு ஸ்த்ரீ ஒரு ஸொத்தை வாங்கினாள். அதற்குக்கொடுக்கவேண்டிய பணத்துக்கு அந்த ஸொத்தை இன்னொருவருக்கு ஈடுவைத்துப்பணம்வாங்கி ஸொத்துவிற்றவருக்குச் செலுத்தினாள். பிறகு, க்ரமத்தில் ஈட்டை மீட்டுக்கொண்டாள். இந்த ஸ்திரீயின் ஸொத்து யாரைச்சேருமென்பது கேள்வி. ஒரு ஸ்திரீ, புருஷனால் தனக்கு வந்த ஸொத்துக்களிலிருந்து யாதொரு உதவியும் இல்லாமல், தனது புத்தி சாதுரியத்தால் ஒருஸொத்தை யடைந்தால் அது அவளுடைய ஸ்த்ரீதனமாகும். அது அவளுக்குப்பிறகு அவளுடைய வார்ஸுகளுக்குப்போகும். பெண்களும் பிள்ளைகளும் இருந்தால் ஸொத்து பெண்களுக்குப் போகும்.— (2) லாவீக்லி 415.

**விதவை ஸ்வீகாரம் செய்துகொள்வது.** (1) ஒரு ஹிந்துவிதவை ஸ்வீகாரம் செய்துகொள்ள வேண்டுமென்று ஒரு ஸபிண்டரை அனுமதி கேட்டால், அந்த ஸபிண்டர் தமது ஸொந்த ஸௌகர்யத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு ஸ்வீகாரம் செய்யலாம் செய்யக்கூடாதென்பதைத் தீர்மானிக்காமல், விதவையின் குடும்பத்துக்கு எது நன்மையானதென்பதை உத்தேசித்தே தீர்மானிக்கவேண்டும். ஒரு ஹிந்துவிதவை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளவேண்டி ஸமீப அனந்தரவாரிஸ் ஒருவரை அனுமதி கேட்டாள். அந்த அனந்தரவாரிஸுக்கு புத்திரர் ஒருவருமில்லை. தமக்கு ஒரு புத்திரன் பிறக்கும் வரையில் காத்திராமல், ஒரு பையனை ஸ்வீகாரம் செய்வதற்கு இப்போது அவசியமில்லையென்று சொல்லி ஸ்வீகாரத்துக்கு அனுமதி கொடுக்க மறுத்தால் அப்படிமறுத்தது சரியல்ல. (2) லாவீக்லி 284.

(2) ஒரு ஹிந்து புத்ரனில்லாமல் இறந்துபோனார். அவருடைய ஸகோதரர்களில் சிலர் பாகமாகிப் பிரிந்து போய் விட்டார்கள். மற்றவர்கள் இறந்து போனவருடன் ஏககுடும்பமாக வசித்துவந்தார்கள். இறந்து போனவரின் விதவை ஸ்வீகார மெடுத்துக்கொள்ள வேண்டுமானால் ஒன்றாக வசித்துவரும் குடும்பத்திலுள்ளவர்களுடைய அனுமதியைப் பெற்றால் போதும். பிரிந்துபோன ஸகோதரர்களுடைய அனுமதியைப் பெறவேண்டிய அவசியமில்லை. குடும்பத்தின் தலைவர் அனுமதிகொடுக்க, விதவை மற்ற ஸமபாகஸ்தர்களில் பாதிக்கு மேற்பட்டவர்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் ஸ்வீகாரம் செய்துகொண்டால் அந்த ஸ்வீகாரம் செல்லாது. குடும்ப ஸொத்தை அன்யர்களுக்குப் பராதீனம் செய்யும் எண்ணத்துடன் ஒரு விதவை தன் புருஷன் இறந்துபோய் முப்பதுவருஷம் கழிந்த பின்பு ஒருபையனை ஸ்வீகாரம் செய்து கொண்டாள். புருஷனுடைய ஸகோதரராகிய அவிபக்த குடும்பத்தின் தலைவர் அந்த ஸ்வீகாரத்தை ஒப்புக்கொள்ள மறுத்தால் அப்படி மறுத்தது கெட்ட எண்ணத்துடன் மறுத்ததாகாது—(2) லா வீக்லி 286.

(3) ஒரு ஹிந்து தமது உயிலில் (மரணசாஸனத்தில்) ஒரு குறிப்பிட்ட பையனை தமது மனைவி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி எழுதிவைத்து விட்டு இறந்துபோனார். ஷை பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட சில காலத்துக்கெல்லாம் அவன் இறந்துபோனான். பிறகு, 20-வருஷம் கழித்து உயிலின் ஆதாரவின்மேல் வேறொரு பையனை ஸ்வீகாரம் செய்துகொண்டாள். ஒருபையனை ஸ்வீகாரம் செய்துகொள்ள வேண்டுமென்று புருஷன் எண்ணியிருந்தாலும் இரண்டாவது தடவை ஸ்வீகாரம் செய்யக்கூடாதென்று அவர் எண்ணியிருந்ததற்கு யாதொரு ஆதாரமும் இல்லாததால் இரண்டாவது ஸ்வீகாரம் சட்டப்படிச்செல்லும்.

**ஸ்த்ரீகள் கோர்ட்டுகள்** அமெரிக்காவில் ஸ்த்ரீகளுடைய குற்றங்களையும் வ்யவஹாரங்களையும் விசாரித்துத் தீர்ப்பதற்காக ப்ரத்தியேகமான கோர்ட்டுகள் இருக்கின்றன. ந்யூயார்க்கில் ஸ்த்ரீகளுக்கென்று ப்ரத்தியேகமாயுள்ள ஒரு கோர்ட்டில் ஸ்த்ரீகளும் சிறுபெண்களும் செய்த சிறு குற்றங்களை விசாரணை செய்துவருகின்றார்கள். இந்தக் கோர்ட்டும் பிடல்பியாவிலுள்ள ஒரு ஸ்த்ரீ கோர்ட்டும் ராத்திரியும் பகலும் நடக்கின்றன. குற்றவாளிகளை நன்றாய் விசாரித்து அவர்களுடைய மனோநிலைமைகளையும் தேகநிலைமைகளையும் அறிந்துகொண்டு தக்கஸங்கம் அல்லது ஸ்தாபனங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இதனால், குற்றவாளிகள் மற்றவர்களைக்கெடுப்பது குறைகிறது. வேலை செய்ய சக்தியுள்ளவர்களுக்கு தொழிலில் ஸம்பாதித்துக் கொடுக்கிறார்கள். சென்ற வருஷத்தில் பிலடெல்பியா பட்டிணத்தில் ஸ்த்ரீ. வ்யவஹாரங்களை விசாரிக்க ஒரு முனிஸிபல் கோர்ட்டு ஸ்தாபித்தார்கள். அதில் சிறு பெண்களின் குற்றங்கள் சிறுகுற்றங்கள் ஸிவில் வ்யாஜ்யங்கள் குடும்ப வ்யவஹாரங்கள் நடத்தையைப் பற்றிய வழக்குகள் ஆகிய ஐந்து விதமான வ்யவஹாரங்களை விசாரிக்க ஐந்து பிரிவுகள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஒரு வருஷத்தில் பிலடெல்பியாவில் மாத்திரம் 15,300-கேஸ்கள் ஸ்த்ரீகோர்ட்டார்கள் விசாரித்து தீர்ப்பு செய்தார்கள்.



## பாக சாஸ்திரம்

**வெண் பொங்கல்.**—உலைநீர் கொதித்துக்கொண்டிருக்கும்போது மூன்று பங்கு அரிசிக்கு ஒரு பங்கு பயத்தம் பருப்பு சேர்த்து இவைகளை நன்றாய்க் களைந்து அந்த உலைநீரில் சேர்க்கவேண்டும். அவை வெந்தவுடன் உப்பு, இஞ்சி, சீரகம், மிளகு இவைகளையும் சேர்த்து நெய்யை விட்டுக் கிளறவேண்டும். பச்சைக் கர்ப்பூரம், குங்குமப்பூ இவைகளையும் சேர்க்கலாம்.

**சர்க்கரைப் பொங்கல்.**—அடுப்பில் பாத்திரத்தை ஏற்றி ஜலம் விட்டு அது நன்றாய்க் கொதி வந்தவுடன் அரிசியைக் களைந்து கொட்டி அது நன்றாய் வெந்தவுடன் கொஞ்சம் பாலைச் சேர்க்கவும். அரிசியின் பாதி அளவு சர்க்கரையைப் போடவும். இந்த சர்க்கரை நன்றாய்ச் சாதத்தில் கலந்து கொண்ட சமயத்தில், வாழைப்பழம், பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, ஏலக்காய் இவைகளைச் சேர்த்து நெய்யை விட்டு நன்றாய்க் கிளறிப் பதமான சமயத்தில் இறக்கிவிடவும்.

**மஞ்சள் பொங்கல்.**—அரிசி உலை நீரில் நன்றாய் பக்குவமான சமயத்தில் கொஞ்சம் மஞ்சள் பொடியையும் தகுந்தபடி உப்பையும் சேர்க்கவேண்டும். அதில் மிளகு சீரகம் இவைகளையும் பொடிசெய்து சேர்க்கலாம். பொங்கல் செய்வதில் கஞ்சியை வடிக்காமல் அந்தக் கஞ்சி அன்னத்துடன் பக்குவமாய்ச் சேர்ந்துவிட்ட சமயம் பார்த்து நெய்யைமட்டும் சேர்த்துக்கிளறிப் பொங்கல் பதமானவுடன் இறக்கிவிடவேண்டும்

**பரமான்னம்.**—அடுப்பில் வெண்கலப் பாத்திரத்தை வைத்து அதில் ஜலத்தைவிட்டு அது கொதித்தவுடன் எந்த அரிசியில் பாயசம் செய்ய வேண்டுமோ அதில் ஒரு பங்கு சேர்க்கவும். அந்த அரிசி நன்றாய் வெந்தவுடன் அந்த அரிசியைக்காட்டிலும் மூன்றுபங்கு அதிகமான பசுவின் பாலைச் சேர்க்கவும். ஒன்றரைப்பங்கு சர்க்கரை போடவும். இவ்விதம் எல்லாம் கலந்து சமையல் ஆனபிறகு ஏலம், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் இவைகளையும் சேர்க்கவும்.

## ஆரோக்ய போதம்

**வாதம்.**—மனுஷர்களுடைய சரீரத்தில் இருக்கவேண்டிய அளவைமீறி வாதமானது கொஞ்சம் அதிகமாம் பக்ஷத்தில் அப்போது மனுஷர்களுடைய இடை, கை, கால், இவைகளில் பிடிப்பும் வலியும் உண்டாகும்; கை கால் முதலிய அவயவங்களை நீட்டவும், மடக்கவும் முடியாது. சில சமயத்தில் நரம்புகளைச் சுருக்கி முண்டமாகச் செய்யும். கை கால் முதலிய அங்கமெல்லாம் வாதத்தின் உபத்திரவத்தினுல் சில சமயங்களில் உலர்ந்து போய்விடும். பயம் உண்டாகும்; மோகமும் மூர்ச்சையும் உண்டாகும். மனச் சஞ்சலமும் எற்படும். இவ் விதமான அடையாளங்கள் வாதத்திற்குள்ளன. சரீரமெங்கும் வியாபிக்கும் குணமுடையது வாதம்.

**பித்தம்.**—பித்தமானது மனுஷியர்களின் சரீரத்தில் வளர்ந்துவிட்டால் அகாலத்தில் தலைமயிர் நரைத்துவிடும். உடம்பில் மஞ்சள்நிறம் தோற்றும். கோபம் உண்டாகும். உடம்பில் வேர்வையும் அதிகரிக்கும். புத்தி வேகம் அடையும். அதிகமாய் ஆகாரம் உட்கொள்ள விருப்பம் உண்டாகும். கண்கள் மஞ்சளாகிவிடும். தூக்கத்தில் பலவிதமான கனவுகள் காணும். மிகவும் பல மிருந்தபோதிலும் அக்னி மந்தமும் சில சமயத்தில் உண்டாகும். வயிற்றில் ஜாடராக்னி இருக்கும் இடம், உட்குடல் பாகம், நடுமாரபு, கண்கள், மேல்தோல் இவைகள் பித்தம்தங்கி சஞ்சரிக்கும் இடங்கள்.

**கபம்.**—உடம்பில் குளிர் உண்டாகும். உடம்பில் வெள்ளை நிறமும் தோன்றும்; சில சமயத்தில் உடம்பு வெளுத்து விதிர்விதிர்த்து விடும். ஜலமும் மலமும் அதிகமாய் வெளி நீங்கும். எந்த வஸ்துவைச் சாப்பிட்டாலும் உப்பாகவே தோற்றும். தினவு, சொரி இவைகளும் உண்டாகும், வாயில் அருசி உண்டாகும். கொட்டாவி, உடம்புப்பளுவு, தலைப்பளுவு முதலியன கப ரோகங்கள். என்று அறியவும். மார்பு, கழுத்து, தலை, நாக்கு, ஜீரணப்பை, உட்குடல், மாம்ஸம் இவைகள் கபம் தங்கும் இடங்கள்.

---

இற்பிறப் பில்லார் எனைத்துநூல் கற்பினும்
சொற்பிறகைக் காக்குங் கருவியரோ—விற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூல் தேற்றுதார்
புல்லறிவு தாமறிவ தில்—நாலடி.

## சண்டையைச் சார்ந்தவை

நாள் ஒன்றுக்கு சராசரி 35-லட்சம் பவுனுக்கு மேல் இப்பொழுது செலவாகிறது.

*
* *

இங்கிலாந்திலுள்ள ஷெப்பீல்டு நகரத்திலுள்ள ஆயுதத் தொழிற்சாலையில் நாடோறும் 800-கத்திகள் செய்யப்படுகின்றனவாம்.

*
* *

குண்டு செய்ய 20-தொழிற்சாலைகளை தளவாட மந்திரி எற்படுத்தி விட்டார்; 17-சாலைகள் வேலையாய்க் கொண்டிருக்கின்றன; கவர்ன்மெண்டு விசாரணைக்குட்பட்டு 715-சாலைகள் வேலைசெய்து வருகின்றன; அவைகளில் 8-லட்சம் வேலையாட்கள் வேலை செய்கின்றனர்.

*
* *

யுத்தத்தின் முதல் வருஷத்திலே பிரிட்டிஷ் சேனையில் பின்கண்ட சேதம் நேர்ந்திருப்பதாக காமன்ஸ் சபையில் அறிவிக்கப்பட்டது:—

| | | |
|---|---|---|
| கொல்லப்பட்ட உத்தியோகஸ்தர் | | 4965 |
| காயமடைந்த | ,, | 9973 |
| காணமற்போன | ,, | 1501 |
| கொல்லப்பட்ட ஸோல்ஜர்கள் | | 70,992 |
| காயமடைந்த | ,, | 2,41,086 |
| காணமற்போன | ,, | 53,466 |

*
* *

சென்ற 1914-1915-ம் வருஷத்திலே நடுநிலைமைத் தேசங்களின் மூலமாய் ஜெர்மனிக்கு 9 லட்சம் பருத்தி மூட்டைகள் போய்ச் சேர்ந்தனவென்று ஜெர்மன் பத்திரிகை யொன்று சொல்லுகிறது.

*
* *

இப்பொழுது நடந்து வரும் பிரமாதமான யுத்தத்திலே ஐரோப்பாவில் மட்டும் 50 லட்சம் ஜனங்கள் கொல்லப்பட்டுப் போனதாகவும், 70 லட்சம் ஜனங்கள் காயமடைந்து போயிருப்பதாகவும் பிரஞ்சுப் பத்திரிகை யொன்று சொல்லுகிறது.

*
* *

காயமடைந்துபோன ஸோல்ஜர்கள் ஊன்றிக் கொண்டு நடப்பதற்கு கைக்குச்சிகள் வேண்டுமென்று அறிவிக்கப்படவே இரங்கூனிலுள்ள ஒரு வியாபாரி 6 ஆயிரம் கைக்குச்சிகளை அனுப்பி யிருக்கிறார். இன்னும் 4 ஆயிரம் குச்சிகள் பிறகு அனுப்பப்படும்.



*
* *

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் கல்வியிலாகா பிரஸிடெண்டான மிஸ்டர் ஹெண்டர்ஸன் என்பவர் சென்ற மாதம் 18-ந் தேதியன்று லண்டன்மாநகரில் கூடிய மீட்டிங்கில், "இந்த யுத்தமானது இன்னும் ஒரு வருஷம் நீடித்து நடக்கு" மென்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது.

*
* *

மேற்கரங்கத்திலே போர்முனையானது வட கடலிலிருந்து கிழக்கே ஸ்விட்ஸர்லாந்தின் எல்லைப்புறம் வரையில் 590 மைல் நீளம் பரவி யிருக்கிறது. அப் போர்முனை நெடுகிலும், 15 லட்சம் ஜெர்மன் துருப்புகளுக்கு அதிகமில்லை யென்பதாக லண்டன் நிருபரொருவர் சொல்லுகிறார்.

*
* *

போர்முனைக்குச் சென்றிருக்கும் ஸோல்ஜர்களின் மனைவி மக்களுக்கும், ஜீவனத்திற்கு அந்த ஸோல்ஜர்களையே நம்பி யிருக்கும் குடும்பத்தாருக்கும் ஒவ்வொரு கவர்ன்மெண்டாரும் பணவுதவி புரியவேண்டும். அவ்வாறு ஸோல்ஜர்களின் குடும்பத்தாருக்காக பிரிட்டிஷ் கவர்மெண்டார் வாரந்தோறும் 7 லட்சத்து 50 ஆயிரம் பவுன், அதாவது 11 கோடியே 25 லட்சம் ரூபாய் கொடுத்து வருவதாகத் தெரிகிறது.

*
* *

பிரிட்டிஷ் விமானிகளுள் எவரேனும் ஜெர்மன் ஸெப்புளினொன்றை அழித்தால், அவருக்கு ஆயிரம் பவுன் இனமளிப்பதாக இங்கிலாந்திலே பிரமுகரொருவர் விளம்பரஞ் செய்திருக்கிறார். 10-ஸெப்பளின்களை அழிக்கும் வரையில் அவ்வாறே ஒவ்வொரு ஸெப்பளினை அழிக்கும் விமானிக்கும் ஆயிரம்பவுன் பரிசளிக்கப்படும். இரண்டு விமானிகள் சேர்ந்தழித்தால், அந்த ஆயிரம்பவுனை இருவரும் சமபாகமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம்.

*
* *

போர்முனையிலே பல இடங்களில் இருபக்கத்துத் துருப்புகளும் தங்களை எதிரிகள் அணுகா வண்ணம் தங்களுடைய அரண்களைச்சுற்றி இரும்பு முள்வேலி போட்டிருக்கின்றனர். அவ்வேலியின் மீது கனத்த குண்டுகளைப் பிரயோகித்தால், அவ்வேலி அறுந்து போகிறது. ஆனால், ஜெர்மானியரோ ஒருவகை அக்னித் திராவகத்தை அவ்வேலியின் மீது பிரயோகிக்க, அவ்வேலி உடனே சுளுவில் தீப்பற்றி யெரிந்து போகின்றதாம்.

*
* *

ஜமகண்டி என்பது ஐதராபாத்தைச் சேர்ந்த ஒரு சிறிய சமஸ்தானம். அச்சமஸ்தானத்துச் சிற்றரசர் போர்முனைக்குப் புறப்பட்டுப் போவதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்து வருகிறார். அவர் தாம் போர் முனைக்குப் போய்விட்ட பிறகு தம் சமஸ்தானத்துக் காரியங்களைச் சரிவர நடத்துவதற்காக ராவ்பகதூர் மோச்சி, சமஸ்தானத்து கார்பாரி, ராவ் சாஹேப் ஹாமலிக்கு, ராவ்சாஹேப் கோகலே ஆகிய இவர்கள் அடங்கிய ஒரு சபையை ஏற்படுத்தி யிருக்கிறார்.

*
* *

ஜெர்மானியரிடமுள்ள பீரங்கிகளில் $16\frac{1}{2}$ அங்குலம் குறுக்களவுள்ள குழாய்கள் கொண்ட பீரங்கிகள் மிகப் பெரியன. அம்மாதிரியான பீரங்கியில் வேலை செய்வதற்கு 200-மனிதர்கள் வேண்டும். அதை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகும் பொழுது அதை 137-பாகங்களாகப் பிரித்து விடலாம். இது பற்றியே அப்பீரங்கியை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் அமைப்பதற்கு 25-மணிநேரம் ஆகிறது. அப் பீரங்கியானது 87-டன் எடையுள்ளது. அந்த பீரங்கிகளில் ஒன்றை எடுத்துச் செல்வதற்கு ரயில்வே வாகன் (Waggon) வண்டிகளில் 12-வேண்டும். மின்சார விசையினுல் தான் அப்பீரங்கியிலிருந்து குண்டுகள் பிரயோகிக்கப்படுகின்றன. குண்டுகளைப் பிரயோகிக்கும் பொழுது அதில் வேலைபார்க்கும் மனிதர் அனைவரும் 300-கஜத்திற்கு அப்பால் இருக்க வேண்டும். அதிலிருந்து பிரயோகிக்கப்படும் ஒரு குண்டானது 112-பவுண்டு எடையுள்ளதாயிருக்கிறது. அப்பீரங்கியிலிருந்து ஒருமுறை குண்டைப் பிரயோகிக்க 550-பவுன செலவாகிறதாம்.

*
* *

இடாலியின் எல்லைப்புறத்தி லுள்ள ஆஸ்டிரிய அரண்களை அணுகித் தப்புறிவதற்காகச் சில இனக்க

ளுக்கு முன் எமானேல் என்ற இடாலிய ஸோல்ஜர் போனன். அப்பொழுது அவனது வருகையை அறிந்த ஆஸ்டிரிய ஸோல்ஜர்கள் அவன்மீது குண்டுகளைப் பொழிந்தனர். உடனே அவன் உடலில் உதிரம்பெருக நிலத்திற்சாய்ந்தான். சாய்ந்ததும் தான் இனிப்பிழைக்க முடியாது என்பதை அவன் அறிந்து தன் சட்டையைக் கழற்றிக் கீழேவிரித்து, தன் உடலிலிருந்து, ஒழுகும் இரத்தத்தை ஒரு குச்சியில் தோய்த்து, தனக்குள்ள ஆஸ்தியனைத்தையும் திக்கற்ற தனது தமக்கைமக்களிருவர்க்கும் கொடுக்கவேண்டுமென்று உயில் எழுதியதும் உயிர் துறந்தான். பின்பு அவனைத் தேடிச்சென்ற இடாலியர் அவனைக் கண்டுபிடித்ததோடு அவன் தனது இரத்தத்தையே மையாகக்கொண்டு எழுதிய உயிலையும் கண்டெடுத்தனர். அந்த உயிலை இடாலியிலுள்ள பொருட்காட்சிச் சாலையில் பத்திரமாய் வைத்திருப்பதாகத் தீர்மானமா யிருக்கிறதாம்.

*
* *

| தேசம். | அரசர். | வயது. |
|---|---|---|
| ஆஸ்ட்ரியா | பிரான்ஸிஸ் ஜோஸப் | 85 |
| மாண்டி நீக்ரோ | நிக்கலஸ் | 74 |
| போர்ச்சுகல் | எம். டி. ஆர்ரியாகா | 74 |
| ஸாக்ஸனி | பெர்டினண்ட் அகஸ்ட்-III | 71 |
| செர்வியா | பீட்டர் I | 71 |
| துருக்கி | மகமத் வி. | 71 |
| பவேரியா | லட்விக் | 70 |
| அமெரிக்கா ஐக்கிய மாகாணம். | டாக்டர் வில்ஸன் குடியரசுத்தலைவர் | 59 |
| ஸ்பேடன் | ப்ரெடெரிக் II | 58 |
| பிரான்ஸ் | பாய்ன்கேர், குடியரசுத் தலைவர் | 58 |
| ஸ்வீடன் | கஸ்டவ் V | 57 |
| பல்கேரியா | பெர்டினண்ட் | 56 |
| ஜெர்மனி | வில்லியம் II | 54 |
| இங்கிலாந்து | ஜார்ஜ் V | 50 |
| ரொமேனியா | பெர்டினண்ட் | 50 |
| கிரீஸ் | கான்ஸ்டன்டைன் | 47 |
| ருஷியா | நிக்கலஸ் II | 47 |
| இத்தாலி | மான்யுவேல் III | 46 |
| டென்மார்க் | கிரிஸ்டியன் X | 45 |
| நார்வே | ஹாகான் VII | 43 |
| பெல்ஜியம் | ஆல்பர்ட் I | 40 |
| ஹாலண்ட் | வில்ஹெல்மினா ராணி | 35 |
| லக்சம்பர்க் | அரசி | 32 |
| ஸ்பெயின் | அல்பன்ஸோ XIII | 29 |

சமீபத்திலே ஜெர்மானியர் பென்போ என்னும் பெயர் கொண்ட ஒரு சண்டைக்கப்பலைக் கட்டி யிருக்கிறார்கள். அக்கப்பலானது புதிய முறையில் கட்டப்பட்ட ட்ரெட்னட் என்ற சண்டைக்கப்பல் வகுப்பைச் சேர்ந்ததாகும். அதைக் கட்டி முடிக்க நேர்ந்த மொத்தச் செலவு 20-லட்சம் பவுன்; அதாவது 3-கோடி ரூபாய். அதிலுள்ள பீரங்கிகளின்விலை ஒரு லட்சத்து 51-ஆயிரத்து 300-பவுனும். அது 25-ஆயிரம் டன் எடையுள்ளது. அக்கப்பலிலிருந்து டார்பிடோ வெடிகளைப் பிரயோகிப்பதற்கான சாதனங்களுக்கும் பீரங்கிகளின் மேடைகளுக்குமாக 4-லட்சத்து 56-ஆயிரம் பவுன் செலவாயிருக்கிறது. அக்கப்பல் மணிக்கு சுமார் 24-மைல் போகக் கூடியது. மேலே சொல்லப்பட்ட கணக்கு விவரத்தைப் பார்க்கும்பொழுது அக்கப்பலில் பீரங்கிகளுக்கும் பீரங்கி மேடைகளுக்கும் சேர்ந்து 6-லட்சம் பவுன் செலவாயிருக்கிறது. அக்கப்பலை நடத்துவதற்கு வேண்டிய எஞ்சின் முதலியவைகளுக்காக நேர்ந்திருக்கும் செலவு 3-லட்சம் பவுன்.

## ஜாலவித்தைகள்

**வாயில் மணலைப் போட்டுக் கொண்டு மென்று தின்னல்.**—குண்டுமணியிலையை வாயில்போட்டுத் தவடையில் ஓர் பக்கம் அடக்கிக்கொண்டு மணலை மென்று தின்னலாம்.

**அக்கினியில் கொளுத்திய சங்கிலியை உருவுதல்:**—கற்றாழையிலிருக்கும் மிருதுவான சோற்றை எடுத்துப் பில்லைகளாக அறுத்து விளக்கெண்ணெயிலிட்டுப் பச்சைத் தவளையின் உடல் நெய்யும் கொஞ்சம் சேர்த்துக் கலக்கி, இருப்புச்சங்கிலியை நன்றாக நெருப்பில் தீப் பறக்கக் காய்ந்தபின் அதை வலியுள்ள கயிற்றில்மாட்டி இடதுகையி லேந்திக்கொண்டு வலது கையினால் கற்றாழை மடலோடுகூடிய விளக்கெண்ணெயை வாரிவாரி உருவினால் சங்கிலி குபீல் குபீலென்று எரியுமேயன்றி கைக்குச் சூடேறாது.

**ஜலத்தைக்கொண்டு விளக்கெரித்தல்.**—சுத்தமான வெள்ளைச் சல்லாக்கள் தைத்த துணியைக் கொண்டு அத்திமரத்தின் பாலில் துவட்டியபின், அத்துணியை வத்தியாகத் திரித்து சற்று ஆழமான பாத்திரத்தில் கால்பங்கு நீரைவிட்டுக் கொளுத்திவிட்டால் பார்க்க அதிசயமாக எரியும். வத்தியில் நீர் ஏறுபடி நீரைப் பாண்டத்தில் இடவேண்டியது; இதற்காகவே ஜலத்திற்கும், வத்திக்கும் சற்றுத் தடைப்படும்படியான கலசத்தைச் செய்துவைத்துக்கொண்டிருந்தால் ஜனங்களுக்குக் காட்டும்போது சுலபமாயிருக்கும்.

ஸ்ரீமத் விராட்விஸ்வகர்மணே நம:

# விஸ்வகர்மன்

1860-வது வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ள

சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் மாதாந்தப் பத்திரிகை

462, தங்கசாலை வீதி, சென்னை

சம்புடம் 2] 1915ளு செப்டம்பர்மீ [சஞ்சிகை 12

## ஒளிவளர் விளக்கு

சென்ற 1915ளு ஆகஸ்ட்மாதத்தில் நமது சபாமண்டபத்திற்கு விஜயஞ்செய்த கனவான்களின் மொத்த எண்ணிக்கை

*
* *

சென்னை பெத்துநாய்க்கன் பேட்டையில் ஸ்ரீ செட்டி புண்ணியம் ஏழுமலை ஆச்சாரியார் கிருகத்திலும், தென்னேரி கிராமத்தில் ஸ்ரீ அப்புகுட்டி ஆச்சாரியார் கிருகத்திலும், ஆம்பூரில் ஸ்ரீ காஞ்சீபுரம் தர்மலிங்க ஆச்சாரியார் கிருகத்திலும், சென்னை சூளையில் ஸ்ரீ A. கந்தசாமி ஆச்சாரியசர் கிருகத்திலும் நடைபெற்ற விவாக காலத்தில் சபைக்களிக்கப்பட்ட பலதானங்கள் வந்தனத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்த உதாரணம் எல்லோரும் கைப்பற்றத்தக்கது.

*
* *

தஞ்சாவூர் ஜில்லா தரங்கம் பாடிக் கருகிலுள்ள தில்லையாடி என்ற ஊர்க்காரராகிய ஸ்ரீ T. A. இராமசாமி ஆச்சாரி என்பவர் ஜெப்பானுக்குச் சென்று டோக்யோ நகரிலுள்ள உயர்தரத் தொழிற் கலாசாலையில் சேர்ந்து நெசவுத் தொழிலைக் கற்று சமீபத்தில் நடந்த பரிட்சையில் தேர்ச்சி யடைந்தார். சென்ற ஜூலை மாதம் 8-ந் தேதி யன்று பட்டங்கள் கொடுக்கப்பட்டபொழுது அவருக்கும் கொடுக்கப்பட்டதாக அறிந்து சந்தோஷப்படுகிறோம். அவர் ஷை தொழில் சம்பந்தமாக விசேஷப்பயிற்சி பெறுவதற்காக இன்னும் ஒருவருஷம் அங்கேயே இருப்பாரென்று தெரிகிறது.

*
* *

ஈரோட்டில் செங்குந்த வகுப்பார் ஒரு கூட்டம் கூடி தங்கள் சிறுவர் சிறுமிகளை அவசியம் 6-வயது முதல் 10-வயதுவரை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டுமென்றும், தாசித்தொழிலுக்கு விட யத்தனம் செய்துகொண்டிருந்த சிறு பெண்களை அவ்வித துராசாரத்திற்கு ஆளாக்காமல் நல்வழிப்படுத்த வேண்டுமென்றும் கலந்து பேசி, இதுவரையில் ருதுவாகாத பெண்களைக் கலியாணம் செய்துகொடுக்க வேண்டுமென்றும் கட்டுப்பாடுசெய்துகொண்டார்கள். அவ்விதக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடந்துகொள்வதாக, ஒவ்வொரு குடும்பத்தின் முக்கியஸ்தர்களாகிய புருஷர்களும் தாசிகளும் கையொப்பம் செய்து கொடுத்திருக்கிறார்கள். குற்ற நிவர்த்தி செய்து கொள்ளாமல் குணப்படுதலுண்டோ?

சிறியனீழா தாலுக்காவில் தொழில் செய்து ஜீவனஞ் செய்யும் ஈழுவ வகுப்பைச் சேர்ந்த ஒரு கூட்டத்தார் குறவர்களின் க்ஷேமத்தைக் கருதி சாது ஜனஸமாஜம் என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அச் சமாஜத்தின் ஆதரவில் கூடின ஒரு கான்பரென்ஸில் ?00-குறவர்கள் வரையிலும் வந்திருந்தார்கள். குறவர்கள் முன்னேற்ற மடையாத ஜாதியார். குறவர்களின் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கப் படிப்பு, மதப் படிப்பு, லௌகிகப்படிப்பு முதலியவைகள் கற்பிக்கப்படுவதற்காக ஒரு ஸ்கூலை ஷை ஸமாஜம் ஏற்படுத்தியிருக்கிறது. இன்னும் சில மாதங்களுக்குள் குறவர்களில்பலர் குடிக்கும் வழக்கத்தையும் மீன்களையும் செத்தப்பிராணிகளையும் தின்னும் வழக்கத்தையும் விட்டு விடுவார்கள் என்று சொல்லப்படுகிறது. இதுவன்றோ விருத்தியடைதற்கேற்ற மார்க்கமாகும்? .

*
* *

இந்தியாவின் மற்றப் பாகங்களைவிட பம்பாயில் பார்ஸி ஜாதியார் விசேஷமாய் வசிக்கிறார்களென்பதும், அவர்களில் பெரும்பாலார் தொழிலும் வியாபாரமும் செய்து செல்வம் படைத்தவர்களா யிருக்கிறார்களென்பதும் தெரிந்த விஷயம். அவர்கள் செல்வம் படைத்திருப்பதற்கேற்ப அவர்களிடம் தருமச் சிந்தையும் ஈகைக் குணமும் அதிகமாயிருந்து வருகின்றன. அவர்களுக்குப் புது வருஷம் சமீபத்தில் பிறந்தது. அந்தப் புதுவருஷப்பிறப்பை அவர்கள் கொண்டாடின போது, கடந்த வருஷத்தில் அவர்கள் தருமத்தில் மட்டும் 18-லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்களென்பது வெளியாயிற்று. ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் வருமானத்திற்கேற்ப தருமஞ் செய்யவேண்டியது அவஸியமேயன்றோ? அத்தருமம் வித்தியாவிஷயமாய் விநியோகிக்கப்படுமானால் விசேஷபலன்கள் அளிக்குமென்பதும் சித்தாந்தமே.

சென்னையில்ஏழைமாணாக்கர்களுக்கென்றுஒரு நிதி ஏற்பட்டிருக்கிறது. அந்த நிதியிலிருந்து காலேஜ் வகுப்பில் படிக்கும் ஏழை மாணாக்கர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. போன வருஷம் இந்த நிதிக்கு 3000 ரூபாய்க்கு மேல் சந்தாப் பணம் வசூல் செய்யப்பட்டது. இந்த நிதிக்கு பெருந்தொகை கொடுத்துதவுகிறவர்களின் தொகை மிகவும் சொற்பமாகும். தற்காலம் படிப்புக்குப் பிடிக்கும் செலவு அபரிமிதமாயிருக்கிறது. காலேஜ் வகுப்புகளுக்குப் போய்ச் சேரும் ஏழை மாணாக்கர்கள், சம்பளம் கொடுப்பதற்கு வழியில்லாமல் படிப்பைக் கெடுத்துக்கொண்டு பணக்காரர்களின் வீடுகளுக்குச் சென்று பண உதவி செய்யும்படி கெஞ்சிக் கேட்டுக்கொள்ளும் வழக்கத்தை ஒழிப்பதற்காகவே இந்த நிதி ஏற்பட்டிருக்கிறது. விஸ்வகர்மச் சிறுவர் வித்யாநிதி யொன்றை நமது சபையார் ஆரம்பித்தும் அதற்கு வேண்டுமளவு குலஜனாதரவு ஏற்படாமைக்கு மிகவும் வருந்துகிறோம்.

*
* *

நீலகிரியிலிருக்கும் படுகர்கள், ராவுத்தர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கி, திருப்பிக் கொடுக்கச் சக்தியில்லாமல் நிரம்ப அவஸ்தைக்குள்ளாகிவந்தார்கள். இவர்கள்மீது பரிதாபங் கொண்ட அந்த ஜில்லா கலெக்டர் படுகர்களின் கிராமங்களில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று கவர்ன்மெண்டுக்குச் சிபார்சுசெய்தார். கவர்ன்மெண்டார் நேராக ஒன்றும் செய்யவில்லை. படுகர்களின் கிராமங்களில் இப்பொழுது 6-ஐக்கிய நாணயக் கிளைச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இக்கிளைச் சங்கங்கள் கோயமுத்தூர் அர்பன் பாங்கியிலிருந்து பணத்தைக் கடன் வாங்கி, படுகர்களுக்கு உதவிசெய்து வருகின்றன. இவ்விதமாக உதவி பெற்றுவரும் படுகர்கள் விவசாயத்தொழிலை செவ்வையாகக் கவனித்து வருகிறார்கள். ஐக்கிய நாணய சங்கங்கள் தனியாக நமது ஜாதியார்க்கும ஸ்தாபிக்கப்பட



வேண்டுமென்னும் அபிப்பிராயத்தை நாம் ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். இது பற்றி, ஐக்கிய நாணய சங்கானுகூலங்களை யறிந்துள்ள நமது ஜாதிப்பிரமுகர்கள் தமது அபிப்பிராயத்தை வெளியிட வேண்டுகிறோம்.

*
* *

பெங்களூர் கன்டோன்மெண்ட் விஸ்வ ப்ரம்ஹ குலதர்ம பரிபாலனசபைக் காரியதரிசி ஸ்ரீ T. M. சிதம்பர ஆச்சாரியார் பின்வருமாறு எழுதுகிறார்:—இச்சபை சுமார் இரண்டு வருஷகாலமாய் நடைபெற்று வந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமே. சென்ற 6-மாதகாலமாய் சபையின் மெம்பர்களும், குலாபிமானிகளும், சபையைக் கவனியாமல் ஏதோ பிரயோஜனமற்ற கலகங்கள் செய்ததால் சபை மூடியிருந்தது. பிறகு, சில முக்கிய அங்கத்தினர்கள் சேர்ந்து சபையைச் சீர்திருத்தி சரிவர நடத்த ஒரு மஹாஜன கூட்டம் சேர்த்து, சுஜாதியாருக்கு குலாபிமான விஷயத்தைப் பற்றி போதித்து, சென்ற 1915௵ ஜூன்மாதம் 28-தேதி யன்று பெங்களூர் தண்டு தொப்பை முதலியார் வீதியில் ஸ்ரீ கணநாதர் சன்னதியின் சொந்தக் கட்டடத்தில் ஸ்தாபித்தனர். அன்றுமாலை ஸ்ரீ கணநாதருக்கு அபிஷேகமாதியவை செய்வித்து ஸ்ரீகணநாதரையும், விஸ்வேசரையும் தோத்திரம்செய்து பிறகு மங்களாரத்தி செய்து, பிரசாத விநியோகஞ் செய்தனர். சபையை அபிவிர்த்திக்குக் கொண்டு வரும்படி சதா ஸ்ரீவிஸ்வேசரை தியானிக்கிறோம்.

*
* *

கோட்டாற்றிலுள்ள ஈழவருடைய சங்கத்தினர் சிறிது காலமாக மலையாளத்திலுள்ள தங்களுடைய் சகோதரரைப்போல மேலுயரப் பிரயத்தனம் செய்கிறார்கள். அவர்களிடத்தில் ஸ்ரீ நாராயண குருசுவாமி என்ற ஒரு மகா புருஷர் அழுந்தருளி மாடன் இஸக்கி முதலிய கெட்ட தேவதைகளை வணங்கிக்கொண்டு வந்த்தை மாற்றி, பல பரிஷ்காரங்களும் செய்து வித்தியாவர்த்தினி என்ற ஒரு சமாஜத்தை ஏற்படுத்தி நடத்திவருகிறார். இப்பொழுது நடராஜர், கணபதி, சுப்பிரமண்ணியர் முதலிய சாத்துவித தேவதைகளை யல்லாமல் பிசாசுகளை ஈழவர் வணங்குகிறதில்லை. ஒரு வாசிப்புச்சாலையும் அதில் ஒரு இராப்பள்ளிக்கூடமும் ஏற்படுத்தி குழந்தைகளைக் கல்வியில் பயிற்றி வருகிறார்கள். மேலும் மேற்படி சமாஜத்திலிருந்து 3000 ரூபாய் வரையில் செலவு செய்து இப்பொழுது ஒரு பெண்பள்ளிக்கூடக் கட்டடம் வேலை நடந்துவருகிறது. கல்வியின் அருமையும் அவஸியமும் எல்லாஜாதியார்களுக்கும் தெரிந்துவிட்டன என்பதற்கு அறிகுறிகள் எங்கெங்குங் காணப்படுகின்றன. மகத்தாகிய விஸ்வகர்ம வம்ஸத்தினர்களுக்கு இவை விளக்கமாயினவென்றெண்ணுவதற்குமட்டும் ஆதாரங்கள் காணப்படவில்லை.

*
* *

புனாவில், கணபதி உற்சவ காலத்தில் கூடின ஒரு மீட்டிங்கில், ஸ்ரீமான் பாலகங்காதர திலகர் பின் வருமாறு பேசினார்:—கடவுள் இல்லையென்று சாதிக்கும் நாஸ்திகர்களைப்பற்றி நான் சொல்லவரவில்லை. நாங்கள் அனைவரும் ஆஸ்திகர்கள்—அதாவது கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்ளுகிறவர்கள். கடவுள் ஒருவர் உண்டு என்பதை ஒப்புக்கொண்டபிறகு மத சம்பந்தமான அற்ப விஷயங்களில் மாறுதல் ஏற்படுவதினால் யாதொரு பாதகமுமில்லை. பூர்வ காலத்து மதக் கட்டுப்பாடு இக்காலத்திற்கு ஒத்து வருகிறதில்லை. இன்றைய மதக் கட்டுப்பாடு இன்னும் 50-வருஷம் கழிந்தபிறகு ஜனங்களுக்கு ஒத்துவராது. காலதேச வர்த்தமானத்தை யனுசரித்து மதக் கொள்கைகளில் ஏற்பட்டிருக்கும் நம்பிக்கை மாறுதல் அடையவேண்டியது விரும்பத்தக்கதேயாகும். பரோபகாரம் செய்யவேண்டியது நமது கடமை என்பதை மறந்துவிடாதேயுங்கள். காலைமாலைகளில் சந்தியாவந்தனம் செய்வதே மதக் கொள்கை என்று நினைக்கவேண்டாம். எந்த மனிதன் உலக க்ஷேமத்திற்காக உண்மையாய் உழைக்கிறானோ அவனைத்தான் உண்மையில் சந்தியாவந்தனம் செய்கிறவன் என்று சொல்லவேண்டும். உலகத்தின் நன்மைக்காக உழைப்பதே நிஜமான சந்தியாவந்தனமாகும். சகல வஸ்துக்களிலும் ஈசுவரர் இருக்கிறார். அவர் பாரபக்ஷமில்லாதவர். ஏழைகள் என்றும் பணக்காரர்கள் என்றும், பெரியவன் என்றும் சிறியவன் என்றும் அவர் வித்தியாசம் பாராட்டுகிறவர் அல்லர். அப்படியிருக்க, நீங்கள் ஏன் வித்தியாசம் பாராட்டவேண்டும்?

## பொருள் நிலை

தன்னூர் ஸ்ரீ T. தங்கவேல் ஆச்சாரியார்

"பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை"

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையு மெய்தும்
நடுவண தெய்தாதா னெய்தும் உலை பெய்
தடுவது போலுந் துயர்"

என்று கூறப்படுதலால், இவ்வுலகில் எவ்விதமானவருக்கும் செல்வம் (பொருள்) இல்லாதொழியின் அறனும் இன்பமு மில்லாதொழியும். 'பொருளுடையான் கண்ணதேபோகம்.' சாதாரணமாய் உலகத்தில் குலக்கேடாயினும், இயற்கையான நற்குணம் மாறினும், வம்ஸவழிதப்பி வழுவினும், சௌரியத்தின் தலையில் இடிவிழுந்தாலும், கொள்கையினால் ஏளனத்திற் கிடமாயினும் எங்களுக் காவதொன்றுமில்லை என்று செப்புவாரை, 'பின்னை எதுதான் இன்றியமையாதது?' எனக் கேட்டால், 'பொருளே முக்கியம், அதுவே பரம்பொருள்' என்பர். ஏனெனின், அப்பொருள் இல்லாவிடில் மற்றெவையிருந்தும் யாதொரு பயனுமில்லையாதலால். "கல்லானேயானாலும் கைப்பொருளொன்றுண்டாயின் எல்லாருஞ்சென்றங்கெதிர்கொள்வர்—இல்லானை [ன் இல்லாளும்வேண்டாள் மற்றீன்றெடுத்ததாய்வேண்டா செல்லாதவன்வாயிற்சொல்."

இந்த ஜகமுழுவதும் பொருள்வழிப் பட்டது. பொருளிழந்தவனுக்கும் உயிரிழந்தவனுக்கும் பேதமில்லை. பணமில்லாதவன் பிணம். பொருளைத் தேடுதலும் துன்பம், பொருளைக் காப்பாற்றலும் துன்பம், பொருள் குறைந்தாலும் துன்பம், பொருள் கெட்டுப்போனாலும் துன்பம், பொருள் செலவழிந்துவிடினும் துன்பம்; பொருளினால் இத்தியாதி துன்பமுண்டு. பொருளினால் தீர்க்காயுளை அடையலாகுமோ? எமவாதையினின்று தப்பலாகுமோ? ஆகாது. பொருள் குடியைக் கெடுக்கச் சொல்லும், கொலைபுரியச்சொல்லும், கொலை புரிந்தோரைக் காட்டிக்கொடுக்கும், சிநேகத்தைப் பிரித்துவைக்கும், சேர்த்துவைக்கும். "பொருளீன்று பொல்லாதவனானேன்" என்று பலருங்கூறுவர். பொருளே தேடத் தக்கது, பொருளே காப்பாற்றற்குரியது. பொருளுடையானே உயர்குலத்தான் ;'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே,' "எட்டி எட்டினமட்டிலும் பணம் பாதாளமட்டிலுமிறங்கும்"— என்று கூறுவர். படிப்பில்லாதவனாயினும் பணமிருந்தாலவன் சொல்லை யாவரும் ஏற்றுக்கொள்வர். பொருளுடையானே புகழுடையான் பணமுள்ளவனே குணமுள்ளவன்.

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம்—திருமடந்தை
ஆம்போ தவளோடாம் அவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

ஆகையினால், பொருளைத் தேடவேண்டிய தவசியம். அதற்கு வாய்மையே முக்கியம்.

"வாய்மை தப்பினார்களிந்த மாநிலத்தி லீனராய்த்
தீய்மையுற்று மேலுளோர் பழிக்கவே இரிந்துபின்
தூய்மையற்ற கும்பியுள் துளைந்தமுங் குவாரென
வாய்மனுப் பகர்ந்தவேத சாகைமுற்று மறையுமே."

பொருளைத் தேடினால் போதாது; அதைச் செலவிடுவதில் கண்ணுங் கருத்துமா யிருக்கவேண்டும். நம்மினத்தில் அநேகர் வேலை கற்கும் மைந்தர்களுக்கும் சீடர்களுக்கும் செல்வம் (தங்கம், பொன், வெள்ளி, ரூபாய்) கொடுத்து, அச்சிறியோர்களைக் கூடத்திற்கு ஜெமானர்களாகப் பாவித்து, அவர்கள் நடை குணம் முதலியவற்றை ஆராய்ந்து பாராமல் அவர்களிடம் பெட்டிச்சாவியைக் கொடுத்து அவர்கள்பால் கூடத்தை ஒப்புவிப்பதினால், அக்கூடம் அவகூடமாகி அச்சிறியார் சீக்கிரத்தில் கெட்டு சீர்குலையவும் அபகீர்த்தி யுண்டாகவும் இடமேற்படுகிறது.

மைந்தர்களையும் சீடர்களையும் சிட்சை செய்து நல்ல வழியில் நடத்தினால் நன்மையுண்டாம். அடித்து வளர்க்காத பிள்ளையும் முறுக்கி வளர்க்காத மீசையும் வாயிலேய்க்குமென்பது உலகமொழி யல்லவா? ஒரு நாளைக்கு 2-ரூபா வந்தால் முப்பத்திரண்டு 60 என்று கணக்குக்கூட்டி செலவு செய்து கடைசியில் கடன்காரர்களாகிக் கலங்கிநிற்பது நம்மினத்தாரிடம் பிரத்தியக்ஷம். 30-நாளைக்கும் இவ்விதம் இரண்டு இரண்டு ரூபாய்க வருமா என்று பெரும்பாலார் யோசிப்பதில்லை. எதிலும் கணக்கும் கருத்தும் வேண்டும்.

நன்மைந்தனால் பெற்றோரும், உற்றோரும், யாவரும் நலனடைகின்றனர். அறிவில்லாத பிள்ளையால் அல்லலுற்று அவமானமடைகின்றனர். பன்றியுடன் கூடிய



கன்றும் மலமுண்ணும் என்பதுபோல் துன்மதியுடையவனோடு ஒருவன் கூடினால் தூய் தன்மையை அரிதாக்கித் தீயவழிகளைப் பின்பற்றி ஒழுகுவான். துன்மதியுடையோன் நன் மதியுடையோனைப் போயணுகில் தன்எண்ணத்தைப் பூர்த்திசெய்ய மிலையத்தனைத் தீமையை விளைக்கின்றான். களிமகனொருவன் நாணமின்றி கட்குடித்து கண்டோர் நகைக்க இடங்கொடுத்து உன்மத்தனைப்போல் பேசி உடை சோர்ந்து ஊரெங்கும் திரிந்து உழன்று படுக்கப் பாயுமற்று ஒட்டுத்திண்ணை தாழ்வோடும் சாய்ந்தும் பாழிடங்களில் கிடந்தும் பார்த்தோர் பரிகசிக்க ஆளாகி நிற்கின்றான். இக்கொடுமையெல்லாம் மக்கள்பால் வைக்கப்பட்ட செல்வத்தால் வந்ததென்னலாம்.

"மாவினை விருவரு மருவி மாசிலாப்
பாலரைப் பயின்றபின் படிப்பியா துயர்
தாலமேற் செல்வமாய் வளர்த்தல் தங்கட்கோர்
காலனை வளர்க்கின்ற காக்ஷிபோலுமே."

ஆனது பற்றி, தமது மைந்தர்களை நன்னெறியிற் செலுத்தி வித்தைகள் கற்பிக்கவேண்டும். கற்பியாதுபோயின் பின் அம்மைந்தர்கள் தமது பெற்றோரை நினைத்து,

"அள்ளிக்கொடுக்கின்ற செம்பொன்னும்
ஆடையும் ஆதரவாய்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்குமே
என்னைக் குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற
காலத்திலேஎன் துடுக்கடக்கிப்
பள்ளிக்குவைத்திலனே
தந்தையாகிய பாதகனே"

என்று நிந்திக்க நேரிடும்.

கல்வியில்லாதவர்க்கு நல்ல சாவகாசம் ஏற்படாது. தீய சேர்க்கையினால் நற்குணமும், லாலனையால் பிள்ளைகளும், வாணுதலின்மையால் மனையும், மூதோரின்மையால் குடும்பமும், கட்குடியால் நாணமும், கணக்கில்லாததால் லாபமும், பட்டரைக்குப் பட்டரை ஓடுவதால் வேலையும், முறைமைக்கோட்டினால் மேல்நோக்கமும், கோபத்தினால் தர்ம குணமும், விபசாரத்தினால் புகழும், புகையிலையினால் ஆண்மையும் கெடுதல் நிச்சயமாம். சூதாட்டத்தினால் நாட்டை விட்டுக் காட்டடையடைந்து கஷ்டப்பட்ட நளன் பஞ்சபாண்டவர் முதலாயினோரைப்பற்றி அறிந்திருக்கின்றோமாதலினால், சூதாட்டத்தின் இழிவை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

பொருளுக்கு தானம், போகம், நாசமென மூன்று நிலையுண்டு. தக்கவர்களுக்குக் கொடுத்தல் தானம். உண்டு, உடுத்தி, பூசி முடித்துக்களிப்படைதல் போகம். தர்மஞ் செய்யாமலும் தான் அனுபவியாமலும் கள்ளர் வேசிகள் முதலாயினோரால் கவரப்படுதல் நாசம். பொருளைத் தர்மத்தின் வழி செலவிடவில்லையானால் அதன் தாயத்தாராகிய அக்கினி, கள்வன், அரசன் என்ற மூவரும் வெகுள்கின்றனர். தான் சம்பாதித்த பொருளை எவனொருவன் தர்மஞ் செய்யாமலும் தானும் அனுபவியாமலும் இருக்கின்றானோ அவனது பொருள் நாசமாகும். ஆகையால், திரவியத்தைத் தர்ம வழிகளில் செலவிடவேண்டும். அங்ஙனம் செலவிடுவதில் பொருள் குறையினும், வைரம் சிகப்பு முதலியவற்றை சாணையின் பிடித்துத் தேய்த்தலால் ஒளி மிகுவதுபோல் மேன்மைமிகும். தர்மத்தையே சிறப்பாய்க்கொண் டொழுகிய நாயன்மார்களும் மற்றவரும் மேன்மையும் புண்ணியமும் புகழும்பெற்றார்களேயன்றி இழிவடையவில்லையே! இம்மை மறுமையிலடையக்கூடிய பயன்களுக்கு இச்செல்வமே கருவியாதலால், நம்மவர்கள் அதை நல்ல வழியில் சம்பாதித்து தர்மமான வழியில் செலவிட்டு புண்ணியத்தையும் புகழையும் பெற்று நீடூழிகாலம் வாழும்படி விஸ்வேசுரன் அருள்புரிவானாக.

---

**வேதமதி பெறும் போட்டி வியாஸம்.**—பிராணி ஹிம்ஸை நிவாரணச் சங்கத்தார் சிறந்த வியாசங்கள் எழுதுகிறவர்களுக்கு வருஷா வருஷம் வெகுமதிகளைக் கொடுத்து வருவது போல, இந்த வருஷமும் வெகுமதி கொடுப்பார்கள். "உலகத்தில் பிரக்கியாதி பெற்றவர்களும் அவர்கள் பிராணிகளை நடத்தும் விதமும்" என்ற விஷயத்தைப்பற்றி ஆங்கிலத்திலும் தேசபாஷைகளிலும் எழுதப்படும் சிறந்த வியாசங்களில் ஆங்கிலத்தின் சிறந்த வியாசத்திற்குத் தங்கப் பதக்கமும் தேச பாஷையில் சிறந்த வியாசத்திற்கு வெள்ளிப் பதக்கமும் பரிசுகள் கொடுக்கப்படும். அடுத்த வருஷம் பிப்ரவரி மாதம் முதல் தேதியிலாவது அதற்கு முந்தின தேதியிலாவது ஆனரெரி செக்ரிடேரிக்குச் சேரும்படியாய் அவ் வியாசங்களை அனுப்ப வேண்டும். சென்னை ராஜதானியில் (மைசூர் உட்பட) எந்தக் காலேஜிலாவது அல்லது ஹைஸ்கூலிலாவது வாசிக்கும் மாணாக்கர்கள் அல்லது பெண்கள் எழுதி யனுப்பலாம்.

## ஆரோக்கியத்திற்கு ஆதாரமான இந்திய மலைப்பிரதேசங்கள்

வைத்தியகலாநிதியில் ஸ்ரீ ராமநாராயண L. M. S. பின்வருமாறு எழுதுகிறார்:

வாசஸ்தலத்தை ஒருவன் மாற்றவேண்டியிருக்கும்போது அவன் மலைப்பிரதேசம் போவது நலமென்று கருதப்பட்டு வருகிறது. வைத்தியர்கள் தமது பிணியாளிகளை மலைகளின்மேல் போய் வசிக்கச் சொல்வது சிறந்த சிகித்ஸா கிரமங்களில் ஒன்றென்று நினைக்கின்றனர். வைத்தியம் செய்யும் அனைவருமே இவ்வாறு தமது பிணியாளிகளுக்கு அறிவிப்பது வெகு ஸாதாரணமாய் விட்டது. மலைகளல்லாத ஸம நிலங்களில் வசிப்பவரான வைத்தியர்கள், அவர்கள் குறிப்பிடும் மலைப்பிரதேசத்தின் குணகுணங்களைப் பற்றிய அறிவும் அனுபவமும் இல்லாதவர்களாகவே, பிணியாளிகளின் தன்மைகளைப் பகுத்தறியாமலே, அவ்விதப் பிரதேசங்களுக்கு வாஸஸ்தலத்தை மாற்ற வேண்டுமென்று ஏதோ கூறிவிடுகின்றனர்.

மலைப்பிரதேசங்கள் யாவும் அவற்றின் பூஸாரம் முதலியவற்றால் அனைவரையுமே ஸ்வஸ்த்தம் செய்யக் கூடியவையென்றும், அவை எவ்வித வியாதிகளிலும் தீங்கு விளைவிக்காதவையென்றும், ஆகவே அவ்வாறு அவற்றில் வசிக்கத் தூண்டுவது நலமென்றும் அவ் வைத்தியர்கள் அபிப்ராயப் படுகிறார்கள் என்றறிகிறோம். குன்றுகளெல்லாம் ஸர்வரோகநாச ஔஷதமாக அவர்களுக்குத் தோற்றுகின்றனபோலும். எந்த வியாதியினால் ஒருவன் துன்பப்படுகிறானோ அவ் வியாதியை நிவாரணம் செய்வதற்கான குணங்கள் தாம் குறிப்பிடும் மலைப்பிரதேசத்தில் அமைந்திருக்கின்றனவா இல்லையா என்று நிதானித்து நிச்சயிக்காமலே, அநேக வைத்தியர்கள் தமது பிணியாளிகளை ஏதேனும் ஒரு குறிப்பிட்ட மலையின்மீது வசிப்பதற்கு தமது உவக்கத்தக்க உத்தரவை அளித்து விடுகின்றனர். பகுத்தறிவின்றியே வைத்தியர்கள் செய்த உபதேசத்தினால் நன்மைக்குப் பதிலாக அநேகம் பிணியாளிகள் தீமைக்கே ஆளானார்கள் என்று எமக்குத் தெரியவருகிறது. சில கேஸுகளில் ஏழைப் பிணியாளிகள் சரீரகிடனிழந்து, திரவிய நஷ்டமுமடைந்து வீணில் வருத்தப்படுகையில், அவ்வித பிணியாளிகளை மலைப்பிரதேசங்களிலிருந்து ஸம பூமிகளுக்கு வரும்படி இவ் வியாஸமெழுதியவர் போதிக்க நேர்ந்ததுண்டு.

சென்ற வருஷத்தில் விம்லாவுக்கு ஸமீபத்திலுள்ள ஸோலன் என்னும் ஊரிலுள்ள ஒரு தாசில்தார் ரத்த ஸந்நிபாத (apoplexy) ரோகத்தினால் வருந்தி திடீரென்று மாண்டு போனார்; ஏற்கனவே தமனிகள் (arteries) எனப்படும் செவ்விரத்தக் குழாய்களின் தாபத்தினாலும், ஹ்ருதய கபாட வியாதியினாலும் அவர் கஷ்டப்பட்டதுண்டு; அந்த நிலைமையில் அவரை அங்குள்ள மலையின்மேல்சென்று வசிக்கும்படி வைத்தியர் உபதேசிக்க, அவரும் அவ்விதமே செய்து, பிறகு வெகு சீக்கிரத்தில் வீணே உயிர்துறக்க நேரிட்டதென்பது விஸனிக்கத் தக்கது. மற்றொருவர் காசத்துடன் (Bronchitis) கஷ்டப்பட்டு, அவருடைய நுரையீரல்கள் வீக்கங்கொண்டு அவஸ்தைப்படுகையில், அவரும் இவ்வருஷம் ஸோலன் என்னும் மலைப்பிராந்தியத்திற்கு அனுப்பப்பட்டார்; அவர் அவ்விடம் சென்றவுடனே அவருடைய வியாதிக் குறிகள் இன்னும் கேடான அவஸ்தையை யடைந்தன. ஆனால், சில பிணியாளிகள் அவர்களுடைய நண்பர்களின் ஹித வார்த்தைகளுக் கிணங்க மலைப்பிரதேசங்களில் சென்று வசித்து வருகையில் தமக்குத் தாமே அவ்வித இடமாறுதலால் மேலான ஸௌக்கியத்தையும் அடைந்து வந்திருக்கின்றனர்.

இவ்விஷயத்தில் அநாவசியமாய் ரோகிகளுக்கு நேரிடும் செலவுகளும், அலைச்சலும், தேஹ சிரமமும், மனோசபங்கமும், முக்கியமாய் வைத்தியரிட மேற்படும் நம்பிக்கைக் குறைவும், வாஸ்தவமாகவே தத்துவங்களை யுணர்ந்த சிறந்த வைத்தியர்களுடைய வார்த்தைகளிலும் அவநம்பிக்கை ஸம்பவிப்பதற்கு ஆதாரமாய், அதனால் வைத்தியர்களும் பரிசாரகம் செய்பவரும் அப்பிணியாளிகளுடன் பலவிதமான கஷ்ட நஷ்டங்களுக்கு உட்படவேண்டி வருகின்றது. எல்லா வைத்தியர்களும் தாம் பிணியாளிகளை அனுப்புவதற்கென்று உத்தேசிக்கும் மலைப்பிராந்தியங்களின் பூஸார முதலிய தன்மைகளையும், அவ்விடங்களில் வசிப்பதால் ரோகிகள் அடையும் நற்குணங்கள் அல்லது துர்க்குணங்களின் மாதிரிகளையும் அப்போதைக்கப்போது குறித்து எழுதி வைத்துக்கொள்வது உபயோகமாயிருக்கும். இடம் மாற்றுவதால் வியாதி நிவாரணம் செய்யக்கூடுமென்னும் விஷயமாய் ஒரு வைத்திய பத்திரிகையின் ஆசிரியர் கூறியுள்ள விஷயத்தை இதனடியில் குறிப்பிடுகின்றேன்.



இந்தியாவிலுள்ள மலைப் பிரதேசங்களின் இயற்கைத் தன்மைகளைக்கொண்டு, அவற்றைப் பின்வருமாறு பிரிக்கக்கூடும். (1) ஆகாயபாரம் குறைந்திருத்தல், வாயு சுத்தமா யிருத்தல், ஸமுத்திரத்துக்குமேல் ஓஜோன் (ozone) என்னும் பிராணவாயு, ஜலவாயு முதலியவற்றின் சேர்மானம் பிரமாணம்; (2) ஸம பூமிகளை விட உஷ்ணம் குறைதல், உயரம் அளவில் அதிகரித்து வர குளிர்ச்சியும் அதிகரித்தல்; (3) ஆகாயத்தில் ஈரப்பசை அதிகமாதல், மழை மிதமிஞ்சிப் பெய்வதுடன் மாரிகாலமும் நீடித்திருத்தல், (4) மாஞ் செடிகள் வெகு செழிப்பாக வளர்ந்திருத்தல்; (5) ஒதுக்கிடமான கணவாய்களைத் தவிர்த்து மற்ற விடங்களில் பலமான காற்று வீசுவதால் நேரிடும் நிலைமை; (6) சூர்ய ரஸ்மிகள் நேராகப் பாய்ந்தும், வெகு உயரமா யிருப்பதால் (சுமார் 16000-அடிகளுக்கு மேல் உயர்ந்திருப்பதால்) ஈரம் விசேஷமாகக் கதித்து மாம் கொடி முதலியவை வளர முடியாமல், பனியும் மிதமிஞ்சிப் பொழிதல் என்று மலைப் பிரதேசங்களை ஆறு வகுப்புகளாக அவற்றின் குணங்களை அல்லது பூஸார நிலைமைகளைக்கொண்டு வகுக்கவேண்டிவருகிறது.

மலைப்பிராந்தியங்களில் பொதுவாக இருதுக்களின் கால அளவானது ஸமநிலங்களிலுள்ளவை போலவே பெரும்பாலும் இயற்கையி லேற்பட்டிருக்கின்றன. கோடைகாலமானது, ஏப்ரல் மாதம் முதல் ஜூன்மீ வரையில் நீடிக்கும். அந்த ஸமயம் ஸமபூமிகளைவிட பர்வதங்களின் மேல் 10-முதல் 20-டிக்ரிவரையில் உஷ்ணம் குறைவாயிருக்கு மாகையால், ஸமபூமியில் எரிக்கும் தாபத்தைத்தாங்காதவர்கள், மலைகளின்மேல் சென்று வசிக்க விரும்புவார்களானால், அதற்கு அதுதான் தகுந்த காலமாகும். இந்தியர்கள் இயற்கையாகவே கோடைகாலத்து அபரிமிதமான உஷ்ணத்தையும் தாங்கக்கூடியவர்களாகக் காணப்பட்டாலும், ஐரோப்பியர்கள் அவ்வாறு அதைப் பொறுக்கக்கூடாத சரீரநிலைமை யுடையவர்களாயிருப்பதால், இக்கோடை காலங்களில் அவர்களில் செல்வாக்குள்ள பெரும்பாலோரும் இந்தியர்களில் சிலரும் மலைகளின் மேல் சென்று வசித்துவருவது வழக்கமாயிருந்து வருகிறது.

பர்வதப் பிராந்தங்களில் மாரிகாலம் ஜூன் மாத மத்தியில் ஆரம்பித்து, செப்டம்பர் முடியவும் நீடித்திருப்பது இயல்பு. இக்காலத்தில் குன்றுகள் திரள்திரளான மேகங்களாலும் மூடுபனிகளாலும் சுற்றிலும் சூழ்ந்து கொள்ளப்படும்; அபரிமிதமான மழைப்பெருக்கால் மலைகளிலிருந்து இடைவிடாமல் வெள்ளம் புரண்டோடும்; ஆகாயத்தில் ஈரம் எவ்வளவுஅதிகமாகக் கூடுமோ அவ்வளவு அதிகமாக விருத்தியாகும். ஒவ்வொரு மலையில் ஒவ்வொரு விதமாக மழையின் அளவு சில ஸமயம் வித்தியாஸப் பட்டபோதிலும், அப்பொழுதும் ஒரு மலையின் ஒரு பாரிசத்தில் மழை அளவிற் குறைந்திருக்கையில் மற்றொரு பாரிசத்தில் அளவுக்கு மிஞ்சியே பொழிவது இயல்பாதலால், மொத்தத்தில் மாரிகாலத்தில் மலைகளின்மேல் மிகவும் கனமாகவே மழை பொழிவதாக நிச்சயமாய்க் கூறலாம். வியாதியஸ்தர்கள் இக்காலங்களில் மலைகளில் வசிக்கக்கூடாது; அதிலும், சுவாஸாசய வியாதிகளால் வருந்துபவர் மாரிகாலங்களில் மலைகளில் வசிப்பது முற்றிலும் பிசகு. ஆனால், இந்த ஸமயங்களில் மலைப்பிராந்தங்களில் ஆகாயம் விஷமஜ்வர விஷயங்கள் (malaria) மற்றும் பலவிதமான தோஷங்கள் முதலியவை கழுவப்பட்டு சுத்தமாக்கப்படுவதால், மற்ற விஷயங்களில் ஜனங்களுக்கு இவ்விடம் அந்தக் காலங்களில் விசேஷ கெடுதியை யுண்டுபண்ணுவதில்லை.

இலையுதிர் காலமானது செப்டம்பர் கடைசி வாரம் முதல் டிசம்பர் வரையில் நீடிக்கும். மலையில் வசிக்க வேண்டி விரும்புவார்கள், அல்லது அவ்வாஸத்திற்குரிய பிணியாளிகள் இக்காலங்களில் அவற்றின் மீது வசிக்கப் போனார்களானால் மிகவும் அப்பிரதேசம் அவர்களுக்கு அனுகூலமாகவும் மனதுக்கு மனோஹரமாகவும் இருக்கும். அப்பொழுது ஆகாயம் சரீரத்திற்கு மிகவும் ஆரோக்கியகாரமா யிருக்கும்; மலேரியா என்னும் விஷமஜ்வரவிஷம் எந்த மலைகளில் விசேஷமாயுண்டோ அந்த மலைகளின் ஆகாயம் இக்காலங்களில் மிகச் சுத்தமா யிருக்குமாகையால், அப்பொழுது மலைகளின்மேல் எல்லோரும் ஸாதாரணமாய் சரீர ஸுகத்திற்காக வசித்து வரலாம்.

மலைகளின்மேல் டிசம்பர் முதல் மார்ச்சு வரையில் குளிர்காலம் தொடர்ந்திருக்கும். இக்காலத்தில், தாழ்ந்த குன்றங்கள் மிக்க ஆனந்தகரமாகவும், சரீரத்தில் பலம்

கொடுக்கக் கூடியவையாகவு மிருக்கும். ஆகாயம் குளிர்ந்தும், ஈரப்பசையற்று இன்பந்தரக் கூடியதாகவும் இருக்கும். தேஹ நிலைமைக்கு ஒருவாறு நூதனமான செழிப்பை யுண்டுபண்ணி மனதையும் இக்காலம் உத்ஸாஹப்படுத்தும். ஆனால், உயரமான மலைகளில் பனி மிகுதியாகப் பெய்வதால், காலநிலை வெகு தீவிரமான வாட்சியையும் குளிர்ச்சியையும உண்டுபண்ணக்கூடியதாய்விடு மாகையால், தேஹத்திற்கு அப்பொழுது அவ்விடமானது பலஹீனமுண்டாக்கிவிடும்.

உன்னதமான பர்வதங்களின் மேல் வஸிப்பது ஆரோக்கியமான திடகாத்திரம் வாய்ந்த மனிதர்களுக்கும் முதலில் மிக வருத்தமாகவே இருக்கும். அதிக குளிரால் சர்மம் மிகச் சுருக்கங்கொண்டு வியர்வை முற்றிலும் தடுக்கப்படுவதன் காரணமாக, வ்ருக்கங்கள் என்னும் மூத்திரகுண்டிக்காய்களின் (Kidneys) வேலை அதிகரித்து விடுகிறது. சரீரத்தில் சில அவயவங்கள் அதிகக் குளிரால் அதனதன் வேலையைச் செய்யமுடியாமலிருக்க, இயற்கையிற் செய்யக்கூடிய வேலையிலும் அதிக வேலையை இருதயம் செய்யவேண்டி நேரிடுகிறது; நுரையீரல்கள் வெகு ஆழ்ந்து பெருமூச்சுவிடவேண்டியிருப்பதோடு, அவ்விதம் மூச்சுவிடும் அளவும் அதிகப்பட்டு, அவ்வவயவங்களும் வெகு ப்ரயாஸப்படும்; கல்லீரலும் மிகச் சுருக்கங்கொண்டு, பித்தத்தை நன்கு வெளிப்படுத்தமுடியாமல் சிறிது தொந்தரைக்கு உட்படும்; அவ்விடத்திய ஈரமானது குடல்களில் கபம் வ்ருத்தியாகக் காரணமாய், அதன் மூலமாக அதிஸாரத்திற்கும், சீத பேதிக்கும் ஹேதுவாய் விடுகிறது.

ஆகவே, எப் பிணியாளிக்காவது சரீரத்தின் உட்புற அவயவங்களில் ஏதேனும் ஒன்று குறிப்பிடக் கூடியவாறு எவ்வித வியாதியினாலாவது வருந்துவதாகத் தோற்றுமானால், இந்தியாவில் சுகாதாரத்திற்கு ஏற்றதென்று கருதப்படும் மலைப் பிரதேசங்களில் பிரயாணிகளை வஸிக்கப் போகும்படி ஏற்பாடு செய்வதில் வைத்தியர்கள் வெகு ஆலோசனை செய்து தயது கவனத்தைச் செலுத்தவேண்டும் என்பது பொதுவானதோர் விதியாகும்.

ஸமபூமிகளின் உஷ்ணத்தினாலும் விஷ ஜ்வர விஷயத்தினாலும் ஸம்பவிக்கும் வியாதிகளில் இத்தேசத்திய மலைப்பிராந்தங்கள் அவற்றின் குண விசேஷங்களால் மிகவும் நற்பயன் விளைவிக்கக் கூடியவைகளா யிருக்கின்றன என்பது அனுபவத்தில் வந்த விஷயம். விஷஜ்வர விஷயத்தின் ஸம்பந்தமுள்ள எவ்வித ஜ்வரத்தினாலாவது ஒருவன் வருந்தியபோதிலும் அது முறைக் காய்ச்சலாகவோ, விடா ஜ்வரமாகவோ, பித்த ஜ்வரமாகவோ, வேறு எவ்விதமாயிருப்பினும் அவ்வித பிணியாளுகளுக்கு மலைப் பிரதேசம் ஏற்ற வாஸபூமியாகும்; ஆனால், விஷம ஜ்வரங்கள் சீதபேதி முதலிய இதர வியாதிகளுடன் ஸம்பந்தப் பட்டிருந்தால், அந்நிலைமைக்கு பருவதங்கள் அனுகூலமானவையல்ல. விஷமஜ்வரத்தினால் ப்லீஹமென்னும் மண்ணீரல் வீங்கியிருந்தால், அப்பொழுது பாண்டு வென்னும் இரத்தக் குறைவு தொடர்ந்திருந்தாலும் இல்லாவிடினும், மலைமேல் வஸிப்பதால் வெகு மேலான குணங்கள் ஏற்படுவதுண்டு. வெகு முரண்பட்ட ப்லீஹவீக்கத்தில் பாண்டுரோகமும் வெளிப்படையாகத் திரை செய்வது முற்றிலும் ஏற்ற சிகித்ஸையாகும்.

விஷமஜ்வர ஸம்பந்தத்தினால் கல்லீரல் சிறிதுசுருங்கியிருக்கையிலும் மலைமேல் வஸிப்பது ஒருவாறு குணந்தரக்கூடியது. ஆனால், கல்லீரலின் வியாதி வெகு உக்கிரமாயிருந்தால் மலைப் பிரதேசத்தில் வாஸம் செய்வது மிகக்கெடுதி யுண்டுபண்ணும்; அவ்விடத்தின் குளிர்ச்சியானது கல்லீரலை முன்னிலும் அதிகமாகச் சுருங்கச் செய்து ஆபத்தை விளைவிக்கக்கூடியதா யிருக்கும்.

சீதபேதியினால் வருந்துபவருக்கு எந்த நிலைமையிலும் மலைப்பிரதேசவாஸம் பிரயோஜன முண்டுபண்ணுவதில்லை. மத்திம வயதிலுள்ளவர்கள் அதிஸாரம் அல்லது அஜீர்ணபேதியினால் துன்பப்படுவார்களானால், அதே இடம் அவர்களுக்கு அனுகூலமா யிருப்பதுண்டு. சம நிலங்களில் அதிக வெப்பத்தினால் சிறு குழந்தைகளுக்கு அதிஸாரமுண்டானால், அவ்வித நோயைத் தீர்ப்பதற்கு அவ்விடத்தை மாற்றி மலைகளில் வஸிக்கச் செய்வது உபயோககரமா யிருக்கும்.

க்ஷயரோகத்தின் ஆரம்பதசையில் அப்பிணியாளிகளை இலையுதிர்காலத்தின் அல்லது குளிர் காலத்தின் முற்பகுதியில் மலைகளுக்கு அனுப்புவது உசிதமாம்; அப்பொழுது காலநிலை பிரகாசித்து வெளிச்சந்தரக் கூடியதாயிருப்பதுடன், ஆகாயமும் உலர்ந்து ஈரமில்லாமலிருக்கும். ஆகையால், அவ்வித வியாதியஸ்தர்கள் அவ்விடங்களில் ஸௌக்கியமடையக்கூடும். ஆனால், ஜ்வரம் மிதமிஞ்சிய வியர்வைமுதலிய துர்க்குணங்களுடன் கூடிய முதிர்ந்துபோன க்ஷயரோக முள்ளவர்களுக்கு இன்னும் கெடுதியே அதிகமாய் விருத்தியாகும்.

சுவாஸம் அல்லது சுவாஸகாஸ ரோகிகளுக்கு மலைப் பிரதேசங்களில் இவ்வித குணங்கள்தான் உண்டாகுமென்று திட்டமாய்க்கூறுவது ஸாத்தியமல்ல. சிலபேர் மலையில வஸிப்பதால் ஏதோ சிறிது இவ்வியாதியிலிருந்து மீளக்கூடுமென்று கூறினாலும், பெரும்பாலோர் கேவலம் ஹீனஸ்திதியையே அடைவது ஸகஜமாயிருந்துவருகிறது. உரக்ஷசம் என்னும் மார்வலி, மார்புக்குள் கட்டியுண்டாதல் முதலிய உபத்திரவங்கள் உண்டாயிருக்கும்போது மலையில் வாசம் செய்வது மிகவும் கெடுதியையே விருத்திசெய்யும்.

இரைப்பையின் காரியங்கள் கோளாறடைவதால் ஸம்பவிக்கக்கூடிய அக்னிமாந்த்யம் அல்லது அஜீர்ண வியாதி, பித்தவிகாரம் முதலியவை மலைகளில் வசிப்பதால் ஸ்வஸ்தமாய்விடும். ஸமபூமியின் அதிக உஷ்ணத்தினாலும் அதிக வேலை செய்வதாலும் உண்டாகும் அஜீர்ணமும் பசியின்மையுங்கூட நிவர்த்தியாகும்.

ஏதேனும் பலமான வியாதிகளால் பீடிக்கப்பட்டு அவற்றிலிருந்து ஸ்வஸ்தமானவர்களுக்கு வேறு விதமான கோளாறுகள் எந்த அவயவத்திலும் ஏற்படாமலிருந்து ஸாதாரண பலஹீனம் மாத்திரம் விசேஷித்திருக்குமானால், அவர்களும் பர்வதப் பிராந்தங்களில் வஸிப்பதால் நற்குணம் பெறுவார்கள். ஸமநிலங்களின் வெப்பத்தினாலும், அதிக வேலையினாலும் இளைத்துப்போயிருப்பவருக்கும் மலைப்பிரதேசங்கள் முக்கியமாய் ஸௌக்கியந் தரக்கூடியவையாம். ஆனால், பலஹீனத்துடன் கீல்வாயு, வ்ருக்கங்களென்னும் மூத்திரகுண்டிக்காய்களின் கோளாறு, ஹ்ருதயம் வியாதிகொண்டிருத்தல் என்னும் இவை தொடர்ந்திருக்குமானால் மலைப்பிராந்தவாஸம் விலக்கத்தகுந்ததாகும். ஸமபூமியின் உஷ்ணாதிக்யத்தினால் ஸம்பவிக்கும் கட்டிகளும், சொறி சிரங்குகளும், பிரமேகபிடகை (carbuncles) என்னும் மேஹக் கட்டிகளும், மற்றும் சர்மத்தைப்பற்றிய அநேகம் வியாதிகளும் பர்வதங்களின் மீது வஸிப்பதால் மிக நன்றாக நிவர்த்தியாம். பிணியாளியின் தேஹம் மேலான ஸௌக்கிய நிலைமையும் பெறும்.

## கோட்டாற்று விசேஷங்கள்

கோட்டாற்றில் தேசிகவிநாயகர் கோவிற் றருமகருத்தா விதானம்வகித்துவருகின்ற தருமசீலராகிய ஸ்ரீமான் முதலாளி இராமநாதன் செட்டியார் அவர்கள் மூன்றாந் தலைமுறைப்பாட்டனில் ஏற்பட்ட பந்துவில் வடிவேல் செட்டியார் என்றொருவர் இருந்தனர். அவர்கோட்டாறு மகாவித்துவானும், ஸ்ரீகச்சியப்ப சிவாச்சாரியர் இயற்றியருளிய கந்தபுராணத்தை முற்றுங் கீர்த்தனைரூபமாய்க் கந்தநாடகமாகப் பாடியருளியவருமாகிய ஸ்ரீமந், நீலகண்டன் ஆசாரி அவர்களிடம் கல்வி கற்குங்காலை தமது மரபுக்குரிய தொழின் முயற்சியில் ஊக்குதலின்றி, வேதாந்த நூற்களைக் கற்றலுங் கேட்டலுமாக முயன்று வந்தது கண்ட ஆசாரி அவர்கள் தாய்தந்தையர்க் கறிவிக்கவும், அவர்கட்கு வடிவேல் செட்டியார் ஏகபுத்திர ராதல்பற்றி துறவியாகச்சென்று விடுவரோ என்று மிகக்கவன்று பரிதபிக்கலாயினர்.

பிறகு ஸ்ரீசெந்திற் சேந்தன் பக்தியிற்சிறந்த நீலகண்டன் ஆசாரி அவர்கள் தேற்றுமொழிகளே, செட்டியார் அவர்களைத் திடீரெனத் துறவிற் செல்லாதிருக்கும்படி செய்ததென்றெண்ணற்பாலது. ஸ்ரீ கந்தமூர்த்தி பக்தியைப் பெரும்பொருளாகக்கொண்டு, தமது பெருங்கல்வி வன்மையால் செந்தில் எங்கோன்மீது மகாவித்வான் நீலகண்டன் ஆசாரி அவர்கள் இயற்றிய தமிழ்க்கீர்த்தனைகள் பல ஆயிரக்கணக்கில் உள்ளன. அவைகள் வடமொழி, தெலுங்கு முதலிய பாஷைகளில் பக்தி கிருதிகள் கீர்த்தனைகளாகச் செய்தருளிய மகான்களாகிய ஸ்ரீ தியாகய்யர், தீக்ஷிதர் முதலியோர்களின் சாகித்யங்கள் போன்றே அடுக்கு மோனைவாய்ந்து, செந்தமிழ் நறுமணங் கமழப்பெற்று பக்திரஸந் ததும்பியுள்ளன. இதன் உண்மைகளைக் காணவேண்டுமேல், அற்புத வடிவுபெற்ற இந்த விச்சுவகர்மன் பத்திரிகையில் ஆசாரி அவர்கள்செய்த கீர்த்தனைகளை அவர்கள் பௌத்திரர் ஸ்ரீமாந் ஜி. சுவாமிநாதன் ஆசாரி அவர்களைக் கொண்டே பிரசுரிக்கும் வண்ணம் ஏற்படுத்துவேம்.

இங்ஙனம், வித்வான் அவர்கள் தகைமையை எடுத்துக்கூறியது, முற்கூறிய செட்டியார் அவர்கள் மேல் முற்றத்துறந்த ஞானியாகிறதற்குரிய நன்மைப் பான்மைக்கு, ஆசாரி அவர்கள் கல்வியும் பக்தியும் காரணமாயுளதென்க. செட்டியார் அப்பதினாறு வயதிற்றானே, உட்டுறவுகொண்டு, தேசசஞ்சாரத்தில் வெளிப்

போந்து, கோயிலூர் மடத்திற் சென்று வேதாந்த சாத்திரப்பாடங்களை கற்று வந்தனர் பலநாள். அங்கு நின்றும் பிரயாணப்பட்டவர் காசிக்குச் சென்று ஸ்ரீமத் துறவு சுவாமிகளிடந் தாங்கற்றுள்ள வேதாந்த சாத்திர நுட்பங்களைக் கேட்டறிந்து படித்தவண்ணமே சுயானுபூதி நிலையினைக் கொண்டனர். செட்டியார் அவர்களின் பரிபக்குவ மாண்பையும் அனுபூதி நிலைமையையுங் கண்ட ஸ்ரீ துறவு சுவாமி அவர்களே தமது அனுபூதி ஞானத்தா லுண்மை உணர்ந்து தெளிந்து, "நித்தியானந்தர்" எனப் பெயரிட்டழைத்தனர் வடிவேல் செட்டியாரை. இவர் தமது 32-வது வயதில், தமது ஜென்ம நகரமாகிய கோட்டாற்றுக்கு எழுந்தருளினர். அக்காலம் 1302௵ என்கின்றனர் பேரறிவாளர்.

ஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய வேதாந்த சாத்திரங்களில், இலக்ஷண விருத்தி முதலிய நூற்களும், தேசிகவிநாயகர் அடைக்கலப்பத்து முதலிய துதிகளும், திருப்புகழ்ச்சந்தக் கவிகளும் பலவுள. அவைகளில் பல அருமைக் கவிகள் இன்னும் மகாவித்வான் ஸ்ரீ கணபதி ஆசாரி அவர்கள் வீட்டில் ஏட்டுப்பிரதிகளில் இருக்கின்றன.

ஸ்ரீநித்தியானந்த சுவாமிகள் இங்கு எழுந்தருளியிருக்கும்போது அவர்கள் பால் வேதாந்த சாத்திரங்களைக் கற்ற சீடர்களில் சிறந்தவர், கோட்டாறு தமிழ் வித்வான் ஸ்ரீ நீ. கணபதி ஆசாரி அவர்களுமாவர். இவ்வித்வான் அவர்கட்கு வேதாந்த நூற்களைக் கற்றுக் கொடுக்கிறதற்கு, அக்காலத்தில் தமிழில் வேதாந்த நூற்கள் அச்சுப்பிரதிகள் இல்லாதது பற்றி, சுவாமி அவர்களே கும்பகோணம் முதலிய இடங்களில்சென்று, வேதாந்த சூடாமணி முதலிய நூற்களை ஏட்டுப்பிரதிகளாக இங்கிவர்கட்கனுப்பிக் கொடுத்தனர். இவர்களிடம் மகான் சுவாமி அவர்கள் வைத்துள்ள கருணைக் களவில்லை. கருணை மேகமாகிய சுவாமி யவர்களிடம் ஸ்ரீ நீ. கணபதி ஆசாரி அவர்கட்கு பக்தி நிறைந்துள தென்பதை வித்வான் அவர்கள் பாடிய பெருங்காவியமாகிய சாணக்கிய சூத்திர முதற் கவியிற் கண்டறியலாமன்றோ? ஆசாரி அவர்களின் பெரும்புலமையும், கீர்த்தியும் சுவாமி அவர்களின் பூர்ண கடாக்ஷம் என்றறிக.

ஷை சுவாமிகள் பெயரால் நாளது 1091-ம௵ புரட்டாசிமீ 8உயன்று ஸ்ரீ நித்யானந்த சற்குரு நாம ஷண்முக விலாச சபையென்பதொன்று கோட்டாறு நெடுந்தெருவில் ஸ்தாபிக்கப்பட்டது அப்போது கூடிய பேரவையில், ஸ்ரீமத் பிரமானந்த சுவாமி அவர்கள் அவைத்தலைவராக இருந்தனர். இவர்கள் பிறந்த நகரம் நாகர்கோவிலைச் சேர்ந்த வடசேரி. இவரது ஞானாசிரியர் கோட்டாற்றுக் கடுத்துள இடலாக்குடியில் எழுந்தருளியிருந்து விதேக முக்தி எய்திய மகா ஞானியாகிய மகான் ஆச்சிசுவாமி அவர்கள். இப்பெரு ஞானிகளின் கீர்த்தி விசேடத்தைக்குறித்து இத் தென்னாட்டில் அறியாதவர் மிகக்குறைவென் றெண்ணற் பாலது. அன்றியும், ஸ்ரீமத் ஆச்சிசுவாமிகளை நினைக்குமிடத்து மகான் ராமகிருஷ்ண பரமஹம்ஸரை ஞாபகப்படுத்துகின்றது. ஸ்ரீமத் பிரமானந்த சுவாமிகள் பாலக்காட்டு நகரத்தில் பல வருடங்களாகத் தாமதித்துளர். இவர்கள் தமிழ்ப்பாஷையில் வேதாந்த சாத்திரங்களின் பொருள் நுட்பங்களை கேட்டவர் எவருக்கும் மிக எளிதாக விளக்கிக்காட்டும் வன்மை கொண்டவர். அவற்றில் தற்காலத்தில் மேல்நாட்டு பாஷா விற்பன்னராகிய பட்டதாரிகள் கேட்கும் தார்க்கீக நியாயங்கட்கு தக்கவிடையளிக்கும் நுட்பமதியாளர். வேதாந்த சாத்திர போதனுமுறையில் சந்தேக வஞ்ஞான விபரீதங்களை நீக்கும் ஞானவான், தாம் கற்றபடியே அனுபூதி நிலைமைகொண்டொழுகுபவர். இவரது பிள்ளைத் திருநாமம் பகவதித்தாணு ஆசாரியார் என்பார். ஆன்றோர் வணங்கும் உபசாந்தமுடையவர்.

இப்பெரியோரது அவைத்தலைமையின் கீழ், ஸ்ரீமத் கணபதி ஆசாரி அவர்கள் குமாரர், ஸ்ரீமாந் ஜி. நீ. சுவாமிநாத ஆசாரி அவர்கள் "கடவுள் பக்தி"என்னும் விஷயத்தைக்குறித்து உபந்நியாசஞ் செய்தார்கள். ஆசாரியார் பூர்வீகப்படிப்புடையார் குடும்பத்தைச்சார்ந்தவர் என்பது மாத்திரமன்று, கற்றுக்கொண்டபடி ஒழுக்கமும் வாக்கு வன்மையும் இனிமையுமுடையவர். பிரசங்கத் துவக்கத்தில் "கடவுள்" என்ற பதம், பகுதி விகுதி அளவிற் பிரித்து இரண்டு உறுப்புகளாலாய தொழிற்பெயர் எனப் பல நியாயங்களால் இலக்கணங் காட்டினர். கடவுள் ஒருவர் உண்டென்பதை, எட்டு விதப் பிரமாணங்களில், விசேஷமாய் அனுமானப்பிரமாணத்தால் எடுத்துக்காட்டாகத் தழுவி சுருதி, யுக்தி, அனுபவவாயிலாகப் போதித்தனர்.

இவர் பிரசங்கஞ்செய்வதில் கால நாகரீகத்தில் பேர் போனவர் என்பது ஆன்றோர் கூற்று. சபாநாயகர் முடிவுரை வாழ்த்து வந்தனங்களுடன் அன்றைய கூட்டங் கலைந்தது. இவ்வருமை நாமம் பெற்ற சபையானது என்றும் நன்னிலைமையில் ஓங்கிவாழும்படி சர்வ சக்தியுடைய முழுமுதற் கடவுளாம் சிவபெருமான் அருள் செய்வாராக.

**சென்ற திசை வென்ற பெருமாள் பிள்ளை.**



## தொழிற்றுறைகள்

200-ஈச்சமரங்கள் 2-டன் சுத்தமாகாத சர்க்கரையைக் கொடுக்குமென்றும், அதனைச் சுத்தஞ்செய்ய 1-டன் நல்ல சர்க்கரை கிடைக்கு மென்றும், அது ரூபா 300-க்கு விற்குமென்றும் பம்பாய்க் கிரானிகிள் என்ற பத்திரிகையில் அதன் நிருபர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

*
* *

லகனவ ஹிந்து வாசிகள் சமீபத்தில் ஒரு மீட்டிங் கூடி அவ்வூரில் உயர்குலத்து ஏழை ஹிந்துச் சிறுவர்களுக்கு தொழிற்படிப்புச் சொல்லிவைக்க ஒரு தொழிற்பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அப்பள்ளிக்கூடம் ஏழை ஹிந்துச் சிறுவர்களில் உயர்தரப் படிப்புப் படிக்கச் சக்தியற்றவர்களாயும் இழி தொழில்கள் செய்து பிழைக்கப் பிரியமில்லாதவர்களாயும் திண்டாடுவோர்களின் நன்மையை கருதி ஸ்தாபிக்கப்படப் போகிறதென்று தெரிகிறது.

*
* *

பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த அம்பாலாவில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை யிருக்கிறது. அந்தத் தொழிற்சாலை அமெரிக்காசென்று கண்ணாடித்தொழில் கற்றுவந்த ஓர் இந்திய நிபுணரால் நடத்தப்பட்டு வருகிறது. அத்தொழிற் சாலையில் செய்யப்படும் கண்ணாடிச் சாமான்களை வாங்கி, அத்தொழிலையும் அத்தொழிற்சாலையையும், வடமேற்கு இருப்புப்பாதைக் கம்பெனியாரும் அயோத்தி ரோஹில்கண்ட் இருப்புப்பாதைக் கம்பெனியாரும் ஆதரித்து வருகிறார்களென்று தெரிகிறது.

*
* *

வங்காளத்தைச் சேர்ந்த ஜெஸ்ஸோர் என்ற இடத்தில் சீப்புகள் செய்யப்படும் தொழிற்சாலை ஒன்றிருக்கிறது. அதை வங்காள கவர்னர் லார்ட் கார்மிகேல் சமீபத்தில் போய்ப்பார்த்து தாமும் லேடி கார்மிகேலும் அங்கே செய்யப்படும் சீப்பைத் தான் தினமும் தலை சீவிக் கொள்ளுவதற்கு உபயோகப்படுத்தி வருகிறோம் என்று சொன்னார். மூலதனம் இல்லாததினால் அத்தொழில் அபிவிருத்தியடையாமற் போயிற்றென்று அத்தொழிற்சாலையின் மானேஜரான மிஸ்டர் M. N. கோஸ் அமிர்த பஜார் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் தமது தொழிற்சாலைக்கு இன்னும் ஒரு லட்சம் ரூபாய் மூலதனமிருந்தால், சீப்புகள் அன்னிய தேசங்களுக்கு அனுப்பப்பட்டு, குறைவில்லாமல் விற்கலாமென்று சொல்லியிருக்கிறார்.

*
* *

யுத்தம் ஆரம்பமானபிறகு ஆஸ்டிரியா தேசத்துக் கண்ணாடிச் சாமான்களின் வருகை நின்றுபோய்விட்டபடியால், பஞ்சாப் மாகாணத்தில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை தலையெடுத்து வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது. அது அம்பாலாவிலுள்ளது. லாலா பன்னலாலுக்குச் சொந்தமானது. அந்தத் தொழிற்சாலைக்கு 6-ஜப்பானியர்கள் தருவிக்கப்பட்டிருக்கிறார்களாம். அதனில் ஏராளமாய் விளக்கு சிம்னிகள் செய்யப்படுகின்றனவாம். கூடிய சீக்கிரத்தில் அதனில் கண்ணாடி வளையல்கள் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்படுமென்று சொல்லப்படுகிறது.

*
* *

கரும்பாட்டுவதற்கும் அரிசி குத்துவதற்கும் உபயோகமான யந்திரங்களை வரவழைத்து அத்தொழில்களை நடத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் கிருஷ்ணராஜபேட்டையில் (பெங்களூர்) ஐக்கிய நாணயச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு 20000-ரூபாய் மூலதனம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இச்சங்கம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. மேற்கண்ட தொழிலுக்கு வேண்டிய யந்திரங்களை வாங்குவதற்காக தொழில் வியாபாரம் டைரெக்டருக்கு முன்பணம் அனுப்பப்பட்டிருக்கிறது.

*
* *

ஐக்கிய மாகாணங்களிலுள்ள டெஹ்ராடூன் என்னும் நகரில் ஒரு புதியதொழிற்சாலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு "டிக்ஸன்கெமிகல் கம்பெனி" என்று பெயர். பலவிதைகளிலிருந்து எண்ணெய் இறக்கிச் சுத்தப்படுத்துவதும், ஓமத்திலிருந்து திராவகம் இறக்குவதும் அக் கம்பெனியின் நோக்கம். அதை ஒரு ஐரோப்பியர் ஏற்படுத்தியிருக்கிறார். எண்ணெய் இறக்கிச் சுத்தப்படுத்துவதற்குப் புது மாதிரியான யந்திரங்கள் இருக்கின்றன. ரஸாயன சாஸ்திரத்தில் தேறிய ஒருவர் அவ்வேலையைக் கவனித்துவருகிறார். அது பிரிட்டிஷ் கம்பெனியேயாகும். இதுவரையில் ஆஸ்டிரியாவிலிருந்தும் ஜெர்மனியிலிருந்துமே இந்தியாவுக்குக் கிடைத்துவந்த பலவகை எண்ணெய்கள் அக்கம்பெனியினால் தயாரிக்கப்படும். அக்கம்பெனி இறக்கி

யிருக்கும் எண்ணெயானது இதுவரையில் ஆஸ்டிரியாவிலிருந்தும் ஜெர்மனியிலிருந்தும் கிடைத்து வந்ததைவிட மிகவும் தெளிவாயும் சுத்தமாயும் இருக்கிறது. அக்கம்பெனி தனக்கு வேண்டிய விதைகளையும் ஓமத்தையும் கூடியவரையில் தானே பயிரிடுவதற்காக டெஹ்ரா டூன் நகருக்கு அருகேயிருக்கும் பயிரிடப்படாத பூமியைத் தனக்குக் கொடுக்கும்படி கவர்ன்மெண்டைக் கேட்டிருக்கிறது.

* * *

தொழிலபிவிருத்தி சாதன விஷயமாக பம்பாய்ப்பத்திரிகை ஒன்றுக்கு பெயர்போன ஒருவர் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அவர் சொல்லுகிறபடி இந்த யுத்தத்தின் பலனாக ஆஸ்டிரியா ஜெர்மனியிலிருந்து வந்துகொண்டிருந்த சாமான்கள் நின்றுவிட்டபடியால், அந்தத் தொழிலில் ஒருபாகத்தையாவது நாம் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று ஜனங்களும் கவர்ன்மெண்டாருமே ஆசைப்படுகிறார்கள். இது தான் சமயமென்று ஜப்பான் புகுந்து அந்த வியாபாரத்தைத் தான் பிடித்துக்கொள்ளப் பார்க்கிறது. சீனாவுக்கு இந்தியாவிலிருந்து நூல் அனுப்பப்பட்டு வந்தது நின்றுபோய் இப்பொழுது ஜப்பானிலிருந்து அனுப்பப்பட்டு வருகிறது. ஆனால், ஜப்பான் கவர்ன்மெண்டார் அத்தேசத் தொழில்களுக்குச் செய்த உதவியின் பலனாகவே ஜப்பானுடைய வியாபாரம் செழிக்கக்கூடியதாயிருந்தது. கடற் சுங்க வரிகளைவிதித்து அன்னியதேசச்சரக்குகளின் விலையை அதிகப்படுத்தி அத்தேசக் கவர்ன்மெண்டார் உதவி செய்ததுடன் நில்லாமல், சில தொழில்களைத் தாங்களே ஏற்படுத்தி வேலையும் செய்து காட்டினார்கள். ஸர் ஜான் ஹியூவெட் ஐக்கியமாகாண லெப்டினெண்டு கவர்னராயிருந்தபொழுது, சர்க்கரைத்தொழிலை விருத்தி செய்ய ஜப்பான் மாதிரி செய்து உதவி புரிந்தார். அதுபோல், நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளின் விலையை அதிகப்படுத்துவதற்காக விதிக்கப்படும் தீர்வையை ரத்துசெய்து அன்னியதேசச் சரக்குகளின் பெறுமானத்துக்குத் தக்கபடி 100-க்கு 3-அல்லது 10-தீர்வை விதித்தால் இப்பொழுதுள்ள நம்முடைய தொழில்கள் செழிக்கும். அதன் பலனாக வேறு தொழில்கள் உண்டாய் ஓங்கும். இங்கிலாந்திலிருந்துவரும் துணிகளுக்கும் மேற்சொன்னபடி தீர்வை விதிக்கவேண்டும். பம்பாயிலுள்ள நெசவுச்சாலைகள் விருத்தி யடைந்து லாபம் சம்பாதித்ததாலல்லவோ டாடா இரும்புத்தொழில் ஏற்படக்கூடியதாயிருந்தது. அந்த இரும்புத்தொழிலினிடத்தில் ஏற்பட்ட நம்பிக்கையாலல்லவோ, பம்பாய் நகருக்கு மின்சார சக்தியை உற்பத்திசெய்து உதவும் தொழிலேற்பட்டது. ஆதலால், இப்பொழுதுள்ள தொழில்கள் விருத்தியடைந்தால்தான் வேறு தொழில்கள் உண்டாகக்கூடுமென்பது நிதர்சனம். கல்வியின் அபிவிருத்தியால் சிறிது நன்மை உண்டாகலாம். கவர்ன்மெண்டின் உதவியால் சிறிது நன்மை யுண்டாகலாம். ஆனால், ப்ரிட்டிஷ் தொழிற்சாலைகளின் நன்மையை உத்தேசித்து நமது சரக்குகளின் விலையை உயர்த்த வரி வசூலிக்கிறவரையில், நாம் தொழிலில் அபிவிருத்தி அடைவது கூடாத காரியம். நமது சரக்குகளுக்கு ஏற்பட்டுள்ள வரிகளைத் தள்ளி, அன்னியதேசச் சரக்குகளுக்கு வரியை விதித்து கவர்ன்மெண்டு ஆதரணை செய்தாலொழிய தொழிலபிவிருத்தி சாத்தியமில்லை யென்று அவர் எழுதுகிறார்.

## விசேஷ வர்த்தமானம்

**ஸ்ரீமத் ஞானநந்த சுவாமிகள் சித்தி.**—பாலசரஸ்வதி என்ற பட்டம் பெற்று இச்சுவாமிகள் சுமார் 20 வருடகாலமாய்ச் சென்னையிலிருந்து அரிய சைவப் பிரசங்கங்களியற்றி வந்த மேற்படியார் சென்னையில் 31-8-15-ல் சிவப்பிராப்தி யடைந்தார். 1-9-15-ல் திருவொற்றியூரில் சமாதி செய்யப்பட்டது.

* * *

**வரதக்ஷிணை.**—தெலுங்கு ஜாதியாரான நாயுடுமார்களுக்குள் இதுவரை வரதக்ஷிணை வழக்கம் கிடையாது. இப்போது கும்பகோணத்தில் ஒருநாயுடுதமது பெண்ணை ஒரு பி. ஏ. பி. எல். படித்த ஒருவருக்குத் தாமுயல, மாப்பிள்ளை வீட்டார் 6-ஆயிரம் ரூபா வரதக்ஷிணை கேட்கின்றனர். 2000 ரூபா தருவதாகச் சொல்லியும் மாப்பிள்ளை வீட்டார் சம்மதிக்கவில்லை.

* * *

**இந்தியாவில் சாப்பிடும் உப்பு.**—1915-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலும் உள்ள 5-மாதங்களில் ஒருகோடியே 55-லட்சத்து 22-ஆயிரம் மணங்குநிறையுள்ள சாப்பிடும் உப்பு செலவாயிருக்கிறது. போன வருஷம் செலவானதைவிட இந்த வருஷம் செலவான உப்பின் அளவு குறைந்திருக்கிறது.



**சேலம் சௌராஷ்ட்ர விப்ரசபை.**—இப்பெயர் கொண்ட சபையொன்று சேலத்தில் ஏற்பட்டிருக்கிறது; சௌராஷ்டிரர்கள் பூர்வந்தொட்டு மத்வ மடத்தைச் சேர்ந்தவர்களென்றும், ஸ்ரீகோடி கன்னிகாதானம் தாதாச்சார்ய ஸ்வாமிகள் வகையராவால் சுமார் 200-வருஷங்களுக்கு முன் தான் திருமண்தரிக்கும்படி செய்யப்பட்டனரென்றும், அச்சபையில் மைசூர் பண்டிதர் ஒருவர் சிலகாலமாகப் பிரசங்கம் செய்து சௌராஷ்டிரர்களை மறுபடி கோபிதரித்துக் கொள்ளும்படி செய்து வருகிறார்.

* * *

**ஆங்கிலபாஷையின் அபிவிர்த்தி.**—1657-ம் வருஷத்தில் இங்கிலீஷ் பாஷையில் 13 000 வார்த்தைகளிருந்தன. அவை 1706-வருஷத்தில் 20,000 வார்த்தைகளாயின; 1800-ம் வருஷத்தில் 50,000 வார்த்தைகளாயின; 1828-ம் வருஷத்தில் 1,05,000 வார்த்தைகளாயின; 1830-ம் வருஷத்தில் 1,60,000 வார்த்தைகளாயின. கடைசியாக 1894-ம் வருஷத்தில் அச்சிடப்பட்ட இங்கிலிஷ் அகராதியில் 3,18,000 வார்த்தைகளிருக்கின்றன.

* * *

**வில்லிபுத்தூரார் காலம்.**—தமிழ் மகாபாரதத்துக்கு ஆசிரியரான வில்லிபுத்தூரார் எந்தகாலத்தில் ஜீவித்தாரென்று தியாஸவிஸ்ட் (Theosophist) என்ற மாதாந்தப் பத்திரிகையில் மிஸ்டர் வி. ரங்காச்சாரி M. A. பரிசீலனைசெய்து எழுதுகிறார். அந்தப் பேர் பெற்ற கவி 1350-ம் வருஷம் முதல் 1430-ம் வருஷத்திற்குள்ளாக வசித்திருக்க வேண்டுமென்றும், இரட்டையர், அருணகிரிநாதர், காளமேகப் புலவர் இவர்கள் காலத்தில் வசித்திருக்க வேண்டுமென்றும் முடிக்கிறார்.

* * *

**மஹிலா ரத்னம்.**—இப் பெயருடன் மலையாளம் மாதாந்த சஞ்சிகை யொன்று ஸ்திரீகளால் ஸ்தாபிக்கப்பட்டு திருவனந்தபுரத்தின் சமீபத்தில் வெளியாகி வருவதைக்கேட்டுச் சந்தோஷப்படுகிறோம். இந்த மாதாந்த சஞ்சிகையை மலையாள பாஷையில் நிபுணர்களான 12-ஸ்திரீகள் நடத்தி வருகிறார்கள். அவர்களில் கிரிமானூர் ராஜ குடும்பத்தைச்சேர்ந்த ஸ்ரீமதி மங்களாபாய் தாம்புராட்டி, ஸ்ரீமதி T. C. கல்யாணியம்மாள் (எர்ணாகுளம்), மிஸ்ஸஸ் ஜகேரியா (கள்ளிக்கோட்டை), மிஸ்ஸஸ் சந்தி (பெங்களூர்), ஸ்ரீமதி தமயந்தியம்மாள் (தலைச்சேரி), மிஸ் M. ஜோஸெப் (ஆலப்புழை) ஆகிய இவர்கள் முக்கியஸ்தர்களாவார்கள்.

* * *

**மதுரை கைம்பெண் சகாயச் சங்கம்.**—மதுரையில் கைம்பெண்களின் சகாயச் சங்கத்தின் ஜூபிலி தினம் ராமநாதபுரம் டிஸ்டிரிக்ட் ஜட்ஜின் அக்கிராசனத்தின் கீழ் 11-ந் தேதி மாலை கொண்டாடப்பட்டது. அச்சங்கம் மதுரையிலிருக்கும் சுதேசக் கிறிஸ்தவக் கைம்பெண்களின் சௌகரியத்தை யுத்தேசித்து ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது அச்சங்கத்திற்கு 559-மெம்பர்கள் வரையிலும் இருக்கிறார்கள். பிரஸ்தாப ரிப்போர்டு வருஷத்தில் அச்சங்கம் 80-கைம்பெண்களை வைத்து ஆதரித்து வந்தது. அதற்கு 2940-ரூபாய் வரையிலும் செலவாயிருக்கிறது. இப்பொழுது சங்கத்தின் கையிருப்பு 54,800 ரூபாய். இச்சங்கம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

* * *

**ஒரு ஸ்திரீயின் தற்கொலை.**—கல்கத்தா முச்சிப்பாராப்போலீஸ் ஸ்டேஷன் இலாகாவில் ஒரு வீட்டில் வசிக்கும் தீரேந்திரநாத ஸிங் என்பவருக்குச் சுஷீல பாலதாஸி யென்னும் மாது 10-வருஷத்திற்கு முன் விவாகமானாள். அவளுக்குப் பிள்ளையில்லாமையால் அவள் புருஷன் மறுவிவாகஞ் செய்யக்கருதியிருந்த விஷயம் அவளுக்குத் தெரிய வந்தது; அதனால் 23 வயதுள்ள அச் சுஷீலை கவலையுற்று இம்மாதம் 8-ந்தேதி சனிக்கிழமை மாலையில் யாருமறியாமல் தனது வஸ்திரத்தை மண்ணெண்ணெயில் நனைத்துக்கொண்டு தீப்பற்ற வைத்துக்கொண்டாள். தீயெரிவதைக்கண்ட ஜனங்கள் விரைந்து சென்று அவளைக் காப்பாற்ற முயன்றும் அவர்கள் முயற்சி பயன்படவில்லை. அவள் அன்றிரவு 10-மணிக்கு இறந்துபோனாள்.

* * *

**பெண் கல்வி.**—ஹிந்து ஸ்திரீகளின் கல்வி யபிவிருத்தியைக்கருதி பரோடா மகாராணி, கல்வித்திறமை பெற்ற ஹிந்து ஸ்திரீகளுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதற்காக 1,50,000 ரூபாயை எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த நிதியை மேற் பார்வை பார்ப்பதற்காக மகாராஜ குமார் ஜெயசிங்ராவ் கைக்கோவார்,

ஆனரெபில் ஸர் விட்டல்தாஸ் தாமோதர தாக்கர்ஸே, ஸ்ரீவந்த் ஸம்பத்ராவ் கைக்கோவார், ஆகிய மூவர்கள் அடங்கிய ட்ரஸ்ட்போர்டு நியமிக்கப்பட் டிருக்கிறது. 20 ஸ்காலர்ஷிப்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகளில் 5 ரூபாய் வீதம் 19-பேர்களுக்கும், 10 ரூபாய் வீதம் 8 பேர்களுக்கும், 25 ரூபாய் வீதம் 4 பேர்களுக்கும், 35 ரூபாய் வீதம் ஒருவருக்கும் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படும்.

*
* *

**கால்நடைவதை.**—ஜெயினர்கள் கால் நடைகளின் வதையில் மிகுந்த வெறுப்புள்ளவர்களென்பது தெரிந்தவிஷயம். அதுபற்றி ஸெத்திய வகுப்பைச்சேர்ந்த ஆமதாபாத் ஜெயினர்கள் கால்நடைகளைக் கசாப்புக் கடைக்காரர்கள் வாங்காதிருப்பதைத் தடுப்பதற்காகவே ஒரு நிதி சேர்த்திருக்கிறார்கள். அந்த நிதியைக் கொண்டு அவர்கள் கசாப்புக் கடைக்காரர்கள் வாங்கவிருக்கும் கால்நடைகளை அவர்கள் அவைகளுக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிற விலையை விட அதிக விலை கொடுத்து வாங்கி அவைகள் அநியாயமாய்க் கொல்லப்பட்டுப் போவதைத் தடுப்பார்கள். அந்த நிதிக்கு இப்போது ஸெத் மனக்லாலும் ஜம்நாபாய் பகுபாயும் ரூபாய் 25000 கொடுத்திருக்கிறார்கள். மிஸ்டர் டல்பாத்பாயின் சந்ததியார்கள் ரூபா 11000 உபகரித் திருக்கிறார்கள். மிஸ்டர் அம்பலால் ஸாபாய் ரூபா 10,000 உதவியிருக்கிறார். ஆமதாபாத் ஸெத்தியா ஜெயினர்கள் ஜீவ இம்சை நிவாரணம் சம்பந்தமாய்ச் செய்திருக்கும் ஏற்பாடு மிகவும் மெச்சத்தக்கது.

*
* *

**கைம்பெண் ஹோஸ்டல்.**—சென்னையில் 1912-ம் வருஷம் செப்டம்பர் மாஸத்தில் பிராமணக் கைம்பெண்களின் பயிற்சிக்காக கவர்ன்மெண்டார் ஒரு ஹோஸ்டல் ஸ்தாபித்தார்கள். அந்த ஹோஸ்டலில் இப்போது 34 பிராமணக் கைம்பெண்கள் வசிக்கிறார்கள். ஆதியில் இந்தக் கைம்பெண்கள் கீழ்த்தரப் படிப்புப் படித்துவிட்டு பிறகு திருவல்லிக்கேணியிலிருக்கும் செகண்டரி டிரேயினிங் ஸ்கூலில் சேர்ந்தார்கள். அங்கு அவர்கள் ஆறுவது பாரம்வரையில் படித்து சமஸ்கிருதமும் சங்கீதமும் கற்று அத்துடன் உபாத்தியாயர்களாகவும் வைத்தியர்களாகவும் பயிற்சிபெறுகிறார்கள். இவர்கள் இலவசமாக இப்பயிற்சியைப் பெறுகிறார்கள். இந்த ஹோஸ்டல் நமது சகோதரி சுப்பலக்ஷ்மியம்மாள் B. A அவர்கள் பார்வையில் சமுத்திரக்கரையில் ஐஸ்மெத்தை என்று சொல்லப்படும் விசாலமான கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த விசாலமான கட்டிடத்தில், இடம் வேண்டியவரையில் இருக்கிறபடியால் 75 பிராமணக் கைம்பெண்கள் வரையில் அங்கு வசித்துக் கற்கலாமென்றும், அதற்காக அந்தந்த தமிழ் ஜில்லாக்களில் கல்வி கற்கும் கைம்பெண்களிருந்தால் அவர்களை இந்த ஹோஸ்டலுக்குப் போகத் தூண்டவேண்டுமென்றும் மிஸ் C.M. லின்ச் கலெக்டர்களுக்கு எழுதியிருக்கிறார்.

*
* *

**சென்னை பீபில்ஸ்பார்க்.**—இந்த வருஷம் கிறிஸ்துமஸ் பண்டிகைகாலத்தில் சென்னை பீபில்ஸ்பார்க்கில் நடக்கப் போகும் சகலவித தமாஷாக்களும் H. E கவர்னரின் மேற்பார்வையிலிருப்பதினால் சகல ஏற்பாடுகளும் நிரம்ப திருப்திகரமாக இருக்கும். வசூலாகும் பணம் சென்னை யுத்த பண்டைச்சேரும். நிரம்ப அழகான மண்டபத்தில் காட்சிப் பொருள்கள் சேகரித்து வைக்கப்படும். பார்வைக்குப் பசுமையாகக் காணப்படும் தமாஷ் மைதானங்களில் அங்கங்கே நடைபாதைகள் ஏற்படுத்தப்படும். மத்தியில், பாண்டு வாத்தியங்களை வாசிப்பவர்களுக்கு இடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். அவ்விடங்களிலிருந்து இனிமையான கீர்த்தனங்களைப்பாடிவரும் ஜனங்களின் காதுக்கு இன்பத்தை உண்டாக்குவார்கள். மைதானத்தைச் சுற்றிலுமிருக்கும் கட்டிடங்கள் நிரம்ப அழகாய் அலங்காரஞ் செய்யப்பட்டிருக்கும். மாதிரி (Model) வீடுகள் அடங்கியமாதிரி கிராமங்களும், மாதிரிக்கடைகளும், மாதிரி டவு வீடுகளும், சாப்பாடு, பலகாரம் விற்கும் மாதிரி விடுதிகளும் காட்சிப்பொருள்களில் அடங்கினவைகளாக இருக்கும். நகர் நிர்மாண விஷயங்களைக் கற்கவிரும்பும் மாணவர்களுக்கும்சாதாரண ஜனங்களுக்கும் கற்பிப்பதற்காகவே இவைகள் ஸ்பெஷலாக தயார் செய்யப்படும். கிறிஸ்துமஸ் பண்டிகைகாலத்தில் பீபில்ஸ்பார்க்கில் நடக்கப்போகும் தமாஷாக்களைப் பார்த்து நேத்ரானந்தத்தை யடையவரும் ஜனங்களிடமிருந்து பணம் வசூல்செய்து அத்தொகையை சென்னை யுத்தநிதிக்குச் சேர்ப்பிப்பதற்காக இக்கமிட்டியார் இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்வார்கள்.



**கல்வியின்மையினால் நேரிடுங்கேடு.**-இம்மாதம்10-ந் தேதியன்று வயதுசென்ற ஒரு பிராம்மணஸ்திரீ பெங்களூர் எக்ஸ்பிரெஸ்ஸிலேறி அரக்கோணத்திற்குப் போவதற்காக ஸென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்தாள். டிக்கெட்டு வாங்குமிடத்தில் கூட்டம் அதிகமாயிருந்தபடியால், அந்த ஸ்திரீ பக்கத்திலிருந்த 18 வயதுள்ள ஒரு பையனைப்பார்த்து தனக்கு ஒரு டிக்கெட்டை வாங்கிக் கொடுக்கும்படியாக அவனிடத்தில் பணத்தைக்கொடுத்தாள். அச்சிறுவன் பெரம்பூர் ஸ்டேஷனுக்கு அரையணா டிக்கெட்டொன்றை வாங்கிக்கொடுத்து விட்டு மீதிப் பணத்தை எடுத்துக்கொண்டு விட்டான். அந்த ஸ்திரீக்கு படிப்பு வாசனை யில்லாததினால் அவள் அரக்கோணத்திற்குத்தான் டிக்கெட்டு வாங்கிக் கொடுத்திருக்கிறான் என்றெண்ணி அவனால் கொடுக்கப்பட்ட டிக்கெட்டை பெற்றுக்கொண்டாள். அந்தப் பையனும் பெரம்பூருக்கு டிக்கெட்டு வாங்கிக்கொண்டு அந்த ஸ்திரீ உட்கார்ந்த கம்பார்ட்மெண்டிலேயே ஏறி அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான். ரெயில் பெரம்பூருக்கு வந்து சேர்ந்தவுடனே அச்சிறுவன் கீழே இறங்கி அந்த ஸ்திரீயைப் பார்த்து டிக்கெட்டை பத்திரமாக வைத்துக்கொள்ளும் விவரத்தைச்சொல்லி விட்டு அவளிடம் விடை பெற்றுக்கொள்ளவே அந்த ஸ்திரீக்கு அவன்மீது சந்தேகம் தோன்றிற்று. அதனால் அவள் அதை அந்தவண்டியிலுள்ள வேறொரு பிரயாணிக்குக் காட்டினாள். உடனே சிறுவன் செய்த மோசம் வெளிப்பட்டது. அதன் பேரில் அந்த ஸ்திரீ கூக்குரலிடவே ரெயில்வே ஆபீஸர்கள் அங்கு வந்து கூடினார்கள். மோசம்செய்த பையனும் பிடிக்கப்பட்டான். அந்த ஸ்திரீ மறுபடியும் சென்னைக்குத் திரும்பி வந்துவிடவேண்டியதாயிற்று. இது விஷயமாய் விசாரணை நடந்துவருகிறது.

*
* *

**மதராஸ் ஸம்ஸ்கிருத காலேஜ்.**—மதராஸ் ஸம்ஸ்கிருத காலேஜுக்கு 70,000-ரூபாய் மூலதனம் இருக்கிறது என்ற விஷயம் சமீபத்தில் வெளியான வருஷாந்தர ரிபோர்ட்டினால் தெரியவருகிறது. சிரோமணி முதலிய கௌரவப் பட்டங்களைப் பெறுவதற்காக கீழ்நாட்டு பூர்வீக சாஸ்திரப் பரீட்சைகள் பல ஏற்பட்டு, அப்பரீட்சைகள் சென்னை யூனிவர்சிடியுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவ்வித சாஸ்திரங்கள் சென்னையில் ஏற்பட்டிருக்கும் சம்ஸ்கிருத காலேஜில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. கௌரவப் பட்டங்களைப் பெறுவதற்காக ஏற்பட்டிருக்கும் வகுப்புகளில் இப்பொழுது 19-வித்தியார்த்திகள் வாசித்து வருகிறார்கள். அவர்களில் 11-பேர்கள் ஸீனியர் வகுப்பிலும் 8 பேர்கள் ஜூனியர் வகுப்பிலும் வாசித்து வந்தார்கள். அந்த பத்தொன்பது பேர்களில் 12-பேர்கள் அக்காலேஜைச் சேர்ந்த ஹோட்டலில் சாப்பாட்டையும் இடவசதியையும் இலவசமாய்ப் பெற்று வந்தார்கள். பப்ளிக் பரீட்சைக்கு அனுப்பப்பட்ட 9 வித்தியார்த்திகளில் இருவர் வேத பரீட்சைக்கும் 7 பேர்கள் வேதாந்த பரீட்சைக்கும் வாசித்து வந்தார்கள். அவர்களில் ஐவர் வேதாந்த பரீட்சையில் தேர்ந்தார்கள் இருவர் சிரோமணிப் பரீட்சைக்குப் போனார்கள். ஒருவர் பரீட்சையில் தேறினார். இக்காலேஜில் ஒருவித்தியார்த்தி வேதாந்த சிரோமணிப்பரீட்சையில் ராஜதானியில் முதல்வராகத் தேர்ந்திருக்கிறார். இக் காலேஜைச் சேர்ந்த லைப்ரேரியில் 1900 வால்யூம்கள் அடங்கிய புஸ்தகங்கள் இருக்கின்றன. அவைகளில் 100-இங்கிலீஷ் புஸ்தகங்கள். அக்காலேஜை ஒரு கமிட்டியார் நிர்வகித்துவருகிறார்கள். அக் கமிட்டிக்கு ஆனரெபில் ஸர் P. S. சிவஸ்வாமி அய்யர் பிரஸிடெண்டாக இருக்கிறார்.

*
* *

**ஒரு புதிய இருப்புப் பாதை.**—சென்னை ஸகண்ட் லயன் பீச் என்னும் ரஸ்தாவில் 2/12 நம்பருள்ள கட்டடத்திலிருக்கும் "ஹேரல்ஸ்ட் அண்டு நாதன்" என்ற கம்பெனியார், சென்னை நகருக்கும் செங்கல்பட்டுக்கும் நடுவிலுள்ள வண்டலூர், திருப்போரூர் என்ற இடங்களுக்கு மத்தியில் புதிதாய் ரயில்பாதை போடுவதாய் உத்தேசித்திருக்கின்றனர். வண்டலூரானது கோவளம் என்ற ஊருக்கு 13-மைல் தென்மேற்கில் இருக்கிறது. அந்தக் கோவளத்தில் கவர்ன்மெண்ட் உப்பளம் ஒன்று இருக்கிறது. மேலும், அது முகம்மதியர்களுக்கும் ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்களுக்கும் யாத்திரை ஸ்தலமாயுள்ளது. திருப்போரூர் என்ற ஊரானது ஹிந்துக்களின் புண்ணிய ஸ்தலங்களில் ஒன்று ஏனென்றால், அங்கே சுப்பிரமணியர் கடவுளின் ஆலய

161439

மொன்று இருக்கிறது. ஆகவே, மேலேகண்ட வண்டலூருக்கும் திருப்போரூருக்கும் மத்தியில் இருப்புப் பாதை போட்டால், ஏராளமான பிரயாணிகள் போக்கு வரத்து செய்ய மிக்க சௌகரியமாய் இருக்கும். தவிர வியாபாரப்போக்கு வரத்தும் அதிகமாகும். ஆகவே, அந்த இருப்புப்பாதையான்து ஜனங்களுக்குச் சௌகரியமாய் இருப்பதுடன், கம்பெனிக்கும் இலாபத்தைக் கொடுக்கும். பெரிய இருப்புப் பாதைகளுக்கு உபயோகமாகும்படி போடப்படும் கிளைப் பாதைகளில் கிடைக்கக்கூடிய வருமானமானது அப்பாதையை நடத்தும் செலவுக்கும் போட்டுள்ள முதலுக்கு 100-க்கு 3½ வீதம் வட்டிக்கும் கட்டுமென்று தங்களுக்குத் திருப்திகரமாய்த் தெரியுமானால், அம்மாதிரியான கிளைப்பாதைகளுக்குச் செலவாகும் முதலுக்கு 100-க்கு 3½ வீதம் லாபத்துக்குத் தாங்கள் உத்தரவாதமென்று இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு தீர்மானத்தில் சொல்லியிருக்கின்றனர். மேலும், அப்பாதை போடுவதற்கு வேண்டிய பூமியனைத்தையும் செலவில்லாமல் தரவும் செய்வார்கள். இனி மேலேகண்ட இரண்டு இடங்களுக்கு மத்தியில் போட உத்தேசிக்கப்படும் ரயில்பாதையின் நீளம் சுமார் 20 மைல். அதற்கு 6 லட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிக்கப்படுகிறது. அந்த 6 லட்சம் ரூபாயை 12 ரூபாய்கொண்ட 50 ஆயிரம் பங்குகளாகப் பிரித்து, ஒவ்வொரு பங்குத் தொகையாகிய ரூபா பன்னிரண்டையும் மாதமொரு ரூபாயாக ஜனசமூகத்தினிடமிருந்து பெறப்போவதாக அக்கம்பெனியார் யோசித்திருக்கின்றனர். அவ் விஷயமாய் தெளிவான விவரங்களை அறிய விரும்புவோர் மேற்படி, கம்பெனிக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

*
* *

ஹிந்து சாதுக்கள்.—இமாலய பருவதத்தின் சிகரங்களி லொன்றாகிய சிம்லா பட்டணம் இந்தியா கவர்ன்மெண்டும் இந்தியப் பிரபுக்களும் வருஷத்தில் சிலகாலம் வசிக்கும் இடம். சிம்லாவிலிருந்து வடக்கே 31-மைல் தூரத்தில் "சோலன்" என்ற ஓர் ஊர் இருக்கின்றது. அதைஅடுத்துள்ள உன்னதமான சிகரத்திற்கு "கீரோர்" என்று பெயர். அதற்குப் பக்கத்தில் "தேவகிகாரி" என்று ஒரு சிகரமிருக்கின்றது. இவைகள் பூமிமட்டத்திலிருந்து ஏறக்குறைய 800-அடி உயரமுள்ளன. இவைகளிலும் ஜனங்கள் வசிக்கிறார்கள். முக்கியமாய் இடையர்கள் எருமை மாடுகளைக்கொண்டு போய் மேய்க்கிறார்கள். இதுவே ஒரு விசேஷமானாலும் அதைவிட விசேஷமொன்று இருக்கின்றது? தேவகிகாரியில் ஒரு காளிகோவில் இருக்கின்றது. அந்தக் கோவிலுக்கு கட்டடமில்லை. ஒரு தட்டையான கல்லில் செதுக்கியிருக்கும் ரூபமே இந்தக் காளி. எப்போது ஒருகாளிதேவி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றதோ, அந்த தேவிக்குப் பூஜை செய்வோர் இருக்க வேண்டுமே? அப்படியே சில பூசாரிகளும் அங்கு வசிக்கிறார்கள். அந்தப் பூசாரிகள் அங்குவரும் யாத்திரிகளுக்கு அன்புடன் உபசாரங்கள் செய்கிறார்கள். பூசாரிகள் இருப்பதும் அதிசயமல்ல, அங்கு சில சாதுக்கள் வசிப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த சாதுக்கள் மகாபடித்தவர்களாம். அன்பும் இரக்கமும் நிரம்பியுள்ளவர்களாம். அவர்கள் அங்கு ஓயாமல் தவம் செய்வதைத் தவிர வேறு என்ன செய்வார்கள்? தவம் செய்வதற்கல்லவோ பத்தாயிரம் அடி உயரமுள்ள மலைச் சிகரங்களைத் தேடிச் சென்றிருக்கிறார்கள் அவர்களுக்கு லௌகீக அபிமானமே யில்லை. தேக சம்ரக்ஷணையின் பொருட்டு காய் கிழங்குகளைப்புசிக்க வேண்டும். இந்த மலைச்சிகரத்தை யடுத்தாற்போல் ஒரு குகை இருக்கின்றதாம். அந்தக் குகையிலிருந்து கீழே 50 மைல் தூரம் மைதானத்தில் முடிகிற ஒரு வழியிருக்கின்றதாம். அந்தக்குகையில் இறங்கி ஒருவரும் செல்ல முடியாதாம். இவைகளெல்லாம் என்ன ஆச்சரியம்! இந்துக்கள் மலைச்சிகரமானாலும் குகையானாலும் அவைகளை மகா திவ்விய ஸ்தலங்களாகக் கருதி அங்கு உபாசனை சமாதி முதலியன செய்வது வழக்கமாயிருக்கின்றது. தற்காலத்திலும் இந்த வழக்கமிருக்கின்றதானால் பூர்வத்தில் எப்படியிருந்திருக்குமென்பதை யூகித்தறியலாமன்றோ?

---

யாவர்க்குமா மிறைவற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற் கொருவா யுறை
யாவர்க்குமா முண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின் னுரைதானே.
புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணலது கண்டருள் செயா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறியாமல் நழுவு கின்றாரே. —திருமந்திரம்.